பிஸ்மில்லா ஹிர்றஹுமா னிர்றஹீம்.

இஃது

சீறாப்புராணம்,

(இரண்டாம்வாலியம்.)

434
1910/IV

காயற்பட்டணம்

ஷைகுஅப்துல் காதரு நயினர்லெப்பை

ஆலீம்புலவரவர்களாலும்

பனீ. அஹமது மரைக்காயர் புலவரவர்களாலும்

பாடியதை,

பொட்டல் புதூர்

கிஷ்ணபுரத்திலிருந்து மதுராஸ் முத்தியாலுபேட்டை

யில் வந்திருக்கும் பக்கீரு ஹாஜி,

மொன்னுமூஹம்மது காதரிசுத்தாரி

அவர்கள்பரிசோதித்தும்,சிலபாடல்கள்பாடிச்சேர்த்தும்,

சென்னை,

ஜெ. ஒ. ஆ. மக்தூம் அத்தாரி

ஹாஜி ஜெயினு[illegible]ரு ஆலீமவர்களது

முஅய்யத்துல் இஸ்லாம் பிரேஸ்ஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜரி 1328.

ஈஸவி 1910.

(ரிஜிஸ்தர் காபிரைட்.)

பிஸ்மில்லாஹி.

இப்புஸ்தகம் கோர்வைசெய்த வரலாறு.

அல்லாஹுத்தஆலா எல்லாப் படைப்புகளையும் படைத்த ஒளிவாகிய நூறுமுகம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களைப் பூலோகத்தின்கண் உதயஞ்செய்து ஹலரத்திலே சேர்த்துக்கொண்டது வரையிலுள்ள காரணச்சரித்திரங்கள் முழுமையும் சீறாவாக இருக்கின்றது. அதில் உறனிக் கூட்டத்தார் படலம்வரை சிலகாரணச் சரித்திரங்களை மாத்திரம் மகா வித்துவான் உமறுப்புலவரவர்களும் அவர்கள் குமாரரும் பாடியிருக்கின்றார்கள். ஷெ. புராணத்தின் கடைசியாக நிறுத்தப்பட்டிருக்கிற பாடல்,— விருத்தம்.

கொலைபடு முறனிக் கூட்டத்தி னுறைந்த கொடியவ ரெண்மரைக் கொடுபோ, யலையொலி யென்னச் சிதடிகை யலம்பும் அற்றமெனுங் காட்டினுட் படுத்தி, யிலைவடிவேற்கை வயவர்க ளெழுந்து வந்தன ரவணிடை கிடந்தோ, ரலைவுற மயங்கி வீழ்ந்தனர் சிலர்தம் முயிருடைந் திறந்தனர் சிலரே. * இதற்குப் பின் யாதொரு பாடலுமில்லை.

மேலெழுதியபாட்டில் இந்தப்புராணம் நிறுத்திவைக்கக்கூடியதில்லை. அப்பாட்டு பாடியபின் அடு[illegible]டலம் துவக்குகிறதற்கு முன் அதைப்பாடியபுலவரவர்கள் ஆகரம்சேர்ந்து விட்டதினாலே அதற்குப்பின்புள்ள காரணச்சரித்திரங்களை அவர்கள் பாடாமல் அம்மட்டில் நின்றுவிட்டதென்று வெளியாகிறது. அப்பாட்டுவரை சீறாபுராணமாக இதற்குமுன் அச்சிட்டுவழங்கிவருகின்றன. அதினாலே நபிநாயகம் அவர்கள் காரணசரித்திரம் முழுமையும் அறியக்கூடாமையாகவிருக்கிறதினால் அதற்குப்பின்பு முடிவுவரையுள்ள சில காரணச் சரித்திரங்களைக் காயற்பட்டணம் பனீ அஹம்துமரைக்காயர் புலவரவர்களும் சைகுஅப்துல்காதருநயினார் லெப்பை யாலிம் புலவரவர்களும் பாடியிருக்கின்றார்கள். அதுகளை அதின் அசல்கிதாபு உரைகளை வைத்துச் சரிபார்த்துச் சீர்திருத்தி அதுகள் இரண்டுபிரிவாக இருந்ததை ஒன்றாக்கவும் அதிலில்லாத சில காரணச்சரித்திரங்களை நான் பாடியும்சேர்த்து இப்புஸ்தகத்தை இரத்தின மாலைகள்போல் கோர்வை செய்து இதற்குச் சீறாபுராணம் இரண்டாம்வாலியமென்று நாமஞ்சூட்டி அச்சிட்டு வெளியாக்கி யிருக்கிறேன்.

அல்லாஹுத்தஆலா சலாமாகிய வேதங்கள் நான்கும் அதில் மேலான புருக்கான்வேதக் கூடாரத்துக்கு நான்கு தூண்களாக நான்குயார்களும், அக்கூடாரத்துக்குள் புகுதப்பட்ட வாசல் நான்கு மதகப்புமிருக்கிறதுபோலே மேற்படி வேதத்துக்குடைய நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லம்வர்கள் காரணச் சரித்திரமாகிய சீறாப்புராணத்தையும் நாலுகாண்டமாக நிரப்பஞ்செய்திருக்கிறேன். அதன் விபரத்தை இதன் 150-151வது பக்கத்தைப்பார்க்க. ஷெ காரணச்சரித்திரம் துவக்கமானவைகளுள்ள முதல்வாலியம் அடிதளமும் உடலும் சமானாய் நிரப்பமானவைகளுள்ள இவ்விரண்டாம்வாலியம் மேல்கட்டிடமுமுடிமுருமாக இருக்கின்றது.

நபிநாயகம்சல்லல்லாகு அலைஹிவசல்லமவர்கள்காரணச்சரித்திர முழுமையும் இப்புராணம் 1—2—வாலியங்களினாலே அறியலாம். முதல்வாலியம் வாங்கி வைத்திருக்கின்ற சகோதரர்கள் இந்த இரண்டாவதுவாலியமும்வாங்கி அத்துடன்சேர்த்துக்கொள்ளக் கடமையுள்ளவர்களாயிருக்கின்றார்கள்.

நபிநாயகம் சல்லல்லாகு அலைஹிவசல்ல மவர்கள் மகிமை பொருந்திய ஒளிவானது என்கல்பிலுதயமாகி இப்புஸ்தகம்கோர்வைசெய் திருக்கிறே[illegible]தில் எழுத்துக்குற்றம் சொற்குற்றம் பொருட்குற்றம் கா[illegible] பெரியோர்கள் அதைத்திருத்தி மன்னிப்புச் செய்துக் கொள்வதோடு இப்புராணம் பாடல்களைப் பாடினவர்களுடையவும், இதைப்பரிசோதித்துக் கோர்வைசெய்த என்னுடையவும் பாவமன்னிப்புக்கும் இகபரசுகத்துக்கும் துஆகேட்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஆமீன்.

இங்ஙனம்,

பக்கீரு ஹாஜி மொன்னு முகம்மது காதரி சுத்தாரி.

இந்த2-ம் வாலியம் திக்குத்தாள்புஸ்தகம்1-க்கு		ரூபா	1—0—0
ஷெ	கிலோஸ்	,, ,,	1—4—0
ஷெ 1-2ம் வாலியம் சேர்ந்ததுபுஸ்தகம்-1க்கு		,,	2-12—0
ஷெ ,, தோல்பயின்டு கிலோஸ்		,, ,,	3—2—0

5—புஸ்தகம் ஒரே தடவையில் வாங்குவோர்களுக்கு 1—புஸ்தகம் கமிஷன் கொடுக்கக்கூடும்.

பிஸ்மில்லாஹி.

ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில்:—இந்தச் சீறாப் புராணம் இரண்டாம் வாலியம் புஸ்தகத்தை, சர்க்கார் சட்டப்பிரகாரம் இங்கிலீஷ் இலாகாவாகிய மதராசிலும், பிராஞ்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும் காப்பி ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கிறது.

ஆகையால் இந்தச் சீறாப்புராணம் இரண்டாம் வாலியம் முழுமையுமாவது அல்லது இதிற் சிலபாகத்தையாவது என் உத்திரவின்றி ஒருவரும் எந்தபாஷையிலும் அச்சிடக் கூடாது. அப்படி அச்சிட்டவர்கள் அதனாலுண்டாகும் நஷ்டத்துக்கும், குற்றத்திற்கு முள்படவேண்டும்.

பக்கீறு ஹாஜி,

மொன்னு முகம்மது காதிரி சுத்தாரி.

முக்கியகவனிப்பு.

இதனால் சகல முஸ்லீமான உடன் பிறப்புகளுக்கு தெரிவிப்பதுயாதெனில்:—நம்முடைய கொதுபுகாறுவில் இப்புஸ்தகமும், துஹ்பிஸ்தானென்னும் பூங்காவனபுஸ்தகமும், பின்னும் பலவிதமான குர்ஆன் ஷரீபுகளும், ஜூசுவகையறாக்களும், அறபுத்தமிழ் கிதாபுகளும் சுத்த தமிழ் புஸ்தகங்களும் விற்கப் படுகிறது. இன்னும் சிறந்த இல்முகளைப் போதிக்க அனேக கிதாபுக்களும், புஸ்தகங்களும் அச்சாகியும் வருகிறது. தேவையான கனவான்கள் நேரிற்க [illegible]ாகவும், வி. பி. போஸ்டு மூலமாகவும் சகாயமான கிரயத்திற்குப்பெற்றுக் கொள்ளலாம்.

வி. பி. பிடிக்கப்படாத சிங்கப்பூர், பினாங்கு, சைக்கோன் முதலான இதரதேசத்து கனவான்கள் கிரையமும் போஸ்ட்டு செலவும் முன்னம் அனுப்பிக் கொடுக்கவேண்டும். ஷை கிதாபுகளின் பேரிஸ்தென்னும் கேட்லாக்கு தேவையானவர்களுக்கு இனாமாய் அனுப்பிக் கொடுக்கப்படும்.

இங்ஙனம்,

ஜெ. ஒ. ஆ. மக்தூம் அத்தாரி கம்பெனி,

முஹம்மதியா குதுபுகாறு,

முத்தியாலுப்பேட்டை, மதறாஸ்.

MADRAS.

பிஸ்மில்லாஹி.

சீறாப்புராணம் இரண்டாம் வாலியம்

படல அட்டவணை.

3-வது. ஹிஜுறத்துக் காண்டம்.

பக்கம்.	படல அட்டவணை.	தொகை.
2	கடவுள் வாழ்த்துப் படலம்.	27
7	றசூலுல்லா அரசிருமைப் படலம்.	30
12	மிசுறுதேசத்தரச ரீமான்கொண்டபடலம்.	21
15	எமன் இராச்சியத்தாரு மவ்வரசரும் ஈமான்கொண்ட படலம்.	17
18	உம்முகபீபுநாச்சியார் திருமணப்படலம்	48
24	பகறுதேசத்தரச ரீமான்கொண்டபடலம்.	10
26	உம்மாதேசத்தரசரீமான்கொண்டபடலம்	10
27	பாரிசுதேசச் சேனாதிபதி யீமான்கொண்ட படலம்.	41
33	அவுதாவரசன் மாண்டபடலம்.	7
34	பறுகா ஊரரசன் வீரங்குன்றியபடலம்.	8
35	றூமரசனுக்குத் திருமுகமளித்தபடலம்.	75
45	கந்துகம்சலீமா மொழிந்த படலம்.	18
47	எஹூதியரைவென் றரசுபுரிந்த படலம்.	104
62	பகுதினை அழைப்பித்த படலம்.	16
65	சபியாநாச்சியார் மணம்புரி படலம்.	16
68	கொடுஞ்சுரத்திற் றாகந்தீர்த்த படலம்.	39
74	பசித்தோர்க்கு அமுதளித்த படலம்.	21
77	மதீனநகரத்தார்க்கு விருந்தளித்த படலம்.	8
78	சனைக்காவி ஊனருந்தும் படலம்.	9
80	கிறக்கிலுக்குத் திருமுகமளித்ததனிசுகராபி மீண்டுவந்த படலம்.	7
81	கன்வரைக்கருவறுத்துக் குறையாடியபடல	47
87	மக்கம் போந்தபடலம்.	9
88	மைமூனாச்சியார் மங்கலப்படலம்.	15
90	உம்றாச் செய்த படலம்.	31
65	மதீனம் புக்கு படலம்.	27
98	தாத்திரி நகரத்தா ரீமான்கொண்டபடலம்	56
106	தீயகனைத் துமிபாகியநகரகம் சுருமான மூஸ்லிமாகன் படலம்.	18
108	ஒட்டகமேல் வலிபுகுந்த படலம்.	16

பக்கம்	படல அட்டவணை.	தொகை.
111	றாம்வேந்தனுடன் பீசபீலுங் கசுசாபிகளைவிடுத்த படலம்.	151
131	அசுகாபிகள் காலிதண்ணலை தலைமையாக்கிக்கொண்டபடலம்.	49
137	கவுல் முறித்த படலம்.	45
144	அலியாரண்ணல் நிருபம் பறித்தபடலம்.	30
	ஆக படலம் 32 க்கு திருவிருத்தம்	1021
	4-வது. கமாலத்துக்காண்டம்.	
151	மக்காஷரீபி லரசுபுரியபடையெடுத்தபடல	23
154	மக்காஷரீபின் தலைவர்கள் ஈமான்கொண்டப	53
161	மக்கா ஷரீபில் போர்புரிபடலம்.	44
168	கஃபூத்துல்லாவை கைக்கொண்டபடலம்.	33
173	மக்கா ஷரீபின் குறைஷிகளெல்லாம் ஈமான்கொண்ட படலம்.	4
174	சபுவானுக்கு திருமுக மளித்தபடலம்.	10
175	புத்து பேசிய படலம்.	11
177	மக்கா ஷரீபுக்கு அரசியற்றிய படலம்.	14
179	பூழ்திமண் தூவி வெற்றிபெற்ற படலம்.	46
185	அபுத்தாகில் போர்புரி படலம்.	38
190	தாயுபுசென்று மீண்டபடலம்.	39
196	அலிமா அம்மாள் கலிதீர்த்தபடலம்.	13
199	தாயுபுநகரத்தார் ஈமான்கொண்ட படலம்.	6
200	வெகுமதி யளித்த படலம்.	20
204	மக்கா ஷரீபில் உம்றாச் செய்தபடலம்.	13
206	மதீனமுநவ்வறா புக்கு படலம்.	14
208	கஃபுப்புலவர் ஈமான்கொண்டபடலம்.	31
212	மையத்தை பூமிகக்கின படலம்.	18
214	பூற்பலரிநகரத்தார்வந்து ஈமான்கொண்டபட	14
217	நசுறாக்கள் கப்பங்கட்டும் படலம்.	14
219	அலியாரண்ணல் விலாயத்தரசுபெற்றபடல	72
230	றாம்தலைநகர் தபூக்கிற் றிரைகொண்டபடல	50
237	எழுபதினாயிரம் மலக்குகளுடன் ஜனாஷா தொழுத படலம்.	8
238	அசுகாபிமார்கள் வெறுமைநீக்கி செல்வமுற்ற படலம்.	9
240	வரண்டகூவத்தை நதியாக்கியபடலம்.	35
245	மூவர் பிழைபொறுத்தபடலம்.	34
249	நாச்சியார்களிடம் உறுதிபெற்றபடலம்.	41
255	அபூபக்கர்சித்தீக்கண்ணலை சச்சிற்கனுப்பிய படலம்.	13

பக்கம்	படல அட்டவணை	தொகை.
257	அபூபக்கரன்னாலும் அலியாரன்னாலும் சேர்ந்து ஹிஜ்றத்துச்செய்த படலம்.	32
261	கன்மதிற்கோயில் சுட்டெரித்த படலம்.	16
263	நசுறுனிநகரத்தார்ஈமான்கொண்டபடலம்.	14
265	நபிசல்லல்லாகு அலைகிவசல்லம் ஹிஜ்றச்சி செய்த படலம்.	37
271	புருக்கான் ஷரீபு தீனிசுலாம் கமாலான படலம்.	16
274	நபிநாயகத்தின் ஆவியை ஹலாத்துக் கழைக்கத் தூதுவந்தபடலம்.	70
284	நபிநாயகம்திருவுளமானஒசியத்து படலம்.	66
293	அபூபக்கரவர்களை இமாமாக்கிய படலம்.	31
298	நபிநாயகம் ஆவியை ஹலாத்திற்சேர்த்த படலம்.	42
304	றவுலா ஷரீபில் திருமேனி ஜீவித்திருக்கிற படலம்.	53
312	சிபுரீலு அலைகிஸ்ஸலாம் முனாஜாத்துப்படல	19
315	மங்கள வாழ்த்துப் படலம்.	7
	ஆக காண்டம் 2-க்குபடலம் 72-விருத்தம்.	2145

படல அட்டவணை முற்றிற்று.

நம்மை யிரட்சித்துக் காப்பாற்றுகிற சர்வசற்குரு நபி
கள்நாயகம் முகம்மது முஸ்தபா சல்லல்லாகு அலைகிவசல்
லமவர்கள் ஹிஜறத்து ஏழாம்ஹு றஜபுமீ 27உ திங்கட்
கிழமை இரவில் திருவாக்களித்த பிரகாரம் அத்தர்முதலி
ய வாசினைச் சரக்குகள் செய்து காலக்ஷேபங் கழித்து
வந்த அப்துல்லா இபுனு பாகிரென்பவரின் மகள் சந்ததி
யாகிய குறைசிவம்மிசத்தி லுதித்து இந்தியாவுக்கு வந்த
கொதுபு ஷேகு பரீதாத்தீன் அத்தாரி அவர்கள் சந்ததியிற்
பிறந்த மகாவித்துவான் உமறுப்புலவ ரவர்களால் துவக்
கஞ் செய்து பாடியிருந்த சீறாப்புராணம் குறை தீராமல்
மூன்றுகாண்டமா யிருந்ததைக் கமாலத்துக் காண்டம் ஒ
ன்றுசேர்த்து நாலுகாண்டமாக்கி ஷெ ஷேகு பரீதாத்தீன்
அத்தாரி அவர்கள் சந்ததியிலுள்ள பக்கீறு ஹாஜி மொ
ஹமுகம்மது காதரிசுத்தூரி யென்பவனால் கமாலாய்ஷெ
புராணத்தை யிரப்ப மாக்கி ஹிஜரி 1328 ஹு றமுலா
ன் மீ 7உ திங்கட்கிழமைதினம் முற்றுப் பெற்றது.

பிஸ்மில்லாஹி.

இஃது

திருமக்கமாநகரிலிருந் தெழுந்தருளியாகித்

திருமதீனமா நகரிற்போய்

அரசியல்புரிந்த

நபிமுகம்மது

சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின்

இயற்கையுஞ் செயற்கையுமாகிய

சீறாப்புராணம்.

இரண்டாம் பாலியம்.

காயற்பட்டணம்

செய்கப்துல்காதிர் நயினார்லெப்பை

யாலிம்புலவரவர்களும்

பனீ அகுமதுப்புலவ ரவர்களுமியற்றியது

ஹிஜுறத்துக்காண்டம்.

காப்பு.

பூமேவு மருவெனவு முளமேவு பொருளெனவும்
பொருந்து முண்மை
நாமேவு சுவைபோலப் பொதிமேவி யுலகனைத்து
நடத்துந் தோன்மை
மாமேவு மிறையருளை யெவ்வினைக்கு மெவ்வுயிர்க்கு
மருவி யாற்
தாமேவு பலபயனுங் கொடுத்தளிக்கு மெக்காலு
மன்பு கூர்ந்தே.

பிசுமில்லாஹிர்.

கடவுள் வாழ்த்து.

வானுல கவனி காய மதிகதிர் சுருக பானு
மீனக முத்தி மாக்கள் விண்ணவர் முதலாய் மற்றுந்
தானமைத் தமிராய் நின்ற தனியவ னருளி னாலே
நீனபி யிறசூல் சீருச் சரிதையிற் சிறிது சொல்வாம். 1

முன்னுமாய் முதனு மாகி முடிவிலா தனைத்தி னுள்ளும்
பின்னுமாய் விகற்ப மற்றுப் பிரிவுமாய்ப் பிரிவி லாது
மன்னுமா நியதியாகி வழியொடுங் காவல் பூண்டு
தன்னுமா நின்ற வுண்மைத் தன்மையைப் புகழ்தல் செய்வாம்.

தொக்கிய குணங்க ளோடு துலங்கிய நாமங் காட்டிச்
சொக்கிய வினைகளி யாவுந் தோற்றியுந் தோற்றா தாகி
முக்கியப் பொருளாய் நின்ற முதுமறை யளவி டாத
மிக்கிய துண்மை வல்ல மேன்மையே கருத்த னன்றே. 3

ஓசையுஞ் சுவையு மூறு மொளியுடன் மணமு மைந்து
காசறு பூத வாயில் காவல்கொண் டிருப்ப வுள்ளத்
தேசறு கோயில் வைகுந் தெளிவினுந் தெளிவாய் நின்ற
வாசையை நேசித் தின்ப மனுகுதா னாகு மன்றே. 4

வானத்தி னிருந்து வந்து வாயுவிற் கலந்து தீயின்
றூனத்தி னிறங்கி நீரிற் றரித்துமண் டலத்திற் புக்கி
மானத்தின் மருவி வண்மை வாய்ந்தபுன் னனியின் றுள்ளி
ஞானத்தி னுக்கை யாக்கு நாதனே காவ லன்றே. 5

ஒன்றினி லொன்றி பொன்று வுலவிய வுயிர்கள் யாவு
நின்றிடு நிலையி னீத நிகழ்த்திய வனுமை தன்னாற்
றுன்றிய படைப்பு நாட்டந் தொகுத்தினி தொழுகு கின்ற
வென்றியா பொருளை யென்றும் வேண்டிய பொருள தாமே.

மிக்குறும் வலியாற் செல்வ மேன்மையா லிறைபா லுன்ன
லொக்குறும் வினையால் வீறு லுபரிய பேர்க ளெல்லா
நெக்குறு மாணை மாட்டி நிலையொடு மடக்கி யாளுந்
தக்கவ னருளே யாருந் தருந்தொழிற் குரிய வன்றே. 7

மின்னிய பொறிக டம்மாற் பேதகக் குணங்கொள் ளாது
மன்னிய பயனின் பண்பே மலிகின்ற தகுதி பூண்டு
நன்னிலை கொண்டு நின்றார் நனிபெறப் புவியில் வானிற்
பொன்னிலை கொள்வ ரென்று லந்நிலைப் போற்ற லன்றே. 8

வேறு.

தோற்றிய பன்மை யிடங்களு மவையிற், றுலங்கிய வுயிர்களும் பலவு, மேற்றிடத் தோற்று வுண்மையு மறிவு மிலங்கிய வொளியொடு காட்சி, யாற்றலி னுன்கி னருமணி யாகி யகன்ற மெய்ப் பொருளென விளங்குந், தேற்றவன் சோதி முகம்மது நபிதஞ் சீர்பதஞ் சிரமிசை யணிவாம். 9

வேறு.

ஒருகாதமுங்குமண மிருமான்மதம்பரவு மொளிமேனி கொண்டுவலியிற், பொருகாதவஞ்சமுள ரவன்மேயடைந்துபல புதுவேட மொன்றணியவுங், கருகாதநெஞ்சடையர் வழியேறவுந் தகைய கன்வார வன்றிறலினு, னிருகாதனிந்தமொழி மருமேது தஞ்சரண மிருகால மும்புனைகுவாம். 10

மேலாயனைத்துலகு தாளுய்விளக்குநெறி வீறுயமைத்த நபியார், பாலாய்த்தழைக்குளுயர் பேறுய்வரத்தகுதி பாரான மொய்த்த பெரியோர், ஞாலாயுளப்பயனு நாவா லுரைத்தருளு நாலுயி ரத்தோடிருபா, னுலாயிரத்திணபி மார்பாதபொற்கமல நாளுளு ளத்திலணிவாம். 11

வேறு.

அறிவிற்சிறந்திலங்கு பொருளிற்படர்ந்தெழுந்த வருளிற் பிறந்துவந்த நபிநூர்சென், னெறியிற்கலந்துநின்று புகல்தற்கமன்றுவிண்ட நிலையற்றவன்பொருந்த வழிபாக, வுறுதிக்கியன்று நண்பி னுரைசொற்றுளங்கனிந்த வுயர்சித்திகென்றணிந்த மெய ரார்நீள், பொறையிற்படர்ந்தவென்றி யபுமக்கர்தம்பதங்கள்புகழ்ப் பற்றியெந்தநெஞ்ச மணிவாமே. 12

வேறு.

"திசைபெறுலோகாதிலோக மிசையுறுவேல்வாள்வலாளர் திற
னோடு காடாழுநாளும்விறலாலே, யிசையொடுமா றாமுசாமு பல
பலதேசாதிதேச மியனெறியேநீதிமேவ வரசாகிப், பசையுறுபோ
காதிபோகமுளபுவிவாழ் வேகலாத பரிவுறுமேல் வீடுபேறு புனை
வார்மெய், நசையணிவீறேறுவாகை யுமடைனுமாநாதர்பாத நளி
யுளமீ தேபராவி நினைவாமே. 13

வேறு.

தெரிவா ருளமதி லுய்த்தாய் பொருள்கரு, திணைவா யெழு
மொருமிப்பாகியவழி தெளிவாயுணர்பெறநற்காரணனோடு மருள்
வானின், வருவாய்நிரைநிரைசொற்சிரணியொடு மெழுவாய்பயனி
லைபெற் றுதிபின்மொழி வழியா யுரைசெயு மிக்கா மறிவுள விய
லார்சீர், குருவாகியநபி தற்காதலினருண்மகவாரிருவரை நட்பாய்
தொடைபுனை குணவாருதிபொறை யிற்பூவலையமு திகராவன்,
டருவாய்நிழல்புரி தற்காதரவுளவுதுமானொடு மிசை யிற்காவலர்
திரு தகைசேர்பதமல ரைப்பேணுதுநித நிதநாமே. 14

வேறு.

தண்டிரைக்குரைகடற்புனலறத்தந்திகட் டிசைதிசைப்பெய
ர்தரத்தங்குபொற்கிரிமிகத் தளர்வுறக்கனமீது, கொண்டவற்றுரு
முகட்கதறிடத்துன் றுநற் கணமினத்துதிர்தரக் கொந்தழற்கதிர்
மதிக்கலைவுறத்தொனியோடு, மண்டர்கட்கொடிகுடைப் பொரு
படைத்தண்டலிர்த்துகள்படக்களமகத் தண்டியேட்டொடுபுதிற்
றிய நடைக்கதிமாவின், திண்டிறற்சமரிடைத் தொழில்வயத்தொ
ண்படை புலியலிக்கதெழிற்சிந்தையிற் புகழ்பெறத்துதிபெறப்
புகல்வாமே. 15

வேறு.

அழகிற்பொலிமயி லருவிற்பயிற்றும்பதிகாரணநபி மதியோ
டுங், குழகிற்பொலியுடு வெளமுற்படுதகை கொளுமாமணிகளி
லெழில்வீசும், பழகப்பலனருள் வழிநற்கருணையர் பகலாநெறி
யவே மகவானோ, ரிழகிக்கனிபுகழ் அசனைத்திகழுசைனினிதாயணி
குவ மனமீத்த. 16

வேறு.

போதலருங் கிரணனெனப் புவிவிளக்கு முறைதிறம்பாப் புண்ணியத்திற், போதலருங் குணமலையார் மதமலையிற்பகையர் குழாம் பொருதுவாகைப், போதலருஞ்சேனைபதி யபூவுபைதா முதலறுவர்பொருந்தினோர்க்குட், போதலருணால்வரொடு பதின்மர் கழலுள்ளகத்திற்புனைதல் செய்வாம். 17

அரியவருக்கரியவரா முரியவர்க்கின்புரியவரா மானனங்க டெரியவராம்வணக்கநெறி யுரியவராமுன்வேதஞ் சிறப்பிற்போற் றும், பெரியவராமென்றோழன் றன்றோழரெனமறையிற் பெரி யோன்சொல்லும், கரியவராம் அசுகாபிமார்வரிசை திருப்பாதங் கருதுவாமே. 18

பூவுசனுமுரையாலு நெறியாலுந்தொடர்பினரைப் புகழ்ந் திப், பூவுலவும்வழிநான்கு திரிவுபடாதியற்றுமிகப் புதுமையெ ய்தும், பூவுலகமெழுன்னுமிமா மூலமாக்கனற்குணத்திற் பொதிந்த பாதப், பூவுகளைக்கண்ணகமு நாவிடமுங்களிப்புடனே பொருந் தல்செய்வாம். 19

வேறு.

இரங்கிக் கரையும் புடவிதனக் கிறையோ னருளு மெந்நா ளும், வரங்க ளுடையார் வகையுடையார் மருவி யிருப்ப ரென வர்கள், கரங்க டாழ்த்துத் தகுதியிலைக் கண்மேன் யாசென் றுல வுமெமர், சிரங்கொள் பதத்தின் மலர்களுதல் லருலங் குறுமைச் சிந்தைசெய்வோம். 20

வேறு.

மண்மணி மாளிகை விலைப்பொன் வாங்கிமேல்
விண்மணி மாளிகை பெறச்செய் மேன்மையத்
தண்மணி யாஞ்சுலுத் தாலுல் லாரிபின்
கண்மணி மலர்ப்பதங் கருத்திற் போற்றுவாம். 21

என்பினில் வடகம்போர்த் தெழுப்பி யவ்விடை
முன்பினி லுலவருண் முதிய கரீன
மன்பயில் சாகுல்க பீது மாதவப்
பொன்பிறழ் பூங்கழ லுரும் போற்றுவாம். 22

வேறு.

மலமொரு மூன்றுங் காய்ந்து வருவழி யைந்தும் போக்கி
நிலனொரா றுந்தி னேறி நிருமல னென்ன வாழும்
பலபுகழ் வகுதை மேன்மைப் பதியினிற் பதியா நின்று
புலனுகங் சதக்கத் துல்லாப் பொற்கழல் போற்றல் செய்வாம்.

வேறு.

பாரின்மீது மேவுமேதி யாவுமாக மேவிடாத பாரவாய்மை
நாயகர்,சீரின்மாத ராசை யோக மேகொளாத வேதநாதர் சீலமேய
பாவின, ரோரினுரு மேவலோடு காலநேம மோதியோதி யோய்
விலாது தாழ்பவர்,ஆரிபீன்கள் சர்கிதீன்க ளாசிகீன்க ளாமிதீன்க
ளாசில்பாத மோதுமே. 24

அவையடக்கம்.

வச்சிரப் பொருப்பின் முன்னர் மண்டிடர் போதுஞ் செங்க
ணச்சரா மணிமுன் குன்றி னன்மணி போதுங் கல்வி
பெ.ச்சநா விலக்க ணீநர் விளம்பிய தமிழ்முன் சற்று
மச்சமொன் றின்றிப் பேதை யறிவிலன் விளம்ப லம்மா. 25

நாவினுற் றுதித்துப் போற்றத் தகுநபி சீரு வென்னும்
பூவினு ளுறும் வாசம் பொருந்துமென் றெண்ணிச் செஞ்சொற்
பாவினுற் புனைதல் செய்தேன் பாவலர் செவியிற் சென்று
மேவினு லெழில யுண்ட வேலைநீர் நிகர்க்கு மென்றே. 26

திசைநிறை புகழும் வல்லோன் திருவரு ளொறியும் வள்ள
லிசையுமன் றூட்ட மியார்க ளின்னெளி கருணைத் தோழர்
நசைதரு மூவப்பு நன்மா ராயமும் பெற்று வாழி
யிசையொடு கேள்வி யாள ரிணங்கினர் குணங்கொண் டோரே.

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

87

16 ... 1910 MADRAS.

பிஸ்மில்லாஹி.

றசூலுல்லா

அரசுரிமைப்படலம்.

அறிவுடையா ரறிவதனு லறியுமணி ககராகி யறிவி னூலே, யறியவச மானபெரும் பயன்சுரந்து வரையில்வள மனைத்து மேச ங்கு, நெறியுடைய மதினமெனு மருப்பொழியுங் கமலமெழி னி லவு பூமே, னறியமணி யெனவினிதி னவமலர வீற்றிருந்தார் கவி கள் கோமான். 1

கருந்தாது வரைநலியுந் திறற்றேனின் குறைகிழியெ னுங் கட்டவி னுப்ப, னிருந்தாதி திருவருளி னிதியாகி யுலகனைத்து மிய ற்ற வாய்ந்த, பெருந்தாது முகம்மதுநகர் நபிநூரம் மக்கநகர் பிரி ந்து வந்து, வருந்தாது மதீனத்தி யுறைபதி யரியணைமேல் மகி ழ்வி னுற்றார். 2

வெண்கதிரின் மலரணைய வுடுக்குலங்கள் விறலிநெடு விர வி வாய்ந்த, வொண்கதிரின் வடித்தெடுத்த தெரிவனைத்துந் திர ண்டுயர்ந்த வொளிவி யாவுந், தன்கதிர்செய் செந்நிறத்த விரவி மிசை யிருந்ததெனத் தவழ்ந்த சோதி, வண்கதிரின் மலர்முக முஞ் சிரத்திலங்குஞ் சருவந்த மவுலி மாதோ. 3

பொன்னிலவு மணிமலையப் புவியனைத்தும் பொறுத்தமணிப் புயத்தின் மீது, தெண்ணிலவு திறவாளை நழுந்தாது முருக்கவி கள் சிதற மேனித், தன்னிலவு தூக்கவுடை யிலங்கமருங் கணை த்தவுடை தகைய வாளின், மின்னிலவு நிலவொழுகுந் திருவ ணிந்த செங்கோலும் விளங்க வன்றே. 4

பொற்பூரும் புலராது பயன்றுகுதேனிணமலர் பூத்ததேபோ, லற்பூரு மிருவிழியின் கருணைமழை யிவரவர்க ளாசை தீர்க்கு, முற்பூர்வ நடக்கைபல பலன்பெறவே யாவருக்கு மொழியுந்தோ ளுங், கற்பூர நறுமணமே திருவாயின் செம்பவளங் கமழுமாதோ,

நீருடுத்த புவிமாக்கள் மற்றுயிர்கள் வானவர்க ளிறையின்
மிக்க, பேருடுத்த முத்திரையிற் றிரளொளிவே பிடரியின்கீழ்
பிறங்கி வீசப், பாருடுத்த திசைநான்கும் பிணிபாவ மணுகாது
படர்ந்து மன்னுங், காருடுத்த விருளறுத்த வொளிமேனி நரந்த
மணங் கமழவன்றே. 6

முன்பார்க்கு நெடுந்தார் முறைபுறத்தே தோற்றிதலான்
மொழியு மோசை,பன்பார்க்குந் துயிறலினுங் கேட்டெதிர்சொல்
லறைதலின லழுக்கொன் றின்றி, வன்பார்க்கு மீமுதன்மற் றோ
ருயிரு மண்மையிலா வரிசை யாலே,மன்பார்க்கு மசரீரப் பெரு
ஞ்சோதி குவித்தவென வயங்க மாதோ. 7

குவியாத மலர்போலு முத்திரையந் திருவாழி குலவுஞ் செ
ங்கை, யவையார மொழியோடு முயர்தோறுஞ் செம்மணிசீ றலர்
ந்து பூப்பப், புவியாளுங் குலவேந்தர் வல்லோர்க ளறிவாளர்
பொருகை யாலுந், தவியாது வணக்கிலே யதனுலுங் குறிகொள்
பதந் திலங்க மாதோ. 8

செய்யகதி ரருக்கனிரு புறத்திலுந்தன் னெழுகதிர் சிந்து
மாறு, துய்யகதிர்க் கற்றைமணிக் கவரியிட வலங்கார நடுவிற்
றாங்க, வையர்மன் னிலைநோக்க மனைநோக்கி யடையார்க ளுடை
ய வென்றி, யுய்யமதி புணர்வுடைய வமைச்சரொரு பதின்மர்ம
ருங் குவப்பிற் சூழ. 6

எண்டிசைக்கும் புகழ்பூத்துக் கொடியோங்க நிலைதிருத்து
மினிய தினைக்,கொண்டிசைக்குந் திறங்கோலிப் படரணிகொள்
பகைக்கடலைக் கொற்றவாளான், மண்டிசைக்குள் கடந்தவிறற்
கொடிமுரசம் படைத்தவர்தம் மல்குஞ்சேனை, விண்டிசைக்குந்
தலைவரொரு பன்னிருவ ரருகினிதின் வியப்பமாதோ. 10

எம்மணிக்குந் தாயகமா யிலங்குமணி நிறம்பூத்து மிசைக்
கும் வெற்றி, யம்மணியின் கேதனமு மாறுது நிலைகாட்டு மடை
யலார்கள்,தம்மணிகள் பொன்னிதிகள் பலவளமுந் திறைமலைவிற்
றகைய முன்றில், செம்மணியின் சயமுரச மசனியெனக் குரல்
கெழுமிச் செழிப்ப வன்றே. 11

இழுக்காறு தனிவியற்றும் வெறுமையெனூர் தழலவிப்பா
னிசைந்த நீழ, லொழுக்காறு பயின்படர்ந்த கருமேகக் குடை

யோங்க வுலகின் மீதே, யழுக்காறு கிக்கைமத வஞ்சமுதற் றீவி
னைக ளனைத்தும் போக்கும், விழுப்பாறு புனைநீத வறவாழி யவைவி
யகத்து விளங்க மாதோ. 12

புத்தியஃ துடையார்க்கு மற்றவர்க்கு நெறிமுறைமைப்
பொருந்து மாக, முந்துமறை மூன்றினர்க ளிடுதருக்கங் கடிபா
க்கு முயனு நன்மை, வந்தவழி யஃறிணைக்கும் வல்லவன் சொன்
மாறுது வழங்கு மெய்மை, யந்தமுறு மமரர்பதி யடிக்கடிவந்
திறங்குமொளி வலர வன்றே. 13

வலியாது மதியாது மொளிரிலைவேற் றிறத்தாலும் வார்த்
தை யாது, நலியூறா யுறமன்ன ரிடந்தமரு வினைமுடிக்கு நறிய
பொற்றோள், மெலியாது மனத்தோடு புளகமெய்த பணிவிடை
யே வேட்டு நிற்குஞ், சலியாத கொடைத்தாரு பதிகள்பதிற்
றொருவரிரு பாலு மல்க. 14

தேனொழுகு மரவமல ரிடையலியோ டரியவிழி திரண்டு
மொய்ப்பக், கானொழுகுந் திருமேனி காணாத நிழலுடையார் கனி
வாய் சிந்தன், பானொழுகு முறையுநெறி படுதேய மற்றெனவயின்
பயில்வ தியாதாங், தானொழுக்கின் கணக்கிரு பதிற்றைவ ரிரு
பாகந் தகையி னிற்ப. 15

உட்காத வபவர்மன மூட்கவரு முகமலரா ருணர்வுளார்க,
ணட்பாக வருமஃதே நவமுடைய முகம்மதெங்க ணபிகள்கோ
மான், கட்கான விமைபோலு நெருங்கியடர் போரிடத்துங்
காவல்பூண்ப, கட்டாளர் கஞ்சுகியோ ரெண்மரணித் தினிதுவந்து
களிப்பமாதோ. 16

முத்தொழிற்கு முரியபொரு ளருளதறு லனுதினமு முறை
மை யாகத்; தத்துமணிக் கடலொலியிற் றகவீருந் தருவீனுஞ்
சலவாத் தோடும், பத்திபெற வோதிபுவந் தளவகன்ற வமரர்மலர்
ப் பாதங் காப்ப, வெத்திசைக்கும் புகழ்தழைப்ப றகுமத்தவ
ணிடையிலரு திறங்கா நிற்ப. 17

அணியெழிலி னவையிடத்து மறையுமொழி தன்னிடத்து
மசையாதற்று, மணியெழிற்கொள் சிவிறியொடு காளாஞ்சி சிற்
றால வட்டமற்றும், பணியெழிலின் மாறுது காத்திருக்கு மாகன்
டகையாற் பபன்கள்மிக்கக், கனியெழிலார் பதிற்றொருவ ரொரு
புறமு மிருபுறமுங் கலவாநிற்ப. 18

முன்னவர்க்கு மறைபுணர்த்து முதியவர்க்கு நிதியவர்க்கு முறைமருது, மன்னவர்க்கு மதிவலர்க்கு நாயகமாமேன்மைகொண்ட வள்ளலென்றே, நன்னயத்தின் கட்டியமு மொற்றுரையும் பலவினையு நயந்து செய்வோ, ரின்னுரிமை மக்களொரு முப்பதிற்று மொருவராணித் தினிநின் மொய்ப்ப. 19

வெவ்விசைய கடுங்காலின் வாம்பரிக ளளவின்றி வென்றிபோக்குந், தெவ்வடர்கொன் றூனக்கோட்டு மதமலைகள் வரைவின்றிச் செம்பொற் சில்லிக், குவ்வுதிர்க்கும் பலவண்ணக் கொடியிரதந் தினையின்றிக் கொற்ற மள்ளர், பவ்வமெனு வெப்புறத்துஞ் சதுரங்கப் பதாதி நிரை படராநிற்ப. 20

வேலணிந்தார் குற்றுடைவாள் சொட்டைகதை மழுச்சவளம் வில்லும் வெய்ய, கோலணிந்தார் கிடுகணிந்தார் பகையரிட மடருமடல் கோபங்கொண்டார், நாலணிந்த நெறியுடைய வசுசாமி மார்கள்மிக நன்மை நேர்மைப், பாலணிந்த முகா சிரீன் கருமருங்கிற் புகழோடு பரிவிற்சூழ. 21

சொரிகதிர்வேற் றந்தையுடன் வருமவர்க டோன்றலவர் துணைகள் மக்க, ளரியமுறை யருகுடைய சம்பந்தர் மைத்துநர்க ளறிவின் மிக்க, விநமரபின் கேளிர்களு மதியுடைய நட்டர்பல ரிணங்கி வாழ்த்தத், திருவளரும் பொன்னகர மலர்மாரியரம்பையர்கள் சிறப்பித் தாவ. 22

புகங்காட்டும் வஞ்சகர்க்கு மறங்காட்டுங் கொலைஞருக்கும் புத்தியோர்மை, யறங்காட்டுஞ் செந்தொடைபன் னிறங்காட்டுந் துறைதோறு மமிர்த மூறித், திறங்காட்டு மலங்காரக் கவிஞரினர் மாலிக்கருள் சிறந்தகருபு கூறங்காட்டுந் தாபித்தருள் கச்சானும் பிறபந்த முனரயா நிற்ப. 23

மறத்தாளர் மனமொடுங்கி யடிபணிய வளங்கொண் மணிமாலை போக்குந், திறத்தாளர் கண்ணோட்டம் வேண்டி நிற்பச் செம்பொனிதி சிறைகளோடு, புறத்தாளர் பதந்தேர்ந்து பேணி நிற்ப வரசரெல்லாம் போற்றி நிற்ப, வறத்தாறு கோடாது திசைதோறும் பலசமைய மடர்த்துச் செல்ல. 24

தாமமல ரகத்தணிகொ ணறுந்தேனையளியினங்க டொடர்ந்தபோரன் றூல், காமமலர் தங்கநிறச் செவ்வாம்ப லிணைமலர்கள்

கலந்த போன்றுந், தாயுருமைக் குழவிகளன் போடுதெண்டு மகிழ்வவெனத் தணப்பிலாது, நேயமுறு மழுதமொழி யொடுகுடிக டழுவியொரு நிலையே நிற்ப. 25

செங்கதிரின் வெங்கோபம் பல்வகையு மடாது செழுங்கணைக்குங், கொங்குயிர்க்குங் கருமேக மதிதோறும் பருவநிலை கொண்டு பெய்ய, பங்குமதற் குளநடுங்கு நெறியொழுகப் பகைமைமொழி பயிர்ப்புமின்றி, வெங்கடிய புலியுழைக ளிகலின்றி யொருதுறை நீர் மேயா நிற்ப. 26

வஞ்சகமொப் புரவகற்றக் கொலையிரக்க மனந்தகற்ற மாறுபட்ட, நெஞ்சமொரு நிலையகற்றப் பறமுறுதி பனந்தகற்ற நிந்தை நோதும், வெஞ்சினத்தைப் பொறையகற்றப் பழமைபுதுமையதாக வென்றிநீதி, அஞ்சநபி புகழ்சலவாத் தியமோகை மற்றையெல்லாந் தொலையா நிற்ப. 27

ஆரணத்தி னெறியோங்க வரசுரிமைப் பயனோங்க வரிய வுண்மைக், காரணத்தின் வகையோங்கப் பல்லுயிர்கள் மகிழோங்கக் கலிமாவென்னும், பூரணத்தி னுரையோங்க நல்வினையின் றொகையோங்கப் புனித வெள்ளை, வாரணத்தி னபிநயினார் செங்கோலின் பாங்கோங்கும் வண்மையானே." 28

கருங்கடலி னீரனவுந் தீவகத்து றுறைவனவுங் களிகொள் சின்னு, நெருங்குநில நிற்பனவு மூர்வனவும் "பறப்பனவு நிரை பாதாளத், திருந்தனவு நாற்காலி னனிவுயிர்கள் பற்பலவு மிருகு லென்னத், திரிக்ஷதரி யுரைத்திமா றெடுபோற்றித் "திருப்பாதக் தேற்று நிற்ப. 29

தனத்தியல்பு தெரிந்தியற்றும் பெருஞ்செல்வ முகம்மது சகிது நேர்ந்த, மனத்தகிசி னிருந்தரசு புரியுமுகம் மதுநயினார் வண்மை தானே, யனைத்துலகு முளவாயி னெறிநீத மியற்றுமுறை யாக்கந் தன்னை, யினைத்தெனவின் னுரைப்பவெவ ரறிவினுக்கு மகன்றிருந்த விசைசக ளம்மா. 30

நருஹுல்லா அரசுரிமைப்படல முற்றிற்று.

ஆக படலம் 2-க்கு திருவிருத்தம் 57.

மிசுறுதேசத்தரசர்

ஈமான்கொண்டபடலம்.

வற்றறு மின்பச் சொர்க்க வளந்தரு மிறசூ லல்லா
சொற்றநல் வசனத் தான்மை சூசிதோய்த் தேட்டிற் றீட்டி
யற்றவர்க் குதவுங் கைமு கவ்விக்கி சுத்த னுப்ப
கொற்றவ னீமான் கொண்ட கூறெலாம் விளம்ப லுற்றாம். 1

வேறு.

குடவ ளைக்குலம் புதுமணி நிலவெனக் குவளை
மடன்மு றுக்கவிழ்க் கும்மட மகளிர்க ளாடுந்
தடமு டுத்தபல் வளந்தரு மிசுறெனுந் தலமு
மடன்மிகு மிஸ் கந்தரி யாவெனு நகரும். 2

இரண்டு சீமைக்கு மரசென வரியணை யிருந்து
முரண் டரித்தவர் கோட்டையு நாட்டையு முருக்கி
யரணு டைத்தவன் கைசறெனும் பெயரின னளித்த
திரண்ட மொய்ப்புன்மு கவ்விக்கி செனுமொரு செம்மல். 3

மாட்டினே னெனக் காத்திபு காத்தினில் வரைந்த
வேட்டையுங் கொடுத் தமுதவாய் மொழிசில விசைத்துப்
பூட்டு வாட்கர நபிவிடை கொடுத்தனர் பொருவி
லேட்டுத் தாமரை துணைப்பதந் தொழுதெழுந் தகன்றார். 4

குன்றுங் கானமுங் கடமலை பிடியொடுங் குழுமி
நின்ற சோலையுங் கன்னலம் படப்பையு நீருந்
துன்று மோடையு நெடுவய லிடங்களுந் தொலைத்துச்
சென்று நீணதி மிசுறெனுந் தலத்தினைச் சேர்ந்தார். 5

வடித்த வெண்சுதை தீற்றிய மாடநீண் மறுகும்
படித்த நூற்கலை பயிலறச் சாலையு நோக்கித்
தொடுத்த மாலைக ளேற்றிய சுருங்கையின் கதவ
மடைத்தி டாமணி மண்டபங் குறுகியாண் டடைந்தார். 6

இருமருங்கும் வெண் கவரிக ளனநடை யிழையி
னருகு நண்ணிடை மதர்விழி மாதர்க ளசைப்பத்
தருமமீதது பாவமென் றுரைத்திடுஞ் சான்றோர்
செருக வாசனத் திருந்தனன் கறைகருள் செம்மல். 7

இருக்கும் போதினிற் காத்திபென் றுரைத்திடுந் தூதர்
தருக்குமா றுளங் கடையுக முடிவினிற் றுயி
லுருக்க மாகமன் றுட்டத்துக் குரியவர் கொடுத்த
மருக்கு லாவிய திருமுக மரையன்முன் வைத்தார். 8

பொறித்த பாசுரம் விரித்துண ராமுனம் புவனத்
தெறித்த வாதவன் மீண்டெழப் பார்த்தவ ரினிதிற்
குறித் துரைத்தியென் றுரைத்ததிம் மிசிறினிற்கொடுங்கோ
லிறுத்தி யாண்டனன் பிருஅவு னெனுமொரு நிருபன். 9

தன்னைத் தானிறை யென்னவுஞ் சாற்றின னதனுன்
முன்னை யன்னவன் பட்டது மழிந்தது முறையாய்
மன்ன நீயும தறிந்தனை யாகிலம் மருளைப்
பின்ன மாக்குதல் கவ்வைவாய்ப் பேறுவை யெனவும். 10

நீயு நன்னெறி யியக்கும்புன் மார்க்கத்தை நீத்துத்
தூய சொன்மறை வழிமுறை யொழுகுத றுணிந்தா
லேய காரணங் காண்பதிற் றெரிகுவை யெனவே
தாயகக் நபி மொழிந்தசொற் சாற்றினே னென்றார். 11

என்ற செய்தியை யடலரி யேறனன் கேட்டு
நன்றி நன்னபி கூறிந முணர்ந்துள நாடிக்
குன்றுபோல் வளர் குவவினைத் தோள்புள கெறிப்ப
வென்றி நற்கலி மாவிரித் தோதினன் வியந்தே. 12

கற்றவர் தரு பறனுசன் னத்துநன் னெறியுங்
கொற்ற வேதமு மருவிய குழூடக்களுங் கொள்ள
முற்று நன்முறை படித்தறி முதுக்குறைப் பொருளாய்க்
கற்ற மாதவ முகவ்விக்கி சரசளங் களித்தார். 13

சரப்ப ணித்திர ளிரணியச் சாதிரை கால்வை
பரப்ப நான்மணிச் செம்மணி வயிரத்தின் பதக்க
னிரப்ப மாகிய மரகதக் கோவைபொன் னிதியம்
புரப்ப காத்திபென் பவர்கொளு வளித்தனன் பூமன். 14

வற்றி லேர்வரு மகுசறென் பெருங்கடல் கடத்த
வுற்ற தெப்பமென் றறுஷபா ஷித்தரு ளரவோர்க்
கற்ற மில்புக ழரசருக் கரசென வவனி
முற்றுந் தாங்கு முகவ்விக்கி செனுமொரு முதியோர். 15

கட்டு வர்க்கம்பொன் னவமணித் திரள்களுங் கவிசா
வொட்ட கத்தினு மெருத்தினு மொருங்கெடுத் தேற்றி
மட்டி லாப்புகழ் வளர்சமுஹன் றவத் தீகித்த
வட்ட பான்மொழி மாரியத் தனங்கையு மளித்தார். 16

சந்தனந் திமிர் தடப்புயப் பூகரச் சம்ஹன்
றூந்த கோற்றநற் றவத்தினின் முழுமதிச் சுடரிய்
வந்த மாரியத் தன்னைக்கு மணிகல னுடை
கந்த மான்மதக் கலவையுங் கணிப்பற வளித்தார். 17

அளவில் பல்சிறப் பரசர்கோ னருளிய பின்னர்
தளமணிப் பெருந் தலைக்கடை வாயிலைக் கடந்து
வளமிகுத்த நன் மிசுறெனு மாநகர் நீந்திப்
புளக முற்றிடப் பூவையோ டெழுந்தனர் புகழோர். 18

போதுலாவிய பூதுகத் தோளிணை விம்மக்
காது வெஞ்சினக் களிறுறை குன்றமுங் கயமுந்
தாது குத்தளி யார்த்தெழுந் தருக்களுங் கடந்து
சீதவாவி சூழ் மதீனமாந் திருநகர் சேர்ந்தார். 19

அகலிடம் படர் நபிசர ணும்புய முத்தி
மகிப னங்குமா ரியத்துடன் றிறைகளும் வைத்தார்.
நகமிரும் புள றருமவர் சுரியத்தாய் நாடித்
தருபனைத் தலத் திருத்தினர் மாரியர் தமையே." 20

தெளித்த வெண்சுதை தீற்றிய மாடத்திற் செந்தேன்
றுளித்த பூந்தொடை மிலைந்தெழு தோகைய ரேத்தக்
களித்த கற்புடை மாரியத் தணங்கினைக் கலவை
குளித்த தோளிணை பொருத்தினர் நபியெனுங் குரிசில். 21

மிசுறுதேசத்தரசர் ஈமான்கொண்டபடலம்

முற்றிற்று.

ஆக படலம் 3-க்கு திருவிருத்தம் 78.

எமன் இராச்சியத்தாரு மவ்வரசரும்

ஈமான்கொண்டபடலம்.

மல்லலம் பழன வாவி வாளைபம் பகடு தாவிப்
பல்லவ முயிர்த்த வாழைப் பழக்குலை சிதறிக் கன்னற்
கொல்லையை யுழக்கி வாசக் கொழுவிலைக் கொடிக்காற் கேணி
யெல்லையில் வந் துறங்கு மெமனெனுந் தலத்தார்க் கென்றே. 1

நிருபமொன் றெழுதிக்கல்வி நிறைத்தெழுஞ் சயீதோ டின்சொற்
றருமவர் மூசா வென்னுந் தலைவர்க ளிருவர் கையிற்
குருநபி யளிக்க வாங்கிக் கொழுமலர்க் கழல்வீழ்ந் தேத்தி
யருவரை பொருவு மாட வணிமறு கிடங் கடந்தார். 2

இடியுறு முழக்கிற் கஞ்சி யிருங்கவுள் வேழஞ் செங்கட்
பிடியினை யணைத் துறங்கும் பெரும்பொறைக் கடறும் வெய்ய
சுடுசுர முழுது நீந்தித் தூர்ச்சடைக் கன்னற் கொல்லைப்
படுபுனல் புலராச் செந்நெற் பழனமா ரெமனிற் புக்கார். 3

குருமணி யிழைக்கு மாட கூடமார் தெருக்க ணீந்திச்
சுருதிமுன் றுணர்ந்தோர் வல்ல தொழிலினர் புலமை யாளர்
பொருபடைக் கரியே றென்னும் புரவல ரிளையோ ரெல்லாம்
பெருகிய கோவிற் சென்றார் பீடுடைத் தூத ரன்றே. 4

தலத்தவர்க் கெழுது மோலை தனையவர்க் களித்த ராஜ
குலத்தவர் தலைமைக் காரர் குடிமுதற் பெரியோ ரியாரு
நலத்தவா சகத்தை யோர்ந்து நபிதமக் கீமான் கொண்டார்
மலைந்தசொல் விருத்துஞ் சிந்தை மன்னரிற் சிலர்சொல்வாரால்.

முத்தொளி வாத வந்த முகம்மதுக் கீமான் கொண்ட
புத்தியு நன்றி யாரும் போற்றிய துவல தென்னு
மித்தையுங் கொண்டு செல்வோ மிறை நபி காரணங்க
ளத்தையு மறிவோ மீமா னதற்குப்பின் கொள்வோ மென்றார். 6

நன்குறை யிஃதே யென்ன நாண்மலர் சொரிந்து போற்றும்
பொன்குல பலதனுக் கேய்ந்தபுதுமலர் மோலி சூட்டி
மின்குல மிருந்த பைம்பூண் மிலைந்துபொற் றாசும் போர்த்து
மன்குல வேந்தர் தாங்கி மதகயம் போ லெழுந்தார். 7

பொற்கலை யரையிற் சேர்த்திப் புரிமுறுக் கவிழ்த்த பூந்தார்
மற்கலை பயிலுந் தோளின் வனைந்துழும் மறையின் வாய்ந்த
சொற்கலை தெரிந்தோர் யன்னி ராயிரர் குபலைச் சூழ்ந்தாங்
கற்கலை மதிதோய் வெற்புங் கடந்தரண் மதினம் வந்தார். 8

பன்னருந் திறத்த வாய்மைப் பான்மறை யிறசூ லுல்லா
முன்னில்வந் திருகை கூப்பி முளரியம் பதத்திற் றாழ்ந்தா
ரனைவர் மதிய மொத்த வானனை நோக்கி நீவிர்
பொன்னிலம் புகுந்து மீமான் பொருத்துமி னுளத்தினென்றார்.

அடிகளான் குரைத்தீர் பேதை * யறிவினர் நெஞ்சந் தேறப்
படியினோர் புதுமை யெங்கள் பாலினி தருளி மீமான்
குடியுளத் திருத்தி யாறு கொண்டபுன் குபிரை நீத்து
வடிவுறு முமது தீனின் மருவுவோந் திண்ண மென்றார். 10

கவனம்வே றின்றி நாளுங் கடிமலர் சொரிந்து போற்றுங்
குபலினை ரகசி யத்திற் கொணர்ந்ததைக் கொணர்மி னென்றார்
நவமுணர்ந் தெடுத்து வந்து நபிமுனம் வைத்தாற் போர்த்த
வவிர்கதிர்க் கூறை நீத்து மென்சவப் படியே நீத்தார். 11

நளிர்மதி வதனச் சோதி நபிதிருக் கரத்திற் றொண்ட
வொளிமணிக் கோலாற் புத்து கான்றலை யுரத் தடித்துத்
துளிசெறி திசை கொழிக்குந் தொடுகடற் புவியிலியான் யார்
விளிதர வறைதி யென்ன விளம்பினர் நபியுல் லாவே. 12

அகலிரு விசும்பு பாரே மமைத்தவ னுண்மைத் தூத
ருகமதின் முடிவி னியார்க்கு முறுஷபாத் தருள்வோ ரென்று
முகமதி நோக்கிப் புத்து மொழிந்தவற் புதத்தைக் கேட்டுச்
சகலரு மிறசூல் பாத தாமரை சென்னி சேர்த்தார். 13

---

* அறிவினர் என்றது தன்மையைப் படர்க்கை யாகக்கூறிய இடவழுவமைதி யென்று கொள்க.

ஓதுதற் கரிய வேதத் தாட்பொருட் கலிமாச் சொல்லித்
தீதற வுள்ளத் தீமான் றேக்கிதன் னிலைமை பூண்டார்
பூதலத் தியற்றும் புத்தைப் புடைத்துடைத் தெறிந்தார் பின்ன
ராதிதன் னருளி னாலே யாயத்தொன் றிறங்கிற் றன்றே. 14

மாயிரு ஞாலம் வான மலைகடல் கதி பாதாளங்
காயிரு சுடர்மீன் மற்றக் காரணம் விளைக்கா நின்ற
வாயிர மசலாக் கேட்ப ரதற்கெதி ருத்த ரங்கள்
பாயிரம் வழுவா வண்ணம் பகருநீ ரவர்கட் கென்றே. 15

காரண மசலாக் கேட்ட காவலர் மகிழ்ச்சி கூர
வாரண மலிந்த வாயா லறைந்தன ரமுதஞ் சிந்தும்
பூரண மதிய மேத்து முகம்மது நபியைப் போற்றித்
தாரணி தோயாச் செந்தா மரைப்பதந் தாழ்ந்தெ ழுந்தார். 16

கருத்துறு மழுக்கா றெல்லாங் கடிந்துபுன் குபிரை நீத்துத்
திருத்திய மறையின் றீஞ்சொற் றேக்கிய மேலோ ரியாரும்
விரித்தபூந் தடமுங் காவு மிகுபல வளமு நோக்கி
மருத்தொடைப் புயங்கள் விம்ம மகிழ்வொடு மெமனிற் சென்றார்.

எமன் ராச்சியத்தாரு மவ்வரசரும்

ஈமான்கொண்டபடலமுற்றிற்று.

ஆகப்படலம் 4-க்கு திருவிருத்தம் 95.

உம்முகபீபு நாச்சியார்

திருமணப் படலம்.

மறைநெறி பொறை யொழுக்கம் வாய்மைநே ரிலைய வெல்லா
நிறைதரு கபசி னாட்டி னிலைபெறு முசலி மான
நறைதரு திருக்க மாலை நரபதி நஜாசா வென்போற்
கிறையருள் சுரக்க வோலை யெழுதின ரிறசூ லுல்லா. 1

சேட்டிளம் பருதி யேய்க்குஞ் செம்மணி மௌலி வேய்ந்து
தோட்டுணை யவனி தாங்குந் துரைகடாழ்ந் தேத்திப் போற்றுங்
காட்டுணை யிறசூ லுல்லா கருக்குற வரைந்த வோலை
யாட்டிறற் சிங்க மென்னு மாமிறு கரத்தி னீய்ந்தார். 2

பாசுர நிருபம் வாங்கிப் படிமுகில் கவிப்பச் செந்தீ
மாசுரம் புண ழைத்தேர் மலர்ப்பதத் துணையிற் றாழ்ந்து
வீசுமா ருதம்போற் சித வெண்மணி குயிற்று மாடத்
தேசுறு மறுகு நீங்கிச் சென்னெறி மேவி னாரால். 3

கடக்கரி பயிலுங் குன்றங் கடும்பரன் மிடைந்த கானுங்
குடக்குல வளைக ளூர்ந்த குளிர்நறும் பணையு நீந்தி
மடக்கொடி மகளி ராடு மதுமலர்த் தடமு நோக்கி
யுடக்குவெம் பொறிக ணாட்டு முயர்மதிற் கபசிற் சேர்ந்தார். 4

பொன்னில மவனி வந்த போனெடுந் தெருவும் வெள்ளைக்
கன்னிலத் தமைத்த மாடக் காட்சியுங் களிப்ப நோக்கிச்
சென்னில மெங்கும் பன்னீர் தெளித்துப்பன் மணியின் குப்பை
யந்நிலத் தமைத்து வாய்ந்த வண்ணறன் வாயிற் சென்றார். 5

அறத்தினுக் குறையு ளென்னு மன்னனைக் கண்டு கங்குற்
பிறைக்கரு கரத்த ரீய்ந்த பெருந்திரு முகமீ தென்றார்
நறைதரு திருக்க மாலை நரபதி நஜாசா கைப்பொ
னிறைத்தவா சனத்தை நீத்து நிலத்திழிந் தொல்லை வந்தார். 6

முடித்தலை பணிந்து வாங்கி முத்திரை முடங்க றன்னை
வடித்தகதே யெழுதுங் கஞ்ச மலர்த்தடங் கண்ணி லொத்தித்
தடித்தபூ ணிமைக்கு மாகந் தனிலணைத் தெடுத்து முந்திப்
படிந்தலம் புரக்கும் வேந்தன் பயன்பட வாசித் தோர்ந்தான். 7

திருமுகத் துணர்ந்த செய்தி திறல்பா சபியான் செய்த
தருமமோ ருருவ மாகச் சகதலத் துதித்த செல்விக்
கருமுகி லனைய கோதைக் கனியும்மு கபீபென் போரை
விருநில மதியக் காவி னெமக்கென வெழுத வேண்டும். 8

நாட்டிறந் தலிக்கு முன்னோர் தடம்புயச் சகப றென்றுஞ்
செட்டிளம் புலிபு மன்னோர்ச் சேர்ந்தவர் தமையு மொக்கக்
கூட்டியிங் கனுப்பு மென்னக் குறித்தசொற் றேர்ந்து தின்னைத்
தோட்டுணை புளகங் கொள்ளச் சோபனம் விளைத்து நின்றார். 9

படுத்துறைந் தகலாக் கற்பின் பாவையர்க் கமுதம் போலும்
விடுத்ததண் கதிர்கு லாய வெண்பிறைக் கொழுந்து போலு
நடுத்தலத் துறைந்த உம்மு கபீபுநம் பிராட்டி யார்க்குக்
கொடுத்திடக் கைகா ணிக்கை கோமகன் குறிப்பிற் கொண்டார்.

மதியக டிரிஞ்சு மாட மனையினுக் குரிய தாகி
சுதைமொழி நவுகத் தென்னுந் தோகைதன் கரத்திற் செம்பொ
னிதியிரு னூறு தங்கக் காசுபா லிகைநி ரப்பிக்
கதிபெறு மினிய வும்மு கபீபுக்கீ தருளென் றீய்ந்தார். 11

காணிக்கை யிதனை வைத்துக் களிப்பவென் சலாமுங் கூறிப்
பாணிக்குத் தனித்த வேலை பல்லரும் பருக வெந்த
சேணிலத் தறலீக் கையாற் செய்தவர் திட்டு மோலை
மாணுறப் புணர்த்தி யென்றார் மாதுறவ் கத்தெ ழுந்தாள். 12

கொழுமலர் வீழ்ந்து சுண்ணங் கையுரிக் கொண்டு சந்தச்
செழுமலர்ப் பொழிலி னூர்ந்த தென்றலங் கன்று லாவு
முழுமணிச் சருங்கை மாட முன்றிலிற் போந்து கற்புப்
பழுதும்மு கபீபு செம்பொற் பாததா மரையிற் றாழ்ந்தாள். 13

கண்குளிர் தூங்கப் பாத காணிக்கை முன்னர் வைத்து
மண்குளிர் தூங்கச் செங்கோல் வழிவிலா துலகங் காத்திங்
கெண்குளிர் தூங்க நஜ்ஜா செம்பகர் சலாமுங் கூறி
விண்குளிர் தூங்கச் சென்றே ரோலையின் வியப்புஞ் சொன்னாள்.

அம்மொழி கேளா முன்ன மாடகப் பதியும் பெற்றே
னிம்மையிற் பேறும் பெற்றே னெனவுள மகிழ்ந்து கூறித்
தம்முறைப் பொருளாய் வந்த தங்கத்தி னெட்டி னொன்றை
வம்மெனத் தூதி கையின் வழங்கிட மறுத்துச் சொல்வாள். 15

தங்கநீ தெற்கு வேண்டாந் தருமமா துமது பாலிற்
பொங்குமோ ரறுதி யெற்குப் பொருந்தநீர் முடிக்கவேண்டுந்
திங்களைப் பகிர்ந்த தூய திருநபி யிறசூ லுல்லா
அங்கமா யுமைக்கைப் பற்றித் துதிபெற விருக்கும் போதில். 16

அடியனென் சலாமுங் கூற வன்னையே வேண்டு மென்றாள்.
கடிகமழ் பவள வாயா ளென்றெனக் கருதிப் பின்னர்ப்
படியினிற் செய்ய தீனற் பாலகன் காலி தென்றன்
வடிவுறு கிளாருக் கேய்ந்த மன்னெறி யவர்தா மென்றார். 17

நன்னெறித் தலங்கள் பூவி னாட்டிய விறசூ லுல்லா
கன்னறைத் தடந்தோட் கேய்ந்த கபீபுமு கனிவாய் விண்டு
சொன்னவை நச்ஜா சென்னுந் தோன்றலுக் கிசைத்துக் கூற
வங்கிலங் கடந்து தூதி நவ்கத்தன் போடும் வந்தாள். 18

அன்னமுன் சொற்ற செய்தி யனைத்தையுந் தவறி லாது
மன்னவன் விரும்பிக் கேட்ப மடக்கொடி வகுத்துக் காட்டி
யின்னலின் கடலீல் நீந்த வியன்மறை விளைத்த தூதர்
பொன்னணி யகல மூழ்கப் பொருந்திய களிப்புஞ் சொன்னாள்.

துடியிடைக் கரிய கூந்தற் றுவரிதழ் களபக் கொங்கைப்
பிடிநடைத் தூதி சொற்ற பேரின்பக் களிப்பு மிஞ்சிக்
கடிமுரா சதனைவெய்ய சவினவொட் டகையி னேற்றிப்
படிமுழு தறிய வேந்தன் படுகுனி லறைக வென்றான். 20

வயவரி மருங்கு லம்மு கபீபுக்கு நயிக்கும் வாசச்
சயமர முடிக்க வீங்குந் தடமுலைக் கரிய வாட்கட்
புயலனை கத்து நல்லார் பொற்கலன் கவினச் சூட்டி
நயனுற வருதி றென்ன நான்முர சறைந்திட் டானல். 21

கொய்துகி லிடையிற் சேர்த்திக் கோல்வளை திருத்திச் சந்தத்
தொய்யில்சேர் கொங்கை வெற்புக் கவட்டினிற் கச்சு வீக்கி
செய்துடைத் தொளிரும் பொட்டக ணிலைக்கவஞ் சனங்க மிட்டிப்
பெய்முகிற் குழல்கை செய்து பிறைநுதற் றிலத மிட்டார். 22

அன்னமும் பிடியு மேய்ப்ப வணிமணிச் சிலம்ப ரற்ற
மின்னினுண் மருங்கு நோவ வெள்வளை வாய்விட் டார்ப்பப்
பொன்னணி மறுகு நீந்திப் புகழ்வளர் நச்ஜா சென்று
மன்னவன் மனையிற் பொற்பார் மடந்தையர் நடந்து வந்தார்.

பொருப்புரங் கிழிந்த திண்டோட் புரவலன் பனிநீ ரம்பா
கருப்புர நரந்தஞ் சாந்தங் கலவைகள் பிறவு மாங்கே
விருப்புறும் பேழைப் பெட்டி மென்றுகி லாரக் கோவை
பருப்புமென் முலையார் கையி னளித்துமுன் னனுப்பி னானால்.

கத்திகை நபிக்குச் சூட்டுங் கவினும்மு கபீபு பாவி
னித்திலம் வயிரக் கோவை நீள்சரப் பணிகண் மற்றும்
வைத்தனர் குரவை யார்ப்ப வான்புன லாட்டி மைதோய்
சித்திர மதர்வேற் கண்ணார் செய்பவை சிறப்பித் தாரே. 25

பல்லியங் கடல்போ லார்ப்பப் பல்லணைப் பரிகள் பூட்டுஞ்
சில்லியங் கொடிஞ்சித் திண்டேர்ச் சிந்துரஞ் சிலம்பிற் செல்ல
வெல்லியிற் பதாதி சூழ விடக்கையுங் குடையு மல்க
வல்லிய மனைய வெற்றி மன்னவ னரிதின் வந்தான். 26

பொற்கல னதனிற் பெய்த புலியுகிர் போலு மூசா
னற்குளங் கிருத முப்பா னறுங்கனி கருணை மற்றுங்
கற்குமா மறையோ ரியார்க்குங் களிப்புற வருந்தித் தோண்மார்
பிற்கனின் களப நீவிப் பாகிலை யீய்ந்து பின்னர். 27

மங்கல முரசம் பொங்க மலர்த்தொடை நச்ஜா சென்போர்
பொங்கொளி பிறகுற் காகப் பொருந்தொக்கி லென்ன னின்றார்
தங்கிய மரபத் திண்டோட் சய்யது தனயன் காஸீ
தங்கவர்க் கொலியாய் நின்று ராமிரு மூலக மெய்க்க. 28

எழுதினர் காவின் வேதத் தியல்பினைத் தெருண்ட மேலோர்
செழுமணக் கோல முற்றுஞ் செயிரற முடித்த பின்னர்
விழுமிய விருந்து நாவாய் மேருவை நிகர்ப்பச் செய்து
கழுவிய மணிபூண் பட்டுக் காஞ்சன மிரச வர்க்கம். 29

பல்லவுங் கப்பற் பாரம் பருப்பத முறைத்தோர்க் கெற்றி
நல்லியற் கன்னி யும்மு கபீபுநம் பிராட்டி யார்க்கும்
வல்லியச் சகப றுக்கு மற்றவர் சேர்ந்தோ ருக்கு
மெல்லியில் வெறுக்கை பைம்பூ ணினையவு நச்ஜா ஈய்ந்தார். 30

மணித்திரள் குயிற்றித் தங்க மண்ணிய கிளிக்கூ டொன்றிற்
பணிப்பெருஞ் சிரசி லுற்ற பார்க்கன்னை தம்மை வைத்துக்
கணிப்பிலாச் சிறப்பி னேடுங் காவிது தாங்கி மெல்ல
வணிப்பெரு நாவாய் மேலா மாசனத் திருத்தி னரால். 31

மட்டிலாச் சிறப்பு மல்கி மாற்றலர்க் கரியே றென்னக்
கட்டிய கழற்கால் வெற்றிக் காவலன் றன்னினைத்துட்
பட்டவித் திறத்த வேழு பதின்மர்க ளுமையுங் கூட்டி
விட்டனர் வங்க மேற்றி விறலுடை நச்ஜா சென்போர். 32

மலையினைப் பொருவும் வங்கம் வாரியிற் காலின் மீக்கொ
ளலைமறி திரைக ளொத்தி யடிப்பது கரிய கூந்தற்
சிலைநுதன் மடவார் போடுங் கவரியிற் சிறப்பப் பேழ்வாய்ப்
புலவலை முழவம் பொங்கப் பாய்விரித் தோடி னரால். 33

வரிச்சுற வலையின் வல்லே வாலசைத் தமிழ்ந்தெ ழும்பி
யிரைச்சலி னேடிச் சென்னி யெடுத்தெடுத் தமையுந் தோற்ற
மரிச்சுண மரவ மாலை யகுமது மனத்துக் கேய்ந்த
வுருச்செறி யன்னை செம்பஞ் சுவைய தாள் வணங்கல் போலும்.

கொடிப்பவ ளத்தின் கோட்டிற் கூன்பிடர்ப் பேழ்வாய்ச் சங்க
மடிப்பிள்ளை யேறி நீல வாரிவாய் வங்க நோக்க
லடிப்பதந் தொட்ட விசெம்பொற் கவுசறு சிடத்திற் றேய்த்தோர்
கடப்புய மூழ்குந் தேவி தம்மையே நோக்கல் போலும். 35

முத்தெனு மெயிறுஞ் செந்தா மரைமுகை முலையும் பாசிக்
கொத்தெனுங் குழலுந் துப்பின் கொடியெனும் விரலும் பேழ்வாய்
நத்தெனுங் களமுங் கொண்ட நளிர்கட லென்னு மாது
சித்திரத் திரைக்கை காட்டிக் காலினு னடனஞ் செய்தாள். 36

தோடிலச் செங்காற் றூட்டித் தாய்ச்சிறைத் தொழுதி யன்ன
மோவிடல் பவளக் கால்க ளூன்றியா காய மீது
காவிடுங் கதிரோன் றாமின் காந்தியை மறுப்பா னெண்ணிப்
பாவிடுந் துகிற்கூ டாரப் பந்தரிட் டேகல் போலும். 37

கவிதிருத் தேவி யார்கம் பால்வரப் பெற்றோ மென்ன
வுவரிமன் புளகம் பூத்த தொப்பப்புற் புதங்கள் பூப்பச்
செவியவா னந்தக் கண்ணீர் சிவணச்சீ கரங்கள் சிந்திக்
கவின்மயிர் பொடித்தன் மானக் கருங்குவர் பொடித்த தெங்கும்.

இத்தகைச் சிறப்பு நோக்கி யிருங்கட லகடு கீண்டு
தத்திவெங் கூசலி னார்ந்த தடப்பெருங் கப்பன் மீகா
மத்தொழில் பயின்றோ ரொல்லை வாரியி னளவு மட்டிட்
டுய்த்தநன் குரங்கள் விட்டோ ரோடத்தி னுவந்தி ருந்தார். 39

பொன்னிற வம்பர் வெள்வாய் வலம்புரி பொருவின் முத்தஞ்
சென்னிலைப் பவளஞ் சோகி திரையெனுங் கரத்தெ டுத்து
மன்னுநீர்க் கடற்கு வேந்தன் மகிழ்வொடுந் திறைக ளீய்ந்த
தென்னவே குவித்த வண்டற் கரையிடத் திறங்கி னாரால். 40

கரையிடத் திறங்கி வாவுங் கடுவிசைக் கவினப் பாய்மா
நிரையினித் தெரிவிக் குஞ்சில்லி நிலாமணிக் கொடிஞ்சித் தேரின்
நறைபிதிர்த் தெரியு கொட்டைத் தாருடைத் தொழுவி னேற்றின்
வரைவறு பண்ட மியாவு மலிதரச் சுமத்தி மாதோ. 41

பன்மணி யதனாற் செய்த பாழியொண் கிளிக்கூ டுற்ற
வன்னிமைய நெடுங்காட் செங்க ணணிதிகழ் பருமவொட் டை
வெண்மிசை யுலகம் போற்ற விருப்பொடு மேற்றிச் செல்வ
மன்னவன் மைந்த ரோடுஞ் சகபறு மகிழ்ந் தெழுந்தார். 42

வான்முகில் படியும் வெற்பும் வண்டினஞ் சவ்வனஞ் சிந்தித்
தேனுணு மலர்ப்பூங் காவுஞ் சிறுபரன் மிக்கடந்த கானும்
பானுவுங் கடக்க வஞ்சும் பாலையுங் கடந்து செம்பொன்
மேனிலை மதீன மென்னும் வியன்பதி யிடத்தில் வந்தார். 43

திருந்துநன் மதீனம் வந்த செல்வரிற் சிலரென் னோரே
மருந்தென வுமிழ்நீ ராணோய் மாற்றினோ ரிடம்போய்ச் சேர்ந்தா
ரருந்தவ முடைய நம்பி ராட்டியா ருடன்மற் றோரும்
பரிந்தவ ணிருந்தார் மல்லற் பதிமதீ னுவி லன்றே. 44

இப்படி யிருக்கு மேல்வை யெழின் மிகுருசிற் சென்றோர்
மைப்படி கவிப்ப வொற்றை வலம்புரி முழக்கக் கைவ
ரப்படி முழுதுங் கொண்டார் கலியெனத் தானை சூழ
ஒப்படி நாளும் போற்று முத்திசேர் நபியுல் லாவும். 45

வெள்ளை யொண்பணில மேற்றி மெல்லிதழ்க் குவளை மேய்ந்து
வள்ளைவாய் குதட்டு மேதி மரைமலர் பிலிற்று தீம்பால்
பிள்ளைவெண் டேவி யன்னம் பவளவாய் பிளந்த ருந்தும்
பள்ளநீர்த் தடாக நீங்காப் பதிமதீ னுவில் வந்தார். 46

கற்பினுக் குறையு ளும்மு கபீபுகம் பீராடி யார்த
மிற்புகுந் * தாச னத்தி லிருக்கும்வே ளையினி லியார்க்கு
மற்புறு நச்ஜா சென்னு மண்ணல்சொல் லினைத்துங் கூறி
பொற்புறு றவுகத் தென்னும் பூவைசொல் சலாமுஞ் சொன்னார்.

மதியினி லமுது போலு மலரினில் வாசம் போலும்
பதியிலா தாத்தி னோடும் பாவைதம் முடனே யின்பக்
கதியினிற் செல்வம் போலக் கலந்துயி ரொன்றுய்க் கூடி
நதியின்மான் பின்னே சென்ற நபியுல்லா வினி திருந்தார். 48

உம்முகபீபுநாச்சியார்

திருமணப்படல முற்றிற்று.

ஆக படலம் 5-க்கு திருவிருத்தம் 143.

---

* ஆசனத்திருந்தவர் நபியென்று கொள்க.

பகுறு தேசத் தரசர்

ஈமான்கொண்டபடலம்.

நெறிமருப் பெருமைத் திம்பா னினிலா வெறிக்குந் தாவிச்
சிறையன மகந்தி வள்ளைச் செழுங்கொடி மிசையிற் சேற
அறுகளைக் கோதை மாத ருந்திய நடன மேய்க்கு
மறிதிரை வாவி சூழும் பகறெனும் புரத்தின் மாதோ. 1

வடிமணி சுறங்கும் பாய்மா மதமழை சொரிக்குங் கைமாப்
படியுரு ளாழித் திண்டேர் பலபடை யுழவர் சூழ
முடிமணி யாச ரேத்து முந்திறென் பவர்க்கு நாளு
மடிநிழ லவனி காணு வருணபி நிருபந் திட்டி. 2

மதிபதி லொருங்கு கூட்டி வைத்ததோ ரறையா மென்னத்
துதிதரு மிறைய மன்னுந் தூய்நெறி யலாவத் தீன்ற
துதியயிற் காத்தி னீய்ந்தார் நுடங்குவெண் கொடிசேர் மாடப்
பதியினைக் கடந்து தேம் பயிறரும் பகறிற் சேர்ந்தார். 3

சிந்தூரக் குளத்தின் மாதர் திகழ்மயிர்க் கவரி வீச
மந்திரத் தலைவர் சூழ்ந்து வருவன நிகழ்வ கூற
முந்திறென் றோங்கு காம மூதியவ னிருக்கும் போதி
லிந்துவைப் பகிர்ந்தோ ரோலை யவன்கரத் தீய்ந்து சொல்வார். 4

நீயுநின் னினத்து ளாரு நெருப்பினை வணங்கி நாளு
நாயனை மறந்து மன்ற னுட்டேற் குரித்தாய் வாய்ந்த
சேயிழை யின்று மொன்றாக் கின்பன வுணவீ தென்று
மேயவே யறிந்தி லாதாற் பயமிக வெய்து மென்றும். 5

முச்சுட ரெறிக்கு மேனி முகம்மதுக் கீமான் கொண்டா
லிச்சக மச்ச கற்று மின்னலென் கடல்க டந்து
செச்சையம் புயங்கள் விம்மிச் சிறப்பிருப் பதவி யூக்க
நச்சிலைப் புலவு வேலோய் நன்னுத றின்ன மென்றார். 6

உரைத்திடு மொழியுந் தீட்டு மோலையுந் தாமுந் தேர்ந்து
நரைத்தலைத் தியாமென் னுருந் தழுவிய மார்க்கம் பார்த்த
வரைத்தகு நிரைய முய்க்கு நெறியலாற் பிறிதின் றென்றார்
வரைத்தடம் புயத்தா ரால நபிவழி மருவி னோமேல். 7

இம்மைக்கு மறுமைக் கும்பே றிருப்பதென் றுளத்தி னெண்ணி
யம்மைக்கென் றின்மை காட்டு மருமதுக் கீமான் கொண்டார்
செம்மைக்கு ளம்ப டைத்த திறலலா வுத்தீ னுக்கு
வெம்மைப்பைம் பூண்பொன் னுடை மிகவுமீய்ந் தனுப்பி னாரால்.

விற்றழும் பிருந்த திண்டோள் வேந்தனு மற்று ளாரு
நற்றவ முடைய ராகி நனிமகிழ் வொடுமி ருந்தார்
கொற்றவ ரலாவுத் தீனுங் கோனெறி மதின மூதூர்
குற்றனை றிறசூல் பாதம் வந்துகண் டிறைஞ்சி னாரால். 9

இறைஞ்சினின் றிறசூ லுல்லா வெதிரலா வுத்தீன் செல்வ
னிறைந்தசீர் பகறென் றோது நீண்க ராருந் மன்னன்
குறைந்திடாக் குணத்தா னீமான் கொண்டுளம் மகிழ்ந்து தம்மோ
டுறைந்தவை முழுதுங் கூற வகங்களித் திருந்தா னன்றே. 10

பகறுதேசத்தரசரீமான்கொண்ட படலம்

முற்றிற்று

ஆக படலம் 6-க்கு திருவிருத்தம் 153.

4

உம்மாதேசத்தாசர்

ஈமான்கொண்டபடலம்.

வட்டிலை முட்டாட் செங்கேழ் வடிகரு வொழுகுங் கஞ்சத்
தட்டிலை பறுகா னீலச் சஞ்சரி கங்கள் பாட
நெட்டிலைக் கமுகி னேறி நித்திலச் சங்கம் பாளைத்
தொட்டிலை யசைத்துத் துஞ்சுஞ் சுனைசெறி யும்மா னாட்டில். 1

இருந்தர சியற்றி பொன்னூ றிடுதிறை பலவுங் கொண்டு
சுரந்தகன னிதியக் குப்பை தொடுகடல் புரையத் தேக்கி
வீரந்தரு மிராஜா வாழ்க்கை மாண்புறு சுலந்தா வுக்கு
மூரந்தரு மவன்பின் னுனை விளைவற்கு மோலை தீட்டி. 2

அருளடை கிடந்த செங்க ணைசிமென் றேங்குஞ் சீயக்
குருளையா மபீஹென் றோதுங் கொற்றவர் காத்தி னன்மைப்
பொருளெயா றுனுவீ ணீங்காப் புகழுடை யிறசூ லுல்லா
தெருந்தற வளிக்க வாங்கிச் சேவடி பணிந்தெ ழுந்தார். 3

மணிக்கடைத் தெருவு மாட மண்டப வகுப்பு மற்றப்
பணித்தெரி சிமைக்குங் குன்றம் பரந்தவூ வனமு நீந்திக்
கணிப்பிலாக் குவடுங் காறுங் கண்ணகன் படிவும் போக்கிப்
பிணித்தீ ரோடை யும்மா னெனும்பெரு நகரிற் சென்றார். 4

அரக்கழன் டொளிருஞ் செங்கை லபீதெனுந் தூதர் செம்பொன்
றிருக்கிய மோலி வேய்ந்த திறலுடைச் சுலந்தா வம்பின்
றரித்தெழு தம்பி யஞ்சின் காசனந் திருக்கும் போதி
யாதெழு முகம்ம தீய்ந்த வோலையென் றவர்கட் கீய்ந்தார். 5

ஓலையை யுணரா முன்ன ருவகையங் கடலின் மூழ்கி
மாலையம் புயங்கள் விம்மிப் பூரித்து மகிழ்ச்சி பொங்கிக்
காலையம் பொருக்கத்தின் கவின்றிகழ் முகம லர்ந்து
சாலவு முகமன் கூறிக் கனிபவர் நனைப்பு கழ்ந்தார். 6

நமக்குநல் லுதவி யாக நளிபல வுயிர்க ளியாவு
மமைத்தொரு பொருளாய் நின்றோ னருளின னென்ன வுன்னி
யிமைத்திடா விமையோர் போற்ற விதையத்தி லீமான் கொண்டு
சமைத்தலைப் பாக்தட் பாரைத்தோய்ந்திலாப் பதத்தர்க் கன்றே.

உறுபொரு ளீமான் கொண்டே மெனுமொழிக் கோலை நீட்டிப்
பெறுசதி யொற்றன் கையிற் பெட்புற வனுப்பிப் பின்ன
ரறுநிரை ரமீசெறன் றேது மண்ணாலேத் தங்கட் கென்றுந்
திறனுறு மிசுலா மார்க்கர் திருத்தவென் றிருத்திக் கொண்டார்.

உலம்பொரு கடக்கோன்மன்ன ருளங்கனிந் தனுப்பு மொற்றன்
விலங்கலுந் தட்டூழு நீந்தி வில்விடு சரத்தின் காந்தி
துலங்குவெண் ணிலவு காலுஞ் சுதைமதின் மதீனத் தேகி
நலங்கொளு மிறசூல் பாத நளினமென் மலரிற் றாழ்ந்தான். 9

பலங்கட றலைத்தோ மென்னும் பத்திர மளித்தா னேர்ந்து
தலங்கட லுடையா ரன்னோர் தமக்குநற் றூதுவி ரக்கா
ரூவர்க்கடன் மான் காரு முகைத்தி னிசலாம் விர்த்தி
யெவர்க்குமே லாகத் தீனி லின்புறத் தரித்தி ருந்தார். 10

உம்மாதேசத் தரசர் ஈமான்கொண்டபடல முற்றிற்று.

ஆக படலம் 7-க்கு திருவிருத்தம் 163.

பாரிசுதேசச் சேனாதிபதி

ஈமான்கொண்ட படலம்.

பத்தி மாடத்தின் பானிறு வங்கொடி
நித்த லூரு மலரிய னீடக
நெய்த்து நீவல் விசிறிக ளொப்பென
வித்த கைச்சிறப் பெய்திய பாரிசின். 1
கொத்த ளம்பதி னன்குடைக் கோட்டையி
லத்தி போர்கரு மேனு மத்திலைப்
புத்திரன் கொடுங் கோல்புவி காட்டிய
மத்த மாஅபு தேசெறு மன்னவன். 2

வடித்த சொற்றரு மந்திரி மார்களும்
படித்த வின்னிசைப் பாணர்க ணக்கருந்
தடித்தி னுண்ணிடை தானசைந் தொல்கிட
நடித்த மாதரு நட்டுவ மார்களும். 3

இருதி ளைஞ்சுற வேற்றினி ளைஞரும்
விருது கூறி விரற்கொளும் வீரரும்
பொருது முக்கரி போன்மன்ன ருந்தொழு
தருகு நிற்பச்சிங் காசனத் திற்றவன். 4

கருமநீதிது பாவந் தகாதசொற்
கருமமீதெனக் காணு மறிவிலா
வருமநெஞ்சுடை மன்னபு நேசன்போ
னிருநி லங்கொடுங் கோல்கொடு மேந்தினன். 5

அன்ன வன்றனைக் காழிய கன்புலி
மன்னு மாக்களும் வானுறை யம்பருந்
துன்னி யேத்துநற் றாதிற சூலுல்லா
வென்னும் வேத ரெழுதின ரோலையே. 6

வரைத்த வேலை மலர்த்தடத் தோட்டுணை
தரித்த நெஞ்சிலைத் தானுவி னப்துல்லா
சரத்தி லலகினர் கட்புவி தோய்ந்திலாத்
திரத்த பாதஞ் செழுமுடி சேர்த்தினர். 7

அடுத்துத் தாழ்ந்தெழு மன்னனை யப்துல்லா
உடுத்த ராமணி மண்டப வீதியும்
விடுத்த கானமும் வெற்புங் கடந்துபோய்ப்
படுத்த நீர்வயற் பாரிசை மேவினர். 8

தோட்டு நீர்க்கடற் சூழ்புவி யிற்புகழ்
காட்டும் லெப்பை நயினு னாதிபன்
சூட்டினைத் தொழார் தம்மனம் போலக்கா
லாட்டு நீள்கொடிக் கோட்டையு ளாயினர். 9

அசழி யாடை யணைமதில் வாயலிற்
பகழி யென்னப் படர்ந்தகம் மப்துல்லா
மிகழ வானை நிருபன் றலைக்கடைட்
மகர தோரண வாயலின் முன்னினர். 10

தத்து வாம்பரி தாழ்தடக் கைப்படா
மத்த மால்கரி மான்பிணித் தோவியச்
சித்திரக் கொடிஞ் சிச்சக டங்கத்
மொய்த்த வீரரு முன்றிகழ் மாடத்தின். 11

வாரி யன்ன வளத்த பகுறெனு
மூரின் மிக்க வொருதலை வன்கரத்
தார முற்ற வகுமது சொற்படி
சார வோலை தனையளித் தாரரோ. 12

அடுத்த நன்னெறி யுன்னன மப்துல்லா
கொடுத்த வோலையைக் கோகன கத்தட
முடித்த நீள்பகு றாருடை வேந்தனு
மெடுத்துப் பாரிசு மன்கரத் தீய்ந்தனன். 13

வகுறின் வேந்தன் வழங்கிய வோலையைச்
சதரர் தொட்ட தடங்கட் லாணைகு
மிகப பத்துக் கிழிவுறு பாதகன்
புகர்ப டுத்திக் கிழித்தவை போட்டனன். 14

கிழித்த வக்கணைக் கேடின றாந்தருப்
பழித்த கைத்தலப் பண்பன மப்துல்லா
விழிக்க டைப்புகை வெவ்வழல் சிந்திடச்
கழித்த நெஞ்சினன் றென்னகர் நீங்கினர். 15

வேக மீக்கொள வெவ்வழற் கானமும்
பாகு முற்றெழும் பைந்துணர்ச் சோலையும்
நாக மட்டியர் நாசமு நீந்திவந்
தேகன் றாதிற சூலடி யேத்தினர். 16

அடிக ளோலை தனையபு றேசெனுங்
கொடிய வன்கரத் திற்கொடுத் தேனிலத்
திட்டகி ழித்தெரிந் தானெனச் சற்றுமோர்
வடிவுறு மறை வாய்மலர்ந் தோதினர். 17

ஆதி யந்தமி லாதவ னப்பெரும்
பாதகன் றனை யுங்கிழிப் பானென
வோதி னார்நபி யொல்லையு மிழ்ந்தெழீ
மீது புக்கினன் வெவ்வர வுன்னனே. 18

அத்தலம்புரந் தாள வலந்தரு
புத்திரன் றனைப் பொன்முடி சூட்டிநற்
சித்திரத்தவி சிற்றலை சேர்ந்தவர்
வைத்த போதினின் மன்னனு மாண்டனன்.

பின்னு மோர்மனைப் பீடு மாசனந்
தன்னி லேற்றிடச் சான்றவர் கூடியே
பொன்னின் மாமுடி சூட்டினர் பூமனு
மின்னி லப்பிரித் தேபெரி மேவினான்.

மொய்த்த மாமணி மோலிமன் மூவருஞ்
செத்தி றந்தன ரென்றுசொற் றேர்ச்சியோர்
மத்த மாகரி யன்ன வகுதிசைக்
கைத்த வாசனத் தேற்றினர் காக்கவே.

பாச மற்ற பகுதிசப் பாவிகல்
வாச முற்ற கபிபது வாவினான்
மோச முற்றுமன் மூவ ரிறந்தவென்
றேசை யாற்றவொ ரோலை யெழுதினான்.

நீது மாற்றம் பொறித்த திருமுகந்
தூதன் கையிற் கொடுத்துத் துணர்ப்பசும்
போத லர்த்த பொழிலச ளுபுர
வாதான் கையின் வழங்கென் றனுப்பினான். 2

ஓலை வாங்கிய வொற்றன்வி ரைந்து போய்ச்
சோலை யாசன னுவெனுந் தொன்னகர்ச்
சால வாழும்வா தான்கையி னல்கினான்.
சீல மாறுசொல் லோர்ந்துளந் தேம்பினான். 2

வரைந்த வாசக மாவது தன்னுடன்
பரிந்த சேனை பரிகரி கூட்டிநீர்
சுரந்த வாவியுஞ் சோலையும் நீங்கிலா
திருந்த ஆயம தினத்தி லேகியே. 25

கொண்ட லங்குடைக் கோதற மீனடு
மண்ட லத்திற்க வித்திடும் வள்ளலைக்
கண்டு பாரிசுக் காவலர் பாவினீர்
விண்ட சாபம் விடுக்கவென் றோதவும். 26

விடுக்கி னன்று விடுத்தில ராகினீர்
நடுத் தலத்தி லிருந்தவர் நாமமுங்
கெடுத்து மாமுடி கீழ்பட வீழ்த்தியே
யெடுத்தி வண்வர வும்மென் றெழுதினன். 27

கள்ள வாசகக் கவ்வையு ணர்ந்துமே
ரென்று பாவி யெழுதின னென்னவே
யொள்ளி போனந்த ரங்கத்தி லோலையை
யள்ளுந் சோதி நபிக்கன் கனுப்பினன். 28

வீந்த பத்திரம் வாசித்து ணர்ந்தபின்
சுந்த ஈமான்மதக் காவலர் மற்றொரு
சொந்தக் காகித நீட்டினர் சோர்விலா
நந்த வோலையின் சார மனைத்துமாம். 29

உன்ற னக்குமுன் னோலையி றுத்தவன்
பொன்று வானின்ன நாளின்ன போதென
வென்று முன்னா விறைபெற் கறிவித்த
வென்றி வாய்மை விரித்தன னென்னவே. 30

விடுத்த வோலை விளங்கவா தாமென்றோ
னடுத்த ராசெனு நாவினர் சொற்றசொல்
லடுத்த ராதென வார விகலைபார்த்
தெடுத்த வீர னிருந்தன னொண்ணரியே. 31

னூறு மூற்றி துவர்க்கடன் மானமீ
ராறு காட்டிய வண்ணல் கரைந்தநா
ளோதீ னாது குறைவது மின்றிவீண்
மீறு பாவி யிறந்தெரி பேயினன். 32

அற்பு தத்தை புணர்ந்தவ னக்கணந்
தற்ப கப்பதிக் காவலர் வேதநூற்
சொற்ப கர்ந்தறக் கும்பவர் தம்மொடும்
பொற்பு லாவிய தீனிற் பொருந்தினர். 33

ஒக்க லொக்க வுளத்திலி மானிலை
மிக்கு றத்தரித் தோவென வேதநூற்
றொக்க முற்றறற் றீதிற குல்பதம்
புக்க வோலை பொறித்தக் கனுப்பினன். 34

தாதனைலை வழங்கத் துரைமகு
மூது வாங்கி முழுதும் ணர்ந்தபின்
மாதிரப் புப வள்ளல்வா தானுக்குந்
நீதில் வங்கிடத் தார்க்குந் தாஆச்செய்தார். 35

செம்பொ னுட்டினர் செய்ப தாஆவிறைற்
பம்பு தண்டலைப் பாரிசை யாள்மன
ரிம்பர் நீக்கியோ ராண்டிவீ ரேழுபேர்
கும்பி வீழ்த்தனர் கோனிலை யின்றியே. 36

கோனடத்த வோர் கொற்றவ ரின்மையான்
மானை யன்ன விழிமட மாதினைச்
சேனை மன்னர் தொழத்திற லாளிரும்
மோனை யாசனத் தேற்றினர் மொய்ம்புற. 37

வண்ட லம்பு மலர்க்குழல் வல்லியைத்
தெண்ட னிட்டர சேற்றிய செய்திகேட்
டண்ட மேழு மமைத்தவன் றாதர்வாய்
விண்டு சொற்றனர் மென்சுதை சிந்தவே. 38

அன்ன லென்ன வமைத்தடந் தோட்டுணைப்
பெண்ணை வைத்த பெருநிலந் தாழுமென்
றெண்ணிச் சொற்றன ரீதொரு சாபமாய்
மண்ணின் மாய்ந்தனள் மற்றர சின்றியே. 39

அருட ராக்கி சுருவி னழிருலத்
திருடர் வேந்து செலுத்திய பாரிசின்
வருட மொன்றினின் மன்பதி ஞன்கரும்
புருடர் மாய்ந்ததும் பொற்றொடி மாய்ந்ததும். 40

படிந்த கொத்தளம் பத்தொரு நான்குமு
னிடிந்த காரண மாமெனக் கானக
மடிந்தி டக்களற் கண்டரு மாசுணந்
தடிந்து வெற்றி தருநபி சாற்றினர். 41

பாரிசுதேசச் சேனாபதி
ஈமான்கொண்டபடல முற்றிற்று.
ஆக படலம் 8-க்கு திருவிருத்தம். 204.

அவுதாவரசன்

மாண்டபடலம்.

தீக்குழி யதனி லாழுக் தீப்பவ னவுதா வென்னத்
தாக்கிய பெயரான் பாலிற் றடப்புயச் சலீத்துக் கையில்
வீக்கிய கழற்பொற் பாத மேதினி யிடத்திற் றேயாப்
பாக்கியர் கிருபத் தீட்டிப் பரிவுட னனுப்பி னாரால். 1

தரைத்தலம் புகழும் தூய சலீத்தெனும் பெயரார் செக்கேழ்
வரைப்புய நபியை யேத்தி மணித்தொரு மறுத நீக்கி
நிரைத்தவெம் பொறிக ளொட்டி நீணிலா மணியிற் செய்து
திருத்திய பித்தி நாஞ்சிற் செழுங்கடை கடந்து போனார். 2

தொலைநெடுந் தூர நீந்திச் சுரங்கரா வெருக்குப் பூனை
கலிமிகு பதிசேர் தீய கயவவு தாவைக் கண்டு
சிலைமலி தடந்தோட் செப்பிற் சீயனேர் சலீத்தென் போர்பொற்
கலையுட னுரைத்தோர் நல்கும் பத்திரங் கரத்தி லீய்ந்தார். 3

கொடுத்தகா கிதத்தை வேந்தன் கோதற வுணர்ந்திவ் வோலை
விடுத்தது நன்றி யாகும் வேலைபோல் வந்து வந்தங்
கடுத்தவர்க் கீமான் கொண்டு வருமது நபிக்கு மேலு
நடுத்தலத் திராஜ வாழ்க்கை நடக்குமென் றெண்ணி மாதோ. 4

பதச்சுவ டறுசி லிட்டு பாத்திபர்க் கவுதா வென்போன்
கதித்திடத் தெவ்வர் நல்குந் திறைகளிற் பாதி பெற்றுக்
குதித்திடக் கொடுக்கி லீமான் கொள்ளுவே னானிதென் றோலை
யிதத்தொடு மெழுதி மிக்க சலீத்திடத் தனுப்பி னானால். 5

வஞ்சமோ ருருவாய் வந்தோன் வழங்குபத் திரத்தை வாங்கி
யஞ்சிறை பளிகள் பாடி மட்புயத் தடமும் வெற்பும்
விஞ்சிய காடு நீந்தி மேலவ னபிமுன் வந்து
செஞ்சரண் விழுமியி லொத்தி வின்னபத் திரத்தை வைத்தார்.

தீயவன் வரைந்த மாயச் செய்திபோர்த் தேட்டைக் கீறி
மீயக நெருஞ்சு மாட வெளியினில் விட்டிட நிந்தார்
காயமே நாளும் வெய்ய கடோர குழலும் வஞ்ச
மாயமா ரவுதா வென்னு மன்னனக் கணத்தின் மாண்டான். 7

அவுதாவரசன் மாண்டபடல முற்றிற்று.

ஆகபடலம் 9-க்கு திருவிருத்தம்-211.

பறுகாவூரரசன்

வீரங்குன்றிய படலம்.

சதிகொலை பவங்க ணீங்காச் சமக்குடைக் குபிரி சூழ்ந்து
மதிகெடு மிகுறு பெற்ற மைந்தனை யீதென் றேறுங்
கதியிலிக் கோலை தீட்டிக் கவைநெடு நாவு டுய்பிற்
கெதிர்மொழிகொடுத்தோர்போக்குஞ்செய்தியையியம்பலுற்றும்

வாரிபோற் குபிரர் சூழ்ந்து வற்றுறு வறுக்கா வென்னு
மூரினி லாரி தென்போ லுணர்ந்திட வனுப்பு மோலை
சீரிய ஜெகச்சா வென்போர் செங்கையி னல்க வாங்கிப்
பாரிடை படாத செந்தா மரைப்பதம் பணிந்தெழுந்தார். 2

கடைத்தலை மறுகு நீந்திக் ககனமட் டளக்குங் குன்று
மிடைத்தருஞ் சாமும் போக்கி வெள்வளை முழங்குங் கஞ்சம்
புடைத்தபூந் தடமு நீந்திப் புரிசைசூழ் பறுக்கா விற்சென்
றடைத்ததாட் கதவ நீங்கா வரையன்வாழ் மனையிற் சென்றார். 3

மாசிலா வாரி தென்னு மதியிலி காத்திற் செம்பொற்
சேனபதி யிராகு லல்லா தீட்டுபத் திரத்தை யீந்தார்
கோனதறிந் தெழுது மோலைக் குறிப்பெலாம் வாசித்தோர்ந்தின்
காண்புலி யெற்கோ புத்தி யருளினர் முகம்ம தென்றே. 4

தமக்குக்கீழ் நடப்ப வெற்குத் தகாதசொல் வரைந்த தென்கொ
லெமக்கொரு பிரிதா முண்டோ வெனப்புயங் குலுங்க நக்கிச்
சமைத்தவிப் பணிப்பார் தோபாத் தலைப்பதத்தவரா வெல்லைக்
கமைந்தரு பதாதி வெள்ளங் கடலென வருதி ரென்றான். 5

கசாத தாரகங் காலாட் கடலினு மலியத் தேக்கி
மிசைதரு கபிலை வெல்ல வெழுந்தன னெழுந்த யூற்றம்
வசையறு மிறக்கில் கேட்டு முகம்மது மகிமைப் பெயரா
திசைவுறு மதியாற் கெட்ட லனைப்பினை நினைந்தி யென்றே. 6

சிற்றமென் சிங்கவேற்றறைச் செம்மறி செயிர்த்த தன்றோ
காற்றினைப் பூனை நீந்திக் கடக்குமோ வென்று தீட்டி
யாற்றலக லனுப்பு மோலை வாசக முணர்ந்தா ரீது
போற்றரும் வீரம்வீழ்த்திப் போர்த்தொழி லொழித்திருந்தான்.

நஞ்சமோ ருருவாய்த் தோன்றி நமலிபோ லுதிக்க நீய
வஞ்சனை விட்டுச் சீர்த்தி வளர்ஜெகச் சாவென் றோதுந்
தஞ்சவான் முகத்தா ரல்லூர் கடந்துவந் திராகு லல்லா
செஞ்சரண் பணிந்தா ரீது செயலெல்லாம் விரித்துரைத்தார்.

பறுகாவூரரசன் வீரங்குன்றியபடலம் முற்றிற்று.

ஆக படலம் 10-க்கு திருவிருத்தம் 219.

றூமரசனுக்கு

திருமுகமனித்த படலம்.

இனையன நீதி பூண்ட வியன்மறை புணர்ந்தி யாரும்
நினைவொடு வண்மை கொண்ட நெறியொடு கார ணங்கள்
புனைவொடு வரிசை வேண்டிப் புனிதநல் வழியி னிற்பத்
தினையள வியல்வு றாது திருந்தி யிருக்குங் காலம். 1

கலையணி மொழியி னாலுங் கதிரணி வாளி னாலும்
நிலையணி புதுமை யாலும் நெஞ்சணிந் தறிவு வாய்மைத்
தலையணிந் தரசர் தாழ்ந்து தகைகொள வியற்றும் வள்ளல்
சிலையணி பொற்றேருள் வேந்தர் சிலர்க்குயர் நிருபம் விட்டார். 2

சீதநீர் வயல்சூழ் சாமு ராமெனுந் தேய மெல்லா
மோதிய வாணை வல்லா ஐயர்பதி யர்தாக் கிய்யா
மேதகு கிறக்கி லென்போ னுணர்வுணர் விளங்க வண்மை
நீதியிற் சிறந்த கோமா னிருபமொன் றெழுதி னால். 3

பேரொளி விளங்கு மேன்மை முத்திரை பிறங்க வாய்ந்த
சீரெழி னிருபந் தன்னைத் திறமன லூக்கந் தன்னும்
போரெழில் கலீபா தோன்றற் புனிதவான் றகிய்யத் தன்னை
லாரெழிற் கரத்தி னல்கி முகம்மத னனுப்பி னால். 4

சொல்லொடு மெழுத்து மன்புஞ் சுகம்பெறச் சிரசி னேற்றி
யல்லொடு பகலும் போற்று மணிமலர்ப் பாதந் தாழ்ந்து
நல்லொடு மிறையோ னன்னோர் நாமமு நாவி லோதி
வெல்லொடுஞ் சேர்ந்தா ரோடு மிகையொடு விரைந்தா ரன்றே. 5

விறனபி முகம்ம தென்னும் வேந்தர்தன் குடைக்கு ளாவுந்
திறனகர் புரிசை நீந்திச் சேர்ந்தவர் சிந்தை யெய்க்கும்
புறநனி மருத மற்றும் பொருந்திலா ரகங்க ளென்னத்
தெறியரு நிலமும் போக்கிக் கடந்தனர் சிறப்பின் மிக்கார். 6

நிலன்படு மூலங் கல்லுங் காளவர் நெடுங்கூ ரோசை
வலன்படு மிடியே றென்ன வரிப்புலி யிரியக் கண்டு
குலன்படு மிருகம் பம்முங் குன்றினின் றிழியுந் தெண்ணீர்
பலன்படு மருவி மன்னும் பழுவமற் றகன்று போனார். 7

செழுங்கனி மலர்கள் சித்துஞ் செறிவனம் பலவு நோக்கிக்
கொழுங்கனிச் செல்வ மாருங் குளிர்நக ரிடங்க ணீக்கி
யெழுங்கதி யனில மொத்த விரைவினெம் பிரானுந் தூதர்
தழங்குபே ரிகையின் மூதூர் தன்னடைப் புக்கி னாரால். 8

அளியினங் கலங்கச் செந்தே னருந்திப் கயல்கள் பாயு
நளினமென் மலரிற் பூத்த நகைவிளக் கனிந்த வாவிக்
கிளைகடி மடவா ரொண்கட் கிளைவளர் பான னீந்திக்
கிளைவரைப் புடையிற் றோன்றுங் கிளரொளி புரிசை கண்டார்.

வெண்ணுரை யலையின் மீது மேலெழு கிவந்த தெள்ளக்
கண்ணக னகழி ஞாங்கர் கனமதிட் கொடிக ளெல்லாம்
பண்ணய மறைநி னீசா பயின்மொழி வழிஇப மாக்க
ளுண்ணிறை புதினை கூப்பி யழைப்பன வொப்பக் கண்டார். 10

நருகதிர் மேசி னாய்லே நவமணிப் பொருள்க ளோடு
வணிகரூட் டுறைத்தல் வேழார் மறைவழி வருவ போன்று
யிருபல மாக்கள் பம்பி மேன்னருக் குறற வாயிற்
றொகைதிரை கடந்து ளானார் சுருதிநான் மறுக நாவார். 11

வெண்மணி செய்ய நீல மேனிற மணிக டம்மால்
வண்மணி மாட மெங்கு மலிதரு மனைக்கள் விம்மித்
தண்மணி மலர்க ளோடு தண்டருந் திகைப்பின் மேன்மைக்
கண்மணி யினங்கள் பூத்த காவெனு நகரங் கண்டார். 12

பன்மலர் வாடை மாறா வகிற்புகை படர்த லீங்காப்
பொன்மலை யிடங்க டோறுந் துகிர்க்கொடி பொலிவிற் றோன்றுங்
கன்மலை முலையி னார்தங் கனவராற் பரிந்த முத்த
வின்மணி சிதறு கின்ற வீதிவாய்ப் பரிவிற் சென்றார். 13

உருமுமிக் கோதை வேகத் துளர்மத வடல்வெங் கோரத்
தூரகத விலாழி நீத்தஞ் சுடர்மணி யிரதச் செல்வி
விரைசிய துகளாற் சேறுப் பழுக்கிய வீதி தோறு
மரிவையர் வெதிரி னேறு மன்னங்க ளீனய கண்டார். 14

கன்னிகை யரிதி னீன்ற காரண நபிகம் மேன்மை
நன்னய மறையிற் பேத நாட்டிய பொருளோ டோது
மின்னிசைப் பதினெண் பாடை யியங்களு மூவரி யேப்பப்
பொன்னலங் கார வீரர் பொலிகின்ற தலங்க ணீங்கார். 15

தேடிய பொருளு மூனிற் சிறந்தன பலவுஞ் செம்பொற்
கூடிய நிதியும் வாசக் கோதையுங் கனியுந் துன்னி
மோடியன் மேரு நாண மேன்மையிற் சிறந்த மூதூர்
கோடிய வணிகொள் மன்னன் கோவிலின் ஞாக்கர் வந்தார். 16

வீரவேல் கிறக்கி லென்னும் வேந்தன்மாட் டுள்ள நேசக்கிச்
சாரமுற் றொழுக்கங் கூறும் புரோகிதர் தம்பின் மிக்கா
னீரகப் புகழு வாழு நெறியின னவைமுன் னெய்தி
யீரமுற் றிறலுல் வண்மை யியறரு முடங்க லீய்ந்தார். 17

விரிவுண ரமச்சர் கோமான் விண்ணப்த் திரத்தை யேந்தி
யரசர்கோன் முன்ன ரெய்தி யருமலர்க் காங்க டாழ்த்துத்
தெரிமறை முகம்ம தெங்கள் செம்மலின் றூதர் வந்த
பரிசுரைத் தினிதின் வைத்தான் பணித்தன னவனு மன்றே. 18

கடிமல ரடவி யாவுங் கடந்திவ ணடைந்தார் தம்மை
விடுசுடர் வடிவேல் வீரர் விரைந்துகொண் டேக வுற்று
நிடிபடும் பேரி வாய்விட் டிரைந்தபொற் கிடையிற் செங்கண்
வடிகதிர்ப் படையு மின்னும் வாயிலா ரகத்து ளானுர். 19

காரணி புடையு மேனி வெண்ணிறங் காட்டக் கண்க
ளோரணி சேப்ப வார்த்தை யிசைபட மனங்கு லாவத்
தாரணிப் புயத்தின் வீரத் தளபதி கருத்த ரியாரும்
பாரணி சானு வாகப் பணிவொடி மிருப்பக் கண்டார். 20

மணியின வொளிவுஞ்செம்பொன் வசையினதெழி லுஞ்சேர்த்துத்
திணிகொள நளினப் போதின் மலர்ச்சியிற் சிறப்பிற் றோற்றுங்
கனிதவி லரியின் மேன்மை யாசனங் களிப்பப் பன்மைப்
பணியலங் காரம் பூத்த பகலவன் றன்னைக் கண்டார். 21

மனக்கனி வுரிமை பூண்ட மதத்தினு யிர்க்குந் தோற்றுந்
தினக்குண மற்றுங் காட்டுந் திருவடியின் விளையும் பாரோர்
கனக்குற வணங்கி யிட்ட திறைமலி கண்டு பீறி
யெனக்கிணை யிலிதென் றோங்கி யெழுந்ததோள் வரையின் விம்ம.

முன்னின்ற செங்கோல் மன்னன் முகம்மதா நபினர் தூதர்
பின்னின்ற வடிவ நோக்கி மேதக விருப்பச் செய்து
சொன்னின்ற மக்கத் தாரித் தொன்னக ரிடத்தி லுண்டே
லென்னின்ற சபையிற் றூரா யென்றன * னவனை யன்றே. 23

வேந்தர்கோன் பணியிற் றூதர் விடுத்தலும் விரைந்து வாசப்
பூந்தட மக்க மூதூர் புகழ்பெறுங் குறைசி மாக்க
ளேந்துசீர் கறுபு மைந்தன் வாலிபத் திவரை யன்பிற்
காந்துவே லரசர் மொய்த்த களத்திடை விடுக்கப் பட்டார். 24

சந்தனக் கலவை மாறாத் தடப்புயத் தரசர் கோமான்
வந்தவர்க் கன்பு கூர்ந்து வாசகங் கொடுத்து முன்னர்
பந்தியி னிருப்பச் செய்து பயிலொளி முகம்ம தென்னுஞ்
சுந்தரர்க் குரிமை மிக்கத் தொழில்குல னுளன்கொ லென்றான்.

வீங்குதோள் மலையன் வெஞ்சம் வினைவுளன் கறுபு மைந்த
னுங்கவர் பாயி னேனென் றுரைதலு மரசர் கோமான்
பாங்கின்முன் னிலைநீர் மற்றோர் பண்பிற்பின் னிலைய ரென்றான்
றூங்கிய தகுதி போலத் தணப்பற விருந்தா ரன்றே. 26

திருவளர் முகம்ம தாக்கச் செய்கைமற் றுணர்வான் வேண்டி
யிருவகைப் பாடை கற்ற வொருவனை யிடையி னூட்டி
மருவுமுன் னிலையர் சொல்லின் மாற்றமுண் டாகிற் றேர்ந்து
பரிவுறப் பின்ன ருத்தீர் பகர்கென வரசன் சொன்னான். 27

எற்பிற கிருந்தோர் பாவி யென்னுரை யாய்ந்து பொய்மைச்
சொற்பிரித் திடுதற் காகத் தொகுக்கிலீ ராயி லியானே
பற்பொரு ளுடையோ னுனைப் பயன்மறைத் திரனோ கூறும்
பொற்புலா வலங்கல் மன்ன வென்றனன் வணிகர் ஜூயான். 28

தூதெனு முகம்ம தானோர் தோன்றிய குலத்தின் றன்மை
யாதெடுத் தியம்பு கென்று லிதயமு ராவு மொன்று
யோதுகன் னுடைய ரென்ன கறுபுசே யுரைப்ப மன்ன
ரூதிமுன் னயிமார் தம்மை யத்தகை வகுத்தா னென்றான். 29

நபியெனு முகம்ம தானோர் நனிகுலத் திடத்திற் செம்பொன்
மவுலிய ருண்டு கொல்லோ வென்னலு மக்க நாடன்
றவிர்தர வரசு ருண்டேற் றகையுளத் தன்னி யின்ன
நவமணித் தனயரென் றுமா லென்றன னகைகொள் வேலான். 30

*அவனென்னுங் கட்டு-அமைச்சர் கோமக னெனக.

வடிவுறு முகம்ம தின்ன வாசக முரையா முன்னர்
படிறிசைப் பவர்கொ லென்னப் பாலக பருவத் தேனு
மிடறில ரென்றா னன்றே னிறையவ னபிமார் பொய்மைத்
தொடர்கல ரறிகு மியாமே யென்றனன் றோன்ற லன்றே. 31

காரண முகம்ம தோது மொழிகொளுங் கருத்தர் மேன்மைப்
பூரண வலிய ரோமற் றெளியரோ புகல்க வென்னப்
பூரணி சிறிய ரென்ன வாணிகன் பகர மன்ன
னாரண நபிமார்க் கீமா னணியுமுன் னவரே யென்றான். 32

நிறைபுனை முகம்ம தின்சொன் னினைபுனைந் தவர்க ளெனுங்
குறைதலோ பெருகலோ கொண்டா ரென்னலுங் குழுமல் மிக்கென்
றறைதர வணிகன் மன்ன னருணபி மார்கட் சீமான்
முறையுளர் பெருகு வாரென் றிசைத்தமுன் மறைநசொன் றான்.

மூவினிழன் முகம்ம தோது நெறியினின் முரணி நெஞ்சம்
பகுதிலே பூண்பர் கொல்லோ படர்ந்தவ ரென்ன மாறு
மகமில ரென்றா னன்றே னருள்வினக் குன்றாம் பூத்த
வகையினர் திரிவு கொள்ளா ரென்றனன் வலிகொள் வேந்தன்.

மிகைத்தசொன் முகம்ம தோடு வெஞ்சினங் காட்டி நீவிர்
பகைத்தடர்ந் தீர்கொ லென்றான் பண்ணிய வினைக ளொன்றுந்
தகைத்தில வென்றான் மக்கத் தராதிப னபிமார்க் கொல்கா
தகைத்தவர் செய்கை யேது மனுகிடா தென்றான் வேந்தன். 35

படைகொழு முகம்ம தோடு படர்ந்தநும் போரில் வென்றி
நடைகொடு சென்று ரியாவ ரென்றன னமர்க்கு மன்றோர்க்
கிடையினும் பொதுமைத் தாகு மெய்தும்வ் வலக்கண் டானுந்
தடைபடு மிருவர் பாலு மென்றனன் கபுறு மைந்தன். 36

உரிமையிற் றகையின் மிக்க வுயர்நபி மார்க டம்மை
யருமையிற் சோதிக் கின்ற வாண்டகை யருளா னீற்றிற்
பெருமையின் வென்றி கொள்வா ரெனமறை பிரித்த வாய்மை
யருமையி னறிவ னென்றா னரசனின் வலுமை யுள்ளான். 37

போரிடை முகம்ம தென்போர் வஞ்சகம் புணர்த்த துண்டோ
தாரிடை விருப்பி யென்றான் றடப்புய னல்ல ரென்றான்
பாரிடைப் பயன்கொள் ளாதாற் பண்புடை நபிமா ரியாண்டுஞ்
சீரிடை யுறுவா ரென்றான் செம்மணி மகுட வேந்தன். 38

நவந்தரு முசிம்ம நோக்கு நற்குலத் தணிந்தா யின்ன
நிவந்தசொன் னபிக ஞண்டோ வென்றன னிலையின் றென்ன
மவுன்றனன் வணிகன் முன்னர் வந்திடி லவரைப் பற்றித்
தவந்தாத் தொடர்ந்தா ரென்று சாற்றலா மென்றான் வேந்தன்.

வேறு.

தாங்குமிக்குணந் தங்குணந் தகைபமா தவத்தி
னோங்கு மெய்ம்மையின் முகம்மது சொற்றொட ருளத்தி
னாங்கு நின்றவர் செயற்கையு மவர்க்கிவர் பணித்த
பாங்கு மென்னென வினாவினன் பண்புடை யதிபன். 40

பெரிதி றைதிவை வணங்குதல் பொருள்பிறர்க் குதவ
லரிதி னீன்றவ ரவ்வழி யுடையவ ரன்பி
னரிய கேளிரோ டினிதுட னுறைபுர வொழுகல்
தெரியு நல்வினைக் கற்பணி சிறப்பொடு பூண்டல். 41

வரத ராணவர்க் கின்னருள் வரப்பணி புரிதல்
விரத நோற்றிடல் கச்சிபற் றுதல்மத விகற்பப்
பரித ராதிப ருடன்பொர லினும்பல பணித்தா
ரிரத மாமறை யுணர்வொடுந் தொடர்ந்திசைந் தவர்க்கே.

என்று மக்கியர் முன்னவ னிசைவினு லெவைக்கு
மன்று செவ்வினை தருவிடை யனைத்தையு மாய்ந்து
மின்று எங்கிடு முடியொடு புபயிலை யாரப்
பொன்று லங்கிடச் சிரத்தினாக் கிளன்புவி யதிபன். 43

நிறைத்த வித்தகை, நின்மொழி நிலவிரி மணிகள்
விரைத்த பொற்புய முகம்மதி னிபத்தைகேவ்யுர் திடமே
னிரைத்தி டும்பொருள் வல்லவ னுயர்நிபி யுமரே
தரைத்த லத்தின்மற் றின்றெனத் தவத்தொடு மறைந்தான்.

சொல்லு நங்குல நம்பின மன்றிபித் தோற்றம்
புல்லு நற்குண மின்றிய புதியதோர் வேட
மொல்லும் பேரினா னென்முன முளத்திடை யிருந்த
வல்லு நீங்கின விளக்கிய வறிவினு லென்றான். 45

முதிய மேம்பொரு ளனைமறை மூன்றினு முணர்ந்தார்
விதிய வாய்மையும் விளக்கிய விளக்கமிவு வியற்கைப்
புதிய காரண மன்னிய முகம்மதா புவிபி
லதிக நாயகன் றூதென நகைபயின் றென்றே. 46

ஆத லானுறு விதிவலி யவரிடத் தணுகப்
போது மேயிரு விழிவழி புனலினுற் பூக்கும்
பாத பங்கயங் கழிஇயென தாகியல் பலவு
மாத வத்தவர் சொற்கொள வரம்பெறு குவனால். 47

உளத்தி னுக்குமுற் றினையன வுரைத்தெழி லோங்கும்
வளத்தி னுயக ரெமையொரு பொருளென மதித்தே
தளைத்த சிரொடு மனுப்பிய பத்திரந் தனையிக்
களத்தி னேதக வென்றனன் றாபிதா வலவன். 48

தேர்ந்த சிந்தையம் மந்திரர் கோமகன் செழுங்கை
யார்ந்த பத்திரம் வணங்கினன் வாங்கின னகத்திற்
கூர்ந்த வேந்தனு மக்கியர் குழுஉக்களுங் கேட்ப
வோர்ந்த கல்வியின் பாசுரன் விரித்தெடுத் துரைத்தான். 49

விரித்த முன்வரிப் பிசுமிலை முற்றுற விளக்கி
யொருத்த னுதிமெய்த் தூதெனு முகம்மதி னன்மைப்
பொருத்து பத்திர முறாமியார் பூபதிக் கென்ன
வுரைத்த னன்பிற வாசக மொழுகுட னிசைத்தான். 50

ஆதி தூதவர் முகம்மது பகருள் வாய்மை
நீதி நேர்வழி தொடர்ந்தவர்க் கென்னவும் நின்னைப்
போத மேவிசு லாமிப லரும்பயன் புனைய
வேத நன்னெறி யிடத்தழைத் தனன்விரை கென்றும். 51

உள்ளத் தோடொழு குகவொழு கிடினுறு மன்பர்
தள்ளத் தேடினை யன்றியுந் தாங்குமிக் குடையோர்ன்
கொள்ளப் பேறிரு முறைமிக வருட்குவன் கொண்டா
லென்னாற் போக்கினை நீக்கினை யிழிகுண மென்றும். 52

விளித்த நன்னெறி யிகழ்ந்தனை யேல்விழை துன்பந்
துளித்த பற்பொருள் முறையவர் முறையினிற் றாய்ந்தார்
பளித்த பாதக மனைத்தினின் மேற்படர்த் தோங்கிக்
குளித்த வெங்கர விடத்தினிற் கொண்டுபோ மென்றும். 53

எமக்கு மக்குமொத் திருந்தசொல் லிடத்தினில் வாரீர்
சமக்கு மாமறை யாளர்காள் நேறெனுஞ் சுறைத் தொழுத
லமைக்க லாதினை யைக்கலா தாண்டகை யென்ன
நமக்கு ளெம்மினை யாக்கலா தாறினை யன்றி. 54

இன்ன மூன்றினை யெடுத்திறை மொழியியன் மாறித்
துன்னு வீரெனி லியாங்களவ் வொருமையிற் றொடர்ந்த
சொன்ன யத்தின ரெனவறி சோர்விலாச் சாட்சி
கன்ன லத்தினோ டுறைமினீர் மேலைநா ளென்றும். 55

இருந்த நன்மறைப் பொருண்முத லியாவையு மிதயம்
பொருந்து மன்னவன் கேட்டனன் புதுமையுற் றுள்ளந்
தெரிந்தி டாதுரை விளங்கிடா வோசையிற் றிகைப்பி
னெருங்கு ரப்பினர் பேரவை யிடத்துள ரெவரும். 56

ஆக்க யாமுறை யொடுவழீஇ யவர்பெறு முறையுந்
தேக்க மாமறை யுணர்மதி திகைப்பொடு தெளிவும்
பூக்க மன்னவ னவையினர் பெருமையு முன்னி
யூக்க மக்கியர்க் குரைகொடுத் தனுப்பின னுடனே. 57

ஆரச னஞ்சிய வச்சந்தான் அபிக்கபு சாதன்
னொருமை கன்னது காரிய முயர்ந்தது திறத்தென்
றரிய னத்தினோ டிசைத்தன னபினயமுள் ளிகழ்வற்
றரிய கேளிரோ டேகின னுழன்றபூ சுபியான். 58

வேறு.

முன்னெறி மறைபல முதிர்ந்த சிந்தையர்
மின்னவிர் நேவிலினர் விரித்த புந்தியர்
பொன்னணி வல்லவர் பொலிவிற் கூட்டியம்
மன்னவன் சமயமண் டபத்து ளாயினன். 59

மந்திரர் முதலிய வனைந்த சுற்றங்கள்
பந்தியி னோக்கினன் பருதி மாளிகை
யந்திய கபாடங்க ளொக்கல் சார்த்தினன்
சிந்தையி லுள்ளன தெரியக் கூறினன். 60

தேங்கட மலிவள ஆமிச் செல்வரே
காந்தழ லவிதரக் கதிகொ ணேர்வழி
பூந்தவ முறைபல பொலிவிற் பூக்கன
வாந்தகை யுளங்கொளீ ராக்க மாமரோ. 61

மெய்ப்பொருள் விளக்குமா மென்மை பூண்டன
கைப்பொரு ளியாவதுங் கலக்கும் வஞ்சகப்

பொய்ப்பொரு ளொழியுமிப் புதிய தூய்நெறி
செய்ப்பொருள் கொண்டகந் தெளிவி னார்க்கரோ. 62

சொன்னெறி யுடையவர் துதிக்கு மாரணா
நன்னெறி முகம்மது நபியென் போர்நமர்
முன்னெறி விளக்கிய முழுநி லாவரி
லெந்நெறி யோமிக விலங்கு மென்னவே. 63

சொற்புகக் கறுத்துளந் தழலத் துன்புளத்
தற்பற வுழன்றெழுந் தலறி யாவரும்
வற்புறு கழுதையின் மறுகி வாயிரு
நிற்படு கூட்டத்தி னெறுழி னேங்கினர். 64

திருவெனு முகம்மது சகீது மன்னவ
னருளுரை யுளங்கொளா ரவிற் கையற்று
வெருளினர் தம்மொடு வேந்து மொன்றிய
தெருளினோ டமைத்தரு கிருத்திச் செப்பினான். 65

முறையுளீர் நாந்நெறி முதுமை மாறிடா
துறையுளீர் நிலையினை யுணர்ந்து காண்குவா
னிறைமொழி காட்டின னிற்கும் வீறினு
விறைமையென் னீடத்தினி னென்று பின்றதே. 66

திறவலி நமர்கடஞ் சிந்தை பற்றிய
வறவலி மதவலி யாண்மை யூங்கிய
மறவலி வாள்வலி மற்று நோக்கினன்
பிறவலி யுடையவர் பெயரு மின்றரோ. 67

இத்திற முடையநீ யிருப்ப வேறொரு
பொய்த்திறம் வேண்டுமோ புந்தி போலுள
கைத்திறம் பூண்மியர் களிப்பி னாலெனச்
செய்த்திற மிசைந்தது சிந்தை மன்னர்க்கே. 68

கொடும்பகை குடிகொளு மென்றுங் கோதினோ
டடும்பகை தலைமைவிட் டகலு மென்றுமுள்
விடும்பகை முகம்மது விளக்கு மெய்ம்மைக்கே
நெடும்பகை பூண்டனன் புன்மை நெஞ்சினான். 69

மன்னமுன் னவின்றவை மதித்தி மாறனைத்
தன்னவர் வணங்கினா ரருமை யேத்தினர்

தன்னிலை யிழிதருந் தலைவன் சார்ந்தொடு
பொன்னிலை மாளிகை பொலிய வைகினான். 70

தவலிலைத் தகிய்யத்தை யழைத்துத் தாங்கரு
முவகையி னிதிபல வுதவி நண்புகொண்
டவனிலை வெளியுறா தந்த ரங்கத்தி
னிவருரை நிருபமொன் றெழுதி நல்கினான். 71

நிலைமையாய் வரும்பய னெறியை நீணிலத்
தலைமையா னீக்கிய தறுக ணாளன்வாழ்
புலைமைசா லருநகர் புறத்தி னாயினர்
கலைமரு துளத்துடைக் கதிவல் லாளரால். 72

உடன்வரு மவர்கரத் துதவிச் சாலெனுந்
தடனசர்த் தொழிலொடு தகிய்யத் தேகினர்
இடனுடை மதீனத்திற் சேர்ந்து நந்நபி
யிடனளித் தனர்பதத் திவருந் தாழ்ந்தரோ. 73

உண்மையி னம்வழி யுறுதி கொள்கிலாக்
கண்மையங் குடிப்பகை கலத்த லோம்பினன்
நண்மையி னின்றன னென்னத் தாங்கிய
புண்மையம் பத்திரப் புணர்ப்பை நோக்கினர். 74

ஆதியின் பகையினுக் கச்ச மின்றித்தன்
சாதியின் பகையினுக் கஞ்சுந் தன்மையால்
வாதியன் றனனென மதிப்பிற் கொண்டனர்
சோதியங் கனியிறசூல்முகம்மதே. 75

அமரசனுக்கு

திருமுகமளித்தபடல முற்றிற்று.

ஆக படலம் 11-க்கு திருவிருத்தம். 294.

கந்துகம்

கலிமாமொழிந்தபடலம்,

ஐந்தரு வனைய செங்கை யரசர்கோ னிறக்கில் பாலிற்
கந்தமோர் காதம் வீசுங் கபீபுல்லா செய்தி முற்றும்
விந்தையாய் வாய்மை சொற்ற விறலபா சுபியா னென்போன்
சொந்தமாய் நாட்டிற் செய்த தொழிலெல்லா முடித்த பின்னர். 1

நாகிளந் தெருவி னேற்றி னன்மணித் திரளும் பொன்னுஞ்
சேகறு துகிலுஞ் சும்மை செய்தெடுத் தேற்றித் தீம்பாற்
பாகுறு மமுர்தச் செஞ்சொற் பாவையர் விரும்புந் தாம
வாகுறும் வணிகர் சூழ மகிழ்ந்தினி தெழுந்தா ரன்றே. 2

மாசறு மதிய மன்ன வயங்கெழிற் பித்தி மாடத்
தேசுறு மக்கம் வாழுந் தேசிகர் பலருங் கூண்டு
பாசுறு புரவித் திண்டேர்ப் பருதிவான் றடவு நாஞ்சில்
வீசுதெண் டிரைநீ ரோடை மேயறாம் பதிக டந்தார். 3

ஓங்கிய வுப்ப மார்க்கத் தனைமயிர்ப் புரவி யொட்டை
தூங்கலி னிடப மீதுஞ் சுமைபரித் தடைக நித்து
மாங்குயி லிசைகள் பாடும் வனங்களுந் தடமு நீந்திப்
பாங்கரி னுடனே செல்லும் பாதையி னுப்பன் மாதோ. 4

குழைதரு கிளமும் வாய்ந்த கொய்சுவற் பிடரும் வாழைத்
தழைமடற் செவியு நெற்றி தனில்வலஞ் சுழியுஞ் சேர்ந்த
வழலுமிழ் விழியும் வீசு மணிமயிர் வாலு மண்டிட்
டெழுவெறி குரமும் வாயின் விலாழியும் வருமமென்னும். 5

கவனமு மினைய பாய்மாக் காற்குரற் றளைய றுத்து
பவுரியி னுடனே யோடிப் பாதையின் வருதல் கண்டு
சவுரிய வீர வெற்றி தருமபா சுபியான் மல்குஞ்
சுவல்மயிர்ப் பரியைக் கையாற் பற்றிடத் துணிந்து சென்றான்.

மன்னபா சுபியான் செய்ய வாண்முக மதியை நோக்கி
வுன்னிவாய் திறந்து வேதத் துறும்பொருட் கலிமா வோத,

வன்னவன் செவியிற் கேட்ட தகிதமீ தென்கொ லென்னப்
பன்னின னிதனும் வேறு புதுமையான் பகரக் கேண்மோ. 7

நின்னையோர் துளியி னூலே நிறுவுமைம் பொறியு மற்று
மன்னைதன் னுதரத் துள்ளே யமைத்துணை வளர்த்துக் காத்தோன்
றன்னையு மவன்றன் றூதர் தம்மையு முணர்த்தி ருத்தி
யின்னிலத் தீமான் கொள்ளா திருப்பதே யதிக மென்ன. 8

அப்பொழு திறகு லென்று மவரெவ ரறைகென் றோத
முப்பொழு துணரு மாத முதனபி மார்கட் கிறு
யிப்பொழு தங்க ளூரி லப்துல்லா மணத்துக் கேய்ந்த
வொப்பிலா வாமி னார்தம் முதாத்தி னுதித்தா ரன்றே. 9

கன்னினி லடங்காக் காட்சிக் காரணத் தரிய வேதம்
விண்ணவர்க் கரசர் முன்னோன் விதிப்படி கொணர்ந்து வெற்பி
னண்ணிதன் னபியென் றோது நாமமு மருளப் பெற்று
மண்ணினுக் கரசாய் மக்கத் திருந்தனர் பருதி யொப்ப. 10

ஓடையிற் பேழ்வாய்ச் சங்க முயிர்த்தவெண் மணியா னீலந்
தோடவிழ்த் தருட்டஞ் சிந்திச் சொற்செறு வழிந்து பாயும்
பீடுடை மதீனஞ் சென்றப் பெருநகர் புரந்தோர் செங்கோல்
கோடுறு விறலு மல்லா வவரெனக் கூறிற் றன்றே. 11

ஆண்டிறை நபியை நீயின் கறிந்ததெப் படியென் றோத
மீண்டுறும் பிறவி யோரோ டிறும்புவான் வாரி நீண்ட
சேண்டரு புவியு மியானுந் திருநபிக் கீமான் கொண்டு
மாண்டரு கலிமா வோதி வணங்கின மறந்தி லோமால். 12

இவ்வுரை கேட்ட மன்ன னிவுளியைப் பிடிக்க வந்தி
யவ்வயி னகன்று நெஞ்சத் ததிசயமும் பயமுந் தோன்றப்
பௌவநீ ணதியுஞ் செந்நெற் பழனமுங் கடந்து நாளுஞ்
செவ்விய மறைதேர் மக்கத் திருநக ரிடத்திற் சேர்ந்தான். 13

கத்துகம் கலிமாமொழிந்தபடலம்

முற்றிற்று.

ஆக படலம் 12-க்கு திருவிருத்தம், 307.

எஹூதியரைவென்று

அரசுபுரிந்த படலம்.

நடக்கு மமுத மறையிறசூல் நபியும் புலன்க ளோரைந்து
மடக்குந் தவத்தன் சாரிகளு மடல்சேர் முஹாஜி ரீன்பிறருங்
கடக்குங் காத மறுநான்கு தூர வழிபாங் கைபர்தனில்
படைக்கு யெகூதி யரைவென்று அரசு புரிந்த கதைபகர்வாம். 1

தேருக்குயிர்க்கா டொருங்கறுத்துச் செழித்தநிணற்பயிரேற்றி
மாருக் கவிமா நீர்வார்த்து வளர்த்த விறசூல் மதீனாவில் (தார்
வீறாயிருக்கும்போதிலுயர் விண்ணோர்க் கிறைவ ரோதிகொணர்ந்
தாருக் கரியே கூதிகளை வெல்லத் தந்தோம் வெற்றியென்றே.

ஆதி மொழிந்த புறுக்கானே ராயத் திறங்கித் ததனாலே
யேத மகல வருங்கிசுறாத் தேழின் முகற்ற மாதமதிற்
சோதிநபிறசூல்பறைமுறைகள் சொல்வோர்தம்மைவரவழைத்திப்
போது கைபர்க் கேகப்பறை போய்ப் பொதிபு மூன்றுமென்றார்.

கவியிற் கவித்த முரசநெடுங் கழுத்தன் மிசையி லேற்றிவரிப்
புலியிற் றிரித்த வீரரம் பொருது தேய்த்த படையேந்திச்
சிலையிற் றீப மனையாகி திருப்பா தத்தில் வருதிரேன
வலரிக்கதிர்போய்மாடமறு கறைத்தார் குணிலாலதிர்த்திடவே. 4

முழைழயி சுடாங்கா வுகள்சீப் மூரிச்சிலைக்கை யபூபக்கர்
கழைமையச் சுளித்துக் கந்தடருங் கடமா லியானை நிகருமீறா
மழைமயி ஹாருமே நெணமுழங்கும் வரிவெம் புலிபோ லுதுமானுங்
குழைமொந் சிலைக்கை வீரர்களும் பரிமேற் கொண்டு வந்தனரால்.

வயமா வணைய திறலலிகள் வலியால் மணிமா மனையிருந்தார், பயமா மலையை நிகர்த்தோங்கும் புகழ்சேர் சிறசூல் நபியுல்லா, முயல்மா சொழித்த வெண்டிங்கள் மோலிச் சிரம்வந் துறைந்ததெனச், செயமார் சருவந் தெடுத்தணிந்தார் திகழுங் கதிர்கான் றெழுகிடவே. 6

செய்யா மொழியும் பல்புகழுந் தேடற் கரிய பெருநலனு,
மெய்யாய்த் திரண்டோர் வடிவமைந்த வீறுந் திருந்தும் பான்

மையெனப், பொய்யா மேனி யழகுபுறம் போகா வண்ணம் பொ
திந்ததெனத், வையார் சுவேதக் கஞ்சுகியை யலங்குமெய்யி லெடு
த்தணிந்தார். 7

திமிரம் பருகு மென்றாமைச் சேர்ந்து சுற்றும் பருதியெ
னக், கமழுங் கருங்கா ளகமரையில் வீக்கிக் கருதா ருயிர்பிணை
மு, மமருங் கறைவாண் மருங்கிருத்தி யறுகாற் பொறிவண் டின
ம் பெடையோ, டிமிரு மரப மலர்மாலை யிரங்கு முழவத் தோள
ணிந்தார். 8

இருளைக் கடியுஞ் சுடரிரவி யின்னும் புலரா துமக்கேவ,
லருளிற் புரிவே னென்றுவந்தாங் கமைந்த கதிரோன் கேடகத்
தை, வெரினின் புறத்தி னெடுத்திருத்தி விளங்குங் கொண்மூ
விடைப்பிறந்த, திருவி லனைய கொடுஞ்சிலையைச் சேர்த்தார் புய
மா மலைதிகழ. 9

திரையார் கடலார் புனல்பருகத் திகாந்தப் புறத்து மூடுரு
வ, வரைவா னகடு கிழித்தோட மாற்றா ருயிருண் மடுத்தருந்தத்,
தரைவாய் நிதமும் பணிகேட்டுத் தனியோன் றாத ரருகேனைக்கு,
நிரையார் தூவி முரட் பசுழி நிறைக்குந் தூணி புறத்தமைத்
தார். 10

கொன்றை யலரி யிலையெறிந்து சுற்றும் விடமூன் குடியிரு
த்தி, யொன்று முயிர்வாய் மடுத்தருந்து மொளிருங் கதிர்வேல்
வலனேந்தி, மின்னார் கமலச் செழுந்தாளில் வேந்தர் மோலி பணி
ந்திட, மன்னு மறுவை மறைத்தனபோல் வயங்கு மணிப்பொற்
கவுசு தொட்டார். 11

மணமு மறுக மழுவலரி மாறுக் கதிருங் கலியடையுக், கன
மூம் பயங்தேங் கிடநடக்குங் காலுஞ் சரஞ்சூழ் குத்திரப்பாட்,
டினமுஞ் சுழன்று விழக்கவன மியையுங் குரக்காட் கடும்பரி
மேற், றினமும் பரனைப் புகழ்நறகுல் கொண்டார் சீமு தங்க
வீப்ப. 12

மேவிவலைய மொருங்கு நிழ லிறுத்துந் தனிவெண் குடை
கவிப்ப, சாமர் தெடுவெள் கதலிகைபோய்க் ககன முகடு தட
விலரத், காம முரசந் தவில்பேரி தடாரி திடிமன் பலசறங்க,
வாம மனைக ளிருபாலு மழங்கச் சுரர்வான் மலர்சொரிய. 13

ஊழிக் கனலுங் கட்க ணல்கண் டொதுங்கும் புயங்கண்
டம்பொன் முடிப், பாழிக் கிரியும் பெயர்த்திடையும் படைகண்
டியம னுளம் வெருவுஞ், சூழிக்கரியோ ரெட்டுமெனத் துணுக்
குந் திறங்கண் டித்தகைய, வாழிக் கடல்போற் றோழர்களு மட
ல்வாம் பரியின் மிசையெழுந்தார். 14

பருந்தா ருடற்குந் தெவ்வருயிர் பருகுங் கதிர்வே லரசர்
முடி, யிருந்த மணிகள் பகல்காட்ட விரவைத் துவசங் குடைகா
ட்டச், சரிந்த விலாழிப் பிறைக்குரத்தாட் டாவுங் கவின வயப்
பரிகள், விரிந்த புணரித் திரைகாட்ட மேவு மதீன நகர்கடந்தார்.

தங்கி முகில்கள் கண்வளருந் தருக்கள் படியப் பேருவி,
பங்கம் படவெண் கொடுஞ்சியம் பறுக்கை பதங்க நெடுமலைக,
ளங்கங் குலைய விடவாய்ப்ப லனந்த னுடல நெளிநெளியச், செ
ங்க ணிவுளித்திரள்கடவிச் சென்றார் கைப ரெல்லையன்றே. 16

இறங்கிப் புலரிக் காலைதனி லிரங்கு மறுகாற் சுரும்பினம்
வர், துறங்குங் கமலக் கரமேந்தி யுலக மறிதற் கரியானை, யறங்
கொளுளத்தி னினிதிருத்தி யருள்வாய் வெற்றி யெமக்கென்றே,
திறங்கொண் மொழிகொண் டினியதுஆச் செய்தார் சையி திற
குலே. 17

மங்கு லளக்கும் வெண்படங்கு வயின்க டோறு நனிகோட்
டித், திங்க ளகட்டின் முபறுடைத்துத் திவ்ளும் வெற்றிக் கொ
டிநிறுவி, வெங்கட் கவினப் பரிச்சாலை யமைத்து மிக்க பிடிகை
யும், பொங்கு மறுகுஞ் செய்தாரைம் பொறியி னுள்ளம் போக்
காதார். 18

படைவீ டதனைக் கண்ணுற்றோர் படைகொண் டடர்ந்து
நமதுசதி, ரிடையி னபிவந் திறுத்தனரொன் றிசைத்தார் கைபர்
த் தேயமுற்றும், விடவா யரவின் வாய்த்தேரை யென்ன வெரு
வி யுரைகுளறி, புடைசேர்ந் திருக்கும் போதுசில் ருதவி யென
வந் தனரவர்க்கே. 19

அசைபா வுருமே றெனமுழங்கு மசதுக் கூட்டத் தறபிக்
ளுங், குசைமா மிசைவெண் சிங்கமெனக் கதுபான் கூட்டத்
தநபிகளுந், திசைபோந் தவர்க ளொருதலைத்திற் றிரண்டு தத்தம்
புயவலியு, நசைசே ரிறசூல் பெருந்தானை வலியுந் தேர்ந்து நகிற் 20
துவரால்.

சூழி முகத்துத் தாழ்தடக்கைச் சுரும்ப ரரற்றுங் கவுட்கர டப், பாழி பொருத்தன் முனங்கா ரான் பகுவாய்ச் சியம்பொருத லெண, ஆழி செலுத்துந் திறலொன்று ரவரிற் சிலர்கூண் டொரு முகமாய்ப், பூழி படரப் படைநடத்தி நபியோ டெதிர்த்துப் பொருவமென்றார். 21

படியேழ் குழிக்கு நீரகழி யுடுத்த பலவெம் பொறிப்புரி சைக், கொடிவா னளக்கு மதிலுவிற் குறுகி யிகலும் புரிவமென, வடிவே லரசர் சிலர்மொழிந்தார் மறுத்துஞ் சிலரப் பதிசேறல், முடியாக் கருமங் கைபரிவர்க் குதவி முயல்வ தும்பழுதே. 22

பழுதென் றுளத்திற் றெளிந்தாய்ந்து பயீனு நமது தலங் களைநா, முழுதுங் காவ லோம்பிகித முடித்த றிறமை யல்லாது, சழுது துடரும் வைவேலீர் கதங்கொண் டிகறன் மடமையென, வழுது வரிவண் டுறங்குபொழி லோங்கு நத்தம் பதியடைந்தார்.

மன்றல் கமழுந் திருமேனி வள்ள லபியு மறைவஷித்து, நின் றதழும்புச் செங்காவி னீத மகலாத் தோழர்களுந், துன்றுஞ் சீட ர்வெம் படையேந்திச் சுழல்கட் பகுவாய் மடங்கலென, வென்றி முரசம் பலமுழங்க வெழுந்தார் பகத்துள் வெயிலொளிப்ப. 24

இப்பி மணியைத் திரைக்கரத்தா லெறியு முததி யெழுநீல, மொய்ப்பப் பரந்தாங் கெனச்சேனை முழுது நடத்தி நாமெனப் பேர், செப்பு மெயின்மே லணிவைத்தே றும்பா தோர்கற் றிரு கைவிழுந், தொப்பின் முசுலீ மாதவத்தா ருதவு மருஹூ தவிறந் தார். 25

இறந்த போழ்தின் வயவீர ரிருகண் சிவந்து நெருப்புகுப் பப், பிறந்த வேகத் துடனவரண் பிடித்தார் பிடித்த பின்பொ ளிவு, சிறந்த மணியும் பல்பொருளும் வவ்விச் சிறையும் பிடித் துளாத்தி, ஞரந்தங் கிறகுல் கபியெழுந்தா ரடரும் பகுவாய்ப் புலி யேய்ப்ப. 26

கண்ணு ரகழி புடையகலாக் கமூசுத் துருக்கங் கொளப் பசும்பொற், பண்ணுர் கலினப் பரிநடத்திப் படைகொண் டடர் ந்தங் கிலங்கைகட்டி, யெண்ணுர் கலங்கப் பொரும்போரி னெதிர் கின் றொருவன் வாளிவிதிர்த்துத், தண்ணுர் கமலா னனச்சல்மா தாலோரன் றெரிதப வெற்றிந்தனனால். 27

எறிபட் டுடைந்த் காறாக்கி யிஞ்சி தனைவிட் டிழிந்துமெல்லப் பொறிபட் டொளிருமுறைமறிபாற்போந்தின் னமுத மூட்டிவர வெறிபட் டிலகும் படலைபந்தோள் வேடன் றனக்குப்பிணைபாகக் கறிபட் டுயர்ந்த சோலைமலைக் கன்னின் றவர்பால்வந்தனரால்.

பட்ட கழற்புண் ணேவகலப் பதிவிட் டகல்வா னறுசே தித், தொட்ட கவசின் மீண்டுவந்த தூத ரோதி யூகமுன்னம், விட்ட கழற்புண் ணேவகன்ற தடனே வெய்ய வீரரொடு, கட்ட அருக்கத் தெயில்கொண்டார் நான்கு திசையும்புகழ்கொண்டார்.

சுடர்விட் டெறிந்த பன்மணியுந் தொகைசுவி னிதியும் பல் பொருளும், படலை யலங்குந் திண்டோள்கள் விம்மக் கமர்ந்து பதணமதி, லிடையிற் செறித்த மனைபுகுந்து சிறையும் பிடித்தா ரிறும்பகன்ற, விடர்விட் டுலவு முடங்குளைவான் மடங்க லனைய வீரன்றே. 30

புள்ளார் பகழி தனைத்தூரக்கப் புரிநாண் முறுக்கிக் களம் பூட்டி, புள்ளார் குன்றகா தளவும்வர வூன்றி வளைக்கும் வரிச்சிலை பூங், கள்ளார் மரபத் தடந்தோளிற் கவினும் விலாலு மனைபுகு ந்து தெள்ளா ரமுத மொழிக்குதலைத் தெரிவை யிருவர் தமைப் பிடித்தார். 31

கறைவாய் மடுத்த கதிரிலைவேற் கருதார் குலத்தி லொருதலை வன், மறையார் நாம்முறையையென்பேசன் மகளார் சபிபா வுடனொ ருமா, னறையார் புயத்து விலால்கொணர்ந்து பெரியோ ரெனபி முன் விடுத்தனரிச், சிறையோ ரெழுவர் பிடித்தசிறை யனைத்துஞ் சிறைசெய் திடுமினென்றார். 32

சொற்ற படியேமுடித்தனர்பின் றாதர் கவனப் பரிதூண் டிப், பெற்ற நாமந் சகுவென்போன் பெய்தகாஞ்சி றனைப்பிடி த்தா, குற்ற கவசங் கிருதமென்னை யுடைமை பலவுங் கொள்ளை யெடுத், தற்ற மகனு மிரசவர்க்க மனைத்தும் படைத்தார் கவி துடைத்தார். 33

இன்ன தகைய மதிலொருமுன் றெடுத்த நிதியுஞ் சிறை பிறவு, மன்ன வொருங்கு முன்னடத்தி வடிவா ளுழவர் படை நெருங்கப், பொன்னி னிதழ்ப்பூம் பொதியவிழ்ந்து பூத்த கமல மலரோடை, யன்னு மொதிக்கத் தெனுமதிலின் சுலாலத் தானு ந் கொளவளைத்தார். 34

சுற்றி வளைந்து பலதிசையுஞ் சுடர்விட் டெறிக்கு முவாம
திக,ளுற்ற தெனவெண் கூடார மொளிர வயின்க டொறுங்கோ
ட்டிக்,கற்றை மயிர்வாற் றுரகதங்கள் கட்டுஞ் சாலை கடைமறுகு,
முற்று மமைத்து வெற்றிநிசா னுடங்க முன்னி னறுத்தினரால்.

எறிவெண் டிரையிற் சுறவுறள்வா ருழுவர் பலரு மரன்சூழ்
ந்து, மறுவின் மதியைப் பரிவேடம் வளைத்த தென்னப் பதினொ
ருநா, ளிறுவு மிரண்டு கெடித்தலத்து நீரு மகத்திற் செல்லா
மற், றெறுத றணிந்தே முத்திக்கை செய்தார் மரபத் தினி
தோளார். 36

அன்றைத் தினத்தில் வரிவேங்கை யனைய அபூபக்க ரை
யழைத்து,நின்ற படைக்குத் தலைவரென நிறுத்தி வெற்றி நிஜானை
ளித்துத், துன்றும் பொறிவெம் பரிசைதனைச் சுற்றி வளைந்து
பொருமினென,வென்றி யிறசூல் விடைகொடுப்ப விளையுஞ் சம
ர்க்கோ லம்புனைந்தார். 37

மோலி மின்பொற் சிரஞ்சேர்த்தி முயன்மா சொழிந்த
வெண்ணிலவை,மேலிவ் வழிய வார்த்தனபோல் வியன்சேர் சவே
த வங்கிதொட்டுக், கோலத் திருவூ ரெனவடிவங் கொண்ட கச்
சை மருங்கிறுக்கி,யோலச் சுரும்பர் முரன்மரப வொண்டார்புய
த்தி லெடுத்தணிந்தார். 38

புலவு முருகுங் கமழியல்வாட் பொருந்த மருங்கி னிடை
வீக்கி, யுலவும் பருந்து துடரயில்வே லொளிர வலங்கொண் டிள
ம்பிறைபோ,லிலகுஞ் சிலையிற் புரிநாண்கொண் டிறுக்கிப் பூட்டி
யிடக்கைபற்றி, யகைம் பெறுமா சுணமுறைபுற் றுங்கம் பரிசை
புறத்தணிந்தார். 39

வானி னருமே றெனவதிரும் பலவாக் கியங்க ணிகறங்
கப், பானு மறையக் குடைநெருங்கப் பதாகைச் சோலை பூடை
மலியச், சேனைத் தலைவ ருவர்க்கடலிற் றிரைபோற் றுவும் பரி
யில்வர, நானப் புயத்தா ரபூபக்கர் நடனப் பரியின் மிசையெ
ழுந்தார். 40

அட்ட கியங்க ணிலைபெயர வனந்த னுடல நெளிநெளியத்
தொட்ட கடலே பூளறுபட்த் துலங்கும் வடபூ தரங்குலுங்க
வட்ட நெடுவான் முகடதிர மறலி வெருவிக் கண்புதைப்பக்
கொட்டமிடுவாம்பரிநடத்திக் கொம்மைமதிலின்புறத்தடுத்தார்.

வலத்தின் சுழன்ற கவரிநெற்றி வாவுங் குரப்பா டலங்க
டவி, யுலத்திற் றிரண்ட திணிதடந்தோ ணரவோ ரூன்றி வரிச்
சிலையைப், பிலத்திற் குனித்துப் பரிநாணைப் பிணித்துக் கறை
கொண் முரட்பகழிச், சலத்தைச் செனித்த கார்மழைபோற்
றடவா ரியின்மேற் பொழிந்தனரால். 42

குடுமி நெடிய நச்சிலைவேல் குந்த மதியின் வளைதிகிரி, தடிமி
னெறிக்குங் குணில்பிறவுந் தடந்தோள் வீரர் கொண்டுமுகில்,
படியு நெடிய கனமதிலின் பதுங்கு மடையா ருடறுளுக்க, விடி
யுங் கடியுங் குரலெழுப்பி யிறைத்தார் பதங்க ளொளிகரப்ப 43

கச்சு நெடிய மாற்கவணிற் கனத்துத் திரண்ட வுலனிரு
த்தி, மெச்சுந் திறற்போர் வயவீரர் விம்மும் கடகக் கரத்திலெ
டுத், துச்ச மகல்வா னளவோங்கு மோங்க லனைய வரணடுவி,னச்சு
மரம்போ லுறைந்தவொன்னார் நடுங்கி யுளஞ்சோர்ந் திடவெறிந்
தார். 44

கடறின் முருடு தனை யெடுத்துக் கடவுஞ் சகட மிசைப்பெ
ய்து, படருங் கொடுவெங் நெறிமருப்புப் பகடாங் கிணக்கிக் கொ
ணர்ந்துபல, திடரிற் குவித்துத் தனிகடத்தித் தெவ்வ ருறையு
மரணைபடுத், தடரும் பகைவெம் போர்தொடுத்தா ரலங்கன் மா
பத் திணிதோளார். 45

ஒற்றைத் தவளக் குடப்பணில மொலிப்ப வுரிவாய் முரசதிர
வெற்றி முழவந் தவில்காளம் வேலை முழக்கைக் கடந்தார்ப்பச்
சுற்றுங் குயவன் றிகிரியெனத் தோன்றுந் துரங்கச் சாரிதனிற்
கொற்ற வயவர் வாளெழிலி கோட்டு மின்போற் சுழற்றினரால்.

பதித்த கோய்மை மதிழ்நாஞ்சிற் பணிசெய் யரிய லலங்கத்
தும், விதித்த பதணத் துச்சத்தும் விளங்கும் படிசெய் கொத்
தளத்துங், கதத்தின் மருவார் வந்தெதிர்த்துக் கணைவே லாழி
குணில்பிறவு, முதித்த கதிரோன் சுடர்வாளு முலகு மறைய
வந்தனரால். 47

ஊழிக் கனலுஞ் சுழல்வளியு முடன்றுங் கெதிர்த்த தெனத்
திரண்ட, பாழித் தடந்தோட் டோழர்களும் படைகொண் டடர்
ந்த வெஹூதிகளு, மாழிக் கடலேழ் முழக்கவிய வடுக்க லெட்டு
முடிகுலுங்கச், சூழிப் புகர்மா வெட்டுசெவித் துளைக ளடைப்
பப் பொருதார்த்தார். 48

உதைய முதலா யித்தகையி னொருவர்க் கொருவர் விளைத்துவினை, சிதையா திளைக்கா ரலசிதடற் சென்று குளித்தா னபூபக்கர், கதிருக் கறையு மிலங்கிலைவேற் சைவா னுமவர் புடைசூழ, முதிரு மறைநா நபிபதத்தின் வந்து முடிதாழ்ந் திருந்தனரால்.

மறுகா னருமே றெனமுழங்கும் வயமா வுமறு கத்தாபைப், பெறுகாஸ் மதிபோற் குழைத்தசிலை பிறங்கு தடந்தோளினர்சூழ, வுறுகா வலவர் புகழ்ந்தேத்து முண்மை யிறசூல் வெற்றிஜான், றறுகா தளித்து விடைகொடுத்தார் சென்றார் தரங்கத் திரைகடுப்ப. 50

நாலு திசையுந் தளநடத்தி நாளும் பதலை முரசொலிப்ப, வேலுங் குணிலுஞ் சக்கரமும் வெய்ய சிலைநாண் டொடுத்தமுரட், கோலு மழைவின் குடிபோகக் கொளுந்துஞ் சினத்தீ விழித்துணையிற், காலும் படிக்கு நனிவிடுத்தார் கொண்டா ரிலைவன் கனமதிலே. 51

அடையார் கொடியோர் நெடிகொள்ளு மயில்வேல் வலீன்ன் தபூபக்க, ருடைவா னுமறும் போய்ப்பொருது முறங்காத் திரைநீர் மொண்டுபுயல், கடைமா மணியிற் செய்குடுமி பொழியு நெடிய கனமதிளும், படையா திருந்தோந் தலைநோவு நம்பாற் படருற் றிருப்பதென்றார். 52

இரவு கடந்தின் றுதயமதி னெமக்கு மிறைக்கு முவப்பகலா, வொருவ ருவரிங் கவர்கையினை முபர்த்த னொடியுங் கொடுத்தரண்மேற், பொருதற் கனுப்பி விப்போஞ்சென் புகுந்தே யளக்கு மதிளிரண்டுஞ், சாத மவர்கை வசமாளைச் சாரு மென்ன நபியுரைத்தார். 53

பிறந்த மொழியை யசுகாபி மார்கள் கேட்டுப் பிரியமுற்று, மறந்தும் பொய்மை கனவிலும் வாக்கி லணுகா துரைதவறு, திறந்த விருணீக் குதயமதி லெவர்தாங் கொல்லோ முனைநடங்கிச், சிறந்த கொடியைக் கையேற்போ ரென்று சிந்தை தனினினைந்தே. 54

அரிய மறைநான் முதருகுரவ ரண்டார்க் குரியே றெனக்கலிபைப், பரிகள் கடவிப் போர்முடித்த பாழிப் புயத்த ரரசர்குலத், தரியர் முதலா யிருவுதவி லொழிந்து தத்தங் கரமேந்தி, விரி

வெண் கொடியை யெனக்கெனக்கென் றிரந்தார்மேலோன் றனை
வியந்தே. 55

நிலங்கொண் டிருந்த திறத்தலைவே னிருபர் பலருந் தங்
கள் படைக், கலங்கொண் டொளிருஞ் செழுங்கரத்தி லளிப்பா
ரெனவே காமுற்று, வலங்கொண் டெழுவான் பருதிதனை மகள்
கயன் விழிப்ப வரவெழுந்து, பலன்கொண் டெழுந்த நபியிறசூல்
பாதாம் புயத்தின் வந்தனரால். 56

பிணம்வாய் மடுத்துக் கிடந்தொளிருங் குடிமி நெடுவே லா
சர்முகம், பணம்வாய்க் கிடந்த பாரேழோர் தோளிற் பரிக்கு நபி
நோக்கிக், குணவா னுருமி னதிர்த்ததனுக் குழைந்துக் கோல்
விட் டடையாரு, முணவாய்ப் பருந்துக் கிரையூட்டு மொள்வா
ளலியெங் கெனக்கேட்டார். 57

தழைக்கு மலர்க்கண் ணேறுவுடனே தான மலையின் வெண்
பிறையைக், குழைக்குந் தவள மருப்பொசித்த கொடுவெம் புலி
யா மலிமுகிலா, விழைக்கு நெடுவெண் கூடாரத் திடைவந் திரு
ந்தா ரெனவுரைத்தா, ருழைக்குப் பிணையின் றவரழைத்து வம்மி
னென்று சொற்றார்சென்றார். 58

அண்டார்க் கரியே யடலரசே யடுக்குங் கம்பங் கழைசுளி
த்து, வண்டார் கவுளின் மதச்சாரல் வாரி யிறைக்குங் கைமலை
யே, யொண்டா ரலியே யுமைக்கூட்டி யொல்லை வருதற் கெமை
விடுத்தார், விண்டார் தோண்முரிந் திரைசேர் வேத நபியுல் லா
வென்றார். 59

கேட்ட போழ்தின் மணிதுயிற்றுங் கிரீடத் தலியா ரிருதோ
ளிற், ஜோட்டு மரபத் தொடைபுரளச் சுடருந் தால்பு காறெனும்
வாட், பூட்டி மயிர்க்கால் புளகெறியப் புலிபோ னடந்து புன்கு
பிரை, வாட்டு மிறசூல் மலர்ப்பதத்தின் வந்து பணிந்து சலா
முரைத்தார். 60

வந்த வேங்கை யலியிருகண் வலியோ ளுகலந் தேத்துளியித்
ஒந்து மமுத வாயினினீர் தெறிப்ப வுமிழ்ந்தா ரக்கணத்தின்
முந்த விருந்த நோய்கன்று மூளரி மலரின் வரிகள்பரந்
திந்தவுலகிற் ஜெகமட்டுங் கண்டோறு வின்றி யிருந்தனரால். 61

பகையார் கலியைச் சுவற்றுபுலி யலியார் பதுமத் திருக்கரத்திற், றகையார் வெற்றிக் கொடியளித்துத் தானை பலவு மிகக்கூட்டி, நகையார் மணிப்பொற் புரிசையின்மே னடக்கப் பசிய மயிலுருவாய்த், திகைநான் கிலும்பேர் தனிவிளங்குஞ் சைய திறசூல் விடைகொடுத்தார். 62

முதிரும் பிரபை கிடந்தொளிர்செம் மணிகள் மொய்த்த துலைச்சோடும், பிதிருங் கிரணக் கஞ்சுகியும் பிறங்கு நெடிய காளகமு, மதிருங் கழலுஞ் சிரமேனி யரைதா ளுவமை யணியணியாய்க், கதிரு மதியு மூர்கோளுங் கணமுந் திரண்ட தெனவணிந்தார். 63

ஓடாப் பகைக்கார்க் கடலோட வுடைக்குந் துல்பு காறிறனும், வாடார்க் கச்சின் விசித்தொளிரு மருங்கி னிருத்தி வட்டமருப், பாடாண் டிருக்குங் கேடகத்தைக் கவசம் பழகா தெக்காறுநந், சேடார் முதுகி னுலவுமதி சிறந்தாங் கிருந்த தெனவணிந்தார். 64

வானிற் றிகழிந் திரசாப மலையிற் படிந்த தெனத்தோளின்
றூனத் தமையிற் புரிகாணைத் தள்ளி யுதைந்து புலால்கமழுஞ்
சோனைப் பகழி யுறையாவந் துதிக்கை நீக்கி வெண்ணிடத்தி
லானைப் பகடு தைவந்த தென்னச் செறித்தா ரசைந்தொளிர. 65

எரிவாய் மடுத்துக் கொலைபழகி யிலங்குஞ் சுடர்வேல் வலனேந்தி, யரிகா லுழக்க முறுக்கவிழ்ந்து றருட்ட மொழுகு மலர்மரபம், புரிவா ரிறுக்குங் குடமுழவு பொருவோ மென்ற வாயடிப்ப, விரிவா யின்னம் புலம்பல்கொள்ள வென்ற தடந்தோ ளெடுத்தணிந்தார். 66

முயலு மதியின் மறுவெனலாய் முசுவு முதுகூன் வலிமுகமாய், மயிலுஞ் சிறைகொள் பிணிமுகமாய் வண்டுங் கடைபட்டி[illegible]மல்லர், செயனுங் குற்றப் பட்டொதுங்கச் செல்லுங் கதியினுடன்வேகம், பயிலுந் துல்துல் மிசைவெற்பிற் பாயும் புலிபோலவியெழுந்தார். 67

ஈரம் புலராக் கவுட்சார விழைக்கு மலையின் மறமள்ள
ராரம் புரளும் புயங்கள்படைத் தரிபே றென்ன வார்ப்பரிப்ப
[illegible] சுவறக் கலிகுளம்பா னிலம்விட் டெறியும் பரிபிணித்த
[illegible] தொறுவு மினையபெருஞ் சேனை சூழப் பரியுகைத்தார்.

பேரி முரசு தடாரிபம்மை பீலி முழவு முருடுதக்கை
தூரி யந்த ணந்தருணி தூந்து மிதிண்டி மய்பதலை
தாரை கவுரி காளம்வெள் சங்க மிரலை கெண்டிசின்னம்
வாரி யிபங்கள் செவிடுபட மழையி னுருமே றெனமுழங்க. 69

விசும்பு சுமந்த வெண்கவிகைச் சோலை நிழற்பூங் கண்காட்ட, விசும்பு நுரைவெண் பாற்கடலி னலங்குங் கவரி கால்காட்ட, நசும்புந் துவச முயர்வானி னுண்டு டைக்குங் கைகாட்டப், பசும்பொற் பரிகளடங்காட்டப் படர்ந்தார் தெவ்வர் புறங்காட்ட. 70

மறலி வெருவிக் கண்புதைக்கும் வாளை நனைய மறமள்ளர், கறலி னிவரூர் நெடுங்கொடித்தேர் தோன்று முதலை பாயிவுனி, யெறிவெண் டிரைபல் வாக்கிபம்வான் முழங்கி யெழுந்த பேரோதை, யறையுங் கடலாம் பெருந்தானை யனர்த்த னொளிய நடந்த தன்றே. 71

வேலு மழுவுஞ் சக்கரமும் வெய்ய சிலையி னுறுதைக்குங், கோலுங் கதையுங் கப்பணமுங் குணிலுங் கணிச்சி யுடைவாளுங், காலும் வெகுளி யிமைதீய்க்குங் கதங்கொண் டடங்காத் திறன்மள்ளர், நாலு திசையும் பொரவேந்திச் சென்று ரொதிக்கு நாஞ்சிலின்மேல். 72

மகா மெறிவெண் டிரையேழும் வாரி யருந்திச் சூன்மேகஞ்
சிகர கிரியிற் பெருஞ்சோனை சொரிந்தா லன்ன செருவேட்டுப்
புகர மதமாப் பொருமுழவர் புரிநாண் முறுக்கிக் களம்பூட்டி
நிகரில்சிலைகால்வளைத்துமுரட் பகழிதொடுத்தார்செருப்புகுப்ப.

ககன மளக்க வளர்ந்தமதிற் காக்கு மரையன் மறுகவென்போ, னிகனந் திறலி ரபிதாலீ பினிய தவத்தால் வந்ததிரு, மகனம் பிடைகொண் டரண்பிடிக்க வந்தான் வாரிப் புறத்திலிற்றைப், பகலிற் கதவந் திறந்துபொரப் படைகொண் டெழுமி னெழுமினென்றான். 74

கூற்றும் வெருவி யளந்திடுக்கங் கொள்ள வயவர் வடவையென்ன, மாற்று மழற்கட் கடைசேப்ப மலையின் வளர்ந்த புயம்புடைத்துக், கீற்றுப் பிறையின் வளைத்தசிலை யிளக்கு மிரத்தக் கணைவிடங்க, மற்றுங் கதிர்வா ளெடுத்தேந்திச் சிங்க வேற்றின் மொய்த்தெழுந்தார். 75

ஆதர் குலத்து மறுகவெனுந் தோன்றல் சிரத்தின் மணிக்குயிற்று, மாதர் மவுலி யிளம்பருதி வந்தாங் கிருந்த தெனச்சேர்த்தித், தாது மலர்த்தேன் வடிந்தொழுகுந் தண்டார் மலைபோற் புயத்தணிந்து, வேத வலயை மறித்துப்போர் வெள்வாள் சிலைவெங் கணைகொண்டான். 76

சேனைத் தலைவ ரச்சுவத்துந் தேரின் புறத்துஞ் சிவிகையினு
மானைப் பகடு மதமீறி யடிக்குங் கம்ப முறித்தெருத்தத்
தேனைப் பாகை நிலம்வீழ்த்தி யெற்றி நடந்த தெனச்சூழ
மோனை முழவு தவில்பேரி முழங்கக் கோட்டை வாயில்வந்தான்.

வளைந்த மதின்மே லலிகணைவெம் மழைபோ லிறைக்கும் போழ்துகடை, தளைந்த கதவந் தனைத்திறந்து மறுக வென்றுந் தகைவீரன், விளைந்த சீற்றத் தீயிமையைத் தீய்ப்ப விழித்துப் புயம் புடைத்துக், கிளர்ந்த வயவர் தற்சூழ வெழுந்தான் பாயுங் கேசரிபோல். 78

மாவின் மிசையி னரிநிகர்ப்ப வந்தோ னலியார் முகநோக்கிப், பூவி லுனது திருநாமம் புகலா யென்ற போது சொல்வார், சாலி லொருவன் றன்னருளாற் றருமென் றுமை யலியென்றார், மேவுஞ் சொற்குப் பயன்பார்த்து மிகவு முயர்ந்தோ னெனத் தேர்ந்தான். 79

இந்த நாமங் கேட்டபொழு தெற்கு விறலென் றூர்ப்பரித்துச், சந்தப் புயம்பூ ரித்தோங்கத் தன்னைப் புகழ்ந்து வாக்கிரமித், தந்தும் விருது பலகூற வொன்னா ருயிரை ரணகளத்திற், சிந்தும் புலியென் றெற்கு முன்னோன் செய்த பெயரென் றலியுரைத்தார். 80

இருவர் வீரோத்த பராக்கிரம மிகவித் தத்தஞ் சொலும் போதி, னொருமா டொட்டை நிரைமுன்ன மோங்குங் காவ வெனுந்தலத்திற், றிரைபோல் மீட்ட சல்மாவைப் பயந்த சீர்த்தி யமீறென்போர், வரைமீ தெழுந்த சியமென வந்தங் கெதிர்த்தார் மறுகவுமுன். 81

குன்ற வளிபோற் பரிநடவிச் சுடர்வாள் விதிர்த்து வெய்யலடி, வேற லிருகட் கடைசிவப்ப வெறிந்தா ரமீறு கிடுகினெற்றி, மீறி யவன்கைத் துவணியினால் வீசக் கதையிற் றடுத்துமிகச், செறிவேல்கொண் டோக்கிவிட்டார் செருவின் மறலிசிரந்துணுக்க.

விடுத்த வேலைச் சில்லவலித்து வெய்ய கணையா லறவீழ்த்தி
யடுத்தான் குபவன் மட்டிகிரி யன்ன விவுளி சாரிசுற்றி
யெடுத்த புகழா ரமீறென்போ ரிட்ட கடகக் கைவாளாற்
கடுத்த மனத்தன் றலையிலக்காய்க் கடவச்சுவட்டிற் பட்டுதைத்த.

அதைத்துப் பரிப்பட் டெழுந்தவொள்வா ளமீறு தலையிற்
றுக்கவுடல், பதைத்துச் சோர்ந்து மணிச்சுவனப் பதியிலடைந்
தா ரன்னதுகண், டிதத்த நபிகட் கரசாப விதனுல் மருக ரலிவே
குண்டு,கதுத்த மடங்க லெனச்சீறிக் கவினப் பரிகொண் டடர்ந்
தெதித்தார். 84

காற்றும் வடவா முகமிரண்டுங் கடைநா ளெதிர்ந்ததெனவ
முலை, யூற்றும் வீழிகள் செந்தழலி னுடன்று சுடர்வா ளயிலோச்
சிக், கூற்றும் வெருவத் திசையானை கூச வெறிந்தா னயிலத
னைத், தோற்று மழைபோற் சரந்தொடுத்துத் துணித்தா ரகல்வா
ன் சுடர்மறைய. 85

அண்டார்க் கரிகே ரலிகரவா ளதிர்த்து வீச வவன்கரத்திற்
றண்டாற் றுங்கி மறுத்தோங்கித் தாரைநுனைவா னாலெறிந்தான்
வண்டார்க் கரிய கேடகத்தான் மறித்துத் தாங்க விருபிளவாய்த்
துண்டாய் வீழ்ந்த வதுகண்டு சூறை வளியிற் பரியுகைத்தார்.

கோரக் கவனத் தால்துலுமேற் கொண்ட புலியா மலியுல்
லா, சாரற் சோனை யெனப்புலவு கரித்த குதைவெம் முரட் பக
ழி, வோற் சிலைகால் கொளவளைத்து விசையின் விடுத்துத் தெவ்
வருடல், பாரிற் றணித்துள் ளுயிர்போக்கிப் பருந்து கழுகுக்
கிரையளித்தார். 87

மாட்டி னெதிர்ந்த வொன்னலரை வாளா லெறிந்து பரியு
கைத்துக், கோட்டை வாயி லிடுங்கதவங் கொண்டு கரிய கேடக
மாய்ப்,பூட்டிக் கரத்தி னெடுத்தேந்திப் புலிபோ லெதிர்ந்து மறு
கவென்ன, நாட்டும் பெயரான் றலைவீழ வெறிந்தார் வாளா னர
கடைந்தான். 88

ஊழி துறைவா னுயிரிழந்தா னென்னும் வசன முயிர்த்து
ணையாம், வேழ மனைய வாசிறெனும் வேந்தன் செவியிற் கேளா
முன்,றுழுந் தரள வடமசையத் தடந்தோள் புடைத்துப் படை
யேந்திச், சூழுஞ் சலாலத் தெனும்பரணிற் றொடுத்த கதவந் திறந்
தெழுந்தான். 89

குரத்தா னேமி யகடுடையக் குழிக்குங் கவனப் பரிமள்ளர்
சரத்தா வம்பில் வேல்வாளுந், தாங்கிப் புடையி னெருங்கிவர,
வரத்தா லுயர்ந்த வலிமாட்டின் வாரா முன்னம் வரிப்புலிபோ,
லாரத்தாற் றுக்குஞ் சுடையிறெனு மூரவ ரெதிர்ந்து மறித்து
டன்றார். 90

எக்கு மக்டுந் தாங்குரமு மிருகட் கடையில் வடவையனல்
கக்கும் பகுவாய் மடங்கலெல்லுங் காளி சுபையி றசுகாமி
மிக்க கரியின் பேரின்மதின் வேக வாளி புகுந்ததெனப்
புக்கிக் கொடிய வாசிறுடல் பொடிக்கக்குழைவெம்பரிவிடுத்தார்.

தறைபிட் டெறியுங் கரடகடத் தடக்கை நால்வி யாஙெறெ
ன்போன், கறைபட் டொளிருங் கதிர்வாளா லெறிந்தான் கதை
யாற் றுங்கிறை, பொறைபட் டெழுந்த குணக்குன்ற மன்னோர்
றீப் புயமிரண்டு, மறுபட் டிடவாட் கொடுதுணித்தா ரவிந்தா
ளுவி யழல்புகவே. 92

அக்ல்வா னளக்க வுயர்ந்தெழுந்த மதிநேக் கரைய ரிருவர்
விழ, விகனும் புரிதற் காசிஙெபென் றெண்ணி யிரண்டு நாஞ்சி
லாற்றோர், புகல்வே றிடங்க ளரிதெனவுட் புழுங்கி யஞ்சிக் கவுற்
கேட்டார், பகல்போ லெழுந்த நபியிறசூல் பரிவோ டவர்க்குக்
கவுற் கொடுத்தார். 63

கல்குங் கவுலின் படியொழுகி நாஞ்சி லிரண்டின் மறமகலா,
மல்கு மாக்க டிரண்டெழுந்து மறுநா டடைந்தா ரவனுறை
ந்த, வொல்குந் துவச நிவர்ந்தகல்வா னுலவு மணிமா டங்கடோ
று, மல்க லிலாத பல்பொருளுங் கவர்ந்தா ரறத்துக்குரியோரே.

ஆசி றிறப்ப மறுகபெனு மரசு மிறப்ப மாந்த ரெல்லா, மா
கின் மணியிற் செய்தமைத்த வாரி யிரண்டும் விட்டிழந்து, பூச
லகற்றிக் கவுற்படிக்குப் போந்தா ரென்னு மொழிபலகேட், டே
கின் பதக்குக் கெடித்தலத்தா ரினிய கவுற்கொண் டெழுந்த
கன்றார். 95

கொம்மை யரண மோரா றுங் கொண்டே மென்னு மானத்தம்
விம்மி யிறசூல் நபியுல்லா விற்றுண் டிருக்கு மேல்லைதனிற்
செம்மை பயிக்கு முன்னுதித்த சியமனைய சகுபறவர்
தம்மைச் சார்ந்தோர் சிலருடனே சார்ந்தார் கபகி நாட்டிருந்தே.

வலனோர் தயில்வேற் சகுபறவன் வந்தா ரெனுஞ்சொற் கேட்டருள்சேர்ந், திலகும் புகழார் நயினாரு மெழுந்து கமலத் திருத்தாளா, னிலவு நடந்து விரைந்தெதிர்போய் நேமி வலியத் தனைத்தாங்குங், கலைவ நாந்தப் புயத்தணைத்துக் கட்டித் தழுவி மனமகிழ்ந்தார். 97

அறத்தா ரெழுகுஞ் சகுபறிவ னடைந்த மகிழ்வு மகழி யுடை, நிறத்தா ரெயில்கைக் கொண்டதுவு நிகழ்த்தற் கரிய சோதியவன், புறத்தா யிரண்டு பெருங்களிப்பும் பெற்றோ மிற் றைப் போதென்னாத், திறத்தாற் குபிரா வலிகெடுக்குஞ் சைய திறகுல் மகிழ்ந்துரைத்தார். 98

தலத்தார் கோவிற் றனத்தார் தம்மை யழைத்துச் செந் தென்முத, னிலத்தார் வல்ல பயிரெனைக்கு நெறிசேர் வார மின் னதெனை, நலத்தா ரினிய கவுலோலை யளித்தா ரதற்குப் பின்றா ன்கு, குலத்தார் புகழூத் தோழர்முகன் கோமா னயிபார்த் தரு ளுவரால். 99

கொள்ளை யெடுத்த பலபொருளுங் கொண்டு வருதி. ரென ச்சற்றுங், கள்ள மனுகா நன்மனத்தர் கடிதி னேகி நிரைமணி பொன், னுள்ள சுமையுஞ் சிறைபிறவு மொன்றுஞ் சிதகா மற் கொணர்ந்து, வள்ள லிறகுல் நயிபாதம் வைத்தார் வான்றோய் மலைபொருவ. 100

வைத்த பொருளி னேர்பாதி யயித்தன் மானுக் கெனநீக்கிக்
கைத்த மணியுஞ் சிறைநிரையுங் கலந்த மற்றோர் பாதிதனின்
மொய்த்த கவனப் பரிவயவர்க் களித்தார் மூன்று பங்கதனை
நெய்த்த கதிர்வாட் காலாட்கோர் பங்கு கொடுத்தார் நிரந்தரமே

தறுகட் ணுல்வாய்ப் புகர்முகத்துத் தடக்கை மலைநேர் சகுப னுக்கு, மறுதி சறுகா தவருடனே யடைந்தோர் தமக்கு மன்ன பங்கு, பெறுதி ரெனவே நிரந்தரமாய்ப் பெய்தார் பெற்ற பொ ருளதனுன், மீறுகுங் கவன மின்றியசு காயிமார்கள் மனமகிழ் ந்தார். 102

குடுமி நெடுவேல் வலனோந்துங் கோமா னயிபா ரப்போரிற்
இடுகாய்ச்சமுற்றுமெயிற்கதவ முரத்தினொன்மார்பினர்த்தெடுப்பக்
கடுகி னளவு மசையாத கனத்தான் மிகுதி யற்புதமாய்
நடுவு பிறழா வலிதயக்கு நாய னளித்த வலியிதென்றார். 103

வெங்கண் மகரப் பகடுழக்கி வெடிபோய் மதகி னிடையுற
ங்குச், சங்க முழங்கித் தாலாட்டுந் தடஞ்சூழ் பதக்குக் கொடித்
தலத்தைப், பங்க மகற்றும் பண்ணையெனப் படுத்திக் கோட்டை
யைந்தினுக்கு, மங்குல் கவித்தோர் தோழர்தமை வைத்தா ரர
சாய்ப் புரக்கவென்றே. 104

மதுமதியரைவென் றரசுபுரிந்தபடலம் முற்றிற்று.

ஆக படலம் 13-க்கு திருவிருத்தம் 411.

பருதியை

அழைப்பித்தபடலம்.

தாது மலர்த்தேன் றளித்தோங்குந் தடங்காக் கைபர்ப்
பதிதனைக்கொண், டோதும் புகழார் தோழருட னுறைந்தாங்
கொருமுத் தினமிருக்கும், போது சுலலா மெனுமெகுதிப் பொ
ருப்புக் கிழித்த தோளணையின், மீது பொருந்து மானனகண்
வெய்ய செயினம் பெனுமடவாள். 1

மறியொன் றறுத்து முன்னங்காற் றதியின் விடத்தை வை
த்தநெய்யின், முறுகப் பொரித்துப் பாலிகையின் வைத்து மூ
டிக் கரத்தேந்தி, யறிவு பலவுங் காட்டுமறை யருமை திறசூல் நபி
முன்வைத்தா, ளறிய கருணை கீன்றயில்வா னுடும் பொழுதா
னுரைத்ததன்றே. 2

நல்லாக பஞ்சேர் திறக்கமனே நாப்பண் சுடரே புலிக்கரசே
சுல்லா மென்ப வண்மணந்த தோகை செயினம் பவளும்மைக்
கொல்லா மென்ன வுளக்குறிப்பிற் கொண்டு கரிய விடமதனைப்,
பல்லா கிரியி னுடல்சேர்த்துப் படைத்தா ளென்றன் பாலென்றே.

மயில்வே டக்தோ ரசகாபி மார்கள் வதனும் புயநோக்கி,
யயில்வான் கிழித்த கருணைசொற்ற வதிந மவர்கட் கறிவித்துக்,
குயின்மா றுரைக்குங் குதலைமொழிக் கொடிய செயினம் பவட
னையாம், பயிலு மிவணிற் கொணர்திரெனப் பகர்ந்தார் சென்று
கூட்டி வந்தார். 4

கொடியான் முகத்தை யுலகும்வின்னுங் கொள்ளும் புக
ழார் நபிநோக்கித், தடியீ திருண்ட விடமொட்டித் தக்கா யெயக்
கே னெனவினவ, வடியாள் செய்த தெமர்கடமை யாவியகல்
வான் புகழ்செய்த, படியா லுமையுங் கோறல்செய்யப் படைத்
தே னுனின் வாலென்றாள். 5

புலித்தோள் பறிக்கு மன்னரெனிற் பொன்றி யிறப்பர் சாத
மறை, நபியே யாறு லொருதீங்கு நன்றா தென்னும் பயநோக்,
குவியா திழைத்தே னெனமருட்டிக் கூற வெகுளி கெடுத்து
வந்து, செவியார் மறையி னபியிறசூல் செல்லன் றவளைத் தூர
த்திவிட்டார். 6

சிறியார் செய்த தீவினையைப் பொறுப்பார் பெரியோ ரெ
னும்பான்மை, யறிபா தவர்கட் கறிவிக்கு மரிய புறுகான் மறைக்
குருசில், வெறியார் மரபத் தொடைத்தடந்தோள் விம்ம வயமா
விளங்கவொன, மறவா ருழுவர் புடைநெருங்க வாவும் பரியின்
மிசைக்கொண்டார். 7

தவளப் பணிலங் குடமுழவு தடாரி பேரி பல்லியங்கள்,
பவளக் கடலிற் கலித்தொலிப்பப் பதாகை தனிவெண் குடை
நெருங்கக், கவளக் களிறு பொரும்வீரர் கலினப் பரிகள் முன்
னடப்பக், குவளப் புரிய புகழிறசூல் குலவு மதினப் பதிக்கெ
ழுந்தார். 8

தானை சாத ரங்கமுடன் நடமும் பணையு மலர்பொதுளுங்
கானுங் கடந்து வரும்போதிற் கதிரோ னடையுங் குடபாலி
லான வாதிற் குறுவென்னு மந்தத் தலத்தோர் கனமதியைத் (ல்.
தீநேர்கதங்கொண்டிலக்கைகட்டித்திறத்தோடேறிப்பிடித்தனரா

குடவால் வளையூர் தடவாதிற் குறுவென் றோது மத்தலத்திற்
கடமா வனைய திறல்வயவர் கவர்ந்த நிதியு மணிபிறவு
மடமேலிளஞ்சோகங்கண்மிசை யடுக்குஞ்சடங்கத்தெடுத்தேற்றி
விடலானனத்தன்கண்பிறங்க வெம்போர்க்கவனப் பரிவிடுத்தார்

எழுந்த பூழ்தி கார்முகிலி னொங்கும் படரத் தளநடத்திச், செழுந்தண் சோலைச் சுத்தென்னுந் தலஞ்சென் றவணிற் கூடா ரங், கொழுந்து படர்ந்த நிலாக்குலம்போற் கோட்டி யுறைந்தார் தனிமுதலோன், மொழிந்த வாயத் தொன்றமரர் கோன்கொண் டிறசூல் முன்னர்வந்தார். 11

ஆயத் தின்ப வசனத்தா லலியார் மடியிற் சிரஞ்சேர்த்திக், காயத் தளவு கொளும்படங்கின் கண்பே ரின்ப மயக்கத்தான், ஞாயத் துக்கோர் தராசென்னு நபிதன் ளளர்ந்தா ரசறுகுத் துத், தேயக் கதிரா யிரஞ்சுருக்கிச் சென்றான் குடபால் வெய் யோனே. 12

உறங்கி விழித்துத் துல்புக்கா றுடைவா ளலியார் மலர்வத னம், பிறங்குந் தாரா கணஞ்சிரசிற் பெற்றோர் நோக்க வாடுதல் கண், டறந்த ணிறையுந் திருவுளத்தீ ரனுரே தென்ன வசறினொ ருத், திறந்த தென்னச் சொற்றனர்கேட் டிறசூல் குடபா றனைப் பார்த்தார். 13

கதிரா யிரமுந் தனிசுருக்கிக் கனக வாழித் தேர்செலுத்தி, யதிரார் திரைவெண் புணரிகட் டமர்ந்த வலரி பதறியுடன், முதிர்வான் சிவப்புக் கொளச்சுழன்று முன்போ னெறியிற் பின்பெ யூர்ந்து, குதிகொள் கவனப் பரிரதத்தின் வந்தான் குடபால் வெய்யோனே. 14

எழுந்த தபன னசறுகுத்தி லென்று நிலைத்த கதிர்விள க்கு, வழுந்துந் தொழுகை யதாவாக நபியு மலியுஞ் சுஜூதுதனில், விழுந்து தரையி னெற்றிபட மேலோன் றன்னைப் பரவியபின், கொழுந்து படர்ந்த கதிரோனைக் குடபா லடைய விடைகொ டுத்தார். 15

ஒற்றைத் திகிரித் தேர்பிணித்த வரத்த குரத்தாட் பசும்பரி யேழ், கற்றைக் கவரிக் கொய்யுளைநீள் களத்தின் மறியக் கான்ம டித்துப், பற்றி யிழுத்துச் செலப்பழனப் பதுமங் குவிய வுயர் வானிற், செற்றை வருங்கார்க் கடல்குளிப்பச் சென்றான் செங் கேழ்க் கதிரோனே. 16

பருதியை அழைப்பித்தபடல முற்றிற்று.

ஆக படலம் 14 க்கு திருவிருத்தம் 427.

36

சபியா நாச்சியார்

மணம்புரிபடலம்.

காண வரிய பொருண்மறைநூல் கற்று முதியோர் துறவோர்க
ளியாணர் மணிமா மருகேட ரிறைஞ்ச விறசூல் நபியுல்லா
தாஹு வனைய மதிற்கமுகிற் றகைசேர் கிலாஸ்முன் பிடித்துவந்த
வேளு நிகர்தோட் சபியாவை வேட்டு மணமே புரிவினைந்தார். 1

தகைசேர் முதிய ஆபூத்தல்கா வென்னுஞ் சான்றோர் தமது
திரு, நகைமா மணிப்பூண் டோள்சேர்ந்த நங்கை யும்மு சுலையு
மெனுஞ், சிகைமா மயிலை வரவழைத்துத் தெரிவை சபியா
தமையிலங்கும், வகையால் வண்மை வரிசைசெய்து கூட்டி வா
வென் றுரைத்தனரால். 2

ஈரெண் கலையுங் கதிகமிழ்த்து மிருத்தி முயல்வெங் களங்கற
றிப், பாரி னிழிந்து பனிமதியம் பகலோ னுகைப்பம் வருமளவும்,
வீர கண்டா மணிப்பாத மெல்ல வருடத் துயில்புரிந்தோர்,
சோர்வொன் றணுகா துரைத்தபடி யெழுந்தா ரும்மு சுலையு
மன்றே. 3

சிந்து மமுதக் குதலைமொழித் தெரிவை யும்மு சுலையுமவர்
சந்து முடிக்கக் கருங்குழலிற் றுமை முடித்துத் துகிலுடுத்துக்
கந்த மலர்ப்பூங் குழுகுதனிற் கனக மணிப்பூண் கலன்பூட்டி
யிந்து நுதலிற் சிந்துரமிட் டிலங்குந் தொடிபோற் கரஞ்சேர்த்தி.

துவரிற் கனிந்த விதழ்மணிப்பற் றோகை சபியா நாச்சிய
ர்க்கு, நவரத் தினக்காற் கவின்பூணு நறுமென் மலரும் பொற்
றாசு, மெவரும் வியப்பட் டிடவறியா விலங்குந் தொடியு மினமத்
துறுகண், கவரும் பிரபை வெயில்காட்டக் கரத்தி னேந்தி நட
ந்துசென்றார். 5

ஒளிருங் கறைவே லுமைதவத்தா னுதவு மமுதப் பாற்கட
லின், மிளிரு மணியாஞ் சபியாவை மென்றா ரடுத்திக் கருங்குழ

லிற், றளிரு மலரு கனிவேய்ந்து தயங்கு மணிப்பொற் கலன்சூட்
டிக், குளிருங் கலவை திமிர்த்தமயிற் பெடைபோ — றுதுக்
கூட்டிவந்தார். 6

கூட்டி வந்து விடுத்தபிற்றாக் குலக்கொம் பனைய சபியாவைத்
தீட்டு முரிமை விட்டதே செய்யு மகராய் மணமுடித்து
நாட்டும் புகழார் கபியிறசூல் நங்கை வதனும் புயநோக்கி
யேட்டுக் கமலக் கனிநெருபாற் பசந்த தழும்பீ தேதென்றார்.

அமரர்க் கரசே புவிக்கரசே யடியாள் சொல்லும் விண்ணப்ப
மெமர் தாய்தந்தை கனவென் பவனுக்கின்பத் துணைவியெனத்
திமிரம் பருகுங் கதிர்ச்சுடரிற் றிகழும் பணிபொற் றாசுடுத்தி
யிமிரு மறுகா லுழுமாலை யிட்டுமுடித்த விரவினன்றே. 8

வானி னெழுந்த வெண்மதியென் மடிமீ திருந்து விளை
யாட, யானோர் கனவு கண்டுகனு னவென் பவனுக் கெடுத்துரைத்
தேன், றேனோர் மறையோர் முன்றுணர்ந்து தேர்ந்த வெகுதிப் பா
திரிமா, ரானோ ரிடத்திற் சென்றுரைத்தா னதற்குப் பயன்றேர்ந்
தவர்மொழிந்தார். 9

நிரைத்தநிலாவெண் மணித்தசும்பி னீர்காண்மெழுக வுவாமதியந்
தரித்த சுருங்கை தனிலுரிஞ்சித் தவழு மாட மதீனவிற்
சரைத்த மதமர் மன்னர்முடி கவிழ்த்த பதத்தார் நபிமருமூ
நிரைத்து வரிவண் டிறங்குமலர் மாலையிடுவ ரவட்கென்றார். 10

சொற்ற கனவின் பயன்கேட்டுத் துணைக்கண் சேந்து முகநோக்கின், கற்ற மறைதேர் முகம்மதுமேற காமுற் றதனு விக்கனவின், முற்ற திருகொ லெனப்புடைத்த தழும்பீ துடனே பவனை வெறுத், திற்றை வரைக்கு முணைநாடி யிருந்தே னின்று முடிந்ததென்றார். 11

பூத்த மலர்ப்பைந் தார்தரித்த மறுநா ளரிய பொக்கிசத்தைத்
காத்த முதியோர் தமையழைத்துக் கனக பயித்த மாலதற்கு, நீத்த பொருள்க ளெல்லாம னமக்குத் தனதா முனைவையும், பார்த்து வல்லை "கொணர்திரெனப்" பகர்ந்தா ரிறைதா திறகுலே. 12

இருந்த தண்டு லங்காய்கெய் யவையு மெடுத்து நபிதிரு முன், பொருந்தக் குவித்து ரூவைந்து செல்வர் பொசிக்கக் காணுமென்றார், மருந்து புரைய விவ்வளவும் அனைகயாய்ச் சமைத்துக் கொணர்மினிற்றை, விருந்து கொடுக்க வேணுமென்றார் விரைவிற் சமைத்து முன்னர்வைத்தார். 13

அடிசிலயில வசுகாபி யவர்க டம்மின் மணிமகுட
முடிக டரித்தோ ராயிரத்தென் னூறு முதியோர் தம்முடன்வா
னிடியே றனைய திறல்வயவ ரெண்ணி லவரை யுங்கூட்டித்
தடியைப் படியின் மின்னுக்குந் தக்கோ ரமுத விருந்தளித்தார்.

றென்னற் போதி னபியிறசூ னெறியான் மணந்த கருங்கூந்தற், கன்னன் மொழியார் பிராட்டிகொல்லோ காதற் சுரியத்தினங்கொல்லோ, வின்ன வகையென் றறியாம லியாரு மளப்பிற் றெரிகாலே, மன்னும் படாம்போர்த் துன்னிமிசை வைத்தார் பிராட்டி யெனவறிந்தார். 15

அரசர் குவிந்து திறையளக்கு மருமை திறசூல் நபிவாகை, முரசு முழங்கப் பரித்திரள்கண் முன்னீர்த் திரைபோற் சூழ்ந்து வரப், பரசு வயவர் புடைநெருங்கப் பதாகை கவிகை விசும்போங்கப், புரசைக் களிறு போனடந்து போந்தோர் தலத்தி னிறங்கினரால். 16

சபியாநாச்சியார் மணம்புரிபடலம் முற்றிற்று.

ஆக படலம் 15-க்கு திருவிருத்தம்-443.

கொடுஞ்சுரத்தில்

தாகந்தீர்த்தபடலம்.

தோட்டுக் கமல மலர்கூம்பத் துணைத்தாட் சிறைப்புள் ளிரைமறந்து, கோட்டுத் தருவு மடிவயலுங் குலவி யடைந்து துயில் புரிய, நீட்டுங் கதிர்க்கா லாயிரமுஞ் சுருக்கி நிலவு மூரதர்நலம், வேட்டுக் குடபான் மகட்புணர வெய்யோன் புகுந்தான் கடல கட்டின். 1

செங்கோல் வேந்தர் நிலத்திறப்பத் தேரூக் குறும்பர் நிலம் புரந்து, தங்கோ ணடாத்துந் தகைமையெனத் தபன னிறப்ப விருள்வேந்தன், வெங்கோ னடத்திப் படிபுரக்கும் வேளை யவ ளைக் கோறலெண்ணிச், சங்கோ லக்கார்க் கடன்முகட்டி னெழுந் தான் கதிர்வாட் சசிவேந்தன். 2

காதற் கொழுநர் வரவிரும்புங் கன்னி மடவார் கண்விழி த்து, மாதர் முகநோக் குதல்போல வளருங் கலைவெண் மதியம் வரத், தாது மலர்த்தேன் றடவாவித் தையல் விழிகள் விழித் தனபோன், மோது மதுவா ரிளநீல முகிழ்த்த விதழ்ப்பூம் பொதி யவிழ்த்த. 3

இறைஞ்சுஞ் சுபுரு கலாவாகா திருந்து விழித்துக் கீர்த்தி யென, நிறைந்த மதிசேர் விலாலவளை நிறுத்தி கபியும் பிறரெவரு ஞ், சிறந்த விருகண் டுயின்றனர்கிழ்த் திசைவான் வெளுக்கு முன் னவர்க்கு, முறைந்த வமுத விழிக்கமலத் தோங்குந் துயில்வந் தூற்றதன்றே. 4

செருகுஞ் சுடர்ச்செங் கதிருதைய கிரி முகட்டின் மிசை யெழுந்தான், முருகும் புலவுக் கமழுயில்வான் முகம்ம திறகுல் நயினிழித்துப், பருகு மமுதீ மிறைநாவிற் பழகும் விலாலே யெழு ப்பியுள, முருகும் படிக்குத் தோழவொருத்தி னெழுப்பா தொழி ந்த தென்னினன்றூர். 5

ஏலநாறுங் கவுட்களிறு மிரும்புக் காசர் தாழ்ந்தகழற்
காலி னூறு தருமாசே கன்றுற் போது துயின்மறந்து
நாலி யாம முன்காத்தே னன்னுங்கிழக்கு வெளுக்கு முனஞ்
சால வெனக்குத் துயிலடுத்துத் தமியே னுறங்கி னேனென்றார்.

படங்கு குயிற்றி யீண்டிருகண் வளர்த்தல் பழுது விடவரவ
மொடுங்கு நிரையக் குழியூழு முழுது மிபுலி சவன்கலைவுக் (கொங்
கடங்குந்தலமென் றூர்மதிலை யழைத்தோ ருரைத்த சொற்படிக்
கிடங்கொ டலத்தி லன்றுமுத லெவரு முறைந்தங் கிருந்திலரால்.

மாய னிபுலீ சவன்கலைத்த வயின்விட் டெழுந்து மலர்வாவித்
தோய மெடுத்துப் பலருமுழுக் கொண்டுதொழுதார்மறையகலா
நேய வபுத்ர தாதாவோர் கூசா நிரம்பப் புனலெடுத்துத்
தூய நமிதம் பாலளித்தார் உலவு முடித்துக் கலாத்தொழுதார்.

மஞ்சு நிகர்த்த கொடையபுத்ர தாதா வதன மதிநோக்கி, விஞ்சு முழுச்செய் திருந்தபுனல் வெறிதிற் களையா தரும்பொருள்போற், கஞ்சக் கரத்திற் பத்திரமாய்க் கட்டி யெடுத்து வரு திரதிற், றஞ்சு நவங்கள் சிறிதுளவென் றுரைத்து நடந்தோர் சுரமடுத்தார். 9

வெள்ளை நிறத்த மஞ்சினங்கள் விரிந்த திரைநீர்க்கரத்தா, லள்ளி யெடுத்து நனிதேக்க வரிந்தி யகல்வான் மிசைப்படர்ந் தூங், குள்ளங் கறுத்துக் கிடந்தலறி யுடைந்து பலகண் ணீருகுத்துந், தள்ளிப்போத லச்சுரத்தின் றழலுக் கிடைந்து நடுங்கியம்மா. 10

ஊழி யனலூ யுருக்கிவடிக் குலையிட் டெரித்துப் பாகமைத்த, தாழி யனைய கொடுஞ்சுரத்தைச் சற்றே கண்டத் தானுமைய, வாழி யுருகித் தனித்தொன்று பங்கஞ் சிவந்து சுழன்றுபரி, யேழும் பசந்து வலவனுங்கா லிழந்து சுடரோன் கடல் வீழ்ந்தான். 11

உணங்கும் வயிற்றுப் பேய்களென வுயரா மலகங் கரங்கள் வெடித், தணங்கின் றரையில் வீழ்வனவா னடுவீழ்க் தெரியு மழலெனவு, மணங்கொண் டெழுந்த வர்வுமிழ்ந்த மணியைப் பற்று நெருப்பெனவுங், கணங்கொண் டெழுந்த வீழையினங்கா விடத்தா னஞ்சித் தாவுமால். 12

ஆகஞ் சுமந்த பூணூற் றாசர் பலரும் புனறவித்துத்
தேக முழுதுங் கரிந்தாவி சிதைவ தென்னப் பொருண்மறையின்
பாகை வடித்த நபியிறசூல் பாதாம் புயத்தில் வந்துரைத்தா
ரோகை யுடனே நீவிருண்பா னுதக மளிப்ப னொருவனென்றார்.

அருண மண்ணிக ளிளவெயில்கா லார வவுகு தாதாவைக்
கருணை மழையை யுபயவிழி காட்டு மிறசூல் நபிவிளித்துத்
தருணம் விளையு மெனப்புலரி தந்த வுதகங் கொணர்திரெனத்
திரண மளவுஞ் சிதைகாமற் றிருமுன் வைத்தார் புனற்கலசம்.

முன்னிற் கலசத் தறலதனை முகம்ம திறசூல் நபியெடுத்து, மன்னு மணிவள் ளந்தன்னின் வார்த்தங் கவுகு தாதாவை, தன்னிற் கொடுத்தா ரோவ்வொருவர் தமக்காக் கொடுமென் றன்ன படி, துன்னு மெவர்க்குங் கொடுத்துவந்தார் தூதர் வார்த்து வார்த்தளித்தார். 15

கொடுத்து வரும்போ தெண்ணிறந்த குழூஉக்க ளெமக்கீ யெமக்கெனப்போ, யடுத்துத் ததைந்த மைந்தரைப்பார்த் தறனுக்கெவரு மயக்கனம்போ, லெடுத்துக் கொடுக்கும் புனல் மிகுதி யிருப்ப தெவரு முண்மினென்ன, மடுத்துப் பெரிய வயிறார மன்ன ரருந்தி யயர்வொழிந்தார். 16

ஏற்றுப் பிறைவெண் மருப்புமுகங் கிளைக்குந் தடக்கை வாரணம்போற், றேற்றும் வயவ ரொருங்குபுன லுண்டு துயர்தீர்ந் திருந்தபின்னர், சேற்றுக் கமல முகவவுகு தாதா வென்னுந் திறல்வேந்தை, யூற்றும் புனனீ ருண்மினென வுரைத்தார் மலர்த்தா திறசூலே. 17

ஆரம் வீற்றுக் கிடந்தொளிரு மகன்மார் பவுகு தாதாபின்
னாரா நுகர்வேன் மறைக்குரிசி னபிநீர் முன்னர் நுகர்கவென்றார்
சாரும் விருந்து கொடுத்தவர்க டாம்பி னுகரத் தகுமெனமுன்
வி[illegible] வவுகு தாதாவு மிக்க புனலுண் டுளமகிழ்ந்தார். 18

அருக்க விலங்குஞ் சுடர்விளக்கா மருமம் திறசூல் நபியுமறல்
குடித்தார் பின்ன ரவணீங்கிக் கொண்ட றவழு மணிமாட
மடுத்த புரிசை மதீனநகர்க் கணித்தாய்வரும்போ தந்நெறிக்கண்
விடுத்துக்குபிரைய புகுறைறு வென்னும்வேந்தர் வந்துகண்டார்.

பருவக் கரவா மறைத்தடக்கைப் பண்ப ரபுகு றைறுவத்
தெரிவாய் மடுத்து வடித்தசுட ரிலவே யிறசூல் நபிகளிமா

விரிவா யுரைத்துத் தீவிலக்கு மிக்கோ ராணுர் முன்னவர்பே ருரிய வப்துற் றருமானென் றுரைக்கு நாமம் பெற்றாரே. 20

அறுதாட் சுரும்பிற் சுரும்பரிப்ப வசும்பும் பசுஞ்சா றுவட் டெடுத்துச், செறுவாய் வழியத் தவழ்முதிர்கு நிகழ்வெண் சங் கம் பிடர்செரிப, நெறியாற் படர்கொம் புறுக்க வைத்தா னீல வெருமைப் பகடிணக்கி, நறுவான் மரையுங் கடிந்துழுது நாற்று நடுவுந் தலமுங்கண்டார். 21

சுற்றைக் கவரிப் பசும்பாளைக் கழுத்து மிடைந்த குற்கமு கு, நெற்றிக் கதிர்த்த பழமுதிர்க்கு நெடிய வடைப்பூ மடற்றெ ங்கும், பெறற்கோட்டி னிடைதூங்கிப், பிறங்குங் குடக்காய் மு ட்பலவும், பற்று மெரிபோற் றளிர்மாவும் பலவுஞ் செறிகா வுங் கண்டார். 22

உடுத்த வகழித் திரைநீரை யுண்டு கனைந்து துளைக்கலதித், தடித்துக் ககன முகட்டகடு தடவு நெடுமா மலையிதெனப், படுத் துத் தரளத் துளியுமிந்திர கோபத் திரளும் படியில்விழ, வடித்த வெள்ளிக் கொடியின்மழை வழங்கு மதின்மா மதிலைக்கண்டார்.

தென்றற் குழவி தவழ்மாடந் திளைக்குங் கைபாய்ப் பதிகொ ண்டு, வென்று விளைத்தோர் கல்யாணம் விரும்பி முடித்து நபி யிறசூ, லின்று புரிசைப் புறத்துற்ற ரென்னு மாற்ற மதீனவிற், றுன்று மாந்தர் செவிபுகுத்தத் துணைத்தோள் வீங்கி யுளமகிழ் ந்தார். 24

பன்னீர் தெளித்துக் குங்குமப்பூப் பரிசாய்க் குழைத்துத் தரைமெழுகி, முந்நீர் மானு மறுகுமன்று முழுகார் திருத்தித் தோரணத்திற், செந்நீர் விரத்த மாந்தளிரைச் செலுத்தி யிருபா லினுங்கவின, நன்னீர்க் குரும்பை கரும்புசெழு விஞ்சி கமுகு பலநடுவார். 25

வெள்ளை யெகினப் பார்ப்பிருந்த லென்ன மினிரு மணித் தசும்பிற், கள்ளை வடித்த தாழைமடல் விரித்துக் கடைக டொ றுமிருத்தித், துல்லு மணிநீர் நித்திலங்க டொடுத்த தாமப் பந் தரிட்டுக், கொள்ளை யறுகால் வண்டிணந்தேன் கொள்ளு மலர் மா லிகைமிலைந்தார். 26

இன்ன தகைய பல்சிறப்பு மியற்றிக் கதிர்மா முடிதரித்த மன்னர் முதியோ ரெழுவகையின் மடவா ரிலங்க டோறுமினிதாய்ப்

பொன்னுமணியும்புலியுகிர்வான் புருக்கல்கருணைபாறயிருந்
துன்னு மிரவோர் தமக்களித்தார் சுரபி தருவான் மணிகடுப்ப.

எரிவாய் மடுத்த கறைநெடுவே லிலகும் பாசு குனில்சாபம்
புரிகா லுறைநந்தா தரந்தசரம் புலவு கதிர்வாட் பலவேந்தித்
தரைவாய் பிதிர்க்குங் கவிகுளம்பின் றுளிற் றுவும் பரியேறி
மரைவாண்முகங்கண்மலர்ச்சியுட னெழுந்தார்வயவரியங்கறங்க.

மறைநாற் கலைகள் பன்னுளும் வடித்துத் தெளிந்துத் திரட்டி வைத்த, வறையா முதிய கிழவர்கரத் தண்டி னெறிவேத் திரமூன்றித், தறைவாய் குனித்து வெள்ளாம்பி தலைநேர் கவிகை யிடக்கைபற்றி, மிறைதா திறநூல் தமைக்காண விருகா றளவளைசந்தெழுந்தார். 29

குருதி திளைத்த கொடிப்பவளங் கொழுந்து படர்ந்த நிலாத்தாரம், பருதி நிறத்த வருணமணிப் பசும்பொற் பெரும்பூண் மணிப்பட்டங், கருது மணிகள் பலபூண்டு கதிர்விட் டெறிக்கும் படாம்போர்த்துச், சுருதி யிசைக்கும் பசுங்கிளிபோற் றோகை மடவார் விபகெழுந்தார். 30

பால்வாய் மழைக்கு மதுரமொழி பயிற்றப் பயிய கிளியினினம், போல்வாய் திறந்து மறுத்துரைக்கும் புதிய மழலைச் சொற்சிறியார், நால்வாய்ச் சிறுகட் கயமுனியி னடந்து முடிவி னளவறியாக், கால்வாய் மறுகும் வெள்ளிடையுங் கனக மணிப்பூ ணிலங்கவந்தார். 31

விற்றோய் தடக்கைக் குஞ்சரநேர் நிருபர் மறையின் பாகைமுற்று, மலம்புஞ் செங்கா முதுகுரவ ரமுதக் குதலைச் சொற்சிறியார், கலந்த கலவை முலைதிமிர்ந்து கதுப்பு மிலைந்த மலர்மாதர், சிலம்புங் கலவ மயிலனாருந் தெருவு மன்னு மலிந்தனரால்.

அலகில் புகழ்கூண் டிருந்ததுபோ லணியுஞ் சுதைமா மதின்ஞாயி, லலகு புகுதந் திறந்தகடை யுண்டு தெவிட்டி யுமிழ்ந்தனெதன, விலகு மணிப்பூண் மாக்கள்கணித் தெண்ணி டைங்கப் பெருந்தானை, பிலகம் பலைபோ டெழுந் தெதிர்போயப் பரிவாய் நயிலைப்க் கண்ணுற்றார். 33

கண்ணு லழகு தனைப்பருகுங் களிப்பால் வதனம் புயமலர்
ந்து, விண்ணு டளக்கு நபிபதத்தின் வீழ்ந்து கரங்கண் முத்தி
யிட்டுப், பண்ணார் மொழிபா லனவளாய் முகமன் பகர்ந்து முக
த்திரண்டு, புண்ணு யிருந்தோங் கண்பெற்றே மென்று போற்றி
யுளமகிழ்ந்தார். 34

வெண்பாற் கடலு நீர்க்கடலு மேவிக் கலந்த தெனச்சிற
ந்த, கண்பா ரிடத்தி லிருபடையுங் கலந்த கதனக் கடனடுவிற்,
பண்பார் மறைத்தீஞ் சொல்விளக்கிப் பாவக் குயிரைத் துடைத்
திசுலா, நண்பாய் விளைத்த நபியிறசூல் நளிர்வான் மதிபோ லெ
ழுந்துவந்தார். 35

மாலை வட்டக் குடைகவிப்ப மருங்கிற் கவரி பணிமாற
வால வட்டங் கொடிச்சோலை யருணன் மறைத்து நிழல்காட்ட
வேலை வட்டப் பூமகட்கு விழிபோன் மிளிரு மதில்வாயி
னீல வட்ட முகில்கவித்தோர் நெருங்கும் பதாதியுடன்புகுந்தார்.

மணிப்பா லிகையிற் கருப்பூரச்செந் தீபம் விளக்கி மதர்நெ
டுங்கட், பணிப்பா விழையார் கண்ணெச்சில் கழித்துப் பன்மா
மலர்ச்சுண்ணங், கனிப்பால் விலைதேர்ந் தனக்கறியாக் கதிர்ப் பூ
ஞ்சிவிறி தொடுவீசப், பிணிப்பார் மகர தோரணங்கள் பிறங்கு
மறுகில் வந்தனரால். 37

கொடுங் கையணையி லிகன்மன்னர் குவிந்து கமலக் கண்
வளரு,நெடுஞ்சை முகப்பு மண்டபத்தி னின்று தனசி யார்களையு,
மடுங்கைக் களிற்றி னசூகாபி யவர்ச டையையும் பார்த்தெழிபோ
ர்க், கடுங்கை யிறசூல் மனைபுகுமி னென்று அடமா மனைபுகுந்
தார். 38

அதரி னிடையில் லத்திசுலா மான வபுகு றைருவுங்
கதிரிற் பிறங்கு நபியிறசூல் ககனத் துடனே கூடிவந்து
மதர்வெங் குடங்கைக் கடங்காது மானை நிகர்க ணன்னையுறை
சுதையிற் புகுந்தார் தோழர்களுந் தலங்குந்தத்தமனைபுகுந்தார்.

கொடுஞ்சுரத்திற் றுகந்தீர்த்தபடல முற்றிற்று.

ஆக படலம் 16-க்கு திருவிருத்தம், 482.

பசித்தோர்க்கு

அமுதளித்தபடலம்.

நிணைமலர் மரபத் திண்டோ ணபிபிறைசூ டூஉல் லாவுங்
கணைகழற் றேழு மாருங் களித்துவீற் றிருக்கும் போதிற்
பணைமுகத் தடக்கை நால்வாய்ப் பகட்டபு குறைரு தாம்வந்
தினனுவந் திறைஞ்சும் பொற்றா ளிறைவரை நோக்கிச் சொல்வார்.

முன்னைவெங் குபிரின் மூழ்கி மூதறி வுணரா நின்ற
வன்னைமை நிதரு நோக்கி யாரணக் கலிமா நாவிற்
சொன்னையே னன்றதென் றேன் றுணிந்தின் றமஃதே சொற்றே
னென்னையு முமையுஞ் சொல்லா விழிவுரை பகர்ந்தாள் மன்னே.

இருட்குபிர் நீத்துத் தீனி னிணங்குதற் கிறையாய் நின்ற
பொருட்கனி யிருகை யேந்தித் துஆச்செயு மென்று போற்றி
யருட்கடை ததும்புஞ் செங்க ணடலபு குறைரு சொன்னார்
மருட்கடை படுத்துந் தூதர் வல்லவ னோடி வந்தார். 3

போற்றிய துஆவைக் கேட்டுப் புகழபு குறைரு வெம்போர்
றாற்றநால் விரித்த வைம்பா னாண்டெயி றிழந்த மூத்தங்
கோற்றனு வனைபூ யாக்கை கொழுகொழுத் துமிழ்ந்தவெள்வாய்க்
காற்றனை தளர்ந்த வன்னை கவின்மணி மாடம் வந்தார். 4

மைந்தனைக் கண்ட போழ்தின் மனங்கனிந் தாவனைக வெள்ளஞ்
சிந்திமேல் வழிவ போலச் செழுங்கணீர் ததும்பி மல்க
விந்துநேர் வதன நோக்கி யின்னியற் கலிமாச் சொல்லிப்
புந்திகூர்ந் தீமான் கொண்டார் பூவையர்க் கமுத மன்னார். 5

மருந்தெனுங் கலிமாச் சொல்லி மனங்களித் தீமான் கொண்டு
பொருந்தினர் தீனி லென்னப் புயம்புள கெறிப்பச் செல்வந்
தரும்புக ழிறசூ லல்லா சரணதா மரையில் வந்து
திருந்திய செய்தி முற்றுஞ் செப்பினர் திறத்தின் மிக்கோர். 6

பொன்றயபு குறைரு வந்து புகன்றசொற் பாகைச் சோதி
மறைநெறி யிறசூல் கேட்டு வான்றனை மற்றுஞ் செய்த
விறையவன் றன்னைப் போற்றி யிருகர மேந்திக் கல்வி
யனையபு குறைரு வுக்கு மன்னைக்கு துஆச்செய் தாரால். 7

அன்னவர் தூஉவின் பேற்று லடலசு காபி மாரி
னன்னிலைச் சான்றோர் தம்மி னனியறி வுடைய ராகி
யிந்நிலத் திருந்து வாழ்ந்தா ரிவ்வண நிகழுங் காலை
பின்னுமோர் செய்தி யன்றோர் பெரும்பசி பொருமை யாலே. 8

மதின்மனை துறந்து பள்ளி வாயலுக் கெழுந்து செல்லு
மதரிடை மானங் கல்வி யழிக்கின்ற பசியால் வற்றா
முதரமும் வாயுங் காட்டி யிருந்தன ரதனை யோர்ந்து
விதமயி தங்கள் சொல்லா தியாவருங் கடந்து போந்தார். 9

பசிகெட வெவர்க்கு நல்கும் பங்கயச் செங்கை வாய்ந்த
சசிமுகத் திறசூல் கண்டு சற்றிள முறுவல் பூத்து
வசிகர வபுகு றைறு மாட்டுவங் கவரைக் கூட்டித்
திசைபுக ழாயி சாதந் திருமனை யிடத்திற் சென்றார். 10

மறுவகல் கற்பின் மாதே வறியவர் தமக்கு நல்க
வுறுமொழி வனங்க ளியாது மும்மனை யுண்டோ வென்று
நிறையவன் றாதே யிற்றை யிரவினி லட்ட காணை
வறனுரி கலச மொன்றி லிருப்பதென் றெடுத்த ளித்தார். 11

பாத்திரத் தமைத்த காணப் பாறனைப் பரிவின் வாங்கி
நேத்திரங் கருணை மல்கி நெறிவள ரிறசூல் நாளுங்
காத்திரம் பசியால் வற்றி வந்தகா வலரை நோக்கித்
தாத்திரி விளக்கும் வேதந் ததும்பும்வாய் திறந்து சொல்வார். 12

ஆரணக் கிழவர் நாளு மருந்தவ முயலா நின்ற
காரணப் பள்ளி வாயிற் கடும்பசி யழலா னந்தும்
பூரண வறிவு போக்கா வாதுலர் பாலிற் போந்து
தோரண மனையிற் கூட்டி வம்மனைத் தணிந்து சென்றார். 31

கம்பமீ தனையா வெங்கட் களிறெனச் செல்லும் போதி
லும்பர்கள் பரவு மாடத் துறுங்கல சத்திற் பாலீ
தெம்பெரும்பசிக்கும்பற்று தென்கொலோவெளியோர்க்கெல்லா
நம்பெரு மானெவ் வாறு நல்குவ ரென்னத் தேர்ந்தே. 14

இருநில மளக்குஞ் செங்கோ லிறைநபி மொழிமறுத்த
நருமமன் றென்ன வெண்ணிச் சான்றவ ரிறைநெறி யேத்தும்
பொருவுறுப் பள்ளி வாயிற் புகுந்தவ னுறைந்திருந்த
தெருளடும் பசிநீங் காத தெரித்திரர் தம்மைக் கண்டார். 15

கொழுந்துகா முள்ளரி பூத்த குமுதத்தி னும்பி பூத்து
வழிந்துபாய் நீர்வாய்ச் சென்றான் மல்குவாய்ச் சிலம்பி தானு
மொழிந்திடா மனைய ரெண்பா னூரவரை யுவந்து கூட்டிச்
செழுந்தடப் புயத்தா ரால நபிதிரு மனையில் வந்தார். 16

மடிமுது கிடையி னெட்டி வந்தவர் வதன நோக்கிப்
படியினின் மிகுதி நீவிர் பசித்தழல் பொறுத்தி ரென்ன
வடிகணன் முகமன் கூறி யருங்கல சத்திற் பாலைக்
குடியுநீர் குடிமி னென்னக் கொடுத்திட வாங்கிக் கொண்டார். 17

தனித்தனி யொருவ ராகத் தருங்கல சத்திற் பாலை
யினித்ததே னமுது போல வெடுத்தெடுத் தருந்திப் போற்றித்
தொனித்திடச் சலவாத் தோதித் துணைப்புய வரைகள் விம்ம
மனித்தருக் கமர ருக்கு மன்னபி நமைவி யந்தார். 18

குருத்து வெடித்துப் பசியநிறங் கொண்ட நெடிய பூங்கமுகை
யிருத்தி வளர்த்த திங்கரும்பை யீர்ந்து கண்டித் தாலையிட்டுத்
தரித்த தவள மணிதெறிப்ப வாட்டுஞ் சாற்றி னுமதுரம்
பெருத்த காணப் பாலென்பான் பேரு மருந்திப் பசிதீர்ந்தார்.

தடர்ந்தாங் குவனைக் கருப்பாற்றின் சுவையி னினிமை தருமதுர
மடைந்த காணப் பாலருந்த வேந்த ரபுகு றைறாவைப்
படர்ந்த புகழார் நபியிறசூல் பகர்ந்தா ரவருந் தெறுதீயிற்
றடர்ந்த கொடுவெம் பசிதீரத் துய்த்து மகிழ்ந்து துயர்தீர்ந்தார்.

ஐம்பொறி வழியி னுள்ளம் போக்கிடா ரயின்ற பின்னர்
கம்பொறித் திட்ட நாம கபீபிற சூலுல் லாவுந்
தம்பொறிக் குணவு காட்டித் தாமவெண் கவிகைக்கீழல்
வெம்பொறிப் புரிசை சுற்று மதீனம்வீற் றிருந்தார் மன்னோ. 21

பசித்தோர்க்கு அமுதளித்தபடலம் முற்றிற்று.

ஆகபடலம் 17-க்கு திருவிருத்தம் 503.

மதீனநகரத்தார்க்கு

விருந்தளித்தபடலம்.

மாறுகுபிர்க் கடந்திடறி யுபயிட்டுக வரம்போட்டு மறையோர்ப் பூட்டி, மீறிசுலாம் விளைதவிதைத்துக் கலிமா நீர்ப் பெய்யீமான் வேர்க ளூன்றித், தேறுநன்மைக் குருத்துவிட்டுச் சறகெனும் பொற் கதிரீன்ற செழுந்தீன் பைங்கூழ், மாறுபடு மாபாக விளைத்த புகழ் நபியவனி யாளுநாளில். 1

உலகுதொழுந் தனிக்கலிமை நீழறனி விருந்தவனி யொரு கோ லோச்சி, யலகில்புகழ் படாம்போர்த்த நபியிறசூல் தமக்கு விருந் தளிப்பா னெண்ணி, யிலகுகதிர் மணிமேர்வீச் ஜம்றத் தெனு மாசுகாபி யிறைக்கும் வாசப், பலகாய மிட்டவித்த மறித் தசையோர் வள்ளத்தேந்திப் பரிவி னீய்ந்தார். 2

பாத்திரத்திற் கொணர்ந்தளித்த வெறிப்பிசித விருந்தூட் டப் பைந்தாட் கஞ்சப், பூத்திரத்த வகழாடை புடையுடுத்த பொறிப்புரிசை மதீனு வாழுங், கோத்திரத்தி னிருபர்முதல் வறி ஞரையுங் கூட்டிவரக் கொண்மூ நாளுந், தாத்திரியிற் கவிகையிடு நபியிறசூல் சிலர்க்குரைத்தார் தருகி னம்மா. 3

பணிவிடைக ளிமைப்போது மறந்தறியாத் தவமுதியர் பரிவி னோடி, பணிமறுகுங் கடைத்தலையு மறப்பள்ளி யறையாங்கு மக ன்றமன் றாங், துணிவினெடுஞ் சென்றழைத்த விருந்தருந்த வம்பி னென்றார் தொகையின் மாக்கள், மணியெழுமொய்ம் பினரிற சூல் திருமனையிற் றிரைக்கடல்போல் வந்துற் றாரால். 4

உழுத்வரி வண்டினந்தே னுண்டுபயில் குங்குமத்தா ருரா வோர் வேத, மூழுதுணர் முதுகிழவர் போர்வேட்ட திறல்வய வர் முன்றி லேறும், புழுதிபுள் மெய்ச்சிறுவர் பிடியரொடு மற் றியரும் புதியோன் றாதைத், தொழுதடிகள் பணிந்தேத்த முக மனுடு மபாத்திரத்தான் றம்பி னென்றார். 5

கடலகடு கிழித்தெழுந்த கதிருதைய முதற்குடபாற் கடலி னோடி, படையுமள வுந்தூய மதீனுவி லெண்ணிறந்தோ ரன்பி னோடுங், குடர்நிரம்ப வாய்நிரம்பக் கைநிரம்ப வள்ளியள்ளிக் குழை கு வாய்ந்த, வுடல்புளகங் கொளமகிழ்ந்து நபியிறசூ லளித்தவி 6
ருந் துண்டா ரன்றே.

வள்ளமதி னிடுந்தசைசபை மறையகலா மதீனநகர் மைந்த
ரியாரு, மள்ளியடுத் தழற்பசிக ளவியமடிச் சுருக்கழிய வயின்று
மிம்மி. வெள்ளளவுங் குறைபாது வழிந்தவழிந் துவட்டெடுப்ப
விருந்த வூனை, யொள்ளிலைவேற் ஜம்றத்தெனு மசுகாபி தமக்களி
த்தா ருரவோ ரன்றே. 7

ஆரணத்தி னகப்பொருளா மகுமதிறசூல்நபியி னதிதுமான,
காரணத்தை விளைத்தமணிக் கலத்தினிட்ட செழும்பிரிதங் கல்வி
மானக், தாரணிக்கு ணிகரரிய ஜம்றத்தெனு மசுகாபி தாமு மு
ண்டு, பூரணத்தி னெங்குநிறை யொருபொருளைத் துதித்தேத்
திப் புகழ்ந்து நின்றார். 8

மதீனநகரத்தார்க்கு விருந்தளித்தபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் 18-க்கு திருவிருத்தம் 511.

சுனைக்காவில்

உணவருந்தும் படலம்.

இளநிலவு விரிந்தொழுகு மணிமௌலி யரசர்பல ரிறைஞ்சு
நாளி,வளவில்புகழ் நபியிறசூல் கலினவயப் பரிமேற்கொண் டன்
பினொடு, முளமருவித் தீனின்முதல் வந்தவபூ பக்கரும ருதுமா
னலி, தளவயவ ரொருநூற்று முப்பதின்ம ருடல்வேட்டைச்
சாரி போந்தார். 1

கலினவயப் பரியுழவர் புடைநெருங்கக் கதலிகைவெண் க
விகை மல்க, வொலிசெழுமு முரசொலிப்ப வானவர்பூ மலர்
சொரிய வுருமு மேகம், புலியினமு மாநினமு நடுங்கி யொரு
புடையடையப் பொழியுஞ் சோலை, மலிதருபொற் சிகரகிரிச்
சார்பினொரு வரையாட்டை வௌவி னாரால். 2

வளரிலப்பை நபியெனன் மனையின்மவு லூதோது மறை
யோர் கூண்டக், களரிதனக் கமுதுபெய்யும் பொற்கலத்தின் கறி
வளத்தின் காட்சிபோல, முளரியரக் காம்பனைய்த லல்லிநீ லங்
குவளை முகைவாய் விள்ள, விளரிவரி வண்டிசைந்தே துண்டமு
றல் சுனைக்காவிற் றிருந்தா ரன்றே. 3

மயிர்செறிந்த நெறிமருப்பு முறுக்ககலா வரையாட்டை யறு
த்துள்ளீரு, ளயிலவெடுத் தெரிமூட்டிச் சுட்டுகதி செய்மின்மற்
றவங்க வூனைச், செயிரகற்றுங் காயமிட்டுக் கறிசமைமி னெட்டுஞ்
சேர் மாவி னீரைப், பயிலவிட்டுக் குழைத்துருட்டி சுடுமினெ
ன நபியிறசூல் பகர்ந்தா ரன்றே. 4

உரைத்தபடி வருடையறுத் தானையட்டார் மோதகமுஞ்
சுட்டா ரீரு, ணிரைத்துநெடுங் கோலிடையிற் கோலிவெய்ய
வழற்கொழுந்தி னிறைத்துக் காய்த்தி, வரைத்துவரைத் திரண்டு
சிறு வள்ளமதிற் பெய்துநபி திருமுன்வைத்தார், கரைத்துமத
மொழுகுகயத் திறலனையி ருண்மினெனக் கழறி னாரால் 5

அட்டுவைத்த பான்மறைதே ரியார்கண்முத லசுகாபி யனை
வோருங்கூண், டிட்டுவைத்த பாத்திரத்திற் றேனிருன் மொய்த்த
தென விருந்து தியிற், சட்டுவைத்த வீருடனை வாயரா வயிறு
ரத் துய்த்து மிஞ்சி, மட்டுவைத்த பாத்திரத்திற் பெய்தகறி வள்
ளுதுகண் டன்பு பூத்தார். 6

உண்டுமிஞ்சுங் தடியடையு மொருங்கெடுத்துக் கொடுபோ
மென் றுரைத்தார் பூவான், கொண்டிருந்த புகழபூ பக்காப்புதற்
றருமானுங் கூட்டிச் சேர்த்துப், பண்டிருந்து" நெடுங்கழுத்தன்
மிசையேற்றித் தமனையனை படர்ந்தார்கே, வண்டிருந்த தொடை
யிறசூ லசுகாபி மார்சூழ மனையில் வந்தார். 7

கோதகலு மறைக்குருசி லபூபக்கர் திருமனையிற் கொண்டு
போந்த, மோதகமு நறுந்தசையுஞ் சடுகீருட் கருங்கதியு முழு
து மெண்ணிற், பேதையரு மாடவரு மமுதனைய வினியவூண் பிறி
தி னுண்டோ, காதலனைக் கமழ்மேனி நபியிறசூல் தம்மைப்போ
ற்றிக் களிப்புற் றாரால். 8

தேமதுரம் பழுத்தொழுகும் புறக்காலுக் குவையானிச்
சிலையிற் றீபம், வாமமே கலைமருங்கு லரம்பையர்க டொழுதே
த்த வாய்ந்த தாரு, காமவடி வேற்கரத்து நபியிறசூ லனுதினமு
நவங்க ளார்ந்த, வேமகம ரொளுயதினத் திருந்துசெங்கோல் செ
லுத்தியிருந்தா ரன்றே. 9

சுனைக்காவிதுணை வருந்தும்படலம் முற்றிற்று.

ஆக படலம் 19-க்கு திருவிருத்தம் 520.

இறக்கிலுக்குத்திருமுகமளித்தவசுகாபி

மீண்டுவந்தபடலம்.

சாடிலத் தோங்கு மள்ளாற் றுமறை யணையிற் றுஞ்சும்
தோடிச் செங்காற் கூட்டுத் தூய்ச்சிறை யன்னந் தாழை
மேவ்டி மடலிற் பூத்த மென்மலர் பார்ப்பென் றெண்ணிச்
சேலடித் தெடுத்த ருந்துஞ் செழும்பணை பொருந்துஞ் சாமீன்.

அருள்வலி மானங் கல்வி யளவிலாத் தகியத் தென்போர்
பொருள்பல வேட்டுஞ்சின்னாட் பொருந்தியாங் கிருந்துசெல்வந்
திரணுறு மிலாபஞ் சேரச் செய்தொழின் முடித்த பின்றை
கரலைநேர் மதீனநாடி நடந்தனர் நடக்கும் போதில். 2

தோட்டலர் கமல வாவிச் சுதாமெனு மூரில் வெள்ளைக்
கோட்டுடைக் கரிபோல் வந்த குணைத்தென்போன் வழிமறித்து
வாட்டிறல் வலியைக் காட்டி மட்டிலா மணிபொன் மற்று
மாட்டிறத் தகியத் தென்னு மாண்டகை யிடத்திற் கொண்டான்.

பதித்திடுஞ் செய்தி கேட்டுப் பான்மறை யுறுபாத் தென்போர்
குதித்திடு மிசுலாத் துற்ற கொற்றவ ருடனே வந்து
கதித்திகழ் கவ்வி யெஃகங் கடுஞ்சிலைப் பகழியேந்தி
மதித்தனர் குணைத்தென் றோதுங் கள்வனை மடங்க லேய்ப்ப. 4

இருவரு மிகலித் தந்த மெஃகங்கூர் கணைகள் சிந்திப்
பொருதுடன் றமரி னேற்ற புன்மனக் குணைத்தென் போனை
வெருவுறச் செய்து கொண்ட விழுப்பொரு ளனைத்தும் வாங்கி
மருமலி மரப மாலைத் தகியத்தின் வசத்தி னீய்ந்தார். 5

கள்ளர்கைக் கொண்ட பொன்னுங் கதிர்மணி பிறவும் பெற்று
விள்ளரு மறையின் றீஞ்சொல் விளக்கிய வுறுபாத் தென்னும்
வள்ளலை வியந்து போற்றி வாவிய மல்யு நீக்கி
யள்ளிலை நெடுவேற் செங்கை யருணபி யகத்தில் சேர்ந்தார். 6

இறைநபி மலர்ப்பொற் றுளி சிருவிழி பொருத்தி முத்தி
வெறிமலா லங்கற் றிண்டோள் வேந்தர்கோ னிறக்கி றன்பா
னிறைமொழி வரைந்த வோலை கொடுத்தது நிகழ்ந்த யாவுந்
தறவிலா துரைத்துக் கள்வர் கெடுத்ததும் விரித்துச் சொன்னார்.

இறக்கிலுக்குத்திருமுகமளித்தசுகாபிமீண்டுவந்தபடலமுற்றிற்று.

ஆகப்படலம் 20-க்கு திருவிருத்தம் 527.

கள்வரைக்கருவறுத்துச்

சூறையாடியபடலம்.

சுனைத்தடச் சோலைசூழ் சுதாமெனும் பாடிவாழ்
சூனைத்தெனுங் கள்வனைக் கோறல்செய் திடமலர்ச்
சினைத்தரு வனையகைச் சையனை யரசென
நனைத்துருக் கப்புய நபியிற சூல்லைவைத்தார். 1

கவிகுரக் கலினவைங் கதியுறும் பரிகளுஞ்
செவிமணி யிழைத்தபொற் சில்லியந் தேர்களும்
புவிசெவி டெழத்தொனி பொங்குபல் லியங்களு
மவிர்மணிக் கிரீடமு மணிகளு நல்கினர். 2

அடலரி யேற்றைநி மடக்குமன் சாரிக
ளுடன்முஹா ஜிரீன்களு மொக்கவே சினமென
விடைகொடுத் தனுப்பினர் வெய்யநஞ் சுமிழுமைம்
படவர வொமுறை பகர்ந்தநற் றாதரே. 3

குலிசம்வாள் சக்கரங் குந்தநே ரிசமயில்
வலிகிலை யத்திரம் வாங்குகோன் மற்றவுங்
கலிசின வயவர்தோள் கையினு மேந்திவெம்
புலியின மெனநிலம் புடைசெறிந் தீண்டினர். 4

பதலைதிண் டிமந்தவில் பல்லியம் பலவொலி
மதலையுந் தியகடல் வழங்குப்பே ரோதையி
னதலமென் டிசைகளு மதிரவெண் குடைநெடுங்
கதலிகைத் திரள்களுங் ககனமட் டோங்கவே. 5

அஞ்சிறைப் பொறியறு காலளி பேட்டொடுந்
துஞ்சிய துருக்கமந் தொடைப்புயத் தாதினைச்
செஞ்சரண் சிரசுநச் சேர்த்திபே செய்யது
பெஞ்சலின் வயவரு மிவுளியின் மேற்கொண்டார். 6

கொய்யுளைக் கலினவெங் கோடைமா ருதமென
மொய்திரை யளக்கரிற் பாந்துமுன் னேசெல
நெய்துடைத் தொளிரும்வா ளிருபர்கூர் வரிநெடும்
வெய்யகட் சரமென விசையமோ டேகினர். 7

கடமலைப் பயிருருங் காவலர் குன்றமும்
விடவர விண்மணி விளங்குமுட் பாலையு
மடிசுரை மேதியான் வதியுநீண் முல்லையுந்
தடவயன் மருதமுந் தாங்கடந் தேகினார். 8

வழிபறி கொளுங்கள்வர் வைகும்பா டியின்மலர்ப்
பொழிலிடை பெரும்படை புணரியொத் திறங்கினா
ரழல்விழிக் குனித்துமன் னறியவே வாட்கள்சென்
றெழிலுறக் ககனம்வந் திறுத்ததென் றோதினார். 9

பருந்தினத் தொடரயிற் படையுண விற்றைநல்
விருந்தவந் தனவென விம்மிதத் தெழிலிவான்
சுரந்தமா மலையினும் படர்ந்ததோட் டிணைபுடைத்
தருந்திறற் சமர்த்தொழிற் கணிகலன் றாங்கினார். 10

வேகமீக் கொளும்பரி மிசைவிரைந் தேறிவெம்
பாகையு மெடுத்தெறி படுகொலைக் கடகரி
யேகுவ தெனவிற லிளைஞர்கள் சூழ்வர
வாகைவேற் குனித்தெனு மன்னெழுந் தானரோ. 11

கூற்றுடன் றெதிரினுங் கொல்சமர்க் கெதிரிடு
மாற்றல்சால் குனித்துட னருநெறி பறிகொளு
மூற்றவெங் கள்வரு மொக்கலே வந்துவெஞ்
சீற்றவெண் சிங்கவே றெனவெதிர்ந் தார்களால். 12

மரகதக் கிரியுடை வள்ளலாஞ் செய்யதாங்
குரகத மிசையினிற் கொண்டெதி ரேறிவெஞ்
விருதுரை கூறித்தம் வினையமே தொண்டர்க்
தெரிவிழி யிமைக்கடா விகல்வினைத் தாரரோ. 13

வடவைமுன் னழல்வளி வந்தெதிர்ந் தாலெனக்
குடவளை முழங்கிடக் கொக்கரித் துற்றவெம்
படையொடு படைகடாக் கிடச்சரம் பார்மழை
யொகிடி யெனச்சிலை கால்வளைத் தூர்த்தினார். 14

வளைமுகப் பிறைக்குரூ வாசியின் வாயினா
மிளைஞர்கண் மெய்யினை யிட்டகஞ் சகியினால்
கிளைபமை வெஞ்சிலை கிடந்தவங் கையினுங்
கிளைபட வருவின குரர்வெய் வாளியே. 15

காலறுந் தனசில களமறுந் தனசில
வாலறுந் தனசில மடியறுந் தனசில
தோலறுந் தனசில சுவலறுந் தனசில
வேலினால் வீரர்கள் வீழ்த்தவாம் பரிகளே. 16

வல்லையைக் கதலியை மாய்த்திடும் வாறெனக்
கள்வரைச் செய்யது கருவறுத் தென்றுமா
றாள்குடைக் குலத்தையு முதலவன் சேனையும்
புள்ளவாம் வாளினாற் றுணித்துயிர் போக்கினார். 17

சினமத முரட்கரி சிவணும்வெந் திறபுன்
மனமறக் குலத்தையு மற்றவன் மகனையும்
வினைமுகக் களத்திடை வீழ்த்தியே தேமலர்ச்
சுனைகள்சூழ் சுதாம்பதி சூறையா டினார்களால். 18

எட்டியோ டெழுந்தபூ விலவும்வெந் தீப்பொறி
பட்டடி பொடுங்கெடும் பான்மைகள் போலவே
கட்டுவாம் பரியுறு பாத்தெனுங் காவலர்
மட்டிலாப் பொருள்களுங் கெடுத்தற வெளவினார். 19

மான்மதன் காவத மனைத்தரு மெய்யினர்
தீனிலை புறையவர் சேமவான் பொருளுடன்
கோனிலை தவறிய குபிரர்தம் பொருள்களு
மேனிவர் மலைபுரை வெறுக்கையும் போர்செய்தார். 20

செம்பருத் தலவுவேற் செயிதெனும் வேந்தர்முன்
னும்பர்வாழ்த் தெடுத்தநீ ணறுமுறு பாத்துவச்
தெம்பெரு மாயினே யெம்மனைப் பொருள்கொள
நம்பமோ வுமக்கிது தக்கதன் றென்னவே. 21

மாயிலுக் குரியவர் மாட்டினின் மன்னிய
பொருளனை வெனிலுறப் பொறையுடை யவர்கொளா
ருரசிய வேதநூ லுரைத்தது மன்னதே
இருநிலத் திக்கெறி யியற்றுவ தன்றென்றார். 22

எவர்பொரு ளாயினு மிட்டபொற் பல்லனைக்
கவனவாம் பரியினர் கவர்ந்திடின் கொள்ளையைத்
தவனிலை முறியவ தருவதின் றென்னவே
சுவையுறு மொழிகொடு சொல்லினார் செய்யதே. 23

தீதிலா மறைநெறிச் செய்யதென் பவர்க்கனி
யோதியென் பலவென வோங்குறு பாத்தவர்
தாதுலாந் தொடையையுந் தடங்களு நீந்திவந்
காதலர்க் கருண்மதி னுபுரத் தாயினர். 24

சத்திய வாய்மையுந் தயவுமன் புடைமையு
நித்தமும் பயிறரு நீலவான் கணிகையார்
புத்தமு தருத்தபூம் புண்டரீ கப்பத
முத்தியிட் டணிமணி முடிபணிந் தோதுவார். 25

மாக்கடற் பாரெலாம் வளைந்தவெங் கலிகெட
நீக்கியோர் குடைநிழ லிறுத்திய வேந்தரே
யாக்கமா யெளியன்முன் னமைத்திடு நிதியெலாங்
காக்குதற் குரியசெய் யதுகவர்ந் தாரென்றார் 26

குனித்துடன் கூடும்வெங் கொடியவன் தன்னார்தம்
மனைத்தலப் பொருள்கொளல் வழக்கலாற் சார்ந்தநம்
மினத்தவர்க் கெடுப்பது மியற்கையன் றென்னவே
யனைத்தையு முணர்வுறு மகுமது நபிசொன்னார். 27

பழமறைக் கியல்வுறு பாத்துசொற் கேட்டவர்
முழவுறழ் தடம்புய முகம்மது நபியுல்லா
வழுவிதென் கொல்லென வலிதனை யழைத்தின்னே
யெழுமிவர் பொருளைமீட் டிவரிடத் திடுமென்றார். 28

கோட்கரி யிருப்பிறக் குருத்தொசித் திட்டவெவ்
வாட்கரத் தலியுல்லா வாய்புதைத் தொதுங்கியின்
றோட்கொடும் புலிசெய்ப தன்னல்பா லிவர்பொருள்
மீட்கநும் முத்திரை வேண்டுமென் றோதினார். 29

நன்றென மகிழ்ந்துநன் னபியிற சூலுல்லா
தின்றமூ வுலகொரு நொடியினிற் சுற்றிவந்
தோன்றுபுற் றுவயீ துறையும்வெங் கூறலின்
னின்றகூர்ங் கணைகளி னென்றினை நீட்டினார். 30

வேறு.

அம்பண்ட பாளப் பெற்ற வஹீரத் தாதி தூனை
நம்புமா னீக்கு மேவந்த னடுத்துறு மிருளில் வந்தே
மிம்பரின் மொழிந்து போந்த வெண்ணிரு கலீசே ரிந்தைப்
பம்புறத் தரித்தல் போலப் படர்சூரு வந்த ணிந்தார். 31

மதிவரக் கலையி முந்த மான்வரப் பகர்ந்தோ ரியார்க்குங்
கதிதர வுதையஞ் செய்த கங்குலிற் பூவான் மட்டாய்ப்
புதிதொரு பிரபை யெங்கும் பொங்கிய காந்தி போலத்
துதிதருஞ் சுவேத வங்கி தொட்டனர் மெய்யின் மாதோ. 32

கடிகமழ் மலர்ப்பூங் கற்ப கத்தரு வரையில் வல்லிக்
கொடிபடர்க் தேறிச் சுற்றுங் கொள்கைபோற் கவின்கு லாவு
மிடையினிற் கரிய கச்சை யிறுக்கிவேய்த் திணைவண் டார
வடிநறா வொழுகுஞ் செய்ய மாபந்தோண் மிலைந்திட் டாரால்.

பகைக்குல மறுக்கும் வாளும் பாற்றினஞ் சூழும் வேலு
மிசற்கணை தூக்கும் வில்லு மேந்திவெற் பெட்டுஞ் சுற்றித்
திசைக்களி றிரியத் தாவுஞ் செங்கண்மா மிசைக்கொண் டேய்ந்த
நகைக்குல மணியிற் செய்த நாஞ்சிலுங் கடந்து போந்தார். 34

கற்றைவெண் கவரி யாட்டக் கதலிகை வெயிலை யோட்டக்
கொற்றவான் கவிகை மீட்டக் குணிற்பறை கடலை வாட்ட
வெற்றிமா னடனங் காட்ட வெறிமலர்ச் சோலை நீட்ட
முற்றிய முனைக்கல் லாறு முரம்பையுங் கடந்து போந்தார். 35

பணிப்பரு மணிகள் வாய்ந்து பாழிவெற் பெனத்தி ரண்ட
திணிப்புய வேங்கை யாலி செழும்பொழிற் கதாமென் றேத்து
மணிப்பெரும் பதிபு குந்தா ரடலரி செய்ய தென்போர் ளூர்
துனுக்கென வெழுந்து காமர்த் தோடமீஇச் சலாமுஞ் சொன்

கூன்பிறைக் கோட்டு நால்வாய்க் குஞ்சர முகத்திற் பாய்ந்து
ஞான்கவர்ந் துதிர மாந்து முகிர்நுனைப் பேழ்வாய்ச் சிங்கந்
தான்புரை வேங்கை யாலி சஞ்சரீ கங்கள் பாடுந்
தேன்பிணை யலைமார் பேந்துஞ் செய்யதை நோக்கிச் சொல்வார்.

மலர்விழிக் கிடுக்க ணெய்த வருமுன மிமைவந் தாற்றங்
கலர்ப்பழிப் பதனைக் காக்கு மறிவதற் குரைப்ப தியாவர்
குலமர பவர்க ளாக்கங் குலைப்பது விழிகெ டுத்து
நிலையொளி யாடி நோக்கு நீர்மைத்தாஞ் சீர்மை யோயே. 38

ஒளிகதி ரிலைவேற் செங்கை யோங்குறு பாத்தோ டிற்றூர்
மிளிர்மனை கவர்ந்த பண்ட மீட்டிவ ரிடத்தில் வல்லே
யளியென வமரர் வாழ்த்து மன்னவ னிவஞ் சாத்தி றென்றை
யெளியெனென் சாத்தி னீய்ந்தா ரிந்தடை யாள மென்றார். 39

வளர்ந்தநெட் டிலைக்கச் சூர மடறுளைத் தெழுந்த பாளை
யிளங்குருத் தடியோ டொக்க விம்பர்வந் துலவச் செய்தோ
ரொளிர்ந்திடு மடையா ளங்கண் டருட்கடை பரந்தவொண்கண்
குளிர்ந்திட வைத்து முத்திக் கொழுமலர் வதனம் பூத்தார். 40

கலைமணி நிதிமா டொட்டை கலன்பல விரச வர்க்க
மலையள வெனினு நம்மான் மறுப்பது தகாதென் றெண்ணி
யிலைமலி கதிர்வேற் செங்கை யிலங்குறு பாத்தை வெற்றிச்
சிலைமலி தடந்தோ ளேந்துஞ் சையது விளித்துச் சொல்வார். 41

மறைநிடந் தலம்புஞ் செந்நா வள்ளலே யும்மோ டுற்றூர்
நிறைபொரு ளனைத்தும் வெளவி நீண்மனை சென்மினீவிர்
கறைகொளு மனத்த ரான கடுங்கொலைக் கள்வர்க் கஞ்ச
விறையருள் சுரக்க வாழ்வுற் றிருமென வனுப்பச் சென்றார். 42

பகைக்குலக் கள்வர் பாலிற் பறித்தபொன் மணியு மற்று
முகைக்குமே ரொட்டை மீது மொருங்கெடுத் தயர்த்தி வெற்றித்
தகைக்குலச் செய்ய தோடுஞ் சான்றவர் புடையிற் சூழ
நகைப்புலி யலியார் வாவு நடனவெம் பரிமேற் கொண்டார். 43

இருபுறங் கவரிக் குப்பை யெறிதிரைத் தரங்க மெய்ப்ப
விரிகொடி விசும்பிற் பூத்த மின்னென நடங்கி யாடக்
குருமணி யிமைக்கும் வெள்ளைக் குடைநிழல் வெயிலை யோட்டச்
சொருகுவார் மேளம் பொங்கச் சதாம்பதி விட்டெழுந்தார். 44

பறிதலைக் குறவர் வைகும் பருப்பதக் கடறும் வெய்ய
மறவர்வாழ் பாலைக் காடு மறியுடைப் பொதுவர் செங்க
ணெறிமருட் பெருமை யாறு நிதம்பயின் முல்லைக் காடும்
வெறிமது வருந்து மள்ளர் விளைத்தசொற் பழனக் காடும். 45

கடந்தவன் டிசைக்குந் தண்ணெங் கமலமென் பொகுட்டினன்ன
நடந்தரு மோடை சூழு நாஞ்சிலு மறுகும் வாய்ந்து
கிடந்தொளிர் மணிகொண் மாடங் கிளர்மதீ னாவில் வந்தா
ரடர்ந்தபல் பொருளு முன்வைத் தருணபி பதத்திற் றாழ்ந்தார்.

கள்ளர்வாழ் பாடி கொண்ட கனகமு மணியு மற்று
முள்ளதிற் பாதி பங்கிட் டுறுபடைத் தலைவர் கொள்ள
வள்ளிமுன் னளித்து மற்ற வுறும்பொரு ளனைத்துந் தூய
வள்ளியோ ரெடுத்துச் செம்பொன் பயித்துமா லறையிற் சேர்ந்தார்.

கள்வரைக்கருவறுத்திக்குறையாடியபடலம் முற்றிற்று.

ஆக படலம் 21-க்கு திருவிருத்தம் 674.

மக்கம்போந்த படலம்.

கடல்புடை கிடந்த வையங் காத்தொரு செங்கோ லோச்சி
படல்புனை யிறசூ லல்லா வரியணை யிருக்கு நாளிற்
றிடனுற நடக்கு மும்றாக் கலாச்செய நாடி நாளும்
படர்புகழ் மக்கம் போந்த பண்பினை விரித்துச் சொல்வாம். 1

முத்திசே ரும்றா முன்ன முடிக்கவெம் முடனே வந்த
வுத்தம ரியாரு மொல்லை யாயத்தப் பட்டு வம்மென்
றெத்திசார் தங்கள் போற்று மிறைநபி யுரைத்தார் கேட்டுச்
சித்திரப் பொற்றேர் வாசி தொறுவினிற் சிறப்ப வந்தார். 2

எட்டிவா னுலகம் போற்று மிறைநபி யிறசூல் வாய்ந்த
சட்டைவெண் பாகு கச்சை சாலுவை யினைய வெல்லாந்
தொட்டயில் வேல்வாள் குந்தந் தோமரம் பிறவுஞ் சேர்த்துக்
கட்டுவாம் பரிமேற் கொண்டார் கடவுளர் மலர்க டூவ. 3

புவிபுகழ் சிசுறத் தாறிற் புரிசைசூழ் மக்கத் தார்க்குக்
கவுலளித் ததின் மீண்ட காலத்திற் கூட்டிப் போந்த
வவர்களா யிரத்து நானூ றரசரு மியார்க டமுங்
கவிரிதழ் மின்னா ரொருங் கயிபுட னெழுந்தா ரன்றே. 4

கொடித்திர ளுடங்க வெள்ளைக் குடைத்திரள் கவிப்பமேக
மிடித்திர ளென்னப் பொங்க வெணிலாக் கவரி வீசத்
தடித்திர ளின்மக்குங் குந்தந் தனுக்கணை பிறவு மேந்தி
முடித்திரண் மன்னர் வேத முகம்மதைச் சூழ்ந்து சென்றார். 5

மதினெடும் புரிசை சூழ்ந்த மதினமா நகர நீங்கிப்
புதுமலர் நறவ மாந்திப் பொறிச்சிறை யறுகாற் சீத
மதுகர நபியைப் போற்றி வண்புக ழிசைத்துப் பாடுந்
ததைசினைத் தளிர்ப்பூங் காவுந் தடங்களுங் கடந்து போந்தார்.

பதுக்கையு முரம்புங் கல்லும் பாஞ்சிடை யதரு மற்றுந்
துதிக்கையங் கரிகண் மக்கஞ் சுற்றியு ஞான்றிற் றோன்றிப்
புதுக்குநற் றீன்வ ளர்க்கும் புகழிற சூலைப் போற்றி 7
மதிக்கிலா சலவாந் தோகி வனம்பல கடந்தா ரன்றே.

கானக விலங்கும் புள்ளுங் கபீபுல்லா தம்மைப் போற்றி
யானன மலர்ந்து செவ்வி யாரணக் கலிமா வோதத்
தீனவ ருடனே யும்றாச் செய்யவந் துற்றா ரென்று
வானவர் விசும்பி னின்று மலர்மழை சொரிந்தா ரன்றே. 8

தாழ்சினை பொதுளுப் பொங்கர் தண்ணறுங் கமல வாவி
சூழிலைக் கொடிக்காற் கேணி துர்ச்சடைக் கன்னற் கொல்லை
வீழ்புனல் புலராப் பண்ணை மிகுபல வளமும் வாய்ந்து
வாழ்வுறு சரீபென் றோதுந் தலத்தில்வந் திருந்தா ரன்றே. 9

மக்கம்போந்தபடலம் முற்றிற்று.

ஆகபடலம் 22-க்கு திருவிருத்தம் 583.

மைமூனாச்சியார்

மங்கலப்படலம்.

சத்தவ நபியுல் லாதம் நம்மரோ டுறைச ரீபு
வித்தகை சிறந்த மக்கத் திருந்திரு காத மாகுங்
கைத்தலங் காரத் தானைக் கன்னியர் வாழ்த்த வோங்கு
முத்தலம் போற்றி யேத்து முகம்மதோர் வதுவை வேட்டார்.

அருந்ததி மன்னைபோ லியார்க்கு மளித்தரு ளாரீ துள்ளத்
திருந்ததி யான மோவா தியற்றிய தவத்தால் வந்த
மருந்ததி னினிய தீஞ்சொன் மழலைவாய் மைமூ னென்பு
விருந்தகில் வுலகிற் கொள்ள விரைமலர் மாலை யிட்டார். 2

வண்மையு நலனுங் கற்பும் வாய்மையுந் திரண்டொன் றாகப்
பெண்மையங் குறித்த மைமூ னெனுமயின் மணந்த பின்னர்
விண்மைய வறுசி றெட்ட மென்கழ லுடனே சென்றோ
ருண்மைசேர் தோழ ரோடு மும்பர்வாழ்த் திடவெ ழுந்தார். 3

மன்னபி தானை சூழ வருகின்றா ரென்னு மாற்றங்
கன்னியம் புரிசை மக்கக் காபிர்கட் கொற்றர் கூற
மின்னவி ரயில்வாள் குந்தம் விற்கணை யேந்தி வந்து
பன்னருந் திரத்த வீரர் பாதையைத் தடுத்துச் சொல்வார். 4

வடிநறுஞ் சோலை மக்கம் வரமனத் தாள்ளி னோர்கள்
கொடிபடி படைக ளேந்திக் கொண்டிலன் குறுகல் கூர்ந்த
படைகொடு வரினும் பூட்டும் பையுறை கழிந்தல் வாய்ந்த
விடிபக லிராமுன் றனதி மிஞ்சியாங் குறைதந் தன்றே: 5

எம்மினத் தவரை யேனும் வலுபிடி யாகத் தினின்
வம்மெனக் கழற வியாணர் மதீனத்தி லிருந்து வந்த
வும்மினத் தொருவ ரிவ்வூ ரிருப்பதற் குள்ளி னீவிர்
தம்மெனத் துடரே லென்னத் தப்பிலா தெழுதிக் கேட்டார்.

வழிமறித் தவர்கள் கேட்ட வார்த்தைப்பா டொன்றுந் தப்பா
தெழுதியே கொடுத்தார் காபி ரியாவரு மெழுந்து போந்தார்
பழிபகை யொருவு மார்க்கம் பயிறரு மிறசூ லில்லா
கழிபடைத் தானை சூழக் கண்ணக னெறிக டந்தார். 7

கண்ணடுத் துயர்ந்து நீண்ட கமுகிளங் கற்றைப் பாளை
விண்ணடுத் தூருந் தென்றல் வீசிடத் துளங்குந் தோற்றம்
பண்ணடுத் தளிகள் பாடும் பைந்துணர்க் கோதை நல்லார்
தண்ணெடுங் கவரிக் குப்பை வழங்குவ சமனக் கண்டார். 8

உச்சிவான் றடவுந் தாழை யுடல்குழைத் தொசியக் காய்த்த
பச்சைநீர் குரும்பை தாங்கிப் பன்மலர் சொரிதல் வாசச்
செச்சையம் புயத்து வள்ளல் சேவடி யதனிற் பொற்பூ
விச்சையா யரம்பை மாதர் சொரிவன வியையக் கண்டார். 9

புலியடிப் பைங்காய்த் தாற்றுப் பூங்குலை குனித்த வாழை
மலியிலை குழையத் தென்கால் வந்துவந் தசைத்த லேலக்
கலியிருட் கோதைச் செல்விக் கனின்முலை சுமக்க லாற்று 10
மெலியிடை மகளிர் வீசும் விசிறிகள் பொருவக் கண்டார்.

செந்தளிர்க் கரத்த ருட்டத் திவ்விய கனிக ளேந்திப்
பைந்துணர்ச் சூதம் யாகல் பாசைபி னிருபாற் கங்கு
பிந்தாம் பனிர்க்கோ ரோடு மெழுந்தவர் கையிற் கொள்ள 11
வைந்தரு வழக்க மென்ன வளிப்பன பொருவக் கண்டார்.

அகிற்புகை கமழ்ந்த கூந்த லஞ்சொலார் விரித்துக் கண்டந்
தகைப்புறப் பவளம் வேய்ந்து தருக்குதி நிற்ப போலத்
துகிற்பொதி பவள மேய்க்குஞ் சிலம்பினூற் றொடர்கா யேந்திப் 12
பகுப்புற மடல்வி ரித்த கச்சுரப் பசுங்காய் கண்டார்.

முள்ளரை முருகு வாய்ந்த முண்டக வாவி தோறும்
புள்ளடை கிடந்து நீங்காப் புகழ்ற குலேப் போற்றி
யொள்ளிய மறையின் சொல்லா லோதிய விசையைக் கேட்டு
வள்ளைவாய் குட்டு மேதி துஞ்சுநன் மருதங் கண்டார்.

நம்பினர் வங்க டர்த்து நலந்தரும் பயித்றல் லாவி
தும்ப டவமு ஞற்ற வருவதற் குபயவேணி
யுபரி னிறுத்தி வைத்த தெனுஞ்சபா மறவா வெற்புங்
கம்பமால் களிறே யன்னார் கண்டுகெண் களித்துச் சென்றார். 1

அஞ்சிறை யறுகாநீ கித வளியின முராஞுஞ் சோலே
மஞ்சுகண் வளரு மக்க மாநகர் புறத்தி னோர்பாற்
கொஞ்சுவாம் பரிமேற் கொண்ட கொற்றவர் தம்மோ டின்செ
லெஞ்சலின் மறைவி ளக்கு மிறைநபி யிருந்தா ரன்றே. 1

மைமூநாச்சியார்மங்கலப்படலம் முற்றிற்று.

ஆகபடலம் 23-க்கு திருவிருத்தம் 598.

உடுரூச்செய்த படலம்.

கொய்யுளைக் கலினப் பாய்மாக் குரகதச் சாலே கோட்டி
மொய்திரை யளக்க ரென்ன முழங்குமா வணம்வ குத்து
நெய்துடைத் தொளிரு மொள்வா ணிருபர்கட் கிருக்கை செய்து
வையக முழுதும் போற்று மறைநபி யினிதி ருந்தார். 1

மாயிரு நிலம் புரக்க வழங்கிய சுடர்கள் காலு
மாயிரங் கதிரு மங்கை வார்கலிக் குழியி னெங்றாழ்
போய்விழுந் தமைந்தான் பின்னர் புள்ளிமீன் பொடிப்ப வானின்
மீயக டுதயஞ் செய்தான் விதுவெனும் வேந்த னென்றே. 2

ஊர்வன முதலி யாவும் விழிப்பவொண் காந்தட் குட்டுக்
கூருகிர் வளைவாய் வெம்மூட் குக்கிடக் குலங்கள் கூய
வார்கலி யகடு கிறி யாடகந் தொற்றை யாழித்
தேரவ னுதயஞ் செய்தான் றிறனபி யெழுந்தா ரன்றே. 3

இந்துகாண் டிமிரம் போலு மிரவிகாண் பனியம் போலு
மந்தரப் புரிசை பக்கத் தலர்பலர் வலசை வாங்கிச்
சிந்துவின் கரையுங் கானுஞ் சிறைபரன் பிடைந்த குன்றுந்
தந்திரத் தாடனே சென்றார் தத்தமிற் சிலரி ருந்தார். 4

இன்னணம் வெருவிச் செம்பொ னிடுமதிண் மக்கம் வைகு
மன்னவ ரிடுக்க ணெய்த மரபந்தோ டெழும் வேந்தர்
நன்னிலைக் கவிமா ஆரு நடனவாம் புரவி யாகத்
துன்னிய சலவாத் தோங்குந் துவசமுன் னடத்திச் சென்றார். 5

மதர்விழிப் பவளச் செவ்வாய் மாதர்பொற் புரிகள் சேர்த்தி
யதரிடை நீவி விட்டத் தணிக்கபொன் னூச லாட
னிதியுரை கல்லின் மாற்றை நிலைத்துற வழிவான் செட்ட
ரெதிரிருந் துரைத்தல் போன்ற வெழிறிகழ் வீதி யன்றே. 6

வணங்கிடைச் சுமக்க லாற்றா வனமுலைப் பவளச் செவ்வா
யணங்கெனு மின்சொ னல்லா ராடவ ருடனே யூடிக்
கணங்கொளு மணியும் பொன்னுங் கழலவே நீத்த குப்பை
திணங்கமழ் குருதி வைவே னிருபர்தே ருருள்த டுக்கும். 7

வெண்ணிலா விரிந்த தென்ன விளங்கிய சுதைகொண் மாடத்
தண்ணிறை மகளிர் கூந்தற் கூட்டகிற் புகையப் பாரிற்
றண்ணுறை சிந்து நீலச் சலதரக் குலமென் றெண்ணிக்
கண்ணிறை பசிய தோகைக் களிமயிற் றெழுதி யாலும். 8

சிலைநுதற் றிலதந் தீட்டச் சிப்பிட்டுக் குழல்கைச் செய்யப்
பலகல னணியக் கொங்கை பருமணிக் கச்சு வீக்க
வலர்விழி யஞ்சொ னல்லா ரகன்மனைச் சுருங்கை வாயி
னிலையுறு மாடி யென்ன நிறைமதி வந்து நிற்கும். 9

புத்திருந் ததனைத் தேர்ந்து பொதியினு மன்றி னும்போந்
ததியரி யாரே யென்ன வழைத்தவந் தன்பு கூறிச்
சுதையமு தருத்தி வேட்ட தூசுபொன் மணியு மற்று
மிதயமின் புறவே நல்கு மிரக்கமுற் றினிய நீரார். 10

கொடித்திர ளுடங்கு மாட கூடகோ புரத்து மற்றும்
வடித்தநூற் கலைக டேர்ந்த மறையவ ரோதல் கேட்டுப்
படித்தன சிறைப்பைங் கிள்ளை பகர்ந்தன காரிப் பிள்ளை
நடித்தன மயிலின் கொள்ளை நகரெலாஞ் சிறக்க வன்றே. 11

ஆலைவாய்க் கரும்பு தண்டித் தாட்டிய வொலியுந் தண்ணஞ்
சோலைவாய்க் குயில்கள் சுண்ணந் துதைந்துகூ மொலியும் வெற்றி
மாலைவாய் புயத்து மன்னர் மணமுர சொலியுஞ் சூழ்ந்து
வேலைவா யொலியு மஞ்ச வியன்மறை முழங்கு மன்றே. 12

இத்தகைச் சிறப்பு நோக்கி யிரும்பனைத் தடக்கை நால்வாய்
மீத்தகக் கரடக் கைமா மன்னவர் புடையிற் சூழ
வுத்தம மறைக ணான்கு மோதிய விறசூல் வாசக்
கத்திகை நாற்று மக்கக் கறத்தகம் புகுந்தற் றாரால். 13

புவிநடுத் தலத்தின் முன்னோன் குயிற்றுபொற் கஃபத் தல்லா
வவிரொளி புறத்திற் போகா தணிந்தகஞ் சுகிபோற் செய்ய
கவின்மணி யதனாற் செய்த கறத்தினுட் புகுந்து சோமன்
சவிகெட வொளிரும் பள்ளி தனைவலஞ் செய்து வந்தார். 14

குலஞ்செய்த பவமு நீக்கு மெனமனக் குறிப்பி னெண்ணி
வலஞ்செய்து மெல்ல மெல்ல மலரடி பேர்த்திப் பேர்த்தி
நிலஞ்செய்து வருதல் கண்டு நெகிழ்மனக் குபிரர் தத்தஞ்
சலஞ்செய்வான் குடையார்கேட்பச் சுன்னையிற்சிறிதுசொல்வார்.

இத்தல மிருக்கு மேல்வை பெரும்வலி பேறு போன்ற
மைந்தர்கள் மதீனம் புக்கி மதங்கெட நடக்குங் கூதிர்
தந்திடு சுரமுந் தாக்கித் தனுக்குறைந் ததனாற் பைய
வந்தின ரென்னச் சிந்தை யுறமறுக் காற்றிற் சொற்றார். 16

அம்மொழி செவியிற் கேட்டே யருணபி தவாபை யொல்லை
வம்மெனச் சொன்னார் வச்சிர வரையினுங் கதித்தெழுந்து
விம்மிதத் தடந்தோள் வேந்தர் வெங்கவுட் சிறுக ணால்வாய்
மும்மதக் கரிக ளேய்ப்ப நடந்தனர் முயற்சி யுற்றே. 17

வந்தநாள் முதலா மீறு நாளது வருமட் டாக
விந்தவா றொல்லை சுற்ற யாவர்க்கும் பறிவா மென்னத்
தந்தவா னவர்கள் கோமான் றரக்கிறு மலையிற் பெற்றோ
ரித்துவான் பிளவு செய்தோ ரிறைநபி யருளிச் செய்தார். 18

கனமென்ன வதவுஞ் செங்கைக் காவல ரும்றாச் செய்து
மனமகிழ் சிறக்குந் தூய மக்கமா நகரின் மூன்று
தினமவ ணிருந்தார் காபர்த் திரளவை திருமுன் வந்து
முனைமெய்க் கெழுதித் தந்த முறிப்படி நடத்து மென்றுங். 19

சத்தியத் தவற னென்றன் றெனவலி தருக்கி னேகி
மத்திபா யெங்கு மோங்கு மறைமொழிக் கலிமா வோது
முத்திரைப் புயத்தார் பாத முளரியின் மகுடந் தாழ்த்துப்
பத்திர மளித்த மூன்று பகலுமிங் கிறந்த தென்றார். 20

நன்றுநங் கவின வாசி நாகிளஞ் சோக மேறு
மின்றிகழ் கொடிஞ்சித் திண்டேர் மிக்கவா ருழவர் சூழ
வொன்னுபட் டெழுமி னென்ன வும்பர்வாழ்த் திறகுல் கூறக்
குன்றெனப் பணைத்த திண்டோட் கொற்றவர் திரண்டெழுந்தார்.

பல்லியங் கடலிற் பொங்கப் பதாதிமுன் னடப்ப வாசி
பெல்லிடைக் கொண்டு செல்லும் வேளையிற் பொய்மை நாளுஞ்
சொல்லபு ஜகறுஞ் சென்னி சோரைவிட் டொழுகத் தாக்கும்
வில்லுடை ஹம்சா வீன்ற மகள்விழி கலுழ்ந்து வந்தார். 22

அழுதுவந் தடைந்த பிள்ளை யதனைக்கண் டடையா ராவி
கழுநுனை வளிக்குஞ் செவ்வேற் கையலி மகிழ்ந்தெடுத்துப்
பழுதில்கற் புடைய பீவி பாத்திமா கரத்தி லீய்ந்தார்
முழுதுந்தன் குழவி யென்ன முத்தமிட் டணைத்துக்கொண்டார்.

தெள்ளமு தனைய தீஞ்சொற் செவிக்குண வளிக்குஞ் செல்வப்
பிள்ளையை யருட்க ணீங்காப் பெண்ணமு தேந்திச் சென்றார்
கள்ளவிழ் மரபத் தோளிற் கடனுடை யுலகந் தாங்கித்
தள்ளொணுச் சீர்த்தி கொண்ட ஜகபறு கண்டு செல்வார். 24

தயவுடை மகனை வெவ்வேற் றடக்கர ஜகப றென்னும்
பெயருண்டக் குருசில் கண்டெம் பெய்வளைக் கிழத்தி மூத்தாள்
பயனுறப் பெற்ற செல்வப் பசுங்கிளி யித்தை யென்பாற்
செயமுறத் தருதி றென்ன வழக்குரை செப்பி நின்றார். 25

மின்னுடன் பிறந்து காட்டி [illegible] செய்ய தென்போ
ரென்னுடன் [illegible] வீன்ற விச்சிறு குழவி யோம்ப
மன்னிடம் வேறு முண்டோ வளர்ப்பது மியானே யல்லாற்
பின்னையார் பிறிது கொல்லென் றருட்டிறம் பேசி நின்றார். 26

ஊழ்வலித் திறங்க ளோர்ந்த வுளத்தினர் மூவர் தாமும்
தாழ்விலா மகவி னாசைத் தடங்கடற் பெருக்கங் காட்ட

வாழ்வெலா மொருங்கு தேக்கும் வண்புக ழிறசூல் செய்ய
கேள்மறைப் பதத்திற் றாழ்ந்து கிளத்தினர் வழக்கை யன்றே. 27

நடுத்தரா சென்னச் சொல்லு நபியுல்லா விளங்கக் கேட்டு
மடித்தலஞ் சுமந்து பெற்ற வன்னையர் மரித்த காலை
யடுத்துடன் பிறந்த வன்னை மாரந்தப் பிள்ளை தன்னை
யெடுத்தமு தூட்டிப் போற்றி வளர்ப்பது மியற்கை யென்றார்.

ஆதலான் மகவை யீன்ற வன்னைபின் பிறந்தா டன்னைத்
தாதவிழ் மாலை சூட்டித் தருமியற் ஜகப றென்னும்
வேதியர் வளர்ப்ப ரென்ன விதித்தவர் கையி லின்னே
கோதிலா வமுதந் தீஞ்சொற் குழவியைக் கொடுமி னென்றார்.

கொடுத்திடு மென்ன வேதக் குடியிருந் துலகங் கொள்ள
விடுத்திடு மிறசூல் கூற விறற்புலி யலியுங் கற்புப்
படுத்துறை யமுதத் தீஞ்சொற் பாத்திமா நாச்சி யாரு
மடுத்துறு மாவி யில்லா வுடலென்ன வமலந் தீர்ந்தார். 30

வாம்பரி யலியுஞ் செல்வ மகளுமென் முகங்கள் வாடிக்
கூம்பிய குறைக ளூரக் கோல்வளை யாது வைய்ய
மேம்படக் காத்த வள்ளல் வியன்மறை நாவ ருள்ள
மோம்புற வறிவு காட்டி யொருப்படத் திருத்தி னால். 31

உம்றாச்செய்தபடலம் முற்றிற்று.

ஆக படலம் 24-க்கு திரு விருத்தம் 629.

மதீனம்புக்குபடலம்.

புயற்புன லனைப்ப மின்னூர் பூங்குழற் சுகிலி னாட்டும்
வியப்புகை புலர்த்தச் சோதி விளங்கிய கொடிக ளொட்டு
மெயிர்ப்புரம் போர்த்து துன்னு மிடக்கையுங் குடையு மல்க
மயிற்குல மாடு மக்க மனைமறு கிடங்க டந்தார். 1

அரக்கெறி குமுத நீல மம்புய மலரின் வீழ்ந்து
வரிச்சிறை யறுகாற் புள்ளி மதுகர மிசைகள் பாடக்
குரக்கினம் வருக்கை தாவிக் குடக்கனி போழ்ந்து சிந்தும்
பெருக்கமார் சோலை நீந்திப் படர்ந்தனர் பிறங்கற் றோளார். 2

படுபரன் மிடைந்த கல்லும் பதுக்கையு முரம்புங் கோட்டு
நெடுமரக் கடறும் புல்லு நிலத்திலூர் வனவு மற்றும்
விடுசுடர் பரப்பும் வெவ்வேல் வேதியர் சலவாத் தோதி
வடிவுறு மூவகை பொங்கும் வளம்பல கடந்தா ரன்றே. 3

மடைதவழ் முதுநூற் சங்கம் வனசமுள் ளரைத்தாள் வட்ட
வடைகளி னுயிர்த்த முத்தை யவிரிள நிலவென் றெண்ணிப்
புடைசெறி குமுத நீலம் புனிற்றரக் காம்பல் கூண்ட
சடையிதழ் விரிக்கும் வாவிச் சீர்பெறுந் தலத்தி னுற்றார். 4

முகிற்குழாம் படிந்த தென்னை முழுமணி மறுகு தோறுந்
திகிற்படங் கமைத்து வாவுந் துரகதப் பந்தி கட்டிப்
பகுப்புறும் பண்டங் கொள்ளப் பகர்வன கடைவகுத்துத்
தகுத்துறு மிறகு இல்லா விருந்தனர் தபன வெப்ப. 5

அறத்தினுக் குறையு ளென்னு மருமது மற்றுங் கோரு
மறத்தினைக் கெடுத்துத் தூய்மை வளர்க்கின்ற வும்பூச் செய்யத்
திறத்தெழு ஞான்றி னாங்குந் தேர்ச்சியா விருறுங் கட்டிப்
பொறுத்திருந் ததனுள் மாதர் போகமு மறுத்தி ருந்தார். 6

வளப்படுங் கமல வாவி மலர்நறும் பசும்பூஞ் சோலை
குளப்புற மகலாப் பண்ணை குல்விய சரீபு தன்னிற்
றளப்பசுந் துருக்க மாலை யூரிது தவித்தாற் கற்பி
னுளப்படு மைமூ னின்ப முவந்தனர் நபியுல் லாவே. 7

அடலரி யேறு போன்ற தோழர்கட் கமுத மூட்ட
வுடனுயி ரனைய சல்மான் பாரிசை யுவந்தழைத்துக்
கடகரி யனையா யீத்தங் கனியும திடத்தி னுண்டேற்
றிடனுற வருள்வா யென்னக் கேட்டனர் செய்ய தன்றே. 8

சடங்கத்தி னிருந்த வீத்தந் தண்ணறுங் கனியை யன்புற்
றடங்கலு மெடுத்துத் தூத ரடியிணை தொழுது வைத்தா
ரிடங்கொளு முவகை கூரக் கனியிலோர் பிடியெடுத்து
மடங்கலு மடங்கும் வீர ருண்ணவோர் வளத்திற் பெய்தார். 9

அள்ளிலை வடிவேற் செங்கைத் தோழர்க ளுடனே யவ்வூ
ருள்ளவர் தமையுங் கூட்டி யும்பர்வாழ்த் தெடுப்ப நாளுந்
தெள்ளிய மறையின் றீஞ்சொற் செகத்தினில் விளக்கஞ் செய்த
வள்ளியோர் விருந்த ளித்தார் வாய்வயி றார வுண்டார். 10

எண்ணிறந் தவர்க ளியாரு மிருங்கனி வயிறு விம்மி
யுண்ணிறைந் திடவே யுண்டு மோரணு விம்மி யேனுங்
கண்ணகன் வள்ளம் பெய்த கனியினிற் குறைவி லாத
வண்ணங்கண் டிறையோன் றூதர் மகிமையார் மதிப்ப ரென்றார்.

பழமறை பழகுஞ் சல்மான் பாரிசை மகிழ்ந்து கூவி
யொழுகுதேன் வழியு மீத்தங் கனிசில வுவந்த ளித்தாய்
கழுவிய மணிபாற் செய்த கலத்தின்முன் னிட்ட மட்டா
னிழுதுமிழ் வயிரப் பூணாய் மின்கனி நீகொள் கென்றார். 12

மலர்தலை யுலகிற் செம்பொன் மணியினுங் கனியை யன்பாய்ப்
பலகைசெய் பேழை தன்னிற் பத்திரப் படுத்திக் கொண்டா
ருலகமும் விண்ணுங் கொள்ளா வுயர்புக ழிறசூ லல்லா
ஜலதரக் கவிகை யோங்கச் சரீபெனுந் தலங்கடந்தார். 13

இருபுறங் கவரிக் குப்பை யிறும்பினீ ரடித்து மோதுந்
திரையினிற் பொலிய மண்டுஞ் செழுந்துகிற் றுவசம் வானத்
துறவர மகளிர் நுண்ணூ லொல்கிய மருங்குல் காட்டக்
குருமணி விளம்பிற் றாக்குங் குடைநிழல் கவிப்பச் சென்றார்.

முருகுலா மரப மாலை மொய்ம்பினர் புடையிற் செல்லத்
திருகுவெஞ் சினங்கள் மாறச் செயத்தொறுப் பிடரிற் பேரி
பெருகிய தடாரி பம்மை பிறவுமேற் கடலிற் பொங்கக்
குருகுலாந் தடமுங் காவுங் கொண்டநன் மதீனங் கண்டார்.

கண்டவர் பவங்க டீர்க்குங் கமழ்ப்பதத் திமைப்பி லாத
வண்டர்க ணித்தமும் வந்து தொழுமட லிறசூ லுல்லா
தொண்டைவாய் முத்த மூரற் றுடியிடைக் கரிய கூந்த
லொண்டொடி மைமூ னேறு மோங்கெயிற் புறத்தி றுத்தார். 16

வட்டவன் குடையார் சூழ்ந்த மதிற்புறத் திறுத்தா ரென்ன
வட்டபான் மொழியார் பன்னீர் வார்த்திழு தரைத்த சாந்தாற்
றிட்டையுஞ் சுவருந் தீற்றிச் சித்திர மெழுதிப் பாளை
யிட்டபொற் கும்பம் வாயி லிடையிடை சிறப்ப வைத்தார். 17

பத்தரிட் டலர்க ளூற்றிப் பாளிதத் தீப மேற்றி
யந்தரத் துயர்ந்த கம்பத் தவிருமாந் தளிர்க டூக்கிக்
கந்தரங் குழைத்த தாற்றுக் கதலிமா தனையு நட்டிச்
சிந்துநேர் மறுகு மன்றுந் திருத்தியொப் பனைசெய் தாரால்.

தளவிள முகைவெண் மூரற் சருக்கரை கருணை முப்பா
லனைவனாய் முகமன் கூறி யாதல ரெவர்க்கு நல்கி
யுளமகிழ் சிறப்பச் செம்பொ னொளிர்மணி துகில்பூண் மற்றும்
வளமுறு தருவான் மேக மானமே யளித்த பின்னர். 19

கன்னியம் புரிசை யாடை கட்டிய மதீனம் வாழு
மன்னிய ராரணத் தின் வருமுப நிடதத் தேர்ந்தோ
ரன்னியர் தாமென் றென்னு மறிவினர் தவத்தின் மிக்கோர்
நன்னில முதியோ ரெல்லா நபிபதம் வந்து தாழ்ந்தார். 20

வரியரி சிதறி மைதோய் மதர்விழி யஞ்சொ னல்லா
ரெரிமணிப் பூண வாவு மெழிலுடை மைம்மூன் முத்தத்
தரியிடு நூபு ராதி சதன்மறை வந்து தாழ்ந்து
வரிசையிற் சிறப்பச் செய்து மனக்களிப் பெய்தி னாரால். 21

கடகரி யனைய வீரர் கன்னியர் மற்றி யாரும்
படவர வுறுத்தோர் பாத தாமரை பணைத்து வாய்ந்த
வுடலுயிர் போல வந்த வுபர்கபி தம்மைச் சூழ்ந்து
குடவளை தவழு மோடைக் கோட்டையி னகத்திற் புக்கார். 22

சிவிறியிற் சுண்ண மேந்தித் தெருத்தலை வாயி றோறு
மவிரிழைச் சும்மை நீங்கா வணங்கனார் வீசிச் செல்லக்
கவின்மணி திளைக்கு மாடச் சிறப்புக்கண் களிப்ப நோக்கி
நபியுல்லா மனையிற் போந்தார் நண்பர்தம் மனையிற் சேர்ந்தார்.

பன்னுநான் மறைதேர் சல்மான் பாரிசுக் கிறசூ லீய்ந்த
சென்னிறத் துவர்க்கா யீய்ந்தின் செழுங்கனி யமுது தன்னை
யன்னவ ருடனே சேர்ந்த குடும்பமு மடுத்து ளாரு
மின்னலை நீக்கி யாறைந் தாண்டிஃ தணவா யுண்டார். 24

முப்பது வருட மாக முன்முனை யிலைகா னீண்ட
கப்புடைக் கச்சூ ரத்தின் கனியுண வாக வுண்டு
மப்படி யிருந்த விம்பி யனுவள வல்க லின்றி
யிப்படி யிருக்கு நாளி லிடுக்கணொன் றடுத்த தன்றே. 25

வானிரும் பலகை பார்த்து வரியினோ ரிசுறு பேனுந்
தானதிற் சிதகா வண்ணந் தருமறை கோவை செய்த
தேனிமி ரலங்கற் றின்டோட் டிலம்புடை யுதுமா னுவி
மேனிலம் புகுந்த நாளில் வியன்கனி கள்வர் கொண்டார். 26

கள்வர்கைப் படாது சல்மான் கான்முழை வழியில் வந்தாற்
கொள்ளுவர் கியாம மட்டுங் கொழுங்கனி யுணவர் யென்னத்
தெள்ளிய மறையின் றீஞ்சொற் றெக்கிய பொருள தெல்லா
முள்ளுணர்ந் தெவர்க்குங் காட்டு முரவர்கள் பலருஞ் சொன்னார்.

மதீனம்புக்குபடலம் முற்றிற்று.

ஆக படலம் 25-க்கு திருவிருத்தம் 656.

தாத்திரி நகரத்தார்

ஈமான்கொண்ட படலம்.

உவரி சூழ்புவி யிற்புக ழோங்கிய
வவுதற் கய்சென் றறைகுழாம் வாழ்ந்திடும்
நவிய தாத்திரி நாட்டினி லுள்ளவர்
செவிய தினிற் றிருந்திய தோதுவாம். 1

தத்து வெண்டிரைத் தாத்திரி யின்கணின்
வர்த்தகஞ் செயு மூந்திறன் போர்வலி
கத்தொ ழிற்குறை யூர்கடந் தாவிவாய்
நத்துலா மதீ னாநகர் நண்ணினர். 2

வந்து வாணிகஞ் செய்கின்ற நாளில்வா
னிந்து வந்திருந் தொட்டி லசைத்திடச்
செந்தி ருக்குத் துயின்றெழுஞ் செம்மருள்
முந்தி ரென்பவர் முன்வந்தி றைஞ்சினார். 3

தருக்கி னேத்திய தாறுவை நோக்கிவா
னருக்க னொப்பு மருமது நன்னபி
யுருக்க மாயுந் தூரிமின் னாரின்னா
ரிருக்கு கின்றன ரோவென் றியம்பினார். 4

வண்டு லாம்பொழி னம்பதி மாக்களைக்
கண்டு கேட்டது மில்லையிக் காவலர்
பண்டு ணர்ந்தவர் போலப் பகர்ந்ததா
லெண் டிசைக்கு நபியென வெண்ணினார். 5

உள்ள மூழ்கு யுறைந்த குபிரிரு
ளள்ளி விட்டெறிந் தானந்த வார்கலி
வெள்ள மூழ்கிமுந் தீறெனும் வேந்தர்சீர்
தெள்ளு நன்மறைத் தீனிற்பொ ருந்தினார். 6

இலங்கு மிகுறவு வென்னுமச் சூரத்துந்
துலங்கு மும்மூல் குறானை னுஞ் குறித்தும்
புலன்க ளொன்றிப் பொருந்துந் தொழுகையும்
பலன்கொ ளும்படி கற்றனர் பண்பினார். 7

கடுத்த மொன்று வரைந்து கடற்செறி
நடுத்த லம்புகழ் நன்னபி முந்திற்கைக்
கொடுத்தும் முருறை கொற்றவர்க் கித்தைநீ
ரெடுத்து நல்குமென் றின்புற் றனுப்பினார். 8

வானி னும்பர் வணங்கிய நன்னபி
தேனி ருங்கம லச்செழுஞ் சேவடி
யான திற்றுணை யம்பக மொத்திவெந்
தான மார்கவுட் டந்தியொத் தேகினார். 9

பொங்கர் மென்மலர் பூத்தத டாகமுஞ்
சங்க மூருந் தடம்பணை மற்றவுங்
கங்க மாருங் கதிர்ப்படைக் காவல
ரெங்கு நீந்தி யெதம்பலி யேகினார். 10

காரு வப்பக் கொடையிடுங் காவலை
ரூச வர்க்குங் கொடுமென்ற வோலையை
வார முற்றவர்க் கேவழுங் காமலே
யோரு முள்ள மறத்தொரு மாடமேல். 1

தனித்தி ருந்து சலாத்தஞ்சை யுந்தொழு
தினித்த தேனிறு மின்புறுஞ் சூரத்துந்
தொனித்தி டும்படி யோதித்து ஆப்புரிந்
தனித்த மின்றிப் பராக்கது வாயினார். 1

இன்ன பாங்கினி லேத்தியி றைஞ்சுத
லன்ன வர்க்கினி தன்புறும் பாரியா
மின்னி னுண்ணிடை வெண்மணி மூரறேன்
கன்னன் மென்மொழி காண்பள்பன் னாருமே. 1

ஓருதி னத்திலவ் வொண்டொடி தன்னைமுன்
னரிதி னிற்பெறுந் தந்தையஜ் ஜாசுமுன்
னிருதி னம்பிடி போலவந் தின்புறச்
சரணி னைத்தொழு தோர்மொழி சாற்றுவாள். 1

எந்த னாருயி ராய்வரு மெங்கையே
மூந்தை நன்மணை மென்னை முடித்தவர்
நந்து லாமதீ னாநகர் நீந்திவந்
தந்த நாண்முத னேமம்வே றாகியே. 1

தெளித்த கற்புன றேடியெ டுத்துவந்
தளித்த செங்கர மானனங் கம்பதங்
குளித்தி டும்படிக் கோதறச் சுத்திசெய்
தொளித்து நின்றொரு மாடத்தி லோம்பியே. 16

மடித்த லத்திரு செங்கம லக்கரம்
பிடித்தி றுக்கிப் பிதற்றி முணுமுணுத்
தொடுக்கி யைம்புல னோர்திசை நோக்கியுட்
டடத்து நின்று திரும்பவென் செய்வரால். 17

ஆறு மேனி குழைந்தகங் கைமுழந்
தாளி லூன்றித் தலைகிளர்ந் தொல்லையி
னீளி லாட நிலம்பட முட்டியே
மீள வைகுவர் வீணிற் வேலையே. 18

என்று தேமொழி யெந்தைக் கவையெலா
மின்று ணர்த்திட நெய்துடைத் தொள்ளொளி
துன்று வேற்கரத் தோன்றன்முந் றிறமுன்
சென்று சாவினர் சிந்தைபொ ருந்தவே. 19

முத்தி பெற்ற முகம்மது நல்கிய
கத்தை யுங்கொடுத் துள்ளங் களிப்புற
வுத்த மக்கலீ மாமகிழ்ந் தோதிநற்
பத்தி யுற்றதும் பன்னினர் முந்திரே. 20

உரைத்த செய்தியு மோலையு நன்னபி
வரைத்த செய்தியு மான்பினு ணர்ந்துளந்
தரித்தஜ் ஜாசெனுந் தக்கவர் தீனிலே
பொருத்தி மாசறு புன்குபிர் போக்கினர். 21

கடங்க ரைத்தெறி கைக்கரி யூனுகர்
மடங்க லேய்ப்ப வருமிரு வோர்களுந்
தடங்கொண் மாநகர் சான்றவர் கூவிளங்
திடங்கொ டம்மனை மாடத்தி ருத்தினர். 22

இற்று வெண்பிறைக் கோட்டினிற் கிம்புரி
யேற்றும் வெள்ளை யிபத்தின் வருநபி
யாற்று சுத்தை யவர்கட் களித்தவர்
தோற்ற மும்மெடுத் தோதினர் தோமறு. 23

வரைந்த வோலையின் வாசக மும்மிகு
மருந்த வத்திரு வோரு மறைந்தனுந்
தெரிந்து ணர்ந்து தெருட்சியின் றீனிலே
பொருந்தி னர்மிகு பேர்புக ழோங்கவே. 24

இலங்கு முள்ளத் தீ மானிலே பெற்றவ
ரலங்க லொண்புய வண்ணலஜ் ஜாசுடன்
குலங்கொண் மன்பதி னல்வரைக் கூட்டிநற்
பலன்கொ ளூனபி பாற்செல வேவினர். 25

தொக்க தம்பதி நீந்திச்செ ழுஞ்சுடர்
நக்கு முத்தின நத்தொலி வூர்விதேன்
கக்கும் பொங்கருங் கல்லுங் கூடந்துசீர்
மிக்க நன்மதீ னநகர் மேவினர். 26

அரத்த முண்டொளி ரன்னிலை வெய்யவேற்
கரத்தி னண்பர் கவின்முக நோக்கிமீன்
சிரத்த ணிந்த திருநபி தேத்துளி
யிருத்தும் வாய்மலர்ந் தின்புற வோதுவார். 27

ஆட்டி றத்த வுதற்கயி சென்னுமக்
கூட்டத் தோர்பதி னால்வருங் கூரயில்
வாட்டி றத்தவஞ் ஜாசுநம் மாட்டுற
நாட்ட மாய்க்கண நண்ணுவ ரிங்கென்றார். 28

அதித வாய்மை யறிவித் திருக்கையின்
மதியின் வாண்முக மன்னவ ரியாவருந்
துதிசெய் யாதிதன் றாதரைக் காணவென்
றிதய மீதி லிருக்கின்ற வாசையால். 29

விளையும் வேக விறற்பரிக் கால்களிற்
றளைகள் பூட்டிடிற் றுமத மாகுமென்
றிளைய ரியாவரு மொல்லைவந் தேகுபிர்க்
களைக டிந்த நபிகழ லேத்தினார். 30

மதுகை வேந்தர்கண் மேற்கொடு வந்தவைங்
கதிகொள் வாம்பரி யாவையுங் காற்குரம்
புதைய வார்த்தளை பூட்டியஜ் ஜாசுதங்
குதிரை யுந்தளை கொண்டுறப் பூட்டினார். 31

மைந்த மைந்தெழு மைந்தர்கள் பண்டங்கள்
சிந்தி டாதொரு சேகரஞ் செய்தபின்
முந்த வீக்கிய கோசிக முற்றுநீத்
திந்து வேய்க்குந் அகிலிடை வீக்கினார். 32

அங்கி பாகு புனைந்தலங் காரஞ்செய்
தெங்க ணாயக ராமிற சூல்பத
பங்க யத்தினை வந்து பணிந்திரு
செங்கை தொட்டுச் சலாஞ்செப்பி னாரரோ. 33

முன்னில் வந்திரு கைத்தல முத்திடு
மன்னை நன்முக மண்டல கூறிநீ
ரின்ன னீங்க விருமென வின்னிசைத்
தென்னு லாமறைச் செய்பதி ருத்தினார். 34

தக்க வீரந் தரித்தவஞ் ஜாசட
னொக்க வந்த வுறவ ரொருப்பட
மிக்க யாங்க ளொருகுல வெந்தரென்
றக்க மொத்த வருணைபிக் கோதினர். 35

மன்னு மிப்பதி யாம்வர வேமன
முன்னிற் றுரையி லொன்னல ராமுல
றென்னுங் கூட்ட மிடிக்கண் விளைப்பர்கண்
டன்ன தால்வர வேயரி தாகையால். 36

சங்க வாரித் தலத்தினின் மேவிய
திங்க ளன்குமட் டவ்வழி சேறலா
முங்க ளூரின்மற் றுள்ளபன் னுளெலா
மிங்கி யாவரு மேயவொ ணுதரோ. 37

உற்ற வெங்குலத் தோர்களி மானுளாம்
பெற்று வீடு பெறுவதற் கோர்நெறி
சொற்ற னுப்புகற் றாதிற லூலென
வெற்று நெஞ்சத் தினியவ ரோதினர். 38

அண்டம் பூவு மமைத்த வொருமுத
லுண்டென் றீமா னுளத்தி லிருத்துமின்
பண்டை மாமுத லுக்கிணை பௌவமாரீ.
மண்ட லத்தினின் வைப்ப தொழியுமின். 39

நன்று நன்குறு மேவலொர் நான்குள
வொன்று வல்லவ னைத்தொழு தோம்பமி
னென்றி மெய்சக் காத்து விருப்பமுற்
றென்னுந் தேடு முதலினி லீயுமின் 40

புலனொ டுக்கி விரதம் பொருத்துமி
னலன் கற்றுகடன் னுருயிர் மாய்த்துவெவ்
கல்க மிட்டுக் கவர்பொரு ளைங்கிலொன்
றிலையு மாதுலர்க் கீயுமி னென்றனர். 41

மூற்றுந் திவ்விய முந்திரி கைக்கனி
யுற்ற கள்ளுங்கச் சூத்தி னெண்கனீ
மற்ற மூற்ற தவசவ ருட்டமு
மற்றும் வெய்ய வெறியுள வற்கழும் 42

இந்த நான்கு முனைவிலக் கென்றபின்
கந்த மான்மதங் காவதம் வீசுமோர்
சந்த மென்புயத் தானுவஜ் ஜாசுதன்
விந்தை மாமுக நோக்கி விளம்புவார். 43

வேதச் செய்யுளை மீக்கொள நாடொறு
மோதித் தேர்ந்தவ வுன்னிடத் திலரு
ளோதிக் கெய்ந்த விரண்டடை யாளமிப்
போதிற் கண்டன மென்னப் புகலுவார். 44

அன்ன நல்லடை யாளம தேனெனின்
மன்னு கின்ற பொறையு மமைதியு
மென்ன வேத மிருந்தமு தாறிநேர்
தான்றும் வாய்மலர்த் தன்பொடு சொல்லினார். 45

அந்தக வாய்வின் டருளிய விக்குணம்
புதிதோ வெற்கிது பூருவ மோவென
விதமு கத்துவஜ் ஜாசு விளம்பல்கேட்
டெதிரி லக்குண முன்னுள தேயென்றார். 46

ஆன நன்குணை கேட்டுங் கருணொடுந்
தானு வந்த குணத்திற் றரைத்தலத்
தீன மின்றிப் படைத்தெனைக் காத்தகற்
கோனுக் கேபுக ழென்னவே கூறினார். 47

நேர்வ ழிப்பெறு நீவிரு நீங்கள்வா
ழூரில் வைகு முறவர்க ளியாவரும்
வார முற்றவொ ருண்மைய ரிங்குமென்
றூர முற்ற வருணபி கூறினார். 48

ஈண்டு றைந்தவ ரின்றுயி ராயினும்
வேண்டி யீய்குவ மென்ன விளம்பினா
ராண்ட கைத்திற லண்ணலஜ் ஜாசென்போர்
மாண்ட ருமொரு வார்த்தைவ ழங்குவார். 49

அந்த காலத் தருரணீக் கம்பியோக்
வந்த நாயகா யாங்கீண்டிழ வைவருந்
தந்த வாய்மை தவறில மெங்கரு
ருந்து மாந்த ருள்மறி யேமென்றார். 50

சொற்றிறத்திற் சுருதிநல் வாய்மையின்
மற்றியாரு மிகருறு மைந்தரி
லாற்ற மைந்தரொ ருவரை யெம்முடன்
கொற்ற மேவுறக் கூட்டி யனுப்புக. 51

ஆண்டு சென்றிடி லப்பதி யோருளத்
தீண்டு மீமா னிருந்தகத் தானிங்கிடற்
காண்ட காத்திறற் காவலர் சொற்படி
வேண்டுங் கவ்வை விளைப்பமி யாமென்றார். 52

உதவி யாமென் றுரைத்தசொற் கேட்டொரு
முதல்வன் றன்றாஜ ஜாசுமு காம்புய
மதியை நோக்கியின் மாட்சியிற் புத்திமி
லெதிரி யாரு மிலையென வின்புற்றார். 53

வாட்டி றத்தினின் மாமறைச் சொல்வினி
லாட்டி றத்தினின் மிக்கவொ ரன்னலைக்
கூட்டி யொக்க வனுப்பினர் குவ்வினிற்
றேட்டு மென்மலர்ப் பொற்கழ றேய்ந்திடார். 54

எழுந்து நின்று நயியிரு தாளினில்
விழுந்து வீரர் மீசுக்களிப் பெய்திவா
னெழுந்து மோங்கலு மாவியு நீத்தித்தேன்
பொழிந்த தண்டலைத் தம்பதி புக்கினர். 55

வாய்ந்த வந்நகர் மாந்தர்க்கு முற்றலு
ரேய்ந்த பேர்க்கு மியன்மறை காட்டியே
தோய்ந்த வேத நயிவிடு தூதர்சென்
றுய்ந்த தீனிலே சேர்த்தன ரான்டெலாம். 56

தாத்திரிநகரத்தார்ஸ்நானங்கொண்டபடலமுற்றிற்று.

ஆக படலம் 26-க்கு திருவிருத்தம் 712.

தீயகனற் குழியாகிய

நரகம் சரூபமான மூஸ்லீங்கள்படலம்.

பூவலர் பொதுளும் பொங்கர் புடைசெறி மதினந் தன்னிற்
காவல ரிறசூ லல்லா கருணைகூர்ந் திருக்கு நாளி
லேவலும் விலகன் மற்று மியம்பிடு மறையின் றீஞ்சொன்
மேவிய குதுபா வோது மியல்பினை விளம்ப லுற்றும். 1

அருட்கடம் பூண்ட செங்க ணரியவன் சாகி மார்க
ளிருட்குழைத் தமுதச் செவ்வாய்ச் சேயிழை பொருந்தி வேதப்
பொருட்குடி யிருக்கும் வாய்மைப் புகழிற சூல்தம் முன்வந்
திருட்குபிர்கடி யும்வேந்தே யெனப்பணிந் திறைஞ்சிச்சொல்வார்.

பொற்புலா மெனது தாசன் புகல்பெய ரமீனு வென்போன்
சிற்பநூல் குழியக் கற்றோன் சித்திரத் தொழிற்கு மிக்கான்
கற்பகப் பதிக்கு வேந்தே கருத்தினுக் கேயு மென்னி
லற்புத மின்ப மொன்று செய்தியா னருள்வே னென்றான். 3

செய்வித்துக் கொணர்தி யென்னச் செப்பக்கேட் டொல்லை சென்று
கைவித்தா ரங்கள் பூண்ட பையலைக் கனிந்து கூவிப்
பொய்வித்தக வந்த தீய புன்குபிர்க் களைக டய்க்கு
மெய்வித்தாங் குதுபா வோத மின்பமொன் றமைமா யென்றான். 4

செவ்விய மரங்கள் வெட்டிச் செதுக்கிநா லேற்றிச் சீவி
யவ்விய மனுநாக் காறன் களிபெறக் கடைந்து வன்ன
மொவ்வொரு விரகை நீற்றி யுயர்நிலை மூழமி ரண்டுங்
கைவிரன் மூன்றுஞ் சற்றுக் கவின்றரு சட்ட நான்கும். 5

அட்டத்துக் கட்ட நிலை மணிமுடி யொன்று வைத்துக்
கட்டிய படிக்கு முன்பு கைப்பிடிக் குமிழி ரண்டு
நெட்டையொ லொன்றோர் சாணு நெறிவிர லிரண்டு மேலா
யிட்டவப் படிக்குக் கீழ படியிரண் டிருத்தி யாதோ. 6

அதிகமா விந்தை யாக வமைத்தொளிர் பின்பற் றன்னை
மதர்விழிப் பவளச் செவ்வாய் மடக்கொடி சொணர்ந்து ஆதர்
பதமலர் தொழுது வைத்தாள் பணித்திற நோக்கி நன்பி
ரிதனைவந் தெடுத்துப் பள்ளி வலப்புறத் திருத்து மென்றார். 7

வைத்தன ரதற்கு முன்னார் வடிச்சுவை தெளித்துத் தீற்றுஞ்
சித்திரப் பள்ளி வாயிற் றிருநபி குதபா வீய்க்கின்
குத்தியி னின்று மற்றோ ரிந்தைக்கோ கனக மன்ன
வைத்தலைக் கொண்டு வெற்றிக் கதிபெற வோது வாரால். 8

விந்தையாற் செய்த பின்பற் படியின்மே னின்று வேதர்
சங்கமார் குதபா வோதக் கேட்டுத்தன் கமலச் செங்கை
முந்தைநாள் வெளவி போதுந் தருமுறைச் சுத்த மிட்ட
மைந்தர்கள் பலருங் கேட்டார் மதலைகள் கதும்வ தொப்ப. 9

திருத்தலை யசைத்து முன்னே சாடல்கண் டிறகு துல்லா
வருத்தலை யென்றி றங்கி மார்புட னணைத்துக் கொண்டார்
பெருத்திடுஞ் சத்தந் தீர்ந்த பின்புமுன் பிதித்து நின்ற
குருத்திலாக் குத்தி யுஞ்சோ கங்கள்போற் குமுறிற் றன்றே. 10

அழுகின்ற சத்தங் கேட்ட வரசர்க ளாதித பீதென்
றொழுகுநீர் கண்கள் சிந்திக் கொல்லென வொலித்தார் வானு
மெழுபுவி யிறவும் போற்று மிறைநபி யிருசூல் கட்டித்
தழுவியக் குத்தி தன்னைக் கதுழ்ச்சதே னென்று சொல்வார். 11

முன்னின்ற தலத்தி னீதார் முற்றுநீள் வேர்க ளூன்றி
மன்னுஞ்செங் கனிகாய் காய்த்து மன்பதைக் கணவீக ளுண்டு
கன்னின்ற கீர்த்தி கொள்ளக் காசினி விருப்போ மேலைப்
பொன்னின்ற சொர்க்கம் போந்து பூத்துக்காய் கனிந்து மாதோ.

ஆடர மகளிர் கொண்கர்க் கருங்கனி யமுது நல்கும்
பீடுறல் பெட்போ யாது பிரியங்கொல் லென்னக் கேட்டார்
சேடுறு பிடரிற் கிழ்பான் முத்திரை யுடையீர் செம்பொன்
வீடதி லென்னைச் சேர்த்தான் மேலவர்க் களிப்பே னென்ற. 13

ஊறுதே னமுத நீக்கி புள்ளுளுத் திருந்த குத்தி
கூறிய தொனியைச் சூழ்ந்த கொற்றவர் பலருங் கேட்டார்
வீறுயர் நிலையை நேடித் தெனவுனி மேறை ளுன்னைத்
தேறமப் பதியிற் சேர்ப்போ மெனநபி யருளிச் செய்தார். 14

கோதிலாக் குதுபா வோதக் கோணறப் பதுக்கி வைத்த
சோதிசேர் மின்பற் கீழ்பாற் றொட்டதை யடக்கிப் பின்னர்த்
தீதிலா வறிவு காட்டுந் திறன்மொழிக் குத்து பாவை
யோதினர் மின்பற் மேனின் றும்பரு மகிழ்வுற் றோங்க. 15

யீக்கொளப் புதுக்கி வைத்த மின்பறின் வரிசை கூறி
னூக்கனர் தங்கள் வேண்டு நவமணித் துறக்க வாயிற்
காக்கிய படிகட் கெல்லா மரியமுற் படியீ தென்னாத்
தேக்கிய மறையின் றீஞ்சொற் றோர்நபி யருளிச் செய்தார். 16

படிநிழல் பரப்ப வானிற் படர்ந்தெழுங் கரிய மேகக்
குடைநபி மனைக்கு மின்பற் குயிற்றிய தலத்தி னுக்கு
மிடைவெளி நீள மெண்ணு றுடனைந்து முழமா மந்தப்
புடையினிற் கற்ப காவென் றழைத்தனன் புதியோ னென்றார்.

இத்தலத் தியாவ ரேனு மிதையநெக் குருகி யேத்திக்
கத்தனைத் தொழுதாற் றீய கனற்குழி கருமா மென்ன
நத்தெனச் சிறந்த செங்கை நளினவாண் முகத்துத் தூத
ருத்தமத் துறவோர்க் கெல்லா மோதினர் மகிழ்வுற் றோங்க. 18

தீயகனற்குழியாகிய நரகம் கருமான முஸ்லீங்கள்படலம்

முற்றிற்று.

ஆக படலம் 27-க்கு திருவிருத்தம் 730.

ஒட்டகமேனியிற்புகுந்தபடலம்.

மற்றொரு வெள்ளி நாளின் வளர்புக ழிறசூ லுல்லா
கொற்றமீக் கூறுந் தூய குத்துபா வோதும் போதி
லற்றமில் லூமீ னியாரு மாதுலர் கலிகெட் டோட
வெற்றிசேர் சதக்காச் செய்மி னெனநபி விளம்பி னாரால். 1

தேத்துளி ததும்பும் வாயார் திருவுளம் பற்றக் கேட்டுப்
பார்த்திபர் தம்மின் மிக்க பாண்மறை முழுதுந் தேர்ந்த
நாத்திறத் தொருவர் வுசங்க ணுகிளந் தொறுவி னென்னைத்
காத்திரி வெளியோர்க் கத்தைத் தயவொடு நல்கி னாரால். 2

காற்றிறத் தழகு நீண்ட கழுத்தினிற் றிறமும் வீசும்
வாற்றிறத் தணங்கும் வெள்ளின் வனப்புறு கூறு மெய்யின்
பாற்றரு வடிவு நோக்கிப் பகரிலிவ் வொட்டை தன்னை
நூற்றிற னுடையீர் வாங்கு நமக்கென நவிது வன்றார். 3

ஒட்டகைக் குணமும் பொற்பு மோங்கிலக் கணமு மிந்த
வட்டகை யெவனுங் காணு மெனவிலை மதித்து வாங்கிக்
கட்டழ கெறிக்கும் வேதர் கடையினிற் கொணர்ந்து வல்லே
விட்டன ரதற்கு நாமம் விளம்பின ரிறுவா னென்றே. 4

கலிபுறந் தூரக்குஞ் செங்கோற் காவல ரிறகுல் வாயிற்
றலையினிற் கட்டித் தெண்ணீர் தழைநறுங் குளகு மீய்ந்து
பலதின மனது பற்றிப் பராபரித் திருப்ப ரோர்நா
ளுலவிரு ளிரவி னீர்க்கு விலகவெள் ளுவந்தெ ழுந்தார். 5

மழவிள வொட்டைப் பக்கம் வருகின்ற போது கண்ணிற்
குளகுணு மொட்டை கண்டு குழைந்துவாய் திறந்து மெல்ல
முழவுறழ் தடந்தோள் வேந்தே சளாமென மொழியக் கேட்டங்
கழகிய பிறத்தி சொன்னா ரதற்குப்பின் சோகஞ் சொல்லும். 6

அடிகளு நம் மிடத்தி லேழைக் கான்மன் றூட்ட மொன்று
திடனுறக் கேட்க நாடிச் சிந்தையுற் றிருந்தேன் பன்னாட்
படியிலிப் போதைக் கந்த வார்த்தைப்பா டருளி னன்றென்
றடவு டனுரைப்பக் கேட்டஃ தென்னென விளம்பி னாரால். 7

வெண்டலைப் புணரி வைப்பின் விருப்பமுற் றெனது வென்மேற்
கொண்டபோ லுவகை மீது முலாவுக வென்று கூறி
மண்டலத் தெமக்கு முன்யான் மாய்ந்திட வேண்டு மின்றேற்
பண்டரும் வென்மேல் மற்றோர் பரித்தலைத் தவிர்க்க வேண்டும்.

பண்டொரு குறைசி பாலி னிற்கின்ற நாளிற் றப்பி
விண்டுறு கூரன கத்திற் போந்தியான் மேயும் போது
கண்டழல் கொழிக்கும் வெய்ய கடும்புலி முதலாய் மற்று
மண்டிட வளைந்து கொண்டு மற்றொன்றுக் கொன்று நோக்கி. 9

நம்பசிக் கிதனைச் செற்றுப் பொசிப்பது நன்ற தன்று
வெம்புலிக் குயிர்க்கா டெல்லாம் வெட்டித்தின் விளைத்த வேத
ரிம்பரு மும்பர் மீது மேறுவா கனமென் றோதிப்
பம்பிரா முழுதுங் காத்து நின்றன பரிவி னோடும்; 10

அலையகட் டெழுந்த செங்கேழ் மலரிவந் ததித்த போது
தலம்வளர் பர்பூ டெல்லாந் தனித்தனி யென்முன் வந்து
நலகுள தென்னை யென்னை யுன்னென நவின்று வாழி
புலகமு மிதின்கா லூன்றப் பெற்றன முயர்பே றென்ற. 11

இப்படி யுரைப்பக் கேட்டே யனைகயா லடிக ளென்னை
யப்படி சேர்க்கு மன்றாட் டதனையான் விரும்பி னேனென்
றெப்பற வுரைப்பக் கேட்டன் னோகையுற் றானந்தீர் சிந்தை
யப்படி கவித்தோர் பாத்தி மாதமை வளர்த்த தன்றே. 12

நள்ளிருட் போதிற் றம்மு னுகிளஞ் சோகந் தாழ்ந்து
விள்ளுமச் செய்தி முற்றும் விளக்கிழைக் குரைத்தான் முன்றி
லுள்ளுறச் சேர்த்தி முப்போ தாதகநன் முறிமற் றாட்டித்
தெள்ளிதி னித்தை நன்றாய்த் திறப்பட வளர்த்தி யென்றார். 13

கற்பெலாந் திரண்டு மேன்மை கனிந்திடும் பாத்தி மாத
மிற்படி முன்னிற் சேர்த்தி யின்புற வளர்க்கு நாளிற்
றற்பர னலதி நாட்க டனக்குவந் தடுத்த லோர்ந்தோங்
கற்புதப் பொருளாம் பாத்தி மாதமை யமைத்த தன்றே. 14

விருத்தரு மாதர் சென்று மென்றொடிக் கரத்தா லொட்டைக்
கழுத்தினைத் தழுவி நீவிக் கனுழ்ந்தனர் புவிபை விட்டுப்
பழுத்ததேன் கனிகள் மற்றப் பதார்த்தங்கள் வேட்ட தாண்டு
கொழுத்துயர் விண்ணூர் வாழ்ந்து குடிபுகப் போந்த தன்றே.

ஆழமோர் குழியைக் கல்லி யடக்கினர் மறைவல் லோர்க
ளேழுநாட் சென்ற பின்ன ரிக்குழி மீண்டுங் கல்லிச்
சூழவின் றெட்டிப் பார்த்தார் தோன்மயி ரென்றுங் காணார்
வீழ்சட மதனை வல்லோன் மேனிலை புகச்செய் தானேல். 16

ஒட்டக மேனிலைபுகுந்த படலம் முற்றிற்று.

ஆக! படலம் -28க்கு-திருவிருத்தம் 746.

———

ராய்வேந்தனுடன்

பிசபிதுக்ககுணாதிகளைவிதித்தபடலம்.

தன்கடி யுயிர்க்குறல கந்தனி புரக்கு
மொண்கன நிழற்றவுயி ரேம்புநெறி வள்ளல்
வெண்கதிர் நிறத்துடல ராபியரின் வேந்த
னெண்கடிய பான்மையுள மென்னினர்கு றித்தே. 1

வன்மைபல வஞ்சமொடு மாறுநெறி போக்கி
நன்மைதரு மெய்ம்மையுள நாடுமதி யுண்டேற்
புன்மைதரு வம்புடையர் பொய்ம்மைபத றுலே
தன்மைநிலை கேடுதரு மோதருத லின்றே. 2

செய்பொருடு பன்மணி சிறந்தபுவி மாதர்
தம்பொலிவு கொண்டுதலை மைப்பெருமை கொண்டு
வம்புநிலை கொண்டது மதிக்குமொரு கேடுங்
கும்பியுறு துன்பமு மெடுத்தருளா மன்றோ. 3

நெடுங்கட லுடுத்தநில நின்றபொரு ளெதுந்
தொடுங்குண மனத்திடை தொடக்கவர்க ளல்லார்
மடங்கலிணை யாரெனினு மாதர்சிறி யோர்சொல்
விடங்கொளலர் தம்முள மிரண்டுபட லாமே. 4

தன்னுரையி னின்றபதி தங்குமின மாந்த
ரின்னுரையி னின்றமனை மென்னவொரு வஞ்சொற்
கொன்னுரையி ருலிக ளுளத்திடைநு ழைத்த
மன்னவ னெனைத்துணி வளர்ந்தது மதித்தே. 5

பொங்குதிரை போலுமொழி யாதநிதி யானும்
மங்கழுறு வன்மைமத வாக்கவினை யானுந்
தங்குபல வெள்ளிமணி யுத்தகைமை தன்னு
லிங்கிதமி லாதெழுதி றின்னவி னயந்தே. 6

உண்மையணி யுங்கொடி யுலாவுதிசை யாவுந்
திண்மையணி வீரகலை சீர்கொள்றமி யெங்கோன்
புன்மையணி மேவுபர் பெருப்படைக ளிங்க
னன்மையணி யப்பனற யறைந்திடமி னென்றார். 7

முள்ளுடை யிலைப்புனன் முழக்கொடு வருந்தந்
தெள்ளுடை யுளத்திறை திருப்பணி யணிந்தே
வள்ளுடை யருந்துடி வளங்கொளக மத்தி
லுள்ளுடை கட்டற்றெளிவி னெப்பற வமைந்தார். 8

செங்கமல வாவிசெறி மாமதின மூதூர்
தங்குமறை மேலவர் தவக்கடலி னெப்ப
வெங்கடுவ ரிக்குழுவி னூர்திமிக வூர்ந்தே
யெங்கணபி நாயக ரிடத்தவையின் மொய்த்தார். 9

ஊர்பொரு ளகற்றினரு வந்துதவி செய்தார்
போர்பொரு ளுளத்தின ரிவற்றியல் புணர்ந்தார்
கார்பொடு படர்ந்தசய தன்மையுள ருள்ளத்
தார்பொடு கனிந்துவிறல் கேதன மணிந்தே. 10

கைதவ மிருந்தவய காரிதா வரத்தின்
செய்தினை யருந்தலைமை செய்திவருக் கேதொன்
றெய்தில்அபீத் தாலிபரு ளின்சகுப றுக்கே
மெய்தலைமைகொண்டிவர்சொன்மேன்மையொடுகேண்மின்.

இன்னவர் தமக்கொரு வருத்தமிலை கிற்பி
னன்னிலை நவாகத்தரு ளுதர் அபூதுல்லா
முன்னிலை நிறுத்திமொழி பின்படியி னிற்க
வென்னவு மறைந்தன ரிலங்குமகு மூதா. 11

வேற்றுமொழி கூறுமுனம் வென்றியர சேநே
தேறுமொழி நாமமொடு செய்வினைகு றித்திவ்
வாறுமொழி யிற்றுய ரெவர்க்குமடு மென்னப்
பாறுசூழல் வேலின்அபூ பக்கருரை யிட்டார். 13

மேலெழு குணத்தொடு விலக்குரைத ராமேல்
வேலெழு திறத்தினர் விளைத்திடுக ளத்திற்
பாலெழு மிபற்கைபடை முற்றினு நடப்ப
வாலநபி சொற்றொடர்த லாயிசையு மென்ப. 14

தூயநபி சொற்பணியி னின்றசுடர் வெள்வேல்
நேயநெறி யூவரவர் முன்னிலையி னின்றும்
வாயிரவர் சூழ்ந்தநனி யார்கலியி னெப்ப
மேயசல வாத்தொலி மிகைத்திட வெழுந்தார். 15

அருந்தவ முறைந்தணி யலர்ந்தமரு மூதின்
பெருந்தகை பதத்திடை நலன்பெற விறைஞ்சித்
திருந்திய புகழ்ச்சியி னுளத்துடை திறத்தோர்
பொருந்தடவி யம்பல புடைத்துவெளி யுற்றார். 16

தண்கவிகை போனுமெழி லுங்குரயி னார்தம்
வண்கொடி நெடுந்தொறு வரிந்தமுர சோடு
பெண்ககன முன்செல வெழுங்கவரி வீசத்
தண்குடை நிழற்றவலி தக்கவர் நடந்தார். 17

கோலொளிர் மழுச்சவள மேழிகதை * குந்தம்
வேலொடு படைக்கல முராவிவிரி யின்னிற்
பாலெழு மிருட்கண மொதுங்கவரு பல்லோர்
மேலெழு மணந்திசை விதிர்ப்பவணி சென்ற. 18

கலத்திடை யிருந்தவுள நாவொடுது திக்கும்
வலத்துடை திறத்தினர் மனத்தகுதி கொண்டு
சலத்திடை யவெவ்விழிய தாவிசைய வன்று
ணிலத்திடை படாதகுர மாநிரை நிவந்த. 19

வேகமுறு வஞ்சகர் விழித்துதிர்க னற்கோர்
பாகமுறு தண்புனல் படர்ந்ததென வெம்போர்
தாகமுறு மத்திரியி னம்பல தடக்கை
நாகமொடு சேனைக ணடந்தன வடர்ந்தே. 20

கன்றுமுக மிட்டமுலைக் கண்வழிகொ டும்பா
கென்றுமன முண்டிசை யிரைத்தமவர் வாவித்
துன்றுபொழில் பற்பல துவன்றபுற வங்கள்
குன்றுநதி மற்றுள குலத்தொடு கடந்தார். 21

சாமென வுரைக்குமகன் மண்டலி தனக்கு
ளாமுயர் பல்காவெனு மகப்புர முதேத்த
பூமலி வனப்பொழில்கொள் தண்ணடை புறத்தே
நாமமு மலுனெனு நவத்தல மடைந்தார். 22

வேதவிசை துன்னுமதி மேலவர னீக
மாதல மிறங்கியரி வேசரிதொ றுக்கள்
வீதிபல் கொண்டுவய வீரர்துன் படங்கு
மேதக வியற்றியவண் மேவினர் சிறப்பின். 23

---

*-குந்தம்-பெருஞ்சவளம்.

ஓதுசல வாத்தொலி யுலாவுபரி வெண்மை
மோதிய படங்குகொடி மொய்த்தமன ரெல்லா
மோதையொடு மேறிநெடு மொண்டிரையி னோடுங்,
காதகல் கருங்கட லிருந்தென விருந்த. 24

வேறு.

புதுநெறி திருத்திய புணர்ப்பின் மன்னவன்
மதினமா நகரிருந் தெழுந்த வன்படைக்
கதமொடு முஆனிடங் காப்பி னுற்றன
அதிவல வெவ்வா * வேயரசர்க் கோதினர். 25

வேயுரை வெங்கடு செவியிற் போதலுந்
தீயன்ற சினவெனச் சேந்த கண்களே
காயரி போன்றன முகங்க ருத்துளே
யாயின கிறக்கினுக் கனந்த மாய்தலே. 26

காமமே முதலெழுக் காறு தஞ்சிய
தீமனு மனத்தினன் றிறத்தின் மிக்குடைக்
காமரின் செல்வமே கலிச்செம் மாட்புடை
றாமியர் வன்மையு நினைவி னேக்குவான். 27

அதிசயித் தன = லென வுயிர்த்த கோரமே
லெதிர்செயச் சினத்தொடு நகைக்கு மேந்தலே
விதிசெய முறைவழி விலக்கு மாக்கமா
மதிசெயன் வன்மையு மதிப்பி னுன்னு ≐ வான். 28

மூர்படு மனத்திடை முறையும் பல்லராற்
பிற்படு முறையுந்தன் பேத வாசகச்
சொற்படு முறையுமே தூக்கித் தீயென
வற்படுத் தவன்விர னுசி வைத்தரோ. 29

வன்றிறற் கயவரின் மன்னர் தாழ்ந்தசெம்
பொன்றிகழ் புனைகழல் பொலியுஞ் சொற்றமும்
வென்றவெள் வாட்படை வலியின் வீங்கிய
குன்றுயர் புயத்துடக் கோரு முன்னுமால். 30

* வேய்-ஒற்றர். = என-ஏகாரமீற்றசை. ≐ வான்-ம

கனப்படை கரத்திடை கடிய சிந்தையின்
வனப்புடை பாரிசு மன்னன் வென்னிடக்
குனித்தவிற் றலைவர்தம் வீரக் கொற்றமு
நினைத்தக மதக்குண நிவப்ப நோக்குமே. 31

பொருளணி சுருதியிற் போற்று நாமமு
மருளணி வியப்புய ராக்கங் காரணந்
தெருளணி மேன்மைக டெளிவிற் றேற்றியு
மருளணி கொள்ளுமம் மன்ன னாழிறல். 32

தன்னிடத் தடங்கலிற் றங்குஞ் சீற்றத்தான்
மன்னிடக் குழாத்தவை வன்பி னோக்கிநந்
துன்னிய பரவையஞ் சேனைச் சோர்விலா
தின்னனந் தருகென விறைவன் கூறினான். 33

மருங்குறை மந்திரர் பணிப்ப வள்ளுவர்
பெரும்பறை தெருக்களிற் பிழிற்ற வார்ப்பரித்
தருங்கதி ரயிலுடை வீரர் வாம்பரி
நெருங்குபு வந்தனர் நிமிர்ந்த தீங்கென. 34

வெண்ணிற மேனியு முடையும் வெம்மையின்
புண்ணிற முகத்தொடு பவளம் போன்றசெங்
கண்ணிறங் குன்றயர் கனகத் தோண்மலர்த்
தண்ணிறப் பதிசமர்க் கோலந் தாங்கினான். 35

பொன்னவ மணிபல பொலிவிற் றேற்றிய
மின்னவிர் மணிமுடி விரியல்0 கான்றெனத்
துன்னிரு செவியணி = தோடு மன்னற்கோ
ரின்னலுண் டெனவசைந் திலங்கிக் காட்டுமால். 36

வெள்ளுடை நிலவுழிந் துலகு வேட்கையின்
கள்ளுடை யுளநகை கனிக்கு நீணிற
நள்ளுடைக் குற்றுடை வாளு நானிரு
ளுள்ளுடை யார்க்கென வோதுந் தன்மைத்தே. 37

வழிகதிர் முத்தணி மாலை வண்டொடைப்
பொழிகதிர் பொற்கிரிப் புயத்தி றங்கினான்
கழிகதி யுளத்தினான் கருத்தி லின்னலு
மிழிகதி துன்பமு மிடங்கொண் டேங்கின. 38

0 அண்ட-கான்றல். = பொருள்-தோடு.

புறத்தினர் பணிபதத் தணிந்த போதினிற்
றிறத்தொடு கொற்றமுந் தேய்ந்த தின்றெனை
மறத்தினென் னியலினு லென்று வாயிசை
குறித்தது கழலதன் கொள்கை யன்னதே. 39

மின்செயும் வேலொடு வாளும் வில்லுமுன்
கொன்செயு மம்புடன் கொண்ட கோளன்றன்
வன்செயுக் தொழிலொடு வடிவுந் தக்கவால்
புன்செயு முள்ளமென் றுணர்த்தும் பொற்பின. 40

நின்மனம் போலவெம் போரி னின்றபேட்
டென்மனம் போலெனக் கனைக்கு மேந்தெழிற்
பொன்மணிப் பூண்செயும் புரவி மேற்கொளு
மன்மதன் குழுவெலா மருவிச் சூழ்ந்தன. 41

வேகவெம் பரியின வெய்ய காற்றொடும்
பாகமொய் யத்திரிப் பருப்ப தத்தொடுஞ்
சேகர வீரர்தஞ் சீற்றத் தீயொடுங்
காகள முரசியக் கடலி னோடுமே. 42

கவரியின் கற்றைய மதியும் பன்னிரைக்
கவிகைவா னெடுகொடிக் கனமும் பாங்குறுஞ்
சவுரியர் தாரகை யிடையிற் பொன்மணி
மவுலிவெய் யவனொடு மன்னன் றோன்றினன். 43

முரண்டுள் சூரியர் அருவி போலியர்
திரண்டபல் கிளைஞருந் திறலு ளாமிய
ரிரண்டுநூ றாயிர ரிவுளி சூழ்தரப்
புரண்டபூந் தொடையலான் புறப்பட் டானரோ. 44

அத்திரந் தோமர = மாலம் = பாலம்வேல்
சத்திர முசலம்வாள் தண்டு கப்பணம்
= பத்திரம் சக்கரஞ் சூலம் பட்டயங்
குத்திரத் தோடணி குழுவோ டேகினன். 45

தன்னுரைக் கிசைதருந் தலைவர் கட்டிய
பொன்னுரை பொடியணி புயத்தின் சந்தன
மன்னுரை வேர்வையரல் வழுக்கும் வீதியுங்
கன்னிரை மதினகர் கடந்து போயினன். 46

= ஆலம்-அம்புக்கூடு. = பாலம்-மழு. = பத்திரம்-உடைவாள்.

பேரிதுந் துமிபறை பீலி சின்னங்கைத்
தாரியங் குழன்முழாத் துடிக ளெண்டிசை
யார்தரு மோசையோ டண்ட வோசையும்
பேர்தரு மோசையிற் பிறந்த யாவுமே. 47

கடிக்கணை வெய்யவர் கால்பெ யர்த்தலி
னடிக்கடி தாழ்வுய ரசலம் பூண்டதா
லிடுக்கணுற் றனதிசை யோங்கலி யானைமற்
றடுக்கொடு கட்செவி யதிர்ந்த வன்றரோ. 48

நெருங்கிய பதாதியி னிவர்ந்த துண்டுக
ளொருங்குயர் கனத்தினீ ரொழிய மாற்றின
திரிந்தன வெம்பரி சேனி னெங்கணும்
விரிந்தன புவியெலா மாக்கள் வெள்ளமே. 49

பாறுபட் டனபடைக் கலங்கள் பானுவும்
வேறுபட் டனன்மதம் வேர்வி லாழியாற்
சேறுபட் டனபுவி செய்யுங் காடெலா
மாறுபட் டனவருந் தண்டத் தாக்கத்தால். 50

கானில மருவிபாய் கடமுங் குன்றமே
ஞானில நகர்பல நண்ணி மேன்மையின்
பானிலப் பதிப்பல்காப் புறமே ஆபெனு
மேனிலம் வேந்தன்வந் திறங்கி னனரோ. 51

நிரைநிரை பரிகரி நிரைத்து வெங்கடு
புரைவரு வீரர்கள் விடுதி போந்தபல்
லரையர்தம் மிடங்களா வணமற் றுற்றிப்பே
ரிரைமுர சதிர்தர வினிதி னுற்றனன். 52

இடிபடு முரசிய மொலிப்ப வெண்டிசை
படர்தரு பெருங்கடற் படையி னேடணி
முடிபுனை மன்னவன் மஆபின் மொய்த்தன
னடர்தலி னென்னநம் மனிகத் தெய்திற்றே. 53

திருவலி மன்னவன் செய்தி கேட்டுளம்
வெருவலிற் றிறத்தொடு வேண்டுங் காரிய
மருவரு மூகம்மதுக் குரிய மர்தவ
ரொருவருக் கொருவரு சாவிக் கூறுவார். 54

எழுகடற் றிரண்டொலித் தெய்த வெய்திடா
தொழுகணை மணவினு லொதுங்கு மோவனி
பொழிகதிர் வாளையம் புயத்தி னீர்நனி
வழிவரும் படைக்குழா மலிந்த பான்மையால். 55

காலமு மதிற்படு கரும மன்னதற்
கேலுமெய்க் கருவிகா ரணமு மேற்பதே
சீலநல் லறிவொடுந் திருந்தச் செய்வினை
மேலவ னருள்பொழிந் திருந்த மேன்மையீர். 56

தன்னிடத் துறுபடை தகைய வூக்கமும்
பின்னிடத் தவர்வலி பெற்றி நோக்கத்தா
னுன்னிடத் துறுபொருண் முடித்த லொள்ளொளி
மன்னிடத் தயில்வலான் மாட்சி யாமரோ. 57

வாட்டிற மதியொடு மனத்தி னூக்கமு
மாட்டிறஞ் செய்கையி னூக்க மூன்பல
மாட்டினுண் டாயினு மிகுத்த மள்ளரோ
டூட்டுதன் முறைமைகொ லெஃகி னங்கையீர். 58

எண்படு மிலக்கமோ ரிரண்டு மூன்றுநா
றண்படு பீதிற்றுமொத் தாட லாண்மைகொல்
பண்படு வென்றியேற் புகழும் பாவுமற்
றெண்படு மதியினுக் கிழிவு மியாண்டுமே. 59

வன்றிறத் துடன்பொறை மனத்தி னூக்கமே
மென்றிறத் தொருவருக் கிருவர் மாற்றலர்
நின்றடத் தமர்பொர னீதி யென்றிறை
தன்றிற மொழிமறை யதனிற் சாற்றினன். 60

எண்ணரும் படையுட னெதிர்ப்ப தற்கெழின்
மண்ணவ மதீனமா நகருக் கன்புறை
புண்ணிய நாயக ரிடத்துப் போக்குவம்
விண்ணபத் திரமிகல் விதிர்க்கும் வேல்வலீர். 61

தகைபெற வாண்டகை பணிக்குந் தன்மையின்
வகைபெற வமர்த்தொழில் வழியி னிற்குமியா
மிகைதரு முனிறயஃ தென்ன மேதகை
தகைதரு வீரர்க ணவின்றிட் டாரரோ. 62

போக்குவத் திருவணி முடங்கல் போற்றுறை
யாக்குவ மிதற்கிடை யடைய லாரடர்
நீக்குவ நாமெனி னெருங்கில் வன்பறக்
காக்குவ நாமெனிற் கதிர்கொள் வேல்வலீர். 63

வெவ்வரா வுமிழ்விடம் வெள்ள மெய்யுறு
மெவ்வநோ யழலெரி யிதய மாறிய
தெவ்வரிக் கவையற விரைதல் சீர்மைமற்
றொல்விலா மிகைக்குமோ ரிடமுண் டாயினே. 64

வேலெனு மோருயிர் விளங்கு மெய்யுடைச்
சீலநல் லமரணி சிறந்த வீரியர்
மாலொடு மாற்றலர் மகிழ்வின் வாழ்வரேற்
காலமும் பயனிலாக் கரும மாகுமால். 65

வன்மையு மன்னவன் மருவுஞ் சேனையும்
புன்மையுந் திறங்களும் பொருவி நேர்ந்தநா
மன்மைய ராயினு மமருக் கிவ்விட
நன்மையோ தீமையோ நண்ணும் பான்மையே. 66

தீவினைக் குரியவர் செய்கை மேனலன்
யாவினைக் குரியவர் பாங்கி னேங்குமோ
மாவினைக் குரியநம் மதத்தின் மேன்மைத
ளாவினைக் குரிமையா லஞ்ச லென்னையே. 67

விரிகதிர் படைக்கலன் விளங்குங் கையரா
வரியவென் றுயிரினை யன்பு கொள்வீரற்
றெரியியு லிம்மையி லிசையுஞ் செம்பொன்னூர்
வரிசையும் பெறுவர்கொல் வண்மை யங்கையீர். 68

மாறுடை வன்மன மாற்ற லாரெதிர்
கோறலிற் கணைத்தொடு குழீஇய காலையு
மாறுத லின்றிச்சென் றடர்தி ராதிகை
மாறறி குவனென மறையிற் கூறினான். 69

இத்தலத் திறையவன் பெலத்தி னேய்ந்தவர்
பத்தியு மறிந்தமர் பண்ணு வாரென்மனச்
சித்தம்வைத் தருளிய தேவ நீருரை
முத்திரைப் பொருளொடு முனையும் வேண்மொல். 70

எதிர்வரும் படையினி னென்ண மேன்மையோ
டதிரமர் பொருதிடி லரிய பாரினின்
முதிர்புகழ் வென்றியு முத்தி மேனக
ரிதமவ்வி ரண்டிலொன் றெளிதி னெய்துமால். 71

இருமையும் பேறுடை யினிய தோர்பொரு
ளருமையி னுளவெனி லகற்ற லியாவரே
பெருமையோ இளமையோ பகையாக் கண்டநா
முரிமையி னுய்தலோ டுவணி ருத்தலே. 72

மேலவ னருளிய பணியின் மேவிடி
லேனுநல் லுதவியு முண்டு மெண்ணமற்
றேலமிட் டெழுகென றவாகத் துத்தம
பாலகர் அப்துல்லா பகர்ந்திட் டாரரோ. 73

வேறு

இனைய வாய்மைக ளுணர்ந்துளங் களித்திகல் விரும்பி
முனைய வெம்படை யெழுகெனப் போர்முர சியற்றி
நினைவி னோங்கிய தக்குப்பீ றறையொலி நிவப்ப
வெனைய் வீரருந் தலைவரு மாக்கிரமித் தெழுந்தார். 74

இன்ன தோர்படை யுணர்ந்தகங் கடுத்தெரி விழியின்
மன்னும் வீரியர் நெருங்குறக் கடலொலி மடுத்துத்
துன்னு வாக்கியத் தொடுமறந் தூங்கிய கயமை
மன்ன னுங்கரித் தெழுந்தனன் மாநில மதிர. 75

எங்க ளுயக ருரைவழி யிடக்கையஞ் சைது
தங்கை யேந்திமுன் னணிதரு படைதள நடத்தி
வெங்க ளுளர்கைக் கழுமரங் கொடியொடும் விரைய
மங்க மன்னவ னெய்துமூத் தாவிடத் தடைந்தார். 76

ஒலித்த வெண்டிரை யடங்கலு மடுத்துய ரெழிலி
கலித்த வோசையி னிருபடை வாக்கியஞ் சுறங்க
நலித்த மாருதங் கனலொடு கடலொடு நவைதீர்
வலத்தி னேடெதிர்த் தாலென வயவர்க ளடர்ந்தார். 77

மனமு மாருத மிரண்டுமுன் டோங்கிய வயமா
வினமு மாலணி வரைகளு மெண்ணறுஞ் சேனைக்
கனமு மூரியி தெருள மயங்கின கலித்த
வினைய கோளினி லனந்தலு மின்னலெற் குளிந்தான். 78

நிலத்தி னின்றெழு பலதுகள் காரிடை நிலவும்
வலத்தின் வாளின மின்னலு முரசமா வுருமுங்
குலத்தின் வீரியர் கையுறு படையெலாங் கொண்டு
சலத்தி னோடெழப் பொழிந்தன தாரைக ளன்றே. 79

அயிலெ றிந்திடர் கதைகொடு தாக்கியம் பெய்து
வெயில்செய் சக்கரம் விடுத்துவாள் பட்டயம் வீசிக்
கயிலொ டுங்கிவன் கசையினு லடித்துக்கற் பெய்து
வயிர மோங்கிய வயவர்கள் கறங்கெனத் திரிவார். 80

இலங்கு பொன்முடி மிசைமணி யிலகிய புயமேற்
றுலங்கு செவ்விழி யிடைவய மார்பகந் தோற்றும்
வலங்கொள் கைத்தலை முகப்பறம் வன்குளம் பிட்டுக்
கலங்கு சோரியின் மின்னெனத் திரிந்தகத் திகளே. 81

கணைபெய் யோசையுங் கதிரயி லோசையுங் கவண்கற்
றிணிகொ ளோசையுந் திகிரியி னோசையு முரசிற்
குணில்பெய் யோசையுஞ் சவுரிய ரோசையுங் குழுமிக்
கணித ராதெரி முடிவுகக் கடலினுங் கலிக்கும். 82

சிவந்த பொன்முடி வன்றலை திகழொளி முகமுங்
குவிந்த திண்புயம் வஞ்சகங் கோலிய மார்பு
சிவந்த மேனியு முடைகளுந் நிலத்தொடு பண்டையு
முவந்த மாபல வீரர்க ளோங்குகை வாளால். 83

நாக்க டித்தெயி றதுக்கிவன் டுறுக்கிநஞ் சனைய
கோக்க டுத்தெரி யுழன்றெனக் குரகத நடத்தித்
தாக்கு வீரர்கள் படைக்கலத் ததிர்கனற் றயங்கித்
தேக்கு நீர்கரும் புயலினைத் தீயெழச் செருகும். 84

வெட்டு வார்சிலர் வாளொடு கையிற வெருளத்
தட்டு வார்சிலர் கேடகந் தலையொடு துறங்க
வொட்டு வார்சிலர் கதையொடு தோள்விழ வொதுங்கிக்
கட்டு வார்சிலர் வேல்கொடு பொருமுகக் களத்தே. 85

அடிக்கு மோசையங் கடலொடு மாக்கிரமித் தெதிர்த்து
முடிக்கும் வேகவெங் காற்றொடு முதிர்சினத் தெழுந்து
கடுக்குந் தீயொடும் பதியெம னொடுங்கலந் ததித்த
துடிக்க நாமென மத்தியின் பவர்தொடர்ந் தடர்ந்தார். 86

தாரை யற்றதோர் வேலினுற் றடநெடுங் கழுத்த
வீர மற்றதோற் கிடுகினு லெரிமன வலியாற்
கோர முற்றவெங் காபிர்தங் குறைகடல் கலங்கப்
பார முற்றவெற் புழக்குமா றுழக்கினர் படர்ந்தே. 87

செருகி நின்றவெம் படைக்கல ராமிகள் சினத்திற்
கருகி நின்றதோர் பழுவமா வதற்கிடை கனலிற்
பெருகி நின்றறத் திசைதிசை பிதாதர வெரித்தார்
திருகி நின்றதோ ரயிலினு லெமனிகள் செல்வர். 88

விடுவெங் கூர்ங்கணை யறுத்துவாள் வேல்பல விலக்கி
படுவெங் கூழ்வய மாக்களை வுயிரகந் தேக்கிக்
கொடுவெம் மார்க்கனை யெமனிடங் கொடுத்துமற் றெல்லாம்
வடிவுஞ் சோரியுங் காட்டின மந்திவல் லையமே. 89

இரைக்கும் வெண்டிரை பனமுகங் கொண்டெண விகலும்
புரைக்கை மாமூதற் சேனைகள் புறத்திசை தெளிய
முருக்கு மன்னவர் முன்னொருஞ் வீரியன் முனையோ
ருருக்கு மெய்யினன் வாம்பரி யூர்ந்தடர்ந் தனனால் 90

மூடிது லங்கமற் புயத்தொடு முத்தணி துலங்க
வுடைது லங்கவாம் பரியணி துலங்கவுள் ளுருத்த
கடைது லங்கிய சினத்தொடு மின்னெனக் கைவாட்
படைது லங்கவிட் டேற்றின னகையொடு பங்கவன். 91

ஓங்கு செங்கதிர் வாளினை யுரித்துணி யதனுற்
றூங்கி மன்னவன் வாம்பரி தரைவிழச் செய்தா
ராங்கு நின்றெதிர்ந் தனனாத் தறைந்தவன் மேற்கொண்
டோங்க வன்கள மேற்றிமேற் பணிபல் வெடுத்தார். 92

மின்னுந் தங்கர வேலினன் மாற்றலர் பிரியா
மன்னும் வன்றிறக் கடற்படை மறுகவெண் டயிரிற்
றுன்னு மத்தெனக் கலக்குபு தொடர்ந்தனர் துயோர
ரின்ன மேனெறி யாவரு மிவ்வண மடர்ந்தார். 93

வேறு.

வஞ்சகமன் னுந் துன்னலர்வெம்போர் மலிசேனை
யஞ்சமுழங்கும் பேரிடியென்றே யதிர்மாமேல்
மஞ்சுகிழற்று மோதவர்வன்மைக் கொடியோடும்
வெஞ்சினமிக்கின் னைசெதனும் வள்ளல் விரைகுற்றார். 94

தீயுலைபோலுஞ் செங்கணினாலுஞ் செறிபல்லின்
வாயுலையாலுங் காலெறிபாலும் வயமாவே
கூயுலையாவெஞ் சூறையினொடிக் குறுகார்மேற்
பாயுலவாமின் றாவியுமூனும் பருகுந் * தாம். 95

திசைகளமுற்றுந் தீயினெதிர்க்குஞ் சினமாவால்
மிசைகொள்கரத்தின் கூர்படைமிக்கின் வினையாலு
மிசையமுழக்கும் நாதவிகற்பத் தெறுழாலும்
விசயவலத்திற் சீயமெனப்பார் விளையாடும். 96

நிலைநெடுதாங்குங் கமடமனந்த னிலையாடக்
குலகுரிசாயத் துகளிடைவெய்யோன் குணமாறப்
பலவிருதுங்கொண் டொன்னலரோடப் படர்கோலிச்
சலவியடக்குங் கலைமதியென்கோன் றுதிமைந்தன். 97

வெருவிப்பல்பாற் சிந்தியவெள்ளத் திடைவெய்யோ
னொருவித்தோற்றும் பான்மையினொங்கோ னுயரூக்கம்
பொருவிப்பேனென் றுள்ளமுறாறப் புலனுற்றான்
கருவிற்றீய்மைப் பங்கினொருத்தன் கதிமாவால். 98

பம்பியமேகத் தூடெழுமின்னிற் படர்காலிற்
கும்பியதீயிற் பாவிகைசாரிக் குடிலைத்தான்
வெம்பியவாசித் தூசினுகைத்திட் டிருவேந்தர்
கம்பிதவெம்போர் செய்கையனந்தங் கைகொண்டார். 99

தீயுமிழ்கண்ணன் சீறியொதுங்கிச் சிலைநாணின்
வாயுமிழ் வெங்கோல் பற்றொடைபெய்தான் வருமாறுக்
காயுமிழ்வாளிக் கிணையினறுத்தோர் கணையாலே
பேயுமிழூனே டம்புவிவீழ்த்தார் பெலன்மிக்கார். 100

வன்மனவீரன் வீழ்தலுமற்றோர் வயவேந்தன்
மன்மனவூக்கங் கண்டனனெம்மோர் மறமெல்லாங்
கொண்மெனநின்று யுன்னுயிர்காலன் கொளச்செய்வல்
நின்மெனவந்தான் வெப்பரிபல்பா னிலையாதான். 101

பாரினெழுந்தா ளோடுதுரங்கம் பயின்மின்னிற்
சாரிபுரிந்தே முன்னொடுபின்னுந் தகைசெய்து
சீரியவென்கோன் வாளினெறிந்தார் திறல்வெய்யோன்
காரினிலங்குங் கேடகமேற்றுக் கனன்றானல். 102

---

* உம்-உந்தும்.

இக்காரத்தா னெம்படையெல்லா மிரிவித்துப்
புக்காநின்றுப் கண்டனனின்கைப் புகலென்றே
நக்காவேகத் தேறிமுனைந்தா னருவாளா
லுக்காவன்பிற் றண்டிறுத்தா ருயர்வள்ளல். 103

பொய்யேதுன்றும் வாய்மதமிக்குப் புகலற்க
வெய்யேதுஞ்சுஞ் செந்நரகத்தே விழுமாக்கைக்
குய்யேதுற்றாய் நாள்வரைபட்டென் றொருவிர் வாளாற்
கையேறிட்டா ராவியுமாவுங் கழிபட்டான். 104

சூரந்துஞ்சுஞ் சேனையுமோச்சுஞ் சுடர்வாளின்
வீரந்துஞ்சுஞ் சேவகர்பல்பால் விழுமாறு
காரந்துஞ்சுங் கிறக்கிலழற்கண் கண்டிட்டுக்
கோரந்துஞ்சுந் தன்படையேவிக் கொதிகொண்டான். 105

ஆர்க்கும்பவ்வத் தூற்றெழுவெள்ளத் தடர்சேனை
வேர்க்குந்திக்கும் பற்படைதம்மால் வெளிகாணுந்
தூர்க்குங்கூட்டிற் கோளரியென்னச் சுடர்கண்ணுற்
பார்க்குந்தாக்கும் பண்புடைவள்ளல் படர்வாளால், 106

பரிகளனந்தம் பண்ணுங்கோனும் பறிபட்ட
இரிதொறுவங்கந் தலையோடனந்தந் தெறிபட்ட
விரதமனந்தம் பாண்டினெடுங்கா லெறிபட்ட
வரிகளனந்தஞ் செந்நரகக்கத் தறிபட்ட. 107

விருதுபடங்குங் கவிகையனந்த மிதிபட்ட
பெருதுமுழங்கு முரசமனந்தம் பொடிபட்ட
பருதியினெங்குஞ் செம்புனல்வெள்ளம் படிபட்ட
வரிதரிதம்மா வுரைசெயலென்கோ னமரன்றே. 108

வஞ்சமிகுத்தா ராவியனந்தம் வடிவாளால்
வெஞ்சமிகுத்தாழ் செந்நரகுய்த்தே விரிபொன்னூர்
கஞ்சமுகத்தார் வாகைபுனைந்தார் கதிகாட்டுந்
தஞ்சமுகத்தா றெம்மிறையன்பாற் றருசெல்வர். 109

செய்தெனுமிக்கோர் போரிடைசாயத் திருவண்ணகை
மெய்திகழ்நீலக் கேதனமன்பான் மிசைகொண்டு
வைதருசெவ்வேல் பற்படையோடே வயமாமேற்
கைதவமஞ்சஞ் சருபமெழுந்தார் கனமேற்றே. 110

வேறு.

துவசமிட்டரிய மாமனத்தினதி துரிதமாய்
பவுரியிட்டரி யுழைக்கணத்தின்வரு பான்மையார்
திவசமிட்டகபி பெரியதந்தையருள் செல்வரைக்
கவசமிட்டனர் மறத்திறக்கயவர் காதியே. 111

வேலினிற்கதிர்செய் வாளினிற்சுரிகை வெய்யசெங்
கோலினிற்கவ ணிடுங்கலிற்கரிய கோணமுச்
சூலம்விற்பருதி யிற்கொடுங்கயவர் தார்த்தகார்
காலினிற்சுடர்கொ ளாயுதத்தின்வெளி காட்டினார். 112

சூழமொய்த்தபடை யத்துணைக்குமெதிர் தொட்டறுத்
தாழமொய்த்தவ ரகங்கொள்மார்புகுறி யாகவுட்
டாழவெப்பெரியி னத்திரத்தொடைக டாம்விடுத்
தேழுவைப்புமலை யத்துரங்கமிசை யேவினார். 113

முத்தினார்திகளி னுய்த்ததேரினு முரண்கெடா
வத்திரித்திரளின் வெம்பரிக்குழுவி னுழ்கடற்
றத்துதானையினும் விருதினத்தினுகு தழலருக்
கொத்துறுங்கணையின் மாரியானெரி கொளுத்தினார். 114

கண்டகண்டதிசை யெங்குமுழங்கியனல் கனலவாய்
விண்டெழுந்தசிறை வண்டினங்களின் வெருண்டுலா
மிண்டழிந்தக மழிந்துவன்படை விளிந்துசூழ்
தண்டழிந்துடன் மறந்துவஞ்சகர் தயங்கினார். 115

எட்டிடக்கிரிகண் மத்தகக்கரியி னங்களுந்
தட்டறக்கடு புயங்களுட்குளி தரப்புவி
மட்டறப்பருதி கெட்டறக்கருக வன்புயற்
பட்டறத்துகள் பரத்திவிட்டபரி மாவரோ. 116

குசைமுகத்தையு மனத்துரத்தையுயிர் கொண்டுமா
மிசைதரித்தவ னகத்தைமெய்க்கவச மீறியே
விசைதரித்தனி குடற்றொடர்ந்தகொடி மேலுமேற்
றிசையடர்த்தகுண வள்ளல்விட்டவெரி செஞ்சரம். 117

துண்டுபட்டுபல ஊர்தியுந்தலைவர் தோள்களும்
புண்டுபட்டுகு நிணத்தினோடுடல் பொருப்பெனத்
தண்டுபட்டழிய வுஞ்சரங்கடழல் பட்டிடால்
மிண்டுபட்டணிக ளிரிதலுற்றன வெருண்டரோ. 118

வஞ்சமன் றுயிறக் கிலெனுங்கொடிய வஞ்சனன்
றஞ்சலஞ்சலென வற்புறுத்தியு மடர்த்துமே
வெஞ்சினப்படை முரு விட்டனன் வெடித்திடித்
தெஞ்சலற்றகட லென்னமொய்த்ததிசை யெங்குமே. 11

நீளவிட்டகதிர் திங்கணுங்கவரு நீனிறக்
கோளெனத்திசை செறிந்தவெம்படை குலங்கெடத்
தாளினிற்றரை யிழிந்துதம்பரி யரிந்துவெள்
வாளெடுத்தாறி மேற்படர்ந்தனர் வரத்தினர். 12

மாரிகொண்டென வுரும்பெரும்படையு மாக்களுந்
தேரினங்களு மெழுங்கொடித்திரளு மற்றவும்
பாரினுஞ்சில விசும்பினுஞ்சில பறப்பபல்
சாரிகொண்டனர் பதத்தினலெறழ்கொள் சருபறே. 12

வினையிருந்தபடை பலவுமெஞ்சவுழல் வீரர்தம்
புனைகலன்களினொ டவயவங்களுயர் போதலா
லனைவருங்கழிகொள் பூளையாயின ரடங்கிலா
முனைவருங்கவன குறையாயினர் முருக்கியே. 12

வேறு.

செருங்கு சேனையி னிடையிருந் தழல்விழி சிவப்புற வொரு
வீரன், பொருங்கை யாயுதஞ் சுழற்றிய விசையொடு புரவியை
கடிதூண்டிக், கருங்க ணூர்திமற் றரும்படை யளவில கடிந்தவ
கதிர்வாளோ, டிருங்கை போக்குவ னியானெனப் பகைதரு நகை
யினொ டெதிர்ந்தானல். 12

எண்ணி றந்தபல் லுயிர்க்குழி ராகியிவ் வுலகொடு மற்றெ
லாம், வண்ண மோங்கிய வருமுகம் மகற்கருள் தந்தையர் மகவெ
ன்றுக், திண்ண மொய்ம்புடை யலிக்குறுந் துணையெனச் சிந்தை
யினொடாகித், தண்ணென் வார்த்தையி னெதிர்ந்தனை காணென
வெழுந்தனர் சுடர்வாளால். 12

மின் படர்ந்தென வருநெடு வாளினைக் கேடக மிசையே
றுப், புன் படர்ந்தவ னழல்விழி கதுவிய புரவிவிட் டொளிரேதி
வன் படர்ந்திட வெறிந்தனன் வலிகதை கொண்டுற வலத்தே
றிப், பொன் படர்ந்தகை வேல்கொடு மார்பிடம் புகவிறை யவ
விட்டார். 125

இலங்கி முன்னொரு மயிறடுத் தொளிர்கதிர் வாள்விசைத் தெறிந்தான்கார், விலங்கு வன்மையின் வலக்கர மற்றுக விரியசி யிடம்பற்றிக், குலங்கொள் வஞ்சகம் பகையொடு மவன்விழக் குழித்திரு பிளவாக்கி, வலங்கொண் டண்டிய சேனையுட் படர்ந்தனர் வரிசையிற் சிறந்தாரே. 126

எங்கணுபக ருதவிய கேதனங் கொடுங்கையி னிடைகொண்டு, கொங்கு லாமல ரிடக்கரத் துவணியிற் குறுகலர் படையெல்லாம், பங்க டாதற வொதுக்கியெண் டிசையிற் பதாதிக ளிரிவாகச், சிங்க வேறெனச் சீறிமின் றடர்ந்தனர் செகுபழுதையாதே. 127

துன்னு வெம்படை யதிபதி கைசரின் றுணைமலர்ப் பதந்தாழ்ந்து, பொன்னு மற்றரும் பொருள்பல பரிசுடன் விடைகொடு புகழ்ந்தேற்றி, யன்னவன் றிறன் முடிச்சிரந் தொணர்குவனரைநொடிப் பொழுதினெனன், றுன்னி புன்னிய வுன்னலின் விடுத்தொரு வீரன்வந் தெதிர்த்தானால். 128

முழங்கு மோசையிற் பெற்றவப் பொருளொடு முதிருடலுறுமாவி, வழங்கு நின்றிறங் காண்குவ னியானென வாள்விதிர்த் திவர்கூறத், தழங்கு மின்னெனக் குரகதச் சாரியிற் றகைந்துயர் தனுவாங்கி, யொழுங்கு வன்றொடைச் செஞ்சர மழையென வுகுத்தனன் கடுநெஞ்சான். 129

வெய்ய வெஞ்சர மனைத்தையு மிடக்கையின் விதிருவ ளரியினேற்றி. பொய் யெனக்குதித் தாக்கிரத் தோங்கின ரோங்கிய வொருவீச்சிற், செய்ய பொன்முடிச் சிரமுநற் றாங்கமுந் திரிந்திரு பிளப்பாகி, வைய மீதவன் வீழ்தலு மற்றொரு வஞ்சக னெதிர்ந்தானால். 130

வந்து வேகமிக் கடர்த்தவன் கதிர்பொழி வாள்கொடு முனிந்தோங்கக், கந்த மாமல ரிடக்கரம் வீழ்தலு மிருமணிக் கைதன்னொ, டுந்தி யேதியி னவனுடற் பிளந்தணி யுட்புகுந் தருமேற்றிற், சிந்தினார்பலர் திசைதிசை யிரிதரச் செழுங்கொடிக் கொளுந் தோளார். 131

ஆக்கை யேகலி னெய்தினை யடர்தரு முறுமிக னடற்போரி, னாக்கமேமிகு தனிதரு தெரிசனை யுள்வர வொழியாதாற், றுக்கு வேதனை பூண்டனை துறக்கமுந் தன்கொளுங் குடிப்பானத்,

தாக்க மேன்மையு மனுகுதல் பெற்றனை யெனவருங் கவிசொ
ன்னார். 132

தனக்கு லாதலன் கவிதையி னுவொடு முறுதியிற் றனிபூ
ண்ட, மனக்க ணேடுயர் கேதனத் தோளொடு மணிக்கையின் வா
ளோடு, நினைக்கு முன்செலுங் கதியொடு சிறகணி பறவையி
னேரோடு, சனக்கு மாம்பல கடற்குளித் தாடினர் சகுபறு
னைதயாறே. 133

மேக மின்னெனப் பாய்தலுங் கனலென வேகமும் மின்பா
ர, தோகை யோடெதிர் சதுரங்கப் பிணமலை யுயர்தரப் பொ
ருவெள்ள, லாக மீதுபற் படைகொள வாறுபத் தாறினோ டை
யாறு, பாக மூறுகொண் டுமற்றிய துனிவினைப் பகருத லரி
தம்மா. 134

மிஞ்சு சேனையங் களத்திடை போரொடு வென்றியும் விறல்
கொண்டு, மெஞ்சு பாணியிற் கெதிரிணை யிறையரு ளிருஞ்சிற
கதனுலே, கஞ்ச மாமுகத் தாம்பையர் நகைபொடு களித்திடப்
புறங்கேதகித், துஞ்சு பூரண வாகையிற் பொலிந்தனர் இருகயி
தணைவள்ளல். 135

பெருகுந் தீனெறி யவரின்முற் புரவியைக் கதரிதப் பெரு
மாறுன், டிருதி மூன்றுபத் தாடொடு மூன்றுள செழிநகர் புக
வங்கன், விருது பூங்கொடிக் கைகொடு பலபடை விதிர்த்தரி மிக
வேகத், தரிதி னின்றம ராடின ரினியற வாகத்தி னருண்
மைந்தர். 136

வேறு.

வெம்புகின்ற சினஞ்செயும்பரி வேகமும் படையாற்
பம்புகின்ற கணங்களின்விரை பான்மையும்விருதிற்
கம்பிதங்கொள நின்றமன்னவர் காரமுஞ் செலவெவ்
வம்பினங்கடு ரந்துநின்றனர் தும்பையம்புயரே. 137

கான்முகந்து மலந்ததும்பைய கங்கலந்தாயிரி
னூன்முகந்த வரவஞ்சியன்பி னுவந்தபொன்சரடின்
பான்முகந்து மடர்ந்தெழுந்து படர்ந்திதான்றியவெங்
கோன்முகந்த விடங்கள்செம்புன லாறுகொண்டனவே.

வண்டுறுக்கி யெதிர்ந்துசுற்றிய வன்படைக் கடலுள்
விண்டுழக்கி யலம்படைத்தெனை வென்றிகைப்படையாற்
றண்டமெத்திசை யுஞ்செலச்சமர் தந்திடும்பொழுதோ
ரண்டனுட்குற வந்தெதிர்த்தன னப்துல்லாவுடனே. 139

நிரைநிரைப்படு மணிகளொய்த்துள நெளியமெய்ப்புறுபோர்
விரைவினிற்புரி விறலெடுத்தனை விசயமொய்த்தனையுன்
னுரமனைத்தையு மறிவனிப்பொழு துணர்கவெற்பெலனென்
றாவெனச்சின மொடுகெடுத்தரி படநடத்தினனால். 140

வேகமைந்துள வாளெறிந்தெரி மேலெழுந்தெனவாந்
தாகனஞ்சவ றுதவெஞ்சின தாபமுந்தியகோன்
மேகமண்டல வூடெழுந்தெதிர் வீசுவெம்படையா
லேகவங்கமு மாவுநந்திரு பாகமுண்டனவே. 141

அங்கமாறுடை சேனையஞ்சவ டைந்தவன்படலுங்
கொங்குலாந்தொடையண்டர்தம்பதி கொண்டவெஞ்சினமோர்ந்
தங்குவீர மமைந்ததந்திர மந்திரன்கடிதே
செங்கண்மாமண மொன்றுகொண்டெதிர் சென்றடர்ந்தனனே.

பன்மைகொண்ட வரங்கமுந்துயிர் பண்பிழந்திடவின்
வன்மைகொண்டுறை கின்றவெந்தொழில் வல்வியுண்குவனென்
றின்மையுண்டெனு மன்னவன்படை யொன்றெறிந்தனனு
னன்மையுண்டவர் துண்டுகண்டு நடந்தெதிர்த்திடரா. 143

காதுமூதொளி வேதிமோதிட வாதுகாதகனும்
பாதிபாதிய தாதலால்வணி பாகமாகவுமே
மீதிலேத்தவ வீயுதாதிகள் வேகமேகதியே
சோதியேதர ஷேபதாதிகள் சூழவாயினவே. 144

ஊறுமாமத சோகிஞெடெறு மோயிலாவரியு
மீறுதேரொடு சேனைவீரர்கள் மேவுலாவிருதா
மாறுபாய்கட லாகவாதிடை யாயதோர்வலியி
னேறுபேறமை ராடிவாஞுண வேகமாயினரால். 145

காலறுந்தன தோளறுந்தன காதறுந்தனவன்
மேலறுந்தன தாளறுந்தன கீழறுந்தனவெங்
கோலறுந்தன மார்பறுந்தன கோளறுந்தனவீர்
நூலறிந்தவர் வீசுவாளினி னேயுழன்றவர்பால். 146

முன்னடர்ந்த விரண்டுமைந்துடை மூதகுந்தகையார்
துன்னிநின்றதி னென்மடங்கு தொடர்ந்துகொண்டமையான்
மன்னடர்ந்த பிணங்கள்குன்றின் மலிந்துயர்ந்தனமே
னன்னயந்தரு வள்ளல்வாளி னடந்தசெங்களமே. 147

உன்னுமேம்பொரு ளியாவுமெய்துக வுற்றவீதொருபே
றென்னலார்மராடுமின்னஃ தொல்குமேற்படுக
முன்னர்தம்வினை பூண்டிடிற்பலன் மொய்த்திடுந்திறனே
யென்னருஞ்சட மேயெனக்கவி யின்பினேறிடுமே. 148

இன்னபன்னி விலங்குபேரொளி யெங்குமோங்கியவாள்
துன்னுமன்ன ரகங்கலங்கிய துங்கமற்றுளவு
மன்னுகின்ற வருந்திறம்பல வாய்மடுத்தனவே
நன்னயந்தரும் அப்துல்லாவமர் நாமமேயினரால். 149

காதிர்த்தெழு பேறெனத்திரி காவலர்க்கரிகள்
போரதிர்த்தெறி யாயுதக்கடு போதவுற்றதனால்
சேரணித்தழ கேபடைத்துயர் சேருமெய்ப்புரமேற்
காரிகைத்தன மாதர்கைத்தொடை காதலித்தனரால். 150

அருளினிற்றெளி வறிவினிற்செறி பருமையிற்பெரியோர்
பொருளினிற்பய னாதியிற்பகை பொருகளத்திடையே
மருளினிற்படு கபவர்கைப்படை மணிவினிற்செருகப்
பொருதுபொற்பதி புகருடத்திசை பொழுதுமுற்றனனே. 151

ராஷ்வேந்தனுடன் பிசபினுக்கசுகாபிகளை விடுத்தபடலம்.

முற்றிற்று.

ஆகபடலம் 29-க்கு திருவிருத்தம் 897.

அசுகாபிகள்காலிதண்ணலை

தலைமையாக்கிக்கொண்டபடலம்.

இருவகைச்சேனை வீர ரிளைதராக் கடலிற் றத்தம்
பொருதொழி லொழிந்து கொண்ட பாசறைப் புகுந்தார் வென்றி
மருவிய பதிகண் மாழை மனைபுகு மாற்று உள்ளந்
தெருளொடு துணிவுக் தாங்கித் திகைத்தனர் மிகைத்தா ரியாரும்.

தன்னிலை கொண்ட பண்பின் றலைவனு மவன்றன் றூது
நன்னிலைக் குரிய மிக்கோர் மூவரு நரஞ்சொற் போற்று
முன்னிலைக் குரிய ரென்ன முதுமறை மொழிமு றும
வந்நிலைக் குரிய ரியாவ ரென்றன ரவரி னன்றே. 2

புலமையு நெறியு மன்பும் பொறுமையும் பொதிந்த வீர
நிலைமையும் பொருளு மாண்மை நிறுவிய வினைக ளியாவும்
வலுமையிற் கொண்ட மிக்கோ ராயினும் வழியே காட்டுந்
தலைமையொன் றில்லை யாயிற் றருபய னில்லை யன்றே. 3

செய்வினை விழைவு காணுந் தெளிவினைப் பகுத்துக் காணுங்
கைவினை யுடையார்க் கெல்லாங் கருமமே யுடையார் தீயப்
பொய்வினை யகற்று நீதப் புனிதவான் காலி தன்னை
உய்வினைப் பொருந்து வேமா உயர்வினைப் பொருந்து வேமே. 4

வீரத்திற் பிறந்த வாக்கை வென்றியிற் சிறந்த பண்பின்
சாரத்தி னொளீது பெற்ற தனையரென் றறையக் கேட்டுச்
சூரத்தி னிருந்தோ ரியாருஞ் சுடர்முடி துளக்கி யுள்ளம்
பூரித்து முடலம் பூத்து முகங்களும் பூத்திட் டாரால். 5

காணருந் துயரங் கண்டுங் களிப்பொடு நின்றா ரியாரும்
பூணரும் விசயங் காணும் பயனெனப் பொலிவிற் றம்ம
மாணிலம் பரப்பி வண்டா மரைமுக மலர்த்தி வெய்யோன்
வேணருங் குணத்தின் வந்தான் மேனலன் பயப்ப மாதோ. 6

நிலன்வெளி கண்ட போதி னிரைதரும் படைஞர் தத்தம்
புலன்முர சறைந்தார் வேகப் புரவியு மரிய மூர்ந்து
கலன்பல வணிந்து சேந்து கண்பொறி கதுவ நின்று
குலனணி யூகம் பூண்டார் குரைகடல் விரிவி னன்றே. 7

எண்டிசை வரைக ளாட விபத்தொடு விடையு மாடக்
கொண்டலுங் கரிந்து போதக் குறைகட லளற தாக
மண்டியத் தசனி யார்ப்ப வஞ்சினப் படைகண் மின்ன
வண்டரு மற்றுள் ளோரு மடர்ந்தன ருலக மேங்க. 8

நாக்கடை கடித்துக் கைவே லஞ்சென வெறிவர் கோடுந்
தீக்கடை சினத்தி னேமிச் செந்தழல் விடுவ ருள்ளம்
பாக்கடை மருளிற் றண்ட முருமெனப் பார்ப்பர் மன்னுங்
கோக்கடை நாளி னென்ன வூர்தியங் குலங்க ளூர்வார். 9

கூற்றெனச் சினத்துஞ் செந்தீக் குலமெனக் கனன்று மேகத்
தேற்றினி னதிர்த்து நஞ்சத் தினமெனப் படர்ந்து மூழ்கிக்
காற்றெனத் திரிந்துஞ் செல்லுங் கல்லெனத் திரண்ட தோளர்
ஏற்றலி னமரி னூக்க மியாவரே யறைதற் பாலர். 10

அணிந்தெழுங் கலனுங் கையி னாயுத முடலு மாவித்
திணிந்தெழு மாலை யாவுந் தெரிந்திலர் சினமே கண்டார்
பணாந்தரு மனத்த னஞ்சச் செறிந்தபற் கணத்தி னைப்பண்
குணாந்தருங் கொடிமா வூர்ந்தார் குலபதி காலி தன்றே. 11

விரியல்செய் மகுடஞ் சென்னி வேலணி கரமுந் தாமத்
தெரியல்செய் புயமும் வஞ்சஞ் சினஞ்செயு முளமுஞ் செந்தீ
யெரியல்செய் விழியு மொன்று வெறுழ்செயு முடலுங் கண்டே
பிரியல்செய் தாவி யோடும் பின்னின மன்னர் மாவே. 12

மீறிய மதமு நாணு மீக்கொடு படர்ந்த பற்றுங்
கூறிய கபத வார்த்தை கூடிய வலியு முண்டு
ஊறிய வுதிர மாவி யொருபுறங் குளித்து மேங்கும்
பாறொடுங் கலந்த வேந்தர் வளைத்தவிற் பறிந்த கோல்கள். 13

தத்தமக் கறியா வங்கந் தானறிந் துடல மெல்லா
மெத்துறா லதனி னீர்த்து மெத்திசை யிடத்துஞ் சேர்த்துங்
கொத்தொடு படைகள் கொய்துங் கோணலென் றியற்கைகொண்ட
சித்தமே வீரங் கண்டார் சித்திர வடிவா னன்றே. 14

வானரசதியின் வேக வாம்பரி யுந்துந் தோறு
மூனறுஞ் சுழியிற் றுக்குஞ் சிறவென வொளிர்வாள் வீச்சிற்
கோனர பதியின் சேனைக் குடைகொடி விருது மெல்லாந்
திகர கமிழ்ந்து மாறு சிந்தினர் மைந்தி னாரே. 15

70

கொல்லெனப் படர்ந்த வோசை யிடையெழுங் குறுகா ராவி
யொல்லெனச் சினந்து மற்ற வூர்திகள் களைந்து மெங்கும்
பல்லெனத் தடித்துஞ் செந்தீ யுமிழ்ந்தறப் பார்த்து மென்சொற்
சொல்லெனத் தொடர்பு நீங்கா வடர்ந்*தன தோன்றல் வாளே.

நிலத்தெழு முறவி யென்ன நின்றெழும் பதாதி மென்மேல்
வலத்தெழ வணிகொ ளாக்கை மலையெழ நிணத்தி னோடு
சலத்தெழு முதிர நீந்தித் தாவிய புரவி வேந்தர்
கலத்தெழு வாளின் வெய்யோர் கருங்கடற் கடவா நின்றார். 17

கரும்புய லுக்கப் பாய்ந்த காரிடி யேறு தாக்கிப்
பெருந்தரு வுக்க வெங்கால் பெயர்த்தன வங்கச் சேனை
யொருங்கணி யுக்க வீசு மொளிரசி யொன்றன் றேந்தல்
பொருந்தொறு முக்கப் பன்மை பூண்டக வாகை யன்றே 18

நவந்தரு மறிவின் மிக்கார் நவந்தரு முவணி தம்மாற்
பவந்தரு மண்டர் மாண்டா ரெண்ணிலர் பல்பாங் கெல்லாங்
கிவந்தமுஞ் சோகு மாடக் கருத்தெழுஞ் சினமற் றுட
வுவந்தன மறந்து வீர மொழிந்தழிந் திரிதல் பூண்டார். 19

மேனலன் பொழியு மன்பின் முகம்மதின் விதிகோ ணண்பர்
தானலன் பொழிய வுள்ளந் தரிபடா திருள்போ மாறு
கானலன் பொழியும் வாகைக் காலிது வாளி னூற்றற்
பானுவிற் பட்ட வொன்னார் பனியென மாய்ந்திட் டாரால். 20

உரவுநீ ருலக மோங்கு முயர்புகழ் காலி தம்பொற்
கரதலக் கதிர்வா ளொன்னார் காண்டொறுங் கரப்ப வீரத்
துரனணி மேலோர் மொய்த்த கரும்புய லொதுங்கச் சோதி
விரிதரு செங்கேழ் வெய்யோன் பன்மையின் விளங்கி னாரால்.

கூர்ங்கணைத் துளையி னூக்குங் கொடியினம் பிணக்குன் றேறி
யூர்ங்கடு வினையம் வஞ்ச முண்மதம் வீரஞ் சென்ற
வீர்ங்குழி யிவைவகொ லென்ன விரையுயிர்த் தையங் காட்டுஞ்
சூர்ங்கணைக் களங்க ளெல்லா மாதவர் சூறை யிட்டார். 22

பிறர்பொருள் கவர்ந்து தின்ற பித்தரின் பண்டி யெங்கு
முறுகுடர் கழுகு காக்கை யிகலொடு முயரும் பேய்நாய்
மறநிதிப் பொதுமை யென்ன வாய்விடுங் களங்க ணீந்தி
விறலுடை யும்பர் வாழ்த்த மாதவர் விடுதி சார்ந்தார். 23

---

* தன - தது.

மணம்புதுவிளைந்த கோல மன்னவர் மூவர் தம்மோ
டிணங்கிய வைவ ராக்கை யொருவிய வெடுத்து வாழ்த்திக்
குணர்ந்தர் வடக்கஞ் செய்த குரிசினந் நபினர் வென்றி
யணிந்தவன் பதாகை நாட்டு மதிபதி யிருந்தா ரிப்பால். 24

வேறு.

கைவே லரச னிருலக்கக் கடும்படையாற்
செய்வே கப்போரிற்பதி மூவருஞ் சிற்றமாற்றி
யைவேந்தர் பட்ட துயர்வென்றி யணிந்ததுமெய்
மைவேத வுள்ளத் துணர்ந்தாரெம் முகம்மதுவே. 25

நாலோங்கு சிந்தை புடையார்முக நோக்கியமர்
பாலோங்கி யறகை யுரைத்தேபின் படர்விசய
மேலோங்கி னகைபுல் லாவாலென வீரநயத்
தாலோங்கு காலிதினை யேத்து முகமதுவே. 26

மூவேந்தர் செய்தி மொழிதோறு முளரியுறும்
பூவேந்த ருங்கண் புனலாறு பொழியவிறற்
கோவேந்தர் நாம மறைபோது குறைதருமத்
தேவேந் தியல்பு தெரிந்தார்புடை சீரியரே. 27

அரிதாம் புணர்ப்பி னனைவோருளத் தாக்கமுற்றுப்
பெரிதா மகிழ்வின் றுயரே பிறந்தா ரவரோ
டெரிதா னவிய வுதித்தாரெழுந்தா ரிறந்தார்
கிரிதா முறைமனைப் பாலோங்கு சிறப்புடனே. 23

காணுர் மலரின் சுவ[illegible]ன்றிய காவலர்செங்
தேனுர் புயத்தத் திருத்தாதையர் சேயகமே
போனு ரவர்கண் மணிமைத்தனைப் புல்லியன்பி
னுனு வருளின் முகந்தார்நபி வானனத்தே. 29

மேரோ டிகலுங் தடந்தோள்கள் மெலிந்திருகண்
ணீரோ டமைந்த னெழிநேக்கு நெறியுடைய
சீரோ டலர்ந்த மருமதர் திருமுகத்தைக்
கீரோ டிகலுக் குழன்மாமயில் கண்டனரால். 30

என்பா லமைந்த தெருளாவிதை யாசனத்தி
னன்பா லணிந்த மணத்தார்க்கரு ளோய்பணித்த

நன்பா லிணைபந்த தெளைவகொல்லென நாகநகர்
தன்பா லருமை யணிந்தாரெனச் சாற்றினாசால். 31

பூநோக்குங் கொண்ட னபிநாதர் புகலிடியாற்
றானோக்கு மஞ்ஞை யெனவேங்கித் தரைவிழுந்தா
ளானோக்கு முள்ள மிலளாயுரை யோடெழு
மானோக்கிய லசுமாமாதர் மணியனை யாள். 32

கருமாலையிற் றேற்றிய மாலையைக் கண்டாவென்
றிருமா லெழுந்து முணர்வானறி வேய்ந்ததுபோற்
பொருமால் விழியா டெளிவுண்டயர் போர்த்துடலி
னொருமாங் குயிலா மெனவோசை யுரப்பினளே. 33

கானாத் துயரா லரசேகருத்தே யெனக்கூஉ
மானாத் தொனிகேட் டயலுற்ற மடக்கொடியார்
பூனாத் திகழ்மின் குலம்போற் புடைபோந்தழுங்குங்
கோனாத் தலைவோ சையினாகுல மீறினவால். 34

கலைமாமதி தாரகை மின்னொடு காரணைத்து
நிலைமாசொடு பூழ்தியினீ ளிலத்திற் புரண்டே
குலைபாறென மாதர்க ளியாருங் குலைகுலைய
வலையா நெறியான் மனத்தேற்றின ராண்டகையே. 35

திருவா ரொளிவிற் சிறந்தோங்கிய சீர்நபினார்
மருவார் கதிசோர் தருடம்பி மருங்கினத்தார்க்
கொருவாய் மொழியோ தினரத் துயரேகவுனா
வருவா ரளித்தே யுளந்தேற்றுக மாண்பினென்றே. 36

கோடாது நின்ற நெறியாருரை கோதிலன்பா
னாடாவு வந்து கிளையாரு நலன்புனைந்தார்
கேடாது நானா மியல்பாயது கேழ்வளரும்
வாடாத மேனி நயினார்மனை விட்டெழுந்தார். 37

வளமே மலர்ந்த கதியேகிய மற்றிருவர்
களமே கடந்த திறத்தைசவர் கடிமனைக்கு
முளமே திருத்தும் பொருளோடு சென்றாருநயங்
கொளமேன்மை சொற்றுற்றினர் மாற்றலர் கோளரியே. 38

வேறு.

இன்னதிப் புரத்தி னாக வெறுழ்வலி படைத்த வீரர்
துன்னிய விடுதி வைகுத் தோற்றத்தி னிரண்டி லக்க
மன்னவ னிரிந்த சேனை மறுகிய மறுக்கத் தோடு
தன்னகர் போதல் கொண்டான் றளர்தர மேன்மை யம்மா. 39

தேன்றரு மரவப் பொற்றோள் செழுமலர் வாகை பூப்பக்
கான்றருங் கமலச் செங்கை காலிது மறிவின் மிக்கார்
வான்றரு முடிவிற் சூழ மதியென நிழல்கு லாவ
மான்றரு நகரஞ் செல்வான் வரிசையி னெழுந்தா னன்றே. 40

வெண்டிரைப் பரவை யார்ப்பின் விரிதரும் பதாதி மொய்ப்ப
வெண்டிசை குளிறும் பேரி யியம்பல முழங்க மூசும்
வண்டினம் பறவை பாடு மகிழ்வனங் கடந்தோர் தங்க
லண்டினர் சபைனு செல்லும் வழியிறைத் தகன்று போனார்.

மானமுண் டிழிவு பூண்ட வன்கணர் பதுங்கி நின்று
ஈனமுண் டிலங்கும் வைவே னகையினோ டெதிர்ப்பச் சீறிக்
கானமுண் டகையார் வீரக் கருமையாற் கடந்து செவ்வி
பானமுண் டவிற் போனார் பாதையின் மறித்த வெங்கை. 42

முக்குணம் பொதிந்த சோதி முதிர்நபி முகம்ம தென்னு
மிக்குயர் பொருளி னன்பு மேவிமே யுரிமை பூண்ட
மக்களி னுள்ளே னென்ன வழங்கலு மனம்வே றாகி
பக்கண மொடுங்கித் தாழ்ந்து மகிழ்வினை வலித்த தன்றே. 43

படர்ந்தபல் லுயிருங் கொண்ட பாவினை யுயிரா யாருந்
தொடர்ந்தமேற் பதவி காட்டுந் தூயவர் நாமம் போற்றி
விடந்தரு மென்று மெய்தா தின்றிவ ணெய்திற் றென்றே
நடந்திவர்க் காத்து வெங்கை நாட்டகம் விடுத்த தன்றே. 44

வேகமிக் கணைந்து சேனை விரிகட னடுவண் புக்கிப்
பாகமாற் றலர்கை மீண்ட பரிசிமு ணருந்தும் வெங்கை
யாகமே மகிழ்வின் விட்ட வருமையுஞ் சாற்றக் கேட்டோ
ரோகைகூர்ந் தினிதிற் சென்றொருவனைப் புகழ்ந்து மாதோ.

வண்மண் வரியே றன்னார் மழைவளர் குன்ற மற்றுங்
கொன்மன விலங்கு லாய கடூர்பல குறுகி நீந்திப்
புன்மனத் திருளைப் போழ்ந்து பொழிகதிர் நிலவு காலு
நன்மன மதியம் பூத்த நகர்மதீ னாவிற் சார்ந்தார். 46

பான்மொழி நபியுஞ் சேர்ந்தோர் பல்லருஞ் சுருப றன்பின்
கான்முனை யவருங் காண்பா னெதிர்கொளக் கதிர்வே லோரை
யூன்மரு ளமரி னஞ்சி யோடின ரென்றூர் வந்தார்
மான்மத மேனி யெங்கோன் வாகைய ரென்று சொன்னார். 47

இருபெருங் கணமுந் தம்பி னிணைபந்தவுள் ளன்பி னூற்றல்
மருவுத லென்னச் சேர்ந்து மார்புறத் தழீஇக்கொண் டங்கண்
பொருமமர்த் திறங்கள் போற்றக் கேட்டகப் புந்தி கூர்ந்து
வருமுறை தெரிந்தி யாரு மனத்திடை யாக்கம் பூண்டார். 48

என்மனத் தெழிலின் பீடத் திடத்துயர் சொர்க்கப் பூங்காத்
தன்மனை யென்ன வாய்ந்த தவிசிடத் திறசூல் பாத
நன்மனம் பூண்டி யாரு நகுபுய வாகை யோடும்
பன்மனை சென்று புக்கார் பயன்மனை யொழுகி னாரே. 49

அசுகாபிகள் காலிதண்ணலை

தலைமையாக்கிக்கொண்ட படலம் முற்றிற்று.

ஆக படலம் 50-க்கு திருவிருத்தம்-946.

கவுல்மூறித்தப்படலம்.

திக்கு விஜயந் தனிசெலுத்தித் தேருக் குபிரர் குறும்படக்கு
மிக்க விறசூல் நபிபதத்தின் மேகந் தவழு மணிமாட
மக்க நகரிற் குறைசிகுல மைந்தர் பலரும் வந்தளித்த
தக்க கவுலை தவறியிகல் விளைந்த வாறு தனைப்பகர்வாம். 1

நட்டும் வாய்மை தவறாது நடக்குந் திங்கள் மூவாறு
மட்டு மிகன்மா றொழிந்திருவர் மனிதர் மக்க ளங்குமிங்கு
மிட்ட முடனே போதவர விணங்கி யிதயித் தினிதிருந்தா
ரட்ட திக்கும் பேர்விளங்க வன்புற் றிருக்கு நாளிலன்றே. 2

தேடற் கரிய நபிகவுலிற் சேர்ந்து குஜாயத் தெனுமினத்தார்
மாடக் கொடிவா னளக்குமக்க நகர்க்குக் குணபாலொத் திறென்னு
மோடைக்கரையிற் குடியிருந்தா ரோங்குங் குறைசிக் குபிரரொடுங்
கூடிப் பனுபக் காக்கிளைக ளிருந்தார் குடியாய் மக்கமதில். 3

கெடும்புற் றறியாக் * குஜாயதென்னுங் கிளைஞர் முன்ன
ம் பனூபக்காக், குடும்பத் தவர்க்குப் பழிகொடுக்க வேணும் ப
ழிகள் கொளக்குறைசிக், கடும்பிற் சிலருங் கூடியொரு கங்குற்
போதிற் படையேந்தி, படும்புற் கொலையாய்க் குஜாயதினத் தவரி
லொருவன் றனைக்கொன்றார். 4

கொன்ற செய்தி யுலகும்விண்ணுங் கொண்ட புகழார் நபி
யாதஞ். சென்று புகல வேணுமெனத் திறஞ்சேர் குஜாயத் தெ
னுங்கிளையில், வென்றி யுறுஞ்சா லிம்தவத்தால் விரும்பிப் பயந்த
வமிறென்போர், மன்றல் மலர்ப்பூஞ் சோலைமடுத் கடந்து மதீனப்
பதிபுகுந்தான். 5

உரனைத் தடக்கித் தவமுனுற்றத் தோங்க லனைய பள்ளி
நடு, வரனன் குயர்த்து மறைக்குருசின் மறைநா வலவர் புடை
சூழத், திரனன் குறவிற் றிருக்கு மன்னோர் சென்று நறலுங்
குறுங்கடலைக், கரனங் குயர்த்தி மலர்க்கழல்வீழ்ந் திறைஞ்சி
யபிறு கழறுவனால். 6

விண்ணோர்க் கரசே நபிக்கரசே வேத விளக்கே கதிர்ச்சுட
ரே, கண்ணு ரகழி புடையுடுத்துக் கனஞ்சூ லுளைந்து கண்வள
ருக், தண்ணோர் கைநமா தினமக்கத் துறையுங் குறைசிக் குபிர்த்
தலைவர், நண்ணு ருமது கவல்முறித்தா ரென்று பயித்தால் நவிற்
றினனால். 7

வந்து கவியாற் போற்றியுரை மைந்தன் மதிவாண் முகநோ
க்கி, யிந்தைப் பகிர்ந்தோர் வெற்றியுங்கட் கேய்ந்த தென்னி விதி
த்துரைத்தா, ரந்தச் சமயத் தோரெழிலி யகல்வான் மிசைவாய்
விட்டலறி,யுந்தத் தீமான் பின்சென்றே ரசகா பிகனொண் முக
நோக்கி. 8

கடைந்து தெளித்த மறைமுதியீர் சுகன முகட்டி லிந்தோபாரு
மடர்ந்து செல்லு மிம்மேக மதுவாய் விட்டுக் குஜாயதெனுங்
குடும்பத்தவர்க்குவெற்றியென்னு கூறியகல்வதென்னவெளியோர்க்
கிடுங்கைக் கமல விரனீட்டிக் காட்டி யினிதி னியம்பினரால். 9

---

* குசாயத்தென்பது குசாயதென்று சந்தவின்பம் பற்றி
விகாரப் பட்டது.

அதுகண் டிறுமா புதுமையென வன்புற் றிருக்கும் போதி
ன்மக்கப், பதிவிட் டன்பர் புடைநெருங்கப் பாழிப் புயத்து உ
தையிலென்போன், முதுகுன் வளையூர் தடமடவி முழுது நீந்தி
மலர்ச்சோலை, மதின நகரி னபிபாதம் வந்து பணித்து சொல்லு
வனால். 10

வானோர்க் கரசே யெங்கள்கிளை மைந்தர் தன்னி லொருவ
னைத்தா, மூனோர் சதிர்வாள் கொண்டுசெற்றா ரொன்னார் பனுபக்
காக்கிளையி, வானோ ரென்ன வமிறுசொற்ற படியே யவனுஞ்
சொலக்கேட்டுத், தீனோர் பரவு நபியிறசூல் பொறுநீ யென்று
செப்பினரால். 11

வல்ல திறத்த உதையிலெனு மன்னன் கருத்திற் றன்னா
ர்க்குச், செல்ல நினைத்தா னக்கிளைவைத் திரைசூழ் புவியிற் குபி
ர்களற, வெல்ல வுதித்த முகம்மதெனு மேலோ ருள்ளந் தன்னி
னுணர்ந், தல்ல லறவே யவன்முகம்பார்த் தறைவா ராகங் குளிர்ந்
திடவே. 12

அதிசேர் மக்கக் குறைசிகள்முன் சொற்ற கவலை முறித்த
பய, மிதையார் வித்தத் திருந்ததின லின்னஞ் சிலவக் கரங்கூட்
டிச், சிதையாக் கவுற்பத் திரம்வாங்கி வாவென் றனுப்பச் சினச்
சிறுகண், மதையா னைகள்போ லபாசுபியான் மதீன நோக்கி வரு
கின்றான். 13

நீங்க ளவனைச் செறுநெறியிற் காண்பீ ரெழுமி னெனநிக
ழ்த்த, வாங்குஞ் சிலைக்கை உதையிலுடன் மன்ன னமிறு மெழு
ந்துலகந், தாங்கும் புயத்து நபியிறசூல் சரணம் புயத்தில் வீழ்ந்
திறைஞ்சிப், பாங்கர் புடையிற் சூழமக்கப் பதியை நோக்கி நட
ந்தனரால். 14

பணித்தா ரணிக்கோ ரக்கமெனப் பகரும் வளஞ்சேர் மக்க
நகர்க், கணித்தா மிரண்டு தினத்தூர்த்த தரின வுசுவா னெனுந்
தலத்தின், மணித்தார்த் திணிதோ ளபாசுபியா னென்னு மன்ன
னவர்க்கண்டார், கணித்தா ருவமை யெவருமிலாக் கத்த னிறசூல்
சொற்படிக்கே. 15

குடுமி நெடுவே லுதையிலெனுங் குரிசி றன்னை பதரிடை
யிற், கடுவெங் களிறு மபாசுபியான் கண்டு புவியி லோர்போ
து, நடுவு பிறழா முகம்மதென்போர் நளின மலர்த்தாள் போற்றி

வணி, லடுவெம் புலிபோல் வந்தானென் றகத்திற் குறிப்பிற் றெ
ளிந்துணர்ந்தான். 16

எரியுஞ் சுடர்வா ளுதையி லென்போ யெவண்போ யிருந்து
வருகின்றா, யுரையா யென்ன வபாசுபியா னுசாவ வெமது கிளை
ஞர் குடி, பரிவா யிருக்குந் தடவரவிக் கரையி லிருந்து பண்ணி
சைக்கு, மரிவாய் சோலை மக்கநகர்க் கேகவந்தே னென வறைந்
தான். 17

மெய்ம்மை தவறா வேந்தேநீ வேலைப் புலிவாழ் சிறியோர்
போற், பொய்ம்மை யுரைத்தாய் முகம்மதுழை போந்து வரும்வா
றறியேனோ, செம்மை யுரையா யெனக்கேட்டா னவர்தம் மிடத்
திற் செலவிலையென், றம்மைக் கிணங்காத் தவறுரைத்துப் போ
ந்தா னறஞ்சேர் மக்கமதின். 18

இகலார் கலியைச் சுவற்றுகதி ரிலைவேற் செங்கை யபாசுபி
யான், முகிலார் பொழில்சூழ் மதீனமெனு மூதூர்க் கேகித் தமு
துதிரு, மகளா ரும்மு கபீபுசெழு மணிமா ளிகையின் மனத்து
வகை, மிகவா னந்த வெள்ளந்துள்ள விரைவி னினிது புகுந்தன
னால், 19

திருத்தங் கதிர்மா மனையகத்திற் சைய்ய திறலுல் நபியிருக்க
விரித்த பாயி லபாசுபியான் விருப்பி யிருக்க வருநினைவைக்
கருத்தி னுணர்ந்து, சதுமென்னக் கற்பூங் கும்மு கபீபெழுந்து
குருத்தமணிப்பொற் பாயலிடங் குறுகிச்சுருட்டி யகலவைத்தார்.

உந்துந் தவங்கண் முடித்திகத்தி லுவந்து பயந்த வென்மக
வே, யிந்து மழுங்குஞ் சுடர்ப்பாய லியான்வந் திருக்கத் தகா
தெனவோ, நந்தும் விலக ளிட்டிதென்ற நாட்ட மமைந்த படி
யானோ, வந்து நொடியிற் சுருட்டிவைத்த வாறே தெமக்குச் சொ
ல்லுமென்றான். 21

கோபத் தளறே நினக்குரிய குபிரா மிருளைக் கடிந்தகற்றுந்
தீபச் சுடரா நபிமேனி திளைத்த மலர்ப்பொற் பாயறனிற்
பாபக் குபிரா னவர்புனிதம் பற்றற் றவர்க ளிருப்பதன்றென்
றூபத் தினுகாக் கற்புறையு ளரீன வும்மு கபீபுரைத்தார். 22

என்ற மகளார் தமைக்கோபித் திகலா வெழுந்திங் கிங்கி
சைக, டோன்றும் பெருமை யுரைத்ததென்கொ லென்று துனி

கொண் டடர்ந்தனலைக், கான்ற விழிக ளிமைதீய்ப்பக் கடுத்த
ோற்ற முரைத்தகன்றே, யூன்று மறைதேர் நபிபாதத் தூற்றுப்
பணிந்து சலாமுரைத்தான். 23

சிறப்பப் பணிந்து சலாமுரைத்தோன் சிந்தை தனிலே நி
னைந்துவந்த, குறிப்பை யுணர்ந்தோ ரிவற்குமுகங் கொடுத்துப்
பேச லாகாதென், றத்தை யுலகே ழினும்விளக்கு மரிய மறை
கண் ணபியிரசூல், வெறுத்து மதியிற் பேரொளிவு மேவும் வத
னங் கொடுத்திலரால். 24

மதுவுண் டளிகள் பாடுமலர் வதனங்கொடாது வெறுத்தது
கண், டிதயங் கலங்கித் தடுமாறி யெழுந்து சலித்துட் கடன்மு
சட்டி, ஹுதயஞ் செய்திவ் வுலகேழு மொளியால் விளக்குங் கதிர்
ங்கதிரி, னிதமும் விளங்கப் பேர்பொறித்த நிருபர் பாற்போய்
நிகழ்த்துவரால். 25

தாழும் பூட்கைக் கடகரியே சார்ந்தோர்க் குதவி தருந்தரு
வே, வாழுங் குறைசிக் குலக்கொழுந்தாய் வந்த மருமை திடத்தி
லெனைச், சூழும் வினையாங் கருமமுள்ளிச் சென்றே னறுகாற்
சுரும்பினங்கள், வீழுங் கமலா னனநோக்கா திருந்தார் வந்தேன்
மீண்டென்றான். 26

என்னை நாடி யீண்டடைந்த தென்கொல் கனைத் தெனுங்
கிளைக்கு, மன்னு மன்னே யென்னவபூ பக்கர் வினவ வெனைக்
கூட்டி, மன்னுங் கதிர்வேல் முகம்மதுமை போந்து விடுத்தி யா
ஞளத்தி, துன்னி வந்த கருமமுடித் துதவ வேண்டு மென்மொ
ழிந்தார். 27

செகமேழ் கெடாமன் மறைவிளக்குஞ் சைய்ய திறசூல் நபி
கமல, முகமே கொடாத காரியத்தின் முயன்றி யாமின் றுரைப்
பதின்றென், றகமே வெறுத்துச் சொல்லினர்கேட் டையா ரமரிற்
கூறுகிர்வாய்க், ககமே துடருங் கூரிலைவேற் கரத்தா ருமறு பதத்
தில்வந்தார். 28

ஓங்க லனைய புயத்தரசே யுலகம் புகழு முகம்மதுபாற்,
பாங்கி னுடனுற் றுடம்படிக்கைப் பிரிவின் முடித்துத்தருகவெ
ன்றார், திங்கொன் றனுகா நபியறிதி செய்தா னன்றே யவர்மறு
த்தார், தாங்குங் கதிர்வாட் கொண்டுன்னைத் துணிப்போ மியா
மென் றுரைத்தனரால். 29

சற்றுங்கருணையில்லாமற் சாற்றுஞ் சொற்கேட்டுளந்தானுக்கிச்
சொற்ற வடிவா ளவிமனையிற் குறுக வவணி லலியாரு
முற்ற வருங்கற் புறையறையா யோங்கு பாத்தி மாவுடனும்
பெற்ற கசனுர் தவழ்பருவப் பிள்ளை யுடன்வீற் றிருக்குங்கால்.

அடரும் பகுவாய்ப் புலியலியே யடைந்தார்க் குதவி செய்
பவரே, தொடரி னளவின் மிகக்கருணை சொரியு முகிலே யுமதி
டத்திற், படருங் கரும மொன் றுள்ளி வந்தேன் பலன்கெட் டே
காமற், றிடங்கொண் டிணக்கித் தருகவென்றார் கரும மென்
கொல் செப்பென்றார். 31

வரைவான் கவுற்பத் திரமொன்று மணிமுத் தாயிர்க்கும்
வளைவாரித், தரைவாழ் முகம்ம திடம்வாங்கத் தமியேன் சென்
றே னெனைக்கண்டு, விரையார் கமலா னனமாற வைத்து வெறுத்
தா ரக்கருமம், பரிவாய் முடித்துத் தரவேண்டு மென்று பகர்ந்
தார் சுடர்வேலார். 32

திருத்து மணிக டிளக்குமுடிச் சிரசி னுடுவொன் றமைந்த
தோர்க்குப், பொருத்த மறுங்கா ரியமெவரும் பொருந்த முடி
யா தெனவலியார், கருத்திற் றேர்ந்து பகர்ந்தனர்கேட் டரிய
கதியின் மாதர்களை, வருத்த மறவே புருக்திவிக்கும் பாத்தி மா
தம் முகம்நோக்கி. 33

தாயே யுமது தந்தைதிருச் சரணம் புயத்திற் போயெனக்கன்
பாயோர் கவுற்பத் திரம்வாங்கிக் கொடுத்தீ ரென்னிற் பலநாளு
மீயே மூவுக முள்ளமட்டும் வியன்செ றறபி கட்கரசாய்த்
தூய மகுமூ தென்பவரைத் தவிசி லிருத்தித் தொழுவமென்றான்.

என்று மனத்தி னலிவுரைக்க வெழில்சே ருவணை மணிவிள
க்காய், நின்று துலங்கு நபிமகளா ரவரை நோக்கி நின்கரும,
மொன்று மெங்க டந்தையர்பா லுரைக்க முடியா தென்றனர்
பின், வென்றி யலியே யசனையருள் வேந்தே யென்ன விளித்து
ரைப்பான். 35

எந்கிங் கினிமேற் புத்தியென்கொ லென்று வினவ வேழு
லகு, நிற்கும் புகழா ரலியுரைப்பார் நெறிசேர் கஞனத் தெனுங்
கிளையைத், தற்காத் தருவு நாயகனீ யுன்னைச் சகல கலைமுழு
துங், கற்கு முதியோர் முதற்சிறியோர் கண்டு பழகா தவரிலை
யால். 36

அடுக்க லனைய பள்ளியகத் தறிஞர் பலரு மைம்புலனு
மொடுக்கித்தொழச்சூழ்ந்திருப்பரவருமையினீபோவென்கவுலின்
மடிக்கள் புடைசூழ் மக்கநகர் மாக்க ளிருக்கின் றார்களென்று
நடுக்கள் பிறழாச் சாட்சிவைத்து நடப்பாயுன்றனகர்க் கென்றார்.

கரும்பர் றூறாலுங் கவிழ்க்கரடத் தும்பி மருப்பை யசைத்
தொடித்தோய், விரும்பு மதியீ தல்லாது வேறே யெனக்குச்
சொலுமினிதா, யருப்பு மதிக ளொன்றிலையோ வறையீ ரென்ன
வேறிலையென், றிரும்பன் கயம்போன் றெளிருமுகத் தவியா
ரிசைப்பக் கேட்டெழுந்தான். 38

எழுந்து நடந்து கதிர்மதிபோ லிலங்கும் பள்ளி யிடத்தினி
ற்போய்ச், செழுந்தின் புயத்திற் றிறலோங்குஞ் செய்யோர் முக
ம்பார்த் துறும்பயிர்க்குப், பொழிந்த மழைபோ லுதவுமலி யுல்
லா புகலச் சொன்னபடி, மொழிந்து கமலக் கைம்முகிழ்த்து நட
ந்தார் மழுவே றன்னாரே. 39

குலக்குன் றனைய குறைசிகண்முன் குலவுங் கவற்பத் திர
மேலும், பிலக்கும் படிக்கு முகம்மதுபாற் பெற்று வருவோ மெ
ன்றுவந்தோர், கலக்க மகற்ற வேந்து வொன்றுங் காணுமியாமெ
ன்றுளங் கலங்கி யலக்க ணுற்றுச் சரங்கடொலைத் தடைந்தார்
மக்க நகர்க்கன்றே. 40

புயமார் பழுந்த விபத்தினைக்கோ டேற்ற புகழா ரபாசுபி
யான், வயமா வனைய முகம்மதுபால் வாய்மை போலே தனிலாங்
கிச், செயமாய் வந்தா ரெனமகிழ்ந்து திரளோடெழுந்தவ் வூர்மு
ழுதும், பயவா ரிதிபோ லவரிடத்தில் வந்தார் பயனோர்த் தறிய
வென்றே. 41

நிலங்கண் முழுது மாறுமனிதமுஞ் சுடர்செய் மதிபோல
விலங்கும்புகழோய் முகம்மதுபா னடந்தசெய்தியென்னென்றார்
வலங்கொண் டெழுந்த கதிரிறசூல் வதன மாற வைத்ததுவுந்
துலங்குங் கதிர்வே லபூபக்கர் தோன்ற லுமறுஞ் சொற்றதுவும்.

விரித்துக் காட்டி முடங்குளைவாள் வெவ்வாய்ச் சீய மலிமட்
டுங், கருத்திற் கருணை யொடுதன்னைக் கோத்து மதிசொற் றனுப்
பியதுந், திருத்திச் சொன்ன ரவியும்மைச் சேர்ந்த வெமக்குக்
கவுலாயுத், தரிக்க முகம்ம திடம்பொருந்தந் தனைக்கேட் டுரை
த்தா ரோமென்றார். 43

உரவுங் கருநேர்ப் பாரேத்து மோங்க லனைய முகம்மதுபான்
மருமா னலியா ருத்தரவு கேட்டு மவுல வில்லையென்றார்
விரகா ரலியா ருமைப்பழிப்பு விளக்கப் பகர்ந்த தல்லாமற்
பரவு முதவி யன்றதனை நம்பிப் பயமற் றிருக்கவென்றார் 44

குற்ற மிகச்செய் தோமென்னுங் குறிப்பா லுள்ள மிகக்கலங்கிப்
பற்று மெரிவீ ழிளந்தளிரிற் பனிமென் மதியா னனம்வாடி
முற்று மறிவு தனையிழந்து முளரி மலர்க்கண் டுயிறுறந்து
சுற்றி மக்க நகர்காத்தார் துணிந்து குறைசிக் காபிர்களே. 45

கவுல்முறித்தபடலம் முற்றிற்று.

ஆக படலம் 31-க்கு திருவிருத்தம்-991.

அலியாரண்ணல்

நிருபம்பறித்தபடலம்.

வானிருக்கு மறுசேறி யொருமுதல்வ னுடன்பேசி வந்தோ
ர் தீனிற், றனிருக்குங் காத்தபென்போர் சஞ்சரிக மிசைபாடத்
தளைகள் விண்டு, தேனிருக்கு மலர்ச்சோலை மக்கநகர்க் குறைசிக
டாந் தெரிவினோர, ஆனிருக்கு முள்வேலை விடுத்ததையே அலி
பறித்த தோது வாமே. 1

கண்டிருக்கு மறைக்குருசி னபியிறசூ லசகாபி மாரைக்
கூவி, வண்டிருக்கு மலர்ச்சோலை மக்கநகர் தனைப்பிடிக்க வாவு
மானிற், பண்டிருத்திச் சமர்த்தொழிற்கின் றுறுங்கோலங் கொ
ண்மினெனப் பகர்ந்து பொற்பூஞ், செண்டிருக்குங் கரமேந்திப்
புலனொடுக்கி யொருபொருளைச் சிந்தித் தாரால். 2

உலகும்விண் ணும் புகழ்ந்தேத்து மொருமுதலே யெனப்
போற்றி யூங்குஞ் செல்வ, மலகில்புகழ்ப் படாம்போர்த்த மக்க
மெனு மாநகர மதனி லியாங்கள், செனுமளவுங் குறைசிகள்பா
லொற்றர்சிலர் சென்றுளவு செப்பா வண்ண, நலனுடனே காத்தி
யெனத் துஆவிரந்தார் மறையலம்பு நாவா லன்றே. 3

கண்டவர்கள் பலமதற்று மக்கநகர் ஷறாசீங்கள் கடும்பின் முன்னங், கொண்டவிலை யடிமைகளிற் சாருமென் பவளுரிமை கூறப்பெற்றாள், பண்டருநற் கவிதைகளைச் சுருதியுட னிசைசெழுமப் படிப்பின் கீத,வண்டினம்போ லொப்பாரி சொலிக்கலுழ்வ ளிழவாளர் மனைகடோறும். 4

அரிக்குரலி னிசையெழுப்பிப் படிக்குமிராகங்கேட்டு மருட்டமேவு, முருக்கிதழ்வாய் திறந்தழுது நீலநிக ருமையவிழி முத்தஞ் சிந்தக், கருக்கமல மார்பிலடித் தொப்பாரி சொல்லிமிகக் கரைதல் கேட்டும்,வரைக்கிணைதோ ளிளைஞர்களு மருந்தவத்து முனிவர்களு மயங்கு வாரால் 5

காலைமுத லிதுதொழிலாய்த் திரிந்தவளுக் குதவிசெயக் கைம்மா றின்றிச், சோலைசெறி மக்கநகர் தனைவிடுத்துத் தனியெழுந்து துணைத்தாள்சேப்பச், சாலமுறு மதர்தொலைத்துத் தடங்கள் செறி மதீநாவிற்றனியொன்றாத,ராலநபி பதவுகளத் தடுத்துமலர்க் கைகூப்பி யன்பு பூத்தாள். 6

வந்தமட மான்வதன முலகுதொழு நபிநோக்கி மைந்தர் மெய்க்கச், சிந்துகவி யிசைபாடி யதுதொழிலாய்த் திரிந்தவளீ யலவோ விப்போ, திந்தநகர் குடியிருக்க வந்தனையோ குபிர் போக்கி யிசுலாமாகப், புந்தியொடும் வந்தனையோ வெனவினவ மறுமொழியப் பூவை சொல்வாள். 7

கடிகமழ்பூங் கற்பகப்பொற் பதிக்கரசே,புவிக்கரசே கருதியிவ்வூர், குடியிருக்க வரவுமிலைத் தீனிலுற வரவுமிலைக் கொண்டலூர்ந்து, படியுமலை பதறமர்க்குப் பின்பெனையோ ராடவரும் பரிவுகூர, விடியரிபூ ணுடைமுத லொருகாசு மிரக்கமுட னீய்ந்திலாரே. 8

ஆனதிறு விருந்தபதி விட்டெழுந்து மதிதவழு மடுக்கல் வாவி, கானகமுந் தொலைத்*தடியா ளெனையாள வரித்தான கத்தருங்கள், பானிலவி னிலகுமுகங் கண்டெனது கலியகலப் பணிந்தும் பாதந், தானையுடன் பசிக்குணவும் வாகனமும் வாங்கவிவண் சார்ந்தே னென்றாள். 9

---

* அடியாள் என்னும் படர்க்கைப்பெயர் தன்மை யிடத்தைப் பெறவேண்டுதலின் இடவழுவமைதி யென்க.

ஆடல்வயப் பரியிரத வாதவனுஞ் செழுமதியு மன்புகூர,
வேடவிழ்பூ மரைப்பாகக் தொழுதிறைஞ்சு நபியிறசூ லிவருக்
கூணும், பிடுறுநற் கோசிகமும் வாகனமுங் கொடுமினெனப் பி
ணைய ரேளிற்;குடுமுயர் முத்தலிபுக் கிளையிலுள மைந்தரொடுஞ்
சொல்லினரால். 10

கூறுமொழிப் படியுணவுங் கூறையுடன் வாகனமுங் கொடு
க்க வாங்கித், தேறிமனப் பிரியமுடன் மகவகட்டிற் சேர்த்தமந்தி
சிதறுந் தேமா, ஊறுநறைக் கனியுடைத்துச் செய்ந்தலையி னறவூ
ற்ற வோங்குஞ் செந்தேன், மீறுமக்க நகர்க்கேக வேண்டுமென
வோர்மறுகின் விரைவிற் சென்றாள். 11

மறைகதுவா நபியிறசூல் சமர்க்கெழுந்து செலுஞ்செய்தி
மக்கம் வாழுங், குறைஷிகளுக் குணர்த்தவெகு வபீத்தல்கா வின்
றதிருக் குமரன் காத்த, புறுதியுட னுளவோலை தனைவரைந்து
கொடுத்தனுப்ப வொற்ற ரின்றிக், தறுகுமந்த வேளையிலே சாறு
வென் பவள்வரக்கண் டழைத்து மாதோ. 12

தேசுமணித் தரளநகைத் துடியிடைக்கு மாற்றரிய செய்ய
தங்கக், காசுபத்து மோர்துகிலுங் கூலியெனக் கொடுத்தெழுது
ங் கத்து மீய்ந்து, மூசுவரி வண்டினங்கே ளுண்டுமுரன் மலர்ச்
சோலை மக்க மூதூர், வாசமுறுங் குறைஷிகள்பா லந்தரங்கத் தி
வ்வோலை வழங்கென் றாரால். 13

அந்தரங்கத் தனித்தகத்தை யவள்வாங்கிச் சிலதூர மகன்ற
பின்னர், மந்தரத்தின் புயத்திறசூல் நபிபதத்தின் வானிழிந்து
விபுதர் கோமான், வந்துவந்து காத்தபென்போ ருளவோலை சா
றுனைவழங்க வாங்கி, யுந்திநெடு நெறிகடந்து செல்கின்றா ளெ
னுமாற்ற முரைத்துப் போந்தார். 14

அலிதல்கா சுபைபிறும்மா றவர்மறுதர் மிகுதாதென் றி
வர்களீறு, கலினவயப் பரியினரை விளித்துமக்கத் ததரினுறை
காகென் றேபேர், சொனும்பொழிலி னருகுசெலுஞ் சாறுவெ
ன் பவளுழையிற் சொருகுஞ் சத்தை, வலிதிற்பறித் தவளைவிடு
க் தாமறுத்தால் வாட்கிரையாய் வழங்குமென்றே. 15

நல்குமுகி லெனுமரச னிலப்பைந்யி ருனிதய நளினப் போ
திற், புல்குமிய லுகளபத நபியிறசூல் விடைகொடுத்தார் புரவி
தூண்டி, யெல்லவனும் பதத்துகளா லொளிகரப்ப விருதடையு
மிழுத்துப் பூட்டும், வில்லின்விடு சரங்கடுப்பக் காருவெனும்
பொழிலிடையின் மேவி னரால். 16

வண்டுகெடு வம்புகடல் மறியிலேயேற் றுவலையான் மருட்டி
ஞானங், கொண்டதவ முனிவரையு மதிமயக்குஞ் சாருவைக் கா
கு வென்னுர், தண்டலையிற் கண்டுனது பாலிருக்குங்காகிதத்தைத்
தருவாயென்றார், தொண்டியென விடத்திலவை யில்லையென
வொருகிலையாய்ச் சொற்று ளன்றே. 17

கட்டுமேட்டா யாணையிட்டுக் காகிதமின் றெனவுரைத்த கனி
கை சாருத், தட்டுமுட்டுச் சடங்கமெல்லாஞ் சோதித்துக் காணு
மற் றடங்தோண் மன்னர், வட்டமிடும் பரிகடவி மீளமனம் வை
த்ததுகண் டலியார்தான, மெட்டுடைய நபிவாய்மை பொய்மை
யுறு தெனவுவணி யுறைவிட் டாரால். 18

உன்னிடத்தி லிருக்குமந்தக் காகிதத்தை யெமதிடத்தி லுத
வா யாகின்,மின்னவிரும் வடிவாளால் வீழ்த்துதுமென் றுரைத்த
மொழி விளங்கக் கேட்டுக், கன்னியுடன் மிகப்பதறிக் கால்பதறி
த் தடுமாறிக் கரியகூந்தற், றன்னில்வைத்த காகிதத்தை யெடுத்த
லிதன் கரத்தளித்துத் தப்பிப் போனாள். 19

எழுகடலு மழறுபடப் பிறைக்குரத்தா லெடுகதெறியு மிவு
ளிதூண்டிப், பொழிலினிடை முகிறவழு மதீனநகர் நபியிறசூல்
புண்டரீகத், தழகொழுகுஞ் சரணிணையிற் றாழ்ந்துகத்தைமுன்
புவைத்தா ரறுகாற் கீதத், தொழுதிவண்டு முரன்மரபந் தோள
சைய வலியெனுஞ்சாத் தூல மன்றே. 20

அவிருமணிப் புயத்திறசூல் முன்புவைத்த காகிதத்தி னறி
வான் செய்தி, யுவமையறுமக்கநக ரூரவர்க்குக் காத்தபென் போ
ரு ணர்ந்து மோலே, தவமொருவர் நபியிறசூல் சாதுரங்கச் சேனை
யொடுந் தங்க ளூரைக், கவரவென வருகின்று ரர்க்கறுறு பொ
ருணீவிர்க் காக்கவென்றே. 21

பொறித்தனுப்பும் பத்திரத்தை யுணர்ந்ததற்பின் காத்தபெ
ணும்போதர் கையி, லெறித்தகதிர்ப் படையிறசூல் கொடுத்திக
னை யறிகுவையோ வென்று கேட்டார், நறைத்துறக்கத் தலத்த
ரசே நானனுப்புங் கத்திதென நவிலக்காயு,மறக்குறும்பர் செயுந்
தொழில்போல் விளைந்ததென்கொ லெனவினவ வணங்கிச்
சொல்வார். 22

நானிலமும் புகழ்ந்தேத்து நபிகளுக்கெல் லாமரசே நாய
னனே, தீனில்வந்த நாண்முதலியான் மாறுமக்குச் செய்ததில்லை
த் தெரிந்த வாய்மை, தானளித்த பின்னுமக்குச் சதிகளொன்று
ஞ் செய்ததில்லைத தறுகட்காப, ரானவர்க டமைப்பிரிந்த நான்
முதலா யவர்களையு முவந்தி லேனே. 23

மல்லல்செறி மதீனமுறை முஹாசரீ னவர்களுக்கு மக்கமீ
திற், றெல்கிளையு முண்டெனக்குஞ் சுற்றமுடன் சிலபொருளு
முண்டன் னேர்க, ளல்லுதவி வேண்டுமெனப் பயந்ததனு ஞ
னெழுதி விட்டதல்லா, லல்லவர்கட் ககற்றிவிட வேண்டுமென
வெழுதவிலை யடியே னென்றார். 24

அலங்கலணி காத்தபெண்போ ருண்மைசொற்று ரென்றும
கிழ்ந் தலைபோற் சூழ்ந்த, நலங்கொளசு காபிகளை விளித்திவரை
யொருபோது நவிவா யாருங்,கலங்கவுரை பகரலெனத் தேமதுர
ம் பழுத்தொழுகுங் கனிவாய் விண்டு, துலங்கநபி யுரைத்தனர்
வேண்டுமெழுந்து கனியிதழ்க டிப்பச் சொல்வார். 25

காண்டகைய காரணங்கள் விளைத்தடையார் புரமெரித்த
கதிர்வேற் கெங்கை, யாண்டவர்க்குத் தனிமுதற்கு மூமீன்க ட
ங்களுக்கு ஞமர்செய் வன்மம்,பூண்டமன முறைபிகிவன் றனைத்து
ணிக்க விடையெனக்குப் புகலு வீரேன், மீண்டவரா வழிவிசும்
பி னிவனுயிரைக் குடியிருத்தி விடுவே னென்றார். 26

தீற்றுபிறை மருப்புமுகங் கிளைத்தகட கரியுமறு கிளத்தல்
கேட்டு, நாற்றிதழ்த்தா மரைவதனத் தீனவர்கள் முகநோக்கி
யும்பர் நாளும், போற்றுமலர்ப் பதத்திறசூல் பதறிலிவர் தெவ்
வருடன் பொருதோ ரன்றோ, தோற்றுமன வெகுளிகெடுத் தெ
றிமினுங்கள் பிழையிறைவன் றுடைப்ப னென்றார். 27

வேறு.

பருவ மழைபோற் கொடைபிறகுல். பகர்ந்த மொழிகேட்டழற்கடைக்கண், சொரியு முமறு விழிகளுழ்ந்து சுருதி மறைநூ றனையளித்த, பொருளு மவன்றா திறகுலும் புவிவா னுள்ள பொருள்க ளெல்லாந், தெரிய வறிவ ரெனவுரைத்துத் திகழ்வா ருறையிற் செறித்திருந்தார். 28

சேத்த நறவார் மறைபுறக்கான் செகத்தில் விளங்கு நபிதமக்குக், காத்த பென்போர் தம்பொருட்டாற் கருதுஞ் சூறத் தொன்றுவந்த, வாய்த்த மூமி னவரே வணங்காக் குபிரர் தங்களைத்தா, னீத்து மொருகா ரியங்களினு நிறுத்த லொழியு நீங்க ளென்றே. 29

இரையுந் திரைபோற் குபிரர்தி ரெதிர்க்கும் பதுறுப் ..டைதனிலும், வரையு மறுதி யுடன்படிக்கை வழங்குங் குதைவிடாவதிலும், விரைகொள் வாகைத் தொடைபுனைந்து விறல்சேர் நம்மோ டுற்றதினு, னிரையம் புகுதா ரிவரெனவே நெறிசேர் நபியு நிகழ்த்தினரால். 30

அலியாரண்ணல் திருபம்பறித்தபடலம் முற்றிற்று.

ஆக படலம் 32-க்கு திருவிருத்தம் 1021.

ஹிஜுறத்துக்காண்டம்

முற்றிற்று.

அல்லாகுத்தஆலா கலாமாகிய வேதங்களும் நான்கு. அதில் மேலான புருகான் வேதமாகிய கூடாரத்துக்குத் தூண்கள் நான்கு. அத்தூண்களாயிருக்கப்பட்ட கலிபாக்களும் யார்களும் நான்கு. அக் கூடாரத்துக்குட் புகுதப்பட்ட வழிவாசலும் நான்கு. அவ்வழி வாசலுக்குடைய மதகபும்இமாம்களும் நான்கு. அவ்வேதத்துக்குடைய நபிநாயகம் முஹம்மதுசல்லல்லாகு அலைகிவசல்லமவர்கள் காரண சரித்திரமாகிய சிறுப் புராணத்துக்குக் காண்டமும் நான்கு. அதில் 1-வது. காண்டம் அவர்கள் பிறப்பு வளர்ப்புச் சரித்திரக் காரணம். 2-வதுகாண்டம் அவர்கள் நபிப்பட்டம் பெற்ற சரித்திரக் காரணம். 3-வது. காண்டம் அவர்கள்மக்கா ஷரீபிலிருந்து எழுந்தருளியாகிமதீனுமுநவ்வராவிற்போய் அரசுபுரிந்த ஹிஜரியில் நடந்த சரித்திரக் காரணம். 4-வது. காண்டம். மதீனுமுநவ்வராவிலிருந்து எழுந் தருளியாகி மக்கா ஷரீபுக்குப் போய் அதைக் கைக்கொண்டு அரசு புரிந்தது முதல் உபாத்துவரை ஷை வேதமும் நுபுவத்தும் இசுலாமும் சிறப்பமாய்க் கமாலான சரித்திரக் காரணம், இதன் கீழ் இயற்றியிருக்கின்றன.

பிஸ்மில்லாஹி.

நான்காவது

கமாலத்துக்காண்டம்.

மக்காஷரீபிலரசுபுரிய

படையெடுத்த படலம்.

ஹக்கன் மகிமை பொருந்தியருள் குடிகொண் டிருக்குங் கஃபாவும், மக்க மெனும்பூச் சொர்க்கமதும் முஹம்ம திறசூல் தமக்களித்தும், தக்க மறைநேர் புருகானுந் தனியோ னுபுவத் திசுலாமும், மிக்க விறையோன் கமாலாக்கும் மேலாங் காண்ட மிஃதாமே. 1

வேறு.

கடை யுகத்தினி லடியவர்க் காப்பவர் கயங்கள்
புடை செறித்தநன் மதினத்து வரசினைப் புணரி
யுடை யுடுத்தமண் ணகம்புகழ் மக்கத்திற் புரிய
படை யெடுத்தவா றனைத்தையுந் திறத்தொடும் பகர்வாம்.

ஏத மற்றவர் கிசுறத்தோ ரெட்டினில் றமலான்
மாதம் பத்தினின் மக்கிக ளுடனமர் மலைய
வீதி யெங்கணு முரசறைந் திடுமென மேலோன்
றூதர் சொற்றனர் வயவர்க டோள்புள கெறிப்ப. 3

உறைத்து வார்செறி முரசினை யயவர்க ளொட்டைப்
புறத்தி னேற்றிநேர் பொதியினு மன்றிலும் புடைத்தார்
திறத்த வீரர்கள் பீசபீற் காயுதஞ் சேர்த்து
மறுத்த ராகபி வாயவின் வம்மின்க ளெனவே. 4

கட்டு வாம்பரி மிசையினிற் கதிரிலை வடிவேற்
பட்டை யங்குனில் சக்கரங் கார்முகம் பாணம்
வட்ட மேவிய கிடுகவிர் வசியொடு பிறவு
மிட்ட பொற்கழல் வீரர்க ளேந்திவந் தடைந்தார். 5

அரியி னேறெனத் திறத்தபூ பக்கரு மண்டியார்
புரமெ ரித்திடும் வாள்வலி யுமறுநீள் புரசைக்
கரிக ளொத்தமர் கடந்தவொள் வேலுது மாறும்
வரிசெ றிந்தவெம் புலியெனு வலியும்வந் தனரால். 6

அகழி சூழெயின் மதீனமா நகர்புகந் தாளப்
புகரி யானைநேர் குசையினற் றவத்தினிற் போந்து
செகசம் விளங்குகுல் தாமெனுஞ் செம்மலை வைத்தார்.
நகமி ருப்புன றருமிய னபியெனுங் குரிசில். 7

உலகு மும்பரு மோர்ந்தறிந் திடவொரு தொருவ
னிலகும் பேரெழிற் கிருபையங் கண்ணெனு மிறகு
லலரி கோடிவந் திருந்தென வணிந்தன ரவிருந்
தலையின் மீறிசெம் மணிபல தயங்கிய கிரீடம். 8

நான மல்கிய மெய்யினிற் கஞ்சுகி நனிர்செய்
பானி லாவுதிக் தெனப்புனைந் தனர்புனை பான்மை
தான வன்மிகு தயவொடு ஜலால்ஜமா லென்ன
வான கைகளா னீவிவந் தணிந்தன வொப்ப. 9

பச்சைக் காளக மருங்கணிந் தனரணி பான்மை
புச்சிவா னள வளந்திட வளர்ந்தெழுந் தோங்கும்
வச்சி ரப்பொருப் பிடையில்வான் மின்னுறு சுன்ந்தா
மெச்சு மிந்திர வில்லொடும் வளைந்தென விளங்கும். 10

அருணன் சூழ்பதங் கழலணிந் தனரணி காட்சி
கருணை கூர்பணி விடையருக் ககனவ ரேனும்
வருண மீதெனத் தெரிவொரு னறாசினில் வைத்த
சரண மீதென வடிக்குலந் தாழ்ந்தன வொத்த. 11

மன்னு மஞ்சிறைப் பொறியளித் தொழுகிகன் மாந்தித்
துன்னு மாலையம் புயத்தணித் தனரணி தோற்ற
முன்ன வன்றனி தன்னோடு முடுகுபு றருகுத்
தென்னுங் கைகளம் புயத்திணை தழுவுவ தொத்த. 12

விண்ணின் மேவிய விந்திர சாபநீள் வெற்பி
னண்ணி வந்துறைந் தாலென நாண்களம் பூட்டும்
வண்ண வெஞ்சிலை தோட்டடங் தரித்தனர் வைகூர்
நுண்ணு னைக்கணைத் தூணிவென் றரித்தனர் நுடங்க.

வெவ்வி னைக்கொடும் பேய்நரி யோரிநாய் விரும்பி
வவ்வி யுண்டொழில் செய்யும்வாண் மருங்கணிந் தசைதல்
கவ்வை யுற்றமென் மருங்கினிற் கச்செனுங் கையாற்
றெவ்வ ருன்பலி யருள்கென வருடுவ சிவணும். 14

உலப்பு யத்தடை யார்தள மடங்கலு மொடுங்க
வலைப்பு றத்தமை புலித்தலை யலைகைபுட் டொர
நலக்கு லக்கிரி நிகர்புய நபியெனுங் குரிசில்
வலப்பு றக்கரத் தேந்தினர் சுடர்நெடும் வடிவேல். 15

படைக்க லம்பல வெடுத்தணிந் தறுங்கரும் பனைக்கைக்
கடக்க ரித்திரண் மத்தகக் கறைமடுத் தறிஞ்சிக்
குடிக்கும் வெள்ளரி யேறென வெழுந்தனர் குலவுத்
தடப்பு யத்தினி னபியெனு முத்திரை தரித்தோர். 16

தொட்ட நீர்க்குழி தூர்த்திடத் துகள்குரத் தெழுப்பி
யிட்டு வல்லியி னளறெழ நடனங்க ளியற்றுங்
கட்டு வாம்பரி மிசையினிற் கொண்டனர் கனிதே
னட்ட பாகினு மதுரங்க டருமறை யண்ணல். 17

மாத வத்தினர் புகழென மதியென மிளிரு
மாத பத்திரச் சோலையுங் கொடியும்வா னளக்க
நீத பத்திரண் டெழுத்தினை நினைவினி லோவா
வேத பத்திரர் நோன்புட னடத்தினர் விறன்மா. 18

முடங்கு ளைப்பெரு வால்விழி யனலெழு மூரி
மடங்க லொப்பென வயவர்க ளிருபுறம் வாவு
நடங்க ளோய்க்கவெம் பரிகண்மே னரலைபோற் சூழ
விடங்கி டந்தபல் வாக்கிய மிரங்கிட நடந்தார். 19

கடைம ணிப்பிடிக் கவரிகள் பானெடுங் கடலி
னிடைசு ருட்டுவெண் டிரையென விருபுற மிரட்டக்
கொடுமு டிக்கணிற் குயிறவழ் வெற்பெலாங் குறுங்க
நடைபெ யர்த்தனர் புவிப்பொறை யிடபமுன் னடங்க.
20

பணித்த லேச்சுமைப் புலித்துகள் விசுப்பிடைப் பம்ம
மணித்த லேத்தபப் பூதரம் விலங்குகண் மலையக்
கணித்த ளப்பிடற் கரியவிண் ணேர்கடி மலர்சு
ளணித்த டக்கரத் தேந்திமுன் சொரிந்திட வகன்றார். 21

கொஞ்சு வாம்பரி மன்னர்பைங் கொடித்திரள் புயலென்
றஞ்சி வாய்விடா தொழிந்தன குயின்மயி லணியாய்ப்
பைஞ்சி றைப்பெருங் கண்விழித் தாடின பாடித்
துஞ்சு மஞ்சிறை யளிகள்பூஞ் சோலையென் றுவக்கும். 22

தூர்ச்ச டைக்கனற் கொல்லையுஞ் சோலையு மடுவுங்
கார்த்து ளித்தட மலைகளுங் கடந்துசொற் கழனி
யேர்க்கி ளைத்திடுஞ் சீர்ச்சகு வானெனு மிடத்திற்
றூர்ந்து ணைப்புய நபியவண் டபனனெத் திறுத்தார். 23

மக்காஷுரீபி லரசுபுரிய
படையெடுத்த படலம்-முற்றிற்று.
ஆக படலம் 33-க்கு திருவிருத்தம் 1044.

மக்காஷுரீபின் தலைவர்கள்
ஈமான்கொண்ட படலம்.

ஊறிக திர்த்தனு நபியிற சூறமக் கினிய
சிறிய தந்தையப் பாசுமுன் றீனிலை சேர்ந்து
நறிய வாபுசம் சத்துநீ ரியாவர்க்கு நல்கப்
பொறைகொண் மக்கமீ தரசென விருந்தனர் புகழ. 1

ஈன்ற மக்களுந் தாமுகன் னபிதமை யிறஞ்ச
வான்றொ டும்மலைக் கடங்களுங் கடந்துவந் தருள்சே
ரான்ற நாயக ருறைந்திடும் பாசறை யடுத்துக்
கான்ற ரும்பத நபிதமைக் கண்டனர் கவின. 2

தென்ற லஞ்சிறு பிள்ளைக டவழ்ந்திடத் திளைத்த
குன்று போலுயர் மாடமார் மதீனத்திற் குறுகி
யென்று மியாமும திடத்தினி லருளொடு மினிதாய்
நின்று காத்திராத் துயர்நிகழ்த் திடவரி தென்றீர். 3

சரத நீருரைத் திரெனத் தருநபி யப்பா
சுரம கிழ்ந்திட நன்மொழி யுரைத்ததின் பின்ன
ரரியின் வீரர்கள் சூழவத் தலத்தைவிட் டெழுந்து
பொருவி லானருள் கொடுசில தூரம்போம் பொழ்தின். 4

கவின்மு கம்மது பெரியதந் தையபெனுங் காரீ
துவகை மைந்தன பாசுபி யானுமன் றேன்றன்
றவமு ஞற்றியே பெறுசிறார் ஜகபறென் பவரு
கபிநன் மாயிசே யப்துல்லா வெனுநர பதியும். 5

இந்த மன்னவர் மூவரு மக்கமீ திருந்து
வந்து தாரையி னபிபதம் வணங்கிமுன் னின்றார்
சிந்தை நேருற நின்றவர் செழுமதி வதன
மந்த மில்லவன் றாதுவர் நோக்கில னன்பின். 6

ஆறு நீந்திவக் தடைந்தவர்க் கானன நல்கா
வாறு கண்டருங் கற்புடை மகளிர்கட் கரசாய்ப்
பேறு பெற்றய ரும்முசல் மாவெனுந் திருப்பேர்
வீறு பெற்றவர் விளம்பீவர் நபிமிக மகிழ. 7

உய்யு மாறுநேர் கடையுக் முடிவின்மன் றூட்டுச்
செய்யுந் தூதர்சீ ருமக்குமி ரெனத்திகழ் பெரிய
வய்ய ரீன்றவ பாசுபி யானிவ ரவரோ
துய்ய வுங்கணன் மாமியார் சுதனமப் துல்லா. 8

என்று கோத்திரத் தொன்முறை யியல்பெலா மெடுத்து
நின்று தோத்திரத் தும்முசல் மாவினை நிகழ்த்த
வொன்று மாதர நமக்கிவ ருழியினி விலையென்
றன்று பாந்தலை யறுத்தவர் மறுத்திசைத் தருள்வார். 9

ஏட லர்ப்பொழின் மக்கமீ திருக்கையி லிவர்கள்
கூடி யொன்னல ருடனெமர் மனதுகள் கூம்பச்
சோடு றஞ்செவித் துளைசுடச் சுடவசை தோன்ற
நீடு சொற்றவ ரிவர்களென் றகத்திடை நெகிழ்ந்தோம். 10

துன்ப முற்றெழுந் தடலரி யேறபா சுபியான்
றன்பு தல்வனுஞ் ஜகபறைக் கரதலம் பிடித்து
வன்ப ரற்னெறி நெடில்படு கான்வரைச் சார்பி
லென்ப தம்பெயர்த் தேகியான் மாய்குவ னென்றார். 11

துஞ்சு வேனெனப் பகர்ந்தசொற் கேட்டிறை தூத
ரஞ்ச னற்கலி மாவிரைந் தோதுமென் றறைந்தார்
மஞ்சு வண்கைய பாசுபி யான்கலி மாவைத்
தஞ்ச மீதென வுரைத்திசு லாநெறி சார்ந்தார். 12

நான மல்கிய புயநபி மாமியார் நல்கு
மானை மானுங்கை யப்துல்லா வெனும்பெய ரரசந்
தான மீதுறத் தருங்கலி மாவிரைந் தோதித்
தீனி லைக்குரித் தாயின ருலகெலாஞ் சிறப்ப. 13

அலர்த்த டாகங்கள் புடைபடுங் கதிதெனு மந்தத்
தலத்தின் வந்தனர் நபியுட னியாவருந் தழைப்ப
நலத்தி னேற்றநோன் பினைவிடுத் தப்புற நடந்தார்
நிலத்தில் வானவர் பொன்மலர் சொரியுநன் னெறியோர்.

புலன்க ளைந்தையு மடக்கியுட் பொருந்திய நோன்பை
விலங்க லொண்புய நபிமுத லியாவரும் விட்டுத்
துலங்கு மோர்பதி னயிரஞ் சுவற்பரி சூழ
மலங்கல் சூழுமற் றில்லகு ருனில்வந் திறுத்தார். 15

இந்தெ னத்திகழ் படங்குக ளெங்கணும் வளைத்துக்
கந்து கத்திர ளமைத்திடுஞ் சாலையுங் கட்டிச்
சிந்தி னைப்பொரு மாவண வீதியுந் திருத்தி
மந்த ரப்புயு முகம்மது நபிமகிழ்ந் திருந்தார். 16

விண்ணிற் றும்பரி கொடுவரும் விபுதர்கள் விபுலை
நண்ணித் தாமரை நாண்மலர்த் தாளிணை யிறைஞ்சும்
வண்ணத் தார்நபி வந்தவா மக்கிக ளறியார்
திண்ணப் பாவிகள் செய்தியு முணர்ந்திலர் செய்யோர். 17

சுற்றும் வாரிதி யகடுகீன் றெழுஞ்சுட ரிரவி
யொற்றை யாழியந் தேரினை யுயர்விசும் புருட்டிக்
கற்றை வாலுளைப் பசும்பரி கடவியொண் கதிர்க்கை
முற்றும் வீசிமேற் குடதிசைக் கடலின்மூழ் கினனால். 18

கொள்ளி நீட்டினும் விண்டிலா விருளினுங் கொடியக்
கள்ள மாதர்க ளுள்ளநேர் கங்குலைக் கடியப்
புள்ளி மீனினம் புடைவர வம்புலி வேந்தன்
வெள்ளி வெண்கதிர் வாள்விதிர்த் தெழுந்தனன் விண்ணின்.

அற்றைக் கங்குலிற் புகழப்பா வென்பல ரகத்தி
லுற்ற யோசனை முகம்மது மவர்க்குயி ரனைய
வெற்றி வீரரு மக்கிகண் மீதினில் வெருளி
சற்று நீங்கிலா தெழுந்திவண் சார்ந்தனர் கடிதின். 20

உதைய காலையின் மக்கிக ளோர்ந்திட வேலை
யிதைய நேருறு கபிதளம் போயவ ணிறுத்தாற்
றதையு நங்குலக் குறைசிகள் சகலரு மிறந்து
சிதைவர் மங்கையர் நாணமுந் தேய்ந்திடு மனத்தின். 21

வேறு.

பின்னமேம் விளையா வண்ணம் பீடுடை மக்கத் தாரை
முன்னமே கூட்டி வந்து முத்திரை புயத்தி லுற்ற
மன்னவ ருபய செந்தா மரைப்பதத் தடியில் வீழ்த்தி
யன்னவர் கவலை வாங்கி மக்கிகட் களிப்போ மென்றே. 22

பாதையி லெவர்க ளேனும் வருபவர் தம்மைப் பார்த்துத்
தாதுலாந் துடவை சூழ்ந்த தடந்திகழ் மக்கத் தார்க்குத்
தீதிலாச் செய்தி முற்றுஞ் செப்பியே யனுப்ப வென்று
மாதவத் தப்பா சென்னு மன்னவர் நினைந்தெ ழுந்தார். 23

கடல்விளிம் புடுத்த பாரைக் கழறுடா விறலு லில்லா
வடல்வயப் பரியின் சீற்ற வரிசிக ரப்பா சேறிக்
குடவளை முழங்க வாளை கொழுமடற் கமுகிற் றுவுந்
தடவய லருக்கென் றோதுந் தலத்திடை செல்லும் போழ்தின்.

கனத்தினை யொத்த செங்கைக் காவலர் குஜாயத் தென்னு
மினத்தினி லொருவர்ச் செற்ற பயமெழின் மக்கத் தார்தம்
மனத்தினிற் றரித்தார் மேல வரும்வினை யென்கொ லென்னத்
தனித்தனி நினைந்து வீரர் சரம்பல காக்க லுற்றார். 25

மருவளர் சோலை மக்கத் திருந்தெழிற் கறுப்பு மைந்தன்
றருவபா சுபியா னுஞ்சீர் தழைக்குநற் குசாமென் பேரான்சேர்ல்
லுரவுகக் கீழு நீங்கா வேற்கையி லுறுக்கா வீக்ற
வரசுவு தையிலு மிம்முத் தலைவரு மவணில் வந்தார். 26

மூவரு மருக்கென் றோதுந் தலத்தினை முடுகும் போது
காவல ரிறசூல் வைகும் பாசறை வெளிச்சங் கண்டு
கோவபா சுபியா னிற்றைக் கங்குறீ வெளிச்சம் போலப்
பூவினி லொருபோ தேனும் பொலிவுறக் காணே னென்றார். 27

செரிந்திடுமழைபோற்செங்கைத்துணர்மலர்ப்புதையிலென்பேர்
றெரிந்தசெங் கெருப்பு நானு மிகல்குஜா யத்தி னூற்றூர்
புரிந்திடும் பகையைக் காத்து மூட்டுவெம் பொறித்தீ யன்றி
யிரும்பிடு மழல்வே றன்றென் றியம்பினர் விறற்றின் டோளார்.

இருவரு முரைத்த சொற்கேட் டிசைநிறாஉ மப்பா செனப்போர்
வருமவ ரின்னு ரின்னு ரெனமனத் தோர்ந்து பின்னர்
திருவபா சுபியா னுமந் தனைப்பகர்ந் தழைத்தார் கேட்டங்
கருவரைப் புயத்தா ரப்பா செனவறிந் தடுத்துச் சொல்வார். 29

கோதிலாத் தவத்தின் பேறே கோட்சரி மன்ன ரேறே
பாதிராத் தனித்து வந்த தென்னெனப் படைத்தோ னுனை
தூதரா மிறசூல் பத்தா யிரஞ்சுவற் பரிகொண் டுற்ற
தோதுவான் வந்தே னென்ன வுரைத்தனர் பெருந்த கீரோர். 30

பூதரம் விழினுஞ் சற்றும் புந்தியிற் கலக்க மற்றோ
யேதெனக் கினிமேற் பத்தி யெனவபா சுபியான் கேட்பப்
பாதகா வுன்னைக் கண்டா லாவியைப் பருக மேலோ
னாதிற ஞானத் தாரங் கொடுத்தனர் தோழர்க் கென்ன. 31

அரத்தமுன் டொளிரும் வெள்வே லடலசு காபிமார்கள்
பொருத்தமற் றுன்னைக் கண்ட போதுயிர் குடிப்பா ரென்றூ
ருரத்தவர் நடத்தி வந்த வுன்னியிற் றமக்குப் பின்னை
யிருத்திக்கொண் டெல்லை மீண்டா ரிருவரு மக்கம் போந்தார்.

பல்லணைப் பரிக டாவிப் பாசறைப் படங்கி னூடே
செல்கையிற் கண்டி யாருந் திருநபி சிறிய தந்தை
யல்லவோ வென்று மூரு மாடலங் குரத்தாட் பாய்மா
வெல்லவுன் பரவுந் தூதர்க் குரித்தெனத் தடுத்தி லாரே. 33

கேசரி மடங்க வெற்றிக் கிளைக்கின்ற வுமறு கத்தா
பாசறை யடுத்துச் செல்லும் போதியார் படர்வ தென்ன
வாகினின் முடுகி வெள்வே லபாசுபி யானைக் கண்டு
மூசரி முரனுந் தாம மொய்ம்பினர் சினத்து மாதோ. 34

இகலெலா மமைத்தோ னுக்கு மியனபி தமக்குந் தீய
பகையென வந்தோன் வார்த்தைப் பாடுகம் பிக்கை யின்றி
மகிமைசேர் நபா னன்றாய் வந்தன னெனவெ ழுந்து
புகையழல் விழியிற் சிந்தும் புலியெனச் சொல்லா முன்னம்.

தேம்படு மரப மாலைத் திணிபுயத் தப்பா சென்போர்
வாம்பரி கடவிச் சென்று மறைநபி யிடத்தில் வந்தார்
மேம்படு முமறு பின்பு விழிக்கடை யழல்கள் சிந்தும்
பாம்பொடு முரைத்தோர் பாத தாமரை பணிந்து சொல்வார்.

விற்கிடந் தொளிருந் திண்டோள் விறலுடை யப்பா சென்போர்
சொற்குமு றுமறு கத்தா தூயவ னொருவ னுக்கு
நற்குணத் தமக்குந் தீமை நடந்தபா சுபியான் றன்னை
பெற்கதிர் வாளாற் கொல்ல விடையெனக் கருளி ரென்றார். 37

வரத்துய ரப்பா சென்போர் மாணபா சுபியான் றூய
சிரத்தினைக் கமலக் கைகள் சேர்ந்திட விணைத்துக் கொண்டு
பொருத்துமென் வார்த்தைப் பாட்டிற் புகுமிவர் காரியத்தி
லொருத்தரும் பேச வேண்டா மெனநபி யோடு ரைத்தார். 38

மணியெழு வெனத் திரண்டு மருமலர் மரப மாலை
யணிபுயத் திறலு லல்லா வானன மதியை நோக்கித்
துணிவொடு முமறு வெய்ய தோமபா சுபியாற் கொல்லப்
பணியெனக் கருள்வா யென்ன வடிக்கடி பணிந்து கேட்டார்.

சற்றுநீர் பொறுக்க வெங்க டந்தையைப் பயந்த தாதை
யுற்றவக் கோத்தி ரத்தி னுறுமபா சுபியா னென்று
மற்றவர் தமக்கி யான்மன் றவெ தில்லை யென்றுஞ்
சொற்றன ருமறை நோக்கித் தொடைப்புய வப்பா சென்போர்.

பேர்பெறு மப்பா சேயென் பிதாவிசு லாத்தில் வந்து
சேருவத் தினு மெற்குச் சிந்தையில் விருப்ப மாகு
நீசிசு லாத்தி னுற்ற நெறிநபி தமக்குந் தந்தை
யேர்பெற விருந்த தாலென் றியலுமறி சைத்தா ரன்றே. 41

இருக்கின்ற விடுதி தன்னி வியன்மறை வெள்ள முள்ளம்
பெருக்குமப் பாசை நோக்கிப் பீடபா சுபியான் றன்னைச்
செருக்கொடுங் கூட்டிச் சென்று செங்கதி ருதிக்கு முன்னே
விருப்பொடு மழைத்து வாரு மெனநபி விடைகொ டுத்தார். 42

பிறியமுற் றெழுந்து வானிற் பிறங்கிய மதிபோற் காந்தி
செறிதரும் படங்கின் கண்ணே சென்றணை வருந்திச் செந்தே
னுறுமறை வதன வப்பா சுடனபா சுபியான் றுமு
நறுமல ரணையிற் செங்கண் வளர்ந்தனர் நலிவு தீர. 43

பாந்தண்மேற் கிடக்குந் தெண்ணீர்ப் பரவையின் முகட்டிற் பச்
சூந்தலம் பரிகள் பூண்ட கொடிஞ்சியந் தேர்க டாவிச் (சைக்
சேந்தவெந் தபன னெற்றைத் திகிரியை யுருட்டிக் கூர்மூட்
காந்தளஞ் சூட்டுச் சேவல் கனைத்திடக் கதித்தெ ழுந்தான். 44

அஞ்சிறை யளிகள் பாடு மலங்கலம் மணிப்பொற் றோளிற்
றஞ்சபா சுபிய னென்னுந் தோன்றலைக் கூட்டி யேகி
யெஞ்சலின் மறைவி ளக்கு மிறைநபி யிறசூ லல்லா
செஞ்சரண் பிடியச் செய்தார் குறைசிக டிலத மன்னர். 45

ஆரமுற் றிருக்குந் திண்டோ ளபாசுபி யானை நோக்கி
ஈரமுற் றுள்ளத் தீமா னிருத்திப்புன் குபிர்கள் முற்றும்
வேரறுத் திசலா மார்க்கம் விரும்பிலா திந்த மட்டுஞ்
சாரமற் றிருந்த தென்கொ லெனநபி * தனகிக் கேட்டார். 46

செந்நிழற் கவிகை வேந்தே சிறியனைப் பயந்து வந்த
வன்னையும் பிதாவு முங்க ளடிமிசை குறுபா னேழை
புன்னெறி நடந்து முங்கள் பொறுமையுங் கிருபை தானு
மென்னென வுரைப்பே னென்று ரிருளறத் தெறியு நெஞ்சார்.

இடபநேர் மருப்பிற் றுங்கு மிரும்புலி யிடத்திற் றேயா
வடியிணைக் கொருவின் னைப்ப மென்றன ரதனைக் கேட்டுக்
கொடியவா வுனது சென்னி குறைக்குமுன் கலிமா வன்பாய்
நொடியினிற் பகரா யென்ன நவின்றன ரப்பா சென்போர். 48

மாறுபுன் குபிரை நீத்து மனத்திருக் கறுத்துத் தேறி
யூறுதே னனைய வேதத் துட்பொருட் கலிமா நாவாற்
கூறின ருவரி சூழுங் குவலைய முழுதும் வெற்றி
மீறபா சுபியா னென்னும் வெஞ்சிங்க வேறன் னாரே. 49

தவக்குறை சிக்கு மக்கத் தலத்தவர் தமக்கு மேலா
மிவர்க்கொரு மேன்மை செய்ய வேணுமென் றாவுத் தெண்ணீ
ருவர்க்கட லுலகம் போற்று முயர்புகழ் நபியை நோக்கிப்
பவக்கடல் கடக்கு மப்பா செனுமுதி யவர்ப கர்ந்தார். 50

உடைக்கருங் கட்டைச் சுற்றி யுடுத்தபா ரதனில் வேலாற்
படைக்களத் தமரா ராவி பருகுபா சுபியான் வீட்டி
லடைக்கலம் புகுந்தோர் மேலோ னகத்தகம்புகுந்தொளித்தோர்
கடைத்தலைக் கதவஞ் சாற்றி யவரவர் மனைக்க ணுற்றோர். 51

---

* தனகியென் பது—மனங்களித்தென்க.

இவர்களை யெவர்களேனு மிகல்விளைத் தடரே லென்னக்
கவைநெடு நுனிநாச் செங்கட் கடுவிடப் பாந்த ளுள்ளத்
துவகையுற் றிறைஞ்சி யேத்தி யுரைத்திடு மிறசூ லல்லா
தவமுயர் வயவர் பார்த்துச் சாற்றின ரமுத வாயால். 52

கோட்கரி நிகர்க்கும் வீர குசாமருள் கக்கி மும்மை
வாட்கர வுறுக்கா வீன்ற மன்னவ ருனைதயில் தாமுந்
தாட்கவி ழெழுகுங் கஞ்சத் தாட்டுணை நபிபால் வந்து
கோட்புள் கெறிப்ப வேத்தித் துலங்கிய கவிமாச் சொன்னார். 53

மக்காஷரீபின் தலைவர்கள்

சமான்கொண்டபடலம் முற்றிற்று.

ஆக படலம் 34-க்கு திருவிருத்தம்-1097.

மக்காஷரீபில்

போர்புரிபடலம்.

சருதிநா றதும்புஞ் செந்நாத் தூயபா சுபியா னென்போர்
பரிதிவா னளக்குஞ் சோலைப் படாம்பொதி மக்கஞ் செல்லக்
கருதிய போதி லப்பா செலுங்கட கரியைக் க வி
யிருடகா தொளிரு மேனி யியனபி யிறசூல் சொல்வார். 1

கந்துக மிரதங் காலாட் கவுட்கடங் கலுழ்ந்து சிந்துந்
தந்திகள் பிறவுஞ் செல்லுந் தாரையிற் கருதார் போரி
லுந்தபா சுபியான் றம்மை யொக்கலீர் கூட்டிச் சென்று
சிந்துநேர் படையின் வீக்கந் தெரிதரக் காட்டு மென்றார். 2

பூகாம் பொருவ வீங்கும் புயத்திணை யிறசூ லல்லா
வோதிய சொற்கேட் டோங்கு முயர்புக ழப்பா சென்போர்
மாதர்மா மருடஞ் சூட்டு மன்னபா சுபியான் றம்மைத்
தீதறக் கூட்டிச் சென்றோர் திடாரி சிவண நின்றார். 3

திடர்த்தலை நிற்கும் போது தெம்மறத் துடைக்கும் வெற்றிப்
படைத்தலை மன்னர்க் கூவிப் பல்லணைப் பரியின் மேற்கொண்
டுடைத்தசெண் டிரைக ளொப்ப வொவ்வொரு கூட்ட மாக
நடத்துமி னென்றார் செங்கை நவிர்மதி யழைத்த மேலோர். 4

பாரிடைப் பாதந் தோயார் சொற்படி பரிமேற் கொண்ட
வீரர்க டிரளும் வெற்றிக் கொடியுமுன் வருதல் கண்டிங்
காரிவ ரென்ன வேதத் திசையபா சுபியான் கேட்கக்
கூரயி லேந்துஞ் செங்கைச் சுலைபும்றுக் கூட்ட மென்றார். 5

மற்றுமோர் கூட்ட மன்ன வாறவன் வருதல் கண்டு
விற்றடந் தோளீ ரியாவ ரிவரென வினவத் தெம்மைச்
செற்றடல் விளைத்துத் தீனைத் திருத்திய மகிறு வென்னு
முற்றவக் கிளையி னேங்கு முரா[illegible]ர்க ளிவர்க ளென்றார். 6

கடல்புடை பெயர்த்த தென்ன[illegible]ப்பரி பதாதி மற்றப்
படையொடு நிசான்கள் கொண்டு பகுப்புற வரும்போ தெல்லா
மடைவுட னிவர்க ளியாவ ரியாவரென் றவரைக் கேட்பத்
திடமுற வவர்க ளின்னா ரினாரெனத் தெரிந்து ரைத்தார். 7

ககனள வளக்கும் வெற்றிக் கதலிகை யொன்று தாங்கி
மிதுபரித் திரளி னோடே மேவக்கண் டிவரியா ரென்ன
வகன்மதின் மதீனம் வாழன் சாரிகட் கரசாய் வந்தோர்
தகுதிசே ருவாதா வின்ற சயிதென விரித்து ரைத்தார். 8

அல்கலில் சேனை நீளத் தணியணி வருத னோக்கிச்
செல்லபா சுபியான் வாய்ந்த சிந்தையி லதிச யித்தார்
மல்லல்சேர் மதீனங் காக்கும் வளர்புகழ் சயிது வெற்றி
வில்லபா சுபியான் றம்மை விளித்தவ ருடனே சொல்வார். 9

இத்தினங் கடற்போற் றானை யெதிர்ந்தம ருடற்றும் வார
முத்திசேர்க் குபிரச் சங்கை முற்றுமின் றமிழ்க்கும் வாரம்
பத்திசேர் நமது பந்தம் பல்லரு மவியும் வார
மத்தின மென்று செய்யு ளருங்கவி யதனாற் சொன்னார். 10

பாட்டினாற் சொற்ற செய்தி பண்பபா சுபியா னுள்ளத்
தீட்டிநீள் கவலை பூண்டக் கிருக்கின்ற வேலை வெள்ளக்
கூட்டவார் கலியின் வீரக் கொற்றவர் சிரசின் மோலி
சூட்டிவெம் பரிமேல் வந்தா ரிவர்களியார் சொன்மி னென்றார்.

கொய்சுவற் பரிமேல் வெற்றிக் கொடியொன்று சுமையி னேந்த
வையமில் வேதஞ் சொன்ன வலம்பிய முஹாஜி ரீன்கள்
வையக முழுதுஞ் சீர்த்தி வளர்க்கின்ற வன்சா ரீன்கள்
மொய்திரைக் கடல்போற் சூழ வருமவர் முகம்ம தென்றார். 12

குரைகட லேழும் பொங்கிக் கூவிட நெதிர்ந்து வந்தாற்
கரைசெய வல்ல ரியாவர் ககன்வர் தாமு மிக்க
தரையிடத் தரசர் தாமுஞ் சமர்க்கெதிர் பொருத லாகா
வரைகளு நிலைவிட் டேகு மென்றபா சுபியான் சொன்னார். 13

அற்றமில் சிறப்பு வாய்ந்த வப்துல்முத் தலிப ளித்த
நற்றவ வுமது முன்னோர் நல்கிய முகம்ம தென்போர்
இற்றிடு மிராஜ வாழ்க்கை பெரிதெனப் பேதைப் புத்தி
யுற்றபா சுபியா னென்போ ருரைத்தனர் கருத்து வாய்ந்தே.

பேதமை யதனுன் மெத்தப் பெரியரா ஜாங்க மென்றே
யோதுவ தன்று வேத மோங்கிட வொருவ னல்குந்
தூதரா நபியா மென்னத் துணிந்தப்பா சுரைத்தார் கேட்டு
மாதவ வுண்மை புண்மை யெனமனத் தெளிந்து ரைத்தார். 15

உள்ளமீ துண்மைத் தூத ராமென வுணர்ந்தா னந்த
வெள்ளவார் கலியின் மூழ்கி நிற்கின்ற வேலை தூதாம்
வள்ளியோ ரணிததாய் வந்தார் மறைமலர்ப் பதத்தி றைஞ்சி
யள்ளிலை நெடுவேற் செங்கை யடலபா சுபியான் சொல்வார். 16

மங்குலங் கவிகை வேந்தே வல்லவன் கலீபா வீய்ந்த
சங்கைக ளழியு நாளொன் றடல்செறி தறுகட் சிற்றச்
சிங்கநேர் சுமீதென் றோதுஞ் செம்மல்வந் துரைத்தா ரென்றார்
பொங்கிய சிறப்பு நல்கு நாளென நபிபு கன்றார். 17

தார்குடி யிருக்குந் திண்டோட் சயீதுநப் புரைத்தா ரென்றன்
னோர்காத் திருந்த வெற்றி யுயர்கொடி தனைப்ப றித்துப்
பார்புக ழலிக்க ளித்துப் பைம்பொழின் மக்க மேல்பா
லேர்குடி யிருக்குங் கித்தா வெனுந்தலத் திறங்கு மென்றார். 18

ஆத்திறற் றுடைத்த வைவே லரசர்கள் சியமன் று
குரைத்தசொற் படியே துல்புக் கீறெனு முவணி மேபந்துங்
கரத்தவி பரிக டாவிக் கடிதினிற் கித்தா வென்னுந்
தரைத்தலைச் சென்று சூழ்ந்த தளத்தொடும் வீற்றி ருந்தார். 19

பொற்பரா கங்கள் சிந்திப் பொதியெலாங் கழுவு மக்கத்
திற்புகுந் திடார்க்கு மியாமங் கெழுகின்ற செய்தி முற்றுஞ்
சொற்பகுத் துரையா யென்னத் தூயபா சுபியான் றன்னைக்
கற்பகப் பதியைக் காக்குங் கபீபுல்லா வனுப்பி னாரால் 20

புறத்தினி லங்கி பூட்டாப் புகழபா சுபியா னென்போர்
கறத்தினிற் புகுந்து வாய்ந்த கலைக்குறை சிகளே யூபக்
துறைத்தடங் கடல்போற் கொண்டு சுற்றினர் முகம்ம தம்மா
னுரைத்தடல் செய்ய மாட்டீ ரெனவுரத் தரற்றிச் சொன்னார்.

விளித்திடுந் தொனியைக் கேட்டு விம்மிதப் புயங்கள் சோர்ந்து
குளித்திடும் வேர்வை சிந்தக் குழறிவாய் வறந்து வந்த
தளத்தினுக் கேது செய்வோ மெனத்தடு மாறி யெங்கள்
கிளைக்குலத் தரசே புத்தி யென்னெனக் கேட்டு நின்றார். 22

எந்நிலத் துறைந்தோர் தம்மை பெண்ணமுற் றிகலை நீத்துத்
தன்னிலத் தமைந்து வாயிற் றலைக்கடை யடைத்தோர் தம்மைப்
பொன்னிலத் தமரர் மாந்தர் புகழ்ந்திடுங் கஃபா வைச்சூழ்
கன்னிலத் துறவே செய்யுங் கறத்தினுட் புகுந்தோர் தம்மை. 23

இவர்களை யெவர்க ளேனு மிகல்விளைத் தடரே னாரேங்
கவர்படு மனத்தி னோடுங் கதிர்ப்படை கொண்டெ திர்த்த
வவர்களைக் கொன்மி னென்றே யடையலர்க் கசனி யென்ன
வுவரிசூ ழுலகில் வந்த வுபர்நபி யுரைத்தா ரென்றார். 24

பம்புநீர்க் கடலி னாழ்ந்து பதைபதைப் பவரைத் தாங்கு
கம்பிபோ லெம்மைத் தாங்க வடைந்தவ வுனது மாடந்
தம்பமே யல்லால் வேறு சார்புமற் றில்லை யென்னக்
கம்பமாங் களிறே யன்ன குறைசிகள் கவல லுற்றார். 25

மிதிநடி யறுசிற் றொட்ட வேதியர் தமது வெற்றிக்
கதலிகை பிடிக்குஞ் செங்கைக் கடகரிச் சுபைறு தம்மைத்
துதிதரு முஹாஜி ரீன்க டுரகதப் படைக்கு மிக்க
கதிகொளன் சாரி மார்கள் கந்துகப் படைக்கு மாதோ. 26

அரசென நிறுத்தி நீர்போந் தண்டார்க ளிறைஞ்ச மக்கா
புரமதின் மேல்பா லோங்கும் பொழிறிகழ் சகுறை யென்னுந்
தரையினிற் படங்கு கோட்டித் தயங்குவெண் கொடியு நாட்டி
யிருமென விடைகொ டுத்தா ரெழுந்தனர் மடங்க லன்னார். 27

விரித்தவெண் டிரைகளேழு மேதினி பரந்தாங் கென்ன
நிருத்தவைங் கதியி னோடு நிணப்புலால் கமழும் வேலார்
பரித்திர ளடைத்தி யொல்லை சகூபினனும் ப்ரடி போந்து
திருத்துவெண் கொடிநி றுத்திப் பாசறை செறித்தி ருந்தார்.

இருளடை கிடக்குஞ் சிந்தை யபூஜகு லென்பா னன்பா
லருளிய யிக்கிரி மாவு மம்றுசேய் சுகயீல் தானுந்
தெருளிலாக் குறைஷிக் காபிர்த் திரள்பனூ பக்கா றற்றார்
மருள்பனூக் காரீ தென்னும் வங்கிடத் தவர்க டாமும். 29

சிந்துவெங் கடங்க ளேற்றங் கவுட்குழிச் சிறுக ணூல்வாய்த்
தந்தியின் குலங்கள் போன்ற தறுகண ரொருங்கு கூண்டு
மந்தரப் புரிசை சூழ்ந்த மக்கமா நகரிற் கீழ்பாற்
கந்தமா மலையின் சார்பிற் கடலென விறுத்தா ரன்றே. 30

வேய்சில ருரைப்பக் கேட்டு வெண்மருப் பொருத்த னெற்றிப்
பாயரி யிறசூல் வெற்றிப் படாம்புய வொலீது நாளு
நேயமுற் றினிது பெற்று நிறைவளர் காலி தென்னுந்
தூயவர் தம்மைக் கூவிச் சுடர்மதி முகத்தை நோக்கி. 31

வனத்தட மக்கக் கீழ்பால் மடங்கலொத் தெதிரு மொன்னா
ரினத்தளஞ் சிதறி யோட விரும்பரி கடவி வெம்போர்
சினத்துடன் பொருமி னென்னச் சிறப்புட னழகு வாய்ந்த
நனைத்தொடைத்திரடோள்வெற்றி நபியுல்லாவிடைகொடுத்தார்.

வேறு.

ஒற்றைத் தவளக் குடைப்பணில முரீவா ரிறக்குந் தவில் பேரி, மற்றும் பலவாக் கியங்கறங்க வான்றோய் வெற்றிக் கொடி யுயர்த்திக், கற்றைக் கவரித் திரளிரட்டக் கதிர்வா ளுழவர் புடை நெருங்கச், சுற்றுங் கடலேழ் பெயர்ந்தென்ன நடந்தார் ஆன் னொருட றுனுக்க. 33

காற்றுங் கனலு மெதிர்ந்ததெனக் கனன்று குலைந்து சேனைமழை, யூற்றுங் கந்த மாமலைச்சார் பொன்னார் படையு நபி படையுஞ், சீற்றவரியே றெனக் கனன்று திக்க ணிமைநீய்த் திட வெதிர்த்துக், கூற்றும் வெருவ வயவர்கிலை குழைத்து மழைபோற் கணைபொழிந்தார். 34

பூட்டுஞ் சிலையின் விடுத்தசரம் புதிய மணிகள் குயிற்றுக
லைச்,சோட்டைப் பருதிக் கேடகத்தைத் தொடர்சேர் கரும்பொற்
கஞ்சுகியை, யீட்டுஞ் சரப்புற் றுவமதை யிறுக்கு நெடிய கால
கத்தை,மோட்டுத் தடமார் பைந்துளைத்தார் ருயிர்மொண் டு
தப் புறம்போக்க. 35

குழைத்த முகத்தை நெடுங்களத்தைக் கொய்யுஞ் சுவலைக்
காற்குரத்தைத், தழைத்த செவியி னுட்டுளையைத் தாவு மடிகா
லொருநான்கைச், செழித்த புரத்தைப் பட்டுருவத் திறந்த வய
வர் கூற்றைவர,வழைத்த வடிவேல் கரத்தேந்தி யெறிந்தார் பரிக
ளவிந்துவிழ. 36

உரத்திற் றிறத்த வயவீர ரொளிரு மணிமா முடிதரித்த
சிரத்தைத் தொடைப்பொற் புயத்திணையைச் செம்பொற் சுடர்
விட் டெறிகடகக், கரத்தைச் சிலம்புங் கழற்றுளைக் கட்டுங்
கருங்கா ளகமருங்கைப், பரத்தும் வெண்பற் பேய்க்குணவாய்ப்
படைத்தார் திகிரி விட்டெறிந்தே. 37

கறையைப் பொருவுங் காத்திரந்தாம் பணைய புழைக்கைக்
கவுட்கரடப், பொறையைப் பொருவுந் திறல்வயவர் புலவு முரு
குங் கமழுவில்வா, ளுறையைப் பொருவாக் கதஞ்செனிப்ப வுரு
விச்சிறி வரிப்புலிபோற், றறுகட் கூற்று முளம்வெருவத் தளங்க
ணெளிந்தோ டப்பொருதார். 38

உரகத் தத்திப் பணைத்திருந்து முலகைப் பிளந்து மண்சி
தற,வரிதிற் றுவுங் கவிகுரத்தா ளடல்வெம் பரியின் மறமள்ளர்,
பெருகச் சினந்து விழிகளழல் பீர்விட் டிறைப்ப விதழ் கறித்
துப்,பொருவிற் றடந்தோ ளிணைபுடைத்துப் பொருதார் கொடி
வெங் கழுகருந்த. 39

மாண்பார்ந் தொளிரிந் திரதனுவை மானும் வரிக்கார் முகம்
பூட்டு, நாண்கா தளவும் வரவாங்கி நமன்வத் தடையா ருயிர்பரு
கிச், சேண்போந் திடவெங் குதைக்கணைகள், சென்மா ரிகள்
போற்பெய்துபெய்து, கோண்பா ரிடத்திற் குருதிசிந்த வயவ
ரெதிர்த்துப் பொருதனரால். 40

அரியிற் கெதிரோ தகர்மடவா ராண்மை திறலோர் தமக்
கெதிரோ, வெரியிற் கெதிரோ சமிதையர வெதிரோ கலுழன்

றனக்குமத, கரியிற் கெதிரோ காராவெனத் திறல்கண் டறிமினை
றிமினென, வொருவர்க் கொருவர் வாய்த்திறஞ்சொற் றூரத்துப்
பொருதார் புவியதிர. 41

சுற்றி புவனி தனைச்சுழற்றித் துணைக்கண் சேப்பக் கரும்
பலகை, வெற்றிப் புயங்க டனிற்புடைத்து வெகுளிக் கொடுந்தீ
யிமைத்திப்பச், சற்றுந் தறுகா துளத்துணிவாற் றுவும் பரியிற்
சாரிவந்து, கற்றைக் கதிர்வெள் ளெயிறிதழிற் கறித்துப் பொரு
தார் கிரறமிவை. 42

இனத்துப் பொருத போர்க்களத்திற் றீப பவங்கள் புரிகுபிர
னத்திற் றலைவர் பதிமூவ ரிறந்து நரகத் திடைபுகுந்தார்
தனத்திற் பெரிய வசுகாபி சல்மா னொருவர் சகிதானார்
வனத்திற்புலிகாண்மானினம்போன்மருவார்முறிந் துசிதறினரால்.

செயமார் காஸீ தென்பவரைச் சேர்ந்த குதிரைக் காரர்தம்மில்
வயமாவீர ரிருவர் செலும் பாதை மயக்கிச் சேறல்கண்டு
நயமோ ரணுவு மில்லாத நண்ணோர் சிலர்கண் டவராவி
வியனு ருவணைப் பதிக்கேக விடுத்தார் நினையாப் புறத்தன்றே.

மக்காஷரீபில்

போர்புரி படலம் முற்றிற்று.

ஆக படலம் 35-க்கு திருவிருத்தம் 1141.

கஃபத்துல்லாவைக்

கைக்கொண்ட படலம்.

முனைவீ டதனிற் படங்கடித்து முழங்கும் பருவாய் வென்கின்ற, மனையார் மதியொத் தொளிருமுகத் தண்ணல் காலீ தவனிருந்தார், நனையார் திருக்கத் தடப்புயத்து நயினா ரிறசூல் மக்கநகர், தனினும் புகுந்து கஃபாவைத் தவாபு செய்ய வேணு மென்றே. 1

மேகங் கவிப்பப் பல்லியங்கள் விரியுந் திரைபோற் கலித்தொலிப்பச், சேகற் றொளிரும் வெண்டுவசஞ் சேனைத் திரளின் முன்னடப்ப, வாகஞ் சுமந்த பூணாரத் தரசர் பலரும் புடைநெருங்க, மாகம் பொருந்தும் விபுதர்மலர் மாரி சொரிய வெழுந்தனரால். 2

இரங்குங் கருணை யுபயவிழி யிறசூ லெழுந்து செலும் போது, மருங்கின் மதமா மலைபோல வருமா வயவர் தமைவிளித்து, நெருங்கி யும்மோ டெதிர்ந்தவரை நிணங்க டெறிப்பச் செகுப்பதல்லாற்; கரங்க டனிலா யுதமுனைகள் காட்டா தவரைக் கோறலென்றும். 3

எரிமுழ் கபுஜ குல்ப்யந்த வேந்த லிக்கிரி மாசயிது
தருசே யப்துல் லாகதநின் றனைய னப்துல் லாவவன்ற
னரிய தொழும்பி யிருவர்நபி றாதவுங் குபைரீ தென்பவன்றி
யரிவை சாறு சவரவர்சொல் லாகு மக்கி சவன்றனையும். 4

உரைத்த விவர்க ளெண்மகபா சுபியா னில்லி னுறைந்தானு
நிரைத்த கதவ மவரவரின் வீங்கா தடைத்தங் கிருந்தானுந்
தரித்தகஃபாத் திரைபுகினுந் தறுகா திவர்கட் கொன்பினொன்றுந்
திரத்தி னுரைத்து மக்கநகர் சென்றார் சிமூ தங்கவித்தோர். 5

வேறு.

சூட்டக்கெழு முடப்பிறையின் கோடுமூந மாடத்
திடத்துமக ளிர்கள்குழற் கிட்டுமகிற் றாயப்
படற்புகையைக் குன்றின்விழிப் பைம்புறவெங் காதற்
பெடைக்குலமுந் தங்களினம் போற்பெரிது வக்கும். 6

வீழியிதழ் மாதர்மயின் மேனிலை நிரைத்த
பாழிமணி யின்குடம் பசும்பரிபி ணித்த
வாழிநெடுந் தேரின்வரு மாதவனெனன் றல்லுக்
தாழிமுகைத் தாமரைகள் தோடிதழ விழ்க்கும். 7

ஆடரங்கு மேடையறப் பள்ளியறை மன்றின்
மாடமனை மேனிலையின் மன்னவர்கள் கூண்டு
நாடொறுதல் வேதவிசை கேட்டுநனி யின்பஞ்
சோடுறுசெ வித்துளையி னுண்டுதுயர் தீர்வார். 8

குழைத்தசிலை பொத்தபுரு வக்கொடியி னல்லார்
மழைக்குல நிகர்த்தகுழல் கண்டுமயி லாலு
மழைத்துமதி யைக்குடிய மைத்தமுகங் கண்டு
தழைத்தவிதழ் மைக்குவளை தண்டளைய விழ்க்கும். 9

செம்பவள முங்கரிய போழமணி முத்து
மம்பரொடு கொக்கரையொக் கோலைய விருப்புங்
கும்பநிக ரும்பணில முங்குவைகு வித்துக்
கம்பலைசெய் யாவண முங் கார்கட னிகர்க்கும். 10

மக்கநக ருக்குவமை மற்றவைகொல் வாறு
டொக்குமெனி லொக்குமதி ஊற்றவள நோக்கி
மிக்கவிற லுரும்பவ வீரர்களும் போந்து
கக்கனருள் மேவுகறத் தின்கடைகண் டாரால். 11

நம்பினவர் தாருவெனும் வெப்பைநயி னன்ம
னிம்பரின் விளைத்தபுக மேய்ந்தசுதை தீற்றி
வம்புசெறி யுங்குயிலி வர்ந்தடை கிடப்ப
வும்பாள வோங்குகறத் தாற்றகம்பு குந்தார். 12

சிற்பமுறை கற்றவர்கள் சித்திரித்த தேர்வான்
பொற்பதிபி ருந்தியணிற் போந்ததுகொ லென்று
கற்பகத ருத்தலை கடந்தறுசி னிற்சென்
றற்புதமு றுங்கஃபத் தென்றுமணி மாடம். 13

கற்றுமறை நற்புகழ் கதித்தவமெய்ந் நாளு
நிற்குநல ரேருரு வெடுத்தநிகர் டோலுஞ்
சொற்சமெனும் வேந்துசிரஞ் சூட்டுமுடி போலும்
விற்குலவு றுங்கஃபத் தென்னும்வியன் மாடம். 14

ஊர்வன பறப்பன நடப்பனவு வாநீர்
சேர்வன தருக்களுபர் தேவர்மனு மற்றுங்
கூர்வன செயுந்தவ மெலாங்குடியி ருத்த
வேர்வன முறுங்கஃபத் தென்னுமெழின் மாடம். 15

வட்டவுல குக்கொரு மணிச்சுடரெங் நாளு
மிட்டமுறுஞ் சான்றவர்கட் கெய்துகதி யோங்கு
நெட்டையறு சிற்கடி நிறுத்துதள மிக்க
கட்டழகு றுங்கஃபத் தென்னுங்கதிர் மாடம். 16

கந்துகர தங்கரி பதாதிபல சூழ
வந்துகவி யின்பமுறு மைந்தனுளங் கூரச்
சிந்தமுத வம்புலி செகத்தினிலி ழிந்து
வந்துபணி யுங்கஃபத் தென்னுமணி மாடம். 17

இச்சையுட னடிவரு ஹாஜிகளை யெண்ணின்
மெச்சுமிரு மூன்றிலக்க மேவலிட்டி தாறல்
வச்சிரமு டிச்சுரர்கள் மைந்தருருக் கொண்டு
கச்சுமுடிக் கத்தரும தானகஃ பாவே. 18

பவக்கடல் குளித்தவர்கள் பாரின்விழி கூரத்
தவத்தினுட னோர்கனவிற் சற்றுதெரி சித்தாற்
சுவர்க்கபதி யிற்பதவி சேர்வறவெங் நாளு
மெவர்க்குமுத வுங்கஃபத் தென்னுமெழின் மாடம். 19

கண்டுபிக ரின்சொன்மறை காதலொடு நாவில்
விண்டுதுதி கொண்டிறைவன் வேலைதனின் மேவு
மண்டர்நிதம் வந்துதொழ வார்கலிகி டந்த
மண்டலமெ மூங்கஃபத் தென்னுமணி மாடம். 20

உம்பரு மறிந்தியல் புணர்த்தவரி தாய
நம்பர னிராசத நடத்துமறு சிற்கோர்
கம்பமது வோதுவனை காட்டுநெறி தானே
விம்பர்நிறு வுங்கஃபத் தென்னுமெழின் மாடம். 21

சேணிலமெ னப்பகருஞ் செம்மல்சிரஞ் சூட்டுங்
கோணைமணி மாமுடிகொ லோவுவனை சேர்தற்
கேணியென வுப்பரிவ ணிட்டதுகொ லோனே
வாணிலவு றுங்கஃபத் தென்னுமணி மாடம். 22

இன்னவடி வின்னதென யாருமறி கொன்று
மன்னவ னுவப்பொடு மமைத்தமணி மாடந்
தன்னகம் புகுந்தனந் தருக்கினொடும் வேத
நன்னபியு மற்றெவருஞ் சுற்றினர் நடந்தே. 23

வேறு.

பூவும் விசும்புந் தொழுங்கஃபாப் புறத்தி னிறசூல் நபியுல்லா
வாவும் பரியோ டேழுதரம் வலம்வந் திறைக்குத் தலைதாழ்ந்துத்
தாவி றுக்குனில் யமனிதனைத் தமது கமலத் திருக்கரத்தில்
மேவுமசாவாற்றொட்டுமுத்திவிளங்குமணிப்பொன்வாயல்வந்தார்.

தீல்கா தவத்தின் வருமுதுமான் சைபர் தமையும் வரவழைத்து
நல்காய் திறவு கோலென்ன வாங்கி நறைமா மணிதுயிற்றிப்
பல்கா லஞ்சேர் கஃபாவிற் பணிப்பொற் கதவந் தனைத்திறந்தாங்
கொல்காப் புகழ்சேர் நபியிறசூ லுல்லா மகிழ்ந்து புகுந்தனரால்.

வேறு.

உறுபத மெவர்க்கு நல்கு மொருவன்மா ளிகையின் முன்னூற்
றறுபது புத்தை யும்பா ரிடையடித் தெறிந்தார் பின்னர்
பறுபத முரைத்த வேதர் பணிந்திரு றக்கா அத் தன்பாய்
பெறுபதம் வழூவா வண்ணந் தொழுதனர் பிரிய முற்றே. 26

ஓதிய சுகுபு பத்தி னுபநிட தங்க டேர்ந்து
போதமுற் றிருந்த சிந்தைப் பிரவல ரிபுறு கீந்தம்
பாதம்பட் டிருந்த செவ்வி படர்தரும் பசிய கல்லை
வேதமுற் றுணர்ந்தோரங்கை யெடுத்துவெள் ளிடையுற் றாரால்.

வெள்ளிடை யேகும் போது விண்ணவர் கோமான் வானின்
றுள்ளக மகிழ மாயத் தொன்றவண் கொண்டு வந்தார்
தெள்ளிய வாயத் தத்தைச் சிறப்பினு லுலகும் விண்ணுங்
கொள்ளும்வெண் புகழா ரோதிக் கொண்டுளங் களித்துவந்தார்.

ஊற்றினிற் பாண மொன்றை யூன்றிநீ ருதவுந் தாதே
யேற்றவிவ் வாய்ந்தோர் போதே யினுமியான் கேளே னென்ன

வாற்றல்சா லுமறு கத்தா வருளொடும் வினவ வின்னே
தேற்றுமோ ருவமை யில்லா னிறக்கின னென்ன வின்டார். 29

உம்பருக் கரசர் மேலோ னெங்கிப்படி வானி றீந்திங்
கிம்பரி னளித்துப் போந்த வாயத்தின் படியே யார்க்குந்
தம்பமாங் கஃபா வாயிற் றுள்செறி திறவு கோலைத்
அம்பிநே ருதுமான் சைபா வவர்துணைக் கரத்த ளித்தார். 30

இந்துவுங் கதிரு முள்ள மட்டுமித் திறவு கோலு
மைந்தர்கண் மக்கண் மக்கள் வழிவழி யாட்சி யாக
நந்திடா தாளு மும்மை நலிவுசெய் தொருவர் கொண்டா
னிந்தைசே ரனியா யத்தி னிலைத்தவ ரவர்தா மென்றார். 31

தோமுறுங் குபிரை வீழ்த்திச் சுருதிசேர் மறையை நாட்டி
மாமுறு சலீன்கட் கெல்லா மணிச்சுடர்த் தீப மன்னூர்
தேமுறு மரப மாலைத் திணிப்புயத் தீனோர் வானோர்
காமுறுங் கஃபா வாயிற் கவின்படி நின்று சொல்வார். 32

இறைஞ்சுதற் குரிய நாய னவனலா லிணைவே றற்றோன்
சிறந்திடு மொருவன் சொற்ற வறுதியைத் திறம்பல் செய்யா
னறுந்தன கடியார்க் கென்று முதவிசெய் பவனீள் வெய்ய
குறும்பர்தம் படைகளெல்லா முறிக்குங்கோனெனப்புகழ்ந்தார்.

கஃபத்துல்லாவைக்

கைக்கொண்ட படலம் முற்றிற்று.

ஆக படலம் 36-க்கு திருவிருத்தம் 1174.

மக்கா ஷரீபின் குறைசிக ளெல்லாம்

ஈமான்கொண்ட படலம்.

கவின்கஃ பாவின் காப்புங் கமழ்சசத் தின்னீர் வார்ப்பு
மிவையிரண் டன்றி யிவ்வூ ரிருக்கின்ற குறைசிக் கூட்டத்
தவர்கடம் வீறு சங்கை யிடர்பழி யுடைமை மற்று
நவையற வெமது காற்கீழ் நண்ணிற்றென் றியம்பி னாரால். 1

நற்றவப் பதியா மக்க நகருறுங் குபிரர் மாயச்
செற்றடல் விளைத்த தூதர் குறைசிக டிரளை நோக்கி
யிற்றையி லுங்க டம்மை யென்செய்வோ மியாமென் னுள்ளத்
தற்றுணர்ந் தினிரோ. வென்னக் கேட்டன ருவகை பொங்க. 2

கோத்திரத் துயர்ந்தோர் முன்னீர் குலவுல கேழும் விண்ணுங்
காத்தவர் சங்கை மானீர் கருத்துவந் தும்மை யீன்ற
பாத்திபர் தாமு மேன்மை படைத்தவ ரதனால் வாய்மை
நாத்தவ றாத நீர்தா னன்மையே செய்வீ ரென்றார். 3

நன்றினீர் செய்தீ ரென்ன நன்மொழி கேட்டெல் லோரு
மின்றுதொட் டுரிமை யுங்கட் கிடும்பெயர் துலக்கா வுள்ள
மொன்றுபட் டீமான் கொள்ளு மென்றனர் கலிமா வோதி
மன்றல்சேர் நபியை யேத்தி யவரவர் மனையிற் புக்கார். 4

மக்காஷரீபின்குறைசிகளெல்லாம்

ஈமான்கொண்டபடலம் முற்றிற்று.

ஆக படலம் 37-க்கு திருவித்தம 1178.

சபுவானுக்கு

திருமுக மளித்த படலம்.

உழைமறிக் கமுத மூட்டப் பிணையுறு முரவோர் சேணின்
மழைவளஞ் சுரக்கு மக்கம் வருதல்கண் டொன்னார் முன்செய்
பிழையுளத் திருந்த தாலே பேதமாய்ச் சிறிது பேர்கள்
கழைசெறி கடறும் வெற்புங் கடற்கரைப் புறத்துஞ் சென்றார்.

மாலைமார் புமையா வீன்ற மைந்தனுஞ் சபுவா னென்போர்
வேலைவாய் வங்க மேறி விளரிவண் டாற்றுந் தண்ணஞ்
சோலைவா யெமனிற் செல்லுந் துணிவுளத் துள்ளிக் கன்ன
லாலைவாய் ஜித்தா விற்சென் றன்புறத் தரித்தி ருந்தார். 2

அத்தலத் திருக்கு நாளி லானன வமுதச் சோம
னுத்தசி ரொனைபு மைந்த னுமறெனுந் திறல்வெண் சிங்க
முத்தலை முழுதும் போற்று முகம்மது நபிமுன் வந்து
சித்திரக் கமலச் சீதச் சேவடி பணிந்து சொல்வார், 3

உருவிலான் றாதே செங்கை யொண்சுடர்க் கதிரே வெய்ய
இருவலர்க் கரியே யான்போய் வளர்புகழ் சபுவான் றம்மைக்
கருணையின் முகமன் கூறிக் கருத்தினைத் திருத்திக் கூட்டி
வருகநம் பிக்கை யெற்கு வழங்குதி ரென்னக் கேட்டார். 4

நன்றென வாய்மை நீங்கா நம்பிக்கை நிருப மொன்று
மன்றலம் பொழில்சூழ் மக்க மெனுநகர் பிடிக்க வந்த
வன்றையி லணிந்தெ ழுந்த வலிர்சரு வந்து மீய்ந்து.
குன்றுநீர் சபுவான் கையிற் கொடுத்தழைத் திவண்வா வென்றார்.

மறைகுலா மிறசூல் செந்தா மரைப்பதந் தாழ்ந்து மங்கு
லுறைகுலாம் பொழில்சூழ் ஜித்தா வெனுநக ருழையிற் போந்து
கறைகுலாம் வடிவேற் செங்கைக் காவலர் சபுவான் பாலி
னறைகுலாம் பாகுந் தீட்டு நிருபமு நல்கிச் சொல்வார். 6

பருந்துளி மதங்கள் சிந்தும் பாவடிக் களிறே யும்மைத்
தருந்தரு விறசூல் கூட்டி வம்மெனத் தருக்கின் வந்தே
னருந்தவ மக்கம் புக்க வெழுமென வெழுந்தன் பாக
விருந்தவத் திறசூல் பாதத் திருவரும் வந்து தாழ்ந்தார். 7

அடிபணிந் தவர்க டம்மி லருளுடைச் சபுவான் செய்ய
கடிமலர் வதன நோக்கிக் கற்பகப் பதியிற் சேர்க்கும்
வடிவுடை யமுதத் தின்சொன் மல்கிய கலிமாச் சொல்லென்
றிடிபடி யைந்தா லெண்ணி லவர்க்கமு தீய்ந்தோர் சொன்னார்.

வேலைவா யுலகம் வேதம் விளக்கிய சுடரே கன்ன
லாலைவாய்ப் பாகு போன்ற வாரணக் கலிமாத் தன்னை
மாலைவாய் முளைக்குந் திங்க ளனையமட் டகன்ற பிற்றைக்
கலைமார் கலிமா வோதிக் குறுகுவேன் றீனி லென்றார். 9

நன்னெறி நேயத் தோடு நவின்றன னென்னத் தேர்ந்து
கன்னவி றிரடோள் வையம் பரித்தொரு குடையிற் காத்த
மன்னபி யிறசூ லுல்லா மாதநான் கன்ற பிற்றை
யின்னெறி கலிமாச் சொல்லென் றனுப்பின ரினிய நீரார். 10

சபுவானுக்கு திருமுகமளித்தபடலம் முற்றிற்று.

ஆக படலம் 38-க்கு திருவிருத்தம் 1188.

புத்து பேசிய படலம்.

எரியிடை யூழு மூழ்கி யெரிந்திடு மிறுத்தா ஜென்போ
னுருவமை லிமாறென் றோதும் புத்தினை யுவந்து செந்தேன்
மருமலர் சொரிந்து தூசு வணிந்துபொற் பணிகள் பூட்டிக்
கரமலர் கூப்பி நாளுங் கைகுவித் திறைஞ்சு வானால். 1

அடிபணி யிறுத்தா ஜென்போ னவன்றலை முறையின் முன்னோர்
படியினிற் றொழுதி வந்த பரிசிவன் றொழுது வந்தான்
முடிவுநா ளடுத்த போது முயன்றுமுற் றவத்தின் வந்த
வடிவுறு மப்பா சென்னு மைந்தனை விளித்துச் சொல்வான். 2

மந்தரப் புயத்தோய் கண்ணின் மணியினுன் மணியே வாய்ந்த
சுந்தர லிமாறென் றோதும் பிராணையான் றொழுதம் போல
வந்தியும் பகலு நீங்கா தருச்சனை செய்து போற்றென்
றிந்தநல் லுபதே சத்தை யியம்பிப்பின் னிறந்தா னன்றே. 3

அடையலர்க் கசனி யப்பா செனுமவ னவனி வான
முடையவன் றனக்கு மாறு கொண்டிடத் துணைய போதும்

படியினிற் பிதாவைக் காணப் பதின்மடங் காகப் போற்றிக்
கடிமலர் சொரிந்து புத்தைக் கைகுவித் திறைஞ்சி வந்தான். 4

ஒருதினத் தாவி நீர்மொண் டாட்டியொண் சோன் மேனி
மருவுநீர் புலர்த்தித் தீப தூபமுங் கமழ்த்தி வாசத்
திருமலர் மாலை சாத்தித் தெண்டனிட் டிருகை கூப்பிப்
பொருவறு முவகை நீங்காப் பொறிபுல னடக்கி நின்றான். 5

இவ்வண நிகழும் போழ்தி லெறிதிரைப் பரவை சூழ்ந்த
குவ்வினிற் குபிரை மேவிக் கோதறு மப்பா ஸென்போன்
செவ்விய தவவுச் சிதத் திருமதி வதன நோக்கி
யவ்விய மகலாப் புத்து காங்கவி யதனாற் சொல்லும். 6

உனதுதொல் கிளையாய் வந்த சனீயெனுங் கூட்டத் தாற்று
ரனைவரு மறியச் சொன்னீ லிமாறெனும் புத்தாமி யானு
மெனைமலர்க் கரங்கள் கூப்பி யிதையநெக் குருகிப் போற்றித்
தனகுறப் பணிந்த பேருங் கெடுவது சாத மென்றும். 7

பொங்கொளி யறுசின் மட்டாய்ப் பொருவறு சிகர மோங்கி
யங்கொழுங் கஃபா வுஞ்சி ரதர்குரி யுவர்க டாமு
மங்கையு நலனும் பெற்றுச் சகதலம் விசும்பு மற்று
மெங்கணுந் துதிக்கச் சீவித் திருப்பது திண்ண மென்றும். 8

மானமுங் கற்பு மொன்றாய் வருமெழின் மறிய மீன்ற
கோனபி யீசா நாலாம் வான்குடி புகுந்த பிற்றை
யீனமில் குறைசி வங்கிடத் துதித்துயர் முகம்ம தென்போர்
தானவ னருளின் மக்கள் தனியிருக் கின்றா ரென்றும். 9

நீயுமின் றமர்க ளியாரு நெறிவளர் திறகுல் பாலிற் (சொன்
போய்மலர்ப் பதத்திற் றாழ்ந்து பொருவிலான் மறையின் றீஞ்
மேயநற் கலிமாத் தன்னை விருப்பொடும் பகர்ந்து நீனி
னேயமுற் றிருங்கோ ளென்ன நிகழ்த்தின லிமாறு தானே. 10

உலைமுகக் குகையிற் செம்பை யுருக்கிமண் கருவில் வார்த்த
சிலையினை வாளர் நாளுஞ் சிந்தித்தே மென்னச் சீறி
நிலையற வடித்து டைத்து மியிட்டதி னபிபால் வந்து
தலைபணிந் தீமான் கொண்டு சகாதத்துக் கலிமாச் சொன்னார்.

புத்துபேசிப்படலம் முற்றிற்று.

ஆக படலம் 39 க்கு திருவிருத்தம் 1199.

மக்காஷரீபுக்கு

அரசியற்றிய படலம்.

மதுவழியும் பூஞ்சோலை மக்கமெனு நகரின்மூ வாறுவாரம்,
விதுவதன நபியிறசூல் வீற்றிருக்கும் போதுசரம் விரைவிற்
செல்லுங், கதியிற்குதி கால்பிடரி யடிபடவந் தொருதூதன்
கழலிற்றாழ்ந்து, புதியவன்றன் றிருத்தூதே விபுதர் தொழுஞ்
சுடர்மணியே போற்றி யென்றான். 1

கடுங்களிறு தனைநிகர்க்கு மாலிக்குச் செய்தவத்தாற் கனற்
கண்சிந்து, மடங்கலென வந்துதித்த வபுவென்போன் குவையின
தின் மலைபோல் மூரித், தடம்புயத்தக் கீபுகவா ளெனசுதமு சயி
னெனும்பேர் தரித்த நான்கு, குடும்பவணிகிலாற்கி லொருநூ று
நாலாயிரம்பேர் தமையுங் கூட்டி. 2

உரத்ததெரீனிக் கலிநிகர்ப்ப வோர்தலத்திற் போயிருந்து
சிம்மா றென்னத். தரித்தபெயர்த் திறத்தினனன் புறப்பயந்த து
றைதெனுமோர் சுறுகனுளை, விருத்தனவன் றனக்குவய தொரு
நூற்றி னுடனறுப தன்றேனென் வீரம், பெருத்த சமர்த் தொழிற்
குமிரு சமர்த்தனென னெதிரினும்பின் வாங்கிலானே. 3

சேவகத்திற் பொருந்தி நற்குஞ் செய்தியா பிலாசனைக்குந்
தினத்தோ னெற்றித், தாவுவய மாவும்பொறிச் சுடிகைமிகுஞ்
செடனுமெச மானமாக, மேவுமவன் றனையழைத்து நடுவிருத்தி
முகம்மதையாம் வெல்லும் வாறு, நீவகுத்துச் சொல்லெனவே
வபுவென்போன் கேட்பவெதிர் நிகழ்த்துவானால். 4

ஆற்றல்சால் சமர்முடிக்கத் துணிந்தனமேற் பொருள்குடும்
ப மனைத்து மப்பால், வேற்றுமொரு கெடியானைத் தனிற்சேர்த்
தித் தி[illegible]ப்படுத்தி விளைந்த சீற்ற, மூற்றும்வய வீரர்சிலர் தமைக்
காவ[illegible]வத்தினியா மொருங்கு போந்து, சீற்றமிறை மருப்பொ
ருத்த லெனப்பொருவோ மெனமதிக்குங் கிளர்த்தினானால். 5

துடியினிடை மகளிர் சிறு குதலைமொழி மக்கணவ மணி
பொன் வேயு, முடைதொறுவா ளிலைக னுறின் மு[illegible]தபடை
தனைத்திரட்ட வொட்டா தீது, தடையெனவே துறைது சொற்

றன் சொன்மறுத்து மடமாதர் தனையா மற்ற, வுடைமையொரு
வுறமகற்றிப் பொருவதல வென்னவபு வுரைத்தா னன்றே. 6

இத்தின மியா னுங்களுடன் வந்திருந்து மொழிபகர்ந்து
மியானில் லாத, வத்தினமாய் முடிந்ததந்தோ வாலவப தாற்திரு
ந்தா லடல்கள் செய்யுஞ், சுத்தவீ ரத்திறமை யில்லாத பேர்களுக்
குத் தணியும் வீர, கித்தலுமே பந்தவிப்பே னெனவபுவி னுட
ன்றுரைத்து நிகழ்த்தினனே. 7

நூற்றுப தாண்டலகி லிருந்ததனை தவன்றெளிந்து நுவ
ன்ற சொல்லை, மாற்றமென வுளக்குறிப்பிற் றேர்ந்ததனை யபுவெ
ன்போன் மறுத்தான் செய்யி, னாற்றுநறைப் பூங்கமல முகை
யவிழ வளியுறுகா லுதைப்பத் தாது, தூற்றுபொழில் சூழ்குனை
யின் முடிந்ததிந்த வாறெனவே தொகுத்துச் சொன்னான். 8

வேறு.

வந்த தூதுவ னுரைத்திடும் வாறெலாங் கேட்டுக்
கந்த மென்புய நபியசு காபிகள் கவின்செய்
சந்தி ரோதய வானனை நோக்கிவெஞ் சமர்க்குப்
பந்த முற்றெழு மாயுதப் படுமெனப் பகர்ந்தார். 9

திருகு வெஞ்சினக் களிறனைய யாசெவனுஞ் செம்ம
லரிதி னிற்பயந் தருள்சபு வான்றனை யழைத்து
வருநம் வீரர்கட் காயுத மில்லைநீ வழங்கென்
றருவி லான்றிருத் தூதுவர் கேட்டன ருவந்தே. 10

மாதிலத் தினான் முகம்மதே யாயுதம் வழங்கென்
றோது சொற்றது வழக்கமோ கிரையமோ யாதென்
றோது மென்னயாம் வழக்கமே கேட்டன மதற்கோர்
தீது வந்திடிற் பெறும்விலை செய்துமியா மென்றார். 11

நன்று நன்றெனக் கரும்பொரு ளிழைத்தொளி நல்கு
மின்றி லோத்தசீ ராவொரு நூறுடன் விளக்கந்
துன்றும் வெஞ்சுட ருவணிவேல் கார்முகந் தூவி
யொன்று நீள்கணை பரியுமற் றுதவின ருவந்தே. 12

கரும்ப லைத்தடத் தலைக்கரப் புகர்முகக் கரிகள்
பெரும்பெ ருந்திற லடலசு காபிகள் புனைய

விரும்பி னைத்தசீ ராப்படைக் கலங்களு மியங்கித்
திரும்புங் கொட்புலாம் பரிகளுங் கொடுத்தனர் திறலோர்.

அருட்க டன்மிகப் பூண்டகல் லருமறைக் கிழவர்
தருக்கி னல்கிடு முசைதரு டவத்தினில் வந்த
மருக்கு லாம்புய வுதாபெனும் வள்ளலை யரசென்
றிருக்க வைத்தனர் மக்கமா நகரினுக் கிறசூல். 14

மக்காவஷீபுக்கு அரசியற்றியபடலம் முற்றிற்று.

ஆக படலம் 40 க்கு திருவிருத்தம் 1213.

பூழ்திமண் தூவி

வெற்றிபெற்றபடலம்.

வரம்பெ ருந்தசவ் வாலெனு மாதமோ ரெட்டிற்
பரன்பெ ருந்தசு காபிக ளனைவரும் பத்தா
யிரம்ப ரித்திர ளினருட னிருந்துல காக்க
டுரம்பொ ருந்திரண் டாயிரம் பேர்களுஞ் சூழ. 1

பண்ணை வாவிசூழ் தாயுபென் றோதிய பதிக்கும்
நண்ணு மக்கமா நகர்க்குநாப் பண்ணிநே ரோடைக்
கண்ணின் மேவிய குனைனு றுஞ் செறுநரைக் கடிய
விண்ண வர்க்கிறை தொழுநபி யெழுந்தனர் வெகுண்டே.

முகிற்க ணுற்றதி ருருமென முரசங்கள் முழங்கப்
பகைக்கு லத்தவர் வெருவவெண் பணிலமொன் றதிர
நகைக்கும் வெண்கதிர்ச் சாமரை யிரட்டுற நாற்றுக்
துகிற்கொ டித்திரட் சோலைக ளெங்கணுந் துளங்க. 3

புனைம யிர்ப்புர வியின்மிசை யரியெனப் பொருநர்
மனைவ ருந்திரைக் கடலெனச் சூழ்ந்திட வலக்கு
கனைம லர்த்தொடை முகம்மது நளிர்முகில் கவிப்பக்
கனைகு ரற்பரி யின்மிசை கொண்டனர் கவின. 4

சேட னுச்சியிற் பரித்தமண் ணதிர்ந்திடச் செங்கேழ்
நீடு கைக்கதிர்க் கதிர்துகள் மாய்த்திட திகிரி
லாட கப்பதிக் குரியகன் நபியுமற் றவருங்
கோட கத்திர ளடத்தினர் வெற்பெலாங் குலுங்க. 5

பணைம ருங்குறு வரம்புக டகர்ந்திடப் பயமூர்
திணிகு டப்பணி லங்களு நெரிந்திடச் சியக்
க[illegible]ம்லு ரிப்புலிக் கணங்களும் பதுங்கிடக் கவிபு
மிணைசி றைக்குரு கிரிந்திட நடந்தன ரெங்கோன். 6

நலந்த ரும்புகழ் நபிபதம் விபுதரோர் நாளும்
புலர்ந்தி டாக்கடிச் செழுமலர் புயலெனப் பொழிய
நிலந்த ரும்பல வுயிர்களு நிமிர்விசும் பேழின்
மலிந்த பல்லுயிர் களுநனி வாழ்த்திட நடந்தார். 7

களிகொள் கேகையஞ் சிறைவிரித் தாடிய காவு
நளிர்கொ டாமரை பூத்[illegible]ர் தொசியுநீ ணதியு
மூளிக ளொத்தவெம் பரன்மிசை யோங்கலுங் கடந்து
தெளியும் விண்ணவ ரடிதொழச் சென்றனர் திறலோர் 8

வேத நாடொறும் பழுக்கறு தொழுதுநா மேலோ
ரோது நற்புகழ் முகம்மது மவர்க்குயி ரெனவோர்
போது நீங்கிலா வயவரும் பொருது தற் கின்ன
பாதை மீதினில் வருகின்றா ரென்பதை யறிந்தார். 9

இடறு நீங்கிலாக் குபிர்க ணெறியிரு மருங்குங்
கடறுங் குன்றினுங் கங்குலிற் றனித்தனி கரந்து
படைக ளேந்தியே யிருந்தனர் விழிகளிற் பரந்து
சுடர்செய் தீயிமை சுடர்ச்சுட வெகுளியிற் றணிந்தே. 10

கங்குற் போதினிற் குபிர்க்களங் கரந்தவா றறியா
தங்கண் மாநிலம் வெளுக்குமு னமரர்க ளொத்தும்
புங்க வார்கழற் றிருநபி யத்தலம் போந்தார்
சிங்க வேறெனக் குபிர்க டிரள்வளைந் தடர்ந்தார். 11

விளைக்கொ ளுப்புறத் தடையலர் திசைதிசை நெருங்கிக்
கனைத்த கூக்குரற் குரவைகள் முழங்கிடக் கண்டு
சினத்த ருக்கர நபிதள மடங்கலுஞ் சிதறி
முனைப்ப ரற்சிலைக் கானமும் போயின முறிந்தே. 12

அலங்கன் மார்பழு பக்கரு முமறும்வா ளலியுந்
துலங்க பாசுபி யாஹுநற் றுணைறபி யத்தும்
வலங்கொள் வேற்கையர் பாசுமன் னவர்மகன் பனுனு
நலங்கொ ளரும்புக ழும்முதுய் மன்மக னுரும். 13

மும்ம லங்கடிந் தகற்றிய முகம்மதை முடிகிச்
சம்ம தித்திவ ரெண்மருந் தடுத்தவ னின்முர்
தெம்மு னைக்கெதிர் பொரவெனத் திணிப்புபத் திறலுல்
வெம்மு னைக்கெதிர் பாடலம் விடுத்தனர் விரைந்தே. 14

கனித்த சொன்மறை முகம்மதே கருதல ரிடத்திற்
றனித்துப் பாடல நடத்துவ தன்றெனத் தடவா
யினிற்றி னித்தமுட் கவினமப் பாசுதொட் டிழைத்தார்
வனைத்த பாவடி பிடித்தமத் தினரபா சுபியான். 15

வாங்கு விற்றடந் தோளுறும் வயவர்கள் முறிந்து
நீங்கும் வாறுகண் டுளங்கவற் படுங்கொடு நெறிகொண்
டாங்க திந்தலக் காபெனப் பெயர்படைத் தவர்கள்
பாங்கி னின்றனை வருங்கிறை கூவினர் பழித்தே. 16

பூத லத்தினிற் பொறிபுல னடக்கிநன் கியற்று
மாத வத்தினர் முகம்மது மாயமும் வலியும்
பேத முற்றிடத் தீர்ந்ததனின் றெனக்களி பெருக்கி
போதை யுற்றிருப் புயங்குலுங் கிடநகைத் தரைத்தார். 17

செழிக்குங் கற்பக மானுமை யாவெனுஞ் செம்மல்
விழிக்கு ணன்மணி நேர்சபு வானெனும் விறலோர்
பழிக்கும் பேர்களைப் பார்த்திரு கண்ணினும் படர்ந்து
கொழிக்குந் தீயிமை சடச்சினங் கொண்டமர்த் தினரால்.

நங்கு லக்கட லுதித்தசெங் கதிர்ச்சுடர் நளிர்வெண்
டிங்க ளொத்தினம் வேலைகொள் வித்திடுந் திறலோ
ரிங்கி வர்க்குறுந் துன்பமு மின்பமு நமர்க
டங்க ளுக்கலாற் பிறர்க்கிலை யென்றனர் தகைத்தின். 19

இனத்தை யொத்தகை நபியுட னெண்மரு மவணிற்
சினத்த வெள்ளரி யேறென நிற்றைசிற் சிகரங்
கனத்தி னூடுறங் கலீபத்தின் வாயலின் கதவந்
தனைத்தி றந்திடுந் தலைவரி னொருவன்வந் தனனால். 20

மாக மீக்கொளுங் கம்பத்தின் வாயலின் கதவ
வீக முத்திரைச் சயிபத்தென் பவன்வினை விளைப்ப
மேக னன்னபி முகம்மது பிற்புறத் திருகட்
பாகந் தீயெழப் படையொடுஞ் சினத்தநின் றனனால். 21

அன்ன வன்றனைப் பெறுமுது மானையு மன்னோன்
முன்னு தித்ததல் காவைய முதுதினின் முனைப்போர்
தன்னிற் செற்றிடும் பழிகொளச் சமைபமீ தென்ன
வுன்னி வந்தவ னெனநபி யுளத்தினி லுணர்ந்தார். 22

ஆதி யந்தமி லவனுன தகத்தமுக் காற்றின்
றீது வந்தட ராதெமைக் காத்தனன் றிடத்தென்
றோதி வானதி பாலேயி லுதவுமொண் கமலப்
போதி ருங்கரங் கொண்டவ னுரத்தினிற் புடைத்தார். 23

அடித்த போதினி லுளத்திருட் பிழம்பெலா மகற்றித்
தடித்து மின்னெறி கதிர்தொழு நபிசரண் டாழ்ந்து
வடித்த கேள்வியிற் பார்வையின் மறிதிரை யுடுத்த
படித்த லத்தெனைப் பயந்தவர் தாமெனும் பரிவோய். 24

உள்ள மியாமுறு நினைவினை யுணர்ந்திடு மதனால்
வள்ள லீரிறை தூதலான் மற்றல வென்னத்
தெள்ளி தாகிய சொற்கழி மாவெனுங் கேளை
பள்ளி யுண்டருந் தீனிலேக் குரியவ ரானார். 25

எழுத ருமறைச் செல்வர்க ளியாவரு மினிதாய்த்
தொழுதி றைஞ்சுப தாம்புய நபிபெறுந் தோன்றன்
முழுது நன்னெறி பயிலுமப் பாசுகன் முகம்பார்த்
தொழுகு நம்படை யவவரை விளித்துமென் றுரைத்தார்.

ஊற்ற டப்பதத் தோன்கலைப் பாசொரு சத்த
மாற்றிக் கூவினர் கேட்டனர் காதமட் டப்பாற்
பாற்றி டர்க்களுங் வாவியுஞ் சோலையும் பசந்த
மாற்ற லைச்சுடும் பாலையும் போந்திடும் வயவர். 27

புளிற்றி ளம்பற மாற்றலைக் கெட்டவான் பொருந்தல்
வினத்தை விட்டரும் புற்குழை கறிப்பதா மின்றிக்
கனைத்தும் மாவெனக் கதறிவக் தடுப்பன கடுப்ப
முனைத்த வீரரா யிரம்பெயர் மட்டுமுன் வந்தார். 28

வெண்ணி றத்துகில் கஞ்சுகி சருவந்து வேய்ந்து
பண்ணு றாத்திய பஞ்சகல் யாணிவாம் பரிமி
னெண்ணி றேரையா யிரம்பெய ரிமையவ ரிலகு
மொண்ணு ணைச்சுடர் வேல்வலன் றங்கிவந் துற்றார். 29

கூற்று டன்கரங் கொட்டிநின் றெதிர்த்தமர் புரியும்
வேற்ற டக்கரத் தழுவரை விளித்தடை யாருன்
பாற்றி ணங்கொடி கழுகுண விருந்துகள் படைக்க
நாற்றி சைக்கணும் புகழ்நபி சென்மென நவின்றார். 30

உருக்க றுத்தவெள் வேல்வய் வீரர்க ளுவரிப்
பெருக்க மொத்தெழு மடையல ருடலுயிர் பெயர்த்துக்
கருக்கு வாய்ப்பொதும் பெயிற்றிளம் பிறைகளைக் காட்டுந்
திருக்கு மானனக் குறள்கழுக் குணவிடச் சென்றார். 31

சுழலு றப்பெருஞ் சூறையுந் தனிசெயும் வடவை
யழலு மொப்பென விருபடை வயவரு மெதிர்த்தார்த்
துழலும் வெஞ்சினக் கூற்றுடன் றுயிர்ப்பலி கொள்ள
நிழன்மு கிற்பொழி மழையினு நெடுங்கணை சொரிந்தார். 32

எறிப டைக்குடு மிச்சுட ரெரியிலை நெடுவேல்
மறியு மின்னெறி யுவணிவெஞ் சக்கரம் வளைகோல்
கறைகொள் கப்பணங் கணிச்சிகற் கவணொடு பிறவு
மறையு மண்டலைக் கடலென வார்ப்பரித் தெறிந்தார். 33

வைத்த காளிலை பெயர்த்திடா தழல்விழி மல்க
மொய்த்த வீரர்கள் கிடுகினன் மெய்ம்புறப் புடைத்து
நெய்த்த வாளினாற் றுணித்திட நிணங்கமழ் நெய்த்தோ
ருய்த்த பாரெலா மாறுவட் டெடுத்திடப் பொருதார். 34

பல்லி யங்களு மொற்றைவெண் பணிலமுங் கறங்க
வல்லை யங்கொடு சாடினர் சூடினர் வாகை
யெல்ல வன்பதத் தகளினன் மாய்த்திட விடக்கை
வில்லி னற்கணை துரந்திடப் பொருதனர் வீரர். 35

திரண்ட பன்மணிக் கிரீடங்கள் சூட்டிய சிரங்க
ளுருண்டி டச்செழு மூளையை வாய்மடுத் துறிஞ்சி
யிருண்ட நெட்டுடற் பேய்பசி போக்கிட விளம்பேய்
வெருண்டி டக்கதிர் வேல்கொடு சாடினர் வீரர். 36

கன்றி தூங்கிட வயின்குடர் தெறித்திடக் கரும்பொற்
றிண்பெ ருங்கவ சங்களுஞ் சிதைந்திடச் செம்பொன்
மண்ப ரந்தலை யெறிபெருங் கடலென மல்க
வொண்பு யத்திறல் வீரர்க ளுவணிகொண் டடர்ந்தார். 37

சதுத்த டப்பதத் துளைக்கரப் புகர்முகத் தறுகண்
மதத்த டக்கரி மத்தகத் தினிற்பதம் வைத்து
மிதிக்குங் கொய்யுளைக் கலினவெம் பரிகளும் வீழ்த்திக்
குதித்த வீரர்க டிரிந்தினர் கொடுவரிப் புலிபோல். 38

வாசி யின்வளை முகத்தையும் வாலையு மறிந்து
வீசும் பாலையு மகட்டையு முரத்தையு மீயிற்
றாகு லாங்கவி குரத்தையு முருவிடத் துளைத்துக்
காசி னித்திசை போயது வீரர்கைக் கணைகள். 39

கடுத்தெ திர்ந்தின வாறமர் பொருதிறங் கனசப்
படித்த லத்தர செனுகபி முகம்மது பார்தனுத்
தடித்த வெம்படை யொன்றினோ டொன்றுறத் தாக்கிச்
சுடர்க்க னற்பொறி கொறித்தெழுந் தனவெனச் சொன்னார். 40

அந்த வேளையி னபிநபி வறிந்துணர்ந் திடனமாப்
புந்தி கூர்த்தரம் புவித்தலை படிந்திடப் பூழ்தி
கந்த மென்மலர்க் காத்தெடுத் தடையலர் வீரஞ்
சிந்தி மாய்ந்திட வருளிறை யெனச்சித றினரால். 41

எறிந்த பூழ்திவெண் டேவியம் பிதும்விரைந் தேகி
மறந்தி கிழ்ந்திடுங் குபிரர்கள் வாயினு முகத்து
நிறைந்து வீழ்ந்திட வீரமும் வலிகளு நீத்து
முறிந்து போயினர் பல்லரும் பலபல முகமே. 42

நவம ணிச்சுடர் மோலிவேய் விபுதரு நாளுந்
தவமு ளுற்றிய தீன்முக லீம்களுஞ் சகத்திற்
பவமி குத்தபுன் குபிருட் பகைஞரைப் படையா
லவிய வீழ்த்தின தெண்ணிமட் டிடவரி தம்மா. 43

குற்ற மேவுவன் காபிர்க ளிறுவிய கொடிக்கீ
ழுற்ற வீரரிற் பெயர்பெறுந் தலைக்கமவை யுடையோ
ரிற்ற றுக்குறி யாழ்ந்தன ரெழுப[illegible] வயவர்
மற்று மிஞ்சினோ ரன்றனர் புறக்கர் வழியே. 44

பிலன்ப டும்பகு வாய்ப்பெரு மருப்புடைப் பெரீனம்
விலங்க லொப்பெனு மாலிக்கு லத்தினின் மேவி
யுலங்கொ ளொண்புய வபூவென் பவனுடன் சிலரு
மலங்கி யோடினர் வளவவுத் தாசெனும் பதியின். 45

கவின்கு ழைத்தெழு தீபவன் மகளிருங் கனிவாய்த்
திவிய மென்மொழிச் சிறார்களுந் திரைவிளிம் புடுத்த
குவினி ரைத்தபல் பொருள்களுங் கொண்டவன் சேர்த்தி
நவிலுங் காவல்வைத் தகன்றனர் தாயிபு நகர்க்கே. 46

பூழ்திமன் றாவி வெற்றிபெற்ற படலம்

முற்றிற்று.

ஆக படலம் 41 க்கு திருவிருத்தம் 1259.

அபுத்தாசில்

போர்புரிபடலம்.

சாத்தின் முன்னூறு நகுலத்தெதன் றேறிய தலத்தாக்
குரத்தி னோடினர் சிலரவர் தமைத்தொடர்ந் தோங்கும்
வாத்தி றத்தன காபிகள் வனமுகக் கலினப்
பரித்தி ரள்விடுத் தரியெனப் படர்த்தன ரன்றே. 1

படர்ந்த வீரர்க ளகுலத்தெதன் றேறிய பதிசென்
றடர்ந்து வெங்குபிர்ச் செறுநரோ டெதிர்த்தமர் பொரக்கண்
டுடைந்து போயினர் தீனவ ரொல்லையின் மீண்டு
திடந்த ரும்மறை நபியகம் வந்துசேர்ந் தனரால். 2

தண்ட லைத்தரு யாவெனும் பதிசெலுந் தாரைக்
கண்டர் நாயகர் தொழுநபி யமர்க்குடைந் தகன்று
மிண்ட ரிற்சில ரேகின ரவர்கள்மேல் விரைந்து
பண்ட ரும்பரி விடுத்தனர் நபியத்தென் பவரே. 3

வேக மீக்கொளப் புகுமதர் மீதினில் விழிகள்
வாக நக்குழி விழுந்திமை மூடிவாய் குழறித்
தேக மெங்கணு நரைதிரை பிறங்கச்செந் தலைக்கூ
னாகம் போற்செலுந் தனைதினைக் கண்டனர் நல்லோர். 4

ஸள்ளு றைக்களித் தவிர்வடி வாலிநன் மதத்தத்
துள்ளி வீசினர் வீசலுந் தினைத்துணை யேனுங்
கொள்ளுங் காயமொன் றவன்றாம் பையிற்படா ததுகண்
டெள்ளு மாறிவர்ப் பழிப்புட னகைத்தியம் புவனால். 5

செட்ட விப்படை யாயுளக் களிர்தனல் கீழ
தட்டி விட்டெறி யென்னுடை வாளொடிந் தடத்தா
ளொட்டை யிற்புறந் தூக்கிய தெடுத்தரீ யுருவி
வெட்டி லாடத்தேல் பற்றுவெண் மூளையும் வீழ. 6

இருதி ளம்பரு வத்தின்மு னிருக்குபோ தியானும்
பொருந தப்படி யென்னுயிர் வாலிநற் போக்கி
யரிதி னிற்பயந் தருளிய வன்னைபாற் சொன்னீ
கருத லர்க்கரி தறைதையுங் களைந்தன னெனவே. 7

தருத னித்திரு முதலவ னணையா னுவரி
யிருநி லத்திடை யுங்கடம் மகளிரை யென்றும்
பெரிது வப்புறக் காத்தனேர் பீடைக ளகற்ற
வரிய மாதவ வில்லையோ வெனவுரைத் தகன்றான். 8

இகற் செறுநருக் கரியபு வாயிறென் பவர்க்கு
மகத்து வத்தொடு தலைமையுந் தவசமும் வழங்கித்
தகைத்த வன்னவர் தமையனுர் மகனையுஞ் சமதிச்
செகத்தின் மிக்குறும் வீரர்கள் சிலரையுங் கூட்டி. 9

நடக் திகழ்புத் தாசினிற் போய்த்தரி பலரை
யடர்ந்து செற்றவர் பண்டங்க ளனைத்தையும் வௌவி
யடங்கை யுற்றுனுஞ் சிறைகளு மொருங்குறப் பிடித்துக்
கடந்து வம்மென வனுப்பினர் கவினடி யிறைநூல். 10

சேவ கத்திற னபிபதம் பணிக்குயர் சேனுர்க்
கோவி னைக்கொடைக் காத்தபுவொமிறுங் கூண்ட
மாவி யப்புறும் வீரரு மரியென மரைமென்
றூவி னைப்புரம் பயமிதித் தேறினர் புரவி. 11

இயங்கள் விற்செழு மழைமுகி லுருமெனக் கறங்க
வயம்பெ ருக்குமார் கலிவலம் புரிமிக வதிர
வியங்கொள் வெண்குடை துவசமு நெருங்கிட விறலோர்
புயங்கள் விம்முற நடத்தினர் வயப்புர விகளை. 12

நந்தி கொம்புறத் தாங்குல கதிர்ந்திட நளிர்வான்
வந்து லாங்கொடு முடித்தட வரைகளுங் குலுங்கக்
கந்து கக்குரத் தெழுப்பிய துகள்கதிர் மாய்ப்பச்
சிந்தெ னப்பரந் ததிரிட நடத்தினர் திறலோர். 13

சிலம்பும் வாவியு மடவியும் பொழில்களுஞ் செறுவும்
வலம்பொ ருந்தயிற் படைக்கர வயவர்க ணீந்திச்
சலம்பொ ருந்திய நடத்தபுத் தாகிலைச் சார்ந்தா
ருலம்பொ ரும்புயக் குபிரரி லொருவன்வந் தெதிர்த்தான். 14

வினைய முற்றவந் தவன்றனை விளித்துரு மனைய
கனைகு ரக்களி றெனுமபு வாமிறு கனிவா
யினைமி கப்பிரி யத்தொடும் விண்டியற் கலிமாத்
தனையி யம்பெனச் சாற்றின ரவன்மறுத் தனனால். 15

தேனி ருத்திய சொற்கலி மாவுரை தேறித்
தானு ரைத்திடா வாறுகண் டிச்சக தலமேற்
வான மைத்தவ கரியென வாளினா லவன்றன்
ஊனி னங்கழு குணத்துணித் தனரொரு வீச்சில். 16

சுற்று வாம்பரி மிசையினிற் பினுமொரு சூரன்
வெற்றி கூறிவந் தெதிர்த்தன னவனையும் விளங்கு
நற்ற வக்கலி மாநவில் வாயென மறுத்தான்
கொற்ற வர்க்கரி யெனவவன் றன்னையுங் கொன்றார். 17

மதத்தி னின்னவா றெவ்வொரு செறுநராய் வந்தங்
கெதிர்த்த வொன்பது பெயரையு மவ்வண மெறிந்தார்
கதத்தின் வெவ்வழல் கட்கடைப் புறத்தினிற் கான்று
குதித்து நிற்கும்போ தெதிர்த்தன னொருபெருங் குருசில். 18

சுவல்வ யப்பரி மிசைவரு பவனையுந் தாய்தாய்
மவுலு நற்கலி மாவுரை யென்றனர் மறுத்தா
னவனை யுங்கொல் விறையவ சாட்சியென் றடித்தா
ருவமை யில்லவ சாட்சியன் றெனவுரைத் தகன்றார். 19

இரைத்த வெண்டிரைக் கடலெனக் குபிரர்க ளெழுந்து
நிரைத்து வந்தெதிர்த் தனரவர் தமைநிலை பெயர்த்துத்
துரத்தும் போதினில் வாங்குவிற் களத்திறுண் டுரந்த
சரத்தி னுலபு வாமிறை பொருத்தனெய் தனனல். 20

குதைநெ டுங்கணை குழித்திடுங் காயத்தின் மயங்கித்
தனையும் பூழ்தியிற் கிடக்கையிற் றமையனு ணீன்ற
வதிக வீரங்கொண் டோங்கிய புகழுவா ளூசா
மதக யங்கள்போல் விரைவொடும் வந்துகண் டனரால். 21

கண்ட போதிரு கட்கடை யழலெழக் கதழ்ந்து
தண்ட டங்கலு மொருங்குறச் சடுதியிற் றிரட்டிக்
கொண்டு வாகைவெண் கொடியுமுன் னடத்திவெங் குபிரர்
மண்டு சேனையிற் புகுந்துழக் கினரரி மான. 23

கறுத்த வெஞ்சினக் கருதலர் சிரங்களை வாளா
லறுத்த றுத்தெறிந் தாடரா மணிமுடிச் சிரசிற்
பொறுத்த பாரெலாம் பிணக்குவை போர்பல வேற்றிச்
செறுத்து நின்றனர் வந்தெதிர்த் தனனொரு திறலோன். 23

எதிர்த்த வீரனஞ் சேனையை யிடறிய நின்னை
வதைத்து நாய்நரி பசிகொள வழங்குவே னென்றான்
கதத்தி னென்சிறு தந்தைமார் பழற்கணை யெய்து
சிதைத்த வுன்னைவாள் வீச்சொன்றிற் செகுப்பனியா னென்றார்.

கடுத்து ரைத்தசொற் கேட்டிதம் கறித்துவெஞ் சினத்தான்
முடப்பி றைப்பொரு சிலையிரு களத்தினு மூரி
வடப்பு ரிக்குணம் பூட்டிவெங் குதைநெடு வாளி
தொடுத்துச் சோனையா மழைசொரிந் தாலெனச் சொரிந்தான்.

எய்த வாளிகள் வாளினு லறுத்தறுத் தெறிந்து
நைத வந்தினைத் துணையினு மகன்றிடா தவனை
யெய்து டைத்தொளிர் வாளினு லுயிர்நிலை நீங்கக்
கொய்தெ றிந்தன ரவன்சிரங் கொடிகழு கருந்த. 26

கறையெ யிற்பிறை மருப்புவெங் கைக்கரிக் கணத்தி
னூறுகு ரன்னிடைத் தாங்குரத் தடலரி யேற்றின்
மூறுது வெஞ்சினத் தொடும்புகுந் தடையலர் முறிந்து
தெறிப டும்படிப் பொருதனர் செஞ்சுடர் வாளால். 27

வேறு.

மாவிற லோடும் வந்த மருவலர் காத்திரத்தி
னவிகள் முழுதுஞ் செங்க ணர்தக்ற் கரிதி னூட்டிக்
காவியங் கண்ணார் வாய்ந்த காளையர் இருர்க ளொட்டை
சேவொரு வாடை செம்பொன் மற்றவுங் கூறை யிட்டார். 28

கொள்ளைகொள் பொருள்கண் முற்று மொருமுகப் படவேகூட்டி
வெள்ளமொத் தனைய சேனை வீரரு மீண்டு வல்லை
யுள்ளுறத் துளைத்த வம்பின் காயத்தா னுழலா நின்ற
வள்ளியோ ரிடத்தில் வந்தார் மடங்கலை நிகர்ப்ப வன்றே. 29

எந்தைதன் றுணையே நீங்கா வென்னுயிர்க் குயிரே யும்மை
யுந்துவெங் கணையா லெய்த பகைவனை யுலகம் போற்று
மந்தமி லிறைவென் கையா லழித்தன னென்றார் மைந்தர்
நொந்திடா வண்ணந் தைத்த நோன்கணை வாங்கென் றாரால். 30

கைக்கம லத்தாற் றீண்டிக் கழற்றின ரலகா ரெஃகந்
தொக்கசெந் நீர தின்றித் தூயநீர் தொட்ட வூற்றுப்
பொக்குலாங் குளமா யாறு யலையுறக் குதித்துப் பாய்ந்து
திக்கெலாம் பரந்து லாவு மதிதமியார் தெரிக்கற் பாலார். 31

மழகளி றனைய வெற்றி மைந்தநீர் நபிபாற் சென்றென்
னழகிய சலாமுங் கூறி யலைகடற் புவியி லியான்செய்
பிழைபொறுத் தருள வாதி பெரியவ னிடத்தில் வாசச்
செழுமலர்க்கரங்க ளேந்தித் துஆச்செயச் சொன்னா னென்றும்.

எனக்கிறை தூதர் நல்குந் தலைமையின் மேன்மை முற்று
முனக்கியான் றந்தே னென்று முரையென வொசியத் தோதித்
தனக்குவ ட்சையா வல்லி சாதமென் மருங்குற் செவ்வா
யனப்பெடை யரம்பை மாத ரணைகொள வகல்வான் புக்கார். 33

செவிமணித் துறக்கஞ் சேர்ந்த திறனுடைக் குரிசி றம்மைப்
புவியிடை யடக்கஞ் செய்து பொழிலபுத் தாசிற்கொண்ட
குவிபொரு ளனைத்துங் கொண்டு குருநபி பாலில் வந்து
கவினுற வைத்துச் செய்ய கமலமென் பதத்திற் றாழ்ந்தார். 34

அருளபு வாமி றென்னு மாண்டகை சலாமு மன்னோர்
தருதுரைத் தனமும் விண்ணூர் சார்ந்தது மபுத்தா சுத்த
மருளரைச் செற்றுப் பண்டம் வவ்விய தனைத்தும் வேதப்
பொருளென நபியைப் போற்றிப் புகழ்ந்தவா றுசா சொற்றார்.

புனலெடுத் தொலுவுஞ் செய்து பொருவிலாப் பொருளே யாதி
யெனவிரு கரங்க ளேந்தி யியலபா வாமி றென்போர்
கனவினி லெனினுஞ் செய்த பிழைகளும் பொறுத்து வீட்டின்
மனவுறுஞ் சிறப்புச் செய்வா யெனநபி மகிழ்ந்தி ருந்தார். 36

மின்கதி ரெறிக்கு மோலி வேந்தருக் கரசே யேழை
யென்குறைப் பவமுந் தீர வியல்துஆச் செய்வி ரென்னப்
புன்குபிர் கடியும் வெற்றிப் புகழவா மூசா சொன்னார்
நன்குற வவர்க்குக் கூட நபியுல்லா துஆச்செய் தாரால். 37

அடலபு வாமி றென்று மாண்டகைக் கஞ்சிச் சென்ற
கடகரி யனைய வீரன் கபீபுல்லா பதத்தில் வந்து
வடிவுறுங் கலிமாச் சொல்லி மருவினர் தீனி லன்றோர்க்
கிடுகுறிப் பேர்ச ரீத புவாமிறென் றினிதி னிட்டார். 38

அபுத்தாசிற் போர்புரி படலம் முற்றிற்று.

ஆக படலம் 42 க்கு திருவிருத்தம் 1297.

தாயுப்புசென்றுமீண்டபடலம்.

சங்கத்தடத் தாயுபெனும் பதியிற்
சிங்கத்திறன் மேவிய தீனவரு
மங்குற்குடை வள்ளன்மு கம்மதுவும்
புக்கப்படை போந்ததை யோதிடுவாம். 1

சலசத்தட மேவபுத் தாசதினும்
மலர்பைம்பொழில் சூழ்குனை னைவதினு
நிலைவுற்றுறு காபிர்க ணெஞ்சமிக
மலைவுற்றுற வெளவிய வான்பொருளும். 2

வீறூர்கவுள் வெங்கட வேழநிகர்
தேறூர்பதி கொண்ட செழும்பொருளு
மாறாயிர மாண்சிறைப் பெண்சிறையும்
மேறுமொரு வொட்டகை யெண்ணிலவும். 3

திருஞனசெ ஞர்தல மீதிடைசேர்த்
திகலோர்க்கரி யாமசுயூ தெனுமோர்
தகைவீரர் தமைப்பொருள் காத்தியென
மகிழ்வோடி ருத்தினர் மன்னவியே. 4

குனையின்படை யின் முறிந் தோடிமிகுஞ்
சினமுந்திற லுங்கெட வேசசியு
மினனுந்தவ மும்மெயிற் றுயுபினின்
மனமஞ்சிமுன் போயுறை வன்கணரா. 5

நாணர்திகழ் திண்புய நன்னபியுந்
தானந்தரு தீனவர் தாமுமெழுந்
தானந்த மிகுந்திட வாவிகளுங்
கானுங்கடி தேடிந டந்தனரே. 6

மருவுங்கசி சென்றுசொன் மண்டலத்தார்
கருதாம்மிகு ருணிதங் கட்டவுறு
முருகம்பொழிற் கறுனிமு கல்லினிடத்
திருள்புன்குபி ரோடவி றங்கினரால். 7

பன்னுங்கலி னப்பரி வீரரெலா
மன்னுந்திரை வாவியில் வாய்ந்தகுட
மின்னந்தல வத்தலம் விட்டெவியத்
தென்னுந்தலத் தேகியி றங்கினரால். 8

அர்தத்தல மீதொரு பள்ளியரும்
விந்தத்தொழி லோடும்வி யப்புறவே
பந்தத்தொட ரற்றவ ணப்பணியக்
கந்தப்புய நன்னபி கட்டினரே. 9

வேறு.

மறமுதிர்ந் திருண்ட பகையினுன் முனமே பனிலைப்பதுக் கிளையிலோர் மைந்தன், திறன்மிகு குதையிற் கிளைஞர்கடமக் குச் செற்றிடும் பெரும்பழி யொன்றும், குறதியின் கொடுக்க வேண்டிய படியா லொள்ளுறை வாட்கொடன் றேனே, முறுத வெஞ் சினத்தால் பனிலைப்பதுக் கிளையோர் தீன்முகற் பழிபெடுத் தனரால். 10

தரித்திடுங் கறுனி முகல்லினின் கீழ்பாற் றடம்புயத் தப வெனுந் தலைவன், றிருத்திவா னளக்குங் கொடிமதின் முழு துஞ் சிதைந்திட விடித்தெறிந் தப்பாற், பரித்திரள் கடலிபொற் றைவென் பணிலம் பல்லியம் பரவையின் முழங்க, விரித்த பைம் பொன்னும் மிமணியும் விளையும் வெற்புடைத் தருவில்லவந் திறந்தார். 11

வானஅ வளக்கும் பெரும்பொறை யிடத்தில் பனிகிலா புக் கிளை யவர்க, டான்குடி யிருக்குந் தலத்திடை நின்ற தவாதிரு வெனுந்தரு நிழற்கீழ்ப், பானிலா விறைஞ்சும் பதாம்புயத் திற சூல் பாயகி நிகர்ப்பவிற் றிருந்தார், மேனிலக் குரிய வயவர்க ளியாரும் வேங்கைபோற் சூழ்ந்தினி திருந்தார். 12

கிம்புரிக் கோட்டுக் கரிநிகர் தக்கீபுக் கிளைஞர்க ளாட்சியாய் விளைத்த, பைம்பொழிற் கனிகள் காயிலை யரிந்து பன்மலர் பொதுளிய வாசக், கொம்பறத் தறித்து வேரறக் கிளைத்துக் கொல்லைகன் முழுதும்போ யழித்து, வெம்பொறிப் புரிசைத் தாயுபென் றோங்கும் வியன்பதிக் கேகினர் மேலோர். 13

புயலினந் தவழ்ந்து கண்படை பொருந்தும் பொருப்பென வளந்தெழும் பித்தி, யெயிலினை வளைந்து நாண்களம் பூட்டு மிடக்கையஞ் சிலைகளைத் தாக்கு, மயிலெடுந் தூவிப் பிறைக்கு தைப் பலகம் பழுவெனச் செரிந்தனைக் கவண்கல், வெயின் முக மறைப்பச் சுழற்றிவிட் டெறிந்தார் விறல்குடி யிருந்ததிண் புயத்தார். 14

வளைந்துயர்ந் தெழுந்த மதிளகத் தியற்றும் பதனத்தும் வாரியின் புறத்தும், விளைந்தவெஞ் சிற்றக் குபிரர்க ளின்று விளைமுடப் பிறையினுங் குழைத்துத், தளைந்திடும் புரிகாணு கைத் தெழுஞ் சரங்கள் பெய்தன ரச்சர மார்பைப், பிளந்திட முசு லீ மவர்சில ரிறந்தார் கண்டுபின் வாங்கினர் மேலோர். 15

எவடாத் தாரம் வந்துகற் புறையு ளொனும்பெய ராயிசா தமக்குந், தாவடா நோக்கும் புகழும்மு சல்மா வெனுந்திருத் தாயவர் தமக்கு, மாவிலா சத்தோ டிருபடங் கடித்து வனப்புறு மிருபடங் கூடே, யாவலா லவனிற் பள்ளியொன் றமைத்துத் தொழுதனர் முகம்மது நபியே. 16

சுதைமதி லெயிலி னிரைத்தபொற் கதவந் திறந்திடா துறைந்தனர் துன்றார்; கதைமலர்ப் பூங்காய் கனிநறவூற் றூந் தண்டலை முழுதும்போ யழித்து, மதுகைசேர் கரத்தாற் கவண்சிலை சுழற்றி வாரியி னகத்துற வெறிந்து, கதமுறத் தனிக ணடத்தி வான் மதிலை யடித்தனர் கவின்முசு வீரர்கள். 17

நடத்திய தனியைச் சினத்தொடுங் குயிர்நனிநெருப் பொல்லையின் வாரி, யெடுத்தெடுத் தெறிந்து சுட்டன ரதனை யினி யிவ ணிற்பது தகாதென், றுடற்பொறி யதறித் தனிநடத் தினமேபோ ரோடின ரவர்களைக் கதவ, மடைத்திடு மெயிலுள் ளுறைந்தவர் சிலைநால் வளைத்தல கம்பிறு லெய்தார். 18

கார்முகச் சரங்கட் கிடங்கொடா துவந்த காவலர் மதிமுக நோக்கிப், பாரிடத் துபய பதம்படாக் குரிசில் பரம்பொரு ளருளினு றுளைக், கோர்முகப் படையா மரண்புகுந் தடையா ருடன் பொருதிடுகுவோ மென்று, சோர்முகத் தினோர் பிடிபடா திஞ்சி யேகுவோ நம்பதிக் கென்றார். 19

பாட்டளி யினங்கள் பேட்டொடு முரலும் படலையம் புயத் திறன் மன்னர், காட்டிய சொல்லை மறுத்தியா முதைய காலையிற் கருதல ருயிரை, வாட்டிறல் வலிகொண் டடர்குவோ மென்ன வளர்கலை மதியம்போற் றெரட்டி, லாட்டிட நிதமுந் துயின்றவீ ருளைத்தா ரருக்கனுங் குடகட லடைந்தான். 20

உலகெழ விளங்குங் கதிர்ச்சுடர்ப் பருதி யொற்றையத் திகிரியை யுருட்டி, யலைபகட் டெழுந்தான் பனீத்தலைவீர ரடங்கலு மொருங்குறத் திரட்டி, நிலவுவெண் சுதைமா மதிளிடந் சென்று நோலர்ச் செருத்திடு மென்ன, நலனுறீ துறக்க மணிச் சுடர் விளக்கர் நயிலிடை கொடுத்தனுப் பினரால். 21

கடையிரு புறமுங் குழைத்துநாண் பூட்டுங் கடுஞ்சிலைப் பகழிக ணீங்காச், சுடர்விடு நெடுவா ளன்னிலை வடிவேல் சுழற்று கைக் கவணுமற் றேந்தி, விடவர வனைய வீரர்கள் போந்து மேவலர் பகைகெட விண்ணிற், படலைய முகில்போற் கவண்சிலை கலை யும் படர்ந்திடச் சொரிந்தனர் சினத்தின். 22

தீற்றிய சுதைகொ ளரணகத் துறைந்த செறுனர்கள் கார் முகங் குழைத்துக், கூற்றனை நாண்கழுத்தைத் தெழும் பகழி யுரு மொடு மெழிலிவான் குன்றந், தூற்றிடு மழைபோற் சொரிந்த

ளர் நீனோர் றுணைப்புயத் தருவிடத் துயரா,லாற்றல ராகி மீண்
டுவந் தடைந்தா ரருமறை நபிபத மலரின். 23

வ்பத்தொடு மூன்றாந் தினத்தினுஞ் செங்கண் மடங்கலை
நிகர்த்திடத் தீனோர், புயத்தெழிற் பரிசை புடைத்திரு கண்கள்
புகையெழுந் திமைசுடக் காதி, யெயிற்புறம் போந்து சரமழை
பெய்தா ரிஞ்சியி னகத்துறை மள்ள, ரயிற்கணை பெய்தா ரதிற்சி
லர் காயங் காயம்பட் டவர்களு மீண்டார். 24

சுருதிநல் வாய்மை பழுத்தமு தொழுகிச் சொரிந்திடச்
சொல்லுநா விறசூ, லொருகனாக் கண்டு திறலபூ பக்கர்க் குரை
த்தன ரதின்பயன் றேர்ந்து, பரிதிநே ரெழிலோய் முதலவன்
றாதே பங்கயக் கண்படை கொளும்போ, தரிதினிற் கண்ட
கனவுக்கு ணிகழ்ந்த கருமம்வந் தணுகிடா தென்றார். 25

நாமமொண் கமல முகைமுறுக் கவிழ்க்கு நன்கதி ரகட்டு
னிற் பொறித்தோ, யாமுமிக் கனவுக் கிப்பொழு துரைத்த
போதனை முடித்தன மென்னத், தேமுறு மரபத் தொடைப்புய
நடுவிற் றேவர்க ளியாவரு மற்றுங், காமுற வொளிரு மிலாஞ்சி
னைத் தரித்த கபீபிற குலுரைத் தனரால். 26

வரையென நிவந்த மதிற்புறம் வளைந்து லயவரு முகம்மது
நபியு, மிருபதோ டிரண்டு தினமவ ணிருந்தா ரியல்புறுந் தாஇ
ஃபி தாவென், றுரைதரு திங்கட் குடமுதற் பிறைவந் துதித்
தது கண்டிக லெதிர்ந்து, பொருவது கருமென் றனைவரு முண
ர்ந்து புலியென வயின்வயி னிருந்தார். 27

பொறைநெறி யொழுக்கம் வாய்மைநன் ஞானம் பொரு
வற வொருவடி வாகி, நிறைவளர் குவைலத் தெனும்பெய ரன்னை
யீத்திலத் தருவெடுத் துலகின், மறைவளம் பழுத்துப் பிரசமூற்
றிடுஞ்சொல் வளர்நபி பதத்தின்வந் திறைஞ்சிக், கறையுறு மதி
யே முகம்மதே யேழை கழறல்கேட் டருள்கவென் றனரால். 23

இஞ்சியிற் றையினி லகப்படிற் றசீபுக் கிளையினி லுதித்
தெழுங் கபீலா, னெஞ்சுவந் திருகண் மணியெனப் பயந்த பேரி
ழை வாதிபர் பூண்ட, வஞ்சுடர்ப் பணிக ளெனினுமக் கீலென்
பலன்பெறா பாரிகத் தெனுமான், செஞ்சுடர்ப் பணிக ளெனி
னுமென் றனக்குச் செய்துமோ வென்றுகேட் டனளால். 29

மாதருக் கரசே தாயுபுப் பதியில் வாழ்ந்தகி புக்கிளையாரைத், தீதறுவெற்றி கொளவெமக் குலகுஞ் சேணுமற் றமைத்தவோர் முதல்வ, னேதுமூத் தாயின் றெனமலை யுச்சி வங்கமு முத்தியு மழைத்த, ஆதரா மிறசூல் முகம்மது நயினர் சொற்றனர் சருதிவாய் மலர்ந்தே. 30

நீனதிபெருகச் சீட்டுவிட் டழைத்து நிறுவிய புகழுமதிடத்திற், பானல மறையின் றீஞ்சொலை மருவும் பைந்தொடி ருவைத்தென் பவர்போய், மேனிவந் தறசிற் போந்தவ ருரைத்த செய்தியை விரித்தெடுத் துரைக்கக், கோனுமெ றெழுந்து நின் வழி இருத்துங் குருநபி யிடத்தில்வந் தனரால். 31

முதுக்குறைப் பொருளே தவத்திறுக் கனியே முகம்மதே நபிகளு யகமே, மதிக்கிளை வதனக் குவலத்தென் பக்கமான் மதிலின்னறைத் தினத்தினம் வணங்கி, விதந்தொடு மகப்ப லதென வுரைத்தீ ரென்றுசொற் றனடள மெழும்ப, வதிர்த்திடு முரச மறைகவோ வென்றார் நன்றென விடையரு ளினரே. 32

வள்ளுகிர் மடங்கற் றிறத்தின மெழுந்து வார்முரசறைபவர்க் கூவி, விள்ளரும் பயண முரசறை யெனலும் விரிம்பினில் வார்ப்பிணித் திறுக்கித், தள்ளரு நூருமிழ்க்கிறந்தின முரசந் தனைப்புடைத் தெழுமென வறைந்தார், னெள்ளரும் வீர ரியாவரும் விரைவி னெழுந்தன ரெழுந்திடும் போழ்தில். 33

ஆரண்வயி ளிருந்து பருமத்தென் றுரைக்கு மசலத்தினதரினு லிழிந்து, முரண்மிகு காரீ ஞாதவிய நக்கீனன் றுரைத்திடு முதியரு மின்னோர், பொருளணி நல்கி விலைகொளுந் தொழும்ப ரிருபதோ டிருவரும் புலிபோற், றிரண்மிகும் வயவர் புடைசெறி நபிமுன் வந்துயர் தீனிலே சேர்ந்தார். 34

முகிலடை கிடக்குஞ் சவுரெயின் வளைந்து முனைபொருபொருதவர் தம்மின், மகிதல மிழந்து வீழியங் கனிவாய் மதர்விழி யரம்பையர் தழுவ, வகமகிழ் வுடனே வுலனையிற் புகுநதோ ரடன்மிகுங் குறைசிக ளெழுவர், தகையுறு மன்சா ரின்கனி ஞல்வர் பணிலைய்துக் கிளைஞ்சூரி லொருவர். 35

வானவர் பணியு முகம்மது நபிகள் மாலியா ரினிதுறப் பயந்த, கான்முளை யப்துல் லாவெனு நாமக் காவல ரிவர்பதின் மூவர், கோன்பூ டக்கர் மகனப்துல் லாதங் குரம்பையிற் கோலொன்

றுதைத்துத்,தானமீ தந்தத் தழும்புட னிருந்த நபியுபாத்தான
பின் சார்ந்தார். 36

மறுவிமெய் கமழ்ந்த முகம்மது நபிபால் வயவசு காபிகள்
வந்து, செறுனராந் தகீபுக் கிளைஞரை பதுஆய்ச் செய்யுமென்
றுரவர் கனையே, யிறையவ னினி லாக்கியெம் மிடத்தி லெய்திட
வருளுக வென்ன, நறுமலர்க் கமலக் கரமெடுத் தேந்தி நன்பொ
டுந் துஆவிரந் தனரால். 37

மனைகவேந் திறனு லோதிய துஆவின் படிக்குவான் புவியு
மற் றமைந்த, புதியவ னருளாற் சிலதினங் கழிந்து பொருவறு
மதிமுக மலர்ந்து, முதிர்புகழ் நபிமுன் வந்தயர் தகீபுக் கிளைஞ
ர்கள் முழுதுநற் றீனிற், கதிபெற வுற்று ரவர்களுக் குதக்கா
வெனும்பெயர் கொடுத்தனர் களித்தே. 38

பிணித்தவார் முழவு பேரிகை சங்கம் பிளிறுமேழ் கடலெ
னக் கறங்கக், களித்திடா வீர ரிருபுடை நெருங்கக் கதலிகைச்
சோலைசூ ழுடங்க, வணித்துவான் கவிகை பொன்றுமீ நிழற்ற
வலக்குளைப் புரவிமேற் கொண்டு, மணிக்குலங் கதுவு மறாது
டைச் சிகுரு னத்தெனுந் தலத்தில்வந் திறுத்தார். 39

தாயிபு சென்று மீண்ட படலம் முற்றிற்று.

ஆக படலம் 43-க்கு திருவிருத்தம் 1336.

அலிமா அம்மாள்

கலிதீர்த்த படலம்.

மலிவளஞ் செறிந்த குனைனெனும் பதியில் வந்தமுன்
னெதிர்த்தவன் றிகலிக், கலிபடர் விளைந்த திறன்மிகு வயவர்
கடும்பொடுஞ் சகலரு மீமா, னிலையுறத் தரித்த நன்னபி தாளி
னையமுற் றெழிலுறப் பணிந்து, முலையெம ரிடத்தி லுண்டவ
ரெனநன் முறைகள்கொண் டாடிவந் திருந்தார். 1

திருமலி சயிது வங்கிடத் தலிமா வெனும்பெயர் செறிந்
திடு மன்னை, யுரியகோத் திரத்தின் முதியவர் தம்மி லுயர்புகழ்
சயிதெனு முரவோர், பெரியவன் றாதர் காரண வியப்பும் பீடு
றக் குனையின்வந் ததுவும். மரியபல் பொருளுஞ் சிறைகவர்ந்
தவு மனைத்தையுங் களித்திறத் துரைத்தார். 2

காரண மனைத்தும் விரித்தருஞ் செய்யுட் கவியினாற் சொற்றிடுஞ் சொற்கேட், டாரண மிகத்தில் விளக்கிய விறசூ லருமந்து மூவகையுற் றினிதாய், வாரண மிகர்த்த வப்துல்முத் தலிபு வங்கிடத் தவர்கடம் பொருளும், பூரண மாக வெமக்குறும் பொருளு முங்கடம் பொருளெனப் புகன்றார். 3

இருவகைப் பொருளு முங்கடம் பொருளென் றிசைத்திடும் வாய்மையைக் கேட்டுப், பெருவரைப் புயத்துக் குறைஷிகள் பலரும் பிரியமுற் றிறைபவ னாதே, யரியவெம் பொருள்கடினையள வெனினு மாதிக்கு நபிக்குமே யல்லா, ஹுரியரியா ரென்ன மனத்துறுங் களிப்பா லொன்றுபட் டுரைத்தனர் திறத்தின். 4

கட்டுகிம் புரிக்கோட் டிபசிகர் சபிதுக் கிளைருரைக் களிப்புற விளித்து, வட்டவா சிதிபோற் பிடித்தருஞ் சிறையில் வைத்திடு மாக்களை யேனு, மொட்டகை முதலா யுறுபொரு ளேனு மிரண்டினி லொன்றினைத் தேர்ந்து, திட்டமுற் றுரையுந் தருதுமியா மென்னச் செப்பின ரொப்பிலா னாதர். 5

அறநெறி வழுக்காப் புகழ்பெறு முதியோ ரனைவருந் தத்தமிற் றேர்ந்து, சிறைகளை யெமக்குத் தருகவென் றுரைத்தார் திறலசு காபிகள் வதன, நிறைமதி நோக்கிச் சிறைகளை விடுமின் விடுத்திட நினைவிலார் தமக்குக், கிறையமே யருள்வோ மெனவுலகெழுங் கிளரொளி நபியுணர்த் தினரால். 6

வேரொடும் பவத்தைக் கெடுத்தற வீழ்த்து மேலவ ரியாவருந் தேர்ந்து, பாரொடு முரைத்த நபிமுனம் வந்து பைந்துணர்க் கற்பகப் பதியீர், சீரொடு மியாங்கள் பிடித்திடுஞ் சிறையை விடுப்பது சம்மத மென்றார், போர்கெழுந் திறலீர் சிறைகளைக் கூட்டி வம்மென விடுத்தனர் புகழோர். 7

கடியரண் வைத்த சிறைகளை மீட்டுக் கழல்புனை கருங்கைவா ளுழவர், கொடியினிற் கொணர்ந்து விட்டன ரவர்க ளுடனிரு நோக்கமுங் கருணை, குடியுறு மலிமா பெறுமகள் சைமக வெனுந்திருப் பேர்கொளு மாதாம், வடிவுறு நபிமுன் வந்தியா தமக்கு முலைகுடித் துணையென மேவுன்றார். 8

முலைகுடித் துணையென் றுரைத்தவர் தமக்கு முகம்மது நபிதிரு மெய்யி, லிலகிடப் புனைந்த மாமையார்த் தொளிரு

யிரும்பரி வட்டம தெடுத்து, நலமொழி பகர்ந்தின் கிருமிதி
லென்ன நவிர்முகி லெனக்கொடை நாலே, யுலகிடை யெவர்க்குந்
திருங்கர தலத்தால் விரித்தன ரதினுவந் திருந்தார். 9

கற்புறை யலிமா வெனுந்திருத் தாயுங் கண்ணெதிர் வந்த
னர் கண்டு, பொற்பதிக் கரசாய் வருநபி யிறசூ லெழுந்தெதிர்
போந்தழைத் திருத்தா, விற்புனை யேகா வொலியலை விரித்தின்
னிருமென நன்மொழி யிசைத்தா, ரற்புத முறமே யெவர்க்கு
ந்தா யகமா மன்னையு மதன்மிசை யிருந்தார். 10

திறன்மிகு பொருளர் சொனர்ந்துவந் தற்ற நிறைசளா
ருயிருஞ் செங்கட், டொறுவிரு பானுன் காயிர நாற்பா னுயிரத்
திக்குமேற் றருவை, மறுவறு மலிமா முகத்துக்காய் விட்டு வந்
தகா லாயிரக் தூக்கு, நிறைவுறு மூக்கி யாவுநன், குடனே நேய
முற் றுதவினா ரன்றே. 11

மூவுல கெங்கும் புகழ்வள ரிறசூல் முகம்மது நபிதமக்
கென்று, மேவல்செய் கின்ற தொழும்பினி லொருத்த னொருத்
திக்கு மியன்மண முடித்துப், பூவகத் தமுக மூலிருடித் துணை
யாய்ப் பொருந்துசை மாவவர் தமக்குக், காவல ரிறசூல் கிபத்தெ
னக் கொடுத்துக் களிப்பொடு நகர்வயிற் சென்றார். 12

அளவறும் பொருள்கள் படைத்தன மென்ன வானந்த
வெள்ளமே மீக்கொண், டுளகனி சிறப்பச் சயிதுவங் கிடந்தா
ரூர்வன சராசர மெவையுந், தெளிவுறக் களிப்பாற் புகழ்நபி யிற
சூல் சேவடி மலர்த்துணை யிறைஞ்சி, வளமலி தங்க ணகர்வயிற்
சென்று மாண்புற வாழ்ந்தினி திருந்தார். 13

அலிமா அம்மாள்

களித்த படலம் முற்றிற்று.

ஆக படலம் 44க்கு திருவிருத்தம் 1349.

தாயுபு நகரத்தார்

ஈமான்கொண்ட படலம்.

கஞ்சமென் பொகுட்டிற் றுயில்வன சன்னக் கழனிசூழ்
குனைனெனும் பதியில், வஞ்சகச் செருக்கெய் திகலிமுந் தோடி
வானுறத் தாயுபி லோங்கு, மிஞ்சியி னுறைந்த மாலிக்கென் பவ
ன்சொல் விளவலா மவுபுவென் பவர்க்கு, நஞ்சினை யமுதா யயி
ன்றவர் தூது நடத்தினர் சிலமொழி நவின்றே. 1

தானத்தி விருத்தாந் தீனிலே வந்தாற் சமரினிற் றன்னிடங்
கவர்ந்த, வினமில் பொருளுந் தன்கிளை யதனி லெய்திய சிறை
யுமீ தன்றிக், கூன்முது குறுந்தாட் சிறுசெவிச் செங்கட் குறிய
வாற் சோகமோர் நூறு, மானன மலரத் தருவமியா மென்னச்
சொல்லெனச் சொலியனுப் பினரால். 2

விடுத்தகதூ தவன்போய் நபிமொழி யனைத்தும் விரித்திட
மகிழ்வொடுங் கேட்டுத், தொடுத்தகவிற் சரம்போ லந்தரங் கத்
திற் றடைவையு மடுக்களு நீந்தி, யடுத்தவர் திறசூல் பதமல
ரிறைஞ்சி யருங்கலி மாவெனு மமுத, மடுத்தினி தருந்தித் தீனிலே
தரித்தார் மடங்கலு மடங்கிய திறத்தார். 3

உரைத்தசொற் றவறு முகம்மது நபிநூ ருத்தவின ரறுதி
யின் படியா, விரைத்தபல் பொருளுஞ் சிறைகளும் பின்னர்
நினைப்புளால் கமழ்க்கவிர் நெடுவேற், றரித்தபொற் செங்கை யபு
வெனும் வீரர் தருக்குறு மமுதங்க ளித்துக், குருத்தசொற்
கவியாற் பூயம்புள கெறிப்பக் கூறினர் நபிதமை வியந்தே. 4

அவனிமீக் கூறு மபுவுவென் பவருக் கரியகற் றலைமையு மரு
ளிச், சுவரெயிற் றாயு பினிலுறு தசீபுக் கிளைஞரைத் தகள்பட
மாய்த்தாக், கவர்படாத் தீனை நிறுத்திநீ ரவணிற் கருதலர்க் கரி
யென விருமென், றுவமையொன் றில்லான் றூதெனு மிறசூ
லுவப்பொடு மனுப்பின ரன்றே. 5

தரைத்தலத் தொருகோ லோச்சிய விரசூல் தாமரைத் தாளிணை யிறைஞ்சிக், கருத்துவந் தெழுந்து வாவியுங் கடறுங் கழனியும் வரைகளுங் கடந்து, இருத்திய தாயு பெனுநகர் புகுந்து செறுநரைக் களைந்துதீன் பெருக்கி, மருத்தொடைப் புயங்கள் புளகெழ விருந்தா ரபுவெனும் பெயருடை வள்ளல். 6

தாயுபு நகரத்தாரீமான்கொண்ட படலம் முற்றிற்று.

ஆக படலம் 45-க்கு திருவிருத்தம் 1355.

வெகுமதி யளித்த படலம்.

அணங்கரா வுடனே யெதிர்மொழி கொடுத்த வருமறை முகம்மது நபினர், மனக்கமழ் புயத்துத் திறலசு காபி மார்களை மகிழ்வுற நோக்கி, யிணையிலாக் குபிரர் மாட்டுமுன் கொண்டிருப்பொரு ளனைத்தையு மின்னே, குணங்கொளும் படிக்குக் கொண்டிவண் வம்மென் றுரைத்தனர் கொணர்ந்தனர் கடிதின்.

உலப்புயத் தறபித் தலைவர்க டமக்கு முயர்குலக் காக்கட லவர்களுக்குங், கலப்பறுந் தீனி னெறுமலர் தமக்குங் கருத்தினிற் களங்கமற் றினன், பலத்திலார் தமக்கு மொவ்வொரு வருக்குப் பிறங்கமேனர் தொறுவொரு நூறுங், குலந்தொரு வினத்தி னெண்ணுறுத் தருங் கொடுத்தனர் கெடுத்தனர் கலியே. 2

கறுபெறு மாசு அதவபா சுபியான் கவினுறை யாதரு ஞபுவான், றுறுபுகழ் குசையின் றவத்துறு முசைபறு தோமறு காமிசு மகிழ்வின், பெறுமக னிக்கிற் குடனிவர் நால்வ ரிவர்களி லொவ்வொரு வருக்கு, மறிகளிற் சிறிதுந் தொறுவொரு நூறும் வழங்கின ருளங்களி கொளவே. 3

அடுந்திறன் மிறுத்தா சுதலிய வப்பா செறும் பெய ரான்டனை தமக்கு, நெடுங்களித் தொறுவி லொருவினிற் சிறிது கொடுத்தனர் செறிவளர் நபியே, திடந்தரு மெற்குக் குறைத்ததென் னென்னச் செழும்பொருட் கவிதையாற் சொற்றூர், மடந்திரா நான்கு தலைவர்க்கு மீய்ந்த வாறிவர் தமக்குநல் கினரால்,

நினைக்குநல் லறிவு கனவினு மறியா நிலையுறும் வேடரி லொருவன், கனக்குவ டெனுங்கோள் புளகெழ வந்து கவினுறு முகம் மகிழ்த யேழை, யெனக்குமெய் வளவுந் தருதிரென் றுரைப்ப விருகுவட் டிடையினி னின்ற, வனப்புற வொருவு நினக்கென வளித்தார் வானறு சேதிப வள்ளல். ரு

பெற்றவத் தகர்க ளனைத்தையுங் கொடுபோய்ப் பெருகிய வானந்தக் களிப்பா, லுற்றதன் குடும்பத் தியாவையுங் கூவி யுயர் புகழ் நபியிறசூல்த, நற்றவத் தீவிற் புகுமவர்க் கெல்லா நல்வினை யின்னவா றென்று, சாற்றமில் சொற்கேட் டுறவிகள் பலரு மருமறை பதத்தில்வந் தடைந்தார். சு

வந்தவர் திறைஞ்சிக் கேட்டவர்க் கெல்லா மகிழ்வொடுங் குறைவிலா வண்ண, மிந்தவா றளித்தார் ஜம்றத்தென் றோங்குந் தருவயி னெய்திடி மனவும், மிந்திவந் தவர்கள் பெறுவதற் கேதும் பிறிதிலை யெனும்பய னோர்ந்து, சந்தமென் புயத்தி னபிதரித் திருந்த சாலுவை தனைப்பறித் தனரால். எ

கவர்ந்திடுந் துகிலை நல்குமிக் கடறிற் கார்முகில் கன்வளர் தருக்கள், குவிந்திடு மனைகள் கண்டகத் தொகைகள் கூறுமொன் னிக்கைமட் டென்பா, லவந்தரு பொருள்க ளெறிதுமில் லவைநல் குவந்சாதமீ தன்றி, யெவர்க்கரு பகீலொன் றெம்மிடத் தில்லைப் பொய்மையு முரைத்திலே மென்றார். அ

வாய்மைக ளுரைப்பக் கேட்டமெக் கொருவன் வந்துநின் றெனக்குமே தெனிலு, மீயுமென் றுரைத்தா, னென்றுமுக மிடத்தி லின்றென வுரைத்தசொற் கேட்டுக், காயமும் விரும்பு மனிவழும் பிறவுங் காத்தவன் முகத்தினுக் கன்றி, யீயுப சமைந்தர், முகத்தினுக் காக விருப்பொடு நல்கினீ ரென்றான். கூ

மதிகதிர் தவழுந் தூரிசு நாவில் வல்லவ னுடன் வசனித்த சுதிமறை மூசா நபிகவு மவரை யிதனினும் பழங்கதேறுப் செய்தா, ரிதமுற வகைகள் பொறுத்தன ரவருக் கிறையது மத்தனூர் வாமொன், றதிவித நதியின் மான்பிற கெழுந்த வருணா நபியுரைத் தனரால். 10

இட்டகாத் கழுதும் வலக்கையிற் கோலு மிடக்கையிற் சிலையுமொன் றேந்திக், கட்டுறு வேடர் குலத்திலோ ரறபி கடிதினி

னபிமுனம் வந்து, விட்டரு வேத முகம்மதே நீதம் விளங்கிடச் செய்மினீ ரென்று, னட்டுநன் னீத நாஞ்செயா தொழியி னியார்செய்வா ரெனநவின் றனரால். 11

அள்ளிலை வடிவேல் கரதலத் தேந்து மரியவன் சாரிக டமக்குக், கொள்ளைகொள் பொருளிற் றிணையள வேனுங் கொடுத்திடாக் குறையிறுற் சிலபேர், வெள்ள மொத் ததிர மொலித்திட வாளால் வெட்டியும் பங்கெமக் கருள, றென்னினர் குறைஷிக் குலத்தவர்க் களித்தார் நபியிறை பொறுமுத லென்றார். 12

பங்கிடாக் குறையாற் பகர்ந்தசொற் கேட்டுப் பனிமதி தனையிரு விசும்பிற், றங்கிடா தழைத்த மறைநபி யிறசூல் தமவொடன் சாரிக டம்மை, யங்குற வழைத்து வைத்தினி திருத்தி யவிசொளி யின்பறி லேறிச், செங்கனி யமுதந் ததும்பிய [illegible]பா யோதிநல் லறிவுசெப் பினரால். 13

திறனுறு மன்சா ரிகளெனுங் குழுஉக்கா டெறுநல வதிபிழைத் திருந்தீ, ரறிவுற வெமைக்கொண் டொருபொரு ளுமக்கீக் கறநெறி காட்டின தின்றோ, யுறவினன் முறையா ரொருவருக் கொருவ ரோவிடாப் பகைவிளைத் திருந்தீர், மறனற வெமைக்கொண் டேகனு முள்ள மொருப்பட வைத்தது மின்றோ. 14

நல்குர வடைந்தின் கெளியரா யிருந்த நவைகெட நமைக்கொடு முதலோன், செல்வரா யிருக்கச் செய்ததுமின்றோ வெனத்திரு நபிவருக் குரைத்தா, ரல்கலி லொவ்வோ நன்றிக டன்னையருளொடுஞ் சொலுஞ்சொலுந் தோறு, மல்குமோர் முதலு நபியுகன் னன்றி செய்தன ரெனவவர் மகின்றார். 15

மற்றவ ரியாருந் தகருடன் றெறுவும் வழங்கிடக் கொண்டனர் நீங்கள், குற்றமி லெம்மைக் கொடுகில வுள்ளக் குறிப்பினிற் சம்மத மின்றோ, பொற்றிடுங் கிசுறத் தின்றெனி லியாமு முங்களி லொருவராய்ப் பிரிய, முற்றினி திருப்போ மென்னவு மறுத்து முவப்புடன் சிலமொழி சொல்வார். 16

மன்பதைக் குழுஉக்கண் முற்றமோர் வழியி னடக்கினும் நபிகளிடை நீங்க, எண்பறச் செலுஞ்சி ரதரிடை நடப்போ மஞ்சலீ ருட்பட மெமக்குப், பின்புமற் றெவரு நம்பறப் போர்வை யெழிறரு பிசு நீவிர், வன்புறு மின்ன லனைத்தவீர் யானீன் னாக்கபதிபு தர்க்கமின் னெனவும். 17

பொறுத்திடா வருறுக் குளம்பொருந் தினிரேற் பொற்பு
றுந் தாளவெண் முரற், சிறுத்தநுண் மருங்குற் கனிபிதழ்ச்
செவ்வாய்த் தேவரம் பையர்தரண் மலிந்த, மறுத்தராத் துற
க்க வமுதங்க டதும்பி மணித்திர ளலைகொழித் தெறியு, நறைத்
தடக் கவுதற் கவுதரி னம்மை நன் ஞனவீ ரென்னவு நவின்றார்.18

வழூவுரு விறருல் முகம்மது மிசைழயை வல்லவன் பொறுப்
பனென் றுரைத்த, விழுமிய மொழிமி னுரைத்ததே தென்ன
வியனுறுந் நினிலே நவமா, பொழுகிய பேர்க ருரைத்தசொல்
லென்ன வுயர்புகழ் நபிதமை வியந்து, கழூவிய மணிப்பூண் புய
த்திணை யன்சா ரிகடமிற் கற்றவ ருரைத்தார். 19

கரிப்புறுங் கலிகள் கெடவவர்க் களித்த காரண மாரணத்
தினிற், றரிப்புற நவமாய் வந்தவ ரிமான் றனிற்பில றுற்றினி
தோங்க, விருப்பறக் கொடுத்தோ முமக்கியா முன்னெடன் றியம்
பினர் மேதங்கன் படிக்கும், பருப்பத முரைத்தோ ருலகமீக்
கூறிப் பரவுமன் சாரிக டமக்கே. 20

வெருமதி யளித்த படலம் முற்றிற்று.

ஆக படலம் 46-க்கு திருவிருத்தம் 1375.

மக்காஷரீபில்

உம்றாச்செய்த படலம்.

விரித்த தண்மலர்த் தருவெனுஞ் ஜெம்றத்தை விட்டுக்
குருத்த வான்புகழ் முகம்மது பரியிசைக் கொண்டு
வாத்து மிக்கன காபிகள் புடைவர மறுத்துந்
திருத்து மும்ருச்செய மக்கம்வந் திறுத்தனர் செழிப்ப. 1

நந்து லாந்தடந் திகழ்தரு ஸாவெனு நகரிற்
சந்து லாம்புயப் பனிசைபான் கிளைஞர்க டருக்கிற்
புந்தி கூர்தர வமைத்தபு சாவெனும் புத்தை
பெந்த நாவிலு மருச்சனை செய்திறைஞ் சுவரால். 2

ஒலிது தன்மகன் காலிதென் பவர்தமை யுலகிற்
கலிகெ டுத்தவ ரழைத்தபு சாவெனுங் கல்லை
வலிதி னிற்புகுந் துடைத்திவண் வம்மென விடுத்தார்
புலிநி கர்த்திடப் போயுடைத் தெறிந்தனர் புகழோர். 3

அணங்கு றங்குழை துக்கினை யாரணு தினமும்
வணங்கி யேத்திய சுவாவெனும் புத்தினை மாய்க்க
விணங்கு மாசசொல் லம்றென்ற மேந்தலை விடுத்தார்
சுணங்கு வெவ்கரி யெனப்புகுந் துடைத்தனர் துணிவின். 4

உருத்தி ருத்திய லொாதெனும் புத்தினை புவந்து
கருந்து வைத்தினி திறைஞ்சினர் கலபெனுங் குலத்தார்
பொருத் தெகுதினை முறைதுமித் திரர்நிதம் புகழ்ந்தார்
திருந்தெ கூக்கைமந் தறன்கினை இனந்தொழு திருந்தார். 5

கெடுந சீறெனும் புத்தினை யெரிகிடந் தாழும்
படும தாபுடைக் குமைறுவாஞ் கிடத்தவர் பணிக்கார்
கடும னுத்தெனும் புத்தினைக் கசிதெனு நட்டோர்
கொடுக டற்புவி தனிளிதந் தொழுதிறைஞ் சினரால். 6

வஞ்ச கப்படி றுறயிபு லீசவன் னைகத்
தஞ்ச மாக்குபல் தாயிலேத் தசாவெனத் தரும்போ
துஞ்ச மூன்றுபீன்ஞ் சிலையயுந் தொழுதனர் சுத்தி
விஞ்சி மேவிய மக்கநன் னகரிடை யிருந்தோர். 7

பூவி னுறிய துல்கல சத்தெனும் புத்தைப்
பாவி யாங்கது முக்கினை யார்களும் பவற்க
மேவி யாடவு சுக்கினை யவர்களும் விளங்க
வாவி நீர்சொரிந் தேத்தினர் வைகலு மகிழ்ந்தே. 8

இப்ப டித்திசை திக்கொரு நான்கினு மிருந்த
தப்ப டுஞ்சிலை யினத்தையுந் தகர்த்தவம் மெனவே
மைப்பு யற்குடை யிறசுபி மகிழ்ந்தனை வருத்தா
ரப்ப டிப்படர்ந் தடித்திடைத் தரசர்வந் தனரால். 9

தடைத்த வெண்குரு கினைக்கிழ நாரைக டழுவு
மடைக்க ணூற்றசெய் வளஞ்செறி மக்கமா நகர்க்குத்
தொடைப்பு யத்திற குல்பபி புனைதருள் சுதனை
லடற்றி றத்தபுத் தாபினை யரசென வைத்தார். 10

பலக லைக்கியா னங்களும் பறுவுசுன் னத்து
மிலகு மித்தகை யறிவெலா மியாவர்க்கு மியம்பி
நலனு றத்திருத் திடுமெனச் செவ்வவர் கல்கு
முலகு றும்புகழ் மஆதையே வைத்தன ருரவோர். 11

உரன டக்குமைம் பொறிகளும் புலன்களு மொடுக்கிப்
பரனை நித்தலும் பணிந்திடப் படியினி லமைத்தக்
கரம கத்திய கஃபத்துல் லாதனை யேழு
தரமு வப்பொடுஞ் சுற்றியே தவாபுவந் தவனின். 12

முடிக்க வேண்டிய நெறியினும் முறைவயு முடித்து
வடிக்கும் வெண்சுதை மாமதின் மக்கமா நகர்விட்
டடிக்குந் தெண்டிரைத் தடமதி னுகர்க் கடைப்ப
படிக்க னிற்பதம் பட்டாகபி யெழுந்தனர் பரிவின். 13

மக்கா ஷரீபில்

உம்றாச்செய்தபடலம் முற்றிற்று.

ஆக படலம் 47 க்கு திருவிருத்தம் 1888.

மதீனமுநவ்வருபுக்குபடலம்.

குூாக தத்திர ணடமிடப் பல்லியங் குமுற
மரக தக்கிரிப் புயத்திணை வயவர்க ணெருங்கப்
பாக திச்சுரர் தேமுறு புதுமலர் பதுமக்
கரத லங்களி லேந்தியே கவினுறச் சொரிய. 1

குடைகொ டித்திரண் மிடைந்திடக் கொழுங்கவி வாணர்
புகடமி னிற்பரத் தின்னிசைக் கவிமழை பொழியக்
கடைம ணிப்பிடிக் கவரிக ளிருபுற மிரட்ட
நடன வாம்பரி மீதினிற் கொண்டனர் நபியே. 2

கொம்பி னந்திவைத் தேந்திய குவ்வெலா மதிரப்
பம்பி மீமெழுந் துகளிறுற் பரிதியு மறைய
வம்பி ருந்தொடை தயல்வர வாம்பரி கடவி
யம்பு விக்கிறை நடத்தின ராசைக ளெங்க. 3

சீத நன்னிழற் பொழில்களும் பழனமுஞ் செங்கே
ழாத வற்கலர் விகசித வம்புயத் தடமும்
போத கத்திரன் முதற்பல விலங்குறை பொருப்பு
மாத வத்தினர் கடந்தகர் தொலைத்தனர் மகிழ்ந்தே. 4

இன்னை நன்மறை யொத்தலைப் பசியவாய்க் காரிப்
பிள்ளை கேட்டிளங் குயில்களுக் கோதரப் பிரியங்
கொள்ளுங் கார்க்கரு வீனவிழிக் கூழைமென் மயில்க
ளுள்ளி யாலும்பூ மலர்சொரி சோலைமே வினரால். 5

வந்த செய்தியை மதீனகன் னகரவ ரோர்ந்து
கந்த மென்புயம் புளகெழக் கடைத்தலை கடந்து
சிந்து நேர்பெருந் தெருவெலாந் திடாறத் திருத்திப்
பந்த ரிட்டனர் பன்மலர் வேய்ந்தனர் பலவே. 6

பூக மாதனை தெங்கிளங் கதலிபூங் கரும்பு
மாக மட்டிரு பாகமு மளவுற நவேரிப்
பாகு தும்பல கனிகளும் பந்தரிற் றூக்கிச்
சேக நக்கமழ் கருப்புரத் தீபமுஞ் செறித்தார். 7

சிகர மேவிய மேனிலை மதிற்சுதை தீற்றிப்
பகர ருங்கவின் சித்திரம் பலபல வெழுதி
மகர தோரணம் வயின்வயின் வாலுற நிறுவி
நிகரின் மாமணிக் கும்பங்கள் கடைதொறு நிரைத்தார். 8

முல்லை யீன்றவெண் முகையினும் புலியுகிர் தனினுஞ்
சொல்லு நேரி யடிசிலு மறுசுவைக் கறிய
மெல்லி யற்றமுப் பால்கனி தேனொடு மெவர்க்குந்
செல்லு மான்றரு மனையினுங் கொடுத்தனர் செழிக்க. 9

இத்த கைச்சிறப் புவனையோ ரெட்டென வியற்றி
மத்த கக்கர டக்கரி மன்னவர் வளியிற்
றத்து வாம்பரி மிசையினிற் றருக்கொடுஞ் சென்று
முத்தி ரைப்புய முகம்மது நபிபதந் தாழ்ந்தார். 10

சரணி றைஞ்சினின் றவர்க்குறு நன்மொழி சாற்றி
யருண்மி குத்தகட் கடைநபி யவிர்சுடர் வாளா
லிருண்மு ருக்கிய மதியென வெழுந்தன ரியாருந்
திரணக் கேத்திரக் கணமெனப் புடைசெறிந் திடவே. 11

மடம டென்றபல் வாக்கிய முழங்கிட மைக்கார்க்
குடைக விப்பவெண் கதலிகை சோலையிற் குலைக்
கடைம ணிப்பிடிக் கவரிக ளிரட்டுறக் கலின
வடல்வ யப்பரி நடைபெயர்த் தரணகம் புகுந்தார். 12

கொஞ்சு வாம்பரி மன்னவர் புண்டரக் கோதில்
பஞ்ச வன்னமேஞ் செறிந்தபா வாடைக ளெறிய
மஞ்சு வார்குழன் மடந்தையர் குரவைகள் முழக்க
வெஞ்ச லின்னெடுந் தெருத்தலை யேகும்பப் போழ்தின். 13

கச்சு மாத்தைகயின் முகற்பிறை குடக்கொழுந் கண்டு
பச்சை வாம்பரி வயவர்பான் மதிமுக நோக்கி
யுச்சி யான்றவ மும்மனை செல்கென வுரைத்துச்
செச்சை யொண்புய முகம்மது நபிமனை சேர்ந்தார். 14

மதீனமு நவ்வருபுக்கு படலம் முற்றிற்று.

ஆகப் படலம் 48-க்கு திருவிருத்தம் 1402.

———

கம்பப்புலவர்

ஈமான்கொண்ட படலம்.

சொல்லெழுத் தியாப்பு முன்னூற் பொருளலங் காரந் தேர்ந்து
கல்வியின் றுறைகை போய கம்பெனும் புலவோன் றீனிற்
புல்லிநற் கலிமா வோதிப் புகழ்நபிக் கீமான் கொண்டு
பல்பொருட் பானச ஆதைப் பகர்ந்துவீ டுறைதல் சொல்வாம். 1

நசையுணர் தம்பின் மிக்க நபியுல்லா பேரி னுறும்
வசையுறும் பயித்துச் சொல்லி மன்றினின் பொதியு நான்கு
திசையினுஞ் சென்று சென்று செவிகொளாப் பழிப்பும் பேசி
யிசைகொளு மக்க நாட்டி லிருந்தனன் றெவித்த நீரான். 2

கலைக்கடற் கம்பு பின்னென் வசைமொழிக் கருதாம் பேரான்
மலைத்திட வுபாய தின்போன் வள்ளலின் னபிநற் றீனி
லைத்துடன் புகுந்த நாளு நற்றவம் புரிந்து வாரித்
தலத்தவ ரியாரும் போற்ற விருந்தனர் தருக்குற் றோங்க. 3

இருக்கின்ற நாளி லோர்நா ளிருவிசும் புழியிற் றூவுங்
கருக்கொண்டன் மானச் செய்யுட் கவிமழை பொழிந்து சீர்த்திப்
பெருக்கின்ற கம்பன் போர்க்குப் பின்னவர் வருந்தி யுள்ள
முருக்கின்ற முடங்க லொன்று வரைந்தன ருணாய வன்றே. 4

கோடுறு மறைகள் காட்டுங் குருநபி மக்கம் வந்து
பீடுறப் பிடிக்கு நான்முன் பிணக்குறும் வசைகள் சொல்லிப்
பாடின பேதைத் தீம்மைப் பருவரல் விளைத்த பேதை
நீடுசெங் கதிர்செய் வாளாற் றுணித்தனர் நிணங்கள் சிந்த. 5

தன்குறாம் பையினைப் போலத் தனக்குளாம் விருப்ப முண்டேற்
பொன்குல வுபய தின்போட் புனைகெழு வயிடம் விட்டு
நன்குற வாசில் வந்து நான்மறை நபியுல் லாதந்
தென்கொளுங் கமல பாதஞ் சேர்ந்தருள் பெறுதி ரென்றும். 6

அவிர்க்கெவ ரிடர்செய் தாலும் பொறுத்தருள் செய்வாரென்று
முவப்பொடு மெய்யொ றித்துமற்றோ ரொற்றனைக் கையளித்தார் வாங்கிக்
கவர்ப்படு மதகும் வெப்புக் கானுற நீக்கிக் கல்விச்
சுவைக்கடற் கம்பனைக் கண்டு தொழுதவன் கரத்தி லீய்ந்தான். 7

பத்திரம் வாசித் தோர்ந்து பண்பறு வுக்சைறென் போர்மென்
மெத்தவுங் கோபமாக விருப்புறு மதுமூ னென்ன
வுய்த்தவ ருடனே கூடி யுறவுகொண் டன்றே ருண்ட
பொய்த்தநீ மாயக் கள்ளைப் பொசித்தன்ன ருறு மென்றும். 8

தந்தைதாய் நடந்த பாதை சறுகிமுட் கடறில் வீழ்ந்த
புந்தியை யென்ன சொல்வே னென்னவும் பொறுத்து முன்னம்
வந்தவன் காத்தி லோலை வழங்கினன் வாங்கி யேகி
விந்தைசேர் மதீனம் புக்கி வசைநிடம் விரும்பி யீய்ந்தான். 9

ஓலையை வாங்கி யொல்லை யொருதிரு முதலோன் றூதர்
பாலினிற் கொணர்ந்து நீட்டும் பாசுரம் விரித்து ரைத்தார்
வேலைசூ ழுலக மேழும் விண்ணுல கேழும் போற்று
மாலகன் னபியுல் லாகேட் டமுதவாய் மலர்ந்து சொல்வார். 10

ஒத்தளத் தெம்மை மதுமூ னென்றசொ லுண்மை யிந்தப்
பத்திரம் வரைந்தோ னாகாப் பழிப்புடைப் பொய்யன் பாரி
லெத்தலத் தெவர்கண் டாலு பீர்ந்திடு மவனை யென்ன
முத்திரை புயத்தி லுற்ற முகம்மது நபிசொன் னாரால். 11

பொய்யனென் றுரைத்துத் தன்னைப் புவியிடத் தெவர்கண் டாலு
மெய்யிற வீழ்த்து மென்ன விறலச காபி யார்கட்
கையமொன் றின்றித் தூத ரருளின ரதனை யொல்லை
மையுறுங் குபிரை நீக்கி வருகைவயே னன்ற தாமால். 12

வந்துறு திருக்கி லாவி மாய்ந்திடு முண்மை யென்ன
விந்தவா சகங்க ளெல்லா மேட்டினிற் பொறித்து மீள
வந்தரங் கத்தோ ரொற்றன் கரத்தளித் தனுப்பச் சென்று
கந்தர மனைய செங்கைக் கஃபுகை யளித்தா னன்றே. 13

இன்பமோ டல்ல நீட்டு மேட்டினிற் செய்தி யன்றேன்
முன்புற விருந்து ணர்ந்தோர் முற்றும்வற் புறுத்த வஞ்சித்
தன்பதி நீங்கி யல்லேற் றடமதீ னவின் முன்ன
மன்பனுஞ் சகைநாக் கூட்டத் தொருவருண் டவரிற் புக்கார். 14

புக்கியங் கவரைக் கண்டு புரவலோ யென்னைக் கூட்டி
மைக்குடை கவித்த வள்ளன் முகம்மது நபியுல் லாதம்
பக்கல்சென் றவரைக் காட்டு மெனுமுனம் பரிவிற் கூட்டி
மிக்குறச் சென்று ருள்ளத் தறிவெலா மிருந்து மோலோர். 15

மின்றரு கதிர்வெண் சுற்றை வெண்மதி தவழ்ந்து லாவக்
குன்றென வமைத்த பள்ளி வாயலிற் குறுகும் போதி
லன்றிற சூறல் லாவு மன்பருஞ் சுபுஹு வேய
மொன்றிடத் தொழக்கண்டார்க ளொண்மையி லிறையைப்போற்றி

பழுதறும் வேத நாவிற் பற்றறு தோதி யோதித்
தொழுதபின் பவர்தா மாதி தூதெனு நறவ மாந்தி
யுழுதுவண் டிறங்குஞ் செந்தா மரையுறழ் கரத்தாற் றாண்டி
வழுவறுங் கஃபென் றேதும் வாணர்க்குக் காட்டி னாரால். 17

பான்மறை யிறசூல் செய்ய பதமலர் புணிந்து சீதத்
தேன்மலர்க் கரங்கள் கூப்பிச் சிந்தையுட் களிப்புப் பொங்கிக்
கான்மடித் திருந்து கைமேன் மற்றொரு கைவைத் தேந்தி
நான்மறை பொருந்துந் தீனி னன்னுதற் கினிய சொல்வார். 18

இருவிசும் பமரா ராலு மிப்புவி மாக்க ளாலு
மொருவரு மின்ன தென்ன வுரைப்பதற் கரியோன் றூதாய்
வருமிற சூலே தீனின் மருவிய மாக்கட் கெல்லாந்
தருவருங் கனிக ளல்குந் தானத்துக் குரிய கோவே. 19

பதிகெடுங் கஃபென் பானும் மாட்டின்வந் தரிய பாதந்
துதிசெய்து பரவு வானேற் றெதுகெட லுடையாய்ச் சூழ்ந்த
பதியின்முன் செய்த குற்றம் பழிப்புள்ள தெனைய நீக்கிக்
கதிபெறுந் தீனிற் கூட்டுங் கருத்துயக் குளாவோ வென்றார்.

இரைந்தவெண் டிரைப்பார் மீதி லெமக்கவ னல்க டோறும்
புரிந்தபல் பிழைக ளெல்லாம் பொறுப்பது தூஉ முண்மையென்னத்
திருகத்ரு வணிய செங்கைத் தலத்துகி ரதனால் வெள்ளம்
பரந்துவட் டெடுப்பச் செய்த பார்த்திப ரருளிச் செய்தார். 21

இனியசொற் கதிரென் றூழா லிதயதா மரை மலர்ந்து
கனிமகிழ் வெய்தி யான்றுன் கஃபென நவின்றார் கேட்டிக்
கணகழ லன்சா ரீன்கள் கடும்பினி லொருவர் தூதே
வினையமுற் றிவனைக் கொல்ல விடையெனக் கருள்கவென்றார். 22

இபான்முனஞ் செய்த தீய வடுவெலாம் பொறுக்கி லுள்ளி
மான்புகுத் திடுவே னென்ன வுந்தவன் றன்னைக் கோற
றூன்பொறை யன்றே றுமுன் சகாதத்துக் கலிமாச் சொல்லித்
தீன்புகுந் தாக மோங்கித் தெளிந்தினி திருந்தார் பின்னர். 23

இலக்கண மிலக்கி யஞ்சி றெழுத்ததி கார மற்றுத்
துலக்கமுற் றமைய பான சஆதெனை நாம நாட்டி
யிலக்கிணைப் பயங்கள் விம்மப் பயித்தறு பத்து மூன்று
நிலக்குடம்வின் மாரிபோலச் சொரிந்தனர் கிட்டத் தன்றே. 24

ஒவ்வொருபயித்துச்சொல்லுஞ் சொலுந்தொறுமுவகைபொங்கி
நவ்விமெய் நயியுல் லாவு நாமவே லண்ணர் தாமுந்
செவ்விய விபுதர் தாமுஞ் சிரகம்பி தங்கள் செய்தா
ரவ்வைவி னவையிற் பின்னு மரியவோர் பயித்துச் சொன்னார்.

இன்னற்ற குலூல் லீரகி யெனும்பயித் ததனி னத்த
முன்னவன் றூதர் நீர்தா முச்சட வெறிக்கு மொள்வா
னன்னது புவியின் மாக்கள் விலேபிட வரிய தான (வான்.
பன்மணி குயிற்றிச் செம்பொற் பரிஞ்சைசவைத் தொளிருங் கூர்

ஆதிமே லைன்வான் மின்று மணியுறை செறித்தி டாது
பூதலம் வான்மற் றெங்கும் பொருவற மிளிர்வா ளொன்று
மோதிய பொருள டக்கி யுரைத்தனர் பயித்தைக் கேட்டுத்
தூதர்மெய் யுளகம் பூத்துத் துணைப்புய வரைகள் விம்மி. 27

ஆனந்தக் கடலின் மூழ்கி யவர்க்குநற் றாஆவுஞ் செய்தி
யானந்தா முகமன் கூறி வையகமீ யுத்த ரீகந்
தானந்தா ஆகவு மையாற் றருக்குற வெடுத்துப் போர்த்தார்
தேனந்தா தினிய செய்யுட் கஸீபெனும் புலவோர்க் கன்றே. ௨௮

இசைத்நவிக் கவிதை தன்னி லெமதுயிர்க் குயிராய் வாய்ந்து
திசைத்திகாந் தங்கள் போற்றுந் திறனுடை யன்சா ரீன்க
ணசைத்தரு நாமம் வைத்து நவிற்றமென் றிறசூல் கூற
வசைத்தராவச்சொற்கேட்டோர்பயித்திலமைத்துச்சொன்னார்.

அருமறைக் கிழவோர் போற்று மகப்பெறை யிறசூ லல்லா
கருதிய தாஆவின் பேற்றூர்க் கஸீபுதம் மைந்தா மைந்த
திருநிலத் தென்று மின்புற் றிசைகிறாடங் கவிதை பாடிப்
பரிசுபெற் றுவந்து வாழ்ந்தார் பரம்பொரு ளருளி னாலே. 30

அத்தநாளின் மாரி யத்தென் றறைகின்ற வன்னை பெற்ற
மைந்தமின்றன் றிபுருகி மென் றுரைக்கின்ற மதலை பாரி
னாந்தின திங்கள் முன்றன் கெனு நடக் கின்ற போதி
வித்தொளிர் நபியுல் லாதம் பிதையெனக் குருக வன்றே. 31

கஸீபுப்புலவ ரீமான்கொண்டபடலம் முற்றிற்று.

ஆக படலம் 49 க்கு திருவிருத்தம் 1433.

பூமிசக்கிணபடலம்.

ஏழுத ருந்திரன் மறைமொழி நாவினி யிருத்தி
வழுவி லாப்புகழ் படைத்திடு மாயிறை மனதிற்
பழுது றுங்கசட் டழுக்கறு முகல்லமென் பவன்புன்
கழுதி லாம்படை கொண்டுடல் வதைத்தவர் கவல்வாம்.

உலக முற்றினும் விளக்கிய வொண்கதி ரெறிக்கு
நிலவு வந்துழு மாடங்க ணிரைத்தெழு மக்கத்
தலம்பி டித்திட நபிசெலும் போதினிற் றகைய
குலமு றுந்திரு வஜிமியன் கூட்டத்தி லொருவர். 2

அடரு முக்கிரமத் தப்துல்லா வெனும்பெய ரரசி
னுடன்வ யப்பரி வீரரிற் சிலரையு மோனைக்
கடலெ னச்செலக் கூட்டியே யனுப்பினர் கனஞ்சூழ்ந்
திடைய ருப்பொழி லிலமெனுந் தலத்தினுக் கிறசூல். 3

ஆதி மேலவ னுவகையங் கடனடு மூழ்குந்
தூதர் சேவடித் துணைமலர் தொழுதினி திறைஞ்சி
யூதை போற்கதிர்ப் புரவிமேற் கொண்டுயர்ந் தோங்கும்
பூத ரப்புய வீரர்கள் புடைவர நடந்தார். 4

எல்லை யிற்செறு விலமெனுந் தலத்தினுக் கணித்தாய்ச்
செல்லும் போதினி லனுபத்து தருந்திரு மைந்தன்
மல்லு லாம்புய வாமிறென் பவரவன் வந்து
புல்லுந் தானையிற் குழுஉக்கெலாஞ் சலாமெனப் புகன்றார்.

பேறு மேவிய சலாத்தினுக் கனைவரும் பிறத்தி
கூறி னார்கட னிகர்த்தவக் குழுஉக்களி லொருவன்
றூறு பாய்மத கரிநிகர்ச் சதாமத்து மைந்த
னீறி லாக்கொடுங் கோபத்தான் முகல்லமென் பவனே. 6

ஆர மேவிய புயவனை யாமிறை நோக்கி
யீர மேவிய தினிலை சேர்க்கதே திமான்
வார மேவிடக் கொண்டுதே தெனவவர் மருங்கு
சேருகின்றகைப் பொருள்கொளு மவாவினுற் செற்றான். 7

அடல்கொ ளாயிறை வதைத்தபி னப்துல்லா வவன்விட்
டிடறா காற்சரி யெனநடந் திலமெனும் பதியிற்
றடைய றப்புகுந் தோர்னலர் தமைப்பய முறுத்தி
வடிவ மிக்குறுந் திறைபல வலதெறும்பு வாங்கி. 8

அந்த நாட்டினிற் கருமங்கள் முடித்தெழுந் தநட்டடந்
சிந்து மென்மலர்ப் பொழில்வரை செறுத்தட நீந்தி
வந்து நன்மதி னத்தினில் வளர்புக ழிறசூல்
கந்த மென்மலர்ப் புயத்தினை யிறைஞ்சினர் கவின. 9

கூர்வ யப்படை யாமிறென் பவர்தமைக் கொற்ற
வீர மிக்கமு கல்லமென் பவர்மினிர் வாளாற்
சோரி சிந்திடத் துணித்தன னென்றசொற் றனர்கேட்
டேரி லங்கிய புயநபி இலேசமுற் றிருந்தார். 10

ஈது காரிய மாகவோ ராயத்தை யாரு
மோது தற்கரி தாமிறை யொல்லையின் விடுத்தான்
நீதி லாததீ துறைந்தவர் பொருளினைந் தேடிக்
காதிக் கொல்வது பவத்தினிற் கனமென வன்றே. 11

மாய்ந்த வாமிறு வங்கிடத் தவர்சிலர் வந்து
காய்ந்த புன்மன முகல்லமென் பவன்றனைப் பழிக்குந்
தோய்ந்த பின்பிற பேர்சொலும் வழக்கெலாங் கேட்டு
வீய்ந்தி டும்பழி விளக்கினன் னபிவிளம் புவரால். 12

ஓட்டை நூறிந்தப் பிழைக்குறுந் தெண்டமிவ் வாண்டி
விட்டி டும்படி பாதியென் றிசைத்தெதி ராண்டிற்
கட்ட சோகமோ ரன்பது நல்கெனக் கனிவாய்
விட்டு ரைத்தன ரிருவரு மேவியே கினரால். 13

கயவ ரிற்கொடுங் கயவுறு முகல்லமென் பவன்பின்
வயமி ருத்திய முகம்மது நபிபதம் வந்து
தயவொ டென்பிழை பொறுத்திடத் தனியவ னிடத்தி
னயமு றுத்திய துஆச்செயு மெனநவின் றனனல். 14

வாச மேவிய தீன்முசு லீம்றனை வதைத்த
தோஷி யுன்பிழை பொறுப்பதில் லிறையவன் றாய
தேச மேவிய துஆவது செய்வது மின்றென்
றூசு மேவிலா முகம்மது நபியரு ளினரால். 15

ஆற்றுஞ் செய்தவக் கொடுமையே யுளத்தினிற் குடியாய்
முற்றி வசான முன்கனி யெனமுகங் கூம்பி
வற்றி டாத்துயர்க் கடலொடும் போயினன் வாரி
சுற்றும் பாரினின் மேவுகா ளேழிற்றுஞ் சினனால். 16

விரிந்த பூமக ளாகமின் றவன்றனை விரைவிற்
பரிந்த டக்கின ரவனுட லூனினம் பருகப்
பொருந்தி டாதுமே லுமிழ்ந்தன பொருத்திய மீண்டுந்
திருந்தத் தாழ்த்தினர் மீளவுங் கக்கின சினந்தே. 17

கண்ட மன்னவ ரல்கலுற் றவ்வயிற் குறுகி
மீண்டுந் தாழ்த்திடக் கக்கின காரண விதியென்
றுண்டு ளம்பிரு குவட்டினுக் கிடையினி லமைத்து
மீண்டு கற்கொடு மூடியோர் கிமிடத்திற் சென்றார். 18

ஆயிரு சகிதுபடலம் முற்றிற்று.

ஆக படலம் 50-க்கு திருவிருத்தம் 1451.

பற்பல் நகரத்தார் வந்து
ஈமான் கொண்ட படலம்.

மாதர்மா மறைநேர் திருத்திய விறலுல் மக்கமா நகரினைப் பிடித்தி, யோதினி லவர்க்கே வெற்றியென் றறயிக் காபிர்கள் புந்தியிற் றேர்ந்து, இதற வீமான் கொண்டன மென்றுந் திருந் திடக் கொள்ளுவோ மென்றுந், தூதுகள் விடுத்து முன்னிலை வந்துந் தூயதி னுறைந்தவா றுரைப்பாம். 1

செல்கின்ற செறுத் தொன்பதிற் சிந்தை தெளிந்தநேர் தமீன்கிளை யாரி, கில்கலில் கடல்போ லறிவெலா மோர்ந்த வாயிசு தவத்தினில் வந்து, பல்கலைக் கியான மகப்பொருள் பிறவும் படித் தெதிர் மற்றில்லை யென்னச், சொல்கின்ற கவிஞன் கலிறகென் ஆனுந் தூயசொற் கவிஞர்கள் சிலரும். 2

உறைபதி நீந்தி மதிதவழ் குடுமி யுயர்மதின் மதீனமா நகரி
னிறைநபி பதத்தா மரைபணிந் தனைவயி லிருக்கின்ற புலவிற்
கல்வி, யறைகட லனைய திறலுடைக் கச்சா வெவரொடுந் தாபி
த்து வுடனு, மறனுற விகலி வாதினுற் கவிதை மழையெனப்பெய
ழிந்தன ரன்றே. 3

சொரிந்தநற் கவிதைக் கிறைகு மவனித் தொடர்ந்துவந்
தவர்களுந் தோற்றுக், கருந்திடங் கடல்சூழ் புவியினிற் றங்கள்
கருத்துறு குபிர்க்களங் ககற்றிப், பரந்தசெங் கதிர்போ லெங்க
ணுந் துலங்கப் பழுத்தமு தொழுகிய தீனிற், றிருந்திமெய்க்
கலிமா வெனுமதை வருந்தித் தேகமுஞ் செழித்தன ரன்றே. 4

வேறு.

கடைக்கட் கருணை நபியிறசூல் கருதார் நகரியிற் கிளைஞர்
கள்வா, யடைக்கப் பொருமி னெனவீரர் இலரை விடுத்தா ரருட்
டமருக், தொடைக்கற் புயங்கள் புளகமுறத் தூங்க மேற்கொ
ண் டடவிவரை, மடுக்க டொலைந்து முடங்குழைவான் மடங்க
லெனவே நடந்தனரால். 5

நாவின் மறைநேர் பகர்ந்தறியா நகரியிற் கிளையா ருறைப
தியிற், றூவி யிறசூல் விடுத்தபடைத் தளங்க ளனைத்தர புத்தநு
கேட், டேவிலாதி யென்பவன்றன் றங்கை தனைக்கை விட்டும
னைப், பூவை யுடன்சேய் களுங்கூட்டிப் போந்தா னசுறு கனைனு
ப்பதியின். 6

ஆகா நகையிற் கிளைஞருறை பதிபோந் தடையார் தமைச்
செற்றுப், பாகார் மொழியா ருடன்மைந்தர் பண்டம் பலவும்
வௌவுகையில், வாகா மாதி யுடன்பிறந்த மங்கை தனையும் பிடி
த்திரவி, னேகா விசும்பிற் போய்மீண்ட விறசூல் பதத்திற் கொ
ணர்ந்து விட்டார். 7

விடுத்த மாதை வெண்சுதைகள் மேவும் பள்ளி வாயறனக்,
கடுத்த பட்பை தனிலமைத்தா ராண்டி னிருக்கும் போதொரு
நாட், டொடுத்த கடற்பார் முழுதேத்துந், தோன்ற லிறசூல்
போதல்கண்டு, மடுத்த சுடர்ந்தன் சசிமுகத்து மங்கை விளித்து
ச் சிலமொழிவாள். 8

கந்த மொருகா வதம்விட்டிங் கனகாம் புயத்தீ ரடியாளென், றந்தை தனையு மன்னையவ டனையு மிழந்தே னென்றமைய, லுங் கும் படைகள் கெடெம்பதிவிட் டோடி யகன்று வுதவியின்றி, யிந்த வாறிங் குறையும்பர தேசிக் கேதுங் கருதி ரென்றாள். 9

கூறை யொன்றுஞ் சிறிது தங்கக் காசுங் கொடுத்தா ருடனீமா, னுறு மகத்திற் றரித்திசுலா மானா ளவள்பா லார்கலி மேற், றேறும் புவியி னன்றமைய னுமை யியாது செப்பென்ன, மாறொன் றணுகாக் காத்தமருள் மைந்த னுதி யெனவுரைத் தான். 10

உங்கள் பதிவிட் டப்புறத்தி லோடிப் போந்த தென்னென் னத், திங்கள் பகிர்ந்த வரத்திறலீர் சிறியா ளறியே னெனவிறைஞ் சி, யங்கை கூப்பி யெழுந்து துணை யாமே னுறையும் பதியி னிற்போக், தெங்கும் புகழ்சேர் நபிமார்க்கத் தியல்பு முழுதும் விரித்துரைத்தாள். 11

சொல்லுந் தோறும் பிரியம் பொங்கித் துணைத்தோள் புளகித் தாதியென்போன், புல்லுங் குபிரா மிருள்கடிந்து புதியோன் றூதர் தமைக்காண, வல்லும் பகலு நடந்துமதீ னவி லடைந்து தேனுரை, வெல்லுங் கதிர்வா ணபிபதத்தின் மேவிக் கலிமா விளம்பினரால். 12

வந்து கலிமா வுரைத்திசுலா மருவு மாதி யென்பவர்க்கு, நந்து மணியுங் கொழித்தெறியு நதியி னெருமான் முன்னடப்பச், சிந்தை மகிழ்ந்து பின்போந்தோர் செறிக்குஞ் சங்கை மிகச்செய்தா, ரந்த முதலு நடுவுமில்லா வாதி தனையே தொழுதிருந்தார்.

ஈரம் புலராப் பணைமலிவு மெங்குஞ் செறிந்த வெமன்றேயத், தோருந் தொகுதி தொகுதிகளா யொருமித் தெழுந்து நபிபதம் வந், தாருங் கலிமா வுரைத்தினிய வறிவு பலவும் படித்திதையுஞ் சாரு மீமான் குடியிருத்தித் தத்த மகிழ்ந்தார் தனித்தனியே. 14

பற்பலநகரத்தார்வந்து

ஈமான்கொண்ட படலம் முற்றிற்று.

ஆக படலம் 51-க்கு திருவிருத்தம் 1465.

நசுறாக்கள் கப்பங்கட்டும் படலம்.

நாண்மலர்ப் பொதுளுந் தடந்திகழ் நசுறா னெனும் பெயர்
நகர்வயி னிருந்து, வாண்மிகு முன்னூன் மறைகண்முன் றுணர்
ந்த வந்நசு றானிகள் சிலபேர், தோண்மலை நிகர்க்கு நபிபதம் வந்
து தோமறு மறியமென் பவர்தாங், காணுதற் கரிய கன்னியென்
றிருக்கக் கவினுறு மவர்திரு மடியின். 1

அறந்தலை மயங்கா முதுமறைப் பொருளா யாகுமீ சாநபி
வந்து, பிறந்தன ரதனை யுலகமும் விண்ணும் பேதுறா தியற்றிய
முதல்வன், சிறந்ததன் மகனென் றுரைத்தனர் கேட்டுத் தெண்
டிரைக் கடலுடை வையந், துறந்தவ ரிறைதயா சனத்தினி லிரு
ந்த துணைப்பத நபிமுகத் துரைப்பார். 2

தந்தையொன் றின்றி யுதிக்கிறு மென்கொ றுயிலா துதிக்
கிறு மென்கொ, விந்தொளி வதன நரசென்மத் துதிக்கி லியல்
செறி முதுமறைப் பொருளர், மந்தமின் முதல்வ னமைத்தபல்
படைப்பி லவருமோர் படைப்புநற் போல, வந்தவ ரல்லால் வே
றில்லை யென்றார் வன்னசு றானிகள் மவுல்வார். 3

அடிகணீ ரெம்மோ டுரைத்தசொல் லதற்கு மடிமைக ளு
ரைத்தசொல் லதற்குந், திடமொரு கரியா முணர்ந்திட வேண்டு
மிகவெனிற் றேறிலா வெம்மை, யிடருறும் பதஆ வொன்று
நீர் செய்யி னியாங்களு மவ்வண்ண மும்மைப், படருறு பதஆச்
செய்குவோ மிவையிற் பலித்தது கரியெனப் பகர்ந்தார். 4

நன்றென நபியு முரைத்தன ரதற்க னவர்களுக் கூவினை
நாளுதயத், தென்றனர் மறுநா ளுதியோன் றுருட்டி யெங்க
ணுங் கதிர்ச்சுடர்க் கரங்கள், சென்றிட வெழுந்தான் சனுசனி
வாகன் செழுங்கரந் தங்கரம் பற்றி, வன்றிற லலியும் பத்திமா
தமையும் விரவழைத் தவர்முக நோக்கி. 5

நற்றவத் தொழுகா வழிபிழைத் திருந்த வன்னசு றானிக
டம்மை, யிற்றையிற் பதஆச் செய்குவோ நீங்க ளிருவரு மாமி
னென்றினைய, சொற்றனை விளக்கு மென்றுதம் பிறகே தோகை
யர்க் கரசியை விடுத்து, மற்றவர் பிரத்திற் கதிர்ச்சுட ரெறிக்கும்
வாளலி புலியெனத் தொடர. 6

பூரணமகிழ்வாற் பிசுபில்சொற் றெழுந்து புடையிரு மரு
ங்குமுன் பின்னுந், தாரணி விளக்குஞ் சரீ அந்த முதலாய்ச்
சாற்றிய நால்வகை சிவணக், காரண வஙியும் பாத்திரா தாமுங்
காண்முனை யிருவருந் தொடர, வாரணக் கடலா முகம்மது நயியு
மணிதிகழ் தெருத்தலைப் போந்தார். 7

வேறு.

ஒருமித் தெழுந்த முஸ்திபுகண் டோங்கும் புகழ்சேர் தெ
ன்வருணைத், தருமத் துரையாய் வருமிலப்பை நயினுன் கமலத்
தாள்பணியா, வருமித் திருந்த வொன்னலர்போன் மயங்கி வெ
ருவி நசுறாக்கள், பிரமித் திடனை தந்தமிற்றும் பேதித் துறஞ்
சொற் றிறிதுசொல்வாம். 8

தறுகாத் துணிவி னிவரெழுந்தார் சற்றேபதுஆப் புரிந்தன
ரேற், றெறுகாலெழுப்பும் பொறியழலிற் செனுத்துந் தனிர்போற்
பற்படுதா, யுறுகா லஞ்ஞைப் புகவெமன வோம்பி மாப மலர்
மாலை பறுகான் முமூனும் புயத்திறரு ளடிதாழ்ந் திறைஞ்சி மிக
ப்போற்றி. 9

சினத்தி னியற்றும் பதுஆவைச் செய்யா தொழிக யாங்க
ண்மிக, மனத்திற் பயந்தோ முமதுமொழி மாறோ மென்று ரம்
மொழிகேட், டினத்து முனைத்து மறையிறசூ லீமா னகத்திற்
கொள்ளுமென்றூர், கனத்தைக் குடையாய்க் கவித்தோரே தொ
ள்ளோர் லீமான் கருத்திலென்றூர். 10

இடுக்க ணகற்று லீமானை யுள்ளத் திருத்தா தொழிந்தி
னிரோ, ணடக்குந் திறைகள் கொடுத்திடுமி னல்கா திருக்கி லுங்க
ளுடலுடற்று மிகலியாம் புரிந்தடர்வோ முங்கள் மதிதேர்ந்
துரையினென்றூர், திடத்தி லுணர்த்தல் கேட்டவையார் சிந்தை
மயக்குற் றினிதுசொல்வார். 11

நந்து லாவுந் தடந்திகழும் பதிக்கு நாங்கள் தென்றிலகு,
மித்திர கோபப் பட்டிரண்டா யிரமோர் வருடத் திடுந்திறையா
ய்த், தந்து வருவோ மெங்களுக்குத் தலையா யொருவர் தமைக்
கூட்டிப், பந்தி பெறநீ ரனுப்புமெனப் பகர்ந்தார் நசுறா னிதன்
பலரும். 12

தருநே ரசுகா பிகடம்மிற் சுருகு தனைய னவர்தமக்கு, மரு
வுமதர்வென் பவர்தமக்கும் வழங்குற் றலைமை யளித்தவர்க், ளரு

1112A

ளுந் திறைகள் வாங்கியில னனுப்பு மெனவே யவர்களுடன், பரு
வ மழைபோற் செங்கைகவி கூட்டி விடுத்தார் பண்புற்றே. 13

அங்கை கூப்பி மலர்க்கழல் வீழ்ந் தணிமென் முடிதாழ்த்
தினிதிறைஞ்சித், திங்க ளழைத்தோ ரனுப்பமிரு செம்ம றமையு
முன்னடத்திப், பொங்கர் முதுரூற் றுடனவைகள் பொருந்துந்
தடமு முயர்மலையு, மெங்குங் கடந்து தங்கள்பதி புகுந்தா ரிரு
கோட் டிபமேய்ப்ப. 14

நசுருக்கள் கப்பங்கட்டும் படலம் முற்றிற்று.

ஆக படலம் 52-க்கு திருவிருத்தம் 1480.

அலியா ரண்ணல்

விலாயத்தரசு பெற்ற படலம்.

தன்முறை யெவரும் பூண்பான் றகுதியின் மேலோன் வாய்மை
நன்முறை கொண்டு நீத நடக்கையி னமரர் கோமான்
பன்முறை யிறங்கா நிற்பப் பாவலர் வாழ்த்தி கூற
வென்முறை நயினார் செங்கோல் விளங்கிய காலின் மாதோ. 1

மனத்திடை யொன்றுங் கூறும் வாயிடை யொன்றுஞ் செய்கை
யினத்திடை யொன்று முன்ன ரெய்திடி லொன்றுங் காணாப்
புனத்திடை யொன்றுங் கொண்டார் புத்திகன் குடையா ரென்னச்
சினத்தொடு பிரிதல் செய்வான் செறுத்ததோர் கால மன்றே. 2

பெறுதகை பெறுதற் கொன்றும் பெற்றிலாக் கொடியர் நாளு
முறுதியிற் சிறந்தார் போலு முரண்வினை யுளுற்ற லாலே
நெறிதிகழ் நபிகள் கோமான் கோன்மையி னிகழ்ந்த தண்டம்
வெறிதடர் கொடுமை யெங்கும் வேய்ந்ததோர் கால மன்றே. 3

தெளிவினு ளெழுந்த சோதி திகழ்ந்தணி மணியி னென்று
மொளிவிடு முகம்ம தென்னு முயர்பொரு ளுடன்பட் டுள்ளம்
விளிவுறும் வஞ்ச ராக்கம் வெறித்துநீக் கவிகை யோங்கும்
அளியுறும் புயனும் பேணா தகன்றதந் நகரி னன்றே. 4

மேற்றகை கொண்டார்பாலின் வெஞ்சினங் கொண்டார் தம்மைப்
போற்றிய வுயிர்க ளெல்லாம் பகைமையே புரியு மென்ப
வேற்றுமை யுடையா ராக்கை வெம்படித் திசைகள் பைங்கூழ்
பாற்றழல் பரந்து காந்தப் பருதியுஞ் சிறிற் றன்றே. 5

இருமுக முடையார் சேர்ந்தங் கிருத்தலா லறிவு முண்மை
யொருமுக முடைய பேர்க்கு முற்றன பிடுமை காந்தி
கருமுக முடையான் சொல்லுங் கடுமையின் கால மென்ன
வெருமுகப் பெயரும் பெற்ற விளைத்திடும் வினையி னன்றே. 6

தத்தமே புரியுஞ் செய்கை தாங்கிய பான்மை யாலே
சத்தமேழ் கடலிற் பாரிற் சார்வன துன்ப மென்றே
கத்தனே யுரைத்த வேக வுண்மையே காட்டற் கேது
வொத்தன வனலியென்ன வூக்கின காந்தி யன்றே. 7

வெங்குண மேனி வெய்ய வெவ்வினை யவைய வங்க
ணாங்குணக் கீழ்மை கையா ருக்கமேற் றுவிப் புன்மை
போங்குவ சீற்றங் காட்டி யுள்ளகப் புறமு * நல்கூர்
வேங்கைக டிரிவ தாலே மெலிவுள வெவர்க்கு மன்றே. 8

அளப்பில வஞ்சந் துன்னி யறிவிலா தழுக்கா றேங்கிப்
பிளப்புள சிந்தை யார்தங் கொடுமையிற் பெரிய வென்றால்
வளப்பறுஞ் சாம கால வன்மையென் னென்கோ யார்க்குங்
குளிப்பரு மிடியே தந்த வுணாக்களுங் குறைந்த மாதோ. 9

நிலையிலாப் பொருள்க ளென்று நிலையெனப் பொய்ம்மை பற்றிக்
கலையிலா ருள்ளங் காணு மாயையின் காட்சி யென்ன
வுலைவிலா மணங்கள் வாட வுடலொடு வுயிரும் வாட
எல்லிலாக் கதிரோன் வேன லிடமெலா மாடு மன்றே. 10

புலையொடு கீழ்மை நிந்தைப் புறம்பகை தருக்கம் வஞ்சங்
கொலையொடு மதக்க டம்மாற் குணக்குடி போகு மாறு
சிலைநு தன் மடவார் மற்று மத்திரி சேதா தூள்ளன்
முலையொடு வரண்ட பாகு மூரணிய பஞ்சத் தானே. 11

தன்னிலை தாங்கு மேலோர் தவநிலை தாங்கற் கூடே
புன்னிலை தாங்கும் வேகப் புன்குராத் தவழ்ந்த போதே
கன்னிலை தாங்கி நேரு நகையழி தாங்கு மாற்றூன்
மன்னிலை தாங்கும் வள்ளல் வியனிலை வழங்கி னாரால். 12

* நல்குரர்-இது மயக்கம், நல்கூர்தல்-தரித்திரப் படுதல்.

தீங்கிய பகைமை மற்ற தீவினைக் குணங்கள் பன்மை
யூங்கிய கருவி பூண்ட வெறுமைநோ யுடையோர்க் கண்பிற்
றுங்கிய மொழியே செய்கை யுகவியே தளர்த லின்றி
யோங்கிய செல்வ ரியாதே பிணிதொடு முதவு மின்கள். 13

தன்னிறன் வேறே மற்ற யிடத்திறற் சாருந் துன்ப
மென்னிறைத் தீர்ப்ப தென்று விதையமுங் கையுங் காணும்
பொன்னினு விருமைப் பேறும் புகழொடு மெய்து மன்றே
முன்னினர் முன்னி னோரே முத்தணி நகரத் தன்றே. 14

நங்கையிற் பிழைத்த போதே தந்தைதாய் நமர்நம் மைந்தர்
தங் ❋ கைய வாகு மன்றோ வாதலாற் பிறர்தம் பண்ட
மெங்கைய வென்ற லன்றோ விருங்கைய வாகின் மேன்மைச்
செங்கைய வாகு மாறாச் செல்வமும் பயனுங் கொண்டே. 15

வித்தொன்று குலையோ ரேழு குலைக்கொரு நூறு வித்தி
னெத்துணைப் பயனுங் கொண்ட தெண்மையர்க் குதவு மார்ப்பி
னொத்தன வெனினு மேலோன் வழிபடும் பொருளென்றோங்குஞ்
சத்திய மறையின் றீஞ்சொற் றவழ்ந்துலா மனத்தி னீரே. 16

எவ்வகை யுருவுஞ் செய்கை யெவ்வகை யெனினு நேர்மை
செவ்விய மனித ராத லரிதன்றோ சிறந்து நிற்ற
லொவ்வகைத் தீகையிற் றான முதவுத லுடைய ராத
லவ்வகை யெவற்றி னுக்கு மரிதரி துலகி னன்றே. 17

உள்ளுறப் படர்ந்த கார மிழிவொடு சிறுமை பூட்டு
மெள்ளலின் வறிஞோராக்கைச் செழுமையோ டெழுந்தானந்தத்
துள்ளவே வாயாற் றென்று மொருமொழி துன்ப மியாவுந்
தள்ளுமேற் கொடையிற் கொள்ளாச் செல்வத்திற் றகமையுண்டோ

ஞாலங்கண் டியற்கை யோடு நடப்பதே யொழுக்கந் தாங்கும்
கோலங்கண் டுதவ லன்றிக் 0 குறியுளங் கண்டு முற்ற
சாலங்கண் டளித்தல் வண்மை யிதனையே காத்தோர் மற்ற
மூலங்கண் டவர்கள் காவா தொன்றில முறைமை யன்றே. 19

பரந்தரு மறபு தேயம் படர்தரு நகர மன்னர்
தரந்தர மாக நேரே தாழ்ந்தனர் வேத மன்னு

❋ கைய அகரம். பன்மை விகுதி.

0 குறிபுளங்கண்டு-குறிப்புள மென்றுமாம்.

முரக்தரு மூறாமி மன்ன னிரைமனுத் திகல்கொண் டாக்கங்
கரக்தரு கின்ற வாற்ற லெழுசகங் கருண யின்னே. 20

வெம்மலி வாரு யாதி வனுளைபு மவன்றன் சொல்லு
மெய்ம்மலி கின்ற வாமே யிவற்றினுக் கெளிவு மீறும்
பொய்ம்மலி கின்றோர் கேழ்மைப் புகப்பட வமர்பொ ராது
செய்மலி யுளத்தீர் கிற்றல் புகழினுஞ் சிறப்பன் றன்றே. 21

துன்னிய மிடியின் கால மீஃதெனி னன்று தாயோன்
சொன்னயம் விறக்கத் தீட்டு கிருபரூந் தொடர்ந்த போரு
முன்னவிற் கண்டா னல்ல துறுவலி கர்ண்பா னந்த
மன்னிய படைக ளின்னே மாதவ ரெழுக வென்றார். 22

வெறுமைகோ ளகன்டா ருள்ள மெலிவுறச் செல்வர் தத்த
மறுமைநோய் தீர்ப்ப வுள்ள மானமே புரிந்தார் மாடை
யுறுபரி யொட்டைச் சும்மை புணவுமா யிரமு மைம்ப
திறுமைப்ப தெர்ன்பா னுறு மீந்தன ருதுமா னன்றே. 23

மனக்கவி பூண்டெல்லோன் வழியிடஞ் செலவு கொண்ட
தனக்கரு கூலத் தார்க்குத் தலைவனும் பொருத்தங் சொன்னக்
கனக்குடை நயினார் வேண்டிக் கையெடுத் திரக்கா ரின்ன
குனிக்கரும் வண்மை தன்னுற் குறைவில * மரபி னோர்க்கும். 24

சொலற்கரு மிடியின் சேனை முன்கொளத் தொடர்பு கொள்ள
வலக்கருத் தோங்கச் செய்த வறுமைய ரென்னப் பட்டார்
அலக்கரு மிதன்பின்யாதோர் துன்பமுன் கல்வர் ரென்ன
விலங்கலை முயன்ற நால ரியற்கையி னுரைத்தா ரன்றே. 25

வேறு.

கழு-தரு மேனியங் காவ னன்னமி
படி-தரும் புகழ்தரப் பகர்ந்த வாய்மையார்
முடி-தரு மோனைச்சயிற் றொல்லை மாநகர்க்
குடி-தரும் வீரர்கள் குழீஇயி னாரரோ. 26

தெளித்தெழு சிந்தையிற் சிறப்பு நோக்கியே
களித்தெழு புயத்தினர் கருத லாருயிர்
விளித்தெழு வேலுடை வலத்தர் வென்றியிற்
குளித்தெழு வோரெனக் குழீஇயி னாரரோ. 27

---

* மரபி னோர்க்கும் என்றீ லும்மையெச்சம் அவருக்கு மென்று கொள்க.

முறைமுறை முரசொலி முழங்கு முன்றிலி
னிறைபுகழ் நபிபதி யிபாரு நேர்ந்தனர்
பொறைதரு மாரணக் கடலைப் பொங்கலை
யறைதரும் பாற்கட லிடைந்து தாழ்கல் போல். 28

மதாசல மானுடை வயவர் நோக்கிநீர்
விதாசெறுங் கடலினின் விடுதி யாதிரென்
றாதாரண மின்றிய வொருவன் பேரொளி
யதாநபி நாயக ரறைந்திட் டாரரோ. 29

கிடைப்பரும் பதவிக ளருளுங் கேழலர்
படைப்பருங் காட்சியின் பாதம் போற்றியே
யுடைப்பல பூண்டவ ருள்ளத் தன்பொடு
புடைப்பருந் திரையெனப் பொங்கி னாரரோ. 30

குரம்படி தொடர்வயக் குரக தங்களுங்
கரம்படி தொடுமத கயங்க ளுங்கொடி
சிரம்படி யிரதமுஞ் சிற்ற மள்ளரும்
வரம்படி யின்றியே மறுகு துன்னின. 31

கதிர்சொரி வேன்மழுக் கட்கந் தோமர
மதிர்கணை வெங்கதை யால பாலமும்
விதிர்பொறி மங்குலின் மேக மீச்செல
வதிர்தலிற் றாவிக ளோங்கப் போயினார். 32

சத்திரங் கதிர்மதி தொக்கச் சார்ந்தமாள்
மொய்த்தன பதாகையு முரச மேவிறன
வித்தகர் வெளிக்கடல் வெளியுற் றதெனச்
சித்திரத் திருநகர்ப் புறத்தி லாயினார். 33

வானூர்தர் செங்கதிர் மாறு கொண்டனன்
றூனையின் றாகனிற் றயங்க லாயினன்
கானலர் திருநபி கனித்த நல்லிட
மேனலன் கொண்டவர் மேயி னாரரோ. 34

பேர்செவி யுளத்தையும் பெயர்க்கு மாண்டகை
சீர்தரு மலிபெறுஞ் செம்ம லோன்மைசா
லூர்தவ மாக்கடாழ்ந் தொழுகு மோனிலை
னேர்தர நிறுத்தனர் கருத்து மின்றுசார் 35

ஓங்கெழி லாரணத் தலவு மேம்பொரு
டாங்கெழிற் றிருமணி தவத்தின் மேன்மதி
யூங்கெழி றனக்கெழி லூட்டல் போலமர்க்
காங்கெழின் முகம்மது மணிக டாங்கினார். 36

விடுகதிர் மேருவின் குடுமி மீதொரு
சுடரவ னுதயமே யனைய தோற்றமுற்
றடுகதிர்க் கற்றையி னரும்பொற் பேரொளி
படர்சிரச் சோடெழில் பதியச் சேர்த்தினார். 37

திவசமார் கதிரொடு மதியுஞ் சிறழிக்
தவசமே பெறுமொளி வாக்கை யாலென
நவசரா சரம்புகழ் நபிக ணாயகங்
கவசமே யணித்தனர் சோதி காலவே. 38

ஆதியு மந்தமு மாக நின்றதோர்
சோதியை மரகதச் சுடர்செய் பைங்கதிர்
மேதக வருபரி வேட மென்னவை
காதுவேற் கச்சையான் மருங்கு வீக்கினார். 39

நெருங்கழ லுளத்தினர் நேர்ந்த காலையி
லொருங்கழ லவிர்த்திடு 0 மூழியின் காரண
முருங்கழ லானவ மொய்த்த பூம்பதங்
கருங்கழல் வீக்கினர் கதிக்கு நாயகர். 40

மின்னிற மலர்தரு மேரு நின்றதன்
பொன்னிறத் தருவிபோ பொலிந்த தாமெனப்
பன்னிற மடவியர் பார்வை வண்டினந்
துன்னிற மரபமுந் தோளிற் சேர்த்தினார். 41

மேடகக் கரும்புய லணிந்த மேன்மையி
னாடகத் தொடுமிரு ணங்கி முன்னுறக்
கேடகம் போக்குதற் குற்ற கேண்மையிற்
கேடகந் தோட்புறங் கிடக்கத் தாங்கினார். 42

---

0 ஊழின் காரண முருக்கழலால் எனபழமையினத் காரணத்
தின் முருக்குதல் அழற்றுதலாலெனை இவவெதுவை விடைப்படு
த்தி முன்னும பின்னும் வந்து றுவிந்திடும் மொய்த்த மென்னும்
வினைகளைக் காரிய நிகழ்ச்சக பயனுகக் கொள்க.

வேற்றுமை யெனுறுமவயவனின் மேயவ
ராற்றலுண் டைம்பெரும் பூத மஞ்சிட
ஊற்றமிக் குளவுரை வுணர்வின் பாலுள
கோற்றொடைத் தூணியும் புறத்திற் கோலினர். 43

போர்முக மாற்றலர் புந்தி போடவர்
பேர்முகம் வாட்டொணி பிறந்த வோசையின்
சீர்முக மாதவர் செய்கை பூண்டதோர்
கார்முக மிடக்கரங் கவியப் பற்றினர். 44

நோக்குங்கா லுறுபகை நோம்ப தாதிக
ணீக்குங்கா ருளமெலா நெரிய மார்பெழ
வாக்குங்கால் கதிர்தரு மடைய லாருயிர்
கோக்குங்கூ ரயில்வலக் கரத்திற் கொண்டனர். 45

காற்றுரு மனமுயிர் கதிகள் கால்களாய்
வேற்றுரு மாற்றலர் வீர மூணவை
தோற்றுரு மாங்குணத் துரங்க மேறினர்
போற்றுரு வுளமெலாம் பொருந்தி நின்றனர். 46

ஆரண வாழ்த்தொடு மழகி னந்நெறி
மாரனார் தகுதிகெட் டொடுங்க வந்ததோர்
காரண வாழ்த்தொடு ககனர் வாழ்த்தொடு
பூரண வாழ்த்தொடு புரவி யேறினர். 47

உயிரெலா மொறுங்கிப வோம்பு மேதகு
குயினிமுற் றிடக்கருங் கடலிற் கொண்டபல்
வியமுனங் கேதனங் குலவ வெங்ஙனும்
வயவர்கள் மொய்தர வள்ள றோன்றினர். 48

மேனவம் பூத்ததோர் வென்றி விண்ணவர்
சாகவம் பூப்பவே தருக்கிற் காப்புற
வானவர் மடந்தையர் மலர்க டூற்றிய
தூநவ மறுகிடம் வள்ள றோன்றினர். 49

முன்னுறு காரண முற்ற முந்திப
மன்னவ ரக்கையு ளுயிர்வந் தாலெனப்
பொன்னகர் புறத்துறு * வீயின் மேயின
ரென்னுள மலரினு மிலக்கு காதரே. 50

* வீயின்—காவின்.

திருமணத் தவப்புறம் றசவு திங்களிற்
குருதினந் தேதியோ டைந்நற் றோனகர்
மருவுற வெழுந்துமா தவர்கள் மொய்ப்பவே
பெருகிய நலத்தெழில் பிறங்க மேயினர். 51

வேறு.

வன்பிணி மாறுந் தன்னைத் தழுவொடு பழகி வஞ்ச
முன்பணி நஞ்ச முண்பான் முறைபிறா னவரிற் றீயன்
றன்பணி யுடையின் மைந்த னப்துல்லா தொடர்ந்தோ ரியாரு
மென்பணி கொடுமை யாலிப் படையொடு மெழுந்தா ரல்லார்.

படர்ந்தெழு வெம்மை தாங்கார் நிழலணி பயன்கொண் டோரு
முடம்பெழு சோம்பி னோரு முழன்றதா மதத்தி னோரு
மடர்ந்தெழு பிணிகொண் டோரு மாக்கையிற் றளர்வி னோருந்
தொடர்ந்தெழுந் திலரா லுற்ற பருஅத்து கூறந் தன்றே. 53

கதநிறை பகைமிற் றீமைக் காணரி தாகி நின்று
ருதனிடை யெடுத்துக் காட்டா ரொருவரு மில்லை யென்றே
மதனினை வுணருங் காரும் வகைவகை பிரித்து வல்லோ
னிதமற வுரைத்த வெல்லா முகம்மது மியம்பி னாரால. 54

மனக்கண்ட * வையந் தன்னை வற்றவ ரியாருங் காண்பான்
சனக்கண்ட வல்லோன் கூறுங் கதிமொழி யுணர்ந்தத் தீயோர்
சினங்கொண்டு வெஞ்சங் கொண்டு திறற்புலி வலியின் மிக்க
வினங்கண்ட வெற்றி வாட்கை யலிதமை யினைய சொன்னார்.

விரிகதிர் வேற்கை பொன்னார் வீரவெம் 0 புலியின் றூக்கா
விரிதா ளாண்மை யூக்க மில்லிட மிருக்கப் பெற்றார்
புரிதரும் வென்றி வாய்ப்பப் போர்தரும் வயவ ராங்கோல்
நெரிதரு சிந்தை யாதே நிகழ்தர வியற்று மம்மா. 56

வலிகொண்ட பதாதி வெள்ளம் வாட்டிற முறைபற் பண்ட
மலிகொண்ட பழி மன்னன் வன்றிறங் கொண்டோ வஞ்சக்
கலிகொண்டோ நெஞ்ச முட்டுங் கதிகொண்டோ தாஞ்செல்லா து
மெலிகொண்டா ரின்னன்மைக்கு மேன்மையே வியப்ப தன்றே.

தந்தையா யுயிரா கட்ட தாயராத் துணையு மாகி
வந்தவர்க் கன்பு செய்த வரிசையுன் னென்பே மின்பந்

---

* ஐயம்-அய்யம். சந்தேகம். 0 புலி-பால் டகா அலீறழிவைப் பெயர். டன்மைபேனின்றது. ஒன்றாகியபுலிகளினென்ச.

தந்திடிற் பகுக்க வல்லார் தருக்கொடு வருந்தாக். துன்ப
முந்துமேற் பகுக்கவல்லா 0 ருரிமையங் கேண்மை யாரே. 53

தனக்கொரு முறையுஞ் சேர்த்தோர் தமக்கொரு முறையு மற்ற
வினக்கொரு முறையுங் கொண்டோ வியற்கைநூ லியம்பு மம்ம
கணக்கருங் கலிகை யாருங் கற்பித்த விருப்பா லென்னி
லெனக்குண கின்ன துன்ப மென்றலைப் பால தேபோ. 59

உள்ளுறை யன்புண் டாயி னொருகுறை வெளியு ளுவாங்
கள்ளுறை யன்புண் டாயிற் கருமமும் வரும மாகுத்
தெள்ளிய நீத மீதே தேவர்தந் நீத மீதே
வள்ளலும் வள்ளற் கேற்ற மருகனு முறவு மன்றே. 60

இன்னன முறைமி காறை ரீதியொடு பகரக் கேட்டு
மன்னவர்க் கசனி யன்ன வாளலி விரைவி னன்னூற்
பன்னிய புகழின் வாய்ந்த முகம்மது பதுகம் போற்றித்
தன்னுளத் துயரிற் சொன்னூர் சாரமே பொதிந்த தாவார். 61

செப்பிழை திருத்திக் காணத் தெளிவினுட் படுத்தி யார்க்கு
மெய்ப்பிழை யாது காக்கும் வள்ளலே வீர மோங்கும்
கைப்பிழை யாது முண்டோ நம்மொடுங் கலந்து செல்லா
துப்பிழை கொண்டென் றங்க ளுளத்துறுங் கருணை யன்றோ.

சேயினர் தளர்ந்த மூப்பிற் சிறந்தவ ராக்கை யோங்கு
நோயினர் சிதடர் மற்று நொய்யபூங் கயிர வத்தின்
வாயினர் தம்மி லியாவுங் கடைகொளும் வழியோ வின்ற
தாயநும் வாரந் தானே வரும்பணி பிறந்த தன்றே. 63

பாருள வனைத்துங் காக்கும் வல்லவன் பகர்ந்த வேதச்
சீருள வெவையுங் கொண்ட தேவரீர் கிருபை யுள்ள
பேருள வீர முள்ள பிரியமுற் றளித்த வாளுங்
கோரமு முளநும் மோடுங் கொளக்கருத் துளவென் றோரால். 64

சொல்வன பொய்மை வாயாற் றுதிப்பன நிந்தை சேர்ந்து
புல்வன பகைமை குற்றம் பொறுப்பன கபடம் வெம்போர்
வெல்வன வஞ்சம் வந்து விதிப்பன மாறு பாடு
நல்வினை முரணே கொண்டா ரிருமுக நாவி னாரே. 65

நேமித்தற் கியற்கை யாயும் படிறுள நியதி கொண்டுஞ்
சேமித்த பொருளே தேனுஞ் செய்தொழில் சதியே முன்ன
ரோமித்த குணங்க ளெல்லா முரிப்பொரு ளாயி னார்கள்
காமித்த வார்த்தை யன்றி நன்னெறி கருதற் பாலார். 66

---

0 உரிமையங் கேண்மையா ரென்றது-நபி நாயகத்தை.

வெம்மையு முறைக்க ஸஃதும் வெறுமையும் பசையு மவ்வோர்
தம்மையு முரிஞர் மிக்க தகுதியும் பிரிப்பா னுகப்
பம்பின வன்றே வேறு பன்னுவ தென்கொல் ஸந்தாய்
நம்மையுங் காப்ப னெங்கு ஞாபகக் கருணை யோனே. 67

வான்செயு முறையாற் காலம் வருமதன் வலியசா னுள்ளந்
தான்செயு நகையால் வெப்பந் தரித்ததால் சூறக் கொன்றாற்
கோன்செயும் பக்கந் தன்னைற் கொதித்தன ருழலா நின்றார்
ஆங்செயுங் கதிர்வேற் றுய்கி யோங்கிய வலங்கற் றோளீர். 68

போரிலுக் கியற்ற லாகா வினம்பல பொதிந்த வாவி
நேரினுக் கியன்றி யாதோர் நெறிவுறு தோம்பி மிக்க
ஆரினுக் கடைய லாரா லொன்றைம்வக் கனுகாக் காவ
லியாரினுங் காயில் வீர மெவற்றினு மேல தன்றே. 69

இருவகைக்காப்பிலொன்றி யான்கொண்டேன் மற்றென் சிந்த
மருவகை நுமக்குத் தந்தேன் மாதவர் மூசா முன்னந்
திருவகை காரூ னுக்குச் சார்ந்தவர் தம்மைப் பேணுந்
திருவினைப் பொருந்தி லீரோ சேரலர்க் கசனி யன்னீர். 70

(கருத்துரை) இரண்டு வகையான காப்புதல் எனக்குண்டாயிருக்கிறது. அதில் ஒன்றை நான்வைத்துக் கொண்டேன். மற்றொன்று என்சிந்தையில் மருவிக்கொண் டிருக்கிறதை உமக்குத்தந்து விட்டேன். மகாதவமுடைய மூசா அலைகிஸ்ஸலாம் அவர்களுக்கு முன்பிறந்த தமையனார் ஹாறான் அலைகிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் வேதத்திற் சார்ந்தவர்களை எப்படிப் பேணிக் கொண்டார்களோ? அதுபோல நம்முடைய வேதத்திற் சேர்ந்தவர்களையும் நீர் பேணிக் கொள்ளுமென்று சத்துராதிகளுக்கு இடியேறுபோன்ற அலியாரண்ணலவர்களுக்கு நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவசல்லம் திருவுளமானார்கள்.

மேற்சொல்லப்பட்ட இரண்டுவகை காப்பில் ஒன்றுநபிமார்களைக் காக்கப்பட்ட நுபுவத்தரசு அதை நபிநாயகம்வைத்துக் கொண்டார்கள். மற்றொன்று ஒலிமார்களைக் காக்கப்பட்டவிலாயத்தரசு. அதை அலியாரண்ணலவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள்.

முன்னுதித் துயர்கட் கெல்லா முயிர்தர முரணி லாது
பின்னுதித் தனனெற் பின்னர் பிறிதொரு நபியு மில்லை
மன்னுதிப் பதனுற் காவற் றுறையிது வழங்கி னேன்றுந்
தன்னுதிப் புடனே நிற்றி யென்றனர் நிறகு லன்றே. 71

(கருத்துரை) நான் எல்லா வுயிர்களுக்கும் முன்னே உதித்து அவைகளுக்கு ஆவியாக இருக்கிறேன், அதற்கு யாதொருவிரோதமுமில்லை. எல்லா நபிமார்களுக்கும் பின்னே, உதித்துக் கடைசி நபியாக நானிருப்பதால் எனக்குப்பின் யாதொரு நபியுமில்லை. இனிமேல் ஒலிமார்களுக்கு அரசர் உதிப்பதினலே அவர் காப்புக்குடைய இதைத்தந்தேன்; உம்முடைய சந்ததியில் உதித்துவருவார். நீர்வைத்துக்கொள்ளு மென்று நபிநாயகம் சல்லல்லாகு அலைகிவ சல்லம் அலியா ரண்ண லவர்களுக்குத் திருவளமானுர்கள்.

அப்பிரகாரமே அலியா ரண்ணலவர்கள் சந்ததியில் ஒலிமார்களுக்கு இராஜாவாக கொதுபுல் அக்தாபு கௌதலுஅல்ம் மஹபூபு சுப்ஹானி அப்துல் காதர் ஜெயிலானி ஆண்டவர்கள் உதித்தார்கள். அவர்களுக்கவ் விலாயத்தரசு அலியாரண்ணலவர்களிடத்திலிருந்தது கிடைத்தது.

எம்முயி ரனைய வள்ள லிசைத்தவை புணர்ந்து ளாவுந்
தம்முயி ருடலம் பூரித் தானந்தந் ததும்ப வாய்ந்த
செம்மலர்ப் பாதம் போற்றித் திருப்பதிக் கடைந்தார் சூழ்ந்த
மெய்ம்மனம் பூத்த வள்ள லலியெனும் விறல்கொண் டாரே. 72

அலியாரண்ணல்விலாயத்தரசுபெற்றபடலம்முற்றிற்று.

ஆகபடலம் 53-க்கு திருவிருத்தம் 1552.

றூம்தலைநகர்

தயூக்கிற் றிறைகொண்ட படலம்.

காரதி ரிடியெனக் கறங்கும் பேரிகள்
பாரதிர் தரவொலித் தெழும்ப தாதிகள்
பேரதிர் முழக்கொடுஞ் சூழப் பேரொடுஞ்
சீரதி ராநெறி செம்ம லேகினார். 1

செழுமல ரொளிதிசை செறியத் தாரகை
யெழுபதி னாயிர மொய்ப்ப வேந்தெழீ
லொழுகிய முழுமதி யொன்று பொற்புடை
யொழுகிய தளத்தொடு முரவர் போந்தனார். 2

விருதணி கொடியொடு குடையு மேகமு
மொருதனி கவிப்பவொண் கவரிக் கற்றைகள்
பொருதணி மதியெனப் பொலிய நீள்கடல்
வருவது போன்றது மலிந்த சேனையே. 3

விண்ணிடந் தாவின வேக வெம்பரி
மண்ணிடம் பெயர்த்தன மத்த மாவொடு
பண்ணிட விரதமும் பதாதி யும்மவர்
கண்ணிடங் களித்தன கபீபின் சோதியே. 4

அடியிடு தோறினு மனந்த னுங்கடற்
படியுமின் றதிர்ந்தன பறிந்த தூளியாற்
பொடியுட லாயினன் பருதி போக்கெலாங்
கடிதரு மேனியங் காவ லேகினார். 5

மாதுல ரிருவரு மருங்கு சூழ்தர
வேதிய ரொருவர்பின் விளங்கித் தோன்றவெங்
காதிய வேலினர் கருத்துப் போலொளி
ராதியங் கடவுளு மழுகிற் போயினார். 6

பற்பல வாயுதம் பம்ம லாற்புகழ்
சொற்பொலி வாற்கொடி அன்ன லாலிறை
தற்பொலி வாற்செலுந் தானை மின்னிடி
மற்புயல் பருதிபூண் வாரி போன்றதே. 7

மாமல ரன்னமும் வண்டுங் கிஞ்சுகம்
வாய்மலர்ந் தேத்திய வாழ்த்தும் வண்கனித்
தேமலர் சொரிதிருச் சோலை பல்வள
மாமதி நாயக ரமுதிற் போயினார். 8

வாம்பரி மதகரி கூன வான்றொறு
கூம்பல வியமிவை யடங்கக் கொண்டன
தேம்பயின் மொழிசல லாத்தின் சீரியர்
பூம்படர் புகலொடு போதுங் காலையே. 9

கல்லினிற் பெருந்தொறு வழைத்துக் காட்டியுஞ்
சொல்லினைத் தொடர்ந்திலர் தூய சாலிகு
நல்லிய னழிக்கெதிர் நகைசெய் பாவிகள்
வல்லுடல் தழூதிக ளெங்கன் வைகினார். 10

மாறிய முறையினா னவர்கள் வன்மையா
லூறிய வினையினா லுடைய நாயகன்
மீறிய சினத்தினாற் நீங்கு மேயதாற்
பாறினர் பாழ்க்குடிப் பதியு மாயரோ. 11

அக்குடி பாழிடத் தடைய வீர்தண
உக்கிர முளவிழி யோட்ட வீர்திரு
வக்கியின் முகமறைத் தகன்மி னீவிரென்
றெக்குண * மேன்மையி னிறைவ ரோதினார். 12

பானிற முகிலிடை மதிய தங்கிய
போனிற வெண்டுகின் முகத்திற் போர்த்தணி
மேனிற நாயகர் மற்ற வீரருந்
தீநிற நிலஞ்செல விரைவிற் சென்றனர். 13

கொடுந்தலங் கடந்தபின் குளிர்ந்த பூரண
மடுந்தட வாவிமற் றடவி னீந்தியே
நெடுந்தகைத் தழூக்கென நிகழ்ந்த வெல்லையுட்
படுத்தல மியாவரும் பரிவி னாயினார். 14

வளநக ருறாயினை வணைந்த வூர்பல
வளவதன் றலையிலஃ தான்மை நன்னபி
யளவறு சேனையங் கிருக்கப் பட்டன
நளிர்புனற் பேரொலி நாலைப் போலவே. 15

* மேன்மையினி - மும்பெறு உமி.

வாசியி னிரைநிரை வகுத்து மும்மத
மாசினக் கரியணி படுத்தி வன்படைக்
காசகல் பேரிட மமைத்து வள்ளலுந்
தூசணி படங்கிடஞ் சுடரின் மேயினர். 16

வானவர் புகழ்ந்திட மலர்கள் சிந்திட
மானவர் போற்றிடப் பிறவும் வாழ்த்திடத்
தேனவி ரலங்கலஞ் செவ்வித் திண்புயக்
கோனபி யுலகெலாங் குளிர வைகினர். 17

வேறு.

ஆக்கமுங் கிளியின் கர்பா அதுறுகு அயிலத் தென்னும்
பாக்கமுன் 0 றுள்ளா ரின்னோர் பதியவன் புசன்னத் தென்பான்
காக்குநா யகன்றன் றூதர் பாசறைக் கடிதி னெய்தி
யூக்கநல் லொழுக்கத் தோடு மொளிர்மலர்ப் பாதந் தாழ்ந்தார்.

வரிசையி னுறு மேன்மை வருத்தாகன் னெறியி னற்றத்
குரியரோ வன்றி யெண்மை யூட்டுமா வரியே பூண்டு
இவேதற் குளதோ சிந்தை தெளிவொடு புகறீ ரென்ன
விரிமலர்க் கருணைபூத்த விழியினர் வினவி னாரே. 13

அணியரு ளுடையீ ரியாற்கு மன்பக முடையீர் நுந்தம்
பணியரு ளுடையார் கொண்ட பரிசென விறையே யாமுங்
கணிபொரு ளுதவா நிற்பேங் கைப்படுங் காவல் வாய்மைத்
தினிபெறப் பொறித்தன் போடுஞ் சிறப்பொடு மெருள்க வென்றார்.

பான்செறி வனஞ்சூழ்ந் தோங்கும் பாக்கமுன் றுடையார் மன்னற்
காண்செறி வலிய வீரத் தருமது நன்றென் றன்பின்
மாண்புடை யறிவின் மிக்க வொருவரை வரைக வென்று
பூண்செழுங் கனியின் வாயாற் பாசுரம் புகன்றிட் டாரால். 21

ஆதியி னிறைவ னுமை மணிபெற நுதலித் தாதி
நாதனு மவன்றூ தாய நபியுமற் றுரியோ ரின்னை
மூதல னுடையார் வேந்தன் முறைகொள வினக்க வேலை
நீதியி னளித்தார் செய்கை நிகழ்வன நிகழ்த்தக் கேண்மின். 22

பருக்திறை தருத லாலே படைக்கலம் பதிந்த தாலே
தரும்பொரு ளிலத்து மிக்க தவப்பொருள் கடவி னேயும்

---

0 உள்ளாரும்—புசன்னத் தென்பானும் என்னு மும்மைத் தொக்கது.

புகுந்துறை தடைசெய் யேமியாம் புகன்றசொன் னிலைமை மாறி
யகந்தர நிற்பர் ராயி னவைபயற் றிடுகு மன்றே. 23

பொருவிரண் டெடுத்து மியாங்கள் பறித்தவர் புதிய வாக்கை
யொருதனி விடுகு மென்ன வுரைநெறி யினிதிற் றீட்டி
வரும்வரி முன்னம் பற்றி வழியொடுங் கொடுப்ப வாங்கித்
திருநபி பாதம் போற்றிச் சென்றனர் தத்தம் பாக்கம். 24

தாங்கிய செல்வக் கோன்மை தருக்கனி கைசு றெனீபோன்
வீங்கிய பெருமை கொண்ட விறற்பதி தழுக்கின் வாய்ந்த
வோங்கெழில் தவமத் தென்னு முயாரன் காவ லாள
னாங்கிய மலையின் மிக்க வொண்புயத் துசைதி றென்போன். 25

முரண்டரு மாமா வேட்டை முயற்சியி னிரவி னுக்க
வரண்டரு புறத்தி னெய்து மவனொடு பொருது பற்றி
யிரண்டறக் கொணர்தி யென்னக் காலிதுக் கியம்பி வீரர்
திரண்டுடன் போத விட்டார் திருநபி முகம்ம தன்றே. 26

பம்பிய வேகப் பாய்மா வயவர்க டிகை மன்னர்
தம்பயி லுழியுந் தேர்ச்சித் தாவரும் வீரர் மொய்ப்ப
வம்பினும் விரைவிற் சென்றுங் கடைதன்முன் னலர்ந்த சோதி
செம்பகப் பசுங்கேழ் சுற்றி சென்றன வெருவி யன்றே. 27

நன்மொழி யுணராச் சிந்தை நகையொளி விழுந்தா லென்ன
வன்மொழி யுடையார் சீற்ற மான்வெஞ் செக்க ரோடும்
புன்மலி யகீதி மாலைப் புனைந்தெழி லிருளா நிற்க
வெண்மதி யுடையா ரோர்பா லிறுத்தனர் விரைவி னன்றே. 28

வீரவே லரசர் கோமான் மற்றவர் மிக்க வேகக்
கோரமுற் றரியே றன்பின் பறமொடு சூழ்இய தென்ன
வீரமற் றிருந்த வொன்னார் வேட்டையி னிருந்தார் வன்கல்
லாருமவ் வரணி னீரொன் றாகிய கடிகை சேட்டே. 29

மதிட்புறத் தலர்ந்த கானத் திடைவரும் வயவர் நாப்பண்
கதித்தெழு புயத்தின் வென்றி காலிதின் முகமே யொப்ப
வதிர்த்தெறி யலையின் வாரி யகத்தினின் றுடுக்க ளோடு
முதித்தன னமுத சோம னுலகெலாம் விளக்கி யன்றே. 30

மன்னிய வடவி சுற்று மாட்டிய வலையால் வீரர்
துன்னினின் றிரைத்த வோசைத் துளக்கத்தாற் கணிச்சி யோடு

பின்னிய கவண்கள் பாரிப் பெய்தலால் வேக மீக்கொண்
டின்னதத் துந்தி யாமா வொருபுறங் குழீய வன்றே. 31

கொலைபுரி விழியு நஞ்சங் குடிதரு நாவும் சீற்ற
வலையிடு மனமும் வீர மோங்கிய மதமும் வேகத்
தலைதரு முடனு மேறு மாநெடு கன்றுந் துன்னி
மலைமதில் வாய விட்ட கபாடமேல் மலைத்த வன்றே. 23

கைத்திறம் படையிற் செய்யுந் தொழிற்றிறங் கல்விற் கொண்ட
மெய்த்திற மெம்மனு மஞ்சும் வெந்திற வயவர் மொய்ப்புப்
பொய்த்திறப்பொதிந்தசிந்தைப் பொருநர்கோனுதைதிறென்போ
லைத்திறக் கதியின் மாமே லனுசனே டெழுந்தா னன்றே. 33

வேலினன் வில்லன் மெய்யிற் கவசத்தன் வெய்யன் வெய்ய
கோலினன் கதையன் வாளின் கொற்றவ னனில மென்னக்
கோலிய பரியன் வந்து குழீஇபகா டடர்மா வெல்லாம்
பாலிரின் தோட வீசிப் படர்ந்தனன் முருக்கி யன்றே. 34

வெருண்டிடாச் சிந்தைக் காட்டா வெருட்டிய படரும் வீரன்
முரண்டற கின்னே வேட்டை யாடுவான் முயற்சி கொண்டு
திரண்டணி வந்த வள்ளற் றிருவுளத் தடைந்தே சென்றே
யரண்டர மறித்துக் கொண்டா ராண்டகை சைபுல் லாவே. 53

தொடர்ந்தவெவ் வீர ரெல்லாஞ் சுற்றுள வயவா தம்மேற்
படர்ந்தனர் படர்ந்த காலத் தவரவர் படைக டம்மா
லடர்ந்தன ரனலி போலு மரியெதி ரரிகள் சாரிக்
கடந்தனர் குன்று போன்றுங் கலாயினர் தாசி பம்ப. 36

காற்றென மனமே யென்னக் கலினவாம் பரிக டாவி
யேற்றுரு மென்ன வார்த்திட் டெண்ணறும் பகழி மாரி
தூற்றின னனைத்தும் வள்ள றொலைத்தவன் றனை * மேலுங்
கோற்றொடை துரந்தா ரியார்க்குங் குறிப்புண ராமை யன்றே.

தாங்கிய பரிசை யங்கைத் தடப்புய முடல மெல்லா
மோங்கிய பகழி தந்த வுதிரமே விருது கொண்டார்
வீங்கிய மதியின் சோதி விளக்கத்தால் புன்மை நோயாற்
றீங்குறுங் கும்பி வெந்தீ செறிந்துமின் றெரிவ தொத்தார். 33

---

* மேலும்-எச்சவும்மை. தானைமேலும்-அவன் மேலும் எனக.

வெஞ்சின மருத சியம் வீரமுற் றதிர்ந்து வேகக்
குஞ்சரக் குழுவிற் பாய்ந்தா லென்னவே குறுக லார்மேல்
லஞ்சியின் மன்னர் தாவும் வன்றொழில் கண்டு சீறி
நெஞ்சுழன் றுருத்துக்கச்சா னெருக்கினன் பரியை யன்றே. 39

என்னணி சிதைந்த தன்மை யெண்கரப் பகழி தன்று
மின்னணி சிதைத்துக் கொண்ட நெடுஞ்சிலை யறுப்பல் காண்டி
யென்னமட் டிகிரி பேசனு மிவுளிவிட் டார்த்து வெய்ய
கொன்னுனை யனந்தம் வாளி நகையொடு கொழித்திட் டானே.

விடுஞ்சர மனைத்துஞ் சோதி வாளினல் விலக்கிக் கோரத்
தடுஞ்சினக் கலினப் பாய்மா வாழிபோற் றிரித்து நக்குங்
கொடுஞ்சின வாய னின்னைக் கிழிப்பலியா னின்னைக் கூற்றி
நெடுஞ்செறித் தோங்கந் தண்டா லொட்டினன் பகைவனன்றே.

ஓட்டிய கந்தபான் மாறித் தாக்கின னுருத்தான் வள்ளற்
றட்டினர் பரிசை நொண்டு தாவினர் வயிர வாளால்
வெட்டினர் பரியுந் தானும் பகுப்பிரண் டாக வீழ்ந்தான்
இட்டினன் கண்டு முன்னோன் கெழுமுவெஞ் சினத்தி னானே. 42

அரியவெ னுயிரிற் பின்னோ னண்டிற மழிய வீழ்த்த
பெரியநின் னுடலஞ் சென்னி பிரிப்பலியான் காண்டி யென்றே
பரியினைக் கடவிச் செக்கட் டியொடு பகழி மாரி
சொரியவந் தடர்ந்தான் மண்ணும் விண்ணுமே தூளக்கினனே.

அவற்றினுக் கவற்றுன் மாற்றி யரியினைக் கடவி யன்னோன்
கவற்றினுக் குரிய பாய்மாக் கணையொன்றின் மாய்த்தார் பாவ
மெவற்றினு மெடுத்தவாக்கை யிடியெனப் படியின் வீழ்ந்தா
னவத்துறை வள்ளல் பற்றி நாணியோ டிறுக்கி னரால். 44

வன்மன னுகைதி றன்போன் வரிபட விரிபட் டாரால்
புன்மன முடையோ ரெல்லாம் புகழ்வன முடையார் கூடி
நன்மனக் காலி தென்னு நாயகர் தம்மைப் போற்றி
வின்மனர்க் கரியே றென்ன நனிபெற வியந்தா ரன்றே. 45

மட்டுண்ட வாகை பூண்ட வள்ளலுந் தொடர்ந்தார் தாழுங்
கட்டுண்டான் றன்னைக் கொண்டு கடிதினிற் சென்று கோண
மெட்டுண்ட கீர்த்தி காப்ப னிலங்கிய சுடரின் வைகு
மிட்டுண்ட வாழ்வி னெங்கோ னெழின்மலர்ப் பதத்தில்விட்டார்.

நவிவியன் மெய்ய னுக்க மெக்கின னுயிர்ப்பன் மாறு
பெலிவின னச்சந் தஞ்சு நெஞ்சினன் மேன்மை யோங்கி
வலிமிகு நயினார் பாதம் வழுத்தியென் னுயிரே நுந்தம்
பலனருளளியின் வண்ண மொழுகலென் பண்ப தென்றான். 46

மேதகை யழகின் வாய்ந்த மேனுல கெளிதி னல்கு
மாதகை யமுத மன்ன வருங்கலை நாவை யோதிப்
பாதக மகற்றி யென்ன நன்னபி பகரக் கேட்டே
வீதகை யன்று நாளு மிறைபொருந் தினனியா னென்றான். 48

முற்பட்டார் தமக்கி யாஞ்சொன் முறைப்படி யடுத்த வூர்போற்
றுப்பட்டே நடக்கற் கின்ன தலைமையன் றனக்கு மாறு
நற்பட்டாங் கெழுதி யீகென் றலகெல்லா நடத்துங் கோன்மை
வெற்பட்டார் வாக்கின் வண்ணம் விரைந்தனர் கணக்க ரன்றே.

சிறுபொழு தாக்கஞ் செய்யும் பிணிப்பிணைச் செறுத்தெந் நாளு
மறுபொழு தாக்கங் காட்டு மாண்பினை வனைந்து நல்கக்
குறுகலன் வாங்கி வள்ளல் கொழுமலர்ப் பாதந் தாழ்ந்து
தறுகிலா தெழுந்து புக்கான் றன்னர ணகரை யன்றே. 49

மீக்கொழுஞ் செல்வ மூதூர் மேவியபீ வாண்டிற் றன்பாற்
றுக்குள திறைக ளெல்லாந் தனைப்பிலா தொட்டை மீதும்
வீக்குள வெருதின் மேலு முழக்கொடு விளக்கங் காட்டிப்
போக்கின னயினார்க் கன்பிற் புகழ்ந்தனன் மகிழ்வி னன்றே. 50

ஆம்தீலநகர் தபூக்கிற் றிறைகொண்ட படலம்

முற்றிற்று.

ஆக படலம் 54-க்கு திருவிருத்தம் 1602.

எழுபதினாயிரம் மலக்குகளுடன்

ஜளுஷா தொழுத படலம்.

மருவலர் பணிந்து மேன்மையி னளிக்கு மலிதிறை வாங்கி
யன் புடைய,பெரியவ ருவப்பிற் புகழ்தர நயினார்-பிரியமுற்றிரு
க்குமப் பொழுதிற், றிருவொளி வலருஞ் செவ்வியிற் சிறந்த
0 சிபுறயீ லெழிலினிற் பூத்து, வருமெழு பதினா யிரமிமை யவ
ரோ டிறங்கினர் சோபனம் வகுத்தே. 1

எக்குண மனைத்துந் தற்குணம் பொதிந்த விறையவன் சலா
மெடுத் தியம்பி, முக்குணங் கடிந்த மகாவியா வின்ற முழுமணி
மகாவியா வென்பேர், மிக்கணி புனைந்த பொன்னக ரடைந்தார்
மேன்மையி னடக்குவா னிபாரு, மொக்கலிற் கூண்டாங் குறை
ந்தனர் மதினத் தயர்கரு மேதகை யுடையார். 2

கன்னிலை யுயிருங் கணிப்பவன் கனிந்த கருணையி னியாவர்
க்கு மினிதின், முன்னிலை யுடையீர் முன்னிலையாகி முயல்குவீர்
தொழுகைதம் பொருட்டாற், பின்னிலை யாங்கள் பெறுகுவேம்
பெறுக பெரியவன் பணித்தன னென்ன, நன்னிலை யணிந்த மு
கம்மது நபியு நயனொடு மெழுந்தன ரன்றே. 3

படர்ந்தெழுங் கதிரிற் செம்மணி யொளிவுங் கருணையும்
பயிறரும் விழியி,னிடந்தரு மமரர் புகழ்தரும் பெருமா னெழிற்
சிறை வலக்கர மிருத்தி, யடர்ந்தபல் வரைக ளடவிக ளனைத்து
மழுத்திமற் றிடச்சிற கதனுந், திடந்தரும் புடவித் திடர்கய
மிலவாய்ச் செல்வனை திருத்தின ரன்றே. 4

துன்னிய வொளிவாற் பம்மிய பன்மைத் தொடர்வினை யகன்
றெனச் சூழ்ந்த,மன்னியதருமற் றுளவெலா மழுந்த மாநிலமிலங்
கெமணியிற், பொன்னவர்க் கருபா மக்கமா நகர மேனலம் பொ
ழிதரு மதீன, மென்னில மியாவு மெதிர்தரத் தெரிந்தா ரெழிற்றி
கழ் முகம்மது நபியே. 5

0 சிபுறயீ—சிபுரியீ.

தேசுதிகழ் மரபத் தொடைப்புய நயினர் சிறப்பொடு முன்னிலை யாகி,யேத்திய நெறியின் மாதவரோடு மெறிவொளி யமர்களியாருங், காத்திரு மேன்மைப் பின்னணி நிற்பக் கருத்தொடு முறைப்படி யியற்றித், தோத்திரத் திருகை யேந்திநின் றவர்க்குத் துணைநலம் பெறவிரந் தனரே. 6

எதிர்தரத் தோற்றும் பிரேதமே நோக்கி யியன்முறை செய்தபின் னமரர், பதிமுக நோக்கி மகாவியா வின்ன பலன்பெறுந் தகுதியென் னென்றே, மதியொடு பகர்ந்த மாதவர் கேட்ப மாநிலத் தனுதினம் வழக்கந், துதியினைப் புறத்துங் குல்குவல்லாவை யோதிய தூய்நிலை யென்றார். 7

மேனவம் பொதிந்த வமரர்கோன் வரிசை மிகவருந் தகுதியி னிருந்தே,வானக மடைந்தார் இறைவரும் வாகை வள்ளனன் னபிநயி னாருந், தேனவி ரலங்கற் றீனவ ரெவருஞ் சிறப்பொடி ருந்தனர் புடைசூழ், சோனகர் தழுக்கி னவரவர் பணிந்து குணத்தொடு துதிசெய வன்றே. 8

எழுபதினாயிரம் மலக்குகளுடன்

ஜனாஸாதொழுதபடலம்முற்றிற்று.

ஆக படலம் 55-க்கு திருவிருத்தம் 1610.

அசுகாபிமார்கள் வெறுமை நீக்கி

செல்வ முற்றபடலம்.

மிஞ்சிய கரீசப் புலியடர்த் ததனால் வீரர்க ளின்மிகுத் தகனுன், மஞ்சின முண்ட கதிர்வலி யதனால் வைத்ததோ ருணுநிரப்பதனு, னெஞ்சணி யோர்மை யுடையவர் வருத்த நிலைதருங் குணக்குறி கண்டு, வெஞ்சினச் சுடர்வே லுமறினி தெழுந்து வேதியர் திருமுன முரைப்பார். 1

இரண்டரு நெடுவேல் வயவர்க ளுடல மெழின்முக முள்ளொடு புலர்ந்து, திரண்டவூ னின்றி வாடின ரிந்தின் செழுங்கனி யொன்றினு லதனின், வரண்டவித் தகல்வா யிடங்கொடு சுவைத்தும் வருந்தினர் நாள்சில வூக்க, முரண்டறக் கனலின் றளிரெனக் கரிந்தார் மொய்ம்பற மெலிந்தன ரன்றே. 2

வன்றிறம் பூண்ட மாற்றலர் பதாதி பாய்த்திய லெழினகர் சேர்த, லன்றியிப் பசியா லுயிர்விடுந் தரங்கொ லென்பவர் சில ரறி வடங்கா, நன்றியி றுதி சோதனை யென்பர் சிலர்நவை யெய் ன்கொலென் றயிர்ப்பர், கன்றிய மனத்தி னொருபது நாளுங் கட ந்தது கவலையி னென்றார். 3

கோளணி யுரிமை நன்னெறி யொழுக்கங் கொண்டெழுந் தயருமன் றரசர், வாளணி யுரைகேட் டவரவ ரிடத்தின் வைகுறு முறைப்பல வெல்லாந், தாளணி குவிப்பப் பணிகெனப் பணித் தார் தாமென விலங்கிய சுடரீ, னொளணி யுலக நபிகளி னயினா ரம்முறை நடத்தின ரவரே. 4

வெண்டிரைக் கடலி னொலியெனக் ககன வீதியின் முறை முரசறைய, வண்டிற லுடையார் நாடுரி நாழி யரையுழக் குளவ ருங் கோறுங், கண்டபே ரீந்தி னொன்றிரண் டொருமூன் றுறு கனி மற்றதன் வித்துங், கொண்டுவந் தன்றிக் கொடாரிடம் பறி த்துங் குவித்தன ரொருரியகத்தே. 5

கணக்குறு மெழுபா னாயிரர் குவித்த கைப்பொருள் கலத் தள வின்றால், குணக்குலம் பூண்ட நாயகர் நோக்கிக் கோதிலா நாதனை யுன்னி, பணக்குமெய் யுணவு மலிகொள யாரு மனங் கொள மகிழ்கொளப் புரிகென், றிணக்குட னிரந்தார் மானமே குறையா திருந்தது மகிமையென் னென்கோ. 6

கூரிலை நெடுவேல் வயவரை நோக்கி வேணவை கொள்கெ னப் பணிப்ப, வேரினிற் றொறுவி லவரவர் சிரத்தில் வெம்பரி மிசையினிற் சுமந்தார், பாரினிற் படர்ந்த புகழெனு மறையிற் பயிலொளி முகம்மது நயினார், சீரினிற் சிறந்த வின்பென மென் மேற் பொலிந்தது சிறுமையில் லுணவே. 7

சிறுமையிற் பெருமை கண்டவ ருள்ளஞ் செழுமை கொண் டெழும் பூத்து, நெறிமையின் வள்ள லருமைப்பின னவருந் திக ழ்ந்ததற் கரிதெனப் புகழ்ந்து, மறுமையுங் காக்கும் வல்லவன் றன்னை மதித்தனர் வாய்மையாற் றுதித்தார், வெறுமையுந் தீர்ந் தார் சஞ்சல மகன்றார் வீறொடு செல்வமும் பெற்றார். 8

நவங்கிடந் தலர்ந்த நபிகளின் முதியோர் நறுங்கனி மாவினை யுரைத்துத், தவங்கிடந் தோங்கு மீக்கனி மாலைத் தணப்பிலா துரைத்தெனக் கண்டோர், பவங்கிடந் தலம்புந் தீவினை யகன்று பன்பணி யிழைத்தெடுத் தமைத்துச், சுவங்கிடந் திலகுந் துறக்க மீ திருந்து சுகிப்பது திண்ணமென் றறைந்தார். 9

அசுஹாபிமார்கள்வெறுமைநீக்கி செல்வமுற்றபடலமுற்றிற்று.

ஆக படலம் 56 க்கு திருவிருத்தம் 1619.

வரண்டகூவத்தை

நதியாக்கிய படலம்.

கதிகொள் வெம்பரி கைசுநின் கையகத் தழுக்குப்
பதியி னிற்றிறை கொண்டபத் தொருதின மிருந்தா
மதிகொள் சேனைக ளெழுத்திரு வாயுரை வகுத்துத்
துதிகொ ளுபகர் தாகத மீதுகொண் டனரால். 1

வெய்ய வெம்பரிக் குலங்களுந் தொறுவின மிசைப்பச்
செய்ய வேல்வல வீரருந் தேரொடு கரியும்
பெய்யும் வார்முர சோதையும் பெருங்கடல் கடுப்ப
வைய மீதெழு மிளங்கதிர்ப் பருதியி னலர்ந்தார். 2

வெற்றி யொன்றிய விரிகொடி முன்பட வெண்முத்
தொற்ற வண்குடை மதிபொரக் கதிரொளி காலுங்
கற்றை யொத்தன கவரிக ளுடுக்கணங் கடுப்ப
மற்ற வீரரு மாதவ ரம்புலி யொத்தார். 3

விரிந்த மேம்பொருண் மறைமொழி விண்ணவர் முதலோர்
தெரிந்து வாழ்த்தமற் றாம்பயர் தேமலர் சொரியப்
புரிந்த தண்குடை நறும்புய னிழறரப் பொங்கிச்
சிரித்த பாற்கடல் போன்றது நடைகொளுந் தானை. 4

வனங்க ளொன்றிய நால்வகை மலர்களு மருவிக்
கனங்க ளோங்கிய வரைகளு மடர்தருக் கடமற்
றினங்க ளெங்கணு மான்மதம் விரிவெடி மிகைப்பத்
தினங்கொண் மேனியெம் மாண்டகை சிறப்பொடு சென்றார். 5

கூருண் வெம்பா லிலமுதன் மற்றெல்லாங் குறுகி
நீருண் டோங்கிய தண்டலை பலநெறி கடந்து
சீருண் டாம்புர மதீனத்தி னணிந்துத்தீ யவானென்
றாருண் டாங்கரும் படையினே டிறங்கினர் குரவோர். 6

மனக்கின் வஞ்சகம் வெளிக்கிட்டார் வருபடித் தொழுக்கத்
தினக்க ளார்திருப் பதிமதி னுவிடத் திருந்த
கனக்கன் பள்ளியி னிகரெனக் கட்டியொண் சுதையின்
மினுக்கி யோங்கிய பள்ளியி லிருந்தனர் மிகையால். 7

துண்மை யுற்றெழும் பொருண்மறை நூலுணர்ந் தவரிற்
றண்மை யுற்றவ ரப்பதி மாக்கடாழ்க் தொழுக
வண்மை யுற்றறி விணம்பல விளக்கிவாய் மனமு
மண்மை யுற்றிலா ருற்றன ரவர்பதிற் றிருவர். 8

அனைய காலையி லாண்டகை யவண்வரு மளவில்
புனையு நல்லறஞ் சபுறயில் புகழொடு மிறங்கி
யினிய வாய்மையி னிறையவன் பணியெடுத் திசைத்தார்
வினைய முள்ளவர் விரோதிய ரவரென விரித்தே. 9

கேட்ட போதினி லெம்மிறை யருள்விழி செங்கே
ழூட்ட போதிதென் மலர்தர விடிபட வுரைத்தார்
வாட்ட போதிய ரப்பெரும் பள்ளியை வன்றா
ளாட்ட போதவெங் காற்றொடு காணரி தாகி. 10

அழிவு கொள்வது பொய்மையப் பொய்மையி னொழுக்கா
ரிழிவு கொள்பவ ரென்பத னியற்கையே யவ்வோர்
கழிவு கொண்டனர் மெய்மையெக் காலமுங் காட்டும்
வழியி னுயின வள்ளறன் வரிசையா லன்றே. 11

புன்மை நீங்கியெண் டிசையினிற் பேரொளி புதுக்கி
வன்மை நீங்கியெம் மாண்டகை வழிபெற வவ்வூர்
நன்மை நீங்கிடா திருக்குமக் காலையி னரம்
பன்மை நீங்கிலா வயவர்க டேடினர் படர்ந்தே. 12

விரும்பி யந்நக ருநுணி யிடத்தினில் விரைந்தா
ரரும்பி நின்றபுன் னீரொரு கலத்தள வெடுத்துத்
திரும்பி நாயக னிலங்கிய திருமுகத் தெதிரே
கரும்பொன் வாளினர் வைத்திவை கழறின ரன்றே. 13

பெருகு நீணக ருணவரு மூவளகம் பேணிப்
பருகு நீர்வறந் துலர்ந்தது கீண்டதாற் பரந்து
செருகு நீரிஃ தன்றிமற் றின்றெனத் தெரித்தா
ருருகு நீர்மையா னுனுச்செய்தா ருணர்வழி யுற்றார். 14

சிறந்த பேரொளி யுறுப்பினங் கழீஇயபின் சேட
முறைந்த நீரினை முன்வரு முறவியின் விடுப்ப
நிறைந்த மாதவர் பணித்தலு மம்முறை நேர்ந்தா
ரறைந்த நீர்வழி யூறிய பெருமடை யதனில். 15

பரந்த பூமியி னகத்திருந் தொலித்துயர் பரப்பித்
திரைந்த வெண்ணுரைப் பாருயர் பிறையெனச் சேர்த்துக்
கரிந்த வாம்பன்மற் றருமலர்க் கமலமுங் கொண்டு
சரிந்த நாரமெய் முகம்மதின் புகழெனத் தழைத்தே. 16

விண்ண கத்தினு முறைபடர் முகம்மது விரிந்த
பண்ண கத்துயர் மறைமொழி மதுரமும் பயின்று
தண்ண கத்துரை முகம்மது சகீதுனைத் தன்பின்
மண்ண கத்தினி னதியெனப் பெருகிவந் ததுவே. 17

கார ணம்பெற வருநதி கடிதருஞ் சலிலம்
வார ணம்பலத் தகையற வூட்டிமற் றரசர்
பூர ணந்தர வுண்டுட லகத்தொடு பூரித்
தார ணம்பெறு மகிழ்ச்சியி னுக்கமுற் றனரே. 18

இன்ன லீக்குமெய் யுயிர்தருமுன் டிறைவனை யிறைஞ்சி
மன்ன ரியாவரும் வாழ்த்திட வயவர்கள் போற்ற
வன்ன மாநகர் பன்னிரு நாளிருந் ததற்பின்
அன்னு வெம்படை புடைதர வெழுந்தன ரப்போர். 19

நீண்ட வன்கழுத் தொட்டையின் முரசமு நெருங்கிக்
கூண்ட பேர்சல வாத்தொடு குழுதரு மிரைப்பும்
பூண்ட நாடணி வாசையின் குரவையும் பொங்க
வாண்ட நாயகர் வருவது மதனிய றிந்தார். 20

வேறு.

கடிதூற்றிப் புதையானமலர் கமழ்நாறுகு துகளால்
வெடிதூற்றிய சுதையால்கனை விதிராதுறை கரிசைப்
பொடிதூற்றினர் மதிமேலணி கறைபோக்கிய தென்னக்
கொடிதூக்கிய மணிமாளிகைக் குலங்கேழ்புதுக் கினரால். 21

புலவிப்படு மலராற்பல பொடியாற்குவை யெல்லாஞ்
சுலவிப்படு போதோடெழி றவிருஞ்சுடர் மணியுங்
குலவப்படர் ககனத்தனு கோலஞ்செறி நிரையி
னிலவித்தனர் மறுகெங்கணு நெடுந்தோரண மம்ம. 22

விரைமேவிய துகள் சாந்தொடு நெய்நீர்பல விரவி
வரைமாளிகை யணிவீதிக டெளிப்பார்மணி சுண்ணக்
கரைநீர்பட ரொளிமேனிய ரீடவார்சுட லெறியுந்
திரைமேலெழு துகிர்செங்கொடி யொத்தார்திசை யெல்லாம். 23

முத்தாலொளிர் மகுடமதெழின் முதிர்சீர்புக ழெல்லா
மொய்த்தாலென நிரைசேதன முரசார்பல மன்றுள்
வித்தாரமெய் யறிஞோர்துதி வினையின்கவி யோசை
நத்தார்கடல் வெருவக்கெழு நகரெங்கணு மன்றே. 24

மணியாற்செழு மலராணிதி வகைபாற்பல வெடியா
லணிபாலெழு நகர்மேதகை யாதென்றறை கேனே
கணியாதலர் புகழ்நாபகர் கருணைக்கிட மதுவால்
தணியாவெழி லுயர்பொன்னகர் தனைமீறிய தாலே. 25

நலங்காவலி னகரெங்கணு நவமேமிக வோங்கு
மலங்காரம தணிசெய்தமி னவண்மேவிய முதியோர்
விலங்காதினி தொடுசூழ்தர விரைமாலையின் விறலார்
கலங்காமன வலியாரெதி ரெழுந்தார்களி படர்ந்தார். 26

* முரண்வாகையர் தமைவென்றிரு வகைமொய்த்திடுங் கூற்றி
னாண்வாகையர் முதலோர்மறு வகல்காலநல் லறிவிற்
புரள்வாகையோ டெண்காரணம் புனைமாதவ நெறியிற்
றிரள்வாகைய ருடலாவியிற் றெரிந்தாரெதிர் நடந்தார். 27

நறைமேலெழு மலிபொன்மதி நகைமேலெழு புள்ளின்
முறைமேலெழு முருகன்கதிர் முதிர்மார்பொடு புல்லி
நிறைமேலெழு மகிழ்வாற் 0 பலர் நெறியேதழு வினரால்
பொறைமேலுய ரறிவாரருள் பொதிந்தார்கரு வதிந்தார். 28

---

* முரணிய வாகையுடைய் மன்னரை வென் றுண்டாகு மிருவகை கூறுபாட்டி னியல்பாகிய வாகை யுடையவர்களுக்கு முதலானவரை—பின்னம் காலத்திய னற்குற்றமற்ற நல்லவறிவி னிடத்திற் றவழும் வாகையும் எண்வகை யங்கம் பூண்ட பெரிய தவத்தி னிடத்திற் றிரண்ட வாகையும் உடையவரை எதிரடை ந்தார் தங்க ளுடலுக் குயிர்போலுங் கண்டா ரென்க. முரணிய வாகையாவது—வலியாலும் வருத்தத்தாலும் பிறர் தன்னைத் துதி க்கச்செய்தல் இருவகை கூறுபாட்டி னியல்பாகிய வாகையாவது அவ்விரண்டு மின்றித்தன் னியல்பாகிய வொழுக்காற் றன்னியல் தானே துதித்தலும் பிறரு மியல்பாகவே துதித்தலுமாகிய விர ண்டுமாம். மற்றவை நூற்களிற் கண்டு கொள்க.

0 பலர். பலரோடு.

புதுநீரொடு புனைநீரொடு பொலிகின்றதோர் வெள்ள
மதுநீர்மையி லணிசேனையோ டதிர்வென்றியோ டறிஞோர்
மீதுநீரென மறைவாழ்த்தொடு சலவாத்தொடு வானோர்
துதிவாழ்த்தொடு விரிசோதியி னபிதோன்றின ரன்றே. 29

குறியாமுதற் குறிகின்றொரு நாற்பான்படி யீருய்
நெறியாயணி பொடுமேறிய நிலைபொற்புற நகர
மறியாவகை தற்காவலி னணிவாகைய மாண்பிற்
பிறியாதுறு நகர்மேவின ரென்னுள்ளமும் பிரியார். 30

அறமேல்வரு முயிர்பூண்டதோ ராக்கங்கெட விடையே
மறமேவினர் பெறுதண்டமு மாடேற்றிய வாகைத்
திறமேல்வரு நபினார்பல திசையோங்கிய புகழு
முறமேவின ரெக்காலமு முறைமேனக ரன்றே. 31

அணிமேனிலை நணிவீதியி னருநீதியர் மடவார்
கணிவேல்விழி மனமுந்துற வேறின்றிய காட்சித்
தணியாதுள வுயிரியாவையுந் தன்னுட்பட முன்னர்
மணியாகிய நெறியாமென வந்தார்முகம் மதுவே. 32

போய்கண்டவர் புடைவந்தவர் புகழ்துஞ்சிய நபியால்
தாய்கண்டவ ரொத்தார்பலர் தகைசேரறி வுடையார்
வாய்கண்டவ ரொத்தார்சிலர் மருவும்பொரு ளாய
சேய்கண்டவ ரொத்தார்முதிர் குணமேசெறி பெரியோர். 33

அழியாதுயர் செல்வம்பொலி வதனாலணை யலர்கள்
வழியாகிய விசையாலணி வகையால்மகிழ் வதனை
விழியாதெழு கதிபோன்றதவ் வியல்சேர்திரு நகரத்
தொழியாமறை யிசைப்பள்ளியி னுற்றார்முகம் மதுவே. 34

பழக்குந்திரு நெறியார்பல பதிபோய்வரிற் செய்யும்
வழக்கின்படி தொழுதேபுகழ் வளராசன மீதோ
ரொழுக்கின்கதிர் விளக்கின்குண முற்றார்மதி வல்லோ
ரழுக்கின்றிய மன்னோடணி சூழ்ந்தார்சில ரம்மா. 35

வரண்ட கூவத்தை நதியாக்கிய படலம் முற்றிற்று.

ஆக படலம் 57-க்கு திருவிருத்தம் 1654.

மூவர் பிழை பொறுத்த படலம்.

வண்டிமி ரலங்கல் பொற்றோள் வள்ளலாண் டிருப்ப முன்னர்
மிண்டமர்க் குடன்ப டாத மூவகை வீரர் தம்மிற்
கொண்டகா ரணத்தி னூர்வந் தகத்தெழுங் குறியி னோடு
விண்டலர் பாதம் போற்றித் துயரொடு விளக்க னுற்றார். 1

அறிவினுக் கறிவே யுண்மை யாற்றினிற் படர்ந்த பூவே
வெறிகரு நிழல்கு லாய விரிதரு தருவே யன்ப்
மெறிதரு மதியே யெங்க ளின்னுயிர்க் காக்கமே நோய்ப்
பறிதரு மருந்தே தேனே பவமறுங் கருணைக் காரே. 2

துன்னிய பிணியா லுள்ளந் துன்புறுக் குணத்தா லாக்கைப்
பின்னிய வலிய தின்றா லாவியைப் பேணி யெம்மோர்க்
கின்னுயி ரனையர் செல்லும் போரினுக் கெழுந்தோ மல்லே
மன்னிய பாவி யாகி மாநிலத் துழலா நின்றேம். 3

தீவினைக் குரிய யாமே செழுங்குணக் குரிசி லேதுங்
காவினைக் கொள்ளே மாகிற் கதிவினை பெறுத லுண்டோ
பாவியர் தம்மை மீட்டுங் கருணையாற் பார்த்து மாறாத்
தாவிய லன்பு மேவுந் தண்ணளி புரிய வேண்டும். 4

பன்முறை துன்பம் பூண்ட பாதக ரேனுஞ் சிந்தை
நன்முறை பொறுத்துக் காக்கு நாயகக் குன்ற மேயீ
தென்முறை கொல்லோ செய்த வெம்முன்னோர் தவமே யென்ன
வின்முறைக் கைக ளேந்தி விழிபன லுதிர்த்து நின்றார். 5

சுமக்குமெய் யாக்கை மேவுந் துன்பமோ ரேது கொண்டே
யெமக்குநீ ரிழைத்த வெல்லாம் பொறுத்தன மிறையோ னீவி
ருமக்குறும் பான்மை பூண்ட குற்றங்க ளொறுப்ப னேமற்
றமைக்குமோ வறியே மென்றா ராரண மதுர வாயார். 6

பேரவை யுற்றார் முன்னம் பிறந்தவம் மொழியா லுள்ள
நீரக வாய்க்கா லென்னக் கரைகின்ற நேத்தி ரத்தார்
காரண மிருந்த வாற்றா லுண்மையே கவன்ற வாற்றா
லாரணத் திறையோன் குற்ற மில்லென வரையப் பெற்றார். 7

மற்றொரு வகையா ரேது வறியிலா ரறிவின் மிக்குக்
கற்றவர் கருபு மேன்மை கணித்தவர் கிலானு மாறு
கற்றவர் பூறுறத் தென்னு நரபதி தாமுஞ் செய்ய
யொற்றவி ரிருந்த வள்ளல் பொலன்கழல் வந்து தாழ்ந்தார். 8

நினைத்தவுட் பொருளி னூடு நிலவிய மணியே பன்மை
வினைத்தகர்த் தொருமை காட்டு மாதவ மதியே வேத
மனைத்தினு முறையு ளாகி யலர்கின்ற கதிரே யெங்கண்
மனக்கனி னறிவே நந்த மதியருள் புரிய வேண்டும். 9

சிக்கிய பிணிக ளின்று தேகமீ திழிவொன் றின்று
மிக்கியல் வலியும் போரின் விசையமும் படையி னுடற்
றொக்குள பொருளு முண்டு சோம்பலொன் றெழுந்து தங்க
ளொக்கமி னடலின் பெற்றிக் கொள்கிலா தொறுத்த தன்றே. 10

தாயினுந் தந்தை தன்னிற் றமையரிற் சுற்றந் தன்னிற்
றாயநல் லன்பு மிக்குத் திருவரு டொடர்ந்து நின்றேம்
போயதும் பணியி னில்லா தெப்பணி பொருந்தி வாழல்
மாயிரும் புவியி னூழின் வலிகொலோ வினைத்த தையா. 11

வெங்கதிர்க் கானல் கொண்டு விரிந்தபார்க் கொடிமை கண்டு
புங்கமே நீழல் வேண்டி யுடற்புறம் போகா தோங்கு
மங்குள் சடைவி னுன்னுங் காரிய மலைக்க தின்று
கங்குலிற் பகலிற் றோற்றுங் காலையி னென்று மன்னே. 12

விரிதிரைக் கடலிற் பாரில் வெற்பிடந் தீவில் வானில்
சொரிகதிர் அறக்க நாட்டி லெவ்வனுஞ் சுகத்திற் செல்கேம்
புரிதிரு வருளின் வாய்ந்த புண்ணிய முகம்ம தேநம்
கருணையி னீங்கி வேறு காவலிற் கொண்டு மன்னே. 13

வேமதீங் கொண்ட வொன்னார் மேலெழும் பலபோர்க் கெல்லா
மாமதங் கொண்டு நந்தி மடிமலர்ப் பொருந்த லன்றித்
தாமதங் கொண்ட துண்டோ தருக்கவை பெருக்கி நின்றே
மேமுற வந்த அன்ப முடன்மத வியற்கை மன்னே. 14

புன்மையங் கடலிற் றாழ்ந்து பொய்நர கழல்புக் காது
நன்மையுங் கரையிற் சேர்த்த நன்றியை மறப்ப துண்டோ
பன்மைவிய மாற்று மோர்மைப் படுத்ததற் கைமா றேது
மின்மையா லிகழ்ந்து நம்மை யெங்ஙன மிருந்து வாழ்வேம். 15

---

* ஹதிர்த்து—ஹருத்து

விலங்கினிற் சிறிய நுந்தம் பணியினை விடுத்து வேறோர்
தலங்களித் திருப்ப தற்கின் றென்றுமான் சாற்றக் கேளாக்
குலங்களு முண்டோ வேதக் குணமணி விளக்கே யாங்கள்
நலங்கெடப் பொய்மை யொன்று நவின்றிலம் நவின்றிலேமே. 16

நீங்கியன் றவர்க்கு மன்புஞ் சிறப்பொடு நல்குங் கோவே
யாங்கள்செய் பிழைக ளெல்லா மிருதயத் தடையா துள்ள
மோங்கிய விரக்கம் பற்றி யுத்தம கருணைத் தண்ணந்
தாங்கருள் புரிய வேண்டுஞ் சரண்புகு மெளியே மென்றார். 17

அனையவை யுணர்ந்து வள்ள லருஞ்சினஞ் சிந்தை யூடு
நினைவொடு தோன்ற நோக்கி நிறைபுக ழோங்கு நாதன்
வினையினு னும்மை வெவ்வே தனையினில் விதிக்கு மோவென்
றினையவை விடுமின் போமின் விரைமினென் றருத்துச் சொன்னார்.

முகமனா யோடு நெஞ்ச முகிழ்தர வாவி நீங்கு
மகமொடு வீர மாட்சி யறவுளம் பாய்ந்த வேலி
னுருமிகு மதுரச் சொல்லி னுயரவை விடுத்தார் தூய
வெகின்பொரு நீரார் நாண மென்கொலாம் பகர்த லம்மா. 19

எண்குணத் தலைவயார் நோக்கி யிவர்களோ டுறவி னோடு
தன்குண முறையா டன்பின் றுங்கொண்ட கருதி யோடு
மெண்குணத் தடைந்த போது மிரங்கன்மி னவர்தஞ் சுற்றம்
பெண்குண மக்க ளியாரும் பிரிகவென் றிறைவர் சொன்னார். 20

நிறையினு னுலகங் காக்கு நீதிசெந் நயினார் வாய்மைப்
பொறையினு லவர்கள் மக்கள் போற்றிய தேவி மார்தா
முறையணை யகத்திற் புக்கா ருறவினர் சுற்ற மெல்லாம்
புறநிலை கொள்ளப் பட்டா ராடியிற் றுரும்பு போன்றார். 21

வென்றியின் வாகை மற்றோர் வேந்தரு மற்றுள் ளோரும்
பொன்றிகழ் மனைகள் புக்கார் நடந்தவை புரத்து வைகுங்
கன்றிய கவரி னுள்ளக் கயவரும் பொய்மை தன்னாற்
றுன்றிய பாவ வெள்ளந் துயரொடு முணர்ந்து தாழ்ந்தார். 22

மூவரில் கிலாவின் பாரி முதிர்ந்தவர் தொண்ட ரேதோ
ரேவலுக் கில்லா ராக்கை யிழைத்தவ ரென்ன நீவி
ராவன செய்க வார்த்தை யறையற்க வடற்க வென்று
காவலர் புகழுங் கோமா னவின்றதற் கியன்று நின்றான். 23

மன்னிய திரையின் மிக்கு மலையினும் பெரிய வுள்ளந்
துன்னிய துயரி னுக்கைச் சோர்தலின் வெளிவ ராது
தன்னினை வொடுங்கத் தத்த மனைவயிற் றனித்தார் மற்ற
வன்னிலைக் கருபு தாமே தனிவெளி யாடா நின்றார். 24

வளஞ்செறி சிந்தை பற்று முறுதியா லரசை வைகு
முளஞ்செறி வதனால் வள்ள லுறந்தலம் பள்ளி வாயில்
களஞ்செறிந் தவரி னோடுங் கலப்பர்கண் ணோட்டங் கொள்வா
ரிளஞ்செறி யஃதுனோர் தம்மோ டொருவரு முகமி டாரே. 25

எழுமுட னுணர்வி லாது மெலிதலு மூணவு மின்றி
யழுகையுங் கவனங் கொண்டோ ரருமொழி பிசகி லாது
தொழுகையு மிரப்பு மாவையம் பதுதினந் தொலைந்த பின்னர்
வழுவறு மிறையோன் வேத மறையுரை யிறங்கிற் றன்றே. 26

சொற்பொரு ளுண்மை பற்றுந் தொடர்புறுஞ் சிந்தை கொண்டு
நற்பொருள் புரிந்த வாற்ற னனிபிழை பொறுத்தா னென்னக்
கற்பினை வள்ள லோதிக் காட்டிய வாய்மை கேட்டு
முற்பட வணங்கி வெற்றி யவித்தனர் முதிர்ந்த நீரார். 27

போரின்ப முடல மெல்லாம் பொங்கிமேல் வழிந்த தேபோ
லாரின்பக் காலி னேகி யலர்தரு முகமுஞ் செய்ய
சீரின்ப மனமும் பூத்த தேவரீர் திருப்பொற் பாத
நீரின்பக் கண்ணி னுமேல் கழீஇயினர் நிமல ரன்றே. 28

முறைமுறை செய்யும் பன்மைத் தவமெலா முற்ற வென்ன
நிறைநிறைக் கைகள் பற்றி நெஞ்சகங் குளிர்வ தாகப்
பொறைபொறைப் பயத்தா லாவி யுடலிடம் பொருந்தல் போல
விறையிறை மார்பி னோடுந் தழீஇயின ரின்பங் கண்டார். 29

நன்னெறி யுடைய மேலோர் நால்வர்க்கு மற்றுள் ளோர்க்கு
மன்னெறி மகிழ்வி னோடு வரிசையிற் புல்லி மோந்து
முன்னெறி யோர்மை காட்டு முதிர்ப்புக ழாசே நந்தம்
பொன்னடி புகுந்தோர் தீங்கிற் புகாரென வியந்து நின்றார். 30

நறுங்கதிர் மேனி வள்ள னகையொடு மகிழ்ந்த மேன்மைத்
தொகலரி தன்னோர் செய்கைச் சொல்லியற் பெருகும் பான்மை
வகையறிந் துரைப்பி னம்மா னெம்மனோர்க் கரிய வாய்ந்த
மிகையறிந் துணர்க வேண்டு மேலறி விளங்கி னோரே. 31

கவரிபன் மனத்தின் மூன்றும் வகையினர் கபீபு முன்ன
ரவரகத் தெழுந்த பொய்மை யேதுவே யமைத்து வல்லோ
னவமுறுந் தகையா ருணை கவின்றனர் புறத்தின் பான்மை
யவையினும் பொறுத்து வள்ள லகத்தினை யவனிற் சேர்த்தார்.

அகத்தினின் பான்மை தன்னா லவர்க்குநீர் பொறுத்த போதுஞ்
சகத்தினு மற்றிடத்துந் தீவினைத் தாழ்ந்தோ ரன்றித்
தொகுத்தினைப் பாவ காரர் பொறுத்தவ ரல்லார் துன்ப
மிகுத்தவ ரென்ன மேலோன் வேதமே விளக்கிற் றன்றே. 33

மூரிவெந் தீமை பூண்ட மூனபிகா னவர்தஞ் செய்கைப்
பேரினால் விரிவிற் றுகப் பிரித்திடிற் பெருகு மன்றே
காரினுர் கவிகை வள்ளல் கருணையி னுலகங் காத்துச்
சீரினிற் சிறந்த தன்மை வகையொடு தெரித்து மன்றே. 34

மூவர்பிழைபொறுத்தபடலமுற்றிற்று.

ஆக படலம் 58 க்கு திருவிருத்தம் 1688.

நாச்சியார்களிடம்

உறுதிபெற்ற படலம்.

மறுவிமெய் காவத மட்டுந் திவ்விய
நறைக்கமழ் திருநபி நம்பி ராட்டிமா
ருறவகன் றாடலா யுற்ற வாறெலாந்
திறனெடு மினிதுறச் செப்பு வாமரோ. 1

அறமிரு மாயிசத் தென்னு மன்னையுந்
துறைபுகழ் நிறைகபு சாவுந் தந்தயின்
மறுவறு மாரியத் தென்னு மங்கைமேற்
கறுவொடுஞ் சிலமொழி கழறுந் தோதுவார். 2

செவ்விய மாரியத் தென்னுஞ் சேயிழை
நவ்வியின் னதிபுரு நாய கர்க்கவள்
வெளவிய பொருளென விந்துற் றூனோர
மெவ்விதத் திலும்பிறித் திடுதல் வேண்டுமால். 3

என்றுரைத் திருவர்த மிதய தாமரை
யன்றிமற் றொருவரு மறிந்தி டாதுரைத்
தொன்றுபட் டொன்றுமன் றுபாய மெண்ணினர்க்
குன்றுகெட் டுயிர்ப்பொடுஞ் சுழனு நாளையின். 4

அல்லவை கடிகபு சாதம் மன்னைநல்
வில்லினி யிற்றுறந் தேக வம்மனை
நல்லிய னபியுமா ரியத்து நங்கையும்
புல்லிய பாயலிற் போயுற் றாரரோ. 5

உற்றவ ளிருவரு முவப்பி னன்மொழி
சொற்றினி திருக்கையிற் றாய நன்னெறி
பெற்றுயர் புகழ்கபு சாதம் பிடனை
யிற்றுறந் தவர்மனை யிடத்தி னேகினர். 6

தம்முயிர்க் கொழுநருந் தையன் மாரியத்
தம்மையு மிருக்கக்கன் டகமு டைந்திவ
ணம்மனைப் பாயலி னிருந்த தென்னென
விம்மலும் பொருமலு மிகவுற் றாரரோ. 7

அற்றவீழ் காமலர் பொருந்து மன்னனாய்
நற்றவ முறுகபு சாவை நன்பொடும்
வெற்றியா ரேகியிச் செய்தி மேதினி
யுற்றவ ரொருவர்க்கு முணர்த்த லென்றனர். 8

சீரிய திறகபு சாவிச் செய்தியை
யாரொடும் பகர்கிலே னென்ற பின்னரு
மாரியா வெனும்பெயர் வழங்கப் பெற்றவிக்
காரிகை யெமக்கினி கதியென் றேதினர். 9

இறைநபி மொழிந்தசொல் லிகந்தக் கற்பலா
நிறைதரு மாயிசா முகத்தை நோக்கிநெஞ்
சுறுமெனை முடிந்தவத் தொகை வெள்ளநீத்
துறைகடந் தருள்கபு சாசொற் றாரரோ. 10

தவமுறு மாயிசா தம்ம னைக்குலத்
தெவர்களும் புகழ்தபி யிருக்கும் போதினிற்
கவிழுறு முகக்கபு சாசொல் வாநெலா
கவிர்ச்சன சபசமாய் நவிற்றி னாரரோ. 11

சாசமுஞ் சன்னையுஞ் சாற்றக் கேட்டிறை
திருசபி வெனிக்தந் தேவி மார்மனை
யருகுறச் சேறலை யகற்றித் தம்மிலத்
திருவிலம் புகழ்சபி யிருக்கும் போதினில். 12

உம்பர்கோ னெனுங்கொணர்ந் தொளிருஞ் செம்மணிக்
கம்பமார் மாடத்தின் வைகுங் காவலர்
தம்பத மடுத்திறை சலாமுங் கூறியு
ணம்பிய பிராட்டியர் செய்தி நாட்டுவார். 13

பொன்னில மவனிவான் போற்றுங் கற்புலாங்
கன்னிகை பார்கபு சாவு மாயிசத்
தென்னுநல் லன்னையு மிவர்க டத்தமில்
முன்னமே கபடமாய் முடித்த செய்தியும். 14

பாரினுக் கணிபெனப் படர்ந்த சீர்திகழ்
மாரியத் தன்னையை நீத்த வாறினைக்
காரிகை செறிகபு சாவென் றுயிசத்
தேர்முக நோக்கிநின் றிசைத்த செய்தியும். 15

அலக்கமா யுரைத்தருந் தோகை மார்க்குளங்
கலக்கமாய் மாரியத் தென்னுங் கன்னிகை
விலக்கமாங் கருமென விடுப்ப தல்லவென்
றிலக்குற மாயத்தொன் றிசைத்துப் போயினர். 16

ஓதிய தலைக்கிறுங் கடிமை யொன்றுகொண்
டேதமி லரிமைவிட் டின்ப மூறிய
மாதுமா ரியத்தினை மக்குந் தேன்மனைத்
காதலாத் தொடைப்புயந் தழீஇ னாரோ. 17

ஊடலுற் றிருப்பதை யுமறு ணர்ந்தகம்
மாடம்விட் டவர்மகள் வைகு மாளிகை
சாடிவந் திருக்கையி னமிவுற் றுண்மெலிந்
கேடவர் விழிகளுழ்ந் திருக்கக் கண்டனர். 18

உயிரினுக் குயிரென வுற்ற செல்வமே
செயிரொரு வருக்குகற் றாதர் செய்கில
சயர்வொடுங் கனழ்ந்ததென் னும்மை யாண்டவர்
அயருற நீத்தரோ சொன்மி யாவென்றார். 19

ஏழையர் னறிந்திலை யாது மில்லைமற்
றாழ்வலி யென்கொலோ வுவப்பு நீங்கிலா
வாழிய மனைவியர் மனைக்குஞ் சென்றிலர்
வேழமே யெந்தையே விளைந்த தீதென்றார். 20

வண்கொளு மாயிசை வாறு கண்டிப
முண்கனி யெனமெலிந் றும்றெ மூந்துபோய்
விண்குலந் தவழ்முடிப் பள்ளி யின்பறின்
கண்புகுந் தியனம்பி கடையிற் புக்கினார். 21

கடையினி லசைவது நிற்பக் கண்டவ
னுடனம்பி தமக்கியா னுற்ற செய்திசென்
றடல்பெற வுரையென வறைதல் கேட்டவன்
சுடர்பணி நபிபதஞ் சென்று சொல்லினான். 22

சொன்னசொற் கெதிர்மொழி சொற்றி டாததால்
மன்னவர் தொழும்பதத் துமறு மாட்டினி
லன்னவன் மீண்டுவந் தடைய லர்க்கரி
யென்னுநன் னபியெதி ரிசைத்தி லானென்றான். 23

மறுமொழி கொடுத்திலா வாறு கண்டுமே
நறுமணி யின்பர்மட் டுத்தி மீண்டுவந்
திறைநபிக் கியானுற விசைத்தி யென்னவே
திறனொடு மசுவதைத் திருப்பி யேவினார். 24

பின்னுமுன் சொல்வபோற் பிறங்கச் சொல்லியு
நன்னபி மறுமொழி நவிற்றி டாததான்
முன்னம்போ லுமறிட முடுகி யாண்டவ
னென்னுடன் வேறொன்று மிசைத்தி லானென்றான். 25

இதமுறு மும்மறுமன் றுதர மிப்படிப்
பதமுறப் பயனுடன் புகர்ந்த னுப்பியு
மதிரிகர் நபிக்குச்சம் மதமின் றென்னவே
புதுமலர்ப் புயத்தும றெழுந்து போயினார். 26

புகாறுந் திறனும றெழுந்து போதல்கண்
டருமது நபிபதத் தசுவ தொல்லைசென்
றிகமெலாம் புகழுமே ரேகின் றுரெனப்
பகர்தல்கேட் டழைத்துவா வென்னப் பன்னினார். 27

வாடிய பயிர்க்குறை மாரி போன்மொழி
கேடிலான் கேட்டுட னெழுந்து கேசரிச்
சோடுறுத் திறலும றென்னுந் தோன்றல்பா
லோடியே சென்றழைத் தவப்பின் விட்டனன். 28

சரண்மரை பணிந்திருஞ் சலாமுங் கூறிப்பி
னாவர்போற் றிறைநபி யுமது வேயெனுந்
திரமக ளிர்களைத் தலைக்குச் செப்பித்தோ
வருண்மென விஃலியென் றகும தோதினுர். 29

ஏதமி லிம்மொழி யியம்பக் கேட்டது
போதுமென் றிறைவனைப் புகழ்ந்து செங்கதி
ராதவன் கறுத்திட வக்க நோக்கிய
மாதவ ருளாநனி மகிழ்ந்து கூறுவார். 30

மருக்கமழ் சோலைசூழ் மக்க நாட்டினி
லிருக்கையிற் கொண்கர்சொற் கேய்ந்து மாகர்க
டருக்கொடும் பணிந்தடி தாழ்ந்து போற்றிநின்
றருக்கமாய் மணமலர்க் தவத்தி ருந்தனர். 31

வண்டலை யூர்தட மதீனம்வக் திவ்வூர்ப்
பெண்டுக ளடைபடி பெரிது நாடொறுங்
கண்டுகண் டன்பர்சொற் கடந்திட் டாரென
விண்டனர் நகைத்தவர் மிக்க வேதரே. 32

வேறு.

பெரிய வல்லவன் றாதர்நம் பிடுறு மாடத்
தரிய பாயலொன் றொருதலை யணையுமே யன்றி
விரிய மற்றொரு பொருள்களுங் காண்கிலேன் விரும்பு
முரிய தினவர்க் கெனிதுநல் வாழ்வுற வொருவன். 33

இடத்திற் செங்கம லக்கர மெடுத்தினி தேந்தி
யடுத்த நன்பொடுந் துஆவது செய்யலா காதோ
மடித்த காபிர்கள் வாழ்வுற லில்லையோ வென்னப்
படித்த லத்திடு மெண்ணைமீட் டளித்தவர் பகர்ந்தார். 34

தீய புன்மனக் குபிர்க ளியாவருஞ் செகத்தின்
மேய வாழ்வுகள் பெற்றனர் விதிமுறை யொழுகுந்
தூய வும்மத்தோர்க் கப்பதி வாழ்வெலாஞ் சோதி
நாய கன்னமைத் திருப்பனென் றுரைத்தனர் நபியே. 35

நந்தி யோடிக லினைத்தவர் நாளறி யாம
ஈந்த வாதுரைத் தென்பிழை பொறுத்திட விரங்கிச்
சிந்தை நேர்படிந் தாஅது செய்யுமென் றகங்கூர்
தந்தி ருமனைக் கேகினர் சலாமுரைத் தன்றே. 36

வருமித் தாடலாய்த் தம்மனை மாளிகை மாட்டி
விருபத் தொன்பது வாரமட் டிருக்கையி லிரங்கித்
தருமத் தப்படுந் தலைவியர் துயரங்க டீர்க்க
வருமைத் தன்குடை யவர்மனை துறந்தெழுந் தனரால். 37

அருக்கன் மேல்கடற் குளித்தன னிருப்பிழம் பனைத்தும்
பெருக்குங் கங்குலிற் புவிக்கொரு தாயெனப் பிறங்குந்
திருக்கு லாவிய வாயிசா மனையினிற் சென்றங்
இருக்கும் போதினி லாயத்தொன் றிறக்கின னிறையோன். 38

அரும்புந் தூய்நெறி மார்க்கமு மும்மையு மகத்தில்
விரும்பு மாதரை மனைக்கருஞ் சுடரென விளக்கும்
பெரும்பு வித்தலம் வேண்டுமென் றுளங்கொளும் பேதைத்
திரும்பி நோக்கிடா திகழுமென் றுரைத்தது செய்யுள். 39

செவிய வாயத்தோர்ந் தாயிசா திருமுக நோக்கிப்
புவிவிருப்பமோ பொற்பதி விருப்பமோ வென்னச்
சவன வாழ்வெனக் கத்துறும் விருப்பெனச் சொன்ன
ரவிரு மொள்ளிழை யாயிசா வெனுந்திரு வனையே. 40

அன்பின் மேவிய மனைவிய ரியாரையு மழைத்து
மூன்பு கேட்டபோற் கேட்டன ரதற்கவர் முதிர்ந்த
வின்ப வான்பதி வேண்டுமென் றனரதி லிருவர்
இன்ப மார்புவி விரும்பினன் னபிதொடர் தீர்ந்தார். 41

நாச்சியார்களிடம் உறுதிபெற்ற படல முற்றிற்று.

ஆக படலம் 59 க்கு திருவிருத்தம் 1729.

அபூபக்கர்சித்திக்கன்னாலை

ஹச்சிற்கனுப்பிய படலம்.

உதித்த செங்கதி ரகட்டினி லுயர்திரு நாமம்
பதித்த சீரபூ பக்கரை யதிர்குரற் பகுவாய்க்
கதத்த வெம்புலிப் போத்தெனுங் கடுந்திற லவீரை
விதத்த கச்சினுக் கிறைநபி யனுப்பிய திசைப்பாம். 1

கார்மு கிற்குடை நீழலி னுலகெலாங் காத்தோ
ராரம் வீற்றொளிர் புயவசு காபிகள் முகமும்
போரு கங்களை நோக்கியிவ் வருடத்திற் பொருவில்
வேர்செ றிந்திடுங் கச்சினுக் கேகுவோ மென்றார். 2

ஆதி தூய்நெறி யனைத்தையு முணர்ந்தவன் வழியே
நீத முற்றறற் றீனவர் குழுஉக்களு நீங்காப்
பாத கக்கொடுங் குபிரருங் கலந்துடன் பணிந்து
மாதர் கச்சிசெய் தேத்திட வந்தவிவ் வருடம். 3

வரிய ளித்துலக் கேனுறு மலர்ப்பொழில் செறிந்த
பார்ந கர்க்கெலா நம்பிக்கை யோலையும் பரிவி
னூரு றக்கொடுத் திருப்பதிக் கிங்களு முடன்று
தரிய லர்ப்பொர விலக்குறு மாதமெய்த் தவத்தீர். 4

மாறி லானருள் பெருநபி யேவிந்த வருடம்
போற தல்லவீ ரருந்தவம் புரிகின்ற கச்சிற்
கூறு தேன்றொடைப் புயத்தபூ பக்கரை யும்ப
லேறு போற்செல வனுப்புமென் றருளொடு மிசைத்தார். 5

உரவ ரியாவரு மொருப்பட வுரைத்தசொற் கேட்டுப்
பருவ ரைப்புயத் தபூபக்கர் முகமலி பார்த்துக்
கருதி யின்புறத் தெனுமோர் குறத்தைக் கச்சின்
வருந ரக்கெடுத் தோதியப் பொருளெலா மவனும். 6

என்ற ரும்பொரு ளிருத்திய குறத்தை யெழுதிக்
குன்றி னைப்புயத் தபூபக்கர் மலர்க்கரங் கொடுத்து
வென்றி வாக்கிய முடன்பல விருதுக ணல்கிச்
சென்று வம்மென வனுப்பின ருலகெலாஞ் சிறப்ப. 7

நிலவெ னத்திகழ் மோலிகளுஞ் சுகிர்ஜார் பலவுங்
குலவச் சேர்த்தியொன் றுயிர் குடித்துக்கண் ணடுக்குங்
கலைக வேற்கரத் தேந்தியொள் ளுறைகழித் தொளிரும்
புலவு வாள்இலை கேடகம் பிறவும்பூட் டினரால். 8

மிதித்த ரும்புனல் குமிழிவிட் டெழுமண்ணில் வினைத்தோர்
பதத்தி றஞ்சியைங் கதிப்பயில் பாடல வயவர்
மதத்த வெங்கரி யெனப்புடை வீரக்குடை வானி
லுதித்த திங்கள்போற் குளிர்நிழ னிழற்றிநின் றனரா. 9

வெண்ணி றக்கதிர்க் கதலிகைச் சோலைகள் விளங்க
அன்ன விர்க்கவ ரிகடிரை நுரையென விரட்டப்
பண்ணு டைப்பெரு முரசமேழ் பரவையிற் கறங்க
மண்ணி னிற்புகழ் கவிஞர்க ளாசிவாழ்த் தெடுப்ப. 10

மனங்க யங்கவெங் கால்சுர மடுப்பவா னூர்ந்த
கனங்க லைந்தெழக் கணைகடை படச்சுட ரிலகு
மினங்க ரங்கடல் புகநடை யேயுங்கோ டகமேற்
சிலைக்கி டாதவே லபூபக்கர் கொண்டனர் திறத்தின். 11

பகட்டு வாளைக ளெழுந்தருங் கமுகினம் பாளை
முகட்டிற் பாய்ந்தவ ணுறையொடு கிழிந்தப்பூ முளரிப்
பொகுட்ட ணம்மெழ வுழக்கும்வா வியிற்புறத் தரள
மகட்டு யிர்த்தவெண் சங்குலா மதினம்விட் டகன்றார். 12

பெரிய ரைத்தருத் தாழ்சினை மலர்களிற் பூந்தேன்
வரிய ளிக்குலம் மாந்திய சோலையு மடுவு
முருகு யிர்த்ததண் டாமரைக் கழனியு முகிறோ
யரிய மாமலைக் கடங்களுங் கடந்தகன் றனரால். 13

அபூபக்கர்சித்தீக் கண்ணலை

கச்சிற் கனுப்பிய படலம் முற்றிற்று.

ஆக படலம் 60 திருவிருத்தம் 1742.

அபூபக்கரண்ணலும் அலியாரண்ணலும் சேர்ந்து

ஹஜ்ஜிசெய்த படலம்.

வலிய புன்குபிர்ச் செறுநரை யடக்கும்வா ளலியே
புலவு வேற்கரத் தபூபக்கர் தம்முடன் போந்து
நலனி ருந்தப ருத்தெனுஞ் சூறத்தை நரர்க்குச்
சொலியு ணர்த்துதற் கேகுமென் றனுப்பினர் தூதர். 1

முயலெ னுங்களங் கசற்றவெண் சசிகர் மோலி
வெயில்வி ரிந்திடச் சென்னியில் வியப்புறப் புனைந்து
வயிர வொண்கதிர்க் கஞ்சுகி மெய்யினில் வனைந்து
செயிர றும்மணிக் காளக மருங்கினிற் சேர்த்தி. 2

ஒலி டுஞ்சுரும் புனுகரு வொழுகுபூ மரப
மாலை யம்புயத் தணிந்தடை யலருயிர் மாந்தும்
வேலை யிற்கனை கொடுமாந் திகிரிவெங் கதிர்வாள்
பால மற்றவுந் தோண்மருங் கணிந்தனர் பரிவின். 3

விண்ண வர்க்கர சவனியில் வந்துவீழ்ந் திறைஞ்சு
மன்ன னன்னபி சததள மலர்ப்பதத் தடுத்துக்
கன்னின் முந்தியுட் களிப்பொடுங் கதிர்மணி திளைத்த
பண்ணி ருத்திய துல்துலம் பரிமிசை கொண்டார். 4

இருபு றத்துமொண் கவரிவெண் டிரையென விரட்டக்
குரும ணித்தொடை தூக்கிய மதிக்குடை நிழற்ற
விரிநெ டுங்கொடிச் சோலைகள் விசும்பள வளப்பச்
சொருகு வார்முர சவரியின் முழக்கெனத் துவைப்ப. 5

சுடர்பி றைக்கொழுந் தெனக்கவி குரக்கடும் பரிமேற்
றேன்பி லிற்றிய மலர்த்தொடைத் திண்புயத் திறலோர்
மீன்பெ ருக்கிய கடலினும் புடையினில் வெவ்வா
யூன்பெ ருக்கிய புலியென வரப்பரி யுகைத்தார். 6

அள்ள லங்கருஞ் சேறணை ததும்பிய நதியும்
வள்ளை வாயினிற் குத்திடமை கண்வளர் வயலும்
முள்ளு டைப்பெருங் கானமு முழைநெடு வரையுந்
தள்ளி நீந்தியப் பால்விரைந் தேகினர் தருக்கின். 7

வண்ட லம்பிய பொழில்செறி மதீனநன் னகர்க்கும்
பண்ட ரும்வளை பயினதி மக்கமர் பதிக்குங்
கண்ட மத்தியி னதரிடை யபூபக்க ரெனுங்கார்க்
கொண்ட லேத்திறற் புலியலி சென்றுகூடி னரால். 8

மருப்பு குந்தொடைப் புயத்தபூ பக்கரு மதக்கைப்
பொருப்பி டங்குதி ரக்கொளும் பொறிப்புலி யலியு
மொருப்ப டத்திரண் டோங்கலு மடவியு மோங்குங்
கருப்பொ லிந்தசூற் சங்கமூர் வாவியுங் கடந்தார். 9

தூர்ச்ச டைக்கருங் கன்னலங் கொல்லையஞ் சுற்றி
யேர்க்கி ளைத்திடுங் கழனியுங் கதலியின் றிரள்போய்க்
கார்க்கு லத்தக டிடங்கெழுந் தோட்டமுங் கவிக
ளார்க்குஞ் சோலையுங் கண்டுமக் காநக ரடுத்தார். 10

நீதி நாயக னருட்படி நிதநிதம் புதிதா
யாதி நாண்முத லெழுபதி னாயிர மமரர்
சோதி யைப்பணிந் தேத்துதற் கமைத்தொளி துலங்கு
மாதர் மாமணிக் கஃபத்துல் லாவையுங் கண்டார். 11

வாங்கு கூறுதற் கருமணிச் சிகரங்கள் வகுத்திட்
டோங்க லென்னவே யுயர்மனு ருக்களு மும்ப
ராங்கி ருந்திவ ணுறவிரு சாரமொத் தமைத்த
பாங்கி னீண்மறு வாசபா மலைகளுங் கண்டார். 12

உச்சி வான்றவழ் தசும்பணி மாடங்க ளொளிருஞ்
செச்சை மேனிடைகள் கூடகோ புரங்களுஞ் செறிந்த
வச்சி ரப்பொருப் பன்னகோங் கெழில்கற மதிளு
மிச்சை மேவிய வாடரங் கெனவகளுங் கண்டார். 13

தீப மொத்தசெம் மணிதிகழ் தெருத்தலை புகுந்து
பாப வேரறுத் தெறிந்திடும் பள்ளியிற் குறுகிச்
சாப லங்கைய ரியாருந்த வர்வலம் வந்து
மாபு தங்களைத் தருமற பாமலைக் கெழுந்தார். 14

செய்யு ளேப்பசி பீதினிற் கொண்டம ராளு
னைப்பு டைத்தொளிர் வாட்கிரை யூட்டிய கிருபா
வைய கம்புகழ் மக்கயா நகர்தனைக் கடந்து
பெசய்யி லாத்தப முடியற பாந்தினிற் போந்தார். 15

தவமு ஞற்றிய தீன்முனி வின்கருக் தணியாக்
கவரு ளப்படுங் கொடியபுன் குபிரர்பல் கணமு
நிவவு மம்மலை யுச்சியி னிற்கின்ற போதிற்
குவவுத் தோளவி பலரையுங் கூவியோ தினரால். 17

தேறற் றேய்தொடை யவிபருஅத் தெனமிகச் சிறந்த
கூறத் தோதிப் பொருளெலா மியாவற்குத் துலங்கக்
கூறிக் காட்டியித் திங்கடொட் டருங்குபிர்க் கொடியோர்
ஏழு திங்களுன் கிளையில னைத்தலா மெனவும். 18

ஐந்து திங்கள்வன் தடுக்கிடிற் குபிரரென் பவருஞ்
சிந்தை நாணமற் றுறுதிறு வாணிக டிரளும்
வந்து பள்ளிப்பிர தெக்கணாம் வரவுமிந் நிலத்தி
லெந்த நாளுமக் குபிரர்தா ளிடப்படா தெனவும். 19

கால காலமுங் குபிரர்க ளெரியழல் சுதுவா
தால காலவெவ் விடப்பணை வரவங்க ளமைந்து
பாலஞ் காக்கொடுங் கள்ளியுங் கெந்தகப் பலியு
மூல மாகிய நிரையங்கள் மூழ்குவ ரெனவும். 20

சுற்ற மற்றவன் றனைமக வற்றவன் றவக்க
மற்ற மேலவன் றனைத்தொழு மூமினு ளவர்க்கு
நற்ற னத்திருப் பதியுள மகிழ்ந்திட நல்கி
யிற்று ருப்பல செருக்கொடு மிருப்பர்க ளெனவும். 21

இன்ன பன்மொழி யவியெனும் புவியெடுத் திசைப்பத்
துன்ன லார்முகங் கருகியுள் ளயர்ந்துடல் சோர்ந்து
நன்னி லாச்சுதை திற்றெயின் மக்கமா நகர்விட்
டன்ன காலையி லகன்றன ரவரவர் பதியில். 22

மத்த கக்கரி யொப்பபூ பக்கரும் வனசக்
கைத்த லத்தொளிர் அல்புக்கா றெனும்வடி வாளாற்
சத்து ருக்குல மறுத்தெறி தாக்கெனு மவியு
முத்த மத்துநல் வயவரு முன்னிமேற் கொண்டார். 23

புன்னி யத்தல மனைகளிற் புரவிவிட் டிறங்கிப்
பண்ணு நற்கிரி மங்களும் பரிவுடன் முடித்தோர்
கண்ணன் வைகிய தலங்களிற் கற்கரு மெறிந்திட்
டெண்ணி லொட்டைமா டறுந் திடும்பலி யீய்ந்தார். 24

மணிதி ளைத்தெழு மதிற்செறி மக்கமா நகர்க்கோ
ரணிபெ னச்செறி கஃபத்துல் லாவகம் வந்து
தணிய கின்றெழு தாந்தவா பொல்லையிற் சுற்றிப்
பணியு நெற்றிமண் படத்தொழு தெழுந்தனர் பரிவின். 25

தூவி லாமறு வாசபா வெனுமிரு சயிலத்
தேவ லின்படி யேறிநற் றூஆவிரந் திறங்கிப்
பூவி லோடியு நடந்தும்பின் போந்தற நிலையா
னாபு சம்சமீ ரருந்திபொன் முடிகளைந் தனரால். 26

எல்லை யற்றசீர் பெருகிய குறைசிக ளெவர்க்குஞ்
சொல்லு நன்மொழி வழக்கங்க ளனைத்தையுந் தொகுத்து
மல்லு லாங்கட கரிபெனும் வயவர்கள் சூழப்
பல்ல ரைப்பரி மிசையிரு பகலென வெழுந்தார். 27

கடலொ லித்தென வாக்கியம் பலபல கறங்கக்
குடைகொ டித்திர ளிரவிவெங் கொடுங்கர மறைப்பச்
சுடர்ம ணிப்பிடிக் கவரிகள் சுழற்றவெண் சங்கம்
புடைக ளிற்றொனி முழக்கிடப் புரவிதாள் பெயர்த்தார். 28

தென்ற லங்குழ லிச்சிறு பிள்ளைக டிளைப்பக்
குன்று போலுயர் மனைகளிற் சாளரக் கொசுக்கி
பொன்று மக்கம்விட் டுயர்மதீ னாவெனு நகர்க்கு
வென்றி றத்தொடு நடந்தனர் மறிதிரை கடுப்ப. 29

முருகு யிர்த்துயர் பொங்கரின் முகைத்தவெண் மலர்கள்
பருகி யஞ்சிறைப் பொறியறு பதமிசை யாடக்
குருகி னங்கள்கண் படுக்குநீர்த் தடங்களுங் குவடு
மரிதி னிற்கடந் தருண்மதீ னாநகர் கண்டார். 30

அருந்த நாட்கரும் பினிற்சுரும் பரித்ததே னொழுகி
நிறைத்த வாவியு நறுமலர்ச் சோலையு நிலவெண்
றெறித்த தண்சுதை தீற்றிய வஞ்சியு மடமும்
பொறுத்த வப்பதி தனிற்றிரைப் புணரிபோற் புக்கார். 31

கண்ட பேர்கள்பல் பவங்களைக் கருவறுத் தெறியு
முண்ட கப்பத முகம்மது நபிமுனம் போந்து
தெண்ட னிட்டருங் கச்சினிற் றிறனெலாஞ் செப்பி
மண்ட லம்புகழ் மன்னர்தம் மனைகளிற் போந்தார். 32

அபூபக்கரண்ணலும் அலியாரண்ணலும் சேர்ந்து
ஹிஜிறத்துச்செய்தபடல முற்றிற்று.
ஆக படலம் 61 க்கு திருவிருத்தம் 1774.

சுட்டெறித்தபடலம்.

இகத்தி னோர்கிளை றத்தொரு பத்தினிற் றெமலா
உதித்த திங்களிற் ஷரீபெனும் பெயருடை புரவோர்
கதித்த மாமறை முகம்மது நபிதிருக் கமலப்
பதத்தில் வத்திச லாத்தினிற் புகுந்தனர் பரிவின். 1

ஐய தீனிலை யுறைந்தபின் னவர்தமைத் தன்னூர்
வெய்ய போர்முகத் திரண்டொரு தாஞ்செல விசும்பும்
வைய முப்புகழ் நபிவிடுத் தனரரி மான
மொய்ய மாக்கடற் றடவொடு மீண்டனர் முஞக்கி. 2

இத்த லைத்திறத் தவர்தமை யொருதினத் திறசூல்
நத்து லாந்தட வெமனெனு நாட்டினின் கக்க
ளொத்த கோயிலொன் றும்பர்கள் மகத்திற் கட்டி
வைத்த பள்ளிவா யிற்கிது நிகரென வகுத்தார். 3

குருத்த சன்னங்க டற்றிய கோயிலைக் கதுமென்
றுரைத்த புன்குபிர்க் கூட்டத்தி னுள்ளவர் திகழுந்
தரித்த லத்தினி னாமலர்த் தாமங்க ளேற்றிக்
கருத்து வேறின்றி வணங்கினர் கோயிலைக் கடிதின் 4

கட்டி டத்திவண் புகுமெனத் தவர்குலத் தெழுப்பிக்
கொட்ட மிட்டெலாம் பரிகளூற் றைம்பதுங் கூட்டித்
தட்டர் கிக்கிர கஞ்செயச் செலுமெனச் சொலும்போ
தட்ட திக்கிலும் புகழ்செலும் ஷரீபெடுத் தறைவார். 5

எட லர்ப்பொழின் மக்கமா நகர்க்கிறை யேயமன்
கோட கத்தின்மேற் றிடத்துடன் கொண்டிலே னென்றூர்
நீடு மென்கரங் கொண்டவ ரூத்தினி னீவிப்
பீடு றத்துஆச் செய்தனர் பெரியவன் ஆதர். 6

அதிதி யோர்க்கரு ளம்புயக் கரந்தொடும் பொருட்டாற்
குதிரை யேற்றத்தி லவர்க்கிலைக் குவலைய முழுது
மெதிர மற்றில்லை யெனச்சொலுந் திடத்தவ ராகித்
ததிசெய் தாதரை யிறைஞ்சியச் சுவத்தின்மேற் கொண்டார். 7

உலகம் போற்றிய தனிக்குடை யொன்றுமே னிழற்ற
வலகி லாக்கொடிச் சோலைக ளகல்விசும் பளக்க
விலகு சாமரை யிருபுற மிரட்டவெண் சங்கம்
பலபல் வாத்திய முழங்கவாம் பரிகண்முன் னடக்க. 8

மன்ற லுண்மலர்ச் சோலையும் பழனமு மடுவுங்
குன்று நீந்திநீ ளெமனெ னுந் தேயத்திற் குறுகித்
துன்றும் வெங்குபிர்ச் செறுனரைத் துறந்திசல் விளைத்து
நின்ற கன்மதிட் கோயில்சுட் டெறிந்தனர் நிமிடம். 9

அத்த லத்தது கருமங்க ளனைத்தையு முடித்துத்
தத்து வாம்பரி வீரர்க ளியாவருந் தடங்கா
மொய்த்த மாமதி னுவினில் வந்தொரு முதலோன்
மெய்த்த நன்னபி பதந்தொழு திருந்தனர் வியந்தே. 10

வேறு.

பின்னுமோர் தினத்திற் செம்பொற் பிறங்கனோர் புயஷை ரீபை
நன்னபி யிறசூல் கூவி யெமனெனு நாட்டின் கண்ணே
மன்னவன் றல்கு லாவு மவன்றனை மகிழ்ந்து பெற்ற
வன்னையா முமைமென் பாளு மவனியிற் பெரியோ ராமால். 11

அவரிரு வோருந் தூய வாரணக் கலிமாச் சொல்லி
யெவமறுந் தீனி லுற்று லெமனெனுந் தேய முற்றுந்
தவமுறுந் தீனில் வந்து சார்புறு மவர்கள் பாற்போய்
மவுலருந் தீனி லாக்கி வம்மென வனுப்பி னூரால். 12

எழுந்திறை தூதர் பாத மிணைவிழி யொத்தி முத்தி
வழிக்குமீதன் பாயுஞ் செந்நெல் வயன்மடுப் பிறவு நீந்திச்
செழுந்தடத் தெமனிற் சென்று தல்குலா தனையு மன்னோன்
கெழுமுந்திரு வனையுங் கண்டு தோத்திரத் தடுத்து மாதோ. 13

இருவர்த மனதுக் கேய்ந்த வினியநன் மொழிகள் கூறிச்
சுருதியு மோதிக் காட்டித் தூய்நபி காரணத்தி
னரியவை சிறிது மார்க்கத் தறநெறி சிறிதுஞ் சொல்லி
யொருமனப் படவே தீனி லாக்கின ருணர்வின் மிக்கார். 14

தல்குலா வுடனே யீன்ற தாயுநல் லிசுலா மார்க்கம்
புல்லினே மென்னு மின்பப் புளகெழப் புயங்கள் விம்மி
யொல்லிலாத் தொழும்பி லீரைந் தாயிர முரிமை விட்டார்
மல்குநீர்த் திரைபோ லெண்ணின் மாக்களுந் தீனிற்சேர்ந்தார். 15

நடப்பன விதிகண் முற்று நன்குற வுணர்த்திச் செந்தேன்
படப்பையு மடுவு நீந்திப் பதிமதி னுவின் வந்து
முடிப்பணப் பணிப கர்த்த முகம்மது நபிதஞ் செய்ய
வடிப்பது மத்தைத் தொட்டு முத்தியாண் டிருந்தா ரன்றே. 16

கன்மதிட்கோயில்சுட்டெறிந்தபடலமுற்றிற்று.

ஆக படலம் 62 க்கு திருவிருத்தம் 1790.

நகருனி நகரத்தார்

ஈமான் கொண்ட படலம்.

வேக வாய்ப்பரிக் காலிது விதமுக நோக்கிச்
சீக ரத்தடஞ் செறிநச ருனென்னும் பதிபோய்ப்
பாகி ருத்திய மறையவர்க் கருமொழி பகர்ந்து
வாகி ருத்திய தீனினி லழைத்திடு மறுத்தால். 1

திறத்தின் மிக்கநீ ருமக்கெதி ரிலைகடற் செகத்தின்
புறத்தின் மற்றிலைத் திடத்தினும் பெலத்தினும் புகழோ
னறக்கொ டுத்தன னுகையா லவருடல் வாளா
லறுத்துத் தீனிலே புகுத்திடு மறநெறி தழைப்ப. 2

என்று நன்மொழி யின்னன பல்பல விசைத்து
வென்றி சேருஞ்சவ் வாலெனுந் திங்களின் விடுலை
நின்று கூயவர் காலிதை யனுப்பினர் நினைவி
னொன்று மேலவ னுதவிகொண் டெழுந்தன ருவந்தே. 3

படர்ந்த வெண்பொறிப் பிணைகளைப் பசிக்குணப் பாய்ந்து
தொடர்ந்த செந்தழற் சுழல்விழி யுழுவைபோற் றன்னுங்
கடந்த டம்பொழிற் கழனிகண் மற்றவுந் தொலைய
நடந்து சீர்நச ருனென நகர்வயிற் சென்றார். 4

ஈட்டு மாமறை முதியவ ரெனப்பெய ரெடுத்தோர்
மாட்டி ருந்துரை வழுவிலா தெதிர்மொழி வழங்குந்
தாட்டி கத்தின ரறிவினர் முதல்வர்க் கடையுள்
கூட்டி வைத்தவர்க் கினியநன் மொழிபல கொடுத்து. 5

ஆதி நாயக னளித்தநன் மறைப்புறக் காணை
யோதி யன்னவர்க் குநீநிட தங்களு முணர்த்திச்
சாதி நாயக ரப்துல்லா தவத்தினில் வந்த
நீதி நன்னபி காரணக் காட்சியு நிகழ்த்தி. 6

பானு வெவ்விருட் படலங்கள் சிப்பபோற் படியின்
மேனி லாங்குபி ரிருள்கெடுத் தறநெறி விளக்கித்
தீனி லாக்கின ரெண்ணிரு கலைகளுந் திகழ
வானு லாங்கதிர் மதியெனு மானன வள்ளல். 7

சந்தி ரக்கலி மாவுரை சொற்றருந் தீனில்
வந்த வாரொரு விண்ணப்பத் திட்டினில் வரைந்து
முந்த வந்தவா னவர்க்குமுன் வந்துமா நிலத்திற்
பிந்தி வந்தவர்க் கனுப்பினா ரொற்றன்கை யிறங்க. 8

ஓலை யைக்கொணர்ந் தளித்தனன் வாசக முணர்ந்து
மாலை யம்புயம் புளகித்து மட்டறு வோகை
சோலை சூழ்ந்தயுள் ளகமெலாம் பெருகிமேல் வழியக்
காலை யம்புய முகமதி மலர்ந்தனர் கபீபு. 9

இக்கி தற்கலி மாவுரைத் தினியநற் றீனிற்
புக்கி லோர்களைக் கூட்டியே யிவண்புகு மென்னா
மக்க நாட்டினுக் கிறையொரு திருமுகம் வரைந்து
திக்கெ லாம்புகழ் காலிதுக் கனுப்பினர் திறத்தின். 10

அனைப்புள் காலிது முணர்ந்தக மலர்ந்தறம் வளரத்
தனத்தின் மிக்கவ ரறிவினர் தவத்தின ரியாருங்
கனைத்த வெண்டலைப் புணரிபோற் புடைவரக் காலி
தெனத்த ரும்பெயர்க் குருசில்வெண் சியமொத் தெழுந்தார். 11

அடரும் வெய்யகான் மலையத ரனைத்தையுங் கடந்து
தொடரு மன்னவர் தம்முடன் வந்துதொல் புவிவான்
படரும் வெண்புகழ் முகம்மது நபிபத மலரை
விடா றத்தொழு திருந்தன ரியாவரு மினிதின். 12

பலனு றத்தொழு தவர்க்கெலா நன்மொழி பகர்ந்து
நலன்மி குத்தவ ருடன்வரு பவர்களி னமைத்
கனக வேற்கரக் கமிசெனுங் காவலர் தமக்குந்
தலைமை யுங்கொடுத் தனுப்பின ரியாவருந் தனசி. 13

கருதி லர்க்கரி கமிசெனு மரசர்கோன் கருணை
பெருகி மிக்கடை மல்கிய நபிபதத் திறைஞ்சி
மருவ லர்த்தட வாவிகான் மலைகளு நீந்தித்
திருவுஞ் செல்வமு மேவிய தம்பதி சேர்ந்தார். 14

நசுரானிநகரத்தா ரீமான்கொண்ட படலம்

முற்றிற்று.

ஆக படலம் 63 க்குதிரு விருத்தம் 1804.

நபிசல்லல்லாகு அலைகிவசல்லம்

ஹச்சுசெய்தபடலம்.

பொறிச்சிறை யறுகான் ஞிமிறொலி கேட்டுப் புதுப்புனற் பகட்டின வாளை, நறைக்கனற் கொல்லை முழுதினு முழக்கி நாளிகே ரத்தின்மே லேறி, யுறைக்கரு முகிலுற் றுள்ளிமா மழைபோ டுகெண்டினி திறங்கிய மக்கத், தறைக்கணிற் சென்று திருநபி கச்சிற் ஷறத்துடன் முடித்தவா றிசைப்பாம். 1

ஒருதனிச் செங்கோ லுலகெலாஞ் செலுத்து முயர்புகழ் பெறுநபி யிறசூல், மருவிய ஹிசுறத் தாண்டொரு பத்தில் வளந்தரு துல்கச்சி மாதந், தெருளுறு கச்சின் பறுலுகள் முடிக்கச் சேறலை யாவரு முணரச், சொருகுவார் முரசக் திசைதொறு முழக்கச் சொல்லினர் தோழர்க டமக்கே. 2

உரியிழுத் திறுக்கும் வார்முர சதனை யொட்டையின் புறத்தெடுத் தேற்றி, விரிதரு நான்கு திசையினுஞ் சென்று வெற்றிசேர் தீனவ ரியாரு, மரிதினிற் கச்சி செயவெழு மென்ன வதிர்குரன் முரசறைந் தனர்கேட், டெரிமணிப் பாண்டில் புரவிசோ கங்கள் மிசையொரு கோடியில்வந் தனரால். 3

வந்தனர் திறத்த வயவர்கள் சோகம் வாம்பரி பாண்டில்விட் டிழிந்து, சந்திர னிரவி யிரவினிற் றொட்டி றனைபஷைத் திடவிழி துயிலுஞ், சுந்தர விறசூல் சததள கமலத் துணைப்பதந் தாழ்ந்துகை கட்டிச், சிந்திரு புடையும் வந்தது போலத் திரளொடு முவந்துநின் றனரால். 4

நீதநன் னெறிக ளனுதினம் விளக்க நிறைகருஞ் சூன்முகி றவழும், பூதரத் தமைத்த சுடர்விளக் கென்னப் பொறியராம் பணத்தினிற் பரித்த, மேதினி யிடத்தி லருளொடு முதித்து விறல்கொளுந் திருநபி யிறசூ, லாதரத் துடனே மனைவயிற் புகுந்தா ரணிபல தரிப்பதற் கன்றே. 5

பிறைவக ளனைத்துந் திரண்டொரு வடிவாய்ப் பிறங்கெழின் முடிசிரந் தாங்கி, நிறைபயோ ததியி னுதித்தவெண் டரள

நிகர்த்தபூஞ் சட்டைமெய்த் தொட்டு, மறுவிலா மதியை வளைய
மூர் கோள்போற் காளக மருங்கினில் வீக்கி, நறைகமழ் மரப
நவ்மணி வடமு நகநெடுந் தோண்மிசை வேய்ந்து. 6

கோறலைக் கருதி நபிமுனங் கிடந்த குற்றுடை வாளெடுத்
தொருவன், மாறிலின் றோங்கி வீசுமுன் கையைத் திருகிவீழ்
வான்மருங் கணைத்துப், பேறிலா வுபையென் றுரைப்பவ னூரத்
திற் பிடங்கினு லோங்கப்பட் டுருவும், வேறிரு வலப்பா கத்தினி
லேந்தி வில்லிடக் கையினிற் பற்றி. 7

தனியவன் மறைநே ரனுதின முணருஞ் சையதுக் கிருதடை
யாள, மெனவலி கரத்தி லுதவிய கணையு மீர்ம்புனல் பொசிவி
லா வூற்றில், வளமிகப் பெருக வூன்றிய கணையு மற்றும்பல் கா
ரணம் விளைத்து, முனைபுற கணைகள் செலுத்துபு சித்ர வாவமு
முதுகினிற் றரித்து. 8

அவிர்முடி யறுசின் வீறுக ளடக்க வல்லினிற் றொட்டுமுன்
சென்ற, கவுசருங் கமல மலர்க்கருஞ் சேற்றுக் களிபுகச் செய்த
பூங் கழலிற், பவுசுற வணிந்து விண்ணகந் துடைக்கும் பதாகை
முன் செலுத்தியாண் டிருந்த, தவிசுவிட் டெழுந்து தலைக்கடை
கடைந்து தன்குற வெளியில்வந் தனரால். 9

வெண்டலைப் புணரி கடுப்பவந் துற்ற விறலரு காபிகள் கூட்
டத், தெண்டனைத் தெரித்து நோக்கநாற் பாரு மிரம்பெயர் மதீ
னம்விட் டெழுமுன், கண்டன வேத நபியிற குலுங் காவலர்
பல்லரு மேகி, யண்டர்கள் பணியும் பள்ளியி லுபைய றெக்கஅ
த்துத் தொழுதன ரதன்பின். 10

செவிசிறு செங்கட் குதியவா னெடுந்தாட் சேட்டிளந்
தொறுவின்மேற் றிருந்து, மவிரின மணியாற் புதுக்கிய கிளிக்கூ
ட்டாசன மீதினிற் கோடி, யுவவுவெண் மதிபம் வந்துறைத் தன
போ லுபர்புகழ் முகம்மது நபிதன், வைமுற வெழுந்தா ருரவர்க
ளியாரு நடனவாம் பரியின்மேற் கொண்டார். 11

உலகெலாந் தொழும்வெண் கவிகையுங் கொடியு முயர்நிசம்
புகட்டள மோங்க, விலகிவில் அமிழு மணிப்பிடிக் கவரி வேலையி
லுரையென விரட்டப், பலபலமேள வாத்தியம் பொங்கப் பாவ
ல ராசுவாழ்த் தெடுப்பச், சலதரக் கவிகை யொன்றுமே னிழற்
றத் தண்டலை மதீனம்விட் டெழுந்தார். 12

வானவர் மகளிர் கற்பக மலரை வனசமென் கரமல ரேந்தித், தானமீ திருந்து நெறியிரு மருங்குந் தாரைமா மழையெனச் சொரியத், தேனுலாங் காவும் வயன்மடு வெற்புஞ் சென்றொரு சமதல நின்று, கானிலப் பரப்பி னிற்குமா னவரா நாலையை நோக்கினர் நபியே. 13

எண்டிசைப் பரப்பு மென்னிடற் கரிதா யெங்கணு மிவுளிகள் பூட்டும், வண்டியின் கவின வயப்பரித் திரளின் மழவிளவொட்டகைக் கணத்தின், விண்டெனப் பணைத்த புயத்தகு காபிமார்கடம் வீக்கமும் விழியிற், கண்டக மலர்த்தூ யியப்புள நெறிப்பக் கண்ணக னெறிகடந் தனரால். 14

பொதுவற வுலகம் புரந்தவ ரப்பாற் போந்தொறும் போந்தொறும் விண்ணோர்க், கதிபதி வானின் றடிக்கடி புறக்கா றுயத்தாக் கொணர்ந்தவ ரளிப்ப, விதயமா மலரி னதின்பொரு ளிருத்தி யென்னருஞ் சிறப்பொடு மேகி, மதுமலர்த் தடஞ்சூழ் அல்குலை பாவென் வயிறுறைந் திறுத்தன ரன்றே. 15

வாவியிற் றெளிநீர்க் குளித்துளுச் செய்து மனனொளுத் தோட்டியாற் புலன்க, ளோவிடா தடக்கி யிரண்டிறக் கூத்தங் கொப்பிலான் றனைத்தொழு தேத்தி, மேவிய கச்சி செய்யுநியத்தை விருப்பொடுஞ் செய்திரு ளூழங், காவல ரிறசூல் நபியுமற் றவருங் கட்டினர் கருத்தொருப் படவே. 16

இயல்புறு மிஹுறாங் கட்டிய தலம்விட் டெழுந்தகன் கவிருளம் பேற்றிப், புயன்மதி கதிரு மறைத்திட வெழும்பும் புனைமயிர்க் கவரிவாம் பரிமேல், வயமுறு மேன வாக்கிய முழங்க வாவியுஞ் சோலையு நீந்தி, நயமுறு மக்க நகரினுக் கணித்தாய் நண்ணினர் நாலைக ளேய்ப்ப. 17

நாகிளங் கமுகு புலியடித் தாற்று நறுந்தழை விரித்திடும் வாழை, பாகுநீர் பச்சைக் குரும்பைக டாங்கிப் பருமட லிளைத் திடுந் தெங்கு, மாகமட் டுயர்ந்த சிலம்பிறாற் செங்காய் மல்குகச் சூரங்கள் பிறவு, மேகனன் னபிக்குச் சலாமுரைத் தடிதாழ்ந் தின்கனி மலரளித் தனவே. 18

குருகடை கிடக்கு முண்டக வாவிக் குலவியீ வரிச்சிறை யறுகாற், பிரமரங் கள்ளுண் டேழிசை கெழுமப் பீடுறு நபிபு

கழ் பாடப், பொரியவரைப் பலவின் முப்புறக் குடக்காய்ப் பூங்கனி வருக்கைகள் சிந்தும், விரிதலை நெடுவாற் செம்முக மந்திமேவிய சோலையுங் கண்டார். 19

ஒன்றெனு முதல்வ னமைத்தொளி விரிக்கு மொண்மணிக் கம்பத்தூல் லாவுங், குன்றென நிவந்த கறவெமனு மதிளுங் கொடுமுடிச் சபாமறு வாவுந், தென்றலங் கன்று தவழ்மணி மாடச் சிகரமே னிறுவுவெண் கொடியு, மின்றரு மாழைத் தசும்புக ணிரைத்த மேனிலை பிறவுங்கண் டனரால். 20

வையக முழுது மறையெனுஞ் செங்கோல் வழங்கிய வேதிய ருடனே, வையமி லிசுலாந் தனக்கொரு விளக்காய் வருமசுகாபிகள் பலரு, மெய்யுறுங் கச்சி முடிக்கநம் பதிக்கு மேனினை ரென்பதை யுணர்ந்து, தய்யநன் மக்க நகர்க்கிறை யுத்தா வுடன்றலக் காக்களு முவந்தே. 21

மறுகணி திருத்தித் தரைமெழுக் கிட்டு மதிட்களிற் சித்திரந் தீட்டி, யுறைமணிக் கடைக டொறுமணிக் கும்பத் தொளிர்பசும் பாளைகள் விரித்து, நறைகமழ் மலர்ப்பூங் காவண மமைத்து நாளிகே ரங்கமு கிக்குப், பிறவுமங் கழகா யணியணி நிறுவிப் பிறங்கொளித் தீபமு நிறைத்தார். 22

இத்தகைச் சிறப்பு நகரெலாம் விளக்கி யிரவலர்க் கின்னமுதளித்து, வித்தக ரியாரும் வாக்கியங் கறங்க விரிதிரை சுருட்டிவிட் டெறிநீ, ரொத்தெழுந் தெதிர்போய் முகம்மது நபிதா னொளிமணி மகுடங்க டாழ்த்திப், பத்தியின் முத்தி யிட்டுநன் முகமன் பகர்ந்தழைத் தவந்தனர் பதியில். 23

முற்றிய மதிதோய் கறத்தகம் புகுந்து முருகவிழ் கமலமென் கரத்தால், விற்றரு கசறில் லசுவதைத் தொட்டு விருப்பொடு முத்தமிட் டரிதி, னுற்றநற் பள்ளி தனைவல முக்கால் வந்துதாங் கோட்டமா யோடிச், சுற்றிய பின்னருன் குதரமப் பாங்கிற் சுற்றின ரியாவருந் தொடர்ந்தே. 24

ஆதிதன் கலீலுல் லாவிபு றாகீ மழகிய மகாமினிற் போந்தாங், கேதமில் குல்யா அய்யஹுல் காபி றானெனுஞ் சூறத்தை யியல்பா, யோதிநல் லிகுலா சென்னுஞ் சூறத்து மோதியே யிரண்டிறக் கஅத்துச், சோதியைப் பணிந்து தொழுதனர் பலருஞ் சுருதியின் முறைவழு வாமல். 25

தொழுதபின் கசுறால் லசுவதை யொருக்காத் தொட்டுவெந்
துளியொடு முத்தி, வழுவிலா வாவு சபாமெனுங் கடையால் வெ
ளியினில் வந்துமா தகன்ற, முழுமதி தவழுஞ் சபாமலைக் கேறி
ரே முடுகவந் தாயத்தொன் றோதிப், பழுதறு மோரா ஞயாமட்
டக்தப் பருப்பதத் தேறினர் பரிவின். 26

நிலவொடு கணமு மோர்மலை யேறி நிற்பன போன்றியா வ
ருநற், சலதரந் தவழுஞ் சிகரிவான் கஃபாத் தனையெதிர்
நோக்கிமென் கமல, மலரெனச் சிறந்த கரமெடுத் தேந்தி வல்ல
வன் றனையுளத் திருத்தி, நலனுறுந் துஆச்செய்ீ திறங்கிவெள்
ளருவி நகமறு வாவெதிர் நடந்தார். 27

நசையுற நடக்குந் தலங்களி னடந்து நாடொறு மியாவரு
நாடி, விசையொடு மோடுந் தலங்களி லோசை மேவலே யோடி
யுஞ் சென்று, வசையுறு மறுவா மலையினு மோரா ஞயாமட்
டேறினி றதினு, மிசையுறச் சபாவி லோதிய துஆவை யிசைத்
தன ரிறங்கினர் சிறப்ப. 28

வரம்பெற நடந்து மோடியு மிரண்டு வரைக்கிடை யிப்படி
யேழு, தரம்பல ஞெங்கச் சென்றுசென் றிதயங் தனகுறத் துஆ
விசைத் திரந்து, முரம்புகழ் விரும்புங் கருமங்க ளனைத்து மொ
ப்பிலா னருள்கொடு முடித்துத், திரம்பிறழ்ந் தேகா முகம்மது
நபிவான் றிகழ்படங் ககம்புகுந் தனரால். 29

பிறந்ததால் கச்சி மாதமோ ரெட்டிற் பெரியவன் றிருநபி
பிறகு, லறந்தரு மசுகா பிகளுட னெழுக்தோங் கவிர்மணிக் கவி
பத்தின் கீழ்பா, லுறைந்தமீ ஞுபா சாறெனுந் தலம்போக் கொ
குத்துடன் ஆகற்முதன் மறுநாட், சிறந்திடுஞ் சுபுகோ டிகைவ
ணைந் தொருத்துத் திடத்துடன் றொழுதிருந் தனரால். 30

கதிர்நெடுஞ் செங்கைத் தபனனேர் திகிரி கார்க்கட லகடு
ரேன் றருட்டி, யுதயமால் கிரியி லுதித்தவொன் பானு னுரவர்
கள் புடைவர வெழுந்து, கதிகொள்வாம் பரிமேற் கொண்டெ
ழு கடல்போற் ககனவர் நறுமலர் சொரிய, விதமுற வேகிப் பிற
க்கத்து நமிறத் தென்னுமத் தலத்தினி லிறுத்தார். 31

மதிவிட் டருக்கன் செனுப்பொழு தெழுந்து மதனுல்பா
தியெனுந் தலத்தி, லத்தம ரியாருஞ் சென்றனர் குதுபா வுயர்
புகழ் நபியிசைத் தோதிப், பத்திசே ரேவல் விலகனும் பகர்ந்து

அகறுட னசறையுங் கூட்டிக்,கத்தனைக் கருதி வாங்குட னினிய காமத்துஞ் சொலித்தொழு தனரால். 32

உலகமும் விசும்பு மோதுதற் கரிய வொருவனைத் தொழுத மி னெழுந்து, நிலவிய வறபா மலைமிசை யொட்டை மீதிருந் தொளி நிலாக் கஃபாய், புலனுற நோக்கிக் கதிரவன் குடக்கிற் பூகுமள வுந்துஆ விரந்து, பலனுற ஹச்சி செய்தபி னிறங்கி முஸ்தலி பாவில்வந் துறைந்தார். 33

மறைவலம் பழுத்த பொருணிறை முதியோர் வாங்குடன் காமத்துஞ் சொல்லி, யிறையவ னருள்சேர் மகுரிபு மிஷாவு மி ரண்டையு மொன்றுறக் கூட்டி, முறைமுறை தொழுதவ் விர வெலாந் தவங்கண் முடித்தரும் பஜிறையுந் தொழுது, சுறையுரு மசுக றில்கறு மதனிற் கதிரவ னுதிக்குமுன் வந்தார். 34

இறந்துட னந்தத் தலத்தினி னின்று சிலசில துஆவிரந் தெழுந்து, மறுத்துறுஞ் ஜெம்றத் துல்கஃபா றென்னு மருங்கு வந் தேழுகல் லெறிந்து, பொறுத்திடுங் கொடிவான் கொடுக்கி ன்ற தலத்திற் போந்தறு பத்துமூன் றொட்டை, யறுத்தன ரிற குல் முப்பதோ டேழு தொறுவறுத் தனர்திற லவியே. 35

ஆதுலர்க் களிக்க வறுத்திடு மொட்டை யன்பதோ டன்ப தின் றடியி,லேதமி றிறகச் சிறகவார்ந் தெடுத்துச் சிமைத்தி தைக் கொளாயெனன் றிறையோன், றாதர்சொற் படிக்காங் கட்டுவந் தளித்தார் தியத்தனர் நபியும்வா ளலியு,மாதலம் புகழு மூரவர்கள் மெய்ப்ப வந்தனர் கஃபத்தால் லாவில். 36

வணம்பெறும் அகறு தொழுதரு மாபு சம்சநீர் வாய்மடுத் தருந்தி, யுளம்பெரி துவந்து தலைமுடி களைந்து கச்சினுங் குளி பறு லினைத்தாங், களங்கமற் றகல வறநெறி பெருகக் கதியுறு வாழ்வுமுண் டாக, விளம்பிய கலிமாத் தினவர் முழுது முடித் தனர் கதறத்துடன் வியப்ப. 37

நபிசல்லல்லாகு அலைகிவசல்லம்

ஹச்சிசெய்தபடலம் முற்றிற்று.

ஆக படலம் 64 க்கு திருவிருத்தம் 1841.

புருக்கான் ஷரீபு

திருக்குலாம் கமாலான படலம்.

சுவர்க்கம்விட் டிழிந்த ஆதமு மவ்வா சுகம்பெறச் சேர்ந்திடு
மறபா, உவர்க்கடற் புவியி லுயர்பெரும் வரையி லும்பர்கள் போ
ற்றிடு மிறசூல்; பவமறுங் கச்சி முடியினிற் றுஆவும் பலனுறக்
கேட்குமப் போது, நவமுறக் ககனத் திருந்திறை யாயத் திறக்கி
னன் நன்மைகள் பெறவே. 1

மழைமுகிற் கவிகை முகம்மது நபிக்கு வானவர்க் கரசெனு
மணிகல், விழைதிகழ் புயத்துச் சிபுறியீ லளித்த வின்னிசை யாய
த்தின் கனத்தாற், றழைமடற் சிறகா தெழிறிகழ் முதுகுன்
றுட்டிறத் திருபுற மயிர்வாற், குழைநெடுங் கழுத்தல் பொறுத்
திடா வாற்றுற் குவிலுரம் படப்படிந் ததுவே. 2

ஆற்றல்சால் புருக்கா னதில்வருஞ் சூறத் தாயத்தி னுண
சொற் கெல்லா, மீற்றினில் வந்த வாயத்தி லுங்க டணைநா மிற்
றையி னிறைப, ஆற்றமாய் நிரப்பி லித்தன மெனவு முவணைவாழ்,
வலித்தன மெனவு, மாற்றரு மிசுலா மார்க்கமும் பொருந்தி
மகிழ்ந்துசம் மதித்தன மெனவும். 3

ஆதியு நடுவு மந்தமு மெவரு மறிவொணு தவனரு ளகிறயி
னேறினு னென்ன யாவரு மறிய வுயர்புகழ் நபியுரைத் தனர்
கேட், டேதமி லியார்க ளியலசு காபி மார்முதன் மற்றவ ரியாரும்
போதவுண் மகிழ்ந்து நபியினைப் புகழ்ந்து புண்ணியம் பெற்றன
மென்றார். 4

அன்றையத் தினத்தில் வெள்ளிநாட் கச்சி லகுப்பது மணி
யறபாவு, பென்றுசொ லுபைய பெரியநாண் மற்ற வெகூதிகண்
பகுதிக ளமை, துன்றிய நசுறு னிகளிவர் மூவர் தமக்குமே தோ
ன் றுமுப் பெருநா, ளொன்றிய பெருநா ளைந்துமோர் தினத்தி
லுதித்ததோர் காலத்து மிலைபால். 5

வல்லவன் கலாமாம் சுகபுவே, தங்க ளனைத்தையும் வகுத்தி
டும் புருக்கான், நல்லருடங்குங் கிருமலை மீது நலமுறத் தாவக்க
முற்றினிதாய், மல்லுறும் பவங்க டீர்த்திடு மறபா மலையிடம்
லைத்துமா னிடர்கள், எல்லவர் மகிழும் பெரியகா ளன்றே யி
றைகமா லாக்கின வியல்பாய். 6

நன்மையைத் தருநற் றீனிசு லாமும் நலம்பெற மந்தநாட்
கமாலாய், பொன்னிலம் பூமி வானில கெங்கும் போற்றிடுஞ்
வெள்ளிகா ளேற்றம், அன்னவன் முடிவு வகுத்தது மேலா மதி
ற்கமா லானநம் வேதகம், இன்னில மிருக்கும் நாள்வரை புவியி
லென்றுமே நிலைத்தினி திருக்கும். 7

மாதமோ வரிய வரிசையுஞ் சிறப்பு மல்கிய துல்கச்சி மாதர்,
தீதறுந் தலமோ பவக்கடல் சுவற்றிச் செம்பொனூர் சேர்த்தி
டுந் தலமிப், பூதலம் புகழும் வரிசைக ளியாவும் பொருவறப் பெ
ற்றதா நாளு, மாதலால் வேதத் தேவலும் விலக லனைத்தையு
முங்களுக் குரைத்தோம். 8

என்றுநல் வசனத் தின்னன பலவு மெவர்களும் சம்மதித்
துள்ள, மொன்றுபட் டுவப்பச் சொல்லினேஞ் சொன்னே மு
ரைத்தவிச் செய்தியைக் கேட்டோர், துன்றிய திரையார் புவித்
தலத் தியார்க்குஞ் சொல்லுமின் சொன்மினீ ரென்ன, நன்றி
சேர் நபிக ளுறைபதி மென்ன நடுத்தலத் ததித்தவ ருரைத்தார். 9

மருவிய கச்சிச் செய்யவந் தருள்சேர் மன்னவர் தலைவர்
ரனை மற்ற,வுரவர்கள் முதலா யாவர்க்கு மினிய வுவப்பொடு நன்
மொழி கூறித் திருவளர் மக்கத் தலத்தவர்க் கெல்லாந் தெருளு
று மதிபல சொல்லி, யருவரைப் புயங்கள் புளகெழ வாவு மாட
லம் பரியின்மேற் கொண்டார். 10

மந்தரங் கவிப்ப விபுதர்க ணறுமா மலரிரு பாவினுஞ்
சொரியத், துந்துமி பதலை பேரிகை தடாரி துனைநெடுஞ் சின்னங்
க ளார்ப்பச், சிந்தநல் வரையிற் புடைத்தெழுந் திரைபோற் செ
றிமயிர்க் கவரிக ளிரட்ட, விந்தென விலகுங் குடைகொடி மல்க
வெழுந்தனர் மதீனமா நகர்க்கே. 11

பரதவாம் பரியுஞ் சில்லியந் தேரும் பகட்டினந் தொறாக்களு நெருங்க, வுரவர மகளி ருளமகிழ் சிறப்ப வோடையு மோங்கலு நீந்தி, வரியளி முரலும் பூந்துணர்த் தருக்கள் மல்கிய சோலையு மடுவும், விரைகம ழுடையா யுடுத்தகன் மதீன மேவிய வெயிற்புறத் துற்றார். 12

தெருத்தலை திருத்தி மாடங்கள் மெழுகித் திவ்விய காவணமியற்றி, மருத்தருந் தொடையல் வகைவகை நாற்றி வாழைதெங் கிக்குமா கனொடு, விரித்தநா ரத்தை கமுகொடு பிறவும் வியப்புற வெங்கணு நடுவிப், பரித்தபொற் கடையி னிறைகுடம் வைத்துப் பாலிகைத் தீபமு நிரைத்தார். 13

புலியுகிர்த் தவசா வடிசிலுங் கருனை பூங்கனி பால்சருக் கரைதே, னொலியல்பூண் மணிபொன் னிரவலர்க் குதவி யுரவர்களரசர்கள் பிறருங், கலியிரு ளேர்க்குங் கலனணிந் தெழுந்து கதிருமிழ் மெயிற்கடை கடந்து, மலிதரும் வேத முகம்மது நபிபால் வந்துபூ மலரடி தொழுதார். 14

உயிரிழந் திருந்த வுடற்குயிர் வந்த போன்மென வுளங்களி பொங்கச், செயிரறு முகம னளவளாய் மொழிந்து தேர்ச்சியிற் றலைவர்கள் வேதப், பயிரெனப் படர்ந்த முகம்மது நபியைப் பதி மதீனு வெனு நகரின், வெயின்முழு மதியும் வருவபோற் கூட்டி விருப்பொடும் வந்தனர் வியந்தே. 15

விண்ணினு மிளிரும் பள்ளியின் மேவி விருப்பொடு பிரான்டிறக் கஅத்தாங், குண்ணிறை யோவா வேதியர் முதலா யுரவர்கள் பலருநின் றிறைஞ்சிக், கண்ணகன் புவிக்கோர் சுடரென வந்த கபீபுதம் மலர்ப்பதம் பணிந்து, நண்ணினர் தத்த மனைகளி லியாரு நாட்குநாட் டினிலை பெருக. 16

புருக்கான் ஷரீபு தீனிசலாம்

கமாலானபடலம் முற்றிற்று.

ஆக படலம் 65 க்கு திருவிருத்தம் 1857.

நபிநாயகத்தின் ஆவியை ஹலரத்துக் கழைக்கற்

றூதுவந்தபடலம்.

நலப்பெரும் புறுகான் வேதம் நாடிய ஜின்கள் மாக்கள்
பலன்பெற விளக்க வந்த பாத்திப ரிறசூல் முற்றும்
வலனுற வருத்த பின்னர் வல்லவன் ஹலரத் தேக
நிலமதிற் றூதாய் வந்த வியற்கையை நிகழ்த்து வோமே. 1

புறநகர் தபூக்கிற் செம்பொற் பொலிதிறை கொண்டு பூண்ட
திறநனி வாகை வள்ளல் திருப்பதி மதீனத் தெய்தி
யறநெறி வழாது மக்கத் தடைந்துகச் சியற்றி மீண்டு
மறநிலை நீத்தி ரண்டு மதிகளிற் றிருந்தா ரன்றே. 2

திசைபடர்ந் திலங்குஞ் சோதி திருநபி முகம்ம தென்னு
மிசைபடர் விளக்க நீதி விளக்குமந் நாளில் வண்மை
வசைபடர் கைசர் காக்கும் வளநகர் சாமிற் செல்வா
னிசைபடர் முரசஞ் சாற்றி நம்படை யெழச்செய் கென்றார். 2

காரணக் குரிசி லோதும் வாய்மையாற் களிக்கு மேலோர்
பூரணப் பணியின் வாய்ந்த பொருநர்போர் முரச வோதை
தோரண மறுகு தோறுந் துஞ்சலால் வீர மைந்த
ராரணப் பள்ளி வாயி லணிபெற வீண்டி னரால். 3

கதிக்கொரு துணையின் வாய்ந்த கபீபிற சூல்தம் செம்பொற்
பதத்தினி லிறைஞ்சி யாரும் பரிவுடன் மொய்ப்ப நோக்கி (ன்
யிதத்தினிலொருமைகொண்டே யியைந்துமுன்னிலைநின்றார்சொ
மதித்தவர் றினிதிற் போற்றி வழிபெற நிற்றி ரென்றே. 4

வொட்டிற விசைய வாகை சைதெனும் வள்ள லீன்ற
தோட்டிற மிக்கார் கல்வித் துணையினு ரீமெரான் பானுன்
டாட்டிறத் துசாமா தம்மை யவர்க்குயர் பதியி னாட்டித்
தாட்டிற மேன்மை பூண்ட முகம்மது சாற்ற லுற்றார். 5

வளமிகு பலஸ்த்தீ னென்னு மண்டல நாப்பண் வைகுந்
தளமிகு பல்காத் தாறா மெனுமிரு நகையு மூதார்க்
குளவிடை முன்ன ருந்தைப் பொருதுயிர் விடுத்த வெய்ய
களமது மூத்தா * வங்கன் கணத்தொடு விரைக மற்றே. 6

* வங்கன், வாங்கு.

அந்தலத் தடரும் வன்மை யாண்மைய ருறாரு மாக்கள்
மொய்த்ததோர் குறிச்சி நாம மேவிய வுபுறு முன்னிப்
பத்தியிற் சூறை யாடிப் படாமல் வீரத் தோடு
சத்தற வெரித்து நீக்கி விரைவொடு சார்க மன்னே. 7

வெருண்டெழுங் காலை யன்ன குடிவளர் வீரர் வஞ்ச
நிகழ்ந்தபுன் மனத்தி னோடு நேர்ந்திடி னரிதி னின்ற
மகிழ்ந்தெழு புகழி னுந்தை வன்பழி வாங்கி வல்லே
திகழ்ந்தசீர் வித்தி மாறுந் தீவினை விளைத்தி மன்னே. 8

கனம்பயில் கவிதை வள்ளல் கதிநெறி யருளி யாருந்
மனம்பயின் மகிழ்வின் சோதி வளர்மனை யிடத்துப் புக்கா
ரினம்பயின் மதினத் துள்ளா ரிசைபயின் மக்கத் துள்ளார்
சனம்பயி லமருக் கேகாத் தாமதங் கொண்டா ரன்றே. 9

அறிவொளி வளரு முள்ளத் தாரணைக் 0 குரிசில் வண்மைக்
குறிவளர் முகாசி ரீனற் குணத்தினன் சாரி மார்கள்
பெறுமொழி யுடையார் மற்றும் பேணிய தலைமை யாரென்
றுறுமொரு சிறுவன் றன்னை யுஞற்றின ரென்கொ லென்பார்.

குடிமையிற் றகையிற் கல்விக் குலத்திலா சாரந் தன்னின்
மிடிமைய ரல்ல மியாமே மேன்மைய ரானோ முன்னர்
கெடிமையி னயினர் தீஞ்சொ னிகழ்த்தனென் னென்கே யின்னே
யடிமையின் சிறுவன் பூட்டு முறையணி கொண்டோ மென்பார்.

எந்தையே யனையே யென்னக் கலங்கிய விரக்க நோக்கா
மைந்தரை வேறு வேறு மாற்றினர் மைந்தர் நெஞ்சிற்
புந்தியுங் குறைந்தார் சொல்லிற் பொருத்தியாஞ் செல்வமாகின்
மைந்துறு வினையின் செய்கை யெவ்வகை வருங்கொ லென்பார்

காலமுங் காலப் பான்மைக் கருமமு முணர்ந்த சிந்தை
சீலமு மேன்மை யெல்லாஞ் சேதன முடையா ரேனு
மேலுகற் பருவத் தன்றி யிளமையி லெய்துங் கொல்லோ
கோலுமே லறிஞர் தாழ்ந்தோர் குறிபடன் முறை 0 யேயென்பார்

---

0 குரிசிலானவர்—முகாசிரீன்கள் அன்சாரிகள், மற்றும் பெறுமொழியுடையாரிவர்கள் பேணிய தலைமையா ரென்றொரு சிறுவனையுயர்த்தினர். அது யேது காரணமோ என்று கொள்க.

0 ஏகாரம் வினா.

தன்னுறு முயிரைக் காக்குத் தகைமொழி யுரைத்த போது
மன்னுறுங் கொடுமை யாலோர் வழியென வவனைக் கொல்லு
மின்னுயிர்க் கிரக்கங் காணா தினைதயமே வன்மை கொண்டோர்
சொன்னிலைகொண்டாரியாருந்தொடர்வனவெவைகொலென்பார்

வேறு.

இனைய தின்னே ரிடநிகழ வெங்க ணாயினா ரழகேய்ந்த, மனைய தெய்த வவ்விரவே வரிசை யுடனி னேப்கலிய. வனையும் பிராட்டி மார்களிலம் மைமூ னாகம் முறைநாளில், புனையு மெழி லி னவரையெல்லா மழைத்தார் பொதிந்த கருணையினால். 15

பிரிவு பூண்டா ரெண்மருயிர் பிரிந்தா ரறுவர் தவிரமற்று
முரிய ரோன்ப தின்மரவ ரொளிர்சேர் மயில்போ னனியெய்த
வரிப நோயின் முறைநாளி லாயி சாதன் னகமிருப்பத்
தெரிய வுளத்தின்பொருத்தங்கொல் லென்றார்செய்யி திறகுலே

கணங்கொ ளாக்கைக் கோருயிரே கதிரே மதியே திருவுள த்தி, னிணங்கு முறையே முறையென்றா ரெழில்சே ரலியு மப் பாக, மணங்கொள் மகனார் பனூனுமிரு மருங்குங் காங்க டாங்கி வரக், குணங்கொ ளெணயினர் மெலமெலப்பொற் கொடிமா மனை யிற் புக்கினரால். 17

வடிவுந் திருவு மெழில்கற்பும் வணங்குங் கருணை மயிலார் தம், கடிகொள் மனையில் வந்ததற்பின் கம்மின் வலியுங் குளிர் வெப்பு, முடலை நடுங்க வுடைபவன்ற னருளான் மென்மே லுற வாடிப், படருந் துயரால் நபிநயினார் பரிவுற் றிருக்கு மந்நேரம்.

நெறிபூண் டொழுகு மகூது கிதியிற் செல்வ னபுதல்லா, வறிவார் சிலரு மடைந்தழகா ரால நபிதம் பதம்போற்றிக், குறி ய வாட்டந் தனைக்கண்டு கொண்ட வெறுப்பி னொழுவருத்த, நதிய மேனிக் கெவ்வாறு நனிய வென்ன வினவினரால். 19

வழியி னெறியீ ரிவ்வருத்த துமரி னிருவர் மாட்டனுகிற், றுழைவர் தாங்கார் கொடுமையெனச் சோமான் பகா வதன்பகு தி, யுதிவிற் பேறு மிருமைமதி யரசே யடைய நாங்களுக்கென், றிழிவொன் றணுகா வொழுங்குடைய அப்துல்லாவு மிசைத்தன ரால். 20

உண்மை யஃது முசலீமி லொருவர்க் கேனு மொருநோமு ளி, வன்மை யுடலித் தொழுகாதவ் வருத்தத் தவன்றன் செய்

பாவக், தண்மை யிறையோன் பொறுத்தல்லாற் கவலு நின்சொ
ற் றவறன்ற, திண்மை தருக்க விலியுதிர்க்குஞ் சீர்போ லென்ன
நபிமொழிந்தார். 21

ஒலிக்கு முவரி நெடும்புவியி லுள்ளார் பலரி னரிய துயர்,
கலிக்குந் துன்ப நபிமாரின் கண்ணே மற்று மதன் றனைபோற்,
பலிக்கு மென்று முகம்மதுவும் பகர்ந்தார் பின்னர் துங்களுட,
னலிக்கும் பிணிக்கோர் மருத்துவினை நயக்கு மியாங்க ளெனக
வின்றார். 22

உள்ளும் புறமு மொருநிலைகொண் டொளிரும் பெரியோ னொ
க்காது, மன்னுந் துயரொன் றணுகாது காப்ப துக வெனக்கனி
த்துத், துள்ளுங் கருணை விழிமுத்தந் * சிந்த நோக்கி யெற்
கருகு, மெள்ளு நோய்க்கு மருந்தொன்றும் வேண்டா மென்றும்
நபியுரைப்பார். 23

படரும் புன்மை யிருளகற்றிப் பருதி மதிபோ னெறிவிள
க்குந், தொடரு மறிவி னுண்மையிற குலாய்ப் புவியி னியான
டைந்தேன், யடியார் பாலிற் கருணையன்றி யலக்க ணொன்றுங்
கண்டறியேன், மிடியா லேது மிடரென்று நினையீர் நன்கு வினை
யீரே. 24

பூத்துச் சிறந்த பெருங்கருணை யிடத்திற் பெரியோன் புக
ழுதனூற், பாத்துச் சிறந்த முதற்றுறையிற் பக்கந் தெரியா தான
ந்த, மேத்துச் சிறந்த கலறத்தெது மிடையிற் சிறப்ப வெற்கிறை
வன், காத்துச் சிறந்த நாளடுத்த கணிகா ரணத்தின் பிணிய
ன்றே. 25

துன்று மார்க்கம் பலநீக்கிச் சுடரின் விளங்கு மோர்மையு
ள, நன்று மேற்ற நெறியுடையீர் துமர்க்கும் நம்மை யினிது வந்
து, வென்றி நெறியி னுறுவார்க்கு மேலோன் கருணை றகுமந்
தோ, டென்றன் சலாமு மென்மேலு மாக்கமாக வெனவுரைந்
தார். 26

இன்ன வாய்மை யுறுங்காலை யிறைவ னருளா லுலகனைத்து,
முன்னுஞ் சிபுரீ லினிதடைந்து நபிக னாயினர் தமையுவந்து,
தென்னுங் கருணை சலாமுரைத்துத் தெளிமோ குறைஷிக் குலத்த
ரசே, மன்னு முன்னைத் தாறுங்கருமம் வழியி னென்பர் லனறக
வென்றார். 27

---

* சிந்த - துளிப்ப.

வன்சொற் படரா மறைநெறியின் முறைமை வழுவா தெ
க்கானு, மென்சொற் றடரு மும்மத்தவ ரெடுத்து வளர்க்கு ம
னையிழந்த, புன்சொற் றகைய ரெற்பினெனப் பிறிதோ ருதவி
யென்கொலென, நன்சொ லுடையீ ருளம்வாடி நலியு மென்று
நபியுரைத்தார். 28

நபிகட் கரசே பேரரசே நவமெய் யணியே மெய்யணியே,
குவியு நந்த மும்மத்தவர் குறையொன் றணுகார் துயரணுகார்,
அவிய முயிர்மீண் டெழுங்கால மனைவர் தமக்கு நிவிரமுன்னஞ்,
சவிகொண் டெழுந்து மிக்கரசாய்ச் சகல வியற்கை யருள்வீரே.

செய்யும் வினையின் குணமறிந்து செம்பொன் ஊழகுசெறி
நகரீ, மெய்யாய்ப் புகுத லன்றிமற்றோர் மேவ லதனில் கருமென
வே, வைய மனைத்தும் புரந்தளிக்கும் வல்லோ னுணர்த்த வுணர்
ந்துரைத்த, வையர் மொழிகேட் டகமும்விழி யாகங் குளிர்ந்
தென் றூர்நபியே. 30

வேறு.

மனமருண் டடையா ரஞ்சு மாதவர் மகிழ்ந்த பின்னர்
கனமருண் டொளிக்குஞ் செங்கண் சிபுரியில் கடிதிற் புக்கார்
அனமருண் டடவி கொண்ட திருநடை யாயி சாதம்
வினமருண் டயரா நிற்ப நெறிநபி நிற்குங் காலே. 31

வண்ணிலா வழிந்த வாகை வயிரக்குன் றனைய பொற்றோ
ளண்ணலா முசாமா பூண்ட தலைமைய துளங்கொள் ளாது
விண்ணிலார் புகழின் மூதூர் வீரர்கள் படையெ ழாது
0 கண்ணிய 0 போக்கும் வள்ள லுணர்ந்தனர் கருதி யன்றே. 32

பணித்தசொற் போற்றாக்கம்படர்ந்ததோர் தலைமைகொள்ளாத்
திணித்தபொற் புயத்தி னார்க்கே யிழிவொடு சிறுமை காட்டு
மணித்தட வேலார் தந்தா மதத்தினை யொறுப்பா ராகக்
கனித்தமெய் யாயி சாதங் கதிர்முக நோக்கிச் சொல்வார். 33

மேவுமெய் யலர்ந்த வெப்புத் தணிப்பமே தகையி னேழு
கூவிற் றெண்ணீர் கொண்டு வம்மெனக் குரிசில் கூறப்
பாவையர் குடங்க ரேழு பாணியி னிறைத்தன் பாக
நாவணி புகழார் தம்மை நனிதினீ ராட்டி னாரால். 34

---

0 கண்ணிய - கருதிய. 0 போக்கும் - விதமும்.

குளித்தபி னுக்கைவெப்புக் குளிர்கிராடுந் தணிய வண்ணம
திளைத்தபொன் முகமு மேனி நலங்களுஞ் சென்னி மீது
வளைத்தணி யாடை யோடு வரிசையி னெழுந்து தாய்மை
முளைத்தலர் பள்ளி வாயில் வந்தனர் முகம்ம தன்றே. 35

உறுநிபின் பிலாலை யேவ பிலாலுமவ் வூரி னுள்ளார்
பெறுதகை விளிப்ப யாரும் பிரிப்புற் றெழுந்து தத்தஞ்
செறிமனை யடையா தெங்குஞ் சிறார்முதன் முதியோ ரீண்டி
யறிவளர் பள்ளி வாயி லரசர்பா லணுகி னரால். 36

கருத்துவந் தீண்டு மாக்கள் கதிபெற முன்னர் நின்று
பொருத்தமுற் றிறைஞ்சி யாதி நாதனைப் புகழ்ந்து பின்னர்
திருத்துநற் றறக்க மென்னுந் திருமணி மின்ப குற்றுர்
பெருந்தொலிர் பிறங்கு மெய்யி னுனமே பிலிற்றுங் கோமான்.

வேறு.

இன்மையி னுண்மையும் பின்னு மின்மையிற்
பன்மையி னுயிரினம் படைக்குங் கொற்றவ
னன்மையின் புகழெலாம் வாழி நாளுநம்
புன்மைக ணீக்குவ னென்னப் போற்றியே. 38

வேண்டிய விருப்பொடு வீரம் போக்கிகின்
றூண்டவன் வழியினி லுதிலாவியின்
மூண்டவர் குயர்துவாச் செய்து மாமறை
பூண்டநந் நாயகர் புகல்கின் றாரரோ. 39

பொன்னிலம் வேண்டியிப் புவிவிட் டென்னுட
னிந்நிலம் வேண்டுமு காகி நீங்களே
நின்னிலத் தார்க்குப கார நாட்டமி
னன்னவா குறைவுநீ ரதிக மாதலால். 40

மேம்பொரு ளுயர்நபி மேவு தற்குள
வாம்பொரு டேடுமின் சாரி மார்க்கெழு
ரும்பொருள் போற்றுமின் குறைக டாக்குமின்
றீம்பொருண் மறைநயந் தெளிந்திட் டார்களால். 41

0 தன்கணின் வாழ்க்கையுந் தரையின் வாழ்க்கையு
மின்கணிற் றெளிந்துகொள் கென்ன 0 நேரிலா
னன்கருள் தரவொரு 0 நவையி லானுய
ரின்கனிப் பயனையே யெடுத்திட் டானென்றார். 42

முன்னிலை முழுமணி படர்க்கைத் தன்மையி
லங்கிலை யறைதலு மடல்அ பூபக்கர்
தன்னிலை கலங்குறச் சங்க மேங்கிட
0 வின்னிலை யென்றழு திரங்கி னரோ. 43

ஏங்கடம் முயிருட லினிதி னன் 0 டருள்
பொங்கிய பயன்புனை பொருவி னன்னபி
சங்கையி னுயர்தலஞ் சாரு நாளணித்
திங்களு கினவெனுங் குறிப்பி னெங்குமே. 44

திசைபடர் காரணஞ் செறிந்த மாமறை
நசைபடர் நவமொழி நடக்கை யாவுமே
மிசைமிசை வருவன மொழியு மேல்விதி
யிசைபடர் வகை யெவ்வா றென்று முன்னமே. 45

---

0 நிகரிலாதவன் றன்னிடத்து வாழ்க்கை யினையுந் தரை யிடத்து வாழ்க்கை யினையும் நின்னிடத்தி லிரண்டி லொன்றி னைத் தெளிந்தெடுத்துக் கொள்வாயென்று நயத்தோடன்பு தர ஒரு குற்றமில்லாதவ னவ்விரண்டினு ளுயர்ந்தவின்பக் கனியும் பயனுள்ள வாழ்க்கையினைத் தெரிந்தெடுத்துக் கொண்டானெ ன்று படர்க்கையாகக் கூறினரென்க.

0 நேரிலாதவன் - வல்லவன்.

0 நவையிலாதவன் - நங்களை.

0 இன்னிலை - இலமிலை.

0 அருட்குண மளித்தழுகை மாற்றிய தென்னை யெனின்- மனதகத்துள்ள வொற்றுமையை மறைவிடத்திற் கூறுங் கூற்றோ டெனக்குறும் பொருளினில் களிக்கு நண்பரில் எனக்கு மிக் குரியர் நீரென்றதென் றுணர்க. மறைவிடமாவது - இரகசியம். இரண்டுகளியு மொருதொட ராகையால் உரியர் நீரென்று அரு ட்குணமளித்து அழுகை மாற்றி யிதனைச் சாற்றினு ரென்று கொள்க.

விளக்கொளி காட்டியுள் ளிருளை வேறறத்
துளக்கிய மதிக்கொரு துயருற் றுலெனக்
களக்கறுங் கருத்தொடு கலங்கு வார்க்கரு
ளளக்கருங் குணமணித் தழுகை மாற்றியே. 46

மனக்கனின் மருவுதன் மறையிற் கூறலிற்
கனக்குறும் பொருளினிற் களிக்கு நண்பரி
னெனக்குமிக் குரியர்நீ ரென்று நான்மறை
தனக்கணி நாயக ரிதனைச் சாற்றினர். 47

மனத்தினி லன்பினன் மதித்து நாட்டிய
கனத்திறற் றலைமையர் கவலுஞ் சொற்படி
யினத்துட னகத்திடை யிசைந்து சென்மியா
இனத்தடக் கதிரயில் சிறந்த நங்கையீர். 48

இன்னவர் முன்னிலை யிசைகி லீரெனி
னென்னுரை நன்னிலை யென்னப் போற்றிய
முன்னவர் தங்கையின் றலைமை மூசதேன்
மன்னிய புயத்தினீர் மனங்கொண் டிரலீர். 49

தாங்கிய வறிவினிற் றலைமைப் பான்மையிற்
றேங்கிய சிறுமொழி தேடி நீரெனி
னாங்கவர்க் கென்கொலோ வகுத்தி றுவினி
லோங்கிய நாப்பிடத் துணர்த்தி லேனரோ. 50

மிக்குவப் பென்புற மேய தோர்பயன்
றக்குவப் புளரிவர் தகுதி நித்தலை
யொக்குவப் புடையபீ ரவரை யொல்கிலா
தக்குவப் புடையரென் றுணை நாட்டினேன். 51

மாரணப் போரிடை மாண்ட தந்தையின்
காரணத் தாலிவர் தலைமை கைக்கொள்வான்
பூரணத் தென்னுரை போற்ற லீரெனி
லாரணத் துந்தனை யாவ தென்கொலோ. 52

வெஞ்சம ரிடைப்படு வீரர் வாய்வெரீஇ
நெஞ்சம தழிதர நிவந்த வாள்வலச்
சஞ்சம துடையவர் தலைமைக் கன்படூஉ
வெஞ்சலி லாதிறை யியற்றி னனரோ. 53

தகையுறு மாதவர் தவத்தி னின்றதால்
மிகையுறு மிவரென விளம்ப வேண்டுமோ
புகையுறு வேல்வலீர் போற்று முன்னிலை
வகையுளர் வல்லவ னாணை பாலரோ. 54

வென்றியின் சொற்பிறந் திவணின் மேவிடிற்
றான்றுநும் மனத்தகை யுலகஞ் சொல்லு*மோ
வன்றிறல் வீரத்தி னிழிவு வாய்க்குமே
லொன்றுமோ மேனிலை யுஞற்றி னார்க்கரோ. 55

என்னுயிர்க் குயிரென வின்ப மூறிய
நன்னிலை மகவினை நகையின் மைந்தனை
முன்னிலை கொள்கிலா திழிவு முற்றுத
லெந்நிலை யறிகிலே னியைந்த சிந்தையீர். 56

என்னுரை மறுத்தது மன்றிவ் வேந்தலின்
றன்னுரை மறுத்தது மன்று தக்கவ
னின்னுரை மறுத்தநீ ராயி னீரிசை
துன்னுல கென்னுரை சொல்லற் பாலதோ. 57

வேதநேர் நெறியொடு வேந்தன் வண்மையும்
போதமு மனுதினம் பொலிவிற் பொங்குமா
லியாதுமென் மொழிமன மிசைந்து ளார்க்கெனத்
தாதெனு முகம்மது சொல்லி னாரரோ. 58

நாயக ரமுதவாய்ப் பிறந்த நன்மொழி
மேயவர் செவிவழி புகுந்து மேதகு
தூயகந் துளக்கவுட் டுணுக்கி யஞ்சியே
நேயமுற் றனைவரு நிகழ்த்தி னாரரோ. 59

எவ்விட மெவ்வினை யனைத்துங் காவல்கொள்
செவ்விய லாண்டகை யருளின் சிரீறே
டிவ்விட மெங்கடந் தவத்தி னெய்திய
குவ்வொளிர் குலமணி குலவுந் தீபமே. 60

தொடர்வினைப் பற்றறத் துன்ப நோயறப்
படர்வினை நன்மையிற் பாக்கு நாயக

* உகரம்—எதிர்மறை

வடிமைசெய் பிழைபொறுத் தாட்கோ ளீரெனிற்
கொடியமியா முலகினுங் குலங்க ளியாவினும் 61

போரவா வியமனம் பொருதற் கஞ்சியே
வீரவாள் வலியினுக் கிழிவு வேண்டுமே
லாரவா யரும்பய னழிக்கும் வெம்பவ
நீரவா வினர்களா நிலத்தினி யாங்களே. 62

சொன்னிலை யுறுபொரு ளுண்மைச் சோதியாப்
புன்னிலை பூண்டயா மன்றி வேறில
மன்னிலை பூண்டுரு மாத வத்திடை
நின்னிலைக் குரிசிலென் றெவரு நேர்ந்தனர். 63

நிறையணி மின்பர்விட் டிறங்கி நிதிநாஞ்
முறையணி முகம்மது சகிநு சிந்தையி
னறையணி திருமனை நாத செய்தினர்
பொறையணி வீரர்கள் புகழ்ந்து கூடினர். 64

இடியெனு முரசிய மொலிப்ப வெற்றிவெண்
கொடிகுடை நிழறாக் கோர வெம்பரி
விடுவிசை வீரிய ரேழு நூறொடு
படர்புகழ் சைதருள் பாலர் தோன்றினர். 65

அறிவினிற் றகுதியி லாண்மை மேன்மையி
னெறியினர் சூழ்தர நிழற்ற வண்புகழ்
செறியெழில் வஞ்சியுஞ் சிறப்பத் தோளினிற்
குறிநபி யரிமகன் குமரர் தோன்றினர். 66

வரிசையந் திருநகர் மறுகும் வன்மலைப்
புரிசையம் புறமுமற் றிடமும் போக்கியோர்
விரைசெறி சுறக்கெனும் பொழிலின் மேவின
ருரைசெயுங் காதமென் றன்மை நூல்களே. 67

வெம்பரி நிரைநிரை நிரைத்து வேல்வலார்
தம்பதி வகுத்துமெய்த் தகையர் சூழ்தர
வம்படர் படங்கிடை யாசும் வைகினர்
பம்பிசை முரசொலி பரந்து துஞ்சவே. 68

மலிவணி நபிநயி னார்தம் மாக்கையின்
மெலிவிறை யருளினை விளங்கக் கண்டபி
ன்னெலிதரும் படைகொடு செல்கு வோமென
வலியின ரியாவரும் வழங்கி னாரரோ. 69

சொற்றகை யுளத்தினிற் பற்றித் தூய்நெறி
நற்றவ நனியிள வரசு நன்றென
வெற்றியின் முகம்மதின் வெதுப்பி னேதுவா
லுற்றன ரந்தல முரவ ரியாருமே. 70

நபிநாயகத்தின் ஆவிகை ஹலரத்துக் கனைக்கற்
றாது வந்த படலம் முற்றிற்று.

ஆக படலம் 66-க்கு திருவிருத்தம் 1927.

நபிநாயகம்திருவுளமான

ஒசியத்துப் படலம்.

சீரிய மறையின் றீன்சொல் ஜெகமெலாம் வளர்ந்து பொங்க
நேரியல் புரியும் வள்ளல் நேயர்கள் விசனம் நீங்கப்
பாரினிற் பெருகும் நன்மை பலனுறும் வசியத் தோங்க
வீரியர்க் குரைத்த வாறே விரித்தெடுத் துரைத்தோம் வீங்க. 1

பின்னுமா விலங்கின்பூகப் பெரும்பிணிக் குள்ளாப் புன்மை
மன்னுமாத் துயர மஞ்ச மனத்திடம் விடுத்து நீங்கா
முன்னுமாப் பின்னுமாய முகம்மதின் பாதம் போற்றப்
பொன்னமான் ஆயிசாதம் புகழ்மனைப் புக்கி னாரால். 2

வேதமே யொலித்த பள்ளி வாயில்விட் டடைந்தபோது
காதுமெவப் பிணத்தா லாக்கை தளர்தலிற் கருணை வள்ளன்
மோதிய வயர்ச்சி கொண்டு மொழிபெயர்த் திடாது பொற்பூங்
கோதையர் மடியிற் சென்னி சேர்த்தனர் குறிப்பி னன்றே. 3

புறம்பெய ராது நாட்டும் புந்தியோ டுடலந் துன்பத்
திறம்பெய ராது சோர்ந்த தேவிநீர் தம்மை நோக்கி
யறம்பெய ராது நெஞ்ச நிலைபெயர்ந் தயர்ந்து கண்ணீர்
நிறம்பெயர்ந் துடலம் வாடி நேரிழை யிருக்கும் நேரம். 4

உண்மையி னுள்ள மோங்கு முயராபூ பக்கர் தோன்றல்
வண்மையி னுலகங் காக்கு மதியப்துற் றகுமான் கையிற்
றிண்மையின் மிசுவாக் கோடு திருமனை யடைய வள்ள
லண்மையி னுற்று நோக்கு மருமைகண் டறிந்தார் பெண்மான்.

என்னகத் துயிரே யின்ப மிலங்கிய மணியே தங்க
ளின்னக மக்கோல் மீதோ வேண்டிலியா ரருளு மென்ன
சொன்னபுன் மயிலை நோக்கித் துளக்கினர் சென்னி வாயாற்
பன்னுதற் கேலா தெங்கோன் பயன்குறிப் பறிந்தா ரன்றே. 6

கண்டொறுங் கவலை மீறுங் காரிகைப் பிறவி கையில்
வேண்டுநந் நயினார் தம்பா னுதவினர் விரும்பிக் கோலின்
பூண்டலை செறிவு செய்வான் பொருவலி தளர்தல் கண்டு
மாண்டகை யிருகண் முத்தம் வழிதர வுரைத்திட் டாரால். 7

அவ்வினை யான்செய் துந்த மருங்கரத் தளித்து மென்ன
மவ்வலங் குழலார் நோக்கி மணிச்சிரந் துளக்க வள்ளல்
வவ்விய பற்கோல் வாங்கிக் கறித்துவாய் மென்மை செய்து
செவ்விதிற் கொடுத்தா ரியாருந் தேறிய வறிவின் மிக்கார். 8

தந்தக்கோல் வாங்கி மூறற் றன்னிடந் தேய்ப்பர் பக்கத்
தந்தக்கால் கிண்ணத் தாய்நீ ருங்கரந் தோய்த்துச் சோதி
சந்தக்கா லமுத வட்ட முகத்தினிற் றடவி வள்ளல்
பிந்தக்கா லாயி லாக பில்லல்லா கென்னும் பேசி. 9

அளவுறுங் காலம் பூண்ட அஞ்சலி னுக்கத் துன்ப
முளபல வென்னும் பின்ன ரணிகர முயர்த்தி யுண்மை
யளவிய லற்ற பீருல் லகுலாவென் றிசைப்ப ரின்பந்
தெளிவரு போதி னெல்லாந் திருநபி முகம்ம தன்றே. 10

இம்மொழி யிசைக்குந் தோறு மின்பமிக் குவந்த நங்கை
யிம்மையு மறுமை காக்கு மெழினபி மார்கள் கோமா
னம்மையல் லாது வேறு நனிவரத் தெரிந்தா ரென்னத்
தம்மகத் தடங்கி டாத சஞ்சலக் கடலிற் றாழ்வார். 11

தொடர்ந்தபுன் ஜைதன் மேன்மேற் சோர்தரப் படர்வ கண்டு
திடந்தரு மனமு முள்ளுந் தெளிவுறக் கலக்க மெய்தி
மிடந்தரு மடவா ரஞ்ச மாதவம் புரியு மிக்கோ
ரடர்ந்தெழுந் தழுது மொய்த்தா ரணியெழில் பள்ளி வாயில். 12

கொண்டதந் தவத்தின் மிக்கக் கொடுந்துய ரூக்க வண்மைத்
தண்டகை நயினா ரன்பிற் றழைத்தவ ரிரைத்த வோதை
மண்டிய நகரம் மூடி வானிடம் படர்ந்த தன்றே
கண்டபே ரசுண பொத்தார் கன்னியர் சிறார்க ளெல்லாம். 13

கரைவுண்ட விழியு நெஞ்சங் கலங்கிய வப்பா சென்போர்
விரைவுண்ட நயினா ரில்ல மேவினர் பின்னை யன்னா
ருரையுண்ட மகவும் வெற்றி யோங்கிய அலியும் வல்லே
விரைவுண்டா ரளவி டாது துயரினை விளக்கி யன்றே. 14

முன்னிட்டார் நோக்கி வள்ளன் முனையிற் செங்கை நீட்டி
0 வென்னிட்டார்த் திருத்து கென்ன விரைந்தனர் நாணமேனிப்
பின்னிட்டார் தாங்கி மேன்மைப் பெருகொருகணையிற்செய்தார்
என்னட்டா ரழுது மாறு விளம்பென விசைக்க லுற்றார். 15

நண்ணிய கருணை தன்னாற் காவல்கொ ணயினார்க் கந்த
கண்ணிய தென்னக் கேட்டார் நடுங்கினர் நினைவு மாறிப்
புண்ணிய வுடலுண் டாக்கந் தளர்ந்தனர் பொருமி யேங்கி
யுண்ணரினை விழியி னோடு முருகினர் கரைந்தா ரென்றார். 16

உரைதெரிந் துணர்ந்தும் வண்ணத் தொளிராயி லலியார் தாங்கத்
திரைபுக ழிருவர் பக்கத் தெழிலணிச் செங்கை மேற்கொண்
டரையர்தம் மலர்த்தாள் போர்த்திட் டரிதினின் மெல்ல மெல்ல
விரைதரும் பள்ளி வாயி லெய்தினர் விரையே வீச. 17

மேனிலன் பொழியு மிக்க மின்பரின் படிக்கிழ் வள்ளல்
தூநலம் பொழிய ராவிற் றுயருண்ட மதியி னொப்பப்
பாளலன் பொழியா நிற்கு முகத்தெதிர் பரந்து மொய்த்தார்
தேனலன் பொழியாக் கஞ்சத் தானனச் சிறி யோரே. 18

வேறு.

வானு லாப்பெரும் புகழணி வல்லவ னருளாற்
றானு லாவிய துமர்நபிக் கவதிநாள் சார்ந்தென்
றூன நீவிரி னகத்தெழு துயரினா லழுது
மான நீவினி ரென்றியா மறிந்தன மதித்தே. 19

0 வென்னிட்—வெக்நிட்

பன்மை கொண்டெழு முயிரினம் படைப்பெனுங் கிளவி
தன்மை கொண்டது வீதலிற் றகையெனத் தவத்தி
னன்மை கொண்டவ ராயினு மற்றவர் நடக்கை
யின்மை கொண்டவ ராயினு மிறப்பது 0 சரதம். 20

திசைகள் நான்கினும் வானுல கிடத்தினுஞ் செறிந்த
விசைகொள் செஞ்சுடர் சந்திரன் விரிகணற் காலம்
பசைகொண் டியானையும் பொதிந்தன வெனினும் பண்பற்று
மிசைக ணீங்குற நீக்குதல் விதியென லாகும். 21

வலியின் மாட்சியின் மேன்மையின் மிக்குள வன்மை
நலிவில் பூதங்க ளாயினு நனிபய னற்று
மெலிவு கொண்டள வதனிடை யெய்துமேல் விரவிக்
கலவு மாக்கையின் காரண மென்கொலாங் கதியீர். 22

தடித்த போதினும் வேறிடந் தங்கிய போது
மெடுத்த போதினும் வினைபல விளைவுறு போதும்
படுத்த வேற்றுமை யெப்பொரு ளாயினும் படுமேற்
குடித்த பேறெலா மிறப்பெனுங் குணத்தகை யன்றோ. 0 23

உள்ள நண்ணிய வுணர்விற் படர்ந்ததோர் பண்புங்
கள்ள நண்ணிய தாயினுங் கதிபதா யிடினு
நள்ள நண்ணிய லடிக்கடி மாறுமே றூட்டும்
பள்ள நண்ணிய நீரினும் விரைவுள 0 படைப்பே. 24

---

0 எப்பொருளாயினும் வேற்றுமைப் படுமாயில் அப்பொருள் குடித்த வேறெல்லா மிறத்த லென்னுங் குணத்தகை யென்றுணர்க. படைப்பாலது அதனுள்ளகத்து நண்ணியவுணர்விற்படர்ந்தெழுந்த குணங்களு மிருவகையி னொன்றிடத்தாயினும் அன்றியிரண்டிடத்தாயினும் புற்பள்ளத்திற் பாயும் நீரினும் விரைவுளதென்றுணர்க.

0 உயிரினம்-படைக்கப்பட்டதென்னுஞ் சொற்றன்மையாகிய பொருண்மையினைக்கொண்டது. ஆகையாற் படைப்பெனுங் கிளவி தன்மை கொண்டது. அவ்வினம் வீதலிற்குரித்தென்றுன்னித் தவத்தா னன்மை கொண்டவராயினு மற்று மந்நன்மை கொண்டவர் நடக்கைக ளில்லாமை கொண்டவராயினு மிறப்பது சரத மென்றுணர்க.

0 இம்முச்சுடரும் நீங்கு மென்றுணர்க.

கருவி யாகிய வவயவங் கருத்தனுக் குடன்பட்
டிருவி னைக்குப் பயனொடு மிருந்துமவ் விறப்பி
னொருவி னைக்குந்தன் னேதுவே முடிக்குமே லொன்றும்
வருவ தோபிற பொருளதோ வன்றுவாள் வலியீர். 25

கொண்ட நீதமு மறிவொடு மேன்மையுங் குலமு
மண்டு மாக்கமு மாண்மையும் வலுமையு நீவிர்
கண்டி ரங்கிய விரக்கமு மழுகையுங் கலக்க
மண்டுஞ் சாதலை யகற்றுமோ வறிவள ரகத்தீர். 26

காட்டி நீங்கிய மின்னினுங் கதிர்விழி யிமைப்பின்
மாட்டின் மாத்திரை யினுஞ்சிறி தலகுறு மயக்க
மாட்டி னுடிடி லாடினு ராடிலா ரர்டார்
வேட்ட முற்றதாற் றுயர்தரு மதன்குண விபப்பே. 27

சேரு நல்வினை யதன்முறை தீவினை முறைமை
யோரு நல்வழி யுணர்த்துவ தாலுயர் தகையா
லாரு நந்நபிக் கந்தம தின்றென வகத்திற்
சாரு கின்றதோ வேறென்கோ லணிபுனை தவத்தீர். 28

மண்ணி னூறு புனலினல் வன்னியாற் காலாற்
பண்ணி னந்திடத் தாக்கையிற் படவொளி யின்றாற்
புண்ணி னுமிக்கெடுந்திடும் பொருளெலா மிறப்பே
யெண்ணி னுமென்கொ லியாமருப் புவியிடை யிருத்தல். 29

நின்ற வெற்பொடு சரிதரு புனலொடு நிவர்வான்
சென்ற வெங்கதி ரெரிதலை மாறிடச் செற்றோர்
முன்றில் வந்திட வியற்றுவ ராயினு முதலோன்
றன்றன் மேலிடஞ் சேர்தலி லையுறற் றகையீர். 30

ஆதி நாயகன் கருணையா லெமக்குமுன் னகிலத்
தேத மீறிய காபிர்க ளோர்வழி யிலையவான்
றாத ராகிவந் தடைந்தவர் துஞ்சலி லார்கொ
லாத ரம்பெறும் பழமையே பயிற்சியி னமைத்தீர், 31

முந்துங் காரண மொன்றுமின் றுன்முறை திறம்பப்
பிந்துங் காரண மேதுகொல் நீவிர்கொள் பெற்றி
யந்தங் காவல னிடத்தினு மடங்கலுஞ் சேறற்
சொந்தங் காண்குதிர் முன்னினிற் பின்னினிற் றொடர்பால். 32

விரிந்த பாரினிற் புதைபடு மரியமேம் பொருள்க
டெரிந்து நோக்குவா னறிவெனுந் துறவுகோ லளித்துத்
திரிந்து போமுல கியற்கையிற் சிந்தைகொண் டாக்கம்
புரிந்தி டாவிலை கொண்டநீ ரென்கொலாம் புகழே. 33

கலங்கு மெய்யிகழ்ந் திணைநிறு வீரெனக் கருத்தின்
மலங்கி னேனலன் மாயையின் மல்குமிவ் வுலக
விலங்கு பூண்டதன் வசப்படு வீர்கொலோ விடுத்து
விலங்கு வீர்கொலென் றகத்தொரு சலிப்பணி பிணைத்தேன். 34

சாட்டு நீள்வினை யடங்கலுந் தருமிட மதனின்
மாட்டின் வைகினர் தொடர்ந்திடின் மதியொடு நெறியும்
நூட்டு மேன்மையு மழிதரப் பொன்றுல கொருவக்
கூட்டுந் தண்டனை யெனில்தன் கொடுமையென் சொல்கேன்.

வணக்க மாட்சியின் வல்லவன் வரவிடு நபிக்கு
மிணக்கி யுள்ளொடு நல்வினை யியைந்தவ ரல்லார்
பிணக்கும் பாவத்தி னருவினைப் பேதைய ரென்றே
கணிக்கு மெய்ம்மறை யசறின தாணையுங் காட்டி. 36

ஆக லாற்கருத் துறுதியி னுக்கமே பூண்டு
சீத மேவிய நகர்விடுத் தென்னொடுஞ் சேர்ந்தீ
ரீத லாத்தினி யியாவர்க்கு நன்றியி னிரங்கி
காத லின்பெருங் கருணைபே பொருளெனக் கல்வியின். 37

தேடொ ணாப்பொருள் வல்லவன் வழிதெரிந் தொழுகும்
பீடு பூண்மின்க ளிவைக்கிடை யூறெனப் பிறந்தோர்
கேடு தோன்றுகிற் பொறுத்துளங் கேவலத் தேகா
நாடு வீர்வினை யூழினை தாற்றலி னடக்கும். 38

மாக்க ளாயினு மிருகங்க ளாயினு மற்றும்
பூக்கு நாளலாற் பூப்பன வரியபூக் கழிவில்
காய்க்கு நாளன்றிக் காய்த்திடாக் கருத்தினு லாகா
நோக்கு நீவிர்க ளியாதொன்றும் விரையன்மின் தோழ்மீர். 39

நமக்கு ளாம்பொரு ளாநம ரல்லவ ரவர்க
டமக்கு ளாம்பொரு ளாமனத் தாற்றலை யெல்லா
மமைக்க லாதவை தகற்றவு மரிதுநீர் விரையி
னுமக்கு டன்பட விரைகிலா னொருமையிற் சிறந்தோன். 40

என்று முன்னவர் வன்மொழி யிகழ்பவ ரஃதே
நன்றி யுள்ளவ ரன்னவ னளிமிக வுள்ளார்
ஒன்று மென்னுற 0 வகன்றிலார் தாய்மொழி மறந்தார்
கன்றி னின்றவர் விண்ணினு மண்ணினுங் கலங்கி. 41

வேண்டு மன்பினன் சாரிக ளருமைப்பின் மிக்கத்
தேண்டி னுங்களை யாதரித் தவர்களாற் றேர்ந்தோ
ராண்ட நம்பணி விரும்புவ ராயினு மவர்சொற்
பூண்டு கொள்வதுங் கருணையி னடப்பதும் புகழே. 42

என்ற னுண்டகை யேற்றகை யெனவியந் தியைந்து
நின்ற மேன்மையர் தொன்மையி னகரினர் நிரப்பார்
ஒன்று மியாதொரு குறைபுரிந் தாரெனிற் றதியீர்
நன்று காத்தலைக் காலமும் பொறையினு னட்பை. 43

சொன்ன மேம்பொரு ளிவையஃ தூயர்நெறி தொடர்க
நன்ன யத்தொடு நமர்க்குமுன் னுமிரும் புவிநீத்
தன்ன மேற்றல மடைகுது மனியணி பின்னர்
மன்ன வன்றருங் கருணைபால் வரம்பெறு வீர்கள். 44

மருண்ட சிந்தையாற் பாவத்தி னியற்கையால் மனக்க
னிருண்டு நின்றவர் காணரி தியைபுடை யார்தந்
தெருண்ட சிந்தையிற் றெளிபுனல் கவுலல்கவ் தரின்பால்
திரண்டு காண்குவீ ரென்றனை யென்றனர் செம்மல். 45

தெளிந்த நல்லுப தேசம துரைத்தபின் செவ்வி
வளர்ந்த தந்தையப் பாசள மலக்கொடு நோக்கி
யளந்தி டாப்பெரு மறிவுகள் குறைசிகட் கறைகென்
றளந்த ரும்படி வேண்டினர் நன்னயி யுரைப்பார். 46

முன்னி லைப்படு மிருவகை யார்க்குறை முறைமை
நன்னி லைப்படுங் குறைசிக டமக்குநம் மியல்பிற்
றன்னி லைப்படு மனக்குமெய் யுளத்தினிற் றொடர்ந்து
சென்னி லைப்படத் தகையன தெளிவினே னென்றே. 47

---

0 உறவுள்ள வரையும் உறவில்லாரையும் பிரித்தது ஒருமையிற் சிறந்தவனை யென்று முன்னவர் வன்றொடர் மொழிகளை யிகழ்பவர். இஃதே தப்பவனது நன்றி யிதனை யுள்ளவர் அவனது மகிழ்ச்சி மிகவுள்ளவர் அவர்கள் தாமென்னுற விணைவிட் டொழியாதவர் மற்றவ ரென்னுற விணைவிட் டொழிந்தவர் என்றுணர்க

148

வேறு.

வெற்றியி னுலகணி வீர வேலுடைக்
கொற்றவ ரபூபக்கர் குணஞ்செய் மாமுகம்
பற்றொடு நோக்கிநுங் கருத்துட் பண்பெலா
மிற்றையிற் கேண்மென விறைவர் கூறினார். 48

இட்டதோர் காலம்வந் தெய்திற் றேவெனக்
கட்டழ குடையவர் நோக்கிக் காசினி
விட்டிய ரிடத்தினி லோங்கு மேற்றகை
முட்டினி லென்றனர் நபிமு கம்மதே. 49

உடையவன் கருணையி னுலவு நாயக
தடையறுந் தகுதியிற் றங்கள் சேர்நபி
னடியவர் புவிவிடுத் தவணி யியாண்டினி
லடைகுவங் காட்சியி னறிகி லேமென்றார். 50

கோவிறை கனுறத்திற் குளிர்ந்த பேரரு
சாவணி நீழலிற் சிறநத் தல்முர்த
காவினிற் கதிபெருஞ் சென்னத் தல்மவு
வாவினில் சிறப்பொடு மல்கு வீரரோ. 51

குறித்திடுந் தலங்களிற் கொற்ற வல்லவன்
செறித்திடுங் கருணையாற் சீர்மை பூண்டுயர்ந்
தெறித்திடு மின்பவா ருதியி னெய்ந்தனி
யுறத்தகுஞ் சுகத்தொடு முறைகு வீரென்றார். 52

தூங்கிய கருணையின் மீண்டுந் தூய்நெறி
யோங்கிய நாயக வுயிர்செல் லாக்கையிற்
பாங்கினீ ராட்டுவ ரியாவர் பண்பினிற்
றங்குவீ ரென்றனர் தவத்தின் மேன்மையார். 53

காரண வுயிருறக் கலறத் தேயபின்
பூரண வுடலணி புனலி னாட்டுவ
ராரணத் துரைநெறி யடவிற் பந்துவி
னேரணி யுரிமையா ரெனநி கழ்த்தினார். 54

விணுரை பகர்ந்திலார் விரிந்த பேரொளி
மாணுறை திருவுடன் மருவு நற்கபன்
பூண்பள வேத்தகில் புகழின் மாதவ
காணிய வருள்கெனக் கனிந்து கூறினர். 55

இத்தல நம்மகந் திருந்த வாடையு
மெய்த்தல மெமனொடு மிசுறி னெய்திய
வத்தகின் மூன்றுடற் கணிதி ரென்றனர்
சித்திரத் திருவுரு சிறந்த வள்ளலே. 56

உரிக்குணா மேன்மையி னோது நன்னெறி
திருந்திய நாயக சிறப்பி னோடுமைப்
பொருத்தொடு தொழுவிக்கும் டரிசு போத்தலைப்
பெருக்கென விழிபுனல் பெருகச் சிந்தினர். 57

துன்னிய வன்பினர் தோகை மார்சிலர்
மன்னிய துயரினர் மலர்க்க ணைந்தொடு
வன்னியின் பெழுகென வுருகி வார்ந்தநீர்
பன்னலிற் சோனையும் பகர மன்றரோ. 58

மருங்கினர் மற்றவர் வழியி னூறிய
பெருங்கணி னுண்டுளிப் பெய்ய நோக்கியுள்
ளருங்குணத் தீரமு திரங்க லாக்கமு
மொருங்குடை யீரென வள்ள லோதுமே. 59

வெறுத்தெழுங் கொடும்பிழை யணைத்தா மேலவன்
பொறுத்தெழு பேறெலாம் பொங்கு மேனகர்
திறத்தெழு நங்கயி பொருட்டின் சீர்மையா
லுறத்தொடும் தருகுவ னுக வன்பினேன். 60

மிஞ்சிய கருணைநீர் மேன்மை யோடியாங்
கஞ்சிய பின்சடங் கியற்றித் தூயெழின்
மஞ்சிடத் தமைத்தக மருங்கி னங்குழித்
தஞ்சமொன் றுடையநீர் சார்பின் வைத்திரால். 61

வைத்தபி னியாவரு மணையி னப்புற
மொய்த்திருப் பீரொரு கடிகை முற்றவே
உத்தமத் திறையவ னுவப்பின் மீக்கெழும்
பத்தியின் றகுமத்தென் பால்வி டுப்பனால். 62

பின்னர்மெய்ச் செறிபுனை பெலன்கொள் வானவர்
மன்னவர் நால்வரும் வருக்க மாண்பினால்
நன்னயத் தொடுந்தொழு வித்து நாட்டமுற்
றன்னவர் துவாவிரந் தகன்று போதுவார். 63

நீவிரி லொருவர்முன் னிறத்தி யென்கிலை
யாவன வோரவர் பின்னர் மற்றவர்
மேவுவ ரிவற்புற மெல்லி யோர்சிறு
ரோவணி கொண்டுவன் டொழுவிப் பீரரோ. 64

வழிபெறத் தொழுதபின் வரிசை யோடெனைக்
குழிபெறச் செய்துநீர் குணங்கொண் டியாவர்க்கு
மிழிபெறச் செய்கிலா தியல்பி னியான்சொலு
மொழிபெறச் செய்குதிர் முரண டாதரோ. 65

இன்னன பன்மொழி யிசைத்துத் தோழர்கட்
குன்னிய துயரொடு மழுகை யோட்டியே
மின்னகு பள்ளிவிட் டெழுந்து மேதகுந்
தன்னகஞ் சேர்ந்தனர் தாசி மன்றரோ. 66

நபிநாயகம் திருவுளமான
ஒசியத்துப்படலமுற்றிற்று.
ஆக படலம் 67 க்கு திரு விருத்தம் 1993.

அபூபக்கரண்ணலை

இமாமாக்கிய படலம்.

கடிக்குவி யெழினகக் கதிர்செய் மேனியி
லடிக்கடி வருத்தமு மதிக மாகவே
மடக்கொடி மனைவியர் மனமுஞ் சஞ்சலத்
தடக்கடற் கரைகொளார் தயங்கு வாரரோ. 1

வேறு.

திருக்கமல முகத்தரசர் செழுமெய்யு மாருத
வருக்குமரும் பொன்னுகை வொளிர்காட்ட மனநாட்டம்
பெருக்கமொடு நிலைகொண்டு பெயராது மனைமடிசாய்ந்
திருக்குங்கால் பிலால்மகுவி பினின்வாங்கு முழங்கினர். 2

நெறிபூண்ட திருவணக்க நிலைபூண்பா னனைவோரு
மறிபூண்ட பள்ளியிடத் தடைந்திருந்தார் மகுமூதின்
குறிபூண்ட கடைநோக்கிக் கொழுங்கருணைப் பிணைமானின்
மறிபூண்ட தகைபூண்ட மதிபூணின் மனத்தினர். 3

முன்கூறும் விளிகேட்டு முகம்மதுற்ற சூல்நயினர்
பொன்கூருந் திருமனையார் புதுமதிவாண் முகநோக்கி
பின்கூர்ந்த வணக்கமுறை யியற்றினர்கொ 0 லியல்தோழர்
தன்கூர்ந்த பள்ளியிடத் தெனவினவ நவிற்று 0 வரால். 4

கூறாத வருமந்தக் கனியுயிரே யனையின்றிப்
பூறாத துயர்பூண்ட குழவியெனப் பொங்கு மிக்கோர்
மாறாத திருமுகத்தின் மதிக்காக வழிபார்த்துக்
கோறாது ருநின்றா ரெனவுரைத்தார் கோதையன்றே. 5

நன்னிலையின் மயிலன்னீர் நறுஞ்சலில முய்த்திடுதி
நின்னிலையிற் குளித்தவணி யியாம்போது மெனநபியுஞ்
சொன்னிலையே புரிந்தனர்பொற் சுடர்ப்பலகை மேலிருந்து
தன்னிலையிற் றிருமேனித் தவநயினர் கழீஇயினரால். 6

திசையெறிக்குஞ் சுடர்க்காந்தித் திருவொளிவி ளங்கநயினு
ரிசைபிறக்கும் வணக்கநிலைக் கெழுந்தனர்தம் மெழுநோவின்
மிசைபடர்ந்து நினைவடங்க மெய்மறந்தார் மனைவியர்க
ளசைவிரிந்த வுயிரகன்ற வேற்றுடம்பி னாயினர். 7

இருள்படர்ந்த வுலகினிடை யெழுஞ்சோதி யெனமதியு
மருள்கடிந்து வரமலர்க்க ணிணைதிறந்து மருங்குலாயத்
தெருள்படர்ந்த மனைநோக்கித் தொழுதனர்கோல் செல்வரென
வருள் படர்ந்த நபிக்கெதிரே யம்மொழியே மீட்டினர். 8

நறுங்குவளை மலர்விழியி னவமாது தனைநோக்கிப்
பெறுங்கருணை நபிநயினர் பெரும்புனலங் கொணர்கெனலு
நொறுங்குவளைக் கரத்தேந்தி கொடியளவி லவணுய்ப்ப
வுறுங்கதிர்கொ டிருமேனி யுவப்பினொடு கழீஇயினர். 9

ஆசனத்தின் பொருள்பூத்த அகமதுற்ற சூல்நயினர்
பூசனத்தி னெழுதுமெழும் பொழுதுணர்வு தனைமறந்து
காசனத்தின் மயக்காடக் கனிமொழியார் விழிபுனலாற்
பாசனத்து நனையமயி லிடிகண்ட பரிசானர். 10

பின்னுமயக் ககன்றோடப் பேருணர்வார் விழிதிறந்து
முன்னமொழி வினவாமுன் முதிர்புகழி னாயிசா
வன்னமொழி யுரைப்பவதற் கவ்வாறு புனல்வேட்டுப்
பன்னுவினை முடித்தெழுந்தார் பன்முறைபோன் மயங்கினரால்.

அடிக்கடிதா மயக்குறலு மரிவையர்க ளடங்காது
திடுக்குறமுட் டுயரோடு தெளிவின்றி யிரங்கிடவே
கொடுக்குமருங் கொடையாருக் குளிரணையின் பாஞ்சகய்ந்து
விடுக்குமலர்ப் பவளவாய் நகைதோன்ற விளம்புவார் 12

என்னிலைமை நவருமவி லையத்தணியின் அபூபக்கர்
முன்னிலையின் நனைவோர்க்கு முறைவணக்க முடிக்கவருள்
சொன்னிலைகொண் டெனமசுகூ துயர்தோன்றல் அப்துல்லா
வென்னுமவர்க் குரைப்பமுன மிளமயிலும் விளம்புவார். 13

உள்ளன்பி னெழுஞ்சிந்தை யுளரெந்தை நந்நிலையி
னள்ளன்பி னுறுமாயி னனிதின்று புறமாக்கள்
விள்ளன்பி னமுமோசை விழுஞ்செவிகொள் ளாராக்கைத்
துள்ளன்பி னுமறன்னாற் றொடர்பணியிற் குறலாமால். 14

என்றோது மொழியுள்ள மினையாது வளர்செம்பொற்
குன்றொன்று புயவள்ள லவர்நோக்கு குழுமுன்னி
னின்றோதித் தொழச்சொன்மி னெறியாக வெனக்கூறு
மன்றுயி சாவினிய அபுசாவுக் கறிவித்தார். 15

பணிகொண்டு நபிநாதர் படர்சோதி முகநோக்கித்
துணிகொண்டு கரையாது துயரின்றி நில்லாரல்
வணிகொண்ட அபூபக்க ராமேலத்தை தொழுவிப்பக்
கணிகொண்டு புரிவீர்க ளென்றார்பின் கபுசாவே. 16

வடிவாய்ந்து புகழோங்கு மதிகொண்டெப் பொருடோன்ற
விடிவாய்ந்த மொழியூசு பெனுமென்மை நபியாரைத்
தொழிவாய்ந்த கைப்படுத்துஞ் சடர்மாதர் நுமரீர்கொல்
படிவாய்ந்த மனத்தீரென் றெழிறூதர் பகர்ந்தாரே. 17

தகைசான்ற வறிவாய்ந்த தலவள்ளல் அபூபக்கர்
மிகைசான்ற நிலைகொள்ள வியவீரென் றனர்பின்னுந்
திகைசான்ற மதியாயி சாவன்மை செறியாது
நகைசான்ற அபுசாவை நவில்கென்று தழிஇயினர். 18

இவைகூறு மயிலார்முன் னினிதாய மொழியேனு
மவையாலு முறையேகல் லறிவாலு நெறியாலு
மெஞ்வயாலு மெனின்மேன்மை யியலீர்சொன் முயலீரென்
றிவர்வாய்மை கபுசாவு மெதிர்மாறி யிசைத்தாரால். 19

வேறு.

வண்டார் புயத்து மருமூது வகுத்தபணி
கொண்டோ ரடைந்து பகராமுன் கொழுந்துயர
முண்டார் திபங்கி யுணர்வோடும றேந்தலொடு
விண்டார் புகழீ னிலைதாங்கினர் வீண்சொலில்லார். 20

உரிபூண்ட நந்தங் குழுவார்க் குணவாற் றொழுகைப்
பரிபூண்டு நிற்றி யருளாற் பயன்பற்றியென
விரிபூண்ட சிந்தை யபூபக்கர் விளக்கமழை
சொரிபூண்ட கண்ணி னுமறேந்தல் றுதித்தறைவார். 21

அறிவாற் புகழா லுயர்கீர்த்தி யலர்ந்த வெற்றி
நெறியா லொழுக்கா லென்னினமேன்மை நிலையுடையீர்
மறியா வகைமுன் னிலைநிற்க மதித்தமையாற்
பெறுபே றுடையீ ரெனப்போற்றிப் பிரித்தனரால். 22

வயமேவு கின்ற திறலார்மன முண்ணலிய
நயமேவு முன்னி லைநின்றே நனிசேர் தொழுகைப்
பயமேவி னரரு ளார்ந்தேவரு பார்த்திபர்சொற்
சயமேவு கின்ற அபூபக்க ரெனனுத் தராதிபரே. 23

அதிகா ரணவீ ரியர்க்காகக் கலக்கமொடு
மதிகா லொளிநீங் கியபோதுயர் மாண்புடைய
அதிகா ரணிகா ரணங்ல்லறி தோற்றியபோல்
விதிகா ரணர்முன் னிலைநிற்றொழு வித்தனரால். 24

கடிதாங் குபெய்யின் மருமூது கதிரொளியின்
முடிதாங் குயிக்க மடிதாங்கு முதிரனையா
ரடிதாங் கியம்பொற் பதியேகு மடியவள்முன்
னொடிதாங் கும்பான்மைப் பொறுப்பீருன் னுணிப்பொருளே.

பெரிதாம் புகழென் னுயி ரேபல பேறினுக்கு
முரிதாங் கினியபுவி வாழ்க்கை யுவந்த கத்தி
லரிதாம் பொருளி னவர்வேது மனு தநிலை
இரிதாந் தலைமைச் செயலாமெனத் தேறினனால். 26

மாறு தருந்த நிலைமேவின் மனுடர்தமக்
கூறு மெவரு முவக்காரென வோர்ந்தனனு
லாறு தலாய்ந்தில னுட்கொள்ளு மருமையினென்
ஆறு மதுர மொழியோடு முளங்கரைந்தார். 27

வேறு.

பணிகொண்ட வள்ள லியாரும் பண்புற வணக்கம் பூண்டு
துணிகொண்டு வருநாட் டன்னிற் சுடர்மணி யுடலிற் றன்னும்
பிணிகொண்ட விலைசான் அப்பா சவியிவர் பின்னே தாங்க
வணிகொண்ட நயினார் பள்ளி யடைந்தன ராகதி னன்றே. 28

நன்னிலை புரியர் நிற்ப நடுநிலை வணக்கத் தோடு
முன்னிலை நின்ற வள்ளல் முகம்மது நயினார் போந்த
வந்நிலை கண்டு பின்றற் ககநிலை கொள்ள நோக்கித்
தன்னிலை நிற்க வென்னத் தலைகொடு குறித்திட் டாரால். 29

இருபுறத் திருந்தார் நோக்கி யிவையபூ பக்கர் பாகத்
தொருபுறத் திருத்து கென்ன வுரைத்தன ரியற்றி னூரால்
மருபுறங் கமழு மேனி முகம்மதின் வணக்கம் பற்றித்
திருபுற மன்னோர்கொண்டார் சேர்ந்தவரிவர்பின் கொண்டார்.

சொல்லினுனிடையூறெய்தாத்தொடர்பிற்றன்னிலையின்வைத்தும்
புல்லினு லிருந்துகொண்டும் புணர்ப்பினு மெவர்க்கு மேன்மை
வல்லினு ரென்ன வண்மை முகம்மதன் வகுக்கப் பெற்றக்
கல்லினார் மகிமை யென்னே கவற்றுத லரிது வும்மே. 31

அபூபக்கரண்ணலை

இமாமாக்கியபடல முற்றிற்று.

ஆக படலம் 38 க்கு திருவிருத்தம் 2024.

நபிநாயகம் ஆவியை

ஹலரத்திற் சேர்த்த படலம்.

கதிகாட்டுந் திருமொழியின் மதிகாட்டுங் காரணத்தின் கடலே யன்ன, துதிகாட்டுங் ககனர்பலர் நதிகாட்டு மருங்கரத்தி னாய வள்ளல், விதிகாட்டுங் காரணத்தி னதிகாட்டு முடற்பிணியின் வேக மிக்காய், மதிகாட்டு மாயிசத்தி னிதங்காட்டு மடிசாய்ந்து வருந்தா நின்றார். 1

பேரொளிவு தருமுடல நாடோறுங் குளிர்வெப்பிற் பேதங் கொள்ளச், சீரொளிவி னபிநயினார் படுத்துயரி னுயிரனைய தேவிமார்க, ளாருயிரிற் படும்பிணியி னகநடுங்கி மெய்யலரு மயர்தல் கொண்டு, தாரகைபன் மதியொன்றின் புடைசூழ்ந்த தெனவிருந்தார் தயங்கி யன்றே. 2

உள்ளுருகி விழிபாய்ந்த முத்தினங்கள் மிகச்சொரியு முயிரிற் சோர்வு, நள்ளுருகு மயிலினங்கள் கார்நீங்கும் வெம்மையினு மொடுங்கல் போன்றுங், கொள்ளுமழை விடுமெழுகின் பிராட்டியர்கள் முகநோக்கிக் கொற்ற வள்ளல், தள்ளிநபி ரமரிவ ணடைந்தனரென் றியம்பவப்பாற் சார்ந்தா ரன்றே. 3

உலகுபல வுயிரனைத்தும் பொதிந்தமணி யொளிவுகழு முயர்ந்த மேன்மை, யிலகுதிரு நபிநயினா ரெழில் சிரத்தைத் தளிர் விரலா லெடுத்துத் தாங்கி, நலனணிந்த மடிநீக்கி மலரணையிற் றலையணையி னடுவின் சார்த்திக், கலகவிழி மயிலொரு மனைக்க ணொரு கோடிதனிற் கரந்து நின்றார். 4

தகைசேர்ந்த வானவருந் தவமுயன்ற முகம்மதுமுன் சார்ந்து சொல்லும், வகைசேர்ந்த மொழிபலவு மந்தரங்கத் துறைந்தகன்றார் வடிவார் செம்பொன், திகைசேர்ந்த மடமயிலு மருகடைந்து மணிச்சிரத்தை மென்கை தாங்கி. நகைசேர்ந்த திருமடியிற் சேர்த்தினர்பின் பிராட்டியர்க ளண்ணி னாரால். 5

திருவுலவு முறாவலினை வாயிதா நபிநயினார் செப்பிநோக்கி, யுருவரிய சிவரென்றும் வருவசல நிவ்வாறே ருற்றவண்ணம், பருவலின் றகலவருள் புரிகவென மிகவேண்டப் பரிவுள்ளோர், ரரு

வுயிர்க ளுண்டொழிவி னெமனென்பார் வருமாறு மறையக் கே
ண்மின். 6

எனக்குரிய தோழரிடஞ் சென்றவர்தம் மொழிலாவி யினிதி
ன் வாங்கிக், கனக்குழுயர் கலறத்திற் கொடுவருதி யவருதவில்
கருத்தி லாரேல், நினக்கொருவன் மையுமின்றி யென்னிடத்தி
னடைதியென நெடியோ னேவுந், தனக்குரிய பணியுரைத்தா
ரவர்க்குரைத்தே னியற்கையொடு தகுதி பூண்டார். 7

நன்னெறியின் வுலகனைத்து நடத்துவிப்பா னிறைவாய்மை
நாளு நல்கும், பொன்னகரத் தமரர்பதி யென்னிட்டுப் புகும
ளவும் பொறுத்தி யென்றே, சொன்னமொழி கேட்டகன்று நெ
னருயிறு றுரையொலியிற் றளக்க வுள்ளம், மன்னுமுனார் வழிவ
டங்கப் புறமொடுங்கிப் பிராட்டியர்கண் மயங்கி வீழ்ந்தார். 8

துடிப்பரவ யவங்கிடந்த கிடைபோலச் சோர்ந்துவிழித் து
ணையிற் செந்நீர், வடிப்பர்மன முட்கிடமெய் மறப்பர்கருத் தழி
ந்துமிக வாய்விட் டார்த்து, முடிப்பர் அ ஆ அகோ அந்தோ
வெனவிரைப்பர் தீயினிடு மூரணில் பூவி, னடிக்கடியுள் ளுருகி
யழு திரங்குவர்க ளேங்குவரவ் வணியின் மாதர். 9

எழில்பூண்ட வலம்புரியி னிரைத்தலொடு கனரத்தமயி வி
னையோர்நோக்கிப், பொழில்பூண்ட புகழமரர் கோமானிங் கடை
ந்தனரப் புறத்துப் போதிர், விழிபூண்ட மானனையி ரென்றிறசூ
லறைந்திடலும் விரைந்தா ரியாரு, மொழிபூண்ட நெறிச்செபுரி
யிலவணி னருமையொடு முன்னி னாரால். 10

மனமீதி லுறுதியொடு முன்னணித்தங் கருண்மயினுன் மதி
த்துப் போற்றி, யினமீது மற்றிடரு மொழுக்குடையீர் நபிக
ளெல்லா மிறைஞ்சங் கோவே, கனமீது மருளோங்கு மொருவ
னுமக் குரியசலாங் கணித்து வெற்றித், தனுமீது முள்மீது முறு
ங்குணத்துஞ் சேர்வறிந்து சார்க வென்றார். 11

வென்றிநெறி யருந்தகுதி மேலொழுக்க மியாவருக்கும் வி
ளக்குவிப்பா, னன்றிபெற வெனைவிடுத்துங் காரணத்தின் மிகை
யுடையா னவின்றுன் பாரில், துன்றுபிணி மற்றுமொரு துயர்டு
க்கி லத்தான்பிற் றேன்றி னார்பாற், சென்றுளத்தின் வினவலது
கன்றுத்தென வென்றிசைத்தார் தேவர் கோமான். 12

செவ்வியடர் திருமேனி வேற்றுருக்கொண் டொளிர்ந்திடக்கண் திகைப்புமேய, வெவ்வினையி னகங்காரம் படுத்தும்முறை யளவறிந்து விளக்கற் கேலா, தவ்வருமென் கொல்லெனவு மறிவரிய பேரொளியி னமைந்த முத்தத், தொவ்வறுநற் குணத்திறசூல் முகநோக்கி யமரர்பதி யுரைக்க லுற்றார். 13

புவிக்கரசே மற்றிடத்தார் தமக்குமெழி லடங்காத புகழின் வாய்ந்த, நபிக்கரசே திருமேனி படருமரு ளினியெழுமா றாயத் தானே, குவிக்குமிகு வயர்தனுமக் கடைந்ததிறை நனிவாழ்விற் கொண்ட பெற்றி, பவிக்கவரும் பேறன்றி வேறின்றென் றியற்சைகொளப் பகர்ந்திட் டாரால். 14

வெஞ்சினமற் றெறிகருணைப் பொழிநயனத் தமரர்பதி விருப்பி னோக்கி, நெஞ்சகத்தி னருளோடு மென்னிடத்தி னெமனடைந்து நினைவின் வண்ணந், தஞ்சமுற விதங்கேட்டும் பல்லபல தகுதிபெறுந் தவத்தின் வாய்மை, யஞ்சலிசெய் துரைத்தகன்று ரெனவறைந்தா ரகம்புறமு மலர்ந்த வள்ளல். 15

உன்னுமறி யிடையுதித்த வெங்களருங் கண்மணியே யுரியமிக்கத், துன்னுபல பேறளவா னபிமாரின் மேன்மையினிற் றோற்று மிக்கா, லன்னவையி லொன்றிஃதென் றறிவிப்பா னடைந்தனர்மற் றரியகால, லிந்நிலத்தி னெவரிடத்து மிதங்கேளா ரென்றுவப்பிற் சிபுரீல் சொன்னார். 16

நன்றியினிற் றிருவுருவும் புகழதனிற் பெறுகுணமு நாளுமேலாகுஞ், சென்றநாவிற் றெரியும்விழி முதுக்குறைவும் பொறையறிவுஞ் சிறப்பி னோங்கி, யென்றுமெனக் குறுதுணையீ ரினிதினொன்ற விடமீகலா திருப்பீ ரென்ன, வென்றியுல கடங்கநிறைந் தெக்காலு மாறாத விறசூல் சொன்னார். 17

வேறு.

வானுல கெனையும் போற்றும் வரிசையிற் சிறந்த வள்ளற்
றேனனி மதுரத் தீஞ்சொற் செழுமயில் பிராட்டி மாதைக்
கானகு மலர்மேன் கூர்தற் கண்ணொரு மணியின் வாய்ந்த
மேனகு பாத்தி மாவை விளித்தனர் விரைய வந்தார். 18

மலரணிந் தொசியும் பொற்பின் வருங்கொடி கனியி ரண்டோ
டிலகிடை யுலவுந் தன்மை பெண்மக விருவ ரோடும்
பலனணி யுளத்தி னுட்கிப் பதைத்திட வுடல மேங்கி
நலனுறை பாத்தி மாவு நபிநயி னார்முன் வந்தார். 19

கண்டன ரிதுகோ வியான்செய் தவமெனக் கலங்கிக் கண்ணீர்
விண்டனர் தளிர்வெண் ணியின் குணமென வேறு பாடு
கொண்டன ருடல மஞ்சி விழுந்தனர் கொள்ளுந் துன்ப
மண்டலத் தெவருஞ் சொல்வ தரிதகின் மான மம்மா. 20

தன்னுணர் வயரா நின்ற தவநிறை கற்பின் மிக்கப்
பொன்னுரு மயிலை நோக்கிப் பொருமல தகற்றி யன்பி
னின்னறுங் கனியே யென்ன வருகணைத் தினிய காதின்
மன்னபி யந்த ரங்கம் வழங்கின ரறிய வன்றே. 21

கேட்டனர் முன்னின் மிக்குக் கெழுமுவெக் கயூரங்கொண்டார்
மோட்டணி மேக வேற்றின் மயிலெனக் கலக்க முற்ற
வாட்டமே மென்மேற் றங்கு மாதவ நிறைந்த செல்விக்
கோட்டம தகற்றி வள்ளல் கூறினர் மறுத்துங் காதில். 22

பின்னுரை மொழியாற் றுன்பம் பெயர்தர முகமே பூப்பப்
புன்னகை பிறக்கச் செய்தார் பூவையார் தம்மின் மேன்மைப்
பொன்னல ராயி சாநற் புகழுணி நாதர் தம்மை
யின்னுரைக் குரிமை கொண்ட தென்னென வினவி னாரால். 23

அந்தமே யடுத்த தென்று ரம்மொழி முன்னர் கேட்டு
வெந்துயர் கொண்டேன் மீட்டு முரிமையி னின்றூர்க் கேல்லா
முந்தநீர் துறக்கஞ் சேர்ந்தென் னிடத்தினின் முன்னு வீரென்
றெந்தையா ருறைந்த போதே யினநகை கொண்டே னென்றார்.

கருமுகி லனைய கூந்தற் கனியெனும் பாத்தி மாகம்
மிருமணி மைந்தர் வள்ளற் கெதிரினில் விடுப்ப நோக்கி
யருமையி னணைத்து நீவி யாவலின் முகந்து சோதி
திருமதி முகத்தி னுப்பண் முத்தினர் தவத்தின் பண்பால். 25

உவந்துளத் திருக்குங் காலத் தோங்கெழி லிசுறு பீனுங்
தவந்தரு நபிமுன் னெய்தித் தாவரும் வரிசை யுள்ளீர்
நவந்தரு நும்பாற் போந்து நாடிய கருமமென்னை
நிவந்தருள் புரிக வென்ன நிகழ்த்தினன் வல்லோ னென்றார். 26

உலகுணா ரவரை நோக்கி யுமக்கிறை யருளிச் செய்த
நலனுறும் பாங்கின் வண்ண நண்பொடு புரிதி யென்றார்
கலனணி துணர்ப்பைங் கூந்தற் கன்னிய ருலாய சொற்க
மிலகுற நோக்கும் வள்ள லெழின்முக நோக்கிச் சொல்வார். 27

அறிவளர் நபியே யந்த மாவியைக் கவ்ஸல் கொண்ட
நெறியென வெவனுந் தாங்கி நின்றவ னல்ல னும்பாற்
பெறுமுறை யிதம்போ லீயாவர் பாலினும் பின்செல் றின்ன
மூறைவின்வி னனியா னல்ல னென்றவர் மொழிவ ரன்றே. 28

மருவிருந் தொழுகு மெய்யின் மாதவ ருந்த மாவி
திருவிரி யிறைவன் பாலிற் சேர்வதற் கின்னஞ் சற்றே
யிருந்தன வென்று சென்று ரெழினலங் கொழிக்குஞ் செங்க
ணருளுடை யமரர் கோமான் சலாஞ்சொலி யடைந்தா ரன்றே.

காக்குந வகமேலுமன் னுங் கருணையி னியானிங் கெய்து
மூக்கிய வாவுஞ் சொல்லு மொகியல்லா லினிமே லில்லைத்
தேக்கிய வியாம நாளிற் செய்வன புரிக நும்பா
லாக்கிய வரவே யென்று ரயர்ந்தனர் வள்ள லன்றே. 30

முடிந்தது வரவென் றுன்னி முன்னிய கருத்தி லாய்ந்து
வடிந்தது விழிநீர் மிக்குப் பிரிவினால் வருந்துந் துன்பந்
தொடர்ந்ததால் வள்ள லொன்றுந் துணைமலர் வாய்விள் ளாது
திடந்தரு கருத்தி னோடு சிறப்பினி தலரா நின்றார். 31

முன்னர்நன் னபியின் மெய்யி னலிவினுன் முன்னி டாது
சொன்னவத் தலத்தின் மேவுந் துணைவரோ டெழுந்து மூதூர்
தன்னிடம் புகுந்து வென்றி தரித்தவே லுசாமா வென்போ
ரங்கிலே நபினூர் பாதத் தணிபெற வடைந்தா ரன்றே. 32

வந்தவர் தம்மை நோக்கி வாய்விள்ளா திருகை யேந்திச்
சிந்தையா லிறையைப் போற்றித் திகழ்தர வின்னோர் மேன்மை
நந்திடா திரம்ப விள்ளால் நனிகருங் குறிப்பை யுன்னி
வெந்துயர் பூண்டு கண்ணீர் வடிதர வெளியின் மீண்டார். 33

திருமலர் வாய்விள் ளாது சிந்தையி னோர்மை பற்றிக்
குருநபி யிருப்பத் தாய நுதல்குறு வெயர்வு தோன்ற
மருவுளங் கலங்கி யேங்கி மயங்குமுள் ளாயி சாதம்
பெருங்கரத் துகிலா னீவிப் பேறிஃ தென்ன நைவார். 34

அப்பொழு தரிய மெய்யி னலர்தரு நான மன்றி
முப்பெரும் புவனம் போற்று முகம்மது நபியின் பண்பா
லொப்பரும் வாசந் துய்தா யோங்கின திசைக ளெங்குஞ்
செப்பிடா தலர்ந்து பொங்கித் திகைப்பொடு படர்ந்த வன்றே.

இயற்கையி னுணர்வு தோன்று மெல்லையி னெனது தாய்மற்
றயிற்கையி னெந்தை பந்த மாவிபோ யெங்கள் பொற்றுன்
செயற்கையின் குறுபா ருகத் தேவரீர் றுதவிற் பூத்து
வெயர்ப்பன வென்னை யென்றார் விளக்கணி மயிலன் னாரே. 36

நன்குறை மூமி னனி நுதல்வெயர் வுடன டக்கும்
புன்குண ருயிர்வ ருந்தி விலங்கெனக் கலங்கிப் போது
மென்குணத் துடையீ ரென்றார் மேதகு முணர்வின் றேறுந்
தன்குணத் தற்ற பீகுல் லகுலாவென் றிசைக்குந் தீக்கோர். 37

வல்லவ னேவ லோங்கும் வணக்கமு மமர் தஞ் செங்கைப்
பல்லிய பொருளும் பேணிப் போற்றுமின் புரிமி னென்றே
யொல்லையி னுரைத்த வுண்மை விரிவுள பயன தென்ப
நல்லுணர் வோங்கு முள்ள நாவெழுந் தோறு மன்றே. 38

இசைவளர் சிபுரி யீனு மியலணி மீக்கா யீனு
நசையொடு மிருபா னிற்ப காரியர் மற்றோ ரங்ங
னசைவிலா தொழுங்குங் காலத் தருங்குணத் திசுறா யீனு
மிசைவளர் நபிதம் முன்ன ரருமையின் விரைந்து கொண்டார்.

வாசமே கமழு மெய்யின் வள்ளலா ராவி வெண்ணெய்
கேசமே வாங்கல் போன்றுங் கெழுமலர்க் காத்தி னேந்தி
நேசமே மகிழ்ந்து சோதி நிலவிட வுலகும் விண்ணுந்
தேசணி யிறையவன் மேன்மை கலறத்திற் சிறப்ப வைத்தார். 40

அறுசொடு குறுசும் போற்று மழகிய கலமும் லவுகும்
நிறைபடு கவுதுல் கவுதர் சிறுறத்துல் முந்த காவு
உறைமகா மருமு தோடு மொசிலத்துல் மறுலேய் யாவு
நிறைபைத்துல் மகுமூ தெல்லாங் களித்தன நிவப்பின் பண்பால்

மேதகு றபீகுல் லவ்வல் விளக்குமத் திங்கட் டேதி
யோதிய பன்னி ரண்டி னுயர்மதி நாளில் வண்ணப்
போதணி னுகாவின் மூன்று புனிதலை யறுப தாண்டு
காதகல் வயதில் வள்ள லிறையவன் கலறத் துற்றார். 42

நபிநாயகம் ஆவியை

உலாத்திற்சேர்த்தபடல முற்றிற்று.

ஆக படலம் 69 க்கு திருவிருத்தம் 2066.

றவுலா ஷரீபில் திருமேனி

ஜீவித்திருந்த படலம்.

உன்னலி னெழுந்த சோதி யுன்னலி னமைந்த ஞான்றே
மன்னுயிர் கொண்ட தன்மை மற்றுயி ரெல்லாங் கொள்ள
ரன்னபி யாக்கை மீது கலுந்துகில் போர்த்து விட்டா
ரின்னுயிர் சிபுரீ யீனு மெழும்புகழ் மீக்கா யீலும். 1

விழியினை முகிழ்த்தா ரல்லர் வினையுடற் கொண்டா ரல்லர்
மொழியினை யுரைத்தா ரல்லர் முகமதி செழித்தா ரல்லர்
இழிவுய ரறிந்தா ரல்லர் இருதையத் துணர்வில் லாது
கருமர மனைய வொத்தார் ஆயிசா கதிசா செல்வி. 2

எங்கினர் மயங்கி வீழ்ந்தார் கோவென வலறி யேக்க
மோங்கினர் [illegible]க ணீரா லொழுகினர் விம்மி விம்மி
வாங்கினர் பூழுதி மேனி வடிவினை ரசனி கேட்ட
மாங்குயி லொத்தார் வள்ளன் மனங்கொளும் பிராட்டி மாரே. 3

அகத்தொலி தன்னுன் மாக்க ளாகமு முடலை மெல்லாந்
தொகுத்தறி வொடுங்கவாய்வின் டார்த்தனர் துணைக்கண்சேப்ப
மிருத்தன நீரு மூனு மேதகு நகர மெல்லாம்
பகுத்தெழு மோக்ஷ பூழி முடிவெனப் படர்ந்த தன்றே. 4

வானகத் தமரர் வூன மதிகதிர் கலங்க மேகத்
தானக மிரங்க வாரித் தகுதிகெட் டொடுங்கப் பன்மை
மானிலு மிரங்கத் தோற்று மன்னுயி ரிரங்க யாவு
மூனகத் தியற்கை யில்லாக் குடம்பையி னொத்த வன்றே. 5

பாவினை மறந்த கைகால் பான்முலை மறந்த பிள்ளை
யாவியை மறந்த வாக்கை யடுபுகை மறந்த சுல்லி
காவினை மறந்த புட்கள் கண்படை மறந்த பள்ளித்
தீவிகை மறந்த வில்லஞ் செய்தொழின் மறந்த மூதூர். 6

முடங்கினர் சிலர்தாந் தோற்று முகங்கொண்டார் சிலர்வாய்பேசா
தடங்கினர் சிலரங் கங்கே யமர்ந்தனர் சிலர்தம் மாக்க
மொடுங்கினர் சிலர்கண் ணீரோ டலவினர் சிலர்பே தத்தான்
மடங்கினர் சிலர்மெய் யன்றி மனத்தினர் சிலர்க ளம்மா. 7

வல்லவ னயினார் தம்மை யியக்கிய மயக்க மன்றி
யில்லைவே றெவர்க ளேனு மின்னுயிர் துறந்தா ரென்றுற்
கொல்லுவன் யானா லென்ன வுமறுளங் கொண்ட தன்மைச்
சொல்லொடுந் திரிந்தார் நாட்டு முணர்வுதோற் றிடாது மாதோ.

வாய்வழங் காது நெஞ்ச மதியொரு நிலைப டாது
நாயகர் மனைக்குந் தம்மில் விடையினி னடந்தன் மீள
லாயின ரொருவன் றன்கை யங்கையாற் பிடித்து வென்றி
மேயநல் லறிவின் வாகை விளங்கிய உதுமா னன்றே. 9

கடங்கவுள் வேழ மன்ன வொன்னலர் கருத்து ளூட்டு
மடங்கலங் கொடியின் வீர வாளலி யெழுதும் வண்ணத்
தடங்கொள்சித் திரத்தி னுக்கச் செய்வினைத் தனக்கி லாது
முடங்கின ரொத்தார் தம்மில் லுயிர்ப்பொடு முகமுஞ் சாம்பி. 10

மயக்கமு மறிவு மாறு மாற்றமு முரிய யோர்கட்
டியக்கமுங் கலக்கஞ் செல்லுந் திருமொழி யுரைத்துக் காட்டி
நயக்கருத் தருளி நின்றார் நளினமலர்த் தொடையப் பாசும்
வயக்களி றனைய வீர வாளபூ பக்க ரும்மே. 11

வேறு.

வயமிக் குடைய வொன்றுருன் வாய்வுண் டெழுங் கதிரிலைவேல்
நயமிக் குளத்தி னபூபக்கர் நளின விழிநீ ருகவடைந்து
சயமிக் குளநந்நயினார்மேற்போர்வை யொதுக்கித் தண்கதிர்செய்
சுயமிக் கமுத முகநோக்கித் துதித்து முத்தி முகந்தனரே. 12

என்பா லெந்தை யனைமுன்னே யெல்லா நாவி நூங்கழலின்
றன்பா லிடினு செய்நன்றி தனக்கோ ரளவு மொரவ்வாவால்
மன்பா லரசே முகம்மதுவே மனத்து ளுறுபுத் திருப்பொருளே
யன்பா லிரண்டுமவுத் துடையோனருளாலி*துவேயுமக்கென்றே.

ஏங்கி யேங்கிப் பெருந்துயர மிகைப்பத் தூற வுள்ளெண்ணை
மோங்கி யோங்கி நபிமுகத்தை நீவி நீவி யெமாறிவை
வாங்கி வாங்கி யுலகினிலே வளமை கவர்ந்து துறக்கநகர்
தாங்கித் தாங்கி சிறப்பருள்வா னடந்த தன்மை யறிகிலமே. 14

துன்று பாவச் சுமைநாட்டி னமுக்குந் துயரக் கடன்மூழ்கி
நின்றார்க் குரிய மரக்கலத்தி னிகரா வளியிற் றிகழ்ந்தருளே
பொன்று தலர்ந்த திருநயனப் புண்டரீக மலர்ந்திருப்ப
தென்றோ காண்ப லெம்முயிரே யெழில்சேர் முகம்ம தகமதுவே.

* இதுவே—இஃதே.

அசைத் துள்ளாக வினையுகுற்று மாவி யுடலிற் புறநீங்க
விசைத்தெங் கேனுமுலகிருந்த விந்தை யென்னென் றறியேமால்
பசைத்து ளாயபேரொளிவே பயிற்றும்பொறைமுன்னியற்றியது
நசைத்த பொன்னூர் முற்படுவா னகத்தி னூட்ட மிருந்தேயோ.

மண்ணீ ருளபல் லுயிர்க்கெல்லா மல்குந் துயர மல்கிலா
தெண்ணீர் நபிகள் பெருமானே யேகமணியே யெம்மணியே
தண்ணீர் விரலுந் தகைதீர்க்குந் தன்மை யுளதேற் றமைதுறந்த
கண்ணீர் கொண்ட படியுளமும் புண்ணீர் மானங் கண்டிலமே.

வரிசை தாங்குங் கச்சியபற்றி வரும்போ திறைவ னருண்மறையி
னுரிசை தாங்கி யடியோமுக் குரைத்த வறிவு போதுமென்றே
பிரிசந் தாங்கு நறும்போதிற் பிறந்த திருவாய் முகிழ்த்ததுவெங்
கரிசந் தாங்குங் கையினெந்தங் நபியே யுண்மை முகம்மதுவே.

என்றே பலகாற் புகழ்ந்தேத்தி யிரங்கிக் கரைந்து பல்லோரு
நின்றே யிறங்கக் கண்டுடனே நிலவண் கதிர்பூம் பள்ளியகஞ்
சென்றே யின்ப ரிடையேறித் தேற்று மறிவிற் கொத்துபாவு
மன்றே போதிக் காட்டினரா லாயி சாதந் தந்தையரே. 19

வேறு.

அருங்குணத் தறிவுங்காண் பரிய வல்லவன்
றருங்குணப் புகழெலாந் தாங்குந் தன்மைய
னொருங்குளத் துணர்வினீ ருவன்றன் றூதென
வருங்குண நாயகர் முகம்ம தன்பினே. 20

ஆதிதன் காரண மதற்குக் காரிய
மேதகு பொருளென விளங்கும் பேரொளி
மூதறி வுறையிட மும்மை லோகமுஞ்
சோதிசெய் தூய்மணி யென்னுஞ் செம்மலே. 21

மருணிலை பொதிதரு மனையிற் பல்லுயி
ரிருணிலை பொதிந்தன விவற்றிற் காரணத்
தருணிலை யுருவொடு மலர்ந்த வஞ்சுடர்
தெருணிலை முன்பினு நின்ற செல்வமே. 22

காரியப் பொருளினை நிலைஇய காட்சியி
னேரியல் கொண்டுளத் தறுதி பூண்டனரி
பாரிடை வணங்குவ ரி 0 யாவர் பார்விடுத்
தாரிட மடைந்தன ரகும தின்றமேரா. 23

0 யாவர்-யாவரென்னும் வினை யெதிர்மறுத்து நின்றது.

அகத்தினி னினைவகன் றலைவு கொள்ளலீர்
வருத்தவன் றனைநிதம் வணங்கு வீரவன்
பகைப்பிணி சாவுண பலவு மற்றவை
னிகத்திலும் பரத்திலு மென்று முண்மையான். 24

நற்கபி நாயகர் நவமுங் காரண
மெந்நய மனைத்தையு மெண்ணி யெண்ணியே
யின்னலிற் படுவலீ ரேது காரிய
முன்னவர் மொழியுண ராரைப் போலுமே. 25

முகம்மதென் பவரிறை தூதர் முன்னுரூ
நகைதரு நபிக்குரு நாளும் போக்கின
ரிகமிவர் விடுப்பரே விறைய நீவிர்பே
தகமணி வீர்கொலென் றிறங்கு மாரணம். 26

என்றிவை போதலு முன்ன ரிம்மொழி
நன்றியி னுமறி யோநந் நாயக
வின்றுநும் வாய்மையி னிதத்திற் கேட்டனம்
பொன்றிடாப் புகழென வெவரும் போற்றினர். 27

அடர்தருந் துயர்செல லறிவு பூட்டியே
விடர்செல வழிசொலி யெழில்கு லாநபிக்
கடவுட னருஞ்சல வாத்து மோதியு
மிடனுறக் கையெடுத் திரந்திட் டாரரோ. 28

பிரிவிலா துயர்நெறி வணக்கப் பேறிடத்
துரியவர் பெரியவர் * வுனது தோழனா
மரியவர் முன்னபி மார்க ளாக்கமே
தெரிபவர் எம்மிறசூலின் சீர்மையே. 29

ஆண்டகை தமக்குமன் புடைய பந்துவா
நீண்டவர் தமக்குமிந் நெறியி னிற்றொடர்
பூண்டவர் தமக்குநின் புறத்துத் தண்ணளி
மாண்டரு மருமத்து வழங்கு கின்றியால். 30

இன்மொழி கருணையி னிரந்து வாழ்த்தியே
நன்மொழி யொடுநபி தமையும் போற்றிப்பின்
வன்மொழி தருமுமை றியைய வத்திர
முன்மொழிந் தனரின்ன வாய்மை வள்ளலே. 31

* வுனது-உனதுதோழனாகிய எம்மிறசூல் எனக் கூட்டுக.

வள்ளலா யுலகெலாம் விளங்கு மாதவர்
விள்ளலா துளதுகொல் விளக்க முன்னரே
கொள்ளலாங் கருமங்கள் கூறுந் தற்குண
முள்ளலா தென்கொனீ ருணர்வின் மேன்மையீர். 32

சொற்குறித் தலினுளத் துளக்க நீங்கவே
முற்குறித் திருநபி மொழியி னுக்கமே
தற்குறிப் பாமெனத் தன்மை கண்டன
னற்குறிப் பானவிற் றிட்ட வாய்மையால். 33

வல்லவ னவர்க்கருள் மறையு முண்மையங்
நல்லவ ருரைதரு நடையு முண்மையாற்
சொல்லரு நாதனே துஞ்ச லாதவன்
பல்லருந் தம்மிடம் படர்த லுண்மையே. 34

முன்னிய விருப்பமு மதிவின் மூதுணர்
தன்னிடை வேட்கையுந் தகுதி மேயதாற்
பன்னின னுட்கிறு லென்னப் பாரணி
மன்னவ ருமறிவை வழங்கி னாரரோ. 35

நனிதுய ரகற நன்மை யோங்கிய
வினிதுரை யறைந்தபி னியலபூ பக்கர்
தனிதவி சிறங்கினர் தகைய மேனபி
மனையடைந் தனர்புன லாட்டு மாண்பினார். 36

வேறு.

வன்றிறல் வரையின் பொற்றோள் வாளபூ பக்க ரப்பா
லொன்றிய அலியு மன்னோ ருதவிய குசமு மிக்க
நன்றியின் பனுனூஞ் சைதின் மகனகை யுசாமத் தோடு
மின்றவழ் மேனி வள்ளன் மேதக மருங்கு சூழ்ந்தார். 37

வாட்டிறத் துமறு முள்ள மறுக்கமுற் றகமுஞ் சாம்பிக்
கோட்டமா முகமுங் கொண்டே யருகிருந் தனரிக் கொள்கைக்
கேட்டியா ருதுமா னவுசுன் கெழுமுசீர் சகுறு னங்ஙன்
பூட்டிய பணியி னின்றார் புகழ்பொரு ளணியி னாரே. 38

பாவலர் சீர்த்தி வண்மைப் படர்தறல் கைத மாதம்
மாவியின் சகுறு வேந்த னகத்தின சுவனத் துள்ள
கூவலிற் புனலந் தூய குடங்களி னிரைத்தெவ் வாறு
பூவலர் மேனி யாட்ட லெனமிகு புந்தி யாய்ந்தார். 39

அவ்வயி னொருசொற்கேட்டாராண்டகையெழின்மெய்பூண்ட
தொல்வறு போர்வை யோடு முயர்புன லாட்டு தென்ன
விவ்வினை முயன்றார் வள்ள லிடத்தினிற் றெளிந்த நன்னீர்
செவ்விதிற் பெய்து முன்னர் தெரித்தவ ருரித்தி னன்றே. 40

எழில்கரத் ததனாற் றேய்க்கு மெல்லையி லிவர்க ளுள்ளங்
கிழிதர வொருசொற் கேட்டார் கிருபையங் கடலை யன்பின்
வழியொடு மெல்ல மெல்ல மஞ்சன மாட்டி னீரேற்
செழுமையி னருளி னோடு திருப்பொரு ளளிப்ப னன்றே. 41

மணப்புய மதனை வின்னோர் மதிப்பினீ ராட்டித் தூய
கனப்படு துகில்மென் றூலுங் கடிகபன் செய்து வாச
நனிப்பொடி தூவிச் சேட நறுந்துகிற் பொதிந்து மேன்மை
யனைத்துள பாரி வைத்தா ரகமது நபியை யன்றே. 42

கடிமலி யொளிவின் வாய்ந்த திருமனைக் கல்லு நாப்பண்
வடிவுறுங் குழியி லின்ன வைவரு மிறங்கி வள்ள
னெடிதுயில் புரியு மிக்க நிலவழி பரம தானை
யடவுடன் விரித்தா ரெங்கும் புகழுணி மருக ரன்றே. 43

மாதுல ரன்றி மற்றக் குழியுறு மருங்கி னைவர்
கோதறு நயினார் மேய கொழுமணப் பாரி தாங்கி
மேதக மெல்ல மெல்ல மெல்லணை சேர்த்தி யாரு
மாதகப் புறத்துப் போந்தார் கடிகையொன் றாக வன்றே. 44

கணித்திடா வல்லோ னன்பாற் கதிர்தரு மௌலியி னோடுந்
திணித்திடும் றகுமத் தாகத் திகழ்மணா வறையின் ஞாங்கர்
மணித்தடப் புயத்து வானோ ரெழுபதா யிரவர் னோடு
பணித்தலைப் புரிந்து நின்று பயன்பெறத் தொழுவித் தாரால். 45

பின்னரித் தொகையி னோடு முறைமுறை பெரியோ னன்பா
னன்னிலை யமரர் மூவ ரணியணி வந்து நின்று
நன்னிலை புரிந்து வேண்டுந் துவாவையத் தினிதின் வாழ்த்தித்
தன்னிலை யடைந்தார் நீதி வனிமுதற் றலைவ ரன்றே. 46

நால்வருந் தொழுத பின்னர் நரரெலாம் புகழ்ந்து சூழ்ந்தார்
மால்வரை யனைய பொற்றோ ளபூபக்க ரிமாமா மற்று
மேலகந் நபியின் கேள்முன் னணியசு காபி மார்பின்
பாலியன் மொழியா ரீற்றிற் சிறார்படத் தொழுவித் தாரால். 47

மனத்தொடு கருத்து மொத்து வாக்கொடு கைக ளேந்தி
யினத்தொடு போற்றி வாழ்த்தி யிரப்பொடு சலவாத் தோதிக்
கனப்பதி மலர்கள் வானோர் கன்னியர் நிறைப்ப யாரு
மனைத்தடத் தடக்கஞ் செய்தார் முகம்மது நபியை யன்றே. 48

அகழ்தருங் குழியின் பக்கத் தடையறை யதனுள் மெய்மை
யுகழ்தரு மணவிற் சொல்லு மொழுங்கென நிறைந்தார் சொற்கந்
திகழ்தரு வாடையெல்லாஞ் செறிந்தென வரிசை யோங்கிப்
புகழ்தரு முவமை யில்லாப் பொருள்முகம் மதுவை யன்றே. 49

வேறு.

யாதொரு பொருளுங் கிளைஞர்கட் கென்ன வெட்டுணை யேனும்வைத் திலரோர், மாதர்கள் மனைக்கு மாத்தின்மேல் மரம்வைத் தமைத்திலர் மனைகளின் மதிட்கண், மீதொரு கல்லும் வைத்துயர்த் திலரிம் மேதினி விருப்புறு துளத்தா, ஷாதலா லெவர்க்கும் போதுமிவ் வறிவென் றறைந்தன ராரணக் கடலார்.

அம்மனை யதனி லாயிசா வகத்தி லடக்கிய தலத்தினை மேலோர், உம்பர்கள் புகழு முயர்பதி சுவர்க்க முலகினி லிதுவெ னவெவர்க்கும், தம்பமாய்க் கொடுத்தான் நல்வழி பெறவே தரணியி லிதற்கிணை யிலையே, நம்பர்கள் நிதமு மிறைஞ்சியே போற்றி நலமுடன் றகுமத்தும் பெறுவார். 51

காதமே கமழுங் கஸ்தூரி வாசங் ககனமிப் புவிமுத லனைத்தும், பேதமற் றிலங்கும் பேரொளி வதுவும் பிரிந்திடா மெய்யினிற் றய்ய, வேதநா யகமும் ஜீவனுற் றிருந்தார் வேந்தர்க ளும்பர்கள் முதலாய், நாதர்கள் கொதுபு மார்களும் வந்து நாடொறும் போற்றிசெய் திடவே. 52

புவியுள வரையிவ் வண்ணமா யிரசூல் புகழ்றவு லாவினி லிருந்து, நவில்கியா மத்து நாளில்நா மெவர்க்கு நயம்பெற முன்னதா யெழுந்து, பவமற நமக்குச் சபாஅத்துஞ் செய்து பதிசொர்க்கந் தன்னிலே சேர்ப்பார், நவம்பெறெந் நாளும் றஹ்மத்தும் பெற்று நபியினோ டுகந்துவாழ்ந் திருப்போம். 53

றவுலாஷரீபில் திருமேனி

ஜீவித்திருக்கிற படலம் முற்றிற்று.

ஆக படலம் 70-க்கு திருவிருத்தம் 2119.

சிபுரீலு அலைகிஸ்ஸலாம்

முனாஜாத்துப்படலம்.

யாநபியே யாநபியே யாமுஸ்த பாநபியே
யாநபியே யாநபியே யாமுகுத பாநபியே
யாநபியே யாநபியே யா அஹ்மது நபியே
யாநபியே யாநபியே யா அம்ஜ துநபியே. 1

பைத்து.

யாசய்யிதீ யாறசூலல்லா ஹி-குதுபியதீ
மாலீசிவாக வலா அல்வீயி-லா அஹதி

இதன்பொருள்.

என்னுடைய ஆண்டகையே யிறையோன் திருத்தூதே
பின்னமன்றி யென்கரத்தைப் பிடித்துக்கொள்ளும் யாநபியே
அருமையுடனெற்குதவி யாருமில்லை நீங்களன்றி
ஒருவரனைவிலுமியா னெதுங்கவில்லை யாநபியே. 2

பஅந்த நூறல்ஹுதா பீக்குல்லிக் காயினத்தின்
வஅந்து சிர்றுன்னதா யாகைற முஅதமதீ

எப்படைப்பு மானதிலே யெழிலான நேர்வழிக்குச்
செப்பமுடன் நல்லொளிவாய்ச் சிறந்திருக்கும் யாநபியே
ஊன்றுதலாய்ப் பிடிப்போரி லோதுங்கழி ருனவரோ
ஈன்றுங் குடையின் சிர்ருயிருக்குகின்ற யாநபியே. 3

வஅந்த ஹக்கன்கியா துல்கல்கி அஜ்மயிஹிம்
வஅந்த ஹாதில்வரு லில்லாஹி திஸ்ஸததி

கருணையுடன் கல்குகளை ஹக்காக இரட்சிக்கவே
உருமையுடனேயிருக்கும் உண்மையுள்ள யாநபியே
இன்னம் அவைகளைநீர் இறையோனளவிலன்பாய்
நன்னெறியைக் காட்டிவைக்கும் நாயகரே யாநபியே. 4

யாமன்ப கூழுமகா மஹ்றமதி முன்பரிதா
லில்லாஹி தில்பர்திலம் பூசத்து வலம்பலிதி

மகாமுல் ஹம்தெனுமிடத்தில் வல்லோன் ஹலநீத்திலே.
தகுமாய்த் தனித்துநிற்கும் சங்கையுள்ள யாநபியே
பிறப்பும் பெறவுமில்லாப் பெரியோன் கிருபையினூற்
சிறப்பாக மன்றூடி ஜெயமருளும் யாநபியே. 5

யாமந்த பஜ்ஜறத்தில் அன்ஹாறு நாபிஅதன்
மின்னிஸ்ப அய்ஹிப்றவ் வல்ஜைஷ பில்மதநி

கருணையினூ லாறுகள்தான் கைவிரல்கட் கிடையில்நின்று
பெருகி பொலித்தோடச் செய்தயிரிசமுள்ள யாநபியே.
நயவாகச் சேனைகட்குத் தாகமதைத் தீர்த்துவைத்தே
இயல்பாக வின்பமதை யீய்ந்தருளும் யாநபியே. 6

இன்னீயிதா மஸ்ஸனீ லொமுன்யு றவ்விஉனீ
அ'கூஹு யாகைசயிதா ஸாதாத்தி யாசனதி

திடுக்கமுறும் துன்பமெனை தீண்டிவதே யானைக்கால்
இடுக்கமதைத் தீர்த்துவைக்க இரந்துகொள்வேன் யாநபியே
சாதாத்து மார்கட்கெல்லாம் சங்கையுள்ள நாயகரே
ஆதந்த யன்புடனே ஆதரிக்கும் யாநபியே. 7

குன்லீஷபீ அன் இலற்றகுமானி மின்சலவி
பம்துன் அலய்பமிமாலாக்கான பீகலதி

தனியோன் றகுமானளவில் தப்பிதத்தை மன்றூடி.
மேன்மையுடன் செப்பவரா யிருந்துக்கொள்ளும் யாநபியே
நீங்காமல் மனத்திலுற நிஅமத்தைக்கொண் டென்பேரில்
பாங்கா யுதவிசெய்வீர் பயகாம்பர் யாநபியே. 8

வுன்ஹூறு பிஜனிற்றிலா லீதாயி மன்அபதா
வஸ்ஹுரு பித்தெளிக்கத் சகுசிரி மதல்அமதி

தாயுமா யெப்பொழுதுந் தயவாக வென்னளவில்
நேயமுறக் கண்ணுலே நீர்பாரும் யாநபியே
என்னுடைய செய்பிழையை மீறுநாள் தன்னிலுங்கள்
மன்னும் மகிமைகொண்டு மறைத்துக்கொள்வீர் யாநபியே. 9

வஅதிப் அலய்ய பிஅபுவிமின்க யாசமஹுனீ
யாஇன்ன னீஅன்க யாமௌலாய லஅஹாதீ

ரூற்றப்பொதுத் தும்மில்நின்றும் குணமாயெனைப் பொதியும்
நித்தமுடன் கிருபையென்மேற் செய்துக்கொள்ளும் யாநபியே

எத்தலமும் போற்றுமிற சூலென் மௌலாவே
சற்றும்யா னும்மைவிட்டுச் சாயவில்லை யாநபியே. 10

இன்னீத்த வஸ்ஸல்த்துபில் முக்தாரி அஷ்றபிமன்
றக ஸமாவாத்தி சிர்றில்வாஹி தில்அஹதி

தூய்ய விறைறயோ னென்று ஆவைக் கபூல் செய்திடவே
ஐயமின்றி யுமைவஸீலா வாக்கிக்கொண்டேன் யாநபியே
வானுலகி லேறிச்செல்லுமருத் தலைச் சிறப்புடையீர்
தானவன்றன் சிர்ருனை தகுதியுள்ள யாநபியே. 11

றப்புல் ஜமாலித்தஆ லல்லாஹு காலிகுஹு
பமிதுலுஹு பிஜமீ இல்கல்கி லம் அஜிதி

அஹதான நாயனும்மை அழகுடையோ ராகவன்பாய்
தருமாகத் தானமைத்தான் தாஹாவே யாநபியே
ககனமுமற் றெவையினுள்ள கலாயிகுக ளானதிலே
நிகருமக்கு யான்காணேன் நீதியுள்ள யாநபியே. 12

கைறில் கலாயிகிஅகு லல்முறாச லீனது
அருறில் அனுமிவஹா திஹிம் இலற்று தைமதி

எல்லா படைப்புகட்கும் ஏற்றமுள்ளோ ராயிருக்கும்
வல்லோன் றசூல்கட்கெல்லாம் மகிபதியே யாநபியே
சகல படைப்புக்கு நீர் தங்கரிப்ப தாயிருக்கும்
தருமா யவைகளோநீர் தடங்காட்டும் யாநபியே. 13

பிஹில் தஜகுத்துல அல்லாஹு யக்பிறுலீ
ஹாதல்ஸதீ ஹுவபீ லன்னீவ முக்த்த தநீ

செம்ம லிறையவனென் தீவினையைத் தான் பொறுக்க
உம்முடைய சார்புதன்னி லொதுங்கிக் கொண்டேன் யாநபியே
நேயமுட னென்னுளத்தில் நிண்ணயமா யெண்ணத்திலே
காயுமாயா யிருக்கும் ஹ[illegible]ம்மே யாநபியே, 14

பமத்ஹஉஹு லம்யசல் தவுபீ மதாஉமுரீ
வஹுப்புஹு இந்த றப்பிலரஷி முஸ்தனதீ

மாருமை லென்னுடைய வயதளவும் வழக்கமதாய்
கூறுயுமைப் புகழ்வேன் கோமானே யாநபியே
உம்மை மகிழ்ந்துள்ளாந் தனிலுவப்பு வைத்துக் கொள்வதுதான்
செம்ம லிறையவன்பால் சேர்ந்திடுமே யாநபியே. 15

அலைகி அஸ்க்கா சலாத் தின்லம்ய சல்அபதி
மஅஸ்ஸலாமிபிலா ஹஸ்ரின் பிலாஅததி

மட்டுத்திட்டம் எண்ணமின்றி வண்மைசலாத் துச்சலாம்
இட்டமுடன் நீங்காம லெப்பொழுதும் யாநபியே
அன்பாக வும்முடைய வழகான திருப்பேரில்
இன்பமுட னேயிருக்கும் யாவஸீலை யாநபியே. 16

வல்ஆலி வஸ்ஸஹ்பி அஹ்லில்மஜ்தி காதிபதன்
பகுறிஸ்ஸ மாஹிவஅஹி லில்ஜூதி ஒல்மததி

தலைமையொடு மகிமையுள்ள சகபுகட்கும் ஆல்களுக்கும்
மலிவின்சல வாத்துசலாம் வளர்ந்தோங்கும் யாநபியே
குடையில்வா ருதியானோர் குடையு முதவிசெய்ய
திடமான பேர்களுமாய்த் தெளிவான யாநபியே. 17

இந்தக வீதாவதனை யிமயவர்கோன் சிபுரீலு
அந்தரம்விட் டிறங்கிவந்தே அறபாலு ரைத்தகவி

சுந்தரஞ்சேர் முகம்மதுறசூல் றவுலாமதி லைச்சுற்றி
இந்தொளிபோற் றங்கமையா லெழுதப்பட் டிருக்குதுகாண்
காணும்படி யெழிதாய் கனகமையா லெழுதிருக்கும்
தோணுமிந்தக் கவீதாவிற் றுலங்குகின்ற நற்பொருளே. 18

பூணுமக்தூம் பயந்த புதல்வன் ஜயிலாணிபக்கீர்
வேணுந் தமிழ்க்கவியாய் விருப்ப முடன் கூறினர்

ஆகையினு லிதையுவந்தே அன்பாய்ப் படிப்பவர்க்கும்
வாகாய் மனமகிழ்ந்து வரிசை பெறக் கேட்பவர்க்கும்
தாஹா நபியிறசூல் தபவுசபா அத்துடனே
ஏகன் திருவுளத்தா லெழில்றகுமத் துண்டாமே. 19

சிபுரீலு அலைகிஸ்ஸலாம்

முனாஜாத்துப் படலம் முற்றிற்று.

ஆக படலம் 71 க்கு திருவிருத்தம் 2138.

மங்கள வாழ்த்துப் படலம்.

தொங்கல்.

ஆதி முஹம்மது முஸ்தபாவும்
அவர்க்கு முன்னுள நபிமார் களும்
சோதி யபூபக்க ருமறு துமான்
சுடர்வா ளலியுல்லா அஸனுஸனும்
நீதி பொருந்திய பாத்துமாவும்
நிகரில் லாநபி பிராட்டிமாரும்
ஓதிப் புகழ்ந்திடு முஹாஜி ரீன்கள்
அஞ்சா ரீஅசு காபிகளும். 1

வள்ளல் நபியுல்லா ஆலவு லாத்தும்
வளரு மதகபின் நாலிமாமும்
அள்ள மறந்தினை ஹயாத் தாக்கிய
கௌது லஅலம் முஹையதீனும்
வில்லுங் கொதுபுகள் ஒலிமா ருகள்
வேத வழிசெல்லும் ஆரிபீன்கள்
நல்லும் வாரிசூழ் நாகை தன்னில்
நலமுறும் ஷாகுல்ஹ மீதொலியும். 2

நல்ல அமல்செய்யும் சாலிகீன்கள்
நயத்தைப் பெற்றிடும் முத்தகீன்கள்
அல்ல லறவேகல் லறிவு சொலும்
ஆரிபீ னென்குரு ஒலியுல்லாவும்
வெல்லும் மூமீன்கள் முஸ்லீங்களும்
வேதந் தனில்சேர்ந்த ஆணும் பெண்ணும்
வல்ல இறையோனை நிதம்பு கழ்ந்து
வணங்கும் சதகத்துல் லாஒலியும். 3

புலவர் தமக்கெல்லாம் தலைமையான
புகழ்பெற்ற வுமறொலி யுல்லாவும்
கலைக ளுணர்ந்திடும் ஷேகு அப்துல்
காதரு நயினார் லெப்பை ஆலீம்
பலபொரு ளாய்ந்த புலவ ரான
பனீஅ கம்மது மரைக்காயரும்

வலியோன் மறையோர்ந்த ஆலிமான
வரிசை ஜெயிலானி பக்கீருமே. 4

அன்னோன் பிதாமக் தூமவர்தன் சுதன்
அன்பான ஷேகு மீரானுமே
இன்னோன் செய்மொன்னா முகம்மதுவும்
இவனை யீன்றதாய் பாத்துமாவும்
பின்னோருடனவன் ஆலவுலாத்தும்
பெண்டிர் பிள்ளைகள் சந்ததியும்
இன்னும் மவன்தாய் பிதுர் ஆதப்ஹாஜி
இவர்தன் பெண்டிரும் பிள்ளைகளும் 5

இந்தச் சீறாவைப் பாடி னோருக்
கிசைந்து கொடைகடான் கொடுத்தோர்களும்
சொந்தமாயிதை வாங்கி வைத்துச்
சுயமாய் வாசித் தறிந்தோர்களும்
சுந்தரங் கமழ்தூப வர்க்கமிட்டுக்
களரி தனிற்படித் துரைசெய்வோரும்
அந்தச் சபையினிற் கூடி யிருந்
தழகாய்க் கேட்கின்ற பேர்களுமே. 6

எல்லாம் படைத்தவன் றஹ்மத் துவும்
எழில்சேர் தீன்துன்யா ஆகிரமும்
வல்லோன் நிஃமத்தும் ஆபியத்தும்
வலிய கைரியத் தாகியத்தும்
சொல்லும் சுகவாரி மங்களமும்
சுகமுற்ற செனக்க நற்பதியும்
நல்ல நியுல்ஹா சபா அத்ததும்
நாட்டோறும் பெற்று வாழ்வோமாமீன். 7

மங்களவாழ்த்துப்படலமுற்றிற்று.

ஆக படலம் 72 க்கு திரு விருத்தம் 2145.

கமாலத்துக் காண்டம் முற்றிற்று.

19206
1318
16-9-80